உ

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத், தாண்டவராயசுவாமிகள்

இயற்றிய

கைவல்லிய நவநீதம்

இதற்கு விசேடவிருத்தியுரையும்,

இவை

திருத்துருத்தி இந்திரபீடங்

கர்பாத்திரசுவாமிக ளாதீனத்திற்குரிய

பிரசை. அருணசல சுவாமிகள்

உரை செய்தனதழுவி

ஸ்ரீமத் ஞானகுருயோகி

இராமலிங்க சுவாமிகளால்

விசேட-உரை எழுதி

பார்வையிடப்பட்டு

தி. பாக்ஷாமுதலியா ரவர்களால்

சென்னை சூளை,

தோண்டமண்டலம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

காபி-500.

1905

இதன் விலை ரூபா 1—8—0.

9-2-17 டயிட்டல் பேஜி மாத்திரம் 25 காபி அச்சிட்டது.

கடவுள் துணை.

கைவல்லிய நவநீதம்.

முகவுரை.

கைவல்லிய நவநீதம் என்னு மிவ்வரிய வேதாந்தநூலுக் குரையியற்றிய வாசிரியர் மூவருள்:—இருவரில்லறத்தினரும் ஒருவர் துறவறத்தினருமாக வுள்ளவர்கள் இல்லறத்தினராகிய இருவரும் முறையே குரு சீடர்களாய் ஒரு சம்பிரதாயிகளாய் நிற்றலானும் துறவறத்தவர் வேறு சம்பிரதாயியாக விருத்தலானும் இவர்கள் எழுதியுள்ள வுரைகளில் வேறுபட்டுக் கிடக்குங் கருத்துக்களையும் சம்பிரதாய வியல்புகளையும் ஒருங்கே யுணர்தற்கு ஒரு உரை இருத்தல் நலமெனக்கருதி இருபகுதியினருரைகளையுந் தழுவி வேறோருரை யெழுதின் அது மூன்றுவது பகுதி யுரையாகும் அங்ஙனமாகாவாறு இல்லறத்தவர்களில் பின்னுரைகாரருரையையும் துறவறத்தவருரைகளில் வேண்டியவைகளையு மத்துவித சம்பிரதாய முணர்ந்த நல்லறிவாளரைக்கொண்டு அமைப்பித்து இந்நூலை வெளியிட்டிருக்கின்றோம் இந்நூல் துக்க நிவர்த்தியை விரும்பும் ஒவ்வொருவருக்குமின்றியமையாததேயாம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

எனது கம்பெனியில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், தலுக்கு முதலிய புத்தகங்களும், ஸ்மார்த்தவைஷ்ணவர்களுக்கு வேண்டும் புத்தகங்களும், ஸ்கூல்களுக்கு வேண்டும் காலேஜிப் புத்தகங்களும், உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டும் ஆக்ட்டுப்புத்தகங்களும், சோதிட வைத்தியர்களுக்கு வேண்டும் பதினெண் சித்தர்கள்பாடிய சோதிட வைதியபுத்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழெழுத்தில் தலுக்குப் புத்தகங்களும், காவலர் பாவலர் நாவலர் யாவருக்கும் வேண்டும் இலக்கண மிலக்கிய புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, வெண்பா, சதகம், கும்மியென்னும் அனேக சில்லரை தினுசுப் புத்தகங்களும், அத்வைத சாஸ்திரங்களும், ஆறுமுகநாவலர் புத்தகங்களும், புஷ்பரதச்செட்டியார் புத்தகங்களும், இன்னும் அனேகவித புத்தகங்களும் மருந்துகளும்; நப்பர் ஸ்டாம்புகளும், தங்ககிலிட் நகைகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், புனுகு ஜவ்வாது முதலிய வாசனைத் திரவியங்களும், டொப்பி தினுசுகளும், பித்தாட் என்னும் சடைத் தலைகுட்டைகளும் உண்டு. இன்னும் சோப்புதினுசுகளும், கெடியாரதினுசுகளும், பொட்டகிராப்புபடங்களும், இன்னும் அனேகவித தினுசுகளுக்கும், கேட்டலாக் தேவையானவர்கள் ½-அணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 1-அணா பெரும்படியான (2) கேட்டலாக் அனுப்பப்படும். அதைப் பார்வையிட்டு தேவையானவர்கள் அடியிற்கண்ட எமது மேல்விலாசத்திற்கு யெழுதினால் தடையன்றி உடனே வி. பி. மூலமாய் அனுப்பக்கூடும். அன்றியும் 50-ரூபாய்க்கு மேற்படுமாகில் பாதிபணம்முன்னதாக அனுப்பவேண்டும்.

எமது விலாசம்.

தி. பாகூஷா முதலியார்.

அவதானம்பாப்பய்யர் வீதி, நெ. 18—19

சூலை போஸ்டு சென்னை.

கடவுள்துணை.

கைவல்லிய நவநீதம்.

தத்துவவிளக்கப்படலம்.

கைவல்லியநவநீதமென நூலாசிரியர் இயற்றிய இத்தமிழ்நூல் ஆரியத்தி லுள்ள எந்தநூலினின்றும்நேரேமொழி பெயர்க்கப்பட்டுள்ளதன்று என்பதனை யும், ஆசிரியர்தாமுணர்ந்துள்ள அநேக ஆரியவேதாந்தசாத்திரங்களின் சாரங் களேயெல்லாமொருங்கு திரட்டி இந்நூலமைத்துள்ளார் என்பதனையும், " படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடன்மொண்டு முன்னூற், குடங்களி லமைத்துவைத்தார் குரவர்களெல்லாங்காய்ச்சிக் கடைந்தெடுத்தளித்தே னிந்தக் கைவல்லிய நவநீதத்தை" என்ற அவர்திருவாக்கினையாராய்வார் நன்குணர்வர். ஆதலின் இந்நூலாரியபாஷையிலுள்ள விவரணஞ்தியாக்கியானனுசார மூண் டானமையினிது வழிநூலென்ப, கைவல்லியம் - மோட்சம். நவநீதம்வெண் ணெய். மோட்சத்தினை ஞானவாயிலாயளிக்கும், நவநீதம் என இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்றொக்கதொகையாய் நூற்குவமாகுபெய ராய் காரணக் குறியாயிற்று என்ப. அன்றியும் இதற்கு.

தேகவலத்தின்றன்மை கைவல்லியம்; நவநீதம் வெண்ணெய்; எனவே அன்னியமாகாது தானேதானுய நிலையெனப் பெற்றும். இவ்விருபதமு மாரி யம். தன்னைத்தான் விசாரிப்புழிச் சுத்தாசுத்த சகல கேவலமிறந்து தான் மாத்திரம் மிஞ்சிநிற்கும், நிற்கவே சச்சிதானந்தம் விளங்கும்; விளங்கவேதா னே யனைத்துமா யன்றுய் முடியும்; முடிவதா லிது கேவலமெனப்படும்; படுவதால் இதனை நவநீத மென்றார். ததியனைத்துங் கடைந்துழியன்றி வெண் ணெ யாகாததுபோ லிங்குந் தத்துவங்களனைத்திலுந் தன்னைத் தான் விசாரி யாதுழித் தானேதானுக விளங்காது. ஆசலிற் றன்னை நவநீதமெனக் கொண் டாம்; கொள்ளவே தானுகிய நவநீதமென்றுயிற்று. கைவல்லியம் தனித்துநிற் கை. மூடசூழ்த்தியும் குண்டலிசத்தியு மிங்ஙனமாதற் கிடம் பெறுதோவெ னின், நனவிற்சூழ்த்தி யாதுக்கென வினு வராது காக்கவேண்டும். என்னை? "வினவிற்பரத்தை யறிவுறுதற்கவத்தைபுலன்வினைமாறியே, நனவிற் சூழ்த்தி நிலைவரினப்பொருட்டிகழுநலனுகவே" என்றார் தத்துவராயர், இந்நூ லலங் காரமென்றற்போல இந்நூல் கைவல்லிய நவநீதமென்னல் காரியவாகுபெயர். நவநீதகைவல்லியமென்னது கைவல்லிய நவநீதமென்ன லுருகவம். என்பர் அறிஞர்.

இவ்வுரைதோன்றியதற்குக் காரணம்.

ஆசிரியர் தாண்டவராயருரைத்த மூலத்துக்கிணங்காப்பலவுரைகள் தோன்றி யுள்ளவைகளானேர்ந்த மறுபாடுகளே அகற்றுவா னிப்பேருரையை எழுதத் துணிந்தாம்.

நூல்.

அவதாரிகை.

[சிவேசுரராகவும், கூடஸ்த பிரமமாகவும் விளங்குவது யாதோ அது தன்னேயடைபவர்க்கோசரமாகவும், கோசரமாகவும், அருளிறையாக வும், குருமூர்த்தமாகவும், உபாசனு மூர்த்தமாகவுந் தோன்றிநிற்கும். அதை யங்ஙன மங்ஙனம் வழுத்துவான் புகுந்தார் இக்கவியில் வஸ்து வை யகோசரமாகத் துதிக்கின்றார்.]

1. பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தா ருள்ளம்
தன்னிலந் தரத்திற் சீவ சாக்ஷிமாத் திரமாய் நிற்கும்
எந்நிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவு மேக நாயகன் பதங்கள் போற்றி.

(இதன்பொருள்.) பொன்னிலமாதராசை பொருந்தினர் பொருந்தாருள் ளந்தன்னில்—எ-து. பொன் மண் பெண் ணிவைகளில் விருப்பமுடையோரும் அகன்றோருமாகிய விவ்விருவருள்ளத்தின்கண், அந்தரத்திற் சீவசாட்சிமாத்தி ரமாய் நிற்கும்—எ-து. ஆகாயத்தைப்போலச் சீவசாட்சிமாத்திரமாக விளங்கு வோன், எந்நிலங்களினுமிக்க வெழுநிலமவற்றின்மேலா நன்னிலமருவும்— எ-து. எவ்வகைப் பதவிநிலங்களினு மிகச்சிறந்த அல்லது அஞ்ஞானபூமிகளினு மிகச்சிறந்த வெழுவகையாயுள்ள ஞானபூமிகளினு மேலாயுள்ள துரியாதீதத்தி லீசசாட்சிமாத்திரமாக விளங்குவோன் யாவனே ? ஏகநாயகன்பதங்கள்போ ற்றி—எ-து. அந்த வேகநாயகனது திருவடிகட்கே வந்தனம். எ-று.

பொருந்தினர் பொருந்தா ரென்பதனு ளஞ்ஞானியும் ஞானியுமெனக் கொள்க. அந்தரத்தி லென்பதனுள், நறுமணமுள்ளசந்தனத்தின்கண்ணும் துர் ணமுள்ள காட்டத்தின் கண்ணு நிறைந்துள்ள வாகாயத்திற்குச் சுத்தாசுத்த மின்மையைக் காட்டுங் குறியெனப்பெற்றாம். அதுபோலச் சீவசாட்சிமாத்திர மாய்நிற்கு மென்பதனுள், அந்தச்சீவசாட்சியாகிய சைதன்னியம் சலட்சணமா யினும் விலட்சணமெனக் குறிக்கின்றதெனக் கண்டாம். சாட்சியென்னது சீவசாட்சியென்றதனுள் ஈசசாட்சியெனக் கொண்டாம். ஒருகாற்சுத்தமுமொரு காலசுத்தமுமா யிருப்பினு மிருவகையுமன்றெனக் குறிக்க வுள்ளமென்றார். நிற்கு மருவுமென்பதை யுயர்திணையாண்பாலாக்கியது ஏகநாயக னென்னு முயர்திணை யாண்பாலேப்பற்றியென்க. இதனைப் "பல்லோர்படர்க்கை முன் னிலை தன்மையி" லென்னுஞ்சூத்திரவிதியாற்காண்க. யாவனென்னும் வினு வருவித்ததைப்பற்றி அந்தவென்னுஞ் சுட்டு வருவிக்கட்டது. நிற்கு மருவு மென்னும் வினைகள் கூடஸ்தனுகநிற்கும் ஏகநாயகன், பிரமமாக மருவு மேக நாயகனென முடிக்கிற் பெயரெனச்சங்கரிக்க. இக்கவியின் மூன்றுமடியி னெதுகை பொதுநகரமாயினும் இனமாதல்பற்றியாதலின் வழுவன் றென வுணர்க.

(கருத்து.) எந்த வேகநாயகன் ஞானஞ்ஞானிகளின் உள்ளத்தின்கண் சிவசாட்சி மாத்திரமாயும். ஞானபூமியேழினு மேலாய துரியாதிதீதத்திற் பர சாட்சி மாத்திரமாயு மிருக்கின்றனே, அந்த வேகநாயகனது திருவடிகட் கெமது வணக்க முண்டாகுகவென்பது. இங்ஙனமன்றேல் முரணும் சிவசா ட்சியாயென்னது மாத்திரமென மிகபடக்கூறியது சுயம்பெனக்குறிக்க. எந்நி லங்களினு மென்பதற்குக் கீழேழ் மேலேழ் நிலமெனக்கூறுவது புராணசம்ம தம். இன்னும் சகலமத நிச்சயங்களாகிய வெந்த நிலங்களினுமெனப் பொரு ள்கொள்ளினு மொருசாரமையினு மமையும். சிவசாட்சி கூறியதபற்றி யீஸ் வரசாட்சி வருவித்த தருத்தாபத்தி. சிவேஸ்வரராக விளங்குவ திருவகைச்சா ட்சியெனவும், இவ்விருவகைச் சாட்சியாக வீளங்குவ தேகநாயக னெனவும் பொருள்படுதலா லீண்டு வணக்க மைக்கியமெனக் குறிப்பிக்க நின்றது. உள் ளந்தன்னி னிற்கு மேகநாயகனென்னில், நன்னிலமருவு மேகநாயகனெனப் பொருள்கொள்ளுதும். உள்ளந்தன்னிற் சிவசாட்சிமாத்திரமாய் நிற்கு மென்ற தனுல், அதற்கேற்பமேலா நன்னிலந்தனி லீஸ்வரசாட்சி மாத்திரமாக மருவு மென்றும். உள்ளந்தன்னி லேழாம்வேற்றுமை விரி. நன்னிலம்பண்புத்தொகை. அந்தரத்திலென்பதையிரண்டிடத்து மொட்டுக. ஏகநாயகனென்பதி லேகமென் றது சாட்சித்துவிதமறற்கு மிகைபடக்கூறியதென்க. ஏகநாயகனென்னு நிலைக் குச் சாட்சித்துவிதங் கற்பிதம் ; இந்தச்சாட்சித்துவித நிலைக்குச் சிவேஸ்வரத் துவிதங் கற்பிதம் ; இந்தச் சிவேஸ்வர கற்பிதநிலையைக் கற்பிதமென்றுணராது இவற்றையே யாண்டானடிமையெனக் கொண்டனர் மதத்தர். அத்துவிதி வணக்கத்தையு மேனையமதத்தர் வணக்கத்தையுங் குறிப்பிக்க நின்றது, இந்நூ லாசிரியரது வணக்கமெனக்கொள்க. அவற்றினு மென்றவும்மை தொக்கு நின்றமையின் வருவிக்கப்பட்டது. ஏனையமதஸ்தர் வணக்கம் பேதமெனவும், இந்நூலாசிரியர் தமது வணக்கமபேதமெனவுங் காட்டப் போற்றி யென்றார். ஏகநாயகன் போற்றியென்னுது பதங்கள் போற்றியென்றமையின், பதங்களிரு வகைச் சாக்ஷிகளாகிய கூடஸ்த பிரமத்தையெனக்கொள்க. அவயவியையுன்றி யவயவமின்மைபோல, ஏக நாயகனையன்றி யிருவகைச்சாக்ஷியு மின்மையின் பதங்கள் போற்றியென்றார். ஏனைய அவயவங்களுக்கு வணக்கங்கூறுதது தம்மை யிழிந்தோரெனக் காட்டற்கு. சிவேசருக்குச் சலட்சண விலட்சண மாயிருத்தலிற் சாட்சியென்றார். நன்னிலமருவு மேகநாயகனென்பது குரு வெனினுமமையும். (க)

மூவகைமங்கலங்களுள் இது நமஸ்காரரூபமங்கலத்தினையுடைய தென்க.

பொன்னிலமாதர்என்பதற்கு பொன்னில், அம்மாதர் என்றுக்கி, திருமகளி லுஞ் சிறந்த அழகினையுடைய பெண்கள் என்று பொருள்கொள்வாருமுளர்.

ஏழுநிலங்களாவன சுபேட்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்பன.

அ - னை தை.

[நிறுத்தமுறையானே வஸ்துவைக் கோசரமாக இக்கவியில் துதிக்கின்றார்.]

2. ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யனந்தமூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் ஞானம்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே.

(இ-ள்.) ஈன்றளித்தழிக்குஞ்செய்கைக்கேதுவாம்—எ-து. சிருட்டி திதி சங்கார கிர்த்தியங்கட்குக் காரணகர்த்தர்களாகிய, அயனுய் மாலாயான்ற வீசனுமாய் — எ - து பிரமவாகியும் விஷ்ணுவாகியும் சிறந்த உருத்திரனுகியும் மிநப்பதுமன்றி, தானேயனந்தமூர்த்தியுமாய்—எ-து. தானே யின்னு மளவிறந்த மூர்த்திகளாகியும், நிற்கும் பூன்றமுத்தனுமாய்—எ-து. இருந்தபடியிருக்கும் பரிபூரண ஞானியாகியும், இன்பப்புணரியாதவனுய்—எ-து. பிரமானந்த சாகரத்திலுதிக்கு ஞானசூரியனுகியும், ஞானந்தோன்றிய விமலபோத சொரூபத்தைப்பணிகின்றேனே—எ-து சதோதயமாக விளங்குங் களங்கரகித மான பிரக்ஞாசொருபத்தை வணங்குகின்றேன். எ-று.

இங்கே கோசரமாவது ஞானம்; இந்த ஞானமே யிங்ஙனமாகக்கூறிய வனந்தபேதங்களுமா மென்பதுதோன்றத் தானேயெனத் தேற்றேகாரங் கொடுத்தனர். புணரியாதவனென்னு தின்பப்புணரியாதவனென்றதனுல், ஞானசூரியனென்றும் என்று மொருதகைத்தாக விளங்குதலென்பார், ஞானந்தோன்றிய வெனவும், சமஸ்தமுமாக நின்று விளங்குவதாற் பிரக்ஞா சொரூபத்திற்கு வணக்கமெனவுங் கூறினர். இதுபற்றி நான்கு வேதத்தினு முடிவாயுள்ள மகாவாக்கிய நான்கனுள் முதல் வாக்கியமாகப் பிரக்ஞானம் பிரமமெனக் கூறப்பட்டதெனக்கொண்டாம்.

வினு.—இந்தப் பிரக்ஞானமென்பதைக் கோசரமெனக் கொள்வதென்னை ?

விடை.—அறிவு, ஆனந்தமென விரண்டாம்; அவற்றுள் அறிவன்றிச் செகசீவபரமுண்டாயி னறிவன்றி யானந்த முண்டாகலாம்; இன்றேலம்ஃதின்றும். எங்ஙனமெனின், சோதனையி லறிவாகமுடியாத திரிபதார்த்தங்களி லொன்றுமில்லை. இவைகள் அன்னியமாகாதிருக்க ஆனந்தமென்பதெங்ஙனமன்னியமாக முடியும் ? யாமு மறிவாதலா லெம்மா லிதனை விசாரித்தனுஷ்டித் ததுவாகக்கூடும். ஆதலின் கோசரமெனத்தகும்.

வினு.—அறிவே சிருட்டி திதி சங்காரமாயதை யெங்ஙனமறியலாம் ?

விடை.—அறிவாகிய சத்தையன்றிப் பிராதிபாலிகம், விவகாரிகம், பாரமார்த்திகமென்னுஞ் சத்து மூன்றில்லை. பிராதிபாலிகசத்தே சிருஷ்டி,

விவகாரிகசத்தே திதி, பாரமார்த்திகசத்தே சங்காரமாம் ஆதலி னர்ஜுனை மறு த்தற் கிடமின்றென்க.

(க-து) ப்ரக்ஞாசொரூபமே சிவபாதலி னதனையே பொருளாக விங்கே வணக்கங் கூறியதென்பது. இந்த வணக்க மெல்லாமாய் நிற்கு மவசரத்தின் மேனின்றது. (உ)

அ - கை.

[நிறுத்தமுறையானே வஸ்துவை யருளிறையாக இக்கவியில் துதிக்கின்றார்.]

3. எவருடை யருளால் யானே யெங்குமரம் பிரம மென்பாற்
கவருடைப் புவன மெல்லாங் கற்பித மென்ற றிந்து
சுவரிடை வெளிபோல் யானே சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதும பாத மனுதினம் பணிகின் றேனே.

(இ-ள்.) யானேயெங்குமாம் பிரமமென்றும்—எ-து. நானே யெங்கு மாய்நிறைந்துள்ள பிரமசொரூபமென்றும், கவருடைப்புவனமெல்லாமென் பாற்கற்பிதமென்றும்—எ - து அனந்தபேதமாகத்தோற்று கின்ற பலகோடி. யண்டநிரைகளுமென்னிடத்தில் மித்தையென்றும், எவருடையருளால் யானே யறிந்து சுவரிடைவெளிபோற் சொரூபசுபாவமானேன்—எ-து. யாருடைய வனுக்கிரகத்தினால் நானேயறிந்து சுவரிலு நிறைந்துள்ள வாகாயம்போல் சாட் சாத்கார சொரூப சுபாவ மானேனே ? அவருடைப்பதமபாத மனுதினம்பணி கின்றேனே—எ-து. அந்த மகானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைச் சதாகாலமும் நமஸ்கரிக்கின்றேன்—எ-று.

என்று என்பதை யீரிடத்துமோட்டுக. எண்ணும்மை தொக்குநின்றன யானே பிரமசொரூபமென் றறுக்கியவிடத் தகிலுள்ள சமஸ்தபேதங்களுமென் பாலாதலால் என்பாற் கவருடைப் புவனமெல்லா மெனவும், அனேத்துமெனது சொரூபமாக விளங்கலிற் கற்பிதமெனவும், இங்ஙனமாய நிலையை யறிவுக்கறி வாகநின் றருளிறை யறிவிக்க அங்கறிந்தது யானேயாதலால் யானே யறிந்தெ னக்கூட்டிப் பொருள்கொண்டாம். சுவரிடைவெளிபோலென வுவமித்தது தடையின்மையைக்குறிக்க. அஃதிருந்தபடி யிருந்தேனென்பதை விளக்கச் சொரூபசுபாவமானேனெனவும், இங்ஙனமுணர்த்தவல்லா ரெங்களுயிரில்லை யென்னு மருமைதோன்ற எவருடையருளாலெனவும், கைம்மாறு வேறின் மையின் பணிகின்றேனெனவுங் கூறினர்.

(க-து.) சமஸ்தமு மித்தையாக்கிப் பிரமமாக்கியதுமன்றி யாஞகவுமாக் கினரென்பது விசேடம். இதனால் விளங்குவதியாதெனில் என்னேத்தவிர யாதொன்றுமில்லை யென்பது. என்னே ? "என்னேத்தவிர மற்றிங்கேதுமில் லையென்னுணை - பொன்னேத்தவிரவிலாப்பூடணம்போற் - பொன்னேயுரு . வேறுக்கிப்பேரூரைத்த வேற்றுமைபோ னம்மையுமவ் - வாறுப்பகுத்துரைத் தோமால். " என்றார் சொரூபானந்தர்.

சுவரிடையென்பதி லும்மை தொக்குநின்றது. நேரே விளங்காமையாற் கொண்டுகூட்டிப் பொருளுரைத்தாம். இக்கவியி லிவ்வருளிதையா லாய பயன் எனக்கயலெனக் கொண்டிருந்த பிரமம் யானேயென்றும், சகல வுல கமு மென்னிடத்திலென்றும், அவை வெறும்பொய்யென்றும், அவற்றைச் சின்மாத்திரமாக்கிக் காட்டலா லென்னையன்றி யில்லையென்றும், எந்தச் சுபா வமாக வேண்டியதோ அது வானேனென்றுங் கொள்ளக்கிடந்தது. (சு)

அ - கை க.

[நிறுத்தமுறையானே வஸ்துவைக்குருமூர்த்தமாக இக்கவியில் துதிக்கின்றார்.]

4 என்னுடை மனது புத்தி யிந்திய சரீர மெல்லாம்
என்னுடை யறிவினுலே யிரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்கியஞ் செய்ய
என்னுடைக் குருவாய்த் தோன்று மீசனை யிறைஞ்சினேனே.

(இ-ள்.) என்னுடைமனதுபுத்தி யிந்தியசரீரமெல்லாம்—எ - து. எனதாகக்கொண்டிருந்த மனம் புத்தி ஐயுணர்வு சரீரமுதலிய வனைத்தையும், என்னுடையறிவினுலே யிரவிமுன்னிமமேயாக்கி—எ-து. எனதறிவைச் சுயம்பிரகாசமாகவிளக்கி யந்தவறிவினுலேயே சூரியசந்நிதானப் பனிபோலழித்து, என்னுடைநீயுநானு மேகமென்றயிக்கியஞ்செய்ய—எ-து. எனது சொரூபமாகிய நீயென்பதும், உனது சொரூபமாகிய நானென்பதும், ஒன்றேயென்றயிக்கியஞ் செய்வான் வேண்டிய, என்னுடைக்குருவாய்த்தோன்று மீசனையிறைஞ்சினேனே—எ-து. எனதாசிரியமூர்த்தமாக வெழுந்தருளிய பரசிவத்தை நமஸ்கரித்தேன். எ-று ஏகாரம் ஈற்றசை.

என்னுடை என்னுநான்கும் என்னுடையவென் றிருக்கவேண்டுமாதலாலீறுதொகுக்கப்பட்டன. சகல சத்துவங்களையு மெனதாக மெய்யென்றிருந்தவெனதறிவைக்கொண்டே யவற்றைப் பொயயாக்கினனென்பது தோன்ற. என்னுடை மனது புத்தி யிந்திய சரீரமெல்லா மென்னுடை யறிவினுலே யிரவிமுன்னிமமேயாக்கி யெனவும். உபாதித்திரயத்தால் நீநானென்னும்பேதங்காட்டலேயன்றி யறிவினுல் சற்றுமில்லையென்பது தோன்ற, என்னுடை நீயுநானுமேகமென்றைக்கியஞ் செய்யவெனவும், ஞானகதப்பிரத்தியகூத்திலன்றி ஐக்கியமென்பது நிச்சயத்தாலும் பாவனையினுலும் பயன்படாதென்பது தோன்ற, இரவிமுன்னிமமேயாக்கி யெனவுங்கூறினர். என்னுடை நீயுமென்றதனுல் உன்னுடை நானுமென்றும். சரீரமென்னது சரீரமெல்லாமென மிகைபடக்கூறியது ஸ்தூலம் சூக்குமம் காரணம் என்பவற்றைக்குறிக்க வென்க.

வினு.—உபாதித்திரயத்தி லொன்றுயிருக்க என்னுடை மனதென வேறுபிரித்தெற்றிற்கு ?

விடை.—அந்தக்கரணப் பிரதிபலனன் சிதாபாசனென்னு மிடத்தும், பற்றிப்பாயுந் தகையதென்னு மிடத்தும், ஆதார ஆதேய தருமத்தைப் பெறுதிருக்

கின் மனமொன்றே யெனக்கூறத்தகும். அங்ஙனமனுபவம் யாவர்மாட்டும் இல்லாததால் ஒன்றெனப்பட்டது. அஞ்ஞானம் சந்தேகம் விபரீதம் அகற்றத்தக்கது பரமசிவத்தையன்றி இன்றுதலால், என்னுடைக் குருவாத்தோன்று மீசனென்றார். நீயேகான் நானே நீயென்றுயவிடத்து இறைஞ்சினேனென்றது எத்தகையர்யவணக்கமோ அதனைப்புணர்ந்தாரே அறியவேண்டும். என்னுடை நீயுநானும் ஏகமென்றவிடத்து. உபாதிசகித அறிவுக்கன்றென்க.

அறிவுக்கறிவாய் நின்றறிவிக்கும் அவசரமூர்த்தம் அருளிறையெனவும். நேரே மானிடச்சட்டை சாத்திவந்து அடியாரைத் தடுத்தாட்கொள்ளு மவசரங்குருமூர்த்தமெனவும் இருப்பதுபற்றி இங்ஙனங் கூறியதென்க. (ச)

அ - ஸ் கி.

[நிறுத்தமுறையானே மேற்கூறிய குருமூர்த்தத்தை வணங்கி
உண்மையாவது இத்தகையதென இக்கவியிற்
கூறுகின்றார்.]

5 அந்தமு மடுவு மின்றி யாதியுமின்றி வான்போல்
சந்தத மொளிரு ஞான சற்குரு பாதம் போற்றிப்
பந்தமும் வீடுங் காட்டப் பரந்தநூல் பார்க்க மாட்டார்
மைந்தரு முணரு மாறு வஸ்துதத் துவஞ்சொல் வேனே.

(இ-ள்.) அந்தமுமடுவுமின்றியாதியுமின்றி—எ-து- ஆதிமத்தியாந்தரகிதமாய், வானம்போற் சந்ததமொளிருஞான சற்குருபாதம்போற்றி—எ-று ஆகாயத்தைப்போல இடைவிடாது சதோதயமாக விளங்குகின்ற ஞானவடிவமாயுள்ள சற்குருநாதனது திருவடிகளைவணங்கி, பந்தமும்வீடுங்காட்டப் பரந்தநூல்—எ-து. பந்தநிலையினையதெனவும், முத்திநிலையினையதெனவும் காட்டுவான்வேண்டி விரிவாகக் கூறப்பட்டுநின்ற வேதாந்தசாஸ்திரசாகரங்களை பார்க்கமாட்டா மைந்தருமுணருமாறு—எ-து. ஆராய்ந்துணரத்தக்கசக்தியில்லாத சீடரு மெளிதிலுணரும்படி, வஸ்துதத்துவஞ் சொல்வேன்—எ-து. உண்மையாயவஸ்து இஃதெனக் கூறுகின்றேன். எ-று பரந்தநூலாவன விவரணவிருத்திமுதலியன.

இங்கே சந்ததமென்பது காலத்தின்மேலும், வான்போலென்னு முவமை இடத்தின்மேலும்நின்றன. பரந்தவென்பது நூலென்பதற்குப்பெயரெச்சமாயினும், பிறரானன்றித் தானேபரவுந்தன்மை நூலுக்கின்மையின் அந்தவினையைச் செய்ப்பாட்டுவினையாக்கினும் அந்தமுமடுவுமின்றியாதியுமின்றிவான் போற் சந்ததமொளிருமென்னும் விசேடணம் ஞானத்துக்கே யுரியது அதுவாக விளங்குபவர் ஆசிரியராதலால் ஆசிரியருக்குமாம். ஞானகுருவென்னுது சற்குருவெனமிகைபடக்கூறியது, அஞ்ஞான சந்தேக விபரீதங்களைச்சுருதிமுகத்தால் மாத்திர மகற்றுதல் பற்றியும், இதுவுமின்றியேனையோரும்இப்பெயர் கொண்டது பற்றியுமென்க. சற்குருவென்னுது ஞானகுருவென்றது சரியை

கிரியா யோகக்குருக்க ளன்றெனப்பிரிக்க. மைந்தருமென்னுமும்மை யிழிவு சிறப்பு. எனவே போதரு சக்தியை விளக்கிற்று.

(க-து.) உணரச் சக்தியற்றவர்களும் உணர்ந்துகொள்ளும்விதம் உண்மையைத் தெரிவிக்கப் புகுந்தனரென்பது. இது கீவகாருணியம்; செருக்கன்று.

அ - கை.

[முன்னே வஸ்துதத்துவமெனப் பொதுப்படக்கூறி இக்கவியில்

அஃதினியதெனக் கூறுகின்றார்.]

6. படர்ந்தவேதாந்தமென்னும் பாற்கடன்மொண்டுமுன்னூற்
குடங்களினிறைத்துவைத்தார் குரவர்களெல்லாங்காய்ச்சிக்
கடைந்தெடுத்தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்டின் றலைவரோ பசியி லாரே.

(இ-ள்.) படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடல் மொண்டு முன்னூற்குடங்களினிறைத்துவைத்தார் குரவர்கள்-எ-து. முன்னுள்ள வேதாந்தாசாரியர்கள் தமது காலத்துக்கு முன்னரே விஸ்தாரமாகச் சொல்லப்பட்டுவையின்றி விரிந்துள்ள திருப்பாற் கடலில் மொண்டு தம்மாலாய முதனூலென்னும் குடங்களி னிறைத்துவைத்தார்கள் எல்லாங்காய்ச்சிக் கடைந்தெடுத்தளித்தே னிந்தக் கைவல்ய நவநீதத்தை— எ-து. அக்குடங்களி னிறைத்துவைத்த அனைத்தையும் ஒருங்குசேர்த்துக்காய்ச்சிக் கடைந்து அதிலெழுந்த வெண்ணெய்க்குக் கைவல்ய நவநீதமெனப் பெயர்தந்து இதனை யாவருமுண்ணும்படி யெடுத்துக்கொடுத்தேன். அடைந்தவர்விட யமண்டின்றலைவரோ பசியிலாரோ—எ-து. இதனை ஏற்றுண்பவர்கள்விடயமாகிய மண்ணைத்தின்ன அலைவார்களோ? அலையார்கள்; ஏனெனிற்பசியில்லாதவர்களாதலால். எ-று.

படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடலென்பதும், முன்னூற்குடங்களென்பதும், கைவல்யநவநீதமென்பதும், விடயமண்ணென்பதும் உருவகம். வேதமுடிவில் அகண்டபரிபூரணமாக விளங்காநின்ற சுயஞ்சைதன்ய சாட்சாத்காரத்தைப் படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடலெனவும், மகான்கள் சத்தமக்கியைந்த அளவு அதையேற்றுச் சிந்தித்துத் தெளிவுற்றதைப் பிறருய்யப் பாக்களிலும் வாக்கியங்களிலுங் குறைவற அமைத்தன ரென்பதை மொண்டு முன்னூற்குடங்களி னிறைத்துவைத்தார் குரவர்க ளெனவும், அவ்வனுபவ ரசங்களையெல்லா மொருங்கே யென்னுளத்திற் கொண்டு என்னனுபவஞானக்கினியி லியையச் சிந்திக்கச் சிந்திக்கச்சேடித்து நின்றது நிரதிசயானந்தமாதலால் இதனை யெடுத்துணர்த்தினே னென்பதை எல்லாங்காய்ச்சிக் கடைந்தெடுத்தளித்தே னிந்தக் கைவல்லியநவநீதத்தையெனவும், இதனருமையுணர்ந்திதனையடையுமாறு அடைந்ததற்குமாறுய நிலையை யடையத் தவிப்பரோ நித்தியதிருத்திய ராதலின் தவியா ரென்பதை அடைந்தவர் விடையமண்டின் றலைவரோ பசியிலாரே யெனவுங் கூறியவாறுகாண்க. இடுத லேற்றற்பால்

தல்லாத கைவல்ய நவநீதமென்னுந் திவ்விய மேலாயநிலையை அதற்கியைந்த மொழிகளாக்கித் தந்தமையின் கைவல்யநவநீதம் விடயமும், அதற்கியைந்த மொழிகளாய் கவிகளும், அக்கவிகள் மயமாய இந்நூலும், அவ்விடயத்தை யுணர்த்தற்கியைந்த துணைக்கருவியாதலால் இந்நூல் சம்பந்தமும், இதனை யுண ரவேண்டியவாறு உணர்ந்தனுபவித்தற்குரியார் அதிகாரியும், அங்ஙனம் அனுப விக்கலாலாயது துக்கவிர்த்தியும், தடையற்ற வானந்தமும் ஆதலால் இவை பய னும் எனக்கொண்டாம்; கொள்ளவே இந்நான்கும் அனுபந்த சதுஷ்டயமென் றுரைத்தது.

வினா.—எதை விடய மண்ணென்றீர் ?

விடை.—சர்வமதத்தருங் கூறுங் கைலாய முதலிய சகல பதவிகளும், அவற்றாலாய தாரதம்மிய சுகபேதங்களுமென வறிக.

வினா.—இவற்றை மண்ணென்பானேன் ?

விடை.—மண்ணை யாகாரமாக்கியவிடத்து நாசத்துக்கே இடந்தரல்போல், விடையத்தையே சுகாகாரமாக்கியவிடத்து ஓயாப் பிறப்பிறப்பிற்கே யிடந்தர லாலென்க.

(க-து) அனுபந்த சதுஷ்டயத்தினிலே இஃதென விளக்கியதென்பது.

இங்கே விடயமண்ணென்பதின் முக்கியார்த்தம் அறிவுக்கயலே. (கூ)

படர்ந்த வேதாந்தமென்பதற்கு - விரிந்த உபநிடதங்கள் என்று பொருள் கொள்ளினுமாம்.

பொருட்பொலிவுடைத்தாய் பரிபூரண பரமானந்த சீவளத்தை அளிப்ப தால் உபநிடதங்களாகிய வேதாந்தத்தினை, பாற்கடல் என்றார்.

பூர்வாசிரியர்களாகிய வியாசாதியர் தத்தமக்குவேண்டிய அளவுகிரகித்துக் கொண்டதை விளக்க மொண்டு என்றார்.

தாம் கிரகித்தவைகளை பிரமசூத்திர முதலிய நூல்களாக அமைத்தமை யைவிளக்க, முன்னூற்குடனென்றார்.

பலவாசிரியர்களின் நூல்களை கேட்டுணர்ந்துளேம் என்பார் காய்ச்சி என்றார்.

தேர்ந்தவற்றுட் குற்றங்கடிந்து குணங்களை நூலாகத்திரட்டினை மென் பான் கடைந்து என்றார்.

கூடஸ்தப் பிரம வைக்கியத்தை விளக்கும் விஷயங்களை உட்கொண்டதை விளக்குவான் "எடுத்து" என்றார்.

அங்ஙனந் தாங்கொண்ட கருத்தினைத் தமிழ் விருத்தயாப்பினு லிருபடலங் களாக்கியதனை விளக்குவான் அளித்தேன் என்றார்.

ஆராய்ச்சி முகத்தானிந்நூற்குப் பொருந்த இப்பெயரிட்டே மென்பார் கைவல்ய நவநீதத்தை என்றார்.

இந்நூலாராய்ச்சி யுடையார் நிரதிசயவின்ப ரூபிகளாவர் என்பார். விடையமண்டின் றலைவரோ என்றார்.

இந்நூலனர்த்த நிவிர்த்தியையும் ஆனந்தபிராப்தியையு மொருங்கே அளித்தலின் இந்நூலின்வழி யொழுகுவார் விரும்பத்தக்கவை வேறிலையென்பார் பசியிலார் என்றார்.

அ - கை.

[மேனிறுத்தமுறையானே வஸ்துவை உபாசனை மூர்த்தமாகத் துதித்து இந்நூலை இருவகைப்படலமாக்கி அவற்றிற் குரியபெயரை இக்கவியிற் கூறுகின்றார்.]

7. முத்தனை வேங்க டேச முகுந்தனை யெனையாட் கொண்ட கத்தனை வணங்கிச் சொல்லுங் கைவல்ய நவநீ தத்தைத் தத்துவ விளக்க மென்றுஞ் சந்தேகந் தெளித தென்றும் வைத்திரு படல மாக வகுத்துரை செய்கின் றேனே.

(இ-ள்.) முத்தனை வெங்கடேச முகுந்தனை யெனையாட்கொண்ட கத்தனைவணங்கி—எ-து. பாசமகன்றவனுகியுந் திருவேங்கடாசலபதிக்கு முகுந்தனுகியும் என்னைத்தடுத்தாட்கொண்ட கர்த்தனுகியும்இருப்போனெவனே அவனைவணங்கி,சொல்லுங் கைவல்ய நவநீதத்தைத் தத்துவ விளக்கமென்றுஞ். சந்தேகந் தெளிதலென்றும் வைத்திருபடலமாக வகுத்துரைசெய்கின்றேன்-எ-து. சொல்லப்புகுந்த இந்தக் கைவல்ய நவநீதமென்னு நூலைத் தத்துவ விளக்கமென்றும் சந்தேகந் தெளிதலென்றும் இரண்டு படலவகையாக வகுத்து வைத்து அவற்றைச் சொல்லத்துணிகின்றேன். எ-று.

"ஒருபொருண்மேற் பலபெயர்வரி னிறுதி யொருவினைகொடுப்பது" என்னும் விதியால், முத்தனை வெங்கடேச முகுந்தனை யெனையாட்கொண்ட கர்த்தனை வணங்கி என்றார். (எ)

அ - கை.

[மேலிரண்டாக வகுத்த படலவகைகளுள் தத்துவவிளக்கத்தை முன்னர்க்கூறுவான் வேண்டி அதனை யேற்றற்பாலனுகிய அதிகாரியின் சாதன சதுட்டயங் கூறப்புகுந்தார். இக்கவியில் அவற்றின் பெயரையும், நிலையையும் முறையே யுணர்த்துகின்றார்.]

8. நித்திய வநித்தி யங்க ணிண்ணயந் தெரிவி வேகம் மத்திய விகப ரங்கள் வருபோகங் களினி ராசை சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் றுறுகூட்டம் முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிங் நான்கே.

(இ-ள்.) நித்தியவநித்தியங்க ணிண்ணயந் தெரிவிவேகம்—எ-து. நித்திய வஸ்து, அநித்தியவஸ்துக்களின் நிச்சயங்களைத்தெரிகிற விவேகத்தை நித்தியா நித்தியவஸ்து விவேகமென்றும், மத்திய விகபரங்கள் வருபோகங்களினிரா

சை—எ - து. இடையாயுள்ள இம்மை மறுமைகளில் வரும்போகங்களில் வெறுப்பெழுதலே இகமுத்திரார்த்த பலபோக விராகமென்றும், சத்தியமுரைக்கவேண்டுஞ் சமாதியென்ற றுகூட்டம்—எ - து. உண்மையாகவுரைக்க வேண்டியவாறு சமாதியென்று கொள்ளத்தகுங் கூட்டத்தைச் சமாதிசட்க சம்பத்தென்றும், முத்தியை விரும்பு மிச்சை—எ-து. ஐக்கிய முத்தியை விரும்பத்தக்க இச்சையை முமூட்சுத்துவமென்றும், மொழிவர்சாதன மிந் நான்கு—எ-து. கூறத்தகும் இந்நான்கையுஞ் சாதனசதுட்டயமென்ப ரறி வுடையோர். எ-று.

அ - கை.

[முன்னர் சமாதிசட்கசம்பத்தென்னுந் தொகை இனி யிரண்டு கவியில் வகையாக்கிக் கூறுகின்றார்]

9 சமந்தமம் விடல்ச கித்தல் சமாதானஞ் சிரத்தையாரும்
சமமகக் கரண தண்டந் தமப்புறக் கரண தண்டம்
அமர்மனே விவகா ரங்க ளருகலே விடலென் றாகும்
அமர்செயுஞ் சுகதுக் காதி யனுபவிப் பதுச கித்தல்.

(இ-ள்.) சமந்தமம் விடல்சகித்தல் சமாதானஞ் சிரத்தையாரும்—எ-து. முன்னர் சமாதிசட்க சம்பெத்தென்றார் ; அவை சமம் தமம் விடல் சகித்தல் சமாதானம் சிரத்தை யெனவாரும், சமமகக்கரணதண்டம்—எ-து. சமமாவது அகமாயுள்ள மனத்தைத் தண்டித்தலாம்; தமம் புறக்கரணதண்டம்—எ-து. தம மாவது புறமாயுள்ள ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் தண்டித்தல்; அமர் மனேவிவகா ரங்களருகலே விடலென்றாகும் எ-து. விடலாவது தானமர்ந்துள்ள குடும்பவிவகாரங்களைச் சுருங்கச்செய்தலாம்; அமர்செயுஞ் சுகதுக்காதி யனுப விப்பது சகித்தல்—எ-து. சகித்தலாவது விடாது கலகஞ்செய்கின்ற சுகதுக்கமு தலியவைகளை அவ்வவ்வாறுகாதனுபவித்தலாம். எ-று.

இச்சை செல்லுழியெல்லா மனஞ்செல்லாது காத்தல் அகக்கரணதண்ட மெனவும், முன்பழக்க வழிச் செல்லுழியெல்லாம் பொறிகள் செல்லாது காத் தல் புறக்கரணதண்டமெனவும், விவகாரவிரிவைச் சுருக்கல் அமர்மனே விவகா ரங்க ளருகலெனவும், இருவினைப்பயன் வழித்தா யாகாமை சகித்தலெனவும் பொருள்படுமாறுகாண்க. கலகஞ்செய்தல் மனமொரு வழித்தா நிற்கச்செய்யா தலேயச்செய்தல். (க)

அ - கை.

இ து வு ம து.

10 சிரவணப் பொருளைத் தானே சித்தஞ்சிக் திக்கு மாறு
சரசமாய் வைக்கு மித்தைச் சமாதான மென்பர் மேலோர்
பரமசற் குருநா லன்பு பற்றலே சிரத்தை யாகும்
வரமிகு சமாதி யாறு வகையாஞ்சொற் பொருளீ தாமே.

(இ-ள்.) சிரவணப்பொருளைத் தானேசித்தஞ் சிந்திக்குமாறு சரசமாவைக் குமித்தைச் சமாதானமென்பர் மேலோர்—எ-து. வேதாந்த சிரவணார்த்தத்தையே சித்தஞ் சிந்திக்கும்படி இனிய லீலையாக நியமித்துக்கொண்ட இந்தச்சன் மார்க்கத்தைச் சமாதானமாவதெனச் சான்றோர்கூறுவர். பரமசற்குருஞானன்பு பற்றலே சிரத்தையாகும்—எ-து. சிறந்த சற்குருநாதனிடத்திலும வேதாந்தநூலினிடத்திலும் மிக்கவன்புவைத்தலே சிரத்தையெனப்படுவதாம். வரமிகுசமாதியாறுவகையின் சொற்பொருளிதாம்—எ-து எல்லாவரத்தினுமிக்க ஆறுசமாதிவகையின் சொற்பொருளிஃதேயாம். எ-று.

ஏனையவற்றைச் சிரவணப் பொருளென்னாது வேதாந்தமென்றது சமாதி சட்க சம்பத்து நான்குசாதனத்துள் மூன்றுவதாதலானும், சமாதியாறனுள் சமாதான மைந்தாவதாதலாலும், பின்சாதன மூமூட்சுத்துவமாதலானுமென்க. தானே யென்னுந் தேற்றேகாரந் தந்தது பிறவன்றெனற்கு. கர்தானுகர்தலைச் சிரவணமென்றார்; பொருளிதாமென்றது தொகுதியொருமை. வேதாந்தார்த்தமாவது அங்கலிங்கார்த்தத்தை மாத்திரம் பிரதிவாதிப்பது. ஏனைய கன்மகாண்டம் பத்திகாண்டமெனக் குறிப்பிக்கநின்றன.

(கு-து.) இந்நூலதிகாரிக்கு இந்நான்குசாதனமும் அங்கமாயிற்றென்பது.

அ - கை.

[அவ்வவற்றிற்குரிய சாதனமின்றியக்கண் யாதும் அமையாதென்பதையும், அமையின் அதனருமையையும் இக்கவியிற் கூறுகின்றார்.

11. சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலால் லிந்த நான்கு மடைந்தர்வர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ளே நுழையாது நுழையு மாகிற்
பூதசன் மங்கள் கோடி புனிதமாம் புருடனுமே.

(இ-ள்.) சாதனமின்றி யொன்றைச் சாதிப்பா ருலகிலில்லை—எ-து. அவ்வவற்றிற்குரிய சாதனமில்லாவிடத்து யாதுகாரியத்தையுஞ் சாதிப்பாருலகெங்கணுமில்லை; ஆதலா லிந்தநான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகும்—எ-து ஆகையாலிந்த நான்கு சாதனமுடையோர்க்கே ஞானோதயமுண்டாகும். நூதன விவேகியுள்ளினுழையாது—எ-து. நூதனசாதன விவேகியுள்ளத்தின்கண் ஞானார்த்தத்தை நுழையுமா றெடுத்துக் கூறினுஞ் சற்றும் நுழையாது நுழையுமாகிற் பூதசன்மங்கள் கோடிபுனிதனும் புருடனும்—எ-து. நுழையுமாஞல் அவன் முன் அநேககோடி சன்மங்களிற் செய்தசிவபுண்ணியங்களாற் சித்த சுத்தியுடையோனாகிப் பரிபாக புருடனென் றெண்ணப்படுவான். எ-று.

பொதுப்பட நீதிபற்றிக் கூறியதென்பது தோன்றச் சாதனமின்றியொன்றைச் சாதிப்பா ருலகிலில்லையென்றார். நிச்சயமாதலி னநிந்தவர்க்கேயெனத் தேற்றேகாரம் வருவித்தாம் ஏனையபாலிலும் ‘‘ஒருமொழி யொழிதன்னினங் கொளற்குரித்தே’’ என்னும் விதியால் புனிதனென்பதை யொட்டுக அஃறிணையிலு முள்ளுக்கத்திரியும் ஞானக்கினியா லெரிந்ததென்னும் ஐதிகசாம்பிரதாய மிருத்தலிற் கூடும்.

(க-து.) ஞானம் சாதனசதுஷ்டயமின்றி யமையாதென்பது. இங்கே யறிவுண்டாகு மென்பது மெய்யுணர்வை, மெய்யுணர்வாவது அயலையறி யாது தன்னைத்தானறிதல். என்னை? "மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாம், தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே" என்றார் தத்துவராயர். சுவானுபூதி நூலேயேனும், சுவானுபூதி யுத்தியையேனும், சுவானுபூதிநவ நவ அற்புதத்தையேனும் இடைவிடா திரவும்பகலுமாக எதிரினின் றெடுத் துப்புலப்படும் வண்ணம் போதிக்கினும் இங்ஙனமாய சத்தஞ்சிறிதும்நுழை யாது. செவிடோ? உலகசத்தத்துக்கன்று. என்னை? "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற் றேட்கப் படாத செவி" என்றார் திருவள்ளுவ நாயனார். (கக)

அ ை க.

[இங்ஙனமாய சாதனசதுஷ்டய அதிகாரியான ஒருவனதிதீவிர பக்குவநிலையை இக்கவியிற் கூறுகின்றார்]

12. இவனதி காரி யாஞை னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும்
தவனமூன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான தீர்த்தம் படிந்திடப் பதறி ஞனே.

(இ-ள்.) இவனதிகாரியாஞை னிந்திரியங்களாலும் புவனதெய்வங்களா லும் பூதபௌதிகங்காளாலுந் தவனமூன்றடைந்து—எ-து. இந்தநான்குசாத னத்துக்கு மதிகாரியாஞைனிய இவன், மனமுதலியவாறு இந்திரியங்களா லும், பூமியில் தனக்கிடுக்கணுக நேரிடுந் தெய்வச்செயல்களாலும், பஞ்சபூதங் களாலும், அவற்றின்பௌதிகங்களாலும் நேரிடும் மூன்றுவித தாகமடைந்து, வெய்யிற்சகித்திடாப் புழுப்போல்வெம்பி—எ-து. வெய்யிலாற் சகிக்கப்படாத புழுவைப்போல வதைந்து, பவமறு ஞானதீர்த்தம் படிந்திடப்பதறினன்-எ-து. சனியாத ஞானதீர்த்தத்தில் மூழ்கிவிட அதிதீவிரமாக விளைவுற்றனன். எ-று.

இவன் தவனமூன்றடைந்து புழுப்போல்வெம்பி ஞானதீர்த்தம் படிந்திடப் பதறினனெனமுடிக்க. அறிந்திரியங்களாலேநேரிடுந்தவனமாவது பொருளல்ல வற்றைப் பொருளாக உணர்வதினாலாய சுகதுக்கவதை; புவனதெய்வங்களா லேநேரிடுந் தவனமாவது ஊழாலேநேரிடுந் தனதிஷ்டத்தவறு; பூதபௌதிகங்களா லேநேரிடுந் தவனமாவது மண்முதலிய பஞ்சபூதங்களாலும், இடிமின்னல் வீடி டிந்துவிழுகை முதலியவற்றா லேநேரிடும்வகை. இவற்றைமுறையே ஆதியாத் மீக மெனவும், ஆதிதெய்வீக மெனவும், ஆதிபௌதீக மெனவும் அறிவுடை யோர்கூறுவர். தாபத்ரயாக்கினி யெனினும் பொருள்படும். தவனமூன்ற டைந்து புழுப்போல்வெம்பிப் பதறினனென்னுங் குறியா லதிதிவிரனெனக் குறிக்கப்பெற்றும். தவனமென்பது அக்கினியெனினுமமையும். இந்தத் தாபத் ரயத்துக் கியையாதா னிவனெனவே, ஏனையர் இயைந்தனனெனப்பொருள்படு தலால் அவர்க ளதி தீவிரரல்லரெனத் தானேகுறிக்கின்றது. இக்குறிகளே வஞ் சகர் தம்பா லிருப்பதாகக் காட்டினும் விரைவில் மாறுவர்.

(க - து.) வெயிலால் வதையுண்டோன் தடாகமுதலிய தீர்த்தத்தில் மூழ்கப் பதறுவான்போன்று தாபத்ரயாக்கினியால் மனச்சாக்ஷியாக வதையுண்டோன், எனைய தீர்த்தம் வேண்டாது ஞானதீர்த்தத்திலேயே மூழ்கப்பதறுவனெனவறிக. பவமறுமென்பதை ஞானத்துக்கு விசேடணமாக்கிப் பவக்தையறுக்கு ஞானமெனப் பொருளகொளினு மமையும். தெய்வமெனினு மூழெனினு மொக்கும். அறு ஞானம்வினைத்தொகை. இது தன்வினை பிறவினை கட்குப்பொது. (கஉ)

அ - கை.

[இந்த அதிதீவிர பக்குவன் மேற்கூறிய தாபத்ரயாக்கினி மேலீட்டால் ஈடணத்ரயமுங் கடந்து ஞானசற்குருவுக்காக எங்குந் தேடியலைந்து கண்டானென்பதை இக்கவியிற் கூறுகின்றார்]

13. ஆனவிம் மனவி மக்க ளர்த்தவீ டணைகண் மூன்றிற்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடி மான்போற்
போனவன் வெறுங்கையோடே போகாதவண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றுக வணங்கி னனே.

(இ-ள்) ஆனவிம் மனவிமக்க ளர்த்தவீ டணைகண்மூன்றில்—எ-து. சத்தமக்குரிய ஏழாலமைந்த இத்தமனைவியும் இந்தப்புத்திரர்களும் இந்தப்பொருள்களுமாகிய ஈடணத்ரயங்களினின்றும், கானவர்வலையிற்பட்டுக் கைதப்பியோடுமான்போல் போனவன்—எ-து. வேடரது வலையிற் சிக்கித் தெய்வகதியால் தப்பித்துக்கொண்டு திரும்பிப் பாராதோடு மான்போலத் தப்பித்தோடிப்போன இவ்வதிதீவிரன், வெறுங்கையோடே போகாதவண்ணஞ்சென்று எ-து யாதொன்றும் இல்லாததாகப் போகாத பிரகாரம் போய், ஞான சற்குருவைக்கண்டு நன்றுக வணங்கினன்—எ-து. ஞானசிரியனைத்தரிசித்து மனப்பூர்த்தியாக வணங்கினன் எ-று.

ஈடணத்ரயத்தால் நேரிடுந்துன்பமாவது மனைவிபால் ஐயமறுமையும், மக்கள்பால் அவாவறுமையும். சாமீட்டிய பொருளின்பால் "இன்னதரும் பொருளீட்டுதலுந்துன்பமே பின்னதனைப் பேணுதலுந்துன்பமே யன்ன தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா லிழத்தலுந் துன்பமேயாம்" என்னுங் கவிப்படி நேரிடுந்துன்பமறுமையுமே. வெறுங்கையோடேபோகாதவண்ணமாவது சாதன சதுஷ்டய பரிபாகத்தை விளக்கநின்றது. இங்கேநன்றுகவென்பது திரிகரணமொத்தலே. (கஙு)

(க-து.) தாபத்ரயக்கினியால் ஈடணத்ரயத்தைக் கடந்து ஆசிரியரைத் தேடிக் கண்டு வணங்கினனென்பது. (கஙூ)

அ - கை.

[அங்ஙனந்தேடிக் கண்ட ஆசிரியன்பால் தன்குறைகளை முறையிடுகின்றான் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

14. வணங்கிநின்றழுது சொல்வான்மாயவாழ்வெனுஞ்சோகத்தால்
உணங்கினேனையனேயென்னுள்ளமேகுளிரும்வண்ணம்
பிணங்கிய கோசபாசப் பின்னலைச்சின்னமாக்கி
இணங்கிய குருவேயென்னை யிரக்ஷிக்க வேண்டுமென்றான்.

(இ-ள்.) வணங்கிநின்றழுது சொல்வான் மாயவாழ்வெனுஞ் சோகத்தா லுணங்கினேன்—எ-து. ஆசிரியரை வணங்கிநின் றழுது முறையிடலாயினன், (அது குடும்பத்தை மெய்யென் றுன்னு மாயவாழ்வென்னும் சோகத்தினால் மிகவதைதலை) ஐயனே என்னுள்ளமே குளிரும்வண்ணம்—எ-து எனதா சிரிய மூர்த்தமாக எழுந்தருளிய கர்த்தனே! என்னுள்ளமாத்திரம் சீதளமா கும்படி, பிணங்கிய கோசபாசப் பின்னலைச்சின்னமாக்கி—எ-து. பேரின்ப வாழ்வுக்கு மாறுபுள்ள பஞ்சகோசமாகியவலையைத் துண்டுதுண்டாகத்தறித்து இணங்கியகுருவே யென்னை யிரட்சிக்கவேண்டுமென்றான்—எ-து. என் ஐயந் திரிபு அகற்றுவதற்குஇயைந்த குருநாதனே அடியேனைப் பிறவியணு காவாறு இரட்சிக்க வேண்டுமென் றிரந்தனன். எ-று

மாயவாழ்வென்பது பொய்வாழ்வு; சோகமாவது துன்பம். எனவே, பொய்வாழ்வு மெய்யாகச் சுகம்போலத் தோன்றலின் மெய்வாழ்வெனத்து ணிந்து அனுபவிக்க அனுபவிக்கத் துன்பமேலீடே நிகரறறபலனென்பது பெற்றம். மாயவாழ்வு சந்தைக்கூட்டம்போல்வது தேகங்களெல்லாமண் பொம்மைகளாதலின் மீண்டு மண்ணுகின்றன ஆயினும் வினைவழியேவந்து அணைவதாதலின், "இக்கணத்திருக்கு மிலிவருங் கணத்து டிருக்குமோ மரிக் குமோ வுடலம்" என்றாரறிஞர். ஆதலின் இவ்வுடலை மெய்யெனநம்பிகானீய வனவ ளதுவெனக்கொண்டு குலாவிமகிழ்தல் மகிழ்வன்று என்பதுபற்றி மாய வாழ்வு என்றார். இப்பொய்வாழ்வைப் பொய்யென்றுணராது மெய்யெனக் கொள்வது, அவற்றலாய சுகதுக்க வலைகளால் ஓயாது மொத்துண்பதும், இது சுகசமென்று அச்சுழலில்தானே யிருக்க மீண்டுமீண்டுங் காமியத்தவமே புரி வதும், சிற்றின்பத்தையே கருதிச் சலிப்பின்றி உழல்வதும் உள்ளமாதலாலும; தாபத்ரயாக்கினி வதைத் தவிப்பும், ஈடணாத்ரயத்தவிப்பும் இவ்வுள்ளத்திற்கே யாதலாலும்; உபசாந்தம் வேண்டுவது வேறென்றிற்கும் அன்றாதலாலும் உள் ளமே குளிரும் வண்ணமெனத் தேற்றேகாங்கொடுத்தார். பாசமென்பது ஆசையாகிய கயிறு, கயிற்றுற் பின்னியிருப்பதுபற்றிப் பின்னலை வலை யென்றாம.

(க - து.) துக்கநிவர்த்தி வேண்டுமென்பது. (கச)

அ - கை.

[அவ்வேண்டுகோளுக்கு இயைந்த ஆசிரியர் யான் சொன்னவாறு இயையின் அங்ஙனமாகுதியென்றனர் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

15. அன்னைதன் சிசுவை யைய னுமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சங் கிதியி ருத்தி

உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னதுகேட்பா யாகிற் றொடர்பவந் தொலையு மென்றான்.

(இ-ள்.) அன்னைதன்சிசுவை யையனுமை மீன்பறவைபோல—எ-து. தாயாகிய ஆமையும், மீனும், பட்சியும் தன்சிசுவைச் செய்யுமாறுபோலக் குரு, தன்னகங்கருதிநோக்கித் தடவிச் சந்நிதியிருத்தி—எ-து. தன்னுளத்திற் சிந்தித்தும் திருநோக்குவைத்தும் அஸ்தமஸ்தக சையோகஞ் செய்தும் இம்மூன்றுமாயினபின் தன் சந்நிதியிலிருக்கச்செய்து, உன்னது பிறவிமாற்றுமுபாயமொன்றுண்டு—எ-து இனி உனது சனனத்தை நீக்கத்தக்கஓர் தந்திரமுண்டு. சொல்வேன் சொன்னது கேட்பாயாகிற் றொடர்பவந்தொலையு மென்றான்-எ-து. யான் அதைச் சொல்லுகின்றேன் சொன்னவாறு கேட்டுநிற்பையாயின் உன்னைவிடாதுதொன்றுதொட்டுத் தொடர்ந்து வருகின்ற சனனம் உன்னைவிட்டு நீங்குமென்றுரைத்த மொழிந்தனன். எ-று.

ஐயனுமென்ற உம்மைதொக்குநின்றது. அன்னையென்பது வமையன்று; தன் சிசு வென்றதனால் ஆமைமீன் பறவையென்பவைகட்கு விசேடணமா யிற்று. என்னை "படர்க்கைமுப் பெயரோடணையிற் சுட்டுப்பெயர் - பின்வரும்" என்றார் நன்னூலார். ஆமைமீன் பறவைபோலத் தன்னகங் கருதிநோக்கித்தடவி யென்பது நிரனிறைப்பொருள்கோள். இக்கவியில் தன்னென்பதிரண்டுண்டு: ஒன்று ஆமையாதிகளுக்கும், மற்றொன்று தன்னகங்கருதி என்பதனால் குருவுக்கு மெனக்கொள்க. யாதினனெனில் போலவென்பதை இடையிற்கொடுத்துப் பிரித்ததினாலென்க.

(க-து.) அவன் வேண்டுகோளுக்கு இவர் இயைந்ததற் கடையாளம் இவன் தன்னைப்போலாகுக வென்றுன்னலும், நோக்கலும், தடவலுமேயென்பது. ஆமையாதிகளுக்குரிய வினையை இவர்மேலேற்றலால் அவைகட்குச்சொல்லாதொழிந்தது சுருங்கச்சொல்லலென்னு மழகு. அவைகட்குரிய தனித்தனிவினையும் தத்தங் குஞ்சுகள் தம்மைப்போல் உருப்படற்கென்க. (கூ)

அ ை க.

[அங்ஙனமாகுகவென்ற ஆசிரியர் கூறிய ஓர் சிறியதந்திரத்தைக் கேட்டமாத்திரத்தில் அவனெய்திய உவகை மிகுதியை இக்கவியிற் கூறுகின்றார்.]

16. தொடர்பவந்தொலையுமென்று சொன்னதைக்கேட்டபோதே
தடமடி மூழ்கி னுன்போற் சரீரமுங் குளிர்ந்துள் ளாறி
அடருமன் பொழுகு மாபோ லானந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீணடும் வணங்கினின் றீது சொல்வான்.

(இ-ள்.) தொடர்பவந் தொலையுமென்று சொன்னதைக் கேட்டபோதே—எ-து. தொன்றுதொட்டு உன்னைத் தொடர்ந்துவருகின்ற சனனந் தொலையுமென்று குருவானவர் சொல்ல அதைச் சிடன் கேட்டமாத்திரத்தில், தடமடிமூழ்கினுன்போற் சரீரமுங் குளிர்ந்துள்ளாறி—எ-து வெய்யிலாற்களைப்

பட்டோன் பெரியதடாகத்தின் மூழ்கினுல் எங்ஙனமோ, அங்ஙனம் இவனும் தன் மனம் குளிர்ந்ததுமன்றிச் சரீரமும் உட்புறமெங்குங் குளிர்ந்து வெப்மாறி, அடருமன்பொழுகுமாபோ லானந்தபாஷ்பங்காட்டி—எ-து. அகத்தின்மிக்க அன்புபெருகுமாறுபோன்று புறத்திலும் விதிகளால் ஆனந்த பாஷ்பம் ஒழுகக்காட்டி, மடன்மலர்ப்பாதமீண்டும் வணங்கினின் றீதுசொல்வான்—எ-து. தாமரைமலர்போன்ற திருவடிகளை மீண்டும் வணங்கி யெழுந்துநின்று இதைச் சொல்லப்புகுந்தனன். எ-று.

ஒருவரும் இங்ஙனம் சொல்லக்கேளாமையால் இங்ஙனமாய வியப்புதோன்றிற்று. மனங்குளிர்ந்தது மன்றியெனத் தெரிவித்தலால் சரீரமுமென்றவும்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. மடன்மலர்ப் பாதம் உவமைத்தொகை. (கசு)

அ - னை க.

[அங்ஙனம் உவகையின்மிக்கோனுகிய மாணுக்கன் ஐயனே உபாயமொன்றுண்டென்றீரே; அதனை யுணர்தற்கு அடியேன் அபாத்திரனுயினும் அதை வீளக்கி இரட்சித்தல் தமது கடமையே யென்று இரந்துகேட்டனன் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

17. சொன்னது கேட்க மாட்டாத் தொண்டனு னுலுஞ் சுவாமி
நின்னது கருணை யாலே நீரென்னை யாள லாமே
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டென் றீரே
இன்ன தென்றதைநீர்காட்டி யீடேற்றல் வேண்டு மென்றான்.

(இ-ள்.) சொன்னது கேட்கமாட்டாத் தொண்டனுனும்—எ-து. தான்முணர்த்துவதைக் கேட்கச் சக்தியற்ற தொண்டனுயினும், சுவாமி நின்னது கருணையாலே நீ ரென்னையாளலாமே—எ-து குருசுவாமியே உமது திருபாகடாட்சத்தினுலே அடியேனைத் தடுத்தாட்கொள்ளலாமே தடையென்னை? உன்னது பிறவிமாற்று முபாயமொன் றுண்டென்றீரே—எ-து. உன் சனனத்தை நீக்கத்தக்க உபாயமொன் றிருக்கின்றதென்றீரே, இன்னதென் றதை நீர் காட்டி யீடேற்றல் வேண்டுமென்றான்—எ-து. அஃது இத்தன்மைய தென்று அதனியல்பைக்காட்டி அடியேனை இரட்சிக்கவேண்டுமென்று இரந்தனன். எ-று.

(க-து.) இவன் இரந்துகோடலைக்கண்டு அகம் பாவம் அற்றவனென்று உணர்ந்தாரென்பது.

உலகின்கண் அரசராயினுர் தமது ஆணைவழிச்செல்லாதோரை, சதுர்விதவுபாயங்களால் வசமாக்கி, தமது ஆணைவழிசெலுத்தி யாள்வதுபோல நீர்சுவாமியாதலானும் அடியேன் உமது ஆளாகலானும் எவ்வாற்றானும் என்னையாள்வது உமது கடமையேயாகலான் யான்முகமன் சொல்லவேண்டுவது என்னை! என்பான் ‘சொன்னது கேட்கமாட்டாத் தொண்டனுனுலுஞ் சுவாமி நின்னது கருணையாலே நீ ரென்னையாளலாமே” என்றான். என்ப. (கஎ)

அ - கை.

[இவனே எமது கருத்துக்கு இயைந்தவனென்று அன்னேன் இரந்து கேட்கும் குறியாலுணர்ந்து உபதேசிக்கத் தொடங்கினர் என்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

18. அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின்கொள்கைபோலத்
தொடங்கிய குருவு மான சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவ னேப்பார்த் துபதேச மோது வாரே.

(இ-ள்.) அடங்கிய விருத்தியானென் றறிந்தபின்—எ-து. விருத்தியடங்கினவனென்று இவனை அறிந்தபின்னர், செறிந்தமண்ணின் குடம்பையுள் புழுமுன்னூதுங் குளவியின் கொள்கைபோல—எ-து புரையற அமைந்த மண் கூண்டினுள் புழுவுக்கு முன்னின்று கோஷ்டிக்குக் குளவியின் தன்மையைப் போல, தொடங்கிய குருவு மான்மசொரூபமே மருவவேண்டி—எ-து. அவ்வுபாயம் இனையதெனத் தெரிவிக்கப்புகுந்த ஆசிரியரும் ஆத்மசொரூபத்தையே அவனடையவேண்டி, உடம்பினுட் சீவனேப்பார்த் துபதேசமோதுவார்—எ-து. தேகத்தினுளிருக்கும் சீவனைப் பார்த்து உபதேசிக்கத் தொடங்கினர். எ-று

தடுக்காது அமைதி பெறநிற்றலை அடங்கியவிருத்தியானென்றார். புழுவை இரைக்கென்றனர் சிலர். யாதுபற்றியெனின், புழுவைக் குளவியாக்கல் எங்ஙனம் பொய்யோ, அங்ஙனமே வேதாந்தமுழுவதுங் குழறலென்பதைக்காட்டவென்க.

வினா.—சமஸ்தமும் மித்தையென்று வேதாந்தசாஸ்திர முழுவதும் பிரதிபாதிப்பது பொய்யோ ?

விடை.—அனைத்தையும்பொய்யென்பதனைக்குற்றமே.

வினா.—பொருளிடங் காலங்களில் ஒன்றேனும் சோதனையில் அல்ல, இல்லையென்று இயையாது, ஆம், உண்டெனப்பட்டே இருக்கவேண்டும். அங்ஙனம் ஒரு பொருளுஞ் சம்மதியாதே; ஆதலின் அனைத்து மித்தையெல்லாம் குற்றமோ ?

விடை.—பொய்யாயின் நமது இச்சா ஞானக்கிரியைகட்கு இயைந்திருப்பானேன் ? கர்த்தத்துவ போக்தத்துவமா யிருப்பானேன் ? சித்து சடபேதமாயிருப்பானேன் ? அசுசு குடியென்றிருப்பானேன் ? பிறப்பிறப்பென்றிருப்பானேன் ? ஆதலிற குற்றமே.

வினா.— அனைத்தும் பூதவிகாரங்களாதல் என்பதற்குப் பழுதென்னை ? சுயம்பெனிற் காட்டலாம். அங்ஙனமே பூதமும் சுயம்பெனின் விகாரமயமல்லாதிருக்கக் காட்டலாம். காட்டவலியின்றேல் உன்பிழை; நூலின்மேற் பிழையென்னை ?

விடை.—இங்ஙன மூணாமையாற் குற்றமென்றேயென்றனன். (கஅ)

அ - கை க.

[அவ்வுபதேசம் இனையதெனச் சாமானியமாகக் கூறுவதை இக்கவியிற் கூறுகின்றார.]

19. வாராயெண் மகனே தன்னே மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே.

(இ-ள்.) வாராயென் மகனே தன்னே மறந்தவன் பிறந்திறந்து—எ - து. என் ஞானபுத்திரா! என் பூர்வபக்க சித்தாந்தவழியே வரக்கடவாய்; எவன் தன்னேமறந்தானே அவன் மாறாது பிறந்திறந்து, தீராத சுழல்காற்றுற்ற செத்தை போற் சுற்றிச்சுற்றி—எ-து. ஓயாத சுழற்காற்றில் அகப்பட்ட செத்தைபோல எப்பதவிகளிலும் நிலையின்றிச் சுற்றிச்சுற்றி, பேராத காலநேமிப்பிரமையில் திரிவன்—எ-து. அழியாத காலசக்கரமென்னு மயக்கத்தில் திரிந்துகொண்டேயிருப்பன்; போத மாராயுந் தன்னைத்தானென் றறியுமவ் வளவுந்தான்—எ-து. அறிவினல் ஆராயத்தக்க தன்னைத் தானென்றறியுமட்டும். எ-று.

எங்கெங்கே பூர்வபட்சப் படுத்துகிறேனே அந்தந்த நிலைகள் விட்டு எங்கெங்கே சித்தாந்தப்படுத்துகிறேனே அந்தந்த நிலையை விடாதுபற்றி வருவாயாக வென்பார் வாராயென்றார் தன்னே மறத்தலாவது அயலைத்தானெனலே. எடுக்கும் உடலெல்லாம் காலவளவில் விடாது மாறி மாறிச்சுழன்றுவருதலின் காலத்தைச் சக்கரமென்றார். காலம் இருந்தபடியிருக்க அதனைச் சக்கரமென்றது உடலுக் காயுள் கணித்தலைப்பற்றியும், அண்டங்கள் சுழன்று வருதலைப் பற்றியும் என்க. பிரமை யென்பதற்குச் சுழலெனப் பொருள்கொள்ளின் கால நேமி யென்பதனுற் பொருந்தும். மயக்கமெனப் பொருள்கொள்ளின் காலநேமியை ஆயுளாகக்கொண்டு மயங்கல் புருடனுதலால் அவன்மேற் பொருந்தும். தானென்பது போதமாதலால் தன்னுல் தன்னை ஆராயவேண்டுமென்பது தோன்ற, போத மாராயுந் தன்னையெனவும், அங்ஙனம் ஆராய்ந்தவிடத் தன்றித் தன்னைத் தானெனவுணர்தல் கூடாமையின், ஆராயுந் தன்னைத் தானென்றறியும் எனவுங்கூறினர்.

(க-து.) தானே தானுகாத காலமளவும் பிறவியகலாதென்பது. இதுசனனநாசதந்திரம். ஏனையவோ தானெனல் அயலாதற்பால ஆதலின் போலிதந்திரம். இது மதத்தரிடத்தது; அது வேதாந்தியிடத்தது ஆதலின் வேதாந்தமே அனைத்தினு மிகையெனல் அருத்தாபத்தி. யாதினுலெலின் சத்துசித்து ஆனந்தத்தக்கு இயைதற்பாலது இனையதெனவும், அநித்த சடதுக்கு இயைதற்பாலது இனையதெனவும் கலப்புறுது விளக்கச் சோதனேஞாயம் பொருத்தங்களே யுடைமையானென்க.

அ - கை

[முன்னர் சாமானியமாகக் கூறியதையே விசேடமாகக்கூறுதலே இக்கவியிற் கூறுகின்றார்.]

20 தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் ஞானப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவாயாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கையாலே யீதுப தேசித்தேனே.

(இ-ள்.) தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்—எ-து. ஒருவன் தன் எதார்த்த நிலையினையும், தனக்காதாரமாயுள்ள தலைவன் எதார்த்த நிலையினையும் பிரத்தியட்சமாகக் காண்பானாயின், பின்னையத் தலைவன் ஞானப்பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்—எ-து பின்னர் அத்தலைவனேதானாகவும் சானே அப்பிரமமாகவும் ஏகமாய இடத்துச் சனனத்தினின்ற கல்வன். (ஆதலின்) உன்னைநீ யறிவாயாகி லுனக்கொரு கேடுமில்லை—எ-து. உன் எதார்த்தவடிவை நீ புண்மையாகக் காணவல்லையாயின் உனக்கொரு துன்பமுமில்லை; என்னை நீகேட்கையாலே யீதுப தேசித்தேன்—எ-து. பிறவித் துயரகலத்தக்க தந்திரம் உணர்த்தவேண்டுமென்று என்னை நீ கேட்டபடியால் இதனை யானு பதேசித்தேன்—எ று.

தலைவன், பிரமம். ஐக்கியமாதற்கு இயைதற்பாலது உபாதிரகித கூடஸ்த பிரமமாதலால் இவற்றையே தன்னையும் தனக்காதாரத் தலைவனையுமெனவும், பிரத்தியட்சத்தாலன்றிச் சொல், நிச்சயம், பாவனை முதலியவற்றால் ஐக்கிய மெய்தாது என்பது தோன்றக் கண்டானேலெனவும, ஞானகதப் பிரத்தியட்சத்துக்கு முன்னரன்று ஐக்கியமாவதென்பார் பின்னையத் தலைவன் ஞானப்பிரமமாயெனவும், தலைவன் ஞானயென்றதனால் தான் தலைவனுயெனவுங்கொண்டாம். ஐக்கியமாதலைப்பற்றி இரண்டுதேற்றேகாரமும வருவித்தாம் ஐக்கிய மெய்தியக்கால் சனனத்துக் கிடமின்மையின் பிறப்புத் தீர்வனென்றார். இது வேதாந்தமரபென்பது தோன்ற ஆதலினென்றும். சனனம் அகல்வதற்கு வேறின்மையான் ஈதுபதேசித்தேனெனவுங்கூறினர்.

வினா.—ஐக்கியத்தாலெங்ஙனம் பவ மகலும் ?

விடை.—எங்ஙனமாய நிலையைக் கூடஸ்தன் பிரமமென்றது ? அது தெரியின் ஐக்கியந்தெரியும்; ஆதலின் வெறுஞ் சொல்லாலாவதன்றென்க.

(க - து.) இதனினு மேலாய ஐக்கியமில்லையாதலால் இதுகிடைத்தல் அரிதரிதென்பது பற்றி, இதனைத் தத்தமக்குரிய சமயக்கொள்கையின்மேலும் அதிகாரத்தின்மேலும், எச்சிலின்மேலும், யோனியின்மேலும், ஒருங்குபோல் தோற்று மனவொருமையின்மேலும், இன்னும் இவைபோன்றவைகளின் மேலும்வைத்து என்னசாதிக்கினு மைக்கியமாகுமா? ஒருபோது மாகாதென்பது.

அ - கை -

[தன்னைத்தான் அறியவேண்டுமென்ற ஆசிரியரது இலட்சியார்த்தம் அறியாது, தன்இலட்சியார்த்தம் காரணமாக எண்ணித்தன்னைத் தானுணராதார் இல்லாதிருக்க, அவர்கட்குச் சனனந்தவிராதது என்னையென்ற வினாவை இக்கவியிற் கூறுகின்றார்.]

21. * என்னைத்தா னசடனுக வெண்ணியோ சொன்னீ ரையா
தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவ ருண்டோ
பின்னைத்தா னவர்க ளெல்லாம் பிறந்திறந் தழலு வானேன்
நின்னைத்தா னம்பி னேற்கு நிண்ணய மருளு வீரே.

(இ-ள்.) என்னைத்தா னசடனுக வெண்ணியோ சொன்னீ ரையா — எ-து. என்னை அவ்வளவு மூடனுக எண்ணியா சொன்னீர்ஐயனே! தன்னைத்தா னறியா மாந்தர் தரணியி லொருவருண்டோ — எ-து. தன்னைத் தானறியாத மனிதர்கள் ஒருவர் உலகிலுண்டா? பின்னைத்தா னவர்களெல்லாம் பிறந்திறந் திறந் தழல்வதென்னையோ? நின்னைத்தா னம்பினேற்கு நிண்ணய மருளு வீர் — எ-து. உன்னையே தஞ்சமாக நம்பியஅடியேனுக்கு உண்மையைத்தெரிவித்தருள வேண்டுமென்று இரந்தனன். எ-று.

அடியேனும் உலகத்தாரும் தன்னைத்தான் உணராதாரல்லவே; இஃதென்ன அதிசயமென்பது தோன்ற, "என்னைத்தா னசடனுக வெண்ணியோசொன்னீ ரையா, தன்னைத்தானறியாமாந்தர் தரணியுளொருவருண்டோ" என்றார்.

(க-வது.) இவ்வாக்கியத்திற்கு அனுபவம் ஒவ்வாதது என்னையென்பது.

அ - கை -

[தன்னைத்தான் உணருமார்க்கம் இன்னதெனத் தெரிவிக்கப் புகுந்தார், இக்கவியில் ஆத்மா நாத்ம விவேகத்தையே தன்னைத்தான் அறிதலெனக் கூறுகின்றார்.]

22. இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வன் யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவ னுகு மென்றார்
சொன்னபின் றேகி யாரித் தூலமல் லாம லென்றன்
பின்னது கேட்ட வையர் பீடையு நகையுங்கொண்டார்.

(இ-ள்.) இன்னது தேகந் தேகி யிவனென வுணர்வன் யாவன் — எ-து. தேகம் இன்னதெனவும், தேகி இன்னயனெனவும் உணர்பவனெவனே? அன்னவன்றன்னைத் தானென் றறிந்தவனுகுமென்றார் — எ-து. அப்படிப் பட்டவனே தன்னைத்தா னறிந்தோன் என்பவனும் என்றார். சொன்னபின் றேகியாரித் தூலமல்லாம லென்றன் — எ-து. அங்ஙனம ஆசியர் கூறியபின் இத்தூலதேகத்தை யன்றித் தேகியென்பவன் வேறொருவனுளனே? இஃதென்ன வியப்பு

* 'என்னைத்தான் சடனுவள்ளத் தெண்ணியோ' வெனப்பாடமுமுண்டு.

அவன் யாரென்றனன். பின்னது கேட்டவையர் பிடையுநகையுங்கொண்டார்—எ-து. அதுகேட்ட பின்னர் ஆசிரியர் சிறிது வருத்தமும் பின்னர் நகையு மானார். எ-று,

ஒன்றுந் தெரியாத இவனை எவ்வாறு மெய்யுணர்வு ஆக்குவதென்னும் விசனமும், ஆயினும் அதிதீவிரஞதலினென்னுஞ் சிறிதுவப்பு மூண்டாயின மையால் பிடையு நகையுங் கொண்டா னென்றார். பொதுப்பட இன்னது தேகமென்றார்; அதனை இவன் இத்தூலமல்லாம லென்றான் எனவே தூலம், சூக்குமம், காரணமென்பவற்றுள் இத்தூலமென்றது வியப்பு இவ்வியப்பால் உமப்பெய்தின ரெனினு மமையும். அயல் ஆகார மானேன் சுயாகாரமுமாவ னெனக்கொள்ள லுவப்பபென்க. (உஉ)

அ - கை

[அநாத்மாவே தானெனில் இது சாக்கிராவத்தை; ஏனை யிரண்டவத்தையி லும் தூலங் காணுமல் வெவ்வேறுகக் காண அவற்றையாங்காங்கு கண்டவனும், இவற்றை யெல்லாம் ஒருங்கே ஓர்ந்துணர்ப வனும் யார் ? அவனைத் தெரிவி யென்பதை இக்கவியிற் கூறுகின்றார்]

23. தேக மல்லாமல் வேறே தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து மூளைத்திடு மவனார் சொல்லாய்
சோகமாங் கனவு தோன்றுச் சுழுத்திகண் டவனார்சொல்லாய்
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்லாய்.

(இ - ள்.) தேகமல்லாமல் வேறே தேகியார் காணே னென்றாய்—எ-து. அநாத்மாவைத் தவிர வேறே ஆத்மாவென்பவன் யார்? இருந்தாற் காணப்ப டானு? இல்லையாதலிற் காணேனென்றனை. மோகமாங் கனவில் வந்துமூளைத் திடுமனவனார் சொல்லாய்—எ-து. மயக்கமாயுள்ள சொற்பனத்தில்தானுகவந்து மூளைத்தவ னெவன் ? அவனார் ? சொல்லு. சோகமாங் கனவுதோன்றுச் சுழுத் திகண்டவனார் சொல்லாய்—எ-து. மயக்கமாகிய அந்தச் சொப்பனமும்காணப் படாதசுழுத்தியவஸ்தையைக்கண்டவனெவன்? அதையாயினுஞ் சொல். ஆகநீ நனவி லெண்ணுமறிவுதா னேதோ சொல்லாய் —எ-து. இவையனைத்தும் ஒருங் காகச் சேர்த்து நீ சாக்கிரத்திற் சிந்திக்கு மறிவாவதியாது? அதனையேனுஞ் சொல்லு. எ-று.

இருந்தாற் காணுமலென்பது நபாதி; காணுதலால் யானுங் கண்டி லனென்பது, நாஸ்தி. இவற்றை மறுக்க அவஸ்தாத்ரயம். காட்சித்ரயம், அபி மானித்ரயம் குறிப்பித்தார். குறிப்பிக்கவே, இவற்றை உணர்வான் தேகி ஒருவ னுளனுகத் தோன்றுகின்றது தோன்றவே, அத்தேகியெனல் அறிவாகிற பொ ருளென விளங்க, ஆகநீ நனவிலெண்ணு மறிவுதா னேதோசொல்லாய் என் றார். எனவே, அவ்வறிவு பிரத்தியேகாத்ம சொரூபமாயிற்று. தேகமே ஆத்மா

வென்றது நாஸ்திகம். அதனை மறுக்கச் சீவனெனக்குறிப்பித்தது ஆஸ்திகம் இவ்வாஸ்திகத்தை மறுக்க அறிவென்றது வேதாந்தம் என்க.

(க-து.) அறிவாகிற புருஷன் ஒருவன் இதோவிருக்கின்றனென வாச்சியார்த்தத்தாற் காட்டியதென்பது. (உங)

அ - கை.

[அங்ஙனம் வினவிய ஆசிரியருக்குத் தேவீர் ஒருவன் உள்ளதைக் குறிப்பித்தது மெய்யே? சந்தேகமில்லை. அவன் இனையனெனத் தெரிவிக்கவேண்டுமென்பதை இக்கவியிற் கூறுகின்றார்.]

24. நனவுகண் டதுநான் கண்ட நனவுள தினைவு நீங்கிக்
¶ கனவுகண் டதுமி ரண்டுங்கா ணுத சுழுத்தி கண்டுந்
தினமனு பவித்த லொக்குந் தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும தருளு வீரே.

(இ-ள்.) நனவு கண்டது நான்—எ - து. சாக்கிராவஸ்தை கண்டதும் நானே; கண்டநனவுளதினைவுநீங்கிக் கனவுகண்டதும்—எ - து. என்னுற்காணப்பட்ட சாக்கிரா வஸ்தையா யுள்ள ஸ்மரணை நழுவிக்கனவாகத்தோன்ற அக்கனவு கண்டதும் நானே; இரண்டுங் காணுத சுழுத்தி கண்டும்—எ - து. இவ்விரண்டவத்தையுங் காணப்படாத சுழுத்தியவத்தை கண்டதும்நானே; தினமனுபவித்த லொக்கும்-எ-து. அங்ஙனமாக யானே தினமனுபவித்துக்கொண்டு வருதலால் தேவீர் ஒருபுருடனுளனென்ப தொக்கும்; சற்றும் ஐயமில்லை; தெரியவுமில்லை சற்றே மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும்—எ-து. அது பிரத்தியட்சமாகக் காணப்படவுமில்லை; இல்லையென்றுல் அங்ஙனம் நில்லாது உள்ளதாகக் கொஞ்ச மனத்தில் தோன்றுகின்றது; அறியலாமெனில் யாதோ அதனை மறைக்கின்றது. (ஆதலின்) அருளுவீர்—எ - து. அவ்வைய நீங்க அதை யனுக்கிரகிப்பீர். எ-று.

நானென்பதை மூதனிலத்திவகமாக்கி யேனைய் ரவத்தையிலு மொட்டுக. கனவு கண்டதுமென்றதனுல் நனவுகண்டதுமென்றும். இவற்றுற்சுழுத்தி கண்டு மென்னும் வினையெச்சத்தை வினையாலணையும்பெயராக்கினும். ஆக்கவே, நனவுகண்டதும் நானே; கனவுகண்டதும் நானே; சுழுத்திகண்டதும் நானே என்பதுபெற்றும், கண்டவென்னும் பெயரெச்சத்திற்கு நானென்பதை எழுவாயாகில் நனவுகண்டதும் கனவுகண்டதும் சுழுத்திகண்டதும் என்னும் வினையாலணையும்பெயர்களுக்குப் பயனிலையெங்கே? இருப்பதைவிட்டுத் தோன்றுவெழுவாயென நானென்பதை வருவிப்பானேன்? அதுகூடாது. கண்டநனவென்பதற்கு என்னுற் காணப்பட்ட நனவெனப் பொருள்கொள்ளிற் பழுதென்னை? தினமனுபவித்தல் யாதனுலால் இதனுலும் நானென்பது மூன்றிடத்து மெழுவாயாதல் பெறப்பட்டது. அஞ்ஞான மகலாததால் தெரியவுமில்லை

¶ சுழுத்திகண்டதும் வேறென்றேபோல் எனவும்பாடமுண்டு.

யெனவும், பூர்வசமஸ்காரம் உள்ளதாத்சற்றேமனதினி லுதிக்குமெனவும், குரு வாய்த்தும் விளங்கும் பரிபாககாலம் இன்னும் வராமையால் அதுதடையா தல்பற்றிப் பின்னே மறைக்குமெனவும் காரணங்கண்டாம். திண்ணமாதல் என்பதுதோன்ற, நானேயெனத் தேற்றேகாரங் கொடுத்தாம். எந்த ஸ்மரணை யாலே நனவாகத் தோன்றிற்றே அந்தஸ்மரணைஅந்நனமாகிற கோலந் தவிர்ந்த அவசரத்தைக் கண்டநனவுள நினைவுநீங்கி யெனவும். அங்ஙனநீங்கிய அக்கண மேதானே கனவாகத்தோன்றலின் அதனைக் கனவு கண்டதுமெனவும், அந்த நனவுகோலம்போலக் கனவுகோலமும் காணுநமுவியவக்கணமே தானே சுழுத்திகோலமாகத் தோன்றலின் அதனை இரண்டுங்காணுத சுழுத்திகண்டு மெனவுங்கூறியதாகப் பொருள்கொண்டாம். கொள்ளவே அவஸ்தாத்ரயம், காட்சித்ரயம், அபிமானித்ரயமென்னும் இம்மூக்கோலமுமாத நின்றதும் ஓர் ஸ்மரணையேயென்க.

(க-து.) இங்ஙனமாக நின்றறிந்தது நானுகத்தோற்றலால் அதனைத்தின மனுபவித்த லொக்குமென்பதனுற் குறித்தாமென்பது. நினைவுநீங்கியென்றது வேடத்தை வேடதாரியாகக்கோடல் மரபு. உ-ம். அரசன் வந்தான், தோட்டி வந்தான் என்றாற்போல்வன, பிறவுமன்ன. (உச)

அ - கை.

[அங்ஙனம் வினவிய மாணாக்கனை விளக்குவான்வேண்டி அதத்துவாவிருத் திலட்சணை, தடத்தலட்சணை, சொரூபலட்சணை, என்னு மூன்ற னுள் தடத்தலட்சணை, அதத்துவா விருத்திலட்சணைகாரண மாக அதிசூக்குமவஸ்துஉண்மையைத் தெரிவிக்கப் புகுந்தனர் என்பதைஇக்கவியிற் கூறுகின்றார்.]

25. தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை மூன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே.

(இ-ள்) தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்—எ-து தாம் நின்றநிலத்தருகேநின்ற சிலமரங்களைக் காட்டி அவற்றி னொன்றில் மூன்றாம்பிறையைக் காட்டுவார்போலவும், ஆலத்தினுடுக்கள் காட்டி யருந்ததி காட்டுவார்போல்—எ-து. ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக்காட்டி அவற்றி னொன்றிய அருந்ததியென்பதைக் காட்டுவார்போலவும், தூலத்தை மூன்பு காட்டி—எ-து மூன்னர் தூலதேகத்தின் நிலையை விளக்கி; சூக்கும சொரூபமான மூலத்தைப் பின்புகாட்ட—எ-து. பின்னர் திரிகரணங்களாலு மெட்டுதற்கு அதிசூக்குமசொரூபமாயுள்ள மூலகாரணமான உண்மைநிலை யை ஐயமற விளக்குவான்வேண்டி, முனிவரர் தொடங்கினர்—எ-து. ஆசிரி யர் கூறத்தொடங்கினர். எ-று.

மர்த்தொகையுள் ஒன்றாலன்றித் தொகையாற் காட்டொணுமையின் தனியென்றார். ஆதலின் தனியென்பதைப் பிறையென்பதற்கு விசேடணமாக்கவொண்ணாது. சூலமென்பதைப் பானையாக்கின் ஆலமென்பதை யாதாக்கவேண்டும் ? இவ்விரண்டு மொழிகளையும் தானமாக்க லெவர்க்கு முரணின்றும். இவ்விரண்டு உவமானத்துளொன்று கீழ்மேல்காட்டல். அதுபோலத் திருசியமாயுள்ள கீழ்நிலையைவிளக்கி மேலாக நின்றுள்ள திருக்குவை விளக்கல். மற்றொன்று சமஸ்தத்துள்ளும் ஒன்றைப் பிரத்தியேகமாகக்காட்டல்; அதுபோல் சமஸ்த திருசியத்துள்ளும் திருக்குவைப் பிரத்தியேகமாக விளக்கல். இவ்விருவகை நயமாக உபதேசிக்கப் புகுந்தனரென்பது சோன்ற இவ்விருவகை உவமானங் கூறினர். ஆலம் திசைச்சொல். இவ்விருநயமும் இந்நூலி லிருப்பதாகத் தெரிக்குதும. ஒன்று பிறைகாட்டல்போல் தஞ்சமாங் குருவுஞ்சொன்ன தத்துவ வழிதப்பாமலென்னுங் கவியிலும், ஒன்று அருந்ததிகாட்டுவார்போல் தன்பதியல்லாப் பேர்கடமையல்ல னல்லனென்றாளென்னுங் கவியிலும், தானே சொப்பிரகாச மென்பதை எல்லாங்கண் டறியுமென்னை யென்னுங்கவியிலுங் காணலாம். ஆதலின் மூன்று இலக்கணையாலும் உபதேசிக்கப்புகுந்தார். இரண்டிற்கு உவமைகூறி யேனையவற்றிற்குக் கூறாரேனும் உவமேயங் கூறியிருப்பதா லுவமானம் கோடலருத்தாபத்தியென்க.

(க-து) இலட்சணார்த்தத்தால் வஸ்துவை விளக்கப்புகுந்தனரென்பது. ()

அ - கை.

[முன்கவியில் தூலமென்பதனுந் பந்தமெனவும், மூடமென்பதனுன் முத்தியெனவும் பொருள்படுதலின் பந்தனமெனல் மூடமெனவும், முத்தியெனல் தெளிவெனவுந் திண்ணங்கொண்டு மூடத்தை அத்தியாரோபமெனவும், தெளிவை அபவாதமெனவும் பெயர்சந்து, இவற்றை இரண்டுத்திகளாக்கி உபநிடதமனைத்தும் கூறும்; ஆதலால் இங்கே அத்தியாரோபவுத்தியை முன்னர் தெரிவிக்கப் புகுந்தனரென்பதை இக்கவிற் கூறுகின்றார்.]

26. அத்தியா ரோப மென்று மபவாத மென்றுஞ் சொல்லும்
உத்தியாற் பந்தம் வீடென் றுரைக்கும் வேதாந்த மெல்லாம்
மித்தையா மாரோ பத்தாற் பந்தமா மபவா தத்தால்
முத்தியா மிவ்விரண்டின் முந்தியா ரோபங் கேளாய்.

(இ-ள்.) அத்தியா ரோபமென்று மபவாத மென்றுஞ்சொல்லு முத்தியாற்பந்தம் வீடென்றுரைக்கும் வேதாந்தமெல்லாம்—எ-து. பிரபல சுருதியாகிய வேதாந்தமனைத்தும் அத்தியாரோபம் அபவாதம் எனக்கூறக் கிடந்த இவ்விரண்டுத்தியினால் பந்தம் இனையதெனவும், முத்தியினையதெனவுங் கூறுநிற்கும். மித்தையா மாரோபத்தாற் பந்தமாம்—எ-து பொய்யெனப் பொருள்படுவதாகிய ஆரோபமென்பதனால் விளைந்தது பந்தமெனப் படுவதாம்; அபவாதத்

தால் முத்தியாம்—எ-து மெய்யெனப் பொருள்படுவதாகிய அபவாதமென்பதனால் விளைவது முத்தியெனப்படுவதாம். இவ்விரண்டின் மூந்தியாரோபங் கேளாய்—எ-து. இங்ஙனங்கூறிய இவ்விரண்டினுள் முன்னர் அத்தியாரோபங் கூறப்புகுவாம் அதனைக்கேள். எ-று.

மித்தையாமாரோப மென்பதனால் சத்தியமா மபவாதமென்றும். பொய்யாலாயது பந்தமென்பதுதோன்ற, மித்தையாமாரோபத்தால் பந்தமாமென்றார். இவையனைத்தும் பின்னர் வருவதால் ஆங்காங்கு விளக்கிக்காட்டுதும்.

(க-து.) இரண்டுத்தியுள் ஆரோபயுத்தியை இனிக் கூறப்புகுவ னென்பது.

அ - கை.

[அத்தியாரோபமெனற்கு அருத்தம் இக்கவியிற் கூறுகின்றார்.]

27. ஆரோப மத்தி யாசங் கற்பனை யாவ வெல்லாம்
ஓரோர்வஸ்துவினை வேறே யோரோர்வஸ்துவென வோர்தல்
நாரூடு பணிபாத் தோன்ற னரனுகத் தறியிற் றோன்றல்
நீரூடு கானற் றோன்ற னிரந்தரம் வெளியிற் றோன்றல்.

(இ-ள்.) ஆரோப மத்தியாசங் கற்பனையாவவெல்லாம்—எ-து. ஆரோபமெனவும், அத்தியாசமெனவும், கற்பனையெனவும், இன்னு மிவைபோல் வனவாகக் கூறத்தகுவனவெல்லாம், ஓரோர் வஸ்துவினை வேறேயோரோர் வஸ்துவென வோர்தல்—எ-து ஒவ்வொரு பொருளையும் வேறே யொவ்வொரு பொருளாக வுணர்தலும், நாரூடுபணியாத் தோன்றல்—எ-து. பழுதையாம்பாகத் தோற்றலும், நரனுகத் தறியிற் றோன்றல்—எ-து. கட்டைகள்ளனுகத் தோற்றலும், நீரூடு கானற்றோன்றல்—எ-து. கானல் நீராகத் தோற்றலும், நிரந்தரம் வெளியிற் றோன்றல்—எ-து. வெளி நிரந்தரமாகத்தோற்றலுமாம். எ-று

இவ்வுருபு மயக்கமெல்லாம் ''யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள் சென் மருங்கின் வேற்றுமைசாரும்'' என்னுஞ் சூத்திரவிதியாற் றிருத்திப் பொருளுரைக்கப்பட்டன. நிரந்தரம் இடையின்மை. ஆரோபம் அத்தியாசம் கற்பனை இவைபோல்வன, பொய்யென வுணர்த்தற்கு இயைந்த பரியாய நாமங்கள். திருக்கு திருசியமென்பவற்றுள் திருக்குவின் சருமம் ஒன்றையொன்றாக வுணர்தல். அது பழுதையைப் பாம்பெனவும், கட்டையைக் கள்ளனெனவும், இளிஞ்சலை வெள்ளியெனவு முணர்தலாம் திருசியத்தின் தருமம் எங்ஙனம் எங்ஙனமாக உணர்தலோ அங்ஙனம் அங்ஙனமாகத்தோற்றல். அது பழுதை பாம்பாகவும், கட்டை கள்ளனுகவும், கானல் நீராகவும், இளிஞ்சல் வெள்ளியாகவும் தோற்றலென்க.

(க-து) விபரீத மின்னதென உதாரணமுகத்தாற் காட்டியதென்பது.

''பணியாயி'' என்றதால், அர்த்தாத்தியாசமும், ''தோன்றல்'' என்றதால், ஞானத்தியாசமும் பெற்றாம். இன்மையெனினும், அபாவமெனினும் ஒக்கும்.

தோன்றலெனினும், அவபாசமெனினும் ஒக்கும். "ஒரோர்வத்துவினை வேறே யோரோர்வத்துவெனவோர்தல்" எனவும் பாடமுளது; அங்ஙனம் பொருள் கொள்ளில், நியாயவை சேடிகமதானுசாரியரான சிந்தாமணிகாரர்க் குடம்பாடான அந்நியதாக் ¶ கியாதி என்றும். வேதாந்த சித்தாந்தத்தில், அநிர்வசனீக்கியாதியே உடம்பாடாகலின் அது பாடமன்று : ஏட்டிலெழுதினவர்களுடைய புத்தி தோஷத்தாற் பிறந்ததேயாம்.

திருஷ்டாந்த ஞானமின்றித் தார்ஷ்டாந்த ஞானமுதியா தாதலால், திருஷ்டாந்தத்தைத்தானே நன்றுகவிரித்து விசாரிப்பது ஆவசியகமாமாகலின் அதனை விரிக்குதும்; — இரச்சுசர்ப்பம், சுத்திரஜதமுதலிய பிரமஸ்தலத்தில் சத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி, அக்கியாதி எனவைந்து மதங் கேட்கப்படுகின்றன. வைணவர் முதலியோர், சத்கியாதிவாதிகள். சூனியவாதி, அசத்கியாதிவாதி. க்ஷணிகவிஞ்ஞானவாதி, ஆத்மக்கியாதிவாதி, நியாயவைசேடிகர், அந்நியதாக்கியாதி வாதிகள். சாங்கியபிரபாகரர், அக்கியாதிவாதிகளாம்.

இவர்களுள், க-வது—சத்கியாதிவாதிகள், சுத்தியினுடைய அவயவங்களோடு இரஜதத்தினவயவமும் எப்போது மிருக்கின்றதெனவும், சுத்தியினவயவம் சத்தியமாவதுபோல இரஜதாவயவமுஞ் சத்தியம்; மித்தையன்றெனவும், தோடத்தோடு கூடிய நேத்திரசம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையின் பரிணாமமாக அநிர்வசனீயரஜதம் உண்டாவதுபோலத் தோடத்தோடுகூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாவயவங்களினின்று சத்தியரஜதமும் உண்டாகின்றதெனவும், சித்தாந்தத்தில் அதிஷ்டான ஞானத்தால் அநிர்வசனீயரஜத நிவிர்த்தியாவதுபோலச் சுத்திஞானத்தால் சத்தியரஜதமும் தனதவயவத்திற் றொம்சமாமெனவங்கூறுவர்; அது நிராகரிக்கத்தக்கது. யாதினாலெனின் ? சுத்திரஜத திருஷ்டாந்தத்தினால் பிரபஞ்சம் மித்தையென்னும் அநுமிதியுண்டாகின்றது. சத்கியாதி வாதத்தில் சுத்தியில் ரஜதஞ்சத்தியமாம் ; ஆகவே, அதைத் திருஷ்டாந்தமாகவைத்துப் பிரபஞ்சத்தில் மித்தியாத்வசித்தி பெறுவது கூடாதாதலாலென்க; இன்னும், இந்தப்பட்சத்திற் பிரபலதோடங்கள் அனேகமுள; அவை சுத்தி ஞானத்திற்குப்பின் சுத்தியில் காலத்திரயத்திலும் இரஜதமே இல்லையென்று சுத்தியினிடத்துத் திரைகாலிகரஜதாபாவப் $ பிரதீதியுண்டாகின்றது; சித்தாந்தத்தில் அநிர்வசனீயரஜதமோ! மத்தியகாலத்தில் மாத்திரம் உண்டு: வியாவகாரிகரஜதாபாவம் திரைகாலிகமாக இருக்கின்றது. சத்கியாதிவாதி மதத்தில் வியாவகாரிகரஜதம் உண்டாகுங்காலையில் வியாவகாரிக ரஜதாபாவங் கூடாது; ஆகலின், திரைகாலிகரஜதாபாவப்பிரதீதியினால் வியாவகாரிகரஜதஞ் சொல்லுகை விருத்தமாம்; அன்றியும், அநிர்வசனீயரஜதத்தின் உற்பத்தியில் பிரசித்தரஜதத்தின் சாமக்கிரியேவேண்டுவதில்லை. தோஷசகித அவித்தையினால் அதனது உற்பத்திகூடும் : வியாவகாரிக ரஜதத்தின் உற்பத்தி பிரசித்தரஜதத்தின் சாமக்கிரியின்றிக்கூடாது. சுத்தியின்சண்ணே இரஜதத்தின் பிரசித்த

¶ கியாதி=ஞானம், அல்லது வார்த்தை.

$ பிரதீதி=ஞானம்.

சாமக்கிரியில்லை; ஆதலால், சத்தியரஜத உற்பத்தி சுத்தியில் உளதாமென்கை கூடாது. சுத்தியின்கண் இரஜதாவயவம் உண்டு; அதுவே சத்தியரஜதத்தின் சாமக்கிரியாம் எனின் ? அது உற்பூதரூபமா? அநுற்பூதரூபமா? உற்பூதரூபமெனின் ? இரஜதத்தினுற்பத்திக்கு முன்னரே அது பிரத்தியட்சமாதல்வேண்டும்: அநுற்பூதரூடமெனின் ? இரஜதமும் அநுற்பூதரூபமுடையதாம்; ஆகவே, அவ்விரஜதம் பிரத்தியட்சமாகாது.

அன்றியும், ஓரிரச்சுவின்கட் பத்துப்புருடர்க்கு வெவ்வேறாக ஒருவனுக்குச்சண்டம், ஒருவனுக்கு மாலை, ஒருவனுக்குச் சர்ப்பம், ஒருவனுக்குச் சலத்தின்றாரை என இப்படி பிரமம் உண்டாகிறது; அங்கே கண்ட முதலிய பதார்த்தங்களின் அவயவங்கள் சொற்பரச் சுதேசத்தில் உண்டெனல் கூடாது. என்னை ? மூர்த்தத்திரவியங்கள் ஸ்தானத்தைத் தகையுமாதலால் என்க. சித்தாந்தத்தில், அநிர்வசனீயங்களாகத் தண்டமுதலியவை உண்டாகின்றனவாகலான் விபாவகாரிகதேகத்தை அவைதகையாவாம் சத்கியாதிவாதியும் தண்டமுதலியவற்றில் ஸ்தானத்தைத்தகைவது முதலியபயனை ஒப்பாவிடின், தண்டமுதலியவற்றைச் சத்தியமென்றுகூறுதல் விருத்தமும், நிஷ்பலமுமாம். தண்டமுதலியவை தோற்றரவமாத்திரந்தான், அந்நியமானகாரியம் அவைகளால் உளதாகாதென்னின்? அப்போது அநிர்வசனீயவாதமே சித்தமாம் பிரமஸ்தலத்தில் சத்பதார்த்த உற்பத்தி ஒப்பிடில், அக்கினியோடுகூடிய ஊஷரபூமியில் சலப்பிரமம் உண்டாமாயின் அங்கே அச்சலத்தால் அவ்வக்கினி சாந்தமாதல்வேண்டும் பஞ்சின்மீது வைத்த குன்றிமணிக்கொத்தில் அக்கினிப்பிரமம் உண்டாமாயின் அங்கே பஞ்சானது எரிதல்வேண்டும். சோடத்தோடு கூடிய காரணத்தினின்றும் உண்டான பதார்த்தம் அந்நியனுக்குத் தோற்றமாட்டாது : யாவனுடைய தோடத்தினு லுண்டாயிருக்கிறதோ ! அவனுக்கே தோற்றுநிற்கும். தோடத்தின் காரியமான சலத்தினாலும், அக்கினியினாலும் நனைத்தலும்; தகித்தலும் உளவாகாவென்னில் ? அப்போது அவைகளைச் சத்தியமென்று சொல்லுதல் கேவலம் நகைத்தற்கே ஏதுவாகுமல்லது வேறில்லை; அதனால், சத்கியாதிவாதிகளின் வார்த்தை யுத்தியில்லாதவார்த்தை என அந்தப்பட்சம் நிராகரிக்கத்தக்கதேயாம்.

உ-வது — சூன்யவாதி, இரச்சுவினிடத்துச் சர்ப்பம் அத்தியந்தம் அசத்தாம் : அப்படியே அந்நியதேசத்திலும் அத்தியந்தம் அசத்தாம்; இப்படி அத்தியந்தம் அசத்தாகிய சர்ப்பம் இரச்சுவினிடத்துத் தோற்றுநின்றதென்றனன்.

ஊ-வது — க்ஷணிகவிஞ்ஞானவாதிகள், பழுதையினிடத்தும், அப்படியே அந்நியதேசத்தும் புத்திக்குட்புறம்பே ஓரிடத்தும் சர்ப்பமானது இல்லை : சகல பதார்த்தங்களும் புத்தியினும் வேறாக இல்லை சகலபதார்த்தங்களின் ஆகாரத்தையும் புத்தியேதரிக்கின்றது ; அந்தப்புத்தியும் க்ஷணிகவிஞ்ஞானரூபம் : க்ஷணத்தில் நாசமும் க்ஷணத்தில் உற்பத்தியும் அடையாநின்ற விஞ்ஞானமே சர்ப்ப ரூபமாசத்தோன்றி நின்றதென்பர்,

சு-வது—நியாயவைசேடிகர், புற்றுமுதலிய ஸ்தானங்களில் யதார்த்தமாகிய சர்ப்பமுளது ; அது நேத்திரத்தினுற் காணப்படுகின்றது. நேத்திரத்திலுள்ள தோடபலத்தால் எதிரே சமீபத்தில் இரச்சுதேசத்திற் றோன்றுகின்றது. யதார்த்த சர்ப்பத்திற்கும், நேத்திரத்திற்கும் மத்தியில் பித்தியாகிய † அந்தராயங்கள் இருப்பினுந் தோடசகித நேத்திரத்தால் அதுகாணப்படுகின்றதென்பார். ஷை—சிந்தாமணிகாரர், தோடசகித நேத்திரத்தினுல் புறநிலிடத்துள்ள சர்ப்பஞானம் உண்டாமாயின், மத்தியிலுள்ள ஏனையபதார்த்த ஞானங்களும் உண்டாதல் வேண்டும்; அதலால் பித்தியாதி அந்தராய சகித வத்துவின்ஞானம் நேத்திரத்தால் உண்டாகாது. பின்னையோ ? தோடசகிதநேத்திரத்தினுல் இரச்சுவானது நிசரூபமாகத் தோன்றுமல் சர்ப்பரூபமாகத் தோன்றுகின்றது; இப்படி ஒன்று மறறென்றுகத் தோன்றுநிற்பதே அந்நியதாக்கியாதியென்பர்.

ரு-வது—அக்கியாதிவாதியர், அசத்தானது தோன்றுமாயின் வந்தியாபுத்திர, சசசிருங்கங்களுந் தோன்றவேண்டும்; அங்ஙனந் தோன்றுமையின், அசத்கியாதி அசங்கதம். க்ஷணிகவிஞ்ஞானத்தின் ஆகாரமே சர்ப்பாதிகளாமாயின், க்ஷணிகமாத்திரத்தால் அதிககாலத்தோற்றரவுகூடாது; ஆதலால், ஆத்மக்கியாதியும் அசங்கதம். அந்நியதாக்கியாதியின் பிரதமபீதி சிந்தாமணிமதத்தால் தூஷிக்கப்பட்டதுபோலவே சிந்தாமணிமதீதியினுற்கூறும அந்நியதாக்கியாதி மதமும் அசங்கதமாம். எதனலெனின் ? ஞேயவதுசாரமாகவே ஞானமுண்டாகின்றது. ஞேயம் இரச்சு; அதில் சர்ப்பஞானங்கூறுதல் அத்தியந்தவிருத்தமாதலின் எனமறுத்து, எங்கே இரச்சுவின்கட் சர்ப்பப்பிரமமுண்டாமோ ! அங்கே இரச்சவினுடனே நேத்திரத்திற்குத் சன்விருத்தி வழியாகச் சம்பந்தமுண்டாய் அவ்விரச்சுவினிடத்து இதுவென்னும் ரூபமாகச் சாமான்யஞானமும், சர்ப்பத்தின் ஸ்மிருதியும் உண்டாகின்றன; அவ்விரண்டில், இதுவென்னுங்கூறு இரச்சுவின் சாமான்யப்பிரத்தியட்சஞானம். சர்ப்பமென்பது ஸ்மிருதிரூபஞானம். ஆகலான், இது சர்ப்பமென்புழி இரண்டு ஞானமுண்டாம்; அப்படியுண்டாதற்குப் பிரமாதாவின்கட்பயதோடமும், பிரமாணத்தின்கட் டிமிரதோடமுமே காரணமாம்; அவற்றின் வலியால் புருடனுக்கு இதுவென்பது இரச்சுவின் சாமானியப்பிரத்தியட்சஞானமென்றும், சர்ப்பமென்பது பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதிஞானமென்றும், விவேகம் உண்டாகவில்லை ; இவ்விருவகை ஞானத்தின் அவிவேகமே பிரமமென்பர். சுக்கியாதியும், அக்கியாதிவாதியால் மறுக்கப்பட்ட அசத்கியாதி, ஆத்மகியாதி, அந்நியதாக்கியாதிகளும் ஆகிய நான்குமதங்களும் யுத்தினேயாவதால் எப்படி அசங்கதமென்று தள்ளப்பட்டனவோ ! அப்படியே அக்கியாதி மதமும் அசங்கதமாம்.

எதனலெனின் ? இதசர்ப்பமென்னும் ஞானத்தில் முன்னே, இதுவென்னுங்கூறு இரச்சுவின் சாமானியப் பிரத்தியட்சஞானமாம், சர்ப்பமென்னுங்கூறு பூர்வங்கண்டசர்ப்பத்தின் ஸ்மரணஞானமாம் என்பது அக்கியாதிவாதி

---

† அந்தராயம்=மறைப்புக்குக் காரணம்.

கள் மதம் ; அங்கே பூர்வங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மரணமே ஒப்பி எதிரே இரச்சுதேசத்தில் சர்ப்பஞானம் ஒப்பாவிடில் எதிரேகிடக்கும் இரச்சுவினின்றும் புருடனுக்குப் பயமுண்டாகித் திரும்பி ஓடவேண்டுவதில்லை : எதிரேகண்ட இரச்சுதேசத்திலேயே சர்ப்பஞானம் உண்டாகின்றதாதலால் அது பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதியல்ல; அன்றியும், இரச்சுவின் விசேடரூபயதார்த்தஞானம் மித்தையாக உண்டாயிற்றென்னும் † பாதமானது உண்டாகின்றது ; இப்பாதத்தினாலும் இரச்சுவினிடத்துச் சர்ப்பஞானம் உண்டாகின்றதேயல்லாமற் பூருவங்கண்ட சர்ப்பத்தின் ஸ்மிருதியுண்டாகவில்லை. இது சர்ப்பமென்புழி, ஞானம் ஒன்றே தோன்றுநின்றது: இரண்டில்லை. எக்காலத்தில் அந்தக்கரணத்தினின்று ஸ்மிருதிரூபமும், பிரத்தியட்சரூபமும் ஆகிய இரண்டு ஞானமுளவாகா; ஆதலால் அக்கியாதிமதமும் அத்தியந்தம அசங்கதமாம் என்று இம்மதங்களின் பிரதிபாதனமும், கண்டனமும் விவரணம, ஸ்வாராஜ்யசித்தியாதிய கிரந்தங்களிலும், விருத்திப்பிரபாகர கிரந்தத்துங்காண்க.

இனிச் சித்தாந்தமாகிய அநிர்வசனீயக்கியாதியின்கோள்கைகூறுதும். அந்தக்கரணத்தின்விருத்தி நேத்திராதி இந்திரியவாயிலாகப்புறம்போந்து விடயசமானாகாரத்தை யடையுமபோது அதனால்விடயத்தின் ஆவரணம்பங்கமாம்; ஆகவே, அவ்விடயந்தோன்றுநிற்கும். அங்கே பிரகாசசகாயமும்வேண்டும்; இன்றேற்பதார்த்தங்கடோற்றுவாம். ஆதலால், எங்கே இரச்சுவில்சர்ப்பப்பிரமமுண்டு அங்கேமூற்கூறியவாறு அந்தக்கரணத்தின்விருத்தி நேத்திரேந்திரியவாயிலாகப்புறமபோந்து இரச்சுவோடுசம்பந்தமாயினும் திமிராதிதோடப்பிரதிபந்தமிருக்கில் விருத்தியின்சொரூபம் இரச்சுவின் சமானாகாரமாகாது; அஃதங்ஙனமாகாதபோது இரச்சுவின் அவரணம் பங்கமாகாது. இவ்வாறு ஆவரணபங்கநிமித்தம் விருத்திசம்பந்தமுளதேனும், எப்போது இரச்சுவின் ஆவரணம் பங்கமாகவில்லையோ ! அப்போது இரச்சுச்சேதனத்துள்ள அவித்தையினிடத்து ‡ கூஷாபமுண்டாய் அவ்வவித்தை சர்ப்பாகார பரிணமத்தையடையும்; அவ்வவித்தையின் காரியமாகிய சர்ப்பம் சத்தெனின் ? இரச்சுஞானத்தாற் பாதமாகாது ; பாதமாகலின் சத்தன்று. அசத்தெனின் ? வந்தியாபுத்திரன்போலத் தோற்றரவாகாது ; ஆகலின், அசத்துமன்று; மற்றெத்தன்மையதோவெனின் ? சதசத்விலட்சண அநிர்வசனீயத்தன்மையதாம். இங்ஙனம், சர்ப்பமானது அவித்தையின் பரிணாமமாவதுபோல அதன் ஞானரூபவிருத்தியும் அவித்தையின் பரிணாமமே : அந்தக்கரணத்தின் பரிணாமமன்றும். என்னை ? இரச்சுஞானத்தால் சர்ப்பம் பாதமாகின்றதுபோல அதன்ஞானமும் பாதமாகின்றது. அந்தக்கரணத்தின் பரிணாமமாயின் அதுபாதமாகாது ஆதலால், சர்ப்பஞானமும் சர்ப்பம்போலஅவித்தையின் காரியமாய்ச் சதசத்விலட்சண அநிர்வசனீயத் தன்மையதேயாம். இங்ஙனம் சர்ப்பமும், அதன்ஞானமும் அவித்தையின் பரிணாமமேயதேயாம், இங்ஙனம் சர்ப்பமும், அதன்ஞானமும அவித்தையின் பரிணாம

† பாதம்=மித்தையென்னும் நிச்சயம். எனும் வடமொழி தற்பவமாய், பாதம் எனவரும் ; ஏனையவிடங்களிலும் இதுவேபொருள்.

‡ கூஷாபம்=காரியாபி முகாவஸ்தை.

மேயாயினும் இரச்சுவபகிதசேதனத்துள்ள 'தமோகுணப்பிரதான வவித்தைக் கூற்றின் பரிணாமம் சர்ப்பமும், சாட்சிசேதனத்துள்ள வவித்தையின் சத்து வகுணப்பரிணாமம் விருத்திஞானமுமாம். எச்சமயத்தில், இரச்சுச்சேதனத்துள் ளவவித்தை சர்ப்பாகாரபரிணாமமாமோ! அச்சமயத்திலேயே சாட்சியாசிரித மானவவித்தை ஞாலுகாரபரிணாமமாம். என்னை? இரச்சுசேதன வாசிரிதமா னவவித்தையிடத்து யாதொருகேஷாப நிமித்தமுளதோ! அந்நிமித்தத்தினாலே யேசாட்சியாசிரிதவவித்தைக்கூற்றினிடத்தும் கேஷாபம் உளதாதலினென்க; இங்ஙனங் கூறியவாற்றால் சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் அவித்தை உபாதானகாரணமும். இரச்சுவின் அப்பிரதியிலால் இரச்சுவவச்சின்ன சேத னவாசிரிதமான வவித்தையின்கண்ணுளதாகும் கேஷாபம் நிமித்தகாரணமும் ஆம். இவ்வாறு பிரம ஸ்தலத்தில் சர்ப்பாதி விடயங்களும், அவற்றின் ஞானங்களும் கூடவே உண்டாய் இரச்சுவாதி அதிஷ்டானஞானத்தாற் கூட வே இலீனமாம்; இவ்வாற்றால். சர்ப்பமுதலிய பிரமத்தில் புறவவித்தைக் கூறு சர்ப்பமுதலிய விடயங்களுக்கும், சாட்சியாசிரிதமான அகவவித்தைக் கூறு அவ்விடயஞானரூப விருத்திகட்கும் உபாதானகாரணமெனப்படும். சொப்பனத்தினிடத்துச் சாட்சியாசிரிதமானவவித்தையின் தமோகுணக்கூறு விடயரூபபரிணாமத்தையும். சத்துவகுணக்கூறு விடயரூபபரிணாமத்தையும், சத்துவகுணக்கூறு ஞானரூபபரிணாமத்தையும் அடைகின்றமையின், சொப்ப னத்தில் அகவவித்தையே விடயத்திற்கும், ஞானத்திற்கும் உபாதான்காரண மாம்; இவ்வாற்றால், வாகியமான இரச்சுசர்ப்பாதிகளும், ஆந்சரமான சொப் பனபதார்த்தங்களும் சாட்சிபாசிபமென்று சொல்லப்படும். அவித்தியாவிருத் தியின் வர்யிலாக யாதொன்றைச்சாட்சியானது பிரகாசிப்பிக்குமோ! அது சாட்சிபாசிபமாம், இரச்சுவாதிகளில் அநிர்வசனீயமான சர்ப்பாதிகளும், அவை களின் ஞானங்களும் பிரம மென்றும் அத்தியாசமென்றும் சொல்லப்படும். அந்தப்பிரமம் அவித்தையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம்.

உபாதானகாரணத்திற்குச் சமானசுபாவமுடையதாயும், அந்நியதாசொ ரூபமாயு முள்ளது பரிணாமம். அதிஷ்டானத்தினும் விபரீதசுபாவமுடையதா யும், அந்நியதாசொரூபமாயுமுள்ளதுவிவர்த்தம். உபாதானகாரணமான் அவித் தை எப்படி அநிர்வசனீயமோ! அப்படியே இரச்சுசர்ப்பமும், அதன்ஞான மும் அநிர்வசனீயமாவதால் அவித்தைக்குச் சமானசுபாவமுடையன: அந்நி யதாசொரூப மென்பது அவித்தையினும் வேறுபிரகாரமான ஆகாரம்; அப்ப டியே இரச்சுவ வச்சின்ன வதிஷ்டான சேதனம் சத்ரூபம்: சர்ப்பமும், அதன்ஞானமும் சத்தினு விலட்சணமாவதால் விபரீதசுபாவமுடையனவாம். அந்நியதாசொரூபமென்பது சேதனத்தினும் வேறு பிரகாரமான ஆகாரம்.

மித்தியாசர்ப்பத்தின் அதிஷ்டானம் இரச்சுவுபகிதசேதனமாம்: இரச்சு வல்ல. என்னை? சர்ப்பத்தைப்போல இரச்சுவும் கற்பிதம்; கற்பிதவத்து அந் நியகற்பிதத்திற்கு அதிஷ்டானமாதல் கூடாது ஆதலால், இரச்சுவுபகிதசே தனமே அதிஷ்டானமாம்: இரச்சுவல்ல. இரச்சுவிசிட்டத்தை அதிஷ்டான மென்று சொல்வோமாயின், இரச்சுவும், சேதனமும் ஆகிய இரண்டும்

அதிஷ்டானமும் ; ஆகவே, இரச்சுபாகத்தில் அதிஷ்டானத் தன்மை பாதிக்கப்படாதிருத்தலின், இரச்சுவுபகிதசேதனமே அதிஷ்டானமாம்: இரச்சுவிசிட்டசேதனம் அதிஷ்டானமன்று அப்படியே சர்ப்பஞானத்திற்குச் சாட்சிசேதனம் அதிஷ்டானமாம் ; இவ்வாற்றால், பிரமஸ்தலத்தில் விடயத்திற்கும், அதன் ஞானத்திற்கும் உபாதிபேதத்தால் அதிஷ்டானம் பின்னமாம் : ஒன்றன்று. விசேடரூபமாக இரச்சுவினது அப்ரதீதி அவித்தையில் க்ஷோபவாயிலாக இரண்டின் உற்பத்தியிலும் நிமித்தமாவதுபோல இரச்சுஞானமும் இரண்டன் நிவிர்த்தியிலும் நிமித்தமாம்.

வினா.—மித்தியாவஸ்துவிற்கு யாது ? அதிஷ்டானமோ ! அவ்வதிஷ்டான ஞானத்தினால் மித்தியாவஸ்து நிவிர்த்தியாமென்பது அத்வைதவாதத்தின் சித்தாந்தம் ; இங்கே மித்தியாசர்ப்பத்திற்கு அதிஷ்டானம் இரச்சுவன்றும், இரச்சுவுபகித சேதனமாம் என்று கூறினமையின் இரச்சுஞானத்தால் சர்ப்பநிவிர்த்தி கூடுமாறெங்ஙனேயெனின் ?

விடை.— இரச்சுவாதி ஜடபதார்த்தங்களின் ஞானம் அந்தரக்கரணத்தின் விருத்திரூபமாக உண்டாகுமேல் அங்கே ஆவரண பங்கம்விருத்தியின் பிரயோசனமாம்; அவ்வாவரணம் அஞ்ஞானத்தினது சத்தியாகலான், ஆவரணம் ஜடத்தின் ஆசிரிதமன்று: ஜடத்திற்கு அதிஷ்டானசேதனத்தின் ஆசிரிதமாம். ஆகலான், இரச்சுவின் சமானகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியினால் இரச்சுவவச் சின்னசேதனத்தின் ஆவரணமேபங்கமாம். விருத்தியின் கண்ணுள்ள சித்பாசனால் இரச்சுமாத்திரம் பிரகாசிக்கும். சேதனபாகம் சுயம்பிரகாசமாவதால் அதன்கண் ஆபாசனுக்கு உபயோகமில்லை; இவ்வாற்றால், சிதாபாசனோடு கூடின அந்தக்கரண விருத்திரூபமாகிய ஞானத்திலுள்ள விருத்திபாகத்திற்கு ஆவரணபங்கரூபபயன் சேதனத்திலும், சிதாபாசபாகத்திற்குப் பிரகாசரூபபயன் இரச்சுவிலும் உள்ளன. ஆதலால், ஸாபாசவிருத்தி ஞானத்திற்குக் கேவலம் சடமாகிய இரச்சுவிடயமன்று. பின்னேயோவெனின் ? அதிஷ்டான சேதனத்தோடுகூட இரச்சுவானது ஸாபாசவிருத்திக்கு விடயமாம்; இக்காரணத்தால், சித்தாந்தகிரந்தங்களில் அந்தக்கரணத்தினின்றுஞ் சனியாநிற்கும் விருத்திஞானங்கண்முழுதும் பிரமத்தைவிடயம் பண்ணுகின்றனவென்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இரச்சுஞானத்தால் நிராவரணமாய்ச் சர்ப்பத்திற்கதிஷ்டானமாகிய இரச்சுவினவச்சின்னசேதனமும், தனது பிரகாசத்தால் விளங்குவதால் இரச்சுவின் ஞானமே சர்ப்பத்தினதிஷ்டான ஞானமாகலின் சர்ப்பநிவிர்த்திகூடும்.

வினா.— இங்ஙனம் சர்ப்பநிவிர்த்தி இரச்சுஞானத்தாற், கூடுமேல் கூடுக. சர்ப்பஞானத்திற் கதிஷ்டானமாகிய சாட்சிசேதனம் அஞ்ஞாதமாயிருத்தலின், சர்ப்பஞான நிவிர்த்திகூடுமாறு எங்ஙனேயெனின் ?

விடை.—விடயத்தின் அதீனமாக ஞானமுளதாகலின் விடயத்தினபாவத்தால் சர்ப்பஞானந் தானேநிவர்த்தியாம். கற்பிதநிவிர்த்தி அதிஷ்டான ஞானமின்றி உளதாகாதென்று மீட்டும் சங்கிக்கிற்கூறுதும்.

நிவிர்த்தி இருவகைத்தாம்; ஒன்று அத்தியந்தநிவிர்த்தி: மற்றொன்று காரணத்தில் லயரூபமானநிவிர்த்தி. சகலகற்பிதவஸ்துக்களின் காரணம் அதிஷ்டானவாசிரிதமான அஞ்ஞானம்; அவ்வஞ்ஞானத்தோடுகூடக் காரியங்களிலிவர்த்தி அதிஷ்டான ஞானத்தினுலேயே யுளதாம் காரணத்தின்கண் லயரூபமான நிவிர்த்தி அதிஷ்டான ஞானத்தினுலன்றியும் சுழுத்தியிலும், பிரளயத்திலும் சர்வபதார்த்தங்கட்கு முளதாம். அங்கே, சர்வபதார்த்தங்களினது லயத்தில் போகப்பிரதமான கர்மங்களின்பாவம் நிமித்தமாக விருப்பதுபோல, அதிஷ்டானஞானமின்றியே சர்ப்பஞானம் லயமாமிடத்துச் சர்ப்பஞானத்திற்கு விடயமான சர்ப்பத்தின்பாவம் சர்ப்பஞானலயத்தில் நிமித்தமாகவுளது; இவ்வாறு சர்ப்பநிவிர்த்தி இரச்சுஞானத்தாலும், சர்ப்பஞானத்தினதுலயம் அதன்விடயமான சர்ப்பத்தினபாவத்தாலும் உளதாம்.

அல்லது சர்ப்பமும், அதனது ஞானமுமாகிய இரண்டனது நிவிர்த்தியும் இரச்சுஞானத்தாற் முனேயுளவாம். என்னே ? எப்போது இரச்சுவின் பிரத்தியட்சஞானமுளதாமோ ! அப்போது அந்தக்கரணத்தின்விருத்தி நேத்திரவாயிலாகப் புறம்போந்து இரச்சுதேசத்தையடைந்து இரச்சுவிற்குச் சமானமாகிய ஆகாரமாமாதலால், இரச்சுவின் பிரத்தியட்சசமயத்தில் விருத்தி உபகிதசேதனமும், இரச்சுவுபகிதசேதனமும் பேதமின்றி ஏகமாம்; இதற்கேதுகூறுதும். சேதனத்திற்கு உபாதிபேதத்தாலன்றிச் சொரூபத்தால் யாண்டும்பேதமில்லை. விருத்தி உபகிதசேதனம், இரச்சு உபகிதசேதனங்களின் பேதகவுபாதி விருத்தியும், இரச்சுவுமாம்; அவ்விருத்தியும், இரச்சுவும் வெவ்வேறு தேசத்திருக்கில் அப்போது உபாதியுடைய சேதனங்கட்குப் பேதமுண்டு. இரண்டுபாதியும் ஒரிடத்திருக்கில் அப்போது உபகிதசேதனங்கட்குப்பேதமின்று. இவ்வர்த்தை **வேதாந்தபரிபாஷாதி கிரந்தங்களிற்** கூறியிருக்கின்றது. இவ்வாற்றால், இரச்சுவின் பிரத்தியட்ச ஞானசமயத்தில் இரச்சுவுபகிதசேதனமும், விருத்தி உபகிதசேதனமும் ஏகமாம். அந்தக்கரணத்திலும், அதன்விருத்தியிலும் உள்ள அவைகளின் பிரகாசகமான சேதனமாத்திரம் சாட்சியெனப்படுதலின்; இரச்சு ஞானசமயத்தில் இரச்சுவுபகித சேதனத்தோடு அபின்னமானசாட்சியும் அவ்விரச்சு ஞானத்தாற்றனே பாசமாவதால் கற்பிதசர்ப்பஞான நிவிர்த்திகூடும்.

அன்றியும், சாட்சியானதுதான் அஞ்ஞாதமாயின் திரிபுடிஞானம் அச்சாட்சியிலைப் பொருந்தாது; ஆதலால், சர்வதிரிபுடிகளின் ஞானத்திலும் சாட்சிஞானம் அவசியமிருக்கின்றது; அச்சாட்சி ஞானத்தால் சர்ப்பஞான நிவிர்த்திகூடும். சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் வெவ்வேறுகக் கூறினமையின் இவ்வளவு விளவிடைகளுண்டாயின.

இனி சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றே என்னும் பட்சங்கூறுதும். வாக்கியமான ஒரிரச்சு சேதனத்தைச் சர்ப்பத்திற்கும், அதன் ஞானத்திற்கும் அதிஷ்டானமென்னல்கூடாது. எதனுலெனில் ? எத்துணை ஞானமுளவாகாநின்றனவோ ! அத்துணையும் பிரமாதா, அல்லது சாட்சியிஞசிரிதமாம். வாக்கியமான இரச்சு சேதனவாசிரிதமாக ஞானங்கூடாது. அப்படிச் சர்ப்பத்திற்கும், ஞானத்திற்கும் அதிஷ்டானமாக அந்தக் கரண வுபகித

சாட்சி சேதனத்தை யொப்பினுல் சரீரத்தினுள்ளே அந்தக்கரண தேசத்தில் சர்ப்பம் தோன்றவேண்டும். இரச்சு தேசத்திற் சர்ப்பம் தோன்றவேண்டுவ தில்லை. அகத்தே உதியாகின்ற சர்ப்பத்தின் றேற்றம் புறத்தே மாயையின் வலியாலுளதாமென வொப்பினுல் ஆத்மக்கியாதிமதம் சித்தியாம். ஆகலின், இரச்சுவுபகிதசேதனம் ஞானத்திற் கதிஷ்டானதாதலாலும், அந்தக்கரண வுப கிதசேதனம் ஞானத்திற் கதிஷ்டானமாதலும், அந்தக்கரண வுபகித சேதனம் சர்ப்பத்திற் கதிஷ்டானமாதலுங் கூடாது. இவ்வாற்றல் சர்ப்பத்திற்கும், அதன்ஞானத்திற்கும் அதிஷ்டானம் ஒன்றென்கை பொருந்தாதேனும, நேத் திரேந்திரிய வாயிலாகப் புறம்போந்து இரச்சுவின் சமீபமடைந்த இதுவெனும் ஆகாரமான அந்தக்கரணத்தின் விருத்தியுபகித சேதனத்தின் ஆசிரிதமாயுள்ள வவித்தையின் தமோகுணக்கூறு சர்ப்பாகாரபரிணாமும், சத்துவகுணக்கூறு ஞானுகாரபரிணமமுமாம். ஆதலால் விருத்தி உபகிதசேதன வாசிரிதமானவவி த்தை சர்ப்பத்திற்கும், அசன் ஞானத்திற்கும் உபாதானகாரணமாம் : விரு த்தியுபகிதசேதனம் அதிஷ்டானமாம் விருத்தி இரச்சுதேசத்தில் புறம்பே நேத்திரவாயிலாகப் போந்திருத்தலால் விருத்தி உபகிதசேதனமும் புறம்பே உளது. இக்காரணத்தால், சர்ப்பத்திற் காசிரயமாதல் கூடும் அந்தக்கரணத்தி னது சொரூபம் எவ்வளவுளதோ சாட்சியினது சொரூபமும் அவ்வளவேயு ளது. சரீரத்தினகத்தேயுள்ள அந்தக்கரணமே விருத்திரூபபரிணமமடைதலின், விருத்தியுபகிதசேதனம் சாட்சியாம் ; ஆகவே அது ஞானத்திற் காசிரயமாத லுங் கூடும். எப்போது இரச்சுவினது சாட்சாத்காரமாமோ ! அப்போது இரச்சுசேதனம் விருத்திசேதனம் எனும் இரண்டும் ஏகமாம் ஆதலால் இரச் சுவின் ஞானத்தால் சர்ப்பநிவிர்த்தியும், அதன் ஞானநிவிர்த்தியுங்கூடும் ஓரி ரச்சுவில் பத்துப்புருடர்க்குச் சர்ப்பம், தண்டமுதலிய பத்துப்பதார்த்தங்கள் வெவ்வேறுகத் தோன்றுக ; அல்லது சகலர்க்கும் சர்ப்பம் ஒன்றேதோன்றுக; அங்கே எவனுக்கு இரச்சுவின் சாட்சாத்காரமாமோ ! அவனுக்கு அவனது விருத்திசேதனத்திற் கற்பிதமாகிய அத்தியாசம் நிவிர்த்தியாகிறது : மற்றவ னுக்கு இல்லை ஆதலால், விருத்திசேதனமே கற்பிதத்திற்கு அதிஷ்டானம் இரச்சுமுதலிய விடயவுபகிதசேதனம் அல்ல. இரச்சுவுபகித சேதனத்தைச் சர்ப்ப, தண்டாதிகட்கு அதிஷ்டானமாக வொப்பினுல் பத்துப்புருடர்கட்குத் தோன்றுதிற்கும் பத்துப்பதார்த்தங்களும் ஒவ்வொருவனுக்குத்தோன்றவேண் டும். நமது கொள்கையால், எவனுடைய விருத்திசேதனத்தில் எப்பதார்த்தங் கற்பிதமோ ! அவனுக்கே தோன்றும் ; அந்நியனுக்கு இல்லை. இவ்வாற் றல் வாகியசர்ப்பாதிகட்கும், அவைகளின் ஞானங்கட்கும் விருத்தி உபகித சாட்சியே அதிஷ்டானம் : சொப்பனபதார்த்தங்கட்கும், அவைகளின் ஞான ங்கட்கும் அந்தக்கரணவுபகித சாட்சியே அதிஷ்டானம் இவ்வாறு சதசத்தின் விலட்சணமான அநிர்வசனீயவவித்தையின் பரிணமமாகிய அநிர்வசனீயசர்ப் டாதிகள் அநிர்வசனீயக்கியாதி எனப்படும்.

வினு.— சதசத்தின் விலட்சணம் அநிர்வசனீய மென்னல் கூடாத. யாதினுலெனின் ? யாது சத்திற்கு விலட்சணமோ ! அஃதசத்தாம் ; ஆகவே சத்திற்குவிலட்சணம் அசத்தல்லவென்று சொல்லுதல் அசங்கதமன்றே?

விளக்கம்:— சொரூபலக்கணத்தைச் சத்விலட்சணமென்றும், இருப்பதாகிய வித்தியமான சொரூபத்தை அசத்விலட்சணமென்றுஞ் சொல்லில் ஒர் பதார்த்தத்திலே சொரூபராகித்தியம், சொரூபஸாகித்தியம் என்னும் இரண்டும் பொருந்தாது; ஆதலின், சதசத்விலட்சணத்திற்குப் பொருள அங்ஙனமன்று.

மற்றெங்ஙன மெனின் ? காலத்திரயத்திலும் யாதொன்றிற்கு நாசமில்லையோ ! அதுசத்து ; யாதொன்று பாதமாமோ ! அது சத்விலட்சணம். சசசிருங்கம் வந்தியாபுத்திரன்போலச் சொரூபமில்லது அசத்து ; அதனின்விலட்சணம் சொரூபமுடையதாம் ; இவ்வாற்றால், பாதயோக்கிய சொரூபமுடையது சதசத்விலட்சண சத்தத்திற்குப் பொருளாம் ; சத்விலட்சண சத்தத்திற்குப் பாதயோக்கியமென்று பொருள் ; சொரூபமுடையது என்னும் இவ்வளவு சத்தத்திற்கு அசத்விலட்சண மென்று பொருள் ; ஆகலின், சதசத்விலட்சணம் அநிர்வசனீய மென்னல் அசங்கதமாகாமை காண்க. இவ்வாற்றால், எங்கே பிரம ஞானமுண்டு ! அங்கே அநிர்வசனீய பதார்த்தங்கண் முழுதும் உற்பத்தியாகின்றன. அந்நியசாஸ்திரங்களில் இரஜதத்தின் உற்பத்தி ஒப்பவில்லை. சத்கியாதிவாதி ஒருவர் ஒப்பினர் ; அவர்மதத்தினும் அநிர்வசனீக்கியாதி விலட்சணமாம்.

இனி அசத்தியாச விலக்கணம்—தனதபா * வாதி கரணத்திற்றனதவபாசம் அத்தியாசமாம் பாரமார்த்திகமாகவும், வியாவகாரிகமாகவும் இரஜதாபாவத்தின் அதிகரணமான சுத்தியில் இரஜதமும், அதன்ஞானமும் அநிர்வசனீயமாகத் தோன்றுகின்றமையின், இவ்வத்தியாச விலக்கணம் பொருந்தாறுகாண்க ; அல்லதூ, அதிஷ்டானத்தினும் விஷமசத்தையுடையதினவபாசம அத்தியாசமாம். அந்நியசாஸ்திரகாரர் ஒப்பியிருக்கும் அத்தியாச விலக்கணமனைத்தினும் பாஷியகாரர் அருளிச்செய்திருக்கும இவ்வத்தியாச விலக்கணம் அசாதாரணமாம். வியாகரணரீதியால், அத்தியாசவவபாசபதங்கட்குவிடயமும், ஞானமும்வாச்சியமாம். ஆகலின், அர்த்தாத்தியாச, ஞானத்தியாச பேதத்தால் அத்தியாசம் இருவகைத்து ; அவற்றுள், அர்த்தாத்தியாசம் அநேகபிரகாரமாம். ஓரிடத்தில், கேவலம் சம்பந்தமாத்திரம் அத்தியாசமாம். ஓரிடத்தில், சம்பந்தவிசிஷ்டசம்பந்தி அத்தியாசமாம். ஓரிடத்தில், கேவலம் தருமம் அத்தியாசமாம். ஓரிடத்தில், தருமவிசிஷ்டதருமி அத்தியாசமாம். ஓரிடத்தில் அந்நியோந்நியாத்தியாசமாம் ஓரிடத்தில் அந்நியதராத்தியாசமாம் ; இவ்வந்நியதராத்தியாசமும் இருவகைத்து. ஒன்று ஆத்மாவில் அநாத்மாத்தியாசம் : மற்றொன்று அநாத்மாவில் ஆத்மாத்தியாசமாம் ; முறையே இவற்றைச் சொரூபாத்தியாசம், சம்சர்க்காத்தியாசமென்ப யாதொரு பதார்த்தத்தின் சொரூபம் அநிர்வசனீயமாகத் தோன்றுமோ ! அதைச்சொரூபாத்தியாசமென்பர் ; அது இப்பியில்வெள்ளிபோல ; இவ்வாறு, ஆத்மாவில் அகங்காரமுதலிய அநாத்மாக்கள் சொரூபாத்தியாசமாம். யாதொரு பதார்த்தத்தின் சொரூபம் வியாவகாரிகமாகத்தான், பாரமார்த்திகமாகத்தான் முன்பேயிருக்க அதனதுசம்பந்தம் பிறிதொன்றனிடத்து அநிர்வசனீயமாகத் தோன்றுமோ ! அது சம்சர்க்காத்தியசா

---

* அதிகரணம் = இடம்.

மென்பர், அஃதெவ்வாறேனின் ? முகத்துக்கும், கண்ணாடிச்சும் யாதொரு சம்பந்தமுமின்றாய் இரண்டும் வியாவகாரிகமாக இருக்கக்கண்ணாடியில் முகத்தின் சம்பந்தந்தோன்றுகின்றதால் அதில் அநிர்வசனீயமாக முகத்தின் சம்பந்த முண்டாயிருப்பதும், அப்படியே சிவப்பு நிறமுடையது புடவையென்னுந் தோற்றரவால், சிவப்புநிறமுடைய பதார்த்தத்தின் தாதாத்மியசம்பந்தம் புடவையில் உண்டாயிருக்கின்றது. சிவப்புநிறமுடையது குசும்பாத் திரவியமாகலின், சிவப்புநிறத்தின் தாதாத்மியம் குசும்பாத்திரவியத்திலுண்டு, புடவையில் இல்லை: சிவப்புநிறமுடைய குசும்பாத்திரவியமும், புடவையும் வியாவகாரிகம் குசும்பாத்திரவியத்திலுள்ள சிவப்புநிறத்தின் தாதாத்மியசம்பந்தம் அநிர்வசனீயமாகப் புடவையிலுண்டாயிருப்பதும், அப்படியே சிவப்புப்படிகமென்னுந் தோற்றரவால், புஷ்பத்திலிருக்கும் சிவப்பு நிறத்தின் தாதாத்மியசம்பந்தம் அஃதில்லாத ஸ்படிகத்தில் அநிர்வசனீயமாக வுண்டாயிருப்பதுங்காண்க.

இவ்வாறு, அநேகவிடங்களில் சம்பந்திகள் வியாவகாரிகமாக இருக்க அவைகளின்சம்பந்தங்களும், சம்பந்தஞானங்களும் அநிர்வசனீயமாக வுண்டகின்றன. ஆத்மதன்மை சேதனத்தின்கண் உண்டு ; அது அகங்காரத்திற் றோன்றுகின்றதால் ஆத்மசேதனத்தின் தாதாத்மியசம்பந்தம் அநிர்வசனீயமாக வகங்காரத்தி லுண்டாயிருக்கின்றது ; ஆதலால், சேதனம் கற்பிதமன்று : மற்றியாதுகற்பித மெனின் ? அகங்காரத்தில் சேதனத்தின் தாதாத்மியசம்பந்தங் கற்பிதமாம். இவ்வாறு, எங்கே பாரமார்த்திகபதார்த்த மில்லாதிருந்து தோற்றரவாமோ ! அங்கே வியாவகாரிகபதார்த்தத்தில் பாரமார்த்திக பதார்த்தத்தின் சம்பந்தமும், சம்பந்தஞானமும் அநிர்வசனீயமாகவேயுண்டாகின்றன. வியாவகாரிகபதார்த்தம் இல்லாதிருந்து எங்கேதோற்றரவாமோ ! அங்கேசம்பந்தியும், சம்பந்தியின்ஞானமும் அநிர்வசனீயமாக வேறேயுண்டாகின்றன.

ஓரிடத்தில் சம்பந்தமாத்திரமும், சம்பந்தமாத்திரத்தின் ஞானமும் அநிர்வசனீயமாக வுண்டாகின்றன. சகலவதிஷ்டானங்களினும் அத்தியாசத்தின் விஷமசத்தை அநிர்வசனீயசத்தையே. எங்கே அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசமுண்டாமோ ! அங்கேயும், அதிஷ்டானமாகியஅநாத்மா வியாவகாரிகம். ஆத்மா அத்தியஸ்தமன்று, ஆத்மாவின் சம்பந்தம் அநாத்மாவில் அத்தியஸ்தமாம்; ஆகலின், அஃத நிர்வசனீயமாம். யாதொன்றனிடத்து ஆதாரத்தன்மைதோற்றுமோ ! அஃததிஷ்டானமெனப்படும். அவ்வாதாரத்தன்மை பரமார்த்தமாமேல் ஆகுக ; அல்லது, ஆரோபிதமாமேல் ஆகுக. பரமார்த்தமாக ஆதாராமிருக்கில் அஃததிஷ்டானமாம் என்னும் ஆக்கிரகம் இவ்விடத்து இல்லை. என்னை ? ஆத்மாவில் அநாத்மாத்தியாசம் எப்படியோ ! அப்படி அநாத்மாவில் ஆத்மாத்தியாசம் உண்டு. அநாத்மாவில் பரமார்த்தமாக ஆத்மாவின் ஆதாரத்தன்மை இல்லை : ஆரோபித ஆதாரத்தன்மையே உண்டு. ஆதலால், ஆதாரமாத்திரத்தை இப்பிரசங்கத்தில் அதிஷ்டானமென்றனர். எங்கே அநாத்மாவில் ஆத்மாத்தியாசமுண்டு ! அங்கே அதிஷ்டானம் அநாத்மாவாம் ; அது வியாவகாரிகசத்தையும், ஆத்மா பாரமார்த்திகசத்தையும் உடையனவாகலின்

அதிஷ்டானத்தின் விஷமசத்தையுடையதின் அவபாசம் அத்தியாசவிலக்கண மாதல்காண்க.

அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை கூறினதற்குத்தாற்பரியம்;— சுத்தபதார்த்தத்தினும் விசிட்டம் பின்னமாம்; ஆகலின், அநாத்மாவின் சம் பந்தத்தின் அத்தியாசஞ்சொன்னேம்; அங்கேசம்பந்தவிசிட்ட ஆத்மாவுக்கே அத்தியாசமாம்; சொரூபமாக ஆத்மா சத்தியமாகலின், அத்தியஸ்தத்திற்குப் பரமார்த்தசத்தை சொரூபதிருஷ்டியாற்கூறினர். அத்தியஸ்தங்கற்பிதமா மாகலின், அநாத்மசம்பந்தவிசிட்டம் கற்பிதமாயினும், சுத்தங் கற்பிதமாகாது என்னை? சுத்தத்துக்கு விசிட்டம் பின்னமாகலின், விசிட்டத்தின் கற்பிதத்தன் மை சுத்தத்திலுண்டாகாது. கேவலம் ஆன்மசம்பந்தத்திற் அத்தியாசஞ்சொல் வதினும் சம்பந்தவிசிட்டவான்மாவுக்கு அத்தியாசஞ்சொல்லுதலும், அத்தியஸ் தத்திற்குப் பரமார்த்தசத்தை சொல்லுதலுமே சிரேஷ்டமாம். ஆதலாலெனின்? கேவலம் சம்பந்தத்திற்கு அத்தியாசஞ்சொல்லில்அதிஷ்டானத்திற்கு ரோபிதத் தினும்விஷமசத்தைகூடாது. சேதனசம்பந்தத்தின் அதிஷ்டானமாகிய அந்தக்க ரணமும், கடாதியும்வியாவகாரிகம்; அவைகளில் சேதனத்தின்சம்பந்தம் பிராதி பாசிகமாமேல், பிரமஞானத்தாலல்லாமல் பாதமாகவேண்டும்; பாதமாகாமை யின் ஆன்மசம்பந்தமும், அதிஷ்டான அநாத்மாக்களும் வியாவகாரிகசத்தை யாம்; ஆகவே, விஷ்மசத்தையாகாமையின் அத்தியாச விலக்கணங்கூடாது. ஆகையால், சம்பந்தவிசிட்டவான்மா அநாத்மாவில் அத்தியாசமாம் விசேஷிய பாகம் பாரமார்த்திக சத்தையாகலின் விசிட்டம் பரமார்த்தசத்தையும், அதிஷ் டானம் வியாவகாரிகசத்தையுமாய் இரண்டும் விஷமசத்தையாகலின், அத்தியா சவிலக்கணங் கூடுமென்பது. எங்கே பிரம ஞானமுண்டோ! அங்கே சகல அநிர்வசனீய பதார்த்தங்களும் உற்பத்தியாம்.

ஓரிடத்தில் சம்பந்தியின் உற்பத்தியுண்டு; அது சுத்தியில் இரஜதத்தி ன். உற்பத்தியாம். இரஜதத்தில், சுத்தியிலிருக்கும் தன் தாதாத்மியம் இர ஜதத்தில் அத்தயதாக்கியாதியன்று; அப்படியே சுத்தியில் முன்னேயுள்ள சென்னுந் தன்மையாகிய தருமம் உண்டு; அதன் அநிர்வசனீயசம்பந்தம் இர ஜதத்தில் உற்பத்தியாம்; அதுவும் அந்நிய தாக்கியாதியன்று; இவ்வாற்றால், அந்நியோந்நியாத்தியாசத்திற்கும் இது உதாரணம் சம்பந்தாத்தியாசத்திற் கும் இது உதாரணம். சம்பந்தி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். அநிர்வ சனீயவத்துவின்றோற்றவைஞானத்தியாசமென்பர். ஞானத்தின் அநிர்வசனீ யவிஷயத்தை அர்த்தாத்தியாசமென்பர். ஆதலால் ஞானத்தியாசம், அர்த்தாத் தியாசங்கட்கும் இது உதாரணமாம் சுத்தியில் இரஜதத்வ தருமவிசிட்ட இரஜதத்தின் அத்தியாசம் உண்டு; ஆதலால், தருமி அத்தியாசத்திற்கும் இது உதாரணம். எங்கே அந்நியோந்நியாத்தியாசம் உண்டு! அங்கே இரண்டும் பாஸ்பரம் சொரூபமாகவத்தியாசமாகா. மற்றெப்படியெனின்? ஆரோபிதம் சொரூபமாகவத்தியாசமாம். சத்தியவஸ்துவின் தருமம், அல்லது சம்பந்தம் அத்தியாசமாம். சம்பந்தாத்தியாசமும் இருவகைத்தாம். ஓரிடத்தில் தருமத்

தின் சம்பந்தம் அத்தியாசமாம் ; அதுசொல்லிய உதாரணத்தில் சுத்தியிலிருக்கும் இதுவென்னுந் தன்மை ரூபமான தருமத்தின் சம்பந்தம் இராஜதத்திலத்தியாசமாவதாம். சிவப்புப்புடவை என்புழி, குசும்பாவிலிருக்கும் சிவப்புநிறமாகிய தருமத்தின் சம்பந்தவத்தியாசம் புடவையிலுண்டு. அந்தக்காரணத்திற்கு ஆன்மாவில் சொரூபமாகவத்தியாசமுண்டு. அந்தக்காரணத்தில் ஆன்மாவுக்குச் சொரூபமாக அத்தியாசம் இல்லை ; பின்னை எப்படியெனின் ? ஆன்மசம்பந்தம் அத்தியாசமாமாகலின், ஆன்மாவிற்குச் சம்சர்க்காத்தியாச முண்டு. ஞான சொரூபம் ஆன்மாவாம் : அந்தக்காரணமன்று. ஞானத்தின்சம்பந்தம் அந்தக்காரணத்திற் றோன்றுகிறது. ஆகலின், ஆன்மாவின் சம்பந்தாத்தியாசம் அந்தக்காரணத்திலுண்டு. அப்படியே கடம்விளங்குகிறது, படம்விளங்குகிறது என்றிவ்வாறு ஸ்புரணசம்பந்தம சர்வ பதார்த்தங்களிலுந் தோன்றுகின்றதாகலின், நிகிலபதார்த்தங்களிலும் ஆன்ம சம்பந்தத்தினத்தியாசமுண்டு. ஆன்மாவில் குருடுமுதலிய தருமங்களின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு. ஆன்மாவில் இந்திரியங்களின் தாதாத்மியவத்தியாசமில்லை. என்னை ? நான் குருடனென்று தோற்றரவாதலில்லை ஆதலால், நேத்திரதருமமாகிய குருட்டுத்தன்மையின் அத்தியாசம் ஆன்மாவிலுண்டு : நேத்திரத்தின் அத்தியாசம் இல்லை ; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். நேத்திரமுதலிய நிகிலபிரபஞ்சத்தின் அத்தியாசமும், ஆன்மாவிலுண்டெனினும், பிரமசேதனத்தில் சர்வபிரபஞ்சத்தின் அத்தியாசமும் உண்டல்லாமல் துவம்பதார்த்தத்தில் நிகில பிரபஞ்சத்தின் அத்தியாசம் இல்லை ஒரேபதார்த்தத்தின் ஓர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம்உண்டாகிறதேயன்றி மற்றோர் தருமவிசிட்டத்தின் அத்தியாசம் உண்டாகிறதில்லை அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புத மகிமையுண்டு ; அஃதெங்ஙனம் ? பிரமாணத்தன்மைமுதலிய தருமவிசிட்டமாகிய சரீரத்தின் தாதாத்மியவத்தியாசம் ஆன்மாவிலுண்டாயிருக்கிறதல்லாமல் சரீரத்தன்மை விசிட்டசரீரத்தின் அத்தியாசம் உணடாகவில்லை ; இதனால், விவேகியும் நான் பிராமணன், நான் மநுடனென்று விவகரிக்கின்றனன்: நான் சரீரமென்று விவகரிக்கிலன். அவித்தைக்கு இப்படிப்பட்ட வற்புதமகிமை யிருத்தலால், ஆன்மாவில் இந்திரியங்களின் அத்தியாசமின்றிக் குருட்டுத்தன்மைமுதலிய தருமாத்தியாசம் பொருந்துகின்றது ; இது தருமாத்தியாசத்திற்கு உதாரணம். யாது அந்தியாசிதமாக விருக்குமோ சுதந்தரமாக விராதோ அதைத்தருமமென்பர் ; ஆதலால் சம்பந்தமுந் தருமமே அதன் அத்தியாசமும் தருமாத்தியாசமேயாம். சொல்லியவாற்றால், அதிஷ்டானத்தினும் * விஷமசத்தை யுடையதின் $ அவபாசம் அத்தியாசமெனவும், அல்லது தனது அபவாதிகாரணத்திற் றனதவபாசம் அத்தியாசமெனவும் அத்தியாசலக்கணம் இருவகைப்படுதல் காண்க. என இவ்வாரோபாத்தியாசங்களை அறிஞர் விரித்துரையாநிற்பர்.

அ - கை.

[இந்தத் திருஷ்டாந்தத்தை யேற்றற்கு இயைந்த தாஷ்டாந்தம் இனையதென இக்கவியிற் கூறுகின்றார்.]

---

* விஷமசத்தை = சமமல்லாதசத்தை. $ அவபாசம் = தோற்றரவு.

28. இப்படிப் போல நாமரூபங்க ளிரண்டுமின்றி
ஒப்பமா யிரண்டற் றொன்று யுணர்வொளிறைவாய் நிற்கும்
அப்பிர மத்திற் றோன்று மைம்பூத விகார மெல்லாம்
செப்பிய கற்பி தத்தாற் செனித்தவென் றறிந்து கொள்ளே.

(இ-ள்.) இப்படிப்போல நாமரூபங்க ளிரண்டுமின்றி—எ - து. யாம் கூறிய இத்திருஷ்டாந்தம்போல நாமரூபங்கள் இரண்டுமில்லாமல், ஒப்பமாயி ரண்டற் றொன்று யுணர்வொளி நிறைவா நிற்கும்—எ-து. எங்கு மொரு தன் மைத்தர்யும், இரண் டென்னுங் காரண காரியப் பாகுபாடின்றி ஏகசொரூப மாயும், எங்கு நிறைந்துள்ள ஞானப்பிரகாசமாயு மிருப்பது எந்தப் பிரமமோ? அப்பிரமத்திற் றோன்று மைம்பூத விகாரமெல்லாம்—எ-து. அந்தப்பிரமத்தினி டத்தில் மெய்போலத்தோற்றும் பஞ்சபூதமும் அவற்றின் விகாரமுமாகிய அண் டாண்டகோடி சராசரங்களனைத்தும், செப்பிய கற்பிதத்தாற் செனித்தவென் றறிந்துகொள்—எ-து. முன் சொல்லிய கற்பிதத்தினால் உதித்தனவென்று அறிந்துகொள். எ-று.

சுயம்பாகப் பழுதையில் பாம்பென்னு நாமரூபம் எங்ஙனமின்றோ? அதுபோன்று சைதன்யமிருத்தலின் நாமரூபங்க ளிரண்டுமின்றி யெனவும், பாம்பென்னும் பிராந்தி தோன்றியவிடத்தும் மறைந்தவிடத்தும் பழுதை அங்ஙனமாகாது ஒருதன்மைத்தாக நின்றவாறுபோன்று, விசாரணைக்கு முன் னுள்ளதாயும் விசாரணைக்குப் பின் இல்லாததாயுந் தோன்றுஞ் சகசீவபரம் போலாகாது, ஒரு தன்மைத்தாகச் சைதன்ய மென்றும் விளங்கலின் ஒப்ப மாயெனவும் கூறினர் பிராந்தி பாம்பாற் பழுதை காரணமும், பாம்பு காரிய மும்மாயிற்று. மெய்யாகப் பாம்பு காரியமாயிற் பழுதையும், மெய்யாகக் காரணமாகலாம் அங்ஙனமின்றே லிங்ஙனமு மின்றும். ஆகவே காரண காரி யத்துவிதம் பழுதைக்கு இன்மையாலவ்வாறுபோன்று, பிராந்தி சகசீவபரத் தால் சைதன்யங் காரணமுஞ் சகசீவபரங் காரியமுமாயின. மெய்யாகச் சக சீவபரங் காரியமாயின், மெய்யாகச்சைதன்யமுங் காரணமாகலாம். அங்ஙனமின் றேல் இங்ஙனமு மின்றும். ஆகவே காரணகாரியத்துவிதம் சைதன்யத்துக் கின்மையால் இரண்டற்றெனவும், பழுதைக்குக் காரண காரியப் பிராந்தி வந்தபோதும் அது துவிதமாகவில்லை; நீங்கியபோது மேகமாகவில்லை. இரண்டு காலத்தும் பழுதை இருந்தபடி யிருக்குமாறுபோன்று சைதன்னியத்துக்குக் காரணகாரியப்பிராந்தி வந்தபோதும் அது துவிதமாகவில்லை; நீங்கியபோதும் ஏகமாகவில்லை இரண்டுகாலத்தும் சைதன்ய மிருந்தபடி யிருத்தலால் ஒன்று யெனவும், இங்ஙனமாயவஸ்து சன்னுருவாக முயல்வார்க்கு இலக்காகநிற்குங் குறியெனத்தோன்ற உணர்வொளி நிறைவாநிற்குமெனவுங்கூறினர் இங்ஙன நிற்பது எந்தப் பிரமமோவென்றது எஞ்சிநின்றது. பாம்பு கள்ளன் முதலிய பிராந்தி தோற்றற்கு ஆதாரம் பழுதை கட்டை முதலியவை யாயினாற்போலச் சகமுதலிய திரிபதார்த்தப்பிராந்தி தோற்றற்குப் பிரமமென்பது ஆதாரமென விளங்க, அப்பிரமத்திற் றோன்று மைம்பூத விகாரமெல்லாஞ்செப்பிய கற்பி

தத்தாற் செனித்தவென்றும்; சமஸ்தமும் உண்மையெனக்கோடலைத் தவிர் தற்குக் கற்பிதத்தாற் செனித்தவென் றறிந்துகொள்ளேயென்றுங்கூறினர். இத்திரிபதார்த்தமும் சோதனையில் ஆம் உண்டேனற்கியைந்து உறுதியாக நில்லாது அல்லவில்லை யெனற்கே இயைந்துறுதியாக நிற்பதென்னை? ஆதலின் இவ்வுதாரண மனைத்தும் ஐயமின்றி யேற்றற்பாலதெனவுணர்க.

(க-நு.) தாஷ்டர்ந்தத்தினிலை திருஷ்டாந்தத்திலுல் விளங்கக் கூறிய தென்பது, நாம ரூபங்க ளிரண்டுமின்றி யென்பதற்கு அவாங்மனஸோகோசரப் பிரமமெனப் பொருள்கொள்ளினு மையும். அப்பிரமத்திற் றோற்றுமென் பதை ஏழாம் வேற்றுமை யிடப்பொருளாக்கி யுரைகூறியதுமன்றி, ஐந்தாம் வேற்றுமை நீங்கற்பொருளாகவேனும் ஏதுப்பொருளாகவேனு முரைகூறினு மமையும். ஏதுப்பொருளாக வமைவது அந்தப் பிரமம் இங்ஙனமாகுகவெனச் சங்கற்பிக்க அந்தப் பிரமசங்கற்பத்தா லுதித்தவெனக் கோடலையும், ஏழாம் வேற்றுமையிற் கோடல் அலை, திவலை, நுரை கடலிலுதித்தொடுங்குமாபோ லென்னலையுமென்க. இது வேதாந்தி சம்மதம்; ஏனைய பிரர்சம்மதம். இவை பெருகுமாதலிற் சுருக்கினும். (உ அ)

அ - கை.

[அனைத்துங் கற்பிதத்தா லுண்டாயது எங்ஙனமென வினவியமாணாக்கனை நோக்கி, முன்னர் செனித்தவென்னுஞ் சிருட்டியையுகபத்சிருட்டி, கிரம சிருட்டி யென இரண்டாக்கி, முன்னர் உகபத்சிருட்டி கூறுவான் புகுந்தார். இக்கவியில் அவயவத்தத்தில் முக்குணவுதிப்பைக் கூறுகின்றார்.]

29. அதுதானெப் படியென் றக்கா லஞாதியஞ் சீவ செல்லாம்
பொதுவானசுழுத்திபோலப் பொருந்துமவ்வியத்தந்தன்னில்
இதுகால தத்துவப்பே ரீசனுட் பார்வை யாலே
முதமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்த மாமே.

(இ-ள்.) அதுதானெப் படியென் றக்கால்--எ-து. அந்தச் சிருட்டிவகைதா னெங்ஙனமெனக் கேட்கின், அஞாதியாஞ் சீவசெல்லாம்—எ-து. அஞாதியா யுள்ள சீவபேத மனைத்தும், பொதுவான சுழுத்திபோலப் பொருந்துமவ் வியத் தந்தன்னில்—எ-து. மறைவே வடிவாயுள்ள அல்வியத்தமென்னு மூலப்பிரகிரு தியின்கண் சாதாரணமான சுழுத்தி யவத்தையில் தினமும் தங்குமாறு போன்று நிலையாகத் தங்கும், இது கால தத்துவப் பேர்—எ-து, இந்த அவ்வி யத்தமே காலதத்துவமென்னும் பெயரையுடையது, ஈசனுட்பார்வையாலே— எ-து. ஈஸ்வரனது அந்தர்முக திருஷ்டியினல், முதமூலசுபாவம்விட்டு முக்கு ணம் வியத்தமாம்—எ-து. அஞாதியாயுள்ள மூலப்பிரகிருதியான சுபாவத்தி லின்று நீங்கிச் சாத்வித இராசத தாமத மென்னு முக்குணங்களும் வெளிப் பட்டன. எ-று.

வியத்தம் வெளிப்படல்; அவ்வியத்தம் வெளிப்படாமை. சித்ரூபமே சிவ ரீரசலின் அநாதியாஞ் சீவரெல்லாம் எனவும், சுழுத்தியகன்றூர் இல்லையா சலின் பொதுவான சுழுத்தி எனவும், அவ்வியத்தத்தையன்றிக் காலதத்துவ மின்மையின் இது காலதத்துவப்பேர் எனவும், உயிர்கள் தாமே மறைவினின்று நீங்கா என்பதுதோன்ற ஈசனுட் பார்வையால்எனவும், தெளிவிக்கின் மயக்க நீங்குமென்பத தோன்றப் பார்வையாலே மூக்குணவியத்தமாம் எனவும் கூறினூர். மூக்குணம் வியத்தமாதல் சிருஷ்டிவந்தவகை. இந்தச்சிருஷ்டி வந்தவகையைக் கூறல் பிறவி மயக்கம் தெளிவித்தற்கு தெரிவிக்கின் மீண்டும் திரும்பாதென்னுங் கருத்துகொண்டு ஈசனுட்பார்வைகொண்டானெனக் கொள்க. இங்கே ஈசனென்பது சுத்தசைதன்யத்தை.

(க-து.) உயிர்களனைத்தும் தம்மைத் தாம் கற்பித சைதன்னியமென்று உணர்ந்துய்யுமாறு மூக்குணவியத்தங் கூறியதென்பது. தமது நிசவடிவம் உணர்வொளி நிறைவாய்நிற்றல். பரிசோதனையால் அன்றித் தமதுண்மை நிலை சற்றும் விளங்காது; விளங்கவேண்டி யிங்கே சிருட்டிகூறலாயினூர். (உக)

அ - கை க.

[முற்கூறிய மூக்குணங்களினிலை இனியவென இக்கவியிற் கூறுகின்றூர்.]

30 உத்தம வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகும்
சுத்தசத் துவந்த மத்தோ டசுத்ததத் துவப்பேர் சொல்லும்
சத்துவ மழுக்கி ருட்டாய்ச் சாற்றுமுக் குணமு மூன்றுய்
ஒத்துள வெனினுந் தம்மு ளொருகுண மதிக மாமே.

(இ-ள்.) உத்தமம் வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகும்—எ-து சாத்துவிதம் இராசதம் தாமதம் என் குணமூன்றும். அவற்றுள் சாத்துவிதம் உத்தமம், ராசதம் மத்திமம், தாமதம் அதமம். இவைமூன்றும் யோக்கியதை. சாத்துவிதம் வெண்மை, ராசதம் செம்மை, தாமதம் கருமை. இவை மூன்றும் நிறம். சுத்த சத்துவந் தமத்தோ டசுத்ததத் துவப்பேர் சொல்லும—எ-து. சாத்துவிதம் சுத்தம், தாமதம், அசுத்தம், இராசதம் சுத்தாசுத்தம், இவைமூன்றுந் தருமம் என்னும் பெயர்களைச் சுருதிகள் சொல்லும். சத்துவ மழுக்கி. ருட்டாச் சாற்றும்—எ-து, சாத்துவிதம் அழுக்கின்மை, இராசதம் அழுக்கு, தாமதம் இருட்டு. இவை மூன்றுந் தோற்றம் எனச் சுருதிகள் முறையிடும். மூக்குணமு மூன்ற யொத்துள வெனினும்—எ - து. இந்த மூன்றுகுணங்களு மூன்றுகி நின்று தம்மு ளொத்து நின்றாலும், தம்மு ளொருகுண மதிக்மாம்—எ - து. தமக்குள்ளே யாதானு மோர்குண மிஞ்சி நிற்கும். எ-று.

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்னும் விதியால் உத்தமமென்றதனால் மத்திம அதமங்கள் வருவித்தாம். உபயமாஞ் சிவப்பென்றதனால் மூன்றுவது நீலமென்றும். தமத்தோடென ஓடுக்கொடுத்துப் பிரித்ததனால் இராசத மிசையெச்சமெனக் கொள்க கொண்டதனால் இராசதம் சுத்தா

சுத்தாசுத்தமாயிற்று. ஏனைய குணங்கள் அழுக்கிருட்டென்றதனுல் சாத்துவித மழுக்கின்மையென்றும். தாமத மிருட்டென்றதனுல் சாத்துவிதம் வெளிச்ச மெனினு மமையும் தெரிஞ்சிமுள் மூன்றுல் தமக்கு ளொத்துளவாயினுமயாதானுமோர்முள் மேலிட்டிருக்குமாறுபோன்று இருத்தலின்முக்குணமு மூன்று யொத்துளவெனினுந் தம்மு ளொருகுண மதிகமாமேஎன்றார். இக்கவியை உற்றுணராதார்க்கு இங்ஙனமாய நயம் எங்ஙனந்தோன்றும். இக்கவியை வேறுவிதமாகப் பாடமோதியுரை கொள்வாருமுளர். அதுபெரும் பாலு முரணும்.

((க - து.) சாத்துவிதமுதலிய முக்குணமும் யோக்கியதை, நிறம் தர்மம், தோற்றம் என்பவைகளைக் குறிப்பான் உணர்த்தியது சுருதிசம்மதமாம். யுக்திக்கு முரணின்மையால் ஏற்றற்பாலதென்க. முக்குணம வியத்தமாமெனவே யேனையவைகளைக் கூறவேண்டுவதின்று. முதற்காரண காரியமாதலின் அரசன் வெளிப்பட்டானென்புழி ஏனைய சேனைமுதலியவைகளைக் கூறவேண்டுவதின்றுயவாறு போலும். (கூ0)

அ - கை க.

[உகபத் சிருஷ்டிகூறி இனிக் கிரமசிருஷ்டி கூறப் புகுந்தார், இக்கவியில் மூலப்பிரகிருதிமுதல் குணத்ரயம் ஈறுகக்கிடந்தநான்கினையுங் கூறுகின்றார்.]

31. ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறுச் சொல்வார்
மருவுமவ் வியத்தந் தானே மகத்தவ மாகுமென்றும்
அருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றும்
கருவகங் கார மூன்றுய்க் காட்டிய குணமா மென்றும்.

(இ-ள்) ஒருவழி யிதுவாமித்தை யொருவழி வேறுச்சொல்வார், எ-து, சிருஷ்டிவகை யிரண்டிலிதுவொரு வகையாம். இந்தச்சிருஷ்டியையே வேறுருவகையாகச் சத்துக்கள் சொல்லுவார்கள்:—மருவு மவ்வியத்தந்தானே மகதத்வ மாகுமென்றும், எ-து. முன்கூறக்கிடந்த அவ்வியத்தமென்னு மூலப்பிரகிருதியே மகதத்துவமெனப் படுவதா மெனவும்:—அருண்மகதத்துவந்தானகங்கார மாகுமென்றும்-எ-து. முன்கூறிய மகதத்துவமே யகங்கார மென்படுவதாமெனவும்:—கருவகங்கார மூன்றுக் காட்டிய குணமா மென்றும், எ-து. பிறவிக்குக்கருவாயுள்ள விவ்வகங்காரமே முன்னர் மூன்றுக்காட்டிய குணங்களெனப் படுவதா மெனவும், எ-று.

(க-து.) மூலப்பிரகிருதியே மகதத்துவமெனவும், மகதத்துவமே யகங்கார தத்துவமெனவும், அகங்காரதத்துவமே குணத்ரயமெனவு முணரக்கூறியதென்பது. பணிபேதங்களினுற் பொன்னேயும், படபேதங்களா னூலேயும், கடபேதங்களான் மண்ணேயும், தேகபேதங்களா லெம்பூதாம்ச சையோகத்தையும், மூற்றுமறந்தார்க்கிப் பேதங்களைத் தத்த முதற்காரணத்தினின்று வந்த வகையைத் தெரிவிக்கி லந்தந்த முதற்காரணத்தை யன்றி யத்தற்குரிய விகாரங்களில்லையென் றுண்மையாக வுணர்ந்து, அவ்வவ்வாதார மறவாதிருப்பர். இவ

ரிங்கன மிருப்பதா லாதேயமாகிய விகாரங்களில்லாமற் போயினவோ? அவ் வாதார நாட்டமாகவே விகாரங்களே நோக்கிலனைத்து மவ்வாதாரமாகவே விள ங்கும்; இஃதுண்மையை நினைப்பூட்டலாயிற்று. இந்த நினைப்பு மறப்பு ஒர் புருடனது புடைபெயர்ச்சியாதலானும், இப்புடை பெயர்ச்சி பெழுச்சி தவிர் தலால் ஒன்றிலொன்று தத்தமகத்துள்ளாம லன்னியோன்னியாபாவம் உறுகின் றது; இவ்விரண்டு காலத்தும் புருடனிருந்தவண்ணமிருந்து. இவற்றைச் சாட் சியா யறிந்திருப்பதினாலும், இப்புருடன் விகாரியுமல்லன், நிர்விகாரியுமல்ல னென்பதை யுணர்த்தச் சிருஷ்டிவகை கூறவந்ததேயன்றி வேறுக்காகவன்று; இதுபோலத் தாஷ்டாந்தமுமென வூகித்துணர்க; இதனை யுணர்வோர் பரிபாகி களல்லரே லனர்த்தமாம். இஃதன்றியு மிக்கவியின் கருத்தைக்கொஞ்சம் வெளி ப்படையாகத் தெரிவிக்குதும், அதாவது:—அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாகவிளங்குஞ் சைதன்னியத்தில் விஸ்மரணையாக வெழுந்த ஞெப்தி யை மூலப்பிரகிருதியெனவும், அங்ஙனமெழுந்த ஞெப்தியே நிலத்துளுன்றிய விதை யுபுக்குமாறுபோல் திரிபதார்த்தங்களும் வெளியாகாதுள்ளடக்கி நிற்கு மவசரத்தை மகதத்துவமெனவும், அங்ஙனம் வெளியாக்கா துள்ளடக்கிக்காட்டு மவசர நிலையான ஞெப்தியே வெளியாரும்பிய மூலம்போல் சகசிவபரபேதங் காட்டாது பொதுவாக வெளியெழுதலின், அவ்வெழுச்சியை அகங்காரதத்துவ மெனவும், அவ்வெழுச்சி வடிவாகநின்ற ஞெப்தியே அம்மூலை மூன்றுகவெடி க்கு மாறுபோன்று, இனிச் சகசிவபரமாதற்கு மூன்றுக வெளிப்படுதலின் அவ் வவசரத்தை முக்குணமாமெனவுங் கூறியது. (ஊக)

அ - கை

[முன்னர் கூறியவற்றுளீறுக வுதித்த முக்குணங்களிற் பிரதி பலித்த தினையதெனவும், அம்மூன்றில் சாத்துவிதகுண மிவ்வவசரத்தி லின்னபெயரை யேற்குமெனவும், அதிலுதித்தசித்சாயைக் குப்பெயரினையதெனவும் குணரகிதமான சித்துக்குப் பெயரினைய தெனவு மிக்கவியிற் கூறுகின்றார்.]

32. இக்குணங்களிலே விண்போன்றிருக்குஞ் சிற்சாயைதான்றும்
முக்குணங் களினுந் தூய்தா முதற்குண மாயை யாகும்
அக்குணம் பிரமச் சாயை யத்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றுதோ னீமித்தகா ரணமா மீசன்.

(இ-ள்.) இக்குணங்களிலே விண்போன் றிருக்குஞ்சிற் சாயைதோன் றும், எ-து இம்முக்குணங்களிலு மாகாயம்போன்றிருக்குஞ்சைதன்யத்தினது சாயாவடிவம் பிரதிபலிக்கும்:—முக்குணங்களினுந் தூய்தா முதற்குணமா யையாகும், எ-து. இந்த மூன்றுகுணங்களிலும் பரிசுத்தமாயுள்ள முதற்குண மான சாத்துவிதமானது மாயையெனப்படுவதாம்:—அக்குணப் பிரமச்சாயை யத்தரியாமி, எ து. அந்தக் குணத்திற் பிரதிபலித்த பிரமத்தினது சாயாவடிவ

மானது அந்தரியாமியெனப் பெயர்பெறுவதாம்: —மாயையெக்குணங்களும்பற்றுதோ னிமித்தகாரணனுமீசன், எ-து. மாயாமயமான எவ்வகைப்பட்ட குணங்களுந் தன்னேப்பற்றுது நின்றுள்ளோ னிமித்தகாரணனுகிய வீசனும், எ-று.

விண்போன்று பரிபூரணமாயிருக்கை சித்துக்கன்றிச் சாயைக் கன்றுமையின் சித்தைப்பிரித்து எழுவாயாக்காது சித்தினது சாயையெனப் பொருள்கொண்டாம்; —சைதன்யம்போற் காண்டலைச் சிற்சாயையெனவும், சகசீவபரமாதற்கெனக் குறிக்கச் சிற்சாயை தோன்றுமெனவும், "பேதமுறு புந்தியே மாயை" ஆதலா லப்புந்தியை மூதற்குணமெனவும், மாயாசகித வீசனென்பது தோன்ற அக்குணப் பிரமச்சாயை யந்தரியாமியெனவுங் கூறினர். இங்கே யந்தரியா மியென்பது ஈசனது காரண சரீரவபிமான நாமத்தை. நிமித்தகாரணனு மீசன் மாயாரகிதனென்பது தோன்ற மாயை யெக்குணங்களும் பற்றுதோ னெனப் பட்டது: —சிற்சாயை பிரமச்சாயையென்னு மிவ்விருமொழிகளும் ஆறும் வேற்றுமைத் தற்கிழமைப்பொருள். சித்தைச் சகசீவபரமென்னுது சாயையெனக்கூறியது, கற்பித சைதன்யமென்றற்கு. இதனேயுடன் படற்கு மாறுளதேல்சோதனேயி லல்லவில்லேயெனற் கியையாது நிற்கக் காட்டலாம் காட்டவலியின்றேல் காட்டவலியுளோர்க் கடிமை பூண்டொழுகை யெளிதி லுணர்தற் கியைந்த குறி.

(க-து.) மூக்குணப் பிரதிபலனசித்து கற்பிதமெனவும், மூதற்குணமாயையெனவும், அம்மூதற்குணப் பிரதிபலனசித்தை யந்தரியாமியெனவும், மாயாரகிதவீச னினேயனெனவும் கூறியதென்பது. மூக்குணமாக வெளிப்பட்டது ஞெப்தியென்றதனுலந்தஞெப்தி சுயம்பெனற்குறுதி யென்னே ? இன்றலாலதனேயே யிங்கே சிறசாயையெனக் கொண்டார். சிற்சாயை தோன்றற்கிடம் மூக்குணமாதலி னுதாரமெனப்படும் ; படவே சிற்சாயை யாதேயமெனப்படும்; படவே யிவ்விரண்டுமாநின்ற தந்தஞெப்தியே ; இதிலேயமூளதேல் தினமு நமமாற் பிரத்தியட்சமாகக் காணநின்ற மூன்றவஸ்தைகளி லெந்தெந்த வவஸ்தை யெங்கெங்குளதோ, அந்தந்த வவஸ்தையில் தோற்றற்குரிய தூலாதி மூன்றுகாட்சிகளி லொவ்வொன்றுளதாக வாங்காங்குக்காணும். ஆங்காங்குக் காணுந் தூலாதி காட்சிக்கிடம் மூன்றவஸ்தை ; இம்மூன்றவஸ்தையு மாதாரமாகவே காட்சிகளாதேயமாயிற்று. இவ்விரண்டுமாக நிற்பது ஓர் ஸ்மரணையே. இது நிகழா வுயிரில்லேயாதலா லேற்றற்பாலதே, ஆதலினேயமொழிக. இதனுல் மாயையென்பதும், ஈசனென்பதும், அந்தரியாமியென்னுங் காரணதேக வபிமானி நாமமென்பதும், முற்கூறிய ஞெப்தியன்றி யில்லேயென்பது பெற்றம். இங்ஙனமுணராதார் ஞானியரல்லர். ஏனெனிற் கலக்கமகலாமைபற்றி. பேதமுறுபுந்தி மாயையெனவே பேதமுறுபுந்தி யுளதாகக் குறிப்பிக்கின்றது; அப்புந்தி மாயாரகிதனென் றுயிற்று. இவ்விருதன்மையா நிற்பது மந்தஞெப்தியே. இங்ஙன்மாயதை யறியவேண்டில்ஞெப்தியரல்லாத ஞானியஞ்ஞானியருளரோ? இல்லேயாதலினேற்றற்பாலதே. இன்னுஞ் சிறுஷடிச்சொடர்புளதாதலிற் பின்னர் இதனெருமையைக் கூறுதும். இதுநிற்க. (கூ)

அ - கை

[மூன்கவியில் சாத்துவித குணத்தை மாயையெனவும், ஈசனபிமானத்ரயத்தில் அந்தரியாமி யெனவுங்கூறி, இக்கவியிலுமதையே சுழுத்தியவத்தை யெனவும், காரணசரீரமெனவும், ஆநந்தமயகோசமெனவுங் கூறி, யினிச் சீவனுக்கு இராசதகுணமவித்தை யெனவும், அக்குணப் பிரதி பலனஞ் சீவனெனவும், அபிமான த்ரயத்தி லிவனுக்குப் பிராக்ஞனெனவுங் கூறுகின்றார்.]

33. ஈசனுக் கிதுசு ழுந்தி யிதுவேகா ரண சரீரம்
கோசமா னந்த மாகுங் குணமிரா சதம வித்தைத்
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவகோடி
நாசமா மூயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞ னுமே.

(இ-ள்.) ஈசனுக்கிது சுழுத்தியிதவே காரணசரிரங் கோசமானந்தமாகும், எ-து. இந்தச் சாத்விதகுணமே யீசனுக்குச் சுழுத்தியவத்தை யாகவும், காரண சரீரமாகவும். ஆனந்தமயகோசமாகவு மிருக்கும்:—குணமிராசதம், எ-து. இனி யிராசதகுணமோ வெனில்:—அவித்தை தேசமறுவித்தை தோறுஞ் சிற்சாயை சீவகோடி, எ-து. அவித்தையெனவும், மலினரூபாமானவிந்தவவித்தைகளிலெல்லாம் பிரதிபலித்த சிற்சாயைக ளனேத்துஞ் சீவகோடிகளெனவும்:—நாசமாமுயிர்க்கப்போது நாமமும் பிராக்ஞனுமே, எ-து. நாசமூறத்தக்க விவ்வுயிர்களுக் கவ்வவசரத்திலியைந்தநாமம் பிராக்ஞனெனவுமாம் எ-று.

தேசறுமவித்தையென்றதனால் தேசுளதுமாயை யெனக்கொள நின்றது. சாத்துவிதகுணம் மாயை யென்றார், அம்மாயைதோறு மென்னது அவித்தை தோறு மென்றது; இதனைப் பலவென்னிற் பிரத்தியட்சுத்திற்கியைந்தது, அதனைப் பலவென்னி லப்பிரத்தியட்சமாதலி னெவரு மூடன்படார். ஆயினும் இந்துவேதாகமங்கள், மூக்குணங்களில் மூதற்குணத்தைச் சாத்துவிதத்திற், சாத்துவிதம் இராசதம் எனப்பிரித்தாற்போல, ஏனையகுணங்களையும்பிரித்தொன்பதுபாகமாக்கி, மூதற்பாகங்களைத் திரிமூர்த்திகளாக்கி, மொவ்வொரு மூர்த்திகளு மளவிலதாகக்கூறுநிற்கும்; இதனை யறியவேண்டிற் கட்டளைகளிலும், பிரபுலிங்கலீலையிலும், ஏனையநூல்களிலுங் காணலாம். இவையெல்லாம் வாஸ்தவமென்பதைப் பிருதிவி தத்தவமுதல் நாதசதத்துவமீறாக வொன்றிலொன்றெடுக்கிக்காட்டப்புகும் அபவாதயுத்தியாற்காணலாம். சுருதி யுத்தியாற்காணலாம். சுருதி யுத்தி யனுபவமுகத்தா லொடுக்கிக்காட்டத் தெரியாமைகுற்றத்தை நூல்மேலேற்றத் திரியுஞானிய ரெங்குமெளியர். வித்தை ஞானம்; அவித்தை அஞ்ஞானம். இராசதகுணமவித்தையெனவே சாத்துவிதகுணம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க அகங்காரம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க மகதத்துவம் வித்தையாயிற்று; இதையவித்தையாக்க் மூலப்பிரகிருதி வித்தையாயிற்று; இதையவித்தையாக்கப் பிரமம் வித்தையாயிற்று; இங்ஙனமாக இதற்கப்பாற்சேறல்சொல்லால் அகவத்தாதோடநேரிடும்: எனவே இலட்சியார்த்தத்தால் நேரிடாசென்பதருத்தாபத்தி பகுதிமுதல் விருதி

யிறுக் கிடந்த தத்துவ வடுக்குக ளனைத்துமறிவறியாமை யடுக்குகளாயின. என்னை ? "அறிவறியாமை யநேகவடுக்கே - மேலுங்கீழுமென்மனர்புலவர்" என்பதனுற்காண்க. (கூகு)

அ - கை

[அந்த வவித்தையே யானந்தமயகோசமெனவும், சூழ்த்தியவஸ்தை யெனவும், காரணசரீர மெனவுங்கூறி, இனிச் சூக்குமசரீர வாரோபம் வருமா றிக்கவியிற் கூறுகின்றார்.]

34. அழுக்கொடு பற்றுஞ்சீவர்க் கதுவேயா னந்தகோசம்
சூழ்த்திகா ரணசரீ ரஞ் சொன்னவிம் மட்டுமோகம்
முழுக்குணத் திரண்டால்வந்த மூலவாரோ பஞ்சொன்னேம்
வழுத்துசூக் குமவாரோப வழியுநீ மொழியக்கேளாய்

(இ-ள்.) அழுக்கொடு பற்றுஞ் சீவர்க் கதுவேயா னந்த கோசம், எ-து அழுக்காகிய வவித்தியாமயமாயுள்ள சீவர்களுக் கவ்வவித்தையேயா னந்தமயகோசமாம்:—சூழ்த்தி காரணசரீரம், எ து. சூழ்த்தியவத்தையுங்கார ணசரீரமுமாம்:—சொன்னவிம்மட்டு மோகமுமுழுக்குணத்திரண்டால்வந்த மூல வாரோபஞ் சொன்னேம், எ-து. கூறிய விதகாறும் மோகமயமானமுழுக் குண மென்னப்பட்ட சாத்துவித ராசதத்தால் விளைந்த காரண சரீரவத்தி யாசத்தைச் சொல்லினம்: —வழுத்துசூக்குமவாரோப வழியுநீமொழியக்கே ளாய், எ-து. யாவருஞ் சொல்லப்பட்ட சூக்குமசரீர வத்தியாச மார்க்கத்தை யும் யாங்கூற நீ கேட்பாயாக, எ-று

மூலப்பிரகிருதி, மகதத்துவம், அகங்காரதத்துவம், முக்குணம், மாயை, அவித்தை, ஈசன், சீவன் இவ்விருவர் காரணசரீரம், சூழ்த்தியவத்தை, இவ்வ வத்தைக்குரிய விபரீத நாமம். கோசம், என்பவைகளைக் கூறும்போதெல்லா மறவாதிருத்தற் கடிக்கடி யாங்காங்குக் கற்பிதத்தா லிவை சனித்தவென்று நினைப்பூட்டியவாறுபோன்று, இங்கும் மறவாதிருத்தற்குச் சூக்குமவாரோப வழியு நீ மொழியக்கேளாய் என்றார். மறக்கிலிந் நூற்பயன் சற்றும் வாய்க்கா தென்ப தருத்தாபத்தி. உத்தமம் வெளுப்பு நீலமென்னுங்கவியில் இராசத மழுக்கெனக் கூறியவாறே யிக்கவியிலு மழுக்கொடு பற்றுஞ் சீவர்க்கென்றார். (கூச)

அ - கை.

[சாத்துவித இராசத மென்னும் குணங்களின் கற்பிதத்தைக் கூறி யவாறுபோன்று, தாமதத்தையுமிரண்டு சத்திகளாக்கி யவற்றிற்குரிய பெயரினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

35. ஏமமா யாவி னோத வீசனு ளருளி னூலே
பூமலி யுபாதிக் கெல்லரம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்.

(இ-ள்.) ஏம மாயாவிநோத வீசனரருளினுலே,— எ-து. திரைச்சீலை போன்ற மாயையை விளையாட்டாகவுடைய பரமசிவத்தின் இருபையினுல்:— பூமலியுயிர்கட்கெல்லாம் போகசாதனமுண்டாக,— எ-து உலகில் மிக்குள்ள வுயிர்கட்கெலா மனுபோகத்திற்கையைந்த சாதனக்கருவிகளுண்டாகும்படி:— தாமதகுணமிரண்டு சத்தியாய்ப்பிரிந்துதோன்றும்,— எ-து மூக்குணங்களிற் கடைக்குணமாகிய தாமதகுணமானது இரண்டு சத்திகளாகப் பிரிந்து தோற்றும்:—வீமமா மூடலென்றும் விஷ்டமாந் தோற்றமென்றும்,— எ-து. பயகம்ப ஞதிகட் கிடமாயுள்ள வாவரணசத்தியென்றும், நானுவிதகாட்சிகளுக் கிடமா யுள்ள விக்ஷேபசத்தியென்றும், எ-று.

தாமதகுணம், ஆவரணம் விக்ஷேபமென் றிரண்டு சத்திகளாகப் பிளவு பட்டு நிற்குமென்றுரையிற்று. இங்ஙனமாதற்குத் தாமதகுணத்திற்கு வலியின் மையின், ஈசனு ரருளினுலேயெனவும் ; பூமிமுதலியவை பின்னருண்டாவ தாயினும், இப்போது காணப்பட்டுள்ள வுயிர்கட்கிடம் பூமியாதலாற் பூமலி யுயிர்கட்கெல்லாமெனவும், அபின்னமென்பதுதோன்ற விரண்டுசத்தியாய்ப் பிரிந்து தோன்றுமெனவுங் கூறினர். அறியாமையை மூடலென்றும், அறி வைத் தோற்றமென்றுங் கொள்க. (கஅ)

அ - கை.

[காரணதேகத்தையுமதற்குரிய அவஸ்தையாதி கற்பிதங்களையுங் கூறினது போன்று, இனிச் சூக்குமதேகத்தையுந் தூலதேகத்தையுங் கூறவேண்டு வதால், முந்திச் சூக்குமதேக வுற்பத்தி கூறப்புகுந்தாரிக்கவியில் விக்ஷேபசத்தியிலெழுஞ் சூக்குமபூதவுற்பத்தி வரலாறுகூறு கின்றார்.]

36 தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணில்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமிவ் வைந்து கொய்ய பூதங்க ளென்றும் பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தனுவுண் டாகும்

(இ-ள்.) தோற்றமாஞ் சத்திதன்னிற் சொல்லிய விண்ணும், எ-து: விக்ஷேபசத்தியில் ஞானவான்களால் வழங்கப்பட்டுவருகின்ற தன்மாத்திரை யென்னு மாகாயமுதித்தது:—விண்ணிற் காற்றதாங் காற்றிற் றீயாங் கனலி னீர் நீரின் மண்ணும், எ-து. அவ்வாகாயத்திற் காற்றும். அக்காற்றி லக்கி னியும், அவ்வக்கினியிற்சலமும், அச்சலத்தில்மண்ணு முதித்தன:—போற்று மிவ்வைந்து கொய்யபூதங்க ளென்றுபேராம்,— எ-து. மேலாகச் சொல்லப் பட்ட விந்தத் தன்மாத்திரைகளோதும் சூக்குமபூதமெனப் பெயர்பெறும்:— சாற்றுமற்றிவற்றிற் போகசாதனதனுவுண்டாகும்,—எ-து. இங்ஙனம் பெயர் பெறக்கிடந்த வந்தச்சூக்குமபூதத்தில் போகமு மதற்கையைந்த சாதனமாயுள்ள சூக்கும சரீரமுமுண்டாகும், எ-று.

பஞ்சீகரிக்கப்படாததா லபஞ்சீகிருத பஞ்சமகாபூத மெனவுமாம். தூல தேகந் தூலபூதத்தா லாயதென் றேற்பார், மனது தூலதேகமாகுமா ? ஆகா தவிடத் தஃதோர் தேகமன்றே ? அஃதெந்தப் பூதசையோகத்தா லாய வுடலென் றெண்ணுதலென்னை ? வாதமாதிமூன்று நோய்க்கு மாதாரந் தூல மென்றாற்போல, காமம், வெகுளி, மயக்கமென்று மூக்குற்றநோய்க்கு மாதா ரம் மானதமென்றோலாதலென்னை ? அம்மூன்றில் வதைவது தூலதேகம், இம் மூன்றில் வதைவது மனது; அஃதிஃதாமா ? இஃதஃதாமா ? இஃதென்ன விவேகம் ? இச்சாஞானப் புடைபெயர்ச்சிச்கு வினைமுதல் மானதம், கிரியை யென்னும் புடைபெயர்ச்சிக்கு வினைமுதல் தூலதேகம்; எங்ஙனமென்னில் வந்தான், போனான் என்பவைகளுக்கு வினைமுதல் தூலதேகம்; கேட்டேன், பார்த்தேன் என்பவைகளுக்கு வினைமுதல் ஞானேந்திரியம்; நினைத்தேன், மறந்தேன் என்பவைகளுக்கு வினைமுதல் மனது; அறிந்தேன், நியேஅன் என்பவைகளுக்கு வினைமுதல் சீவன். இங்ஙனமிருக்க மிச்சரிம்பிப்டானேன் ? ''சினைவினை சினையொடு முதலொடுஞ்செறியும்'' என்னுஞ் சூத்திரத்திலுள் ளவும்மை சினையொடு செறிதல்போல முதலொடு செறித லவ்வளவு சிறப்பன் றென்பதை யுணர்த்தநிற்றலி னிழிவுசிறப்பு இங்கே விண்ணுதியென்றது அறி கருவியாகிய ஞானேந்திரியங்கட்கும், அந்தக்கரணங்கட்கும் முதற்காரண்மா யிற்று. ஆகவே தூலதேகத்திற்கு முதற்காரணந் தூலபூதமெனப் பிரத்தியட் சமாயிற்று. இதையு மறுத்தல் குதர்க்கம். ''நயம்படவுரை'' என்பதை அறியார்போலும். மன முலவுதற்கிடஞ் சூக்குமபூசம்; தூல முலவுதற்கிடம் தூல பூசம். இவ்வனுபவ மிலாரிலரே யெங்கணும். இது திண்ணம். இரண் டும்மை வருவித்தது, சஅ - ம் கவியில் தூலதனுவும் போகமு முண்டாகவென் றதனால். (கூசு)

அ - கை.

[முக்குணமென்றவைகளே மும்மூன்றென்பது பாகமாக்கி முதற்குண மூன் றையுந் திரிமூர்த்திகளாகவும், இரண்டாங்குண மூன்றையுஞ் சீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாக்களாகவும் பிரித்து, மூன்றுங்குண மூன் றையுங் கரணேந்திரியம், பிராணாதிகன்மேந்திரியம், தனுவாதி தூலபூதங்களாக கூறப்புகுந்தார், இக்கவியில் முதற்குண கற்பிதங்களைக் கூறுகின்றார்.]

37. ஆதிமுக் குணமிப்பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லுற்ற கூறுணர் கருவியாகும்
ஓதிய பின்னை யைந்து முளம் புந்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே.

(இ-ள்.) ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்,—எ-து. தாமதமாகநின்ற சாத்துவிதமுதலிய மூன்று குணங்களிலு மிந்தச் சூக்கும பூதங்களனைத்துங் கூடியிருக்கும்:— கோதில்வெண்குணத்தி லுற்றகூறுணர் கருவியாகும், —எ - து. புனிதமான சாத்துவிதகுணத்தில் ஐந்துவிதமான பாக முணரப்பட்ட ஞானேந்திரியங்களாம்:— ஓதியபின்னை யைந்துமுளம் புந்தி

யிரண்டாம்,—எ-து. முன்னர்க்கூறிய மற்றப்பாகமாகிய வகக்கரணமைந்தும், மனம் புத்தி யெனவிரண்டாகத்தேறும்:— ஞானசாதனமாமிவ்வேழுஞ் சற்குணப்பிரிவினுலே,—எ-து. சாத்துவிதகுண சமஷ்டிவியஷ்டிப்பிரிவினு லிந்த வேழு மறிகருவியாம், எ-து.

கோதில்வெண் குணத்திலெனவும், இராசதகுணத்திலெனவு மிடப்பொருளாக்கியதால், அதிமுக்குணமென்பதை யிடப்பொருளாக்கினேம. கோதில் வெண் குணமென்றதனுல் சாத்துவிதமென்றும். ஓதியபின்னையைந்தென்றதனுல் முன்னை யைந்தென்று வருவித்துப் பின்னையவைந்தைச் சமஷ்டி யெனவும், முன்னையவைந்தை வியஷ்டியெனவும் பொருள்கொண்டாம. இங்கே யைந்து ஐந்தென்றது தன்மாத்திரைகளே. இவையனைத்துங் கட்டளைகளில் விரிவாகவிளங்கக் கூறியிருப்பதால் தாங்கொண்டகருத்தை விரித்துத் தெளிவிக்கச் சுருக்கியுரைத்தனர். இதுநிற்க; அந்தக்கரணங்களே யைந்தெனவும், நான்கெனவும், மூன்றெனவும், இரண்டெனவுந் தத்தமக்கியைந்தவாறு கூறுநிற்பார் போல் இவரும் இரண்டெனச் சுருக்கம்பற்றிக் கூறினர் கன்மசாதனமென்றிருப்பதுபற்றி ஞானசாதனமாமென்றார். இவையேழுந் தாமதத்திற் சாத்துவிதப் பிரிவென்பது குறிப்பு. (கூஎ)

அ - கை.

[இரண்டாங் குணகற்பிதங்களைக்கூறி யிங்ஙனமாயநிலையே சூக்கும தேகப்பிரபஞ்சமென விக்கவியிற் கூறுகின்றார்.]

38. இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவாயுக்க ளென்றும் பெருந்தொழிற் கன்ம மென்றும்
பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுரர்சுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம்,

(இ-ள்.) இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்,—எ-து. இராசதகுணத்தில் வெவ்வேறகப் பிரித்தெடுத்த கூறைந்தைந்தாவது:— பிராணவாயுக்களென்றும் பெருந்தொழிற்கன்மமென்றும் பராவிய பெயராம், எ-து. பிராணஞ்சிவாயுக்களெனவும், பாரித்ததொழிற்கியைந்த கன்மேந்திரியங்களெனவும், எவருமேற்கப்பரவிய பெயர்களே யுடையதாம்:— இந்தப்பதினேழு மிலிங்கதேகம்,—எ-து. இந்தப்பதினேழுதத்துவமுஞ் சூக்குமதேகமாம்;—(யாவர்க்கெனின்) சுராசுரர் நரர்விலங்காய்த் தோன்றியவுயிர்கட்கெல்லாம்—எ-து. தேவர், இராக்கதர், மனிதர், மிருகமாதியாகத் தோற்றிய வுயிர்களனைத்திற்கும், எ-று.

ஐந்துமைந்துமென்றது நிரனிறை. பிராணஞ்சிவாயுக்கள் சமஷ்டியெனவும், கன்மேந்திரியங்கள் வியஷ்டியெனவுமாம். சூக்குமதேகத்தைச் சிலரிருபத்தைந்து தத்துவமெனவும, சிலரிருபத்துநான்கெனவுங் கூறுநிற்பர். சத்த பரிசாதிவிடயமைந்து, சித்தமகங்காரமிரண்டு ஆகவேழையுஞ் சுருக்கிப்பதினேழென்றருளிநூலாசிரியர். (கூஏ)

அ - கை.

[இந்தச் சூக்குமதேகத்தினைச் சீவேஸ்வரர்களுக்கமையுங் கற்பஞ் நாமங்களை யிக்கவியிற் கூறுகின்றார்.]

39. இவ்வுடன் மருவுஞ் சீவர்க் கிலங்குதை சதனென் றாகு
மிவ்வுடன் மருவு மீசற் கிரணிய கருப்ப னாகும்
இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக் குமச ரீரம்
இவ்வுடற் கோச மூன்று மிதுகனு வவத்தை யாமே.

(இ-ள்.) இவ்வுடல் மருவுஞ் சீவற்கிலங்கு தைசதனென்றாகும், எ-து. இந்தச் சூக்குமவுடலை யானென்றபிமானிக்கு மவசரத்திற் சீவனுக்கு விளங்கா நின்ற தைசதனென்னும் பெயர்வரும்:—இவ்வுடல் மருவுமீசற் கிரணிய கருப்பனாகும், எ-து. இந்தச் சூக்கும சரீரத்தை யானென் றபிமானிக்கு மவசரத்தி லீசனுக் கிரணிய கருப்பனென்னும் பெயர்வரும்:—இவ்வுட லிரண்டு பேர்க் குமிலிங்க சூக்குமசரீரம், எ து இந்தச் சரீர மிவ்விரண்டுபேர்க்குஞ் சூக்கும சரீர மாம்:—இவ்வுடல் கோசமூன்று மிதுகனுவவத்தையாமே, எ-து. இவ்வுட லுக்குப் பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயமென்னுங் கோசமூன்றாகும்; இந்தவுடலே சொப்பனவத்தையாம். எ-று.

ஈசனுக்குச் சமட்டியுஞ், சீவனுக்கு வியட்டியும் என்பதுதோன்ற, இவ்வுடலிரண்டுபேர்க்கு மிலிங்கசூக்கும சரீரமெனவும், இவ்வுடலுக்கே மூன்று கோசமும், சொப்பனவத்தையு மென்பதுதோன்ற, இவ்வுடல் கோசமூன்று மிதுகனுவவத்தையாமே யெனவுங் கூறினார்.

(க-து.) இருவர்க்கு மபிமானநாமம், இன்னசரீரம், இன்னின்னகோசம், இன்னவவத்தையெனத் தெரிவித்தா ரென்பது. இவையெல்லாம் வந்ததற் கவசரம் விரிக்கிற்பெருகும்.

அ - கை.

[உயிர்களுக்குப்போக நுகர்தற்குச் சூக்குமதனுமாத்திரந் தூல தனுவன்றி யமையாமையின் தூலப் பிரபஞ்சமும் வேண்டுமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

40. சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினே மிப்பாற் றூலம்
ஆக்குமா றோபந் தானு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தனுவும்போ கமுமுண் டாகக்
காக்குமிவ் வீசன் பஞ்சீ காணங்கள் செய்தான் றானே.

(இ-ள்.) சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினேம், எ-து. இதுகாறுஞ் சூக்குமப் பிரபஞ்சத்தைப்பற்றிச் சொன்னேம்:—இப்பாற் றூலமாக்குமாறோ பந்தானு மடைவினின் மொழியக்கேளாய், எ-து இனித் தூலப் பிரபஞ்சத்தை யுண்டாக்கிய வத்தியாசத்தையுங் கிரமமாக யாங்கூறக்கேட்டி:—தாக்குமிவ்

வுயிர்க்குத் தூலதனுவும் போகமுமுண்டாக, எ-து. இன்பத்துன்பங்களிற்றுக் குறுகின்ற விவ்வுயிர்களுக்குத் தூலசரீரமும் போகமுமுண்டாகும்படி:—காக்குமிவ் வீசன்பஞ்சீ கரணங்கள் செய்தான்றானே, எ-து. எவ்வுயிர்களையுங் காத்தலையே யியல்பாகவுடைய விந்தச்சிவன் அபஞ்சீகிருதத்தைப் பஞ்சீகரித்தனன், எ-று.

சூக்குமசகமமென்றதனால் தூலமாக்கு மென்பதனைத் தூலப் பிரபஞ்சத்தையென்றும். உண்டாகிவன்னுஞ் செயவெனைச்சம் "பிறவுமேர்கும்பிற" வென்பதினாற் செய்தானென்னும் வினைமுற்றை யவாவியது. காக்குதலுயிர்க்குங் காக்குத லீசனுக்கு மியற்கையாதலிற் பிறவற்றே டொட்டா தொழிக. அபஞ்சீகிருத பஞ்சபூதத்தின் விகாரம் பஞ்சீகிருத பஞ்சமகா பூதமென்பது தோன்றப்; பஞ்சீகரணங்கள் செய்தான்றானே யென்றார். சூக்கும பூதத்திற் கித்தூலபூத மபேதகாரியமாதலிற் சோதனையி லிப்பூத மித்தை யாகின்றது; யாதினுலென் றுற்றுணர்வாரில்லை ; இல்லாததினு லதற்கு மூதற்காரணமில்லாமற்போயிற்றே ; இஃதெல்லா மனனஞ சற்றுமில்லாத குற்றம். என்னை, "தம்பிரா னருளிச் செய்த சவணமாத்திரத்தின்மட்டே, யிம்பரா ருலகந்தன்னில் யாவருமறிவதன்றி. யம்பொனே மனனஞ்தானு மறிபவரில்லையானுற், செம்பொனே சுவானுபூதி செப்பவேண்டுவது மூண்டோ" என்றார் தத்துவரா யர். முன்னர் சூக்குமவாரோபமென்றற்போல விங்கே தூலமாக்கு மாரோப மென்றது, மித்தையெனலே மறவாதிருக்க. மறத்த லியல்பென்னில் முயல்வா லன்றே மறத்தலும்; இது சொல்வாதம். நினைத்தலு மறத்தலுந் தன்னுலா தலி னியல்பன்று. இரண்டு காலத்துந்தா னிருத்தலினுனும், இவ்விரு புடை பெயர்ச்சிக்குந் தான் வினைமுதலாதலானும், தன்னையன்றி யிவ்விரு புடைபெ யர்ச்சியு மின்றுதலானும், தானிலையன்றுதலினுனும், இயற்கை செயற்கை யைப்பற்றித் தனியே வாதித்தல் மூடம். தானுகிய எழுவாய்விடாமை விவேகம்.

அ - கை.

[முன்னர் பஞ்சீகரணங்கள் செய்தானென்று கூறி யிக்கவி யிற் செய்தவகையை விளங்கக் கூறுகின்றார்.]

41 ஐந்தபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்ததன் பாதி விடுநா லொடுநா லுங்கூட்ட
வந்தன தூலபூத மகாபூத மவற்றினின்றும்
தந்தன நான்காந் தூல தனுவண்ட புவன போகம்.

(இ-ள்.) ஐந்து பூதமும் பத்தாக்கி யவைபாதி நந்நான்காக்கி, எ-து. அபஞ்சீகிருத பஞ்சபூத தன்மாத்திரைகளைப் பத்துப்பங்காக்கி முதற்கூறைந்தை விட்டுப் பிற்கூறைந்தையு நந்நான்காக்கி:—நந்ததம் பாதிவிட்டு நாலொடுநாலுங் கூட்ட, எ-து. மித்தையான தத்தஞ் சுயாம்ச பாதியைவிட்டு ஏனையநான்கு சுயாம்சத்தோடு பிற்பாதி நான்கையுங்கூட்ட:—வந்தன தூலபூதம், எ-து. தூலபூதங்களுண்டாயின:—மகாபூத மிவற்றினின்றுந் தந்தன நான்காந் தூல

தனுவண்ட புவனபோகம், எ-து, இந்தத் தூலமகா பூதங்களினின்றுந் தூலசரீ ரங்களும் சகலவண்டங்களும், அவற்றுளொன்றுகிய பூமியும், போகங்களு மாகிய நான்கு முண்டாயின, எ-று.

சுயாம்சமே கற்பிதாம்சமாகத் தோற்றலின் ஐந்துபூதமும் பத்தாக்கியென வும், அந்தக் கற்பிதாம்சமைந்துந் தத்தஞ் சுயாம்சத்தோடு கூடும்போது பிருதி விற் பிருதிவு, பிருதிவி லப்பு, பிருதிவிற் றேயு, பிருதிவில் வாயு, பிருதிவி லா காயம், எ-ம். அப்புவிற் பிருதிவு, அப்புவி லப்பு, அப்புவிற்றேயு, அப்புவில் வாயு, அப்புவி லாகாயம், எ-ம; இவ்வாறே மற்ற மூன்றையு மாக்க ஐயைந்திரு பத்தைந்தாம்; ஒவ்வொரு பூதத்தி லேந்தையு மீப்போசே யாராய்ச்சியிற் பிரத் தியட்சத்திற் காணலாம் பொய்யன்று. தத்தஞ் சுயாமச மிறப்பதா லதைத்தள் ள ஒவ்வொன்றும் நந்நான்காம். ஆதலினவைபாதி நந்நான்காக்கி எனவும்; ஒவ் வொரு பூதமைந்தனு னொவ்வொன்றுந் தத்தஞ் சுயாம்சத்தை யியல்பாகவே யகலாது, ஆதலினதைக் கொள்ளவேண்டுவ தின்றென்பார், நந்துதம்பாதிவிட் டெனவும்; ஏனைய நான்கினையும, மற்றச் சுயாம்ச நான்றோடு கலக்கத் தூல பூத முதிக்குமாதலால், நாலொடு நாலுங்கூட்ட வந்தனதூலபூத மெனவுங்கூறி னர். இதையுந் தத்துவக்கட்டளை பழுதறவிளக்கும்.

அ - கை.

[இந்தத் தூலதேகத்தினுற் சீவேசுவரர்களுக்கமையுங் கற்பனை நாமங்களை யிக்கவியிற் கூறுகின்றார்.]

42. தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவ னாகும்
தூலமே மருவு மீசன் சூழ்விராட் புருட னாகும்
தூலஞ்சாக் கிரவ வத்தை சொன்னதோ ரன்ன கோசம்
தூலகற் பனையீ தென்று தொகுத்தது மனத்திற்கொள்வாய்.

(இ-ள்.) தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவனாகும், எ-து. வியட்டியில் தூலதேகத்தைத் தானகமருவிய சீவனுக்கு அபிமானநாமமாகச் சொல் லப்படுவது விசுவனென்னும் பெயராம்:—தூலமே மருவுமீசன் சூழ்விராட் புருடனாகும், எ-து சமட்டியில் தூலதேகத்தைத் தானகமருவிய வீசனுக்கு அபிமானநாமம் எங்கு நிறைவான விராட்புருடனென்னும்பெயராம்:—தூலஞ் சாக்கிரவத்தை, எ-து. தூலதேகந் தானகத் தோற்று மவசரஞ் சாக்கிரா வஸ்தையாம்:—சொன்னதோரன்னகோசம், எ=து. ஐந்துகோசங்களிலித்தூல தேக மோரன்னமயகோசமாம்:—தூலகற்பனை யீதென்று தொகுத்தது மனத் திற்கொள்வாய், எ-து. காரணகற்பிதமும், சொப்பனகற்பிதமும்போல வித வும் தூலகற்பிதமென்று தொகுத்துக் கூறியதை மனதில் வைக்குகி, எ-று.

இருவருந் தூலதேகமா நின்றவவசரத்தி லபிமானி நாமமு மவஸ்தாநாம மும், இன்னவிதகோச நாமமுமாம். மீண்டும் நினைப்பூட்டக் கற்பனை யீதென் றது தொகுத்தது, மனத்திற்கொள்வா யென்றார். சிருஷ்டியைத் தொகை வகை, விரியென்பவற்றுள் வகை, விரியையேலாது தொகுத்தது; தானெடுத்

துக்கொண்ட தத்துவவிளக்கம், சந்தேகந்தெளிதலென்னு மிவற்றை வகை விரி யாக்கற்கு. உகபத்சிருஷ்டியையுங் கிரமசிருஷ்டியையுங் கூறினது, மெய்யென் பவர்களே மறுத்தற்கு. சகசீவர்களேப்போலப் பரத்தையு மித்தையெனக்கூறி யது; "அல்லேயல்லேயீதென வரூமறைகளு மன்மைச் சொல்லினுற் றுதித்தி ளேக்கு மிச்சந்தர நாடற்கு" எ-ம் ; "ஆணல்லன் பெண்ணல்ல னல்லாவலியு மல்லன், சாணலுமாகானுளனல்லனில்லனல்லன், பேணுங்காற்பேணு மூருவா கு மல்லனுமாம்" எ-ம் ; கூறுவதென்னே ? ஆதலிற் றகுமென வறிக. இல னென்னி லுளனென வரும்; உளனென்னி லிலனெனவரும்; இந்தத் தீராவழக் கைத் தவிர்ப்ப தெவர்க்கு மரித. இதை யெங்கணுங் காணலாம். வேதாந்தி போல் வழக்கறற் குடன்படாரேனேயர்.

விளக்கிருக்கு மிடத்தையும் விளக்கென்றற்போல அவத்தை நிகழும் சரீ ரத்தை, "அவத்தை" என்றார். மாயையிலும், அதன் காரியங்களிலும் மூன்று சரீரங்களும், பஞ்சகோசங்களும் உள. சுத்த சத்துவகுண சகிதமாயை ஈசுர னுடைய காரணசரீரம் : மலினசத்துவகுண சகித அவித்தைக்கூறு சீவனு டைய காரணசரீரம். மனம், புத்தி, பிராணபஞ்சகம், கருமேந்திரிய பஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம் என்னும் இப்பதினேழுதத்துவம் சீவனுடைய சூட் சுமசரீரம் சர்வ சீவர்களுடைய சூட்சுமசரீரங்களுங்கூடியே ஈசுரனுடைய சூட்சுமசரீரம். சம்பூர்ணஸ்தூலப்பிரமாண்டம் ஈசுரனுடைய தூலசரீரம். சீவர்களுடைய வியட்டி தூலசரீரம் பிரசித்தமாம்; இம் மூன்றுசரீரங்களிலே பஞ்சகோசங்களுள. காரணசரீரத்தை ஆனந்தமயகோசமென்பர். விஞ்ஞான மயம், மனோமயம், பிராணமயம் என்னும் மூன்று கோசங்களுஞ் சூட்சும சரீரத்திலடக்கம். ஞானேந்திரியங்களேந்தும, நிச்சயரூப அந்தக்கரண விருத்தி யாகிய புத்தியும் விஞ்ஞானமயகோசமெனம்படும். சங்கற்பவிகற்பரூப அந்தக் கரணவிருத்தியாகிய மனமும், ஞானேந்திரியமும் மனோமயகோசமாம். பிரா ணாதிவாயுக்களேந்தும், கருமேந்திரியங்களேந்தும் பிராணமயகோசமாம். தூல சரீரத்தை அன்னமயகோசமென்பர்; இவ்வாற்றால் மூன்று சரீரங்களிலே பஞ்ச கோசங்களும்உள. ஈசுரனுடைய சரீரத்தில் ஈசுரனுடைய கோசமும், சீவ னுடைய சரீரத்தில் சீவனுடைய கோசமும் உள. உறைக்குக்கோசமென்று நாமம் : உறையைப்போலப் பஞ்சகோசங்கள் ஆன்மாவின் சொரூபத்தை ஆச் சாதனஞ்செய்தலின், அன்னமயமுதலியவை கோசமென்று சொல்லப்பட்டன. அநேக மந்தகியுடைய புருடர்கள் பஞ்சகோசங்களாகிய அநான்மபதார்த்தங் களில் யாதானும் ஒன்றை ஆன்மாவாகக்கொண்டு மூக்கிய சாட்சியாகிய ஆன் மசொரூபத்தில் பராமுகமாகவே யிருக்கின்றனர் ; அங்ஙனமிருத்தற்கு அவை ஆன்மாவை ஆச்சாதித்திருத்தலே காரணமாமென்க.

ச-வது—விரோசனமதாநுசாரியரானபாமரர், தூலசரீரமான அன்னமய கோசத்தையே ஆன்மாவென்பர். ஏதனலெனின் ? யாதொன்றினிடத்து அகம் புத்தியுண்டாமோ ! அது ஆன்மாவாம் ; அவ்வகம்புத்தி தூலசரீரத்திலேயே உண்டாயிருக்கின்றது. நான் மநுஷியன், நான் பிராமணன் என்னுமிடத்து யாவர்க்கும் மநுடத்தன்மை, பிராமணத்தன்மை தூலசரீரத்திலேயே காணப்

படுகின்றது ; ஆகலின் தூலசரீரமே ஆன்மாவென்பதிற் சந்தேகமில்லை. அன்றியும், யாதொன்றில் முக்கியப்பிரீதியுண்டாமோ ! அது ஆன்மாவாம். ஸ்திரீ, புத்திரர், தனம், பசுமுதலியவை தூலசரீரத்திற்கு உபகாரமாமேல் அப்போதவைகளிற் பிரீதியுண்டாகின்றது ; உபகாரமில்லையெற் பிரீதியில்லை ! இவ்வாறு தூலசரீரத்திற்றானே முக்கியமான பிரீதியிருத்தலின் தூலசரீரமே ஆன்மாவாம் எனவும், அதனைவஸ்திர, பூஷண, அஞ்சன, மஞ்சன, நாநாவித போஜனாதிகளால் இனிதுநப்பேணுவதே பரமபுருஷார்த்தமாம் எனவுங் கூறுவர் ; இது அசுரசுவாமியான விரோசனனுடைய சித்தாந்தம்.

உ-வது—வேறேசிலர், தூலசரீரமே ஆன்மாவன்று: தூலசரீரத்தில் யாதொன்றிருப்பதாற் சீவனவியவகாரமும், யாதொன்றிலலாமற்போவதால் மரணவியவகாரமுமுண்டாமோ அதுவே ஆன்மா; அவ்வான்மா தூலசரீரத்தைப்பார்க்கிலும்வேறும் சீவன, மரணங்கள் இந்திரியங்களின் அதீனம். எவ்வளவுகாலஞ் சரீரத்தில் இந்திரியங்களியங்குமோ! அவ்வளவுகாலஞ்சீவனமுண்டு; இந்திரியங்கள் எப்போதில்லாமற்போமோ ! அப்போதே மரணமென்று சொல்லப்படுகின்றது. நான்பார்க்கிறேன், கேட்கிறேன் என்று அகம்புத்தியும் இந்திரியங்களிலுண்டாகிறது ; ஆதலால் இந்திரியங்களே ஆன்மாவென்பர்.

ஊ-வது—இரணியகர்ப்பவுபாசகர், பிராணனே ஆன்மாவென்பர். எதனாலெனின்? ஒருவர்கு மரணசமயமான மூர்ச்சை எப்போதுண்டாகின்றதோ அப்போது அவனுடைய சம்பந்திகளான புத்திராதிகள் பிராணசேடமிருந்தாற் சீவித்திருக்கிறதாகவும், அஃதில்லையாயின் மரணமாயினனென்றும் அறிகின்றனர்; அன்றியும், சரீரத்தில் நேத்திரேந்தியமில்லாமல் அந்தன்சரீரமும், சுரோத்திரேந்திரியமில்லாமற் செவிடன்சரீரமும், வாக்கிந்திரியமின்றி மூகன்சரீரமுமிருக்கின்றன. இந்திரியங்களும், அவற்றின் வியாபாரங்களுமின்றியும் சரீரம் நிலைத்திருக்கிறது. பிராணனின்றேல், அந்தக்கணமே மயானசமானமாக அமங்கலமாயும், பிறர்க்குப்பயங்கரமாயும் வீழ்ந்துவிடுகின்றது நான்பார்க்கிறேன், கேட்கிறேன் என்னும் ஞானத்தினலும் இந்திரியத்தினலும் வேறுகவே ஆன்மா சித்தித்திருக்கிறது. எப்படியெனின் ? நேத்திரசொரூபனன நான் பார்க்கிறேன், சிரவணசொரூபனன நான்கேட்கிறேன் என அறிவுண்டாமாயின் நேத்திராதி ரூபந்தான் அன்மாவென்று சித்திக்கும் ; அப்படிக்கின்றி நேத்திரமுடைய நான் பார்க்கிறேன், சுரோத்திரமுடைய நான் கேட்கிறேனென அறிவுண்டாவதால் இந்திரியத்தினும் ஆன்மா வேறுதான். அன்றியும், சுழுத்தியில் சர்வ இந்திரியங்களும் அபாவமாயிருந்தும் பிராணனுடைய இருப்பினல் சீவனவியவகார முண்டாகின்றதாகலின் சீவனமும், மரணமும் இந்திரியங்களுடைய அதீனமல்ல. தூல சரீரங்களினின்றும் பிராணவியோகத்தையே மரணமென்பராதலானும், சீவனமரணங்கள் பிராணனுடைய அதீனமேயாசலானும் அதுவே ஆன்மாவாமென்பர்.

எ-வது—வேறுசிலர், பிராணன் சடமாலின் கடம்போல அநான்மாவாம். பந்தமோட்சம் மனத்தின் அதீனம்; விடயத்தில் ஆசக்தியுள்ள மனம் பந்தத்திற்

கேது: விடயவாசனைவிட்டமனம் மோட்சத்திற்கேதுவாம். மனத்தின் சம்பந்தத்தாலேயே இந்திரியங்கள் ஞானத்திற்கேதுவாகின்றன; மனத்தின் சம்பந்தமின்றி இந்திரியங்களால் ஞானமுண்டாகமாட்டாது. ஆதலால் சர்வவியவகாரத்திற்கும் ஏது மனந்தான்; அதுவே ஆன்மாவாமென்பர்.

ரு-வது—க்ஷணிகவிஞ்ஞான வாதிகளானபௌத்தர், மனத்தின் வியாபாரம் புத்தியின் அதீனமாம். புத்தியின் ஆகாரமே மனமாகத் தோன்றுகின்றதாகலின், க்ஷணிகவிஞ்ஞான ரூபபுத்தியே ஆன்மாவாம்: மனமன்று. என்னை? சம்பூர்ணபதார்த்தங்களும் விஞ்ஞானாகாரமே; அவ்விஞ்ஞானம பிரகாசரூபமாம். க்ஷணத்துக்கு க்ஷணம் அவ்விஞ்ஞானம நாசமாம: பூர்வவிஞ்ஞானத்திற்குச் சமானமாக அந்தியவிஞ்ஞான முண்டாவதால் பூர்வவிஞ்ஞானம நாசமாம்; அப்படியே மூன்றும் விஞ்ஞானத்தினுற்பத்தியால் இரண்டாம விஞ்ஞானமும், நான்காம விஞ்ஞானத்தினுற்பத்தியால் மூன்றும் விஞ்ஞானமும் நாசமாம்; இவ்வாறு நதியின் பிரவாகம்போல விஞ்ஞானதாரை யுண்டாகாநின்றது; அவ்விஞ்ஞானசாரை இருவகைத்தாம். ஒன்று ஆலயவிஞ்ஞானசாரை: மற்றொன்று பிரவிர்த்திவிஞ்ஞானசாரை அகம், அகம் எனும் விஞ்ஞானதாரை ஆலயவிஞ்ஞானதாரை; அதுவே புத்தி. இதுகடம், இதுசரீரம் என்னும் விஞ்ஞானசாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரை. ஆலயவிஞ்ஞானதாரையினின்றும்! பிரவிர்த்தி விஞ்ஞானசாரை உண்டாம். மனத்தின்சொரூபமும் பிரவிர்த்தி விஞ்ஞானசாரையில் உள்ளது; ஆகலின் அது ஆலயவிஞ்ஞானசாரைரூபமான புத்தியின் காரியமாம்; அப்புத்தியே ஆன்மாவாம். ஆலயவிஞ்ஞானதாரையில் பிரவிர்த்தி விஞ்ஞானதாரையின் பாதசிந்தனத்தால் உளதாகும் நிர்விசேஷ க்ஷணிகவிஞ்ஞானதாரையின் ஸ்திதியே மோட்சமாமென்று இவ்வாறு புத்தியையே க்ஷணிகரூபமாகவும், சுயம்பிரகாசரூபமாகவுங் கற்பனைசெய்து அதனையே ஆன்மாவென்பர்.

சு-வது—பூர்வமீமாஞ்சையின் வார்த்திககாரரான பட்டர், மின்னலைப் போன்ற க்ஷணிகரூபம் ஆன்மாவன்று: ஆன்மா சொரூபம்; அது சடரூபமும், சேதனரூபமுமாயிருக்கும். எதனலெனின் ? சுழுத்தியினின்றும் விழித்த புருடன் நான் சடனாக நித்திரைபண்ணினே னென்பதால் ஆன்மா சடரூபமாம்; ஆயினும், விழித்தவுடன் ஸ்மிருதி யுண்டாகின்றது. அஞ்ஞானத்தின் ஸ்மிருதியுண்டாகமாட்டாது. ஆன்மசொரூபத்தினும் வேறாகசுழுத்தியில் ஞானத்திற்கு வேறுசாதனங்களில்லை. ஸ்மிருதிக்கு ஏதுவாகச் சுழுத்தியிலும் ஞானமுண்டு; அந்தஞானம் ஆன்மாவின் சொரூபமாகவே இருக்கின்றது ; இப்படிச் சடரூபமாகவும், ஞானரூபமாகவுமிருத்தலால் ஆன்மாமின்மினிபோலப் பிரகாச, அப்பிரகாசரூபமாமென்பர்; இப்படிப்பிரகாச, அப்பிரகாச ரூபமாகவுள்ளது ஆனந்தமயகோசமாம். எதனலெனின் ? சுழுத்தியிலுள்ள சேதனத்தின் ஆபாசசகித அஞ்ஞானமே ஆநந்தமயகோசமென்பர் ; அங்கே ஆபாசனே பிரகாசரூபம் : அஞ்ஞானம் அப்பிரகாசரூபம்; இதனல் பட்டருடையமதத்தில் ஆநந்தமயகோசமே ஆன்மாவாம்

எ-வது—சூனியவாதியானபௌத்தர், ஏகமான ஆன்மாவைப் பிரகாசரூபமாகவும், அப்பிரகாசரூபமாகவுஞ் சொல்லுதல் கூடாது. மின்மினியினுடைய ஒருகூறுபிரகாசரூபம், மற்றொரு கூறு அப்பிரகாசரூபம்; அதைப்போலக் கூறுபாடில்லாத ஆன்மாவின்கண்ணே உபயரூபஞ்சொல்லுதல் அசங்கதம்; உபயரூபசித்தியின்பொருட்டு ஆன்மாவைக் கூறுபாடுடையதாகவே ஒப்பவேண்டும். கூறுபாடுடையபதார்த்தங்களான கடாதிகள் உற்பத்திநாசமுடையனவாம்; அப்படியே ஆன்மாவுங் கூறுபாடுடையதாமேல் உற்பத்திநாசமுடையதாகவே ஒப்பவேண்டும். உற்பத்தி, நாசமுடையபதார்த்தம் யாது அது உற்பத்திக்குமுன்னும், நாசத்திற்குப்பின்னும்அசத்தாம்; யாது ஆதியந்தத்தில் அசத்தாமோ! அது மத்தியிலுஞ்சத்தாகமாட்டாது: அசத்தேயாம். ஆதலால், ஆன்மா அசத்துரூபமாம்; அப்படியே ஆன்மாவிற்குவேறான சம்பூர்ணபதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவும், அசத்துரூபமுமாம்; இவ்வாற்றால் ஆன்மா, அநான்மாக்களான சகலவத்துக்களும் அசத்துரூபமேயாவதால் சூன்யமே பரமதத்துவமாமென்பர்; இது சூன்யவாதிகளான மாத்தியமிகபௌத்தருடையமதம்; அவர்களும் அஞ்ஞானரூபமான ஆநந்தமயகோசத்தைப் பிரதிபாதனஞ் செய்தனர்.

அ-வது—பூருவமீமாஞ்சையின் ஏகதேசியான பிரபாகரரும், நையாயிகரும் ஆன்மாச்சூன்யரூபமன்று: எவனொருவன் ஆன்மாவைச் சூன்யரூபமாக ஒப்புவனே! அவனை நீ சூன்யரூபத்தை அநுபவித்தனையா? என்றுவினவுவாம் சூன்யத்தை அநுபவிக்கவில்லையெனின்? அப்போது சூன்யமில்லையென்றுசித்தித்தது. சூன்யத்தை அநுபவித்தேனென்பின்? யாவன் சூன்யத்தை அநுபவித்தனனே? அவ்வான்மாச் சூன்யத்தினும் விலட்சணமென்றுசித்தித்தது. ஆகலின், சூன்யத்தின் விலட்சணமாய ஆன்மாவுளது; அதன்கண் மனத்தின் சையோகத்தால் ஞானமுண்டாகின்றது. ஞானகுணத்தினால் ஆன்மாச்சேதனமென்றுசொல்லப்படும். சொரூபமாக ஆன்மாச்சடமாம்; அப்படியே சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம்முதலியகுணங்கள் ஆன்மாவின்கணுண்டென்பர். அவர்கள்மதத்திலும ஆநந்தமயகோசமே ஆன்மாவாம். விஞ்ஞானமயகோசத்திலுள்ள புத்தியை ஆன்மாவினுடைய ஞானகுணமென்பர். என்னை? ஆநந்தமயகோசத்தில், சேதனங்கூடமாயிருப்பதால் அது விவேகமின்மையர்க்கு விளங்காது; ஆதலால் பிரபாகரும், நையாயிகரும் ஆன்மாவைச் சுழுத்தியில் ஞானமின்மையதாக ஒப்பிச் சொரூபமாகச் சடமென்பர். இதனால், ஆநந்தமயகோசத்திலேயே அவர்கட்கு ஆன்மப்பிராந்தியிருக்கின்றது. நித்தியஞானத்தைச் சீவனிடத்து ஒப்பவில்லை: அநித்தியஞானத்தைஒப்பினர்; அவ்வநித்தியஞானம் சித்தாந்தத்தில் அந்தக்கரணவிருத்தியாகிய புத்திரூபமாம்; ஆகலின், அவர்கள் மதமும் நன்றன்று. என்னை? ஞானத்திற்குவேறான கடாதிசடவத்துக்கள் அநித்தியங்களாம்; அப்படியே ஆன்மாவும் ஞானரூபமன்றெனில் கடாதிகளைப்போலச்சடமாவதால் அநித்தியமாம்; ஆகவே, மோட்சநிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம். இவ்வாறு வேதாந்தவாக்கியங்களில் விசுவாசமின்மையரான பகிர்முகமுடைய அநேகர் பஞ்சகோசங்களில்

யாதானும் ஒவ்வொன்றை ஆன்மாவாக ஒப்பி மூக்கிய ஆன்மசொரூபமான சாட்சியை ஒப்பாதிழக்கின்றனர்; இங்ஙனம் ஆன்மசொரூபந்தெரிய ஒட்டாமல் மறைத்திருத்தல்பற்றி அந்தமயமுதலியவை கோசமெண்பட்டன.

சீவனுடைய பஞ்சகோசங்கள், சீவனுடைய யதார்த்தசொரூபமான சாட்சியை எப்படி ஆச்சாதனஞ் செயதிருக்கின்றனவோ! அப்படியே ஈசுரனுடைய சமட்டி பஞ்சகோசங்கள் ஈசுரனுடைய யதார்த்தசொரூபத்தை ஆச்சாதனஞ் செய்திருக்கின்றன. எதனலெனின்? ஈசுரனுடைய யதார்த்தசொரூபம் தற்பதத்தினிலட்சியமாம்; அதனைவிடுத்துச் சிலர் மாயாரூப ஆநந்தமயகோசவிசிட்டனென்னுந் தற்பதவாச்சியமாகிய அந்தரியாமியையே பரமதத்துவமென்பர். அப்படியே இரணியகர்ப்பன், வைசுவாநரன், விஷ்ணு, பிரமன், சிவன், கணேசன், தேவி, சூரியன்முதல் அசி, குந்தாலம், அரசு, எருக்கு, மூங்கில் பரியந்தமான பதார்த்தங்களில் பரமான்மாவென்னும் பிராந்தியை அடைந்துளர். சர்வபதார்த்தங்களிலும் லட்சியபாகம் பரமான்மாவினும் பின்னமில்லை; அங்ஙனமிருப்பினும் அவ்வவ்வுபாதி சகிதங்களைப் பரமான்மாவாக ஒப்பியிருப்பது அவர்களது பிராந்தியேயாம்; இவ்வாறு பஞ்சகோசங்களால் ஆவிருதமான சீவேசுரருடைய பரமார்த்தசொரூபத்தினின்றும் பராமுகமாய்த் தேகாதிகளில் ஆன்மப்பிராந்தி யுடையராய்ப் புண்ணிய பாபகர்மங்களைச் செய்கின்றனர். அந்தரியாமிமுதல் மூங்கில் பரியந்தமான ஒவ்வொன்றையுமே ஈசுரரூபமாகக் கருதி ஆராதனஞ்செய்து சுகத்தையிச்சிக்கின்றனர்; அவர்கள் ஆராதிக்கும் உபாதியினுடைய தாரதம்மியத்துக்குத் தக்கபயனும் அவைகளால் அவர்கட்கு உளதாம்; ஆயினும் பிரமஞானத்தினலன்றி மோட்சமுள்தாகாது. மோட்சவிச்சையுடையோர் சீவேசுரருடைய சொரூபத்தைப் பஞ்சகோசத்தினின்றும் வேறுபிரித்தறியக்கடவர்கள். மாயாகாரியங்களை விஸ்தாரமாக நிரூபணஞ்செய்யப்புகில் கோடி பிரமருடைய ஆயுளாலும் அந்தமாகாவென்று வான்மீகி பகவான் அநேக இதிகாசங்களால் வாசிட்டத்தில் நிரூபித்திருப்பதால், "தொகுத்தது மனத்திற் கொள்வாயி"—என்றார்.

அ - கை.

[இருவர்க்கு முபாதியுண்டாயிற் பேதந்தெரிவ தெங்ஙன் மென்றற்கு விடை யிக்கவியிற் கூறுகின்றார்.]

43. சீரிய வீச னுர்க்குஞ் சீவர்க்கு முபாதி யொன்றேல்
ஆரிய குருவே பேத மறிவதெப் படியென் றக்கால்
காரிய வுபாதி சீவன் காரண வுபாதி யீசன்
வீரிய மிகுச மட்டி வியட்டியாற் பேத மாமே.

(இ-ள்.) சீரியவீசனுர்க்குஞ் சீவற்கு முபாதி யொன்றே லாரிய குருவே பேத மறிவதெப்படி யென்றக்கால், எ-து. மேலான வீசனுக்குஞ் சீவனுக்கு முபாதியொன்றனுற் பேதந்தெரிவ தெங்ஙனமாஞ்சிறந்த குருமூர்த்தியேயெனவினவில்:—காரியவுபாதிசீவன் காரணவுபாதியீசன், எ-து. காரியவுபாதியாநிற்

பவன் சீவனெனவும், காரணவுபாதியாநிற்பவ னீசனெனவுமாம்:—(இஃதன் றியும்) வீரியமிகுசமட்டி வியட்டியார்ற் பேதமாமே, எ-து. இழிவுறுத சமட்டி வியட்டியாலும் பேதமாம். எ-று.

காரணசரீரத்தில் மாயைகாரணம், அவித்தைகாரியம். சூக்கும சரீரத்தில் அபஞ்சீகிருத பஞ்சபூதங் காரணம், மனம் காரியம். ஸ்தூலசரீரத்தில் பஞ்சீகிருத பஞ்சபூதங் காரணம், தூலதேகங் காரியம்; ஒன்றுக்கொன்று பாதான வுபாதேயமாயிருத்தலின் மறுத்தற்கிடமின்று; இஃதெவரு மேற்றற்பாலதே.

அ - கை.

[முன்னர் சமட்டி வியட்டியென்றார், அதனை யிக்கவியில்திஷ்டாந்த தாஷ்டாந்த முகத்தால் விளக்குகின்றார்.]

44. மரங்கள்போல் வியட்டி பேதம் வனமெனல் சமட்டி பேதம்
சரங்கடா வரங்கள் பேதக் தனியுடல் வியட்டி யென்பார்
பரம்பிய வெல்லாங் கூட்டிப் பார்ப்பது சமட்டி யென்பார்
இரங்கிய பல சீவர்க்கு மீசற்கும் பேத மீதே.

(இ-ள்.) மரங்கள்போல் வியட்டிபேதம் வனமெனல் சமட்டிபேதம்-எ-து தனித்தனி மரங்களைப்போல வியஷ்டிபேதமும், தோப்பென்பதுபோற் சமஷ்டி பேதமுமாம்:—(இதுபோல), சரங்கடாபரங்கள்பேதந் தனியுடல்வியட்டியென் பார்,—எ-து. சரமசரமென்னு முயிர்களின்பேதத்தை விளக்கநிற்பது தனித் தனியுடல்களாம், அவ்வுடல்களை யறிவுடையோர் வியஷ்டியெனக்கூறுவர்:— பரம்பியவெல்லாங் கூட்டிப்பார்ப்பது சமஷ்டியென்பார்,—எ-து. இங்ஙனந் தனித்தனி யெங்ணும்பரவிய சமஸ்தபௌதிகங்களை யெல்லா மேகமாக்கிப் பார்ப்பது சமஷ்டியென் றறிவுடையோர் கூறுவர்:— இரங்கிய பலசீவர்க்கு மீசற்கும் பேதமீதே,—எ-து. இரக்கமுறத்தக்க சமஸ்தசீவர்களுக்கும், ஈஸ்வரனுக்கும் வந்த வுபாதிபேதமிதுவாம், எ-று.

எல்லாத் தூலதேகங்களு மவனுக்கோர் தூலதேகமும், எல்லாச்சூக்கும தேகங்களு மவனுக்கோர் சூக்குமதேகமும், எல்லாக்காரணதேகமு மவனுக்கோர் காரணதேகமுமாம். இது சமஷ்டிவியஷ்டி பேதத்தின்தன்மை. காரண காரியத்தானும், சமஷ்டிவியஷ்டியானும் விளங்குதல், பேதமேயாதலி னிரு மேகமாகாரெனத் தாபிக்கப்புகுந்தது பின்னேகமாக்கற்கு.

(க-நு.) இவ்வேதுக்களா லிருவரு மேகமாகாரென்பது இருவருங் கற்பித சுகிதராதலினென்க. (சச)

பூர்வம் அத்தியந்தம் அஞ்ஞானமாவுள்ள பதார்த்தத்தின் ஞானம் சொப்பனத்திலுண்டாதலில்லை. சாக்கிரத்தில் எதனுடைய அநுபவஞானமுள்ளதோ! அதனுடைய ஸ்மிருதிதான் சொப்பனத்திலுமுண்டாகின்றது; அங்ஙனம் சொப்பனத்திலுண்டாகும் ஸ்மிருதிஞானத்தின் விடயமான சாத்திரபதார்த்தம் சத்தியமாகலின், சொப்பனத்திலும் அதனது ஸ்மிருதிஞானஞ்சத்தியமாம்;

ஆகவே, சொப்பன திருஷ்டாந்தத்தாற் சாக்கிரபதார்த்தங்களே மித்தையென்னல் பொருந்தாது.

அல்லது, சொப்பனவஸ்தையிற் றூலசரீரத்தை விடுத்துலிங்கசரீரம் வாகியத்திற்சென்று சத்தியமாயுள்ள கிரி, சமுத்திராதிகளைப் பார்க்கின்றதாகலின் சொப்பனஞானமும், அதன்விடயமான பதார்த்தங்களுஞ் சத்தியமே : மித்தையன்றும்; ஆகவே, சொப்பனம்போலும் சாக்கிரபிரபஞ்சந் துச்சமென்னல் கூடுமாறெங்ஙனே எனின் ?

உந்தாம்—அந்த யானை என்றுண்டாகின்ற பூருவகாலசம்பந்திகளான பதார்த்தங்களின்ஞானம் ஸ்மிருதியாம். எதிரே நிற்கின்றயானையைக்கண்டு இது யானை என்றுண்டாகின்ற ஞானம் ஸ்மிருதியல்ல : பிரத்தியட்சமாம். சொப்பனத்தில் இது யானை, இது பருவதம், இது நதி என்றிவ்வாறான ஞானமுண்டாகின்றதாகலின் அதுசாக்கிரத்திற்கண்ட பதார்த்தங்களினுடைய ஸ்மிருதியல்ல: பிரத்தியட்சஞானமேயாம். சாக்கிரத்தில் அறியப்படாத பதார்த்தங்களின்ஞானம் சொப்பனத்திலுண்டாகவிலலை : அறியப்பட்ட பதார்த்தங்களின்ஞானமே உண்டாகின்றதாகலின், சொப்பனத்தின் ஞானம்ஸ்மிருதிரூபமேயென்னில் அது கூடாது.

ஏனெனில் ? பிரத்தியட்சஞானம் இருவகைத்து ; ஒன்று அபிஞ்ஞாரூபப் பிரத்தியட்சம் : மற்றொன்று பிரத்தியபிஞ்ஞாரூபப்பிரத்தியட்சமாம் இந்திரியசம்பந்தத்தாற் றோன்றும்ஞானம் அபிஞ்ஞாபிரத்தியட்சம் ; அது நேத்திரசம்பந்தத்தால் இது யானையென்றுதோன்றும் ஞானம் பூர்வஞானசம்ஸ்காரத்தாலும், இந்திரிய சம்பந்தத்தாலுந் தோன்றும்ஞான்ம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியட்சமாம், அது பூர்வங்கண்டயானை எதிரேவரில் அந்தயானை இந்தயானை என்றுதோன்றும் ஞானம் ; அங்கே பூர்வங்கண்ட யானையின்ஞான சம்ஸ்காரமும், யானையோடு நேத்திரசம்பந்தமும் பிரத்திரடபிஞ்ஞாபிரத்தியட்சத்திற் கேதுவாம். ஆகலால், சம்ஸ்காரஜந்நியஞானம் *ஸ்மிருதிரூபமே என்னும் நியமமில்லை. இந்திரியசம்பந்தமின்றிக் கேவலம் சம்ஸ்காரஜந்நியஞான முண்டாமாயின், அதுவே ஸ்மிருதிஞானமெனப்படும் சொப்பனத்தில் யானைமுதலியவைகளின்ஞானம் கேவலம் சம்ஸ்காரஜந்நியமல்ல : நித்திராரூபதோஷஜந்நியமாம். சொப்பனத்தில் யானைமுதலியவைகளோட்போலக் கற்பித இந்திரியங்களுமுண்டு; ஆகலின், இந்திரியஜந்நியமுமாம் சொப்பன பதார்த்தங்கள் சாட்சிபாசியமேயல்லாமல் இந்திரியஜந்நிய ஞானவிடயமல்ல ; ஆயினும், அவிவேகியினுடைய திருஷ்டியினால் சொப்பனஞானம் இந்திரியஜந்நியமென்று சொல்லப்படுகிறது. நித்திரையினின்றும் விழித்தபுருடன் நான் சொப்பனத்தில் யானை முதலியவைகளைக் கண்டேனென்று சொல்கின்றனன் ; ஆதலால் சொப்பனத்திற்றோன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தங்களின் ஸ்மிருதியல்ல. யானைமுதலியவைகளின் ஸ்மிருதியே உண்டாமாயின், விழித்து நான் சொப்பனத்தில்யானைமுதலியவைகளை ஸ்மரித்துக்கொண்டிருந்தேனென்று சொல்லவேண்டும் ; அப்படி ஒருவருஞ்சொல்லவில்லை. ஆகலால், சொப்பனத்திற்

* ஸ்மிருதி = சம்ஸ்காரஜந்நியஞானம்,

றேன்றும் ஞானம் சாக்கிரபதார்த்தத்தின் ஸ்மிருதியல்ல. சாக்கிரத்திற்கண்ட கேட்டபதார்த்தங்களின் ஞானமேசொப்பனத்திற் றேன்றுமென்னு நியம மில்லை ; சாக்கிரத்தில் அநுஞாதபதார்த்தங்களினுடையஞானமும் சொப்பனத் திற்றேன்றும். தான் கண்டதாகவேனுங் கேட்டதாகவேனுமில்லாத பதார்த் தங்களும் ஒவ்வொருகால்சொப்பனத்திற் காணப்படுகின்றன ; ஆகலின், அவை களின் ஞானம் ஸ்மிருதியல்ல. ஆயினும், இந்தச்சன்மத்தின் பதார்தத ஞான சம்ஸ்காரமே ஸ்மிருதிக்கு ஏதுவாமென்னும் நியமமில்லை : அந்நியஜன்மஞான ஜந்ய சம்ஸ்காரத்தினாலும் ஸ்மிருதி உண்டாகாநிற்கும். என்னை ? அநுகூல ஞானத்தினால் பிரவிர்த்தி யுண்டாகின்றது : அநுகூல ஞானமின்றிப்பிரவிர்த்தி யுண்டாவதில்லை. பாலகனுக்கு ஸ்தநபாநத்தில் பிரதமப் பிரவிர்த்தி, யுண்டா வதற்குக்காரணம் தான் அந்நியஜன்மங்களில் ஸ்தநபாநம் தனக்கநுகூலமென் றநுபவித்துள்ள சம்ஸ்காரமாம் ; ஆகலின், ஜன்மாந்தரத்தின் ஞானசம்ஸ் காரத்தினாலும் ஸ்மிருதியுண்டாகாநிற்கும். அப்படியே இந்தஜன்மத்தில் அநு ஞாதபதார்த்தத்தின் ஸ்மிருதியும் அந்நியஜன்மத்திலுளதாகிய ஞானசம்ஸ்காரத் தினால் சொப்பனத்திலுண்டாகக்கூடும். ஆயினும், சாக்கிரத்தில்யாதொருஜன் மத்திலும் அநுபவியாதிருக்கும் பதார்த்தமும் சொப்பனத்திற் றேன்றுகின் றது ; அது தனதுசிரச்சேதனததைத் தான் நேத்திரத்தால் சொப்பனத்திற் பார்க்கின்றது ; ஆதலால் சொப்பனத்திற்றேன்றும் ஞானம் சாக்கிரபதார்த் தங்களின் ஞானசம்ஸ்காரத்தினாற்றேன்றும் ஸ்மிருதியல்லவென்று சொப்ப னத்திற்கு ஸ்மிருதிரூபகண்டனத்தில் அநேகயுக்தி கிரந்தகாரர் கூறியுளர்.

தூலசரீரத்தினின்றும் இலிங்கசரீரமானது வெளிப்பட்டுவாகியத்திற் சத் தியமாயுள்ள கிரி, சமுத்திரமுதலியவற்றைப்பார்க்கின்றதெனின் ? இலிங்கசரீ ரம் வெளிப்படுமாயின், மரணுவத்தையைப்போலத்தூலசரீரம் பயங்கரரூபமா கத்தோற்றவேண்டும்; சொப்பனவத்தையில் அப்படித்தோற்றாமல் சாக்கிரத் திற்போல மங்களரூபமாகவேதோற்றுநிற்கிறது ; ஆதலால், தூலசரீத்தைவிட டு லிங்கசரீரம் வெளியேபோகவில்லை ; அந்தக்கரணத்தின் இயக்கம் பிராணனு டைய அதீனமாதலால் பிராணன் வெளிப்படாமல் அந்தக்கரணமும், ஞானேந் திரியமும் வாகியத்திற்செல்லாவாம். சொப்பனவத்தையில் தூலசரீரம் பிராண னோடு கூடத்தோற்றுவதால், இலிங்கசரீரம் வாகியத்திற்சென்று சத்தியமா யுள்ள பதார்த்தங்களைச் சொப்பனத்திற் பார்க்கின்றதென்பது கூடாது. அன்றி யும், ஓர் புருடன்சொப்பனத்திற் றன்சம்பந்தியோடுகூடி ஓர் வியவகாரத்தைச் செய்ததாகக்கண்டு விழித்துப் பின் அச்சம்பந்தியைத் தான் கண்டபோது இராத்திரி நாம் இருவருங்கூடி இவ்விதவியவகாரத்தைப்பண்ணினோமென்று அவன்சொல்லவில்லை பூருவபட்சரீரியினால் வாகியத்தில்வெளிப்பட்டுச்சம்பந்தி யோடுகூடிச் சத்தியமாக வியவகரித்தான் ; அந்தச்சம்பந்தியோடுகூடின ஞான மும், வியவகாரஞானமும் சம்பந்திக்கும் உளவாதல்வேண்டும்: எப்போது அவன் கூடினானென்னை ? அப்போது அவன் சொல்லவும்வேண்டும். சித்தாந்தத்தில் சம்பந்தியும், அவனுடைய கூட்டரவுமுதலியவும் உள்ளேயே கற்பிதமாம். அன்றியும், வாகியத்திற்சென்று சத்தியமான பதார்த்தத்தைப் பார்த்ததுண் டானால், இராத்திரியில் நித்திரைசெய்தபுருடன் சிதம்பரத்தில் மத்தியானசூரிய

ஞல் வீடுகள் தபிக்கப்படுகிறதாகவும், சிதம்பரத்திற்குவடக்கே மதுரை இருப் பதாகவும், மதுரைக்குத்தெற்கேசிதம்பரம் இருப்பதாகவுங் காண்கின்றனன் ; அங்கே இராத்திரியில் மத்தியானசூரியனும், சிதம்பரத்திற்குவடக்கே மதுரை யும், மதுரைக்குத்தெற்கே சிதம்பரமும் இல்லை ; ஆகலானும், சொப்பனத்திற் சத்தியபதார்த்தங்களைப் பார்க்கப்படுகிற தென்பது கூடாது.

பருவதம், சமுத்திரம், நதி, வனம், கிராமம், புரி, சூரியன், சந்திரன்மு தலிய எவ்வளவு பதார்த்தங்கள் சொப்பனத்திற் காணப்படுகின்றனவோ! அவை நூதனமாகவே உண்டாகின்றன. சொப்பனபதார்த்தங்களில் நேத்திராதிகளின் விடயத்தன்மை பாகமாகின்றது. வியாவகாரிகநேத்திராதிகளின் விடயத்தன்மை சொப்பனத்தில் பிராதிபாசிக பதார்த்தங்களிற்பொருந்தாது. எதனலெனின் ? சமசத்தையுடைய பதார்த்தங்களே தம்மிற் சாதகபாதகங்களாம் ; அதனல் சரீ ரத்தின்கண்ணிருக்கும் வியாவகாரிகநேத்திராதிகளும். சொப்பனபதார்த்தங் களும் ஒன்றற்கொன்று விஷமசத்தையாவதால் அந் நேத்திராதிகளுக்குச் சொப்பனத்திற்கு பருவதாதிகள் விடயமாகு மென்கைபொருந்தாது. அன்றி யும், வியாவகாரிக இந்திரியங்கள் தத்தங் கோளகைகளைவிட்டுக் காரியஞ்செய் வதில் சமர்த்தமாகா. சொப்பனவத்தையில் அஸ்த, பாத, வாக்குகளின் கோள கைகள் நிச்சலமாக அந்நியனுக்குக் காணப்படுகின்றன : அஸ்தத்தில் ஓர் திர வியத்தை எடுத்துக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுகின்றான் ; ஆகலின், சொப்பனத் தில் இந்திரியங்களின் உற்பத்தி அவசியம் ஒப்பவேண்டும். அப்படியே சுகதுக்க மும், அவற்றின்ஞானமும், சுகதுக்கங்களின் ஆதிரமான பிரமாதாவும், சொப் பனத்தின்கட் டோற்றுகின்றன ; இல்லாதபதார்த்தங்களின் தோற்றம் உண் டாகமாட்டாது ; அதனல் சகலதிரிபுடிகளும் அந்தச் சொப்பத்தின்கண்ணே உற்பத்தியாகின்றன. எவ்வளவுபிரம ஞானமுண்டாமோ ! அவைகளின் விட யங்கண்முழுதும் அநிர்வசனீயமாக உற்பன்னமாகின்றன. விடயமின்றி யா தொருஞானமும் உண்டாகாதென்பதே அநிர்வசனீயக்கியாதியின் சித்தாந்த மாம். எவ்வளவு சொப்பனபதார்த்தங்கள் பிரதீதியாகின்றனவோ ! அவைகளி னுற்பத்தி அங்கேகிக்கின் சாக்கிரபதார்த்தங்களைப்போலச் சத்தியமாவதால் சொப்பனதிருஷ்டாந்தத்தினுற் சாக்கிரபதார்த்தங்கள் மித்தையென்று சித்தாந் தத்திற் சொல்லாநிற்பது கூடாது. சொப்பனத்திற் பிரதீதியாகின்ற பதார்த்தங் களினுற்பத்தி ஒப்பாவிடின் இவ்வாறன தோடமின்றும் என்று சங்கிக்கில்:—

யாதொருவஸ்துவின் உற்பத்திக்கு எவ்வளவுதேசகாலாதி சாமக்கிரிவேண் டுமோ ! அவ்வளவு சாமாக்கிரியுமின்றியே அது உண்டாமாகில் மித்தையெ னப்படும். சொப்பனத்தில் யானைமுதலியவைகளினுற்பத்திக்கு யோக்கியமான தேசகாலங்களில்லை. வெகுகாலத்தில், வெகுதேசத்திலுண்டாக யோக்கியமான யானை முதலியவை கூணமாத்திரகாலத்தில் சூட்சுமமான கண்டதேசத்தி லுண்டாகின்றன வாதலால் மித்தையாம். எப்படியும். சொப்பனவத்தையில் காலதேசமும் அதிகமாகப் பிரதீதியாகின்றன ; அப்படியானலும், அந்நிய பதார்த்தங்களைப்போலச் சொப்பனத்தில் அதிககாலம், அதிகதேசம் அநிர்வச னீயப்பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன. எதனலெனின் ? விடயமின்றிப்

பிரத்தியட்சஞான முண்டாகமாட்டாது சொப்பனத்தில் அதிகமானதேசகாலங்களின் ஞானமுண்டாகின்றது : வியாவகாரிக தேசகாலங்கள் நிபூனமாகவுள்ளன. இதனல் பிராதிபாசிகமாக உற்பன்னமாகின்றன ; இங்ஙனம் சொப்பனவதையிலுண்டாகின்ற யாதொரு பிராதிபாசிக தேசகாலங்களுண்டோ ! அவை சொப்பனவத்தையின் யானை முதலியவைகட்குக் காரணமல்ல. எதனலெனின் ? யாதுகாரணமாமோ ! அது முன்னே உண்டாயிருக்கும் : காரியம் பின்னே உண்டாம். சொப்பனத்தின் தேசகாலங்களும, யானை முதலியவையும் ஒரேசமயத்திலுண்டாகின்றன ; ஆதலால், அவைகட்குக் காரியகாரணபாவங்கூடாது. வியாவகாரிகதேசகாலங்கள் நிபூனமாய்உள்ளன. ஆதலால், அவை யானை முதலியவைகட்கு யோக்கியமாக இல்லை ; இங்ஙனம் தேசகாலசாமக்கிரியின்றி உண்டாகின்றன வாதலால் சொப்பனபதார்த்தங்கள் மித்தையாம். இவ்வாற்றால், சொப்பனபதார்த்தங்களி னுற்பத்தியில் வேறே ஒரு சாமக்கிரிகளுமில்லை : நித்திராரூபதோஷசகிதமான அவித்தையே காரணமாம். யாதொன்று தோஷசகித அவித்தையினல் ஜந்நியமாமோ ! அது சுத்திரஜதம் போல மித்தையாம் ; ஆகலால் சொப்பனபதார்த்தங்கள் சத்தியமல்ல : மித்தையாம். அவைகட்கு உபாதானகாரணம் அந்தக்கரணம், அல்லது சாட்சாதவித்தையேயாம். முதற்பட்சத்தில் சாட்சிசேதனஞ் சொப்பனத்திற் கதிஷ்டானமாம் ; இவ்வாற்றால், அந்தக்கரணத்தினுடைய அல்லது அவித்தையினுடைய பரிணமமும், சேதனத்தினுடைய விவர்த்தமும் சொப்பனமாம். முன்சொல்லியபட்சம் இரண்டனுள் இரண்டாம்பட்சத்தில் பிரமசேதனஞ்சொப்பனத்திற்கு அதிஷ்டானமென்றும், அவித்தை உபாதானகாரணமென்றுஞ் சொல்லப்படடது ; அங்கே அதிஷ்டானஞானத்தினல் கற்பிதநிவிர்த்தியாம். சொப்பனத்திற்கு அதிஷ்டானம் பிரமமாகலின், பிரமஞானமின்றி அஞ்ஞானிக்குச் சாக்கிரத்தில் சொப்பனம் நிவிர்த்தியாகவேண்டுவதில்லை.

மந்நோசங்கை—எப்படிச்சொப்பனத்தின் அதிஷ்டானம் பிரமமும்; உபாதானகாரணம் அவித்தையுமோ ! அப்படியே வேதாந்த சித்தாந்தத்தில் சாக்கிரத்தின் ¶ வியாவகாரிக பதார்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரமம் : உபாதானகாரணம் அவித்தை ; ஆதலால் சாக்கிரம், சொப்பனம் இரண்டும் வியாவகாரிகமாகவேண்டும், அல்லது பிராதிபாசிக மாகவேண்டும். இங்ஙனமன்றிச் சாக்கிரபதார்த்தங்கள் வியாவகாரிகமென்றும், சொப்பனபதார்த்தங்கள் பிராதிபாசிகமென்றுங் கூறுநிற்பது எவ்வாறுகூடும் எனின் ? இவ்விரண்டு சங்கையுங்கூடாது. எதனலெனின் ? பிரதமசங்கைக்குச் சமாதானம் ; நிவிர்த்தி இரு

¶ வியாவகாரிக, பிராதிபாசிக பாரமார்த்திகபேதத்தால் சத்தை மூவகைத்தாம் ; அம்மூவகையுள், பிரமஞானமின்றி இரச்சுவாதிகளினவச்சின்ன சேதனஞானத்தால் பாதமாகாநிற்கும் இரச்சு சர்ப்பாதிகள் பிராதிபாசிகசத்தை: பிரமஞானமின்றிப் பாதமாகாமல் பிரமஞானத்தால் பாதமாகாநிற்கும் அவித்தையும், அதன்காரியமாகிய ஆகாசாதிகளும் வியாவகாரிகசத்தை: மூன்று காலத்தும் பாதமாகாதது யாது ! அது பாரமார்த்திகசத்தை இப்படிப்பட்டது சேதனமாம்.

வகையாம் ; இது {முன்னே உ-வது செய்யுளின் உரையிலுங் கூறப்பட்டிருக்கின்றது. காரணத்தோடுகூடக் காரியத்தின் விநாசரூபமான அத்தியந்த நிவிர்த்தி சொப்பனத்திற்குச் சாக்கிரத்தில் பிரமஞானமின்றிக்கூடாது ; ஆயினும், தடிகொண்டடிப்பதால் கடத்திற்கு மிருத்திகையில் லயம் எப்படி உண்டாமோ ! அப்படிச் சொப்பனத்திற் கேதுவான நித்திராதோட நாசத்தினால், அல்லது சொப்பனத்தின் விரோதியான சாக்கிரத்தின் உற்பத்தியினால் அவித்தையின்கண் லயரூபமான நிவிர்த்திற்குப் பிரமஞானமின்றியே கூடும். சாக்கிரசொப்பனங்கள் இரண்டும் சமானமாகவேண்டுமென்னுஞ் சங்கையுங்கூடாது. எதனாலெனின் ? சாக்கிரதேகாதிபதார்த்தங்களின் உற்பத்தியிலோ ! அந்நியதோஷரகிதமான கேவலம் அநாதியவித்தையே உபாதானகாரணம் : சொப்பனபதார்த்தங்களிலோ ஸாதிநித்திராதோஷமும், அவித்தைக்குச் சகாயமாம் ? ஆதலால்; அந்நியதோஷரகிதமான கேவலம் அவித்தையினாலுண்டாவது வியாவகாரிகமென்றும், ஸாதிதோஷசகித அவித்தையினாலுண்டாவது பிராதிபாசிகமென்றுஞ் சொல்லப்படும். இவ்வாற்றால், சொப்பனபதார்த்தங்களில் சாக்கிரபதார்த்தங்களைப்பார்க்கிலும் விலட்சணத்தன்மை உண்டு; இவை முழுதும் மூவிதச்சத்தையை யொப்பித் தூலதிருஷ்டியினாற் சொன்னது. விசாரதிருஷ்டியினாற்பார்க்கில், மூவகைச்சத்தைகூடாது. வேதாந்தபரிபாஷாதிகிரந்தங்களில், முற்கூறியபிரகாரமாவே வியாவகாரிக, பிராதிபாசிகபதார்த்தங்கட்குப் பேதங்கூறியிருக்கின்றது. ஆதலால் மூன்றுசத்தையும் ஒப்பியிருக்கின்றது. வித்தியாரண்ய சுவாமிகளும் சீவசிருட்டியே சுகதுக்கத்திற்கேதுவாம். ஈசுரசிருட்டி சுகதுக்கத்திற் கேதுவன்று, சீவசிருட்டி பிராதிபாசிகம், ஈசுரசிருட்டி வியாவகாரிகமென்றருளிச் செய்திருக்கின்றனர். வேறே கிரந்தகாரரும் சத்தை மூன்றுபிரகாரஞ் சொல்லியிருக்கின்றனர். சேதனத்தினுடைய சத்தை பாரமார்த்திகம் : சேதனத்தினும் வேறான சடபதார்த்தங்களின் சத்தை இருவகையாம்; அவைகளில் ஒன்றுவியாவகாரிகசத்தை; மற்றொன்று பிராதிபாசிகசத்தை. சிருட்டியின் ஆதிகாலத்தில் ஈசுரசங்கற்பத்தினாலுண்டான கேவலம் அவித்தையின் காரியமாகிய பஞ்சபூதங்களும், அவைகளின் காரியங்களும் ஆகிய இவைகளின்சத்தை வியாவகாரிகசத்தை; தோஷசகிதமான அவித்தையின் காரியமாகிய சொப்பனமும், சுத்திரஜதாதிகளும் ஆகிய இவைகளின் சத்தை பிராதிபாசிகசத்தையாம்; இவ்வாறு {சாக்கிரபதார்த்தங்களுக்கு வியாவகாரிகசத்தையும், சொப்பனபதார்த்தங்களுக்குப் பிராதிபாசிகசத்தையுங் கூறியிருக்கின்றனர்.

தேசகாலசாமக்கிரியின்றிச் சொப்பனத்தில் யானை, பருவதங்கள் தோன்றுகின்றன; ஆதலால், அவைமித்தை. அப்படியே ஆகாசாதிப்பிரபஞ்ச சிருஷ்டியும் பிரமத்தினின்றுந் தோன்றுகின்றன; அப்பிரமத்தில் தேசகாலங்கள் லேசமுமில்லை. சொப்பனத்தில் யானை, பருவதாதிகளுக்கு யோக்கியமான தேசகாலங்களில்லையாயினும், சொற்பதேசகாலங்களுண்டு: ஆகாசாதிகளின் சிருஷ்டியில் அவ்வளவுகூடத் தேசகாலங்களில்லை. என்னை ? தேசகாலரகித பரமான்மாவினின்றும் ஆகாசாதிகளின் சிருஷ்டிகூறப்பட்டிருத்தலினென்க.

தைத்திரீயசுருதியில் ஆகாசாதிகளின் சிருஷ்டி கிரமமாகக்கூறி யிருக்கின்றன; அதிலும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை. சூத்திரகாரர், பாஷியகாரர்களேனுங் கூறியிருக்கின்றனரோவெனின்? அவர்களும் தேசகாலங்களின் சிருஷ்டிகூறவில்லை; அதனால் தைத்திரீயசுருதிக்கும், சூத்திரகாரர், பாஷியகாரர்கட்கும் ஆகாசாதிப்பிரபஞ்சங்களின் உற்பத்தி தேசகாலசாமக்கிரியின்றி உண்டாமென்பதே அபிப்பிராயமாம்; ஆகலின், ஆகாசாதிகள் சொப்பனம்போலமித்தையாம்.

மதுசூதனசுவாமிகள் தேசகாலங்கள் சாட்சாதவித்தையின்காரியமென்று கூறியிருப்பதுகொண்டு மாயாவிசிஷ்ட பரமான்மாவினின்றும் முன்னே தேசகாலங்கள் மாயையின் பரிணமமாகத்தோன்றும் அதன்பின்னர் ஆகாசாதிகளின் சிருஷ்டிதோன்றும் என இங்ஙனம் பெறப்படுதலின் யோக்கியமான தேசகாலங்களாலேயே ஆகாசாதிப் பிரபஞ்சங்களின் உற்பத்தி சித்தித்ததே எனின்?

அங்ஙனம் தேசகாலங்கள் முன்னேயுண்டாய், அதன்பின்னே ஆகாசாதிகளுண்டாம் என்பது, மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயம் அன்று. எதனாலெனின்? ஆகாசாதிகளின் உற்பத்திகாலத்திற்குப் பூர்வகாலவுபகிதமான பரமான்மாதேசகாலங்கட்கு அதிஷ்டானமாமென்பது சித்திக்கும்; அது சித்திக்கவே, தேசகாலங்களின் உற்பத்தியில் பூர்வகாலமுண்டென்றுவரும். காலத்தின் உற்பத்தியே இல்லாதபோது பூர்வகாலம் எவ்வாறு சித்திக்கும்; இதனால் ஆகாசாதிகள் உண்டாவதற்குப் பூர்வகாலத்தில் தேசகாலாதிகள் உண்டெனல் கூடாதாகலின் என்க.

மற்றியாதோ! மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயம் எனின்? பூதபௌதிகப் பிரபஞ்சம் தோன்றுநிற்பதுபோலத் தேசகாலங்களுந் தோன்றுநின்றன. ஆன்மாவுக்கந்நியமாக யாதொன்றும் நித்தியமாகாமையின், தேசகாலங்களும் நித்தியமல்ல: உண்டாகாதவை தோற்றரவாகாவாகலின், ஆகாசாதிகள்போலத் தேசகாலங்கட்கும் உற்பத்தியுண்டு; ஆகலால், அவித்தையின் காரியமாமென்பது மதுசூதனசுவாமிகளின் அபிப்பிராயமாம் என்க.

அத்தேசகாலங்கள் மாயையின் பரிணமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம். யாது விவர்த்தமாம் அது ஒன்றிற்குக்காரணமாகாது; ஆகலின், ஆகாசாதிப்பிரபஞ்சத்தின் உற்பத்தியில் தேசகாலங்கட்குக் காரணத்தன்மை பொருந்தாது. அன்றியும், காரணம் முன்னேயுண்டாகும்: காரியம் பின்னர் உண்டாகும். ஆகாசாதிப்பிரபஞ்சம் உண்டாவதற்குமுன்னே தேசகாலங்கள் உண்டாமென்னல் பொருந்தாது; இதனானும் தேசகாலங்கட்கு ஆகாசாதிப்பிரபஞ்சகாரணத்தன்மை பொருந்தாது. மற்றெங்ஙனெனின்? சொப்பனப் பிதாபுத்திரன்போலத் தேசகாலத்தோடுகூட ஆகாசாதிப்பிரபஞ்சம் மாயாவிசிட்டமான பரமான்மாவினின்றும் உற்பன்னமாம். யாதானும் ஒருபதார்த்தம் யாதானும் ஒருதேசத்தில், யாதானும் ஒருகாலத்தில் உண்டாகாநிற்கும்; அந்நியதேசத்தில், அந்நியகாலத்தில் உண்டாகாது; இவ்வாறு சகலபதார்த்தங்களும் பிரளயகாலத்தில் உண்டாகா: சிருஷ்டிகாலத்தில் உண்டாகும். ஆதலால் தேசகாலங்

கட்குக் காரணத்தன்மையுங் காணப்படுகின்றது ; அதுவும், எந்த மாயையி னின்றும் தேசகாலத்தோடுகூடப் பிரபஞ்சம் உற்பத்தியாகின்றதோ ! அந்த மாயையினுலேயே அத்தேசகாலங்களில் காரணத்தன்மையும், அந்நியமான பிர பஞ்சத்தில் காரியத்தன்மையுங் காணப்படுகின்றன ; ஆதலால் ஆகாசாதிப் பிர பஞ்சத்திற்குத் தேசகாலங்கள் காரணமல்ல

சங்கை; உண்டாகாத பதார்த்தந்தோற்றரவாகாது. சித்தாந்தத்திலோ அது அங்கீகாரமில்லை; அங்ஙனம் அங்கீகரிக்கில் அசத்கியாதியாம். அன்றியும், தேச காலங்களில் காரணத்தன்மையில்லையாயின் சசசிருங்காதிகள்போல மாயை யின் வலியாலும் அதுதோற்றரவாக வேண்டுவதில்லை ; தோற்றரவாகலின், தேசகாலங்கள் சர்வப்பிரபஞ்சத்திற்குங் காரணங்களாம். அங்ஙனமன்று பிர மமே பிரபஞ்சத்திற்குக்காரணம் ; பிரமத்தின் காரணத்தன்மை தேசகாலங்க ளில் தோற்றரவாகாதென்று சித்தாந்தி சொல்லில் அதுவும் பொருந்தாது; எதனுலெனின் ? எப்படித் தேசகாலங்கட்கு அதிஷ்டானம் பிரமமோ ! அப் படிச் சர்வப்பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானம் பிரமம். தேசகாலங்களில் மாத்தி ரந்தான் பிரமத்தின் காரணத்தன்மை தோற்றரவாம் ; அந்நியத்தில் தோற்ற ரவாகா தென்பதற்கு ஒரேதுவும் இல்லை. ஆதலால், சர்வப்பிரபஞ்சத்திலும் அக்காரணத்தன்மை ஒரேதன்மையாகத் தோற்றரவாதல் வேண்டுமேயல்லாமல் ஒன்றிற் காரணத்தன்மையும், ஒன்றிற் காரியத்தன்கையுமாக இவ்வாறு தோற் றரவாதல் கூடாது. அன்றியும், தேசகாலங்களில் காரணத்தன்மை இல்லை ! பிரமத்தின்கண்ணேதான் காரணத்தன்மை உண்டு ; அது தேசகாலங்களிற் றோற்றுகின்றதெனின் ? அது அந்நியதாக்கியாதி என்றுவரும். சித்தாந்தத்தில் அது அங்கீகரிக்கவில்லை. ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில், சுத்தியில் அநிர் வசனீயரஜத உற்பத்தி சித்தாந்தத்தில் ஒப்பினது நிஷ்பலமாம். என்னை ? அந் நியதாக்கியாதிமதம் இருவகைத்து ; ஒன்று அந்நியதேசத்திலுள்ள பதார்த்தம் அந்நியதேசத்திற் றோன்றுவது : அது காந்தையின் கரத்திலுள்ள இரஜதம் எதிரே சுத்திதேசத்திற்றோன்றுவது. மற்றொன்று அந்நியபதார்த்தம் அந்நிய ரூபமாகத் தோன்றுவது; அது இப்பியே வெள்ளியுருவாகத் தோன்றுவது.இவ் வாறு சகல பிரம ஸ்தலத்திலும் அந்நியதாக்கியாதியால் நிர்வாகங்கூடும் ; கூடவே, அநிர்வசனீயரஜதாதிகளின் உற்பத்திகூறுவது அசங்கதமாம். விஷ யத்தின் சமானகாரமாக ஞானம் உண்டாகும் : அந்நியவஸ்துவில் அதற்கந்நிய ரூபமாக ஞானம் உண்டாகாது. ஆதலால் இரஜதாகாரஞானத்திற்கு விடய மான அநிர்வசனீயரஜதமும் உற்பத்தியாகின்ற தென்னும் அத்வைதசித்தாந் தத்தில் காரணத்திற்கு அந்நியமாகிய தேசகாலங்களில் பிரமத்தின் காரணத் தன்மை ஞானம் பொருந்தாதாகலின் தேசகாலங்களிற் றோன்றுதிற்குங் கார ணத்தன்மையானது உண்டாகாமற் பாதமாகின்றதென்பதும், பிரமத்தினுள் ளது பாதமாகின்ற தென்பதுங்கூடாது. தேசகாலங்களிலேயே காரணத்தன்மை உண்டு ; அது பாதமாகின்றது. இதனுல், ஆகாசாதிப் பிரபஞ்சத்திற்குத் தேச காலங்கள் காரணமல்லவென்கை அசங்கதமாம் என்னின் ? அது கூடாது.

எதனாலெனின் ? பிரமத்தின் காரணத்தன்மை தேசகாலங்களிற் றோன்றி நின்றது ; அஃதெங்ஙனமெனின் ; செம்பரத்தம் பூவைச்சம்பந்தித்த ஸ்படிகத்தில் புஷ்பத்தின் செம்மைநிறந்தோன்றுமி, அநிர்வசனீயமாக அஃது உற்பத்தியாயிற்றென்று அங்கோரமில்லை அந்நியதாக்கியாதியென்றே அங்கீரித்திருக்கின்றது ; அந்தப்படி சொப்பனத்தின்கண் மித்தியாபதார்த்தங்களில் சத்தியத்தன்மை தோற்றரவாகின்றதால் அங்கே அப்பதார்த்தங்களில் அநிர்வசனீயமாகச் சத்தியத்தன்மை உற்பத்தியாம் என்னின் ? அதுசத்தியம், மித்தையாபதார்த்தங்களிற்றோன்றும் சத்தியத்தன்மையின்ஞானம் அந்நியதாக்கி யாதியென்றே எங்ஙனங் கொள்ளற்பாலதோ ! அங்ஙனம் அதிஷ்டானப் பிரமத்தின் காரணத்தன்மை தேசகாலங்களில் அந்நியதாக்கியாதியென்றே கொள்ளற்பாலதாம் ; ஈண்டு அந்நியதாக்கியாதி ஒப்பிடில் சகல பிரமங்களிலும் அந்நியதாக்கியாதியே ஒப்பவேண்டுமென்னல்கூடாது என்னை ? சுத்திரஜதாதிகளில் அந்நியதாக்கியாதி ஒப்புவதில் விடயத்தின் விலட்சணஞானங்கூடாதென்னுந் தோடங்கூறியிருத்தலின் என்க. எங்கே ஸ்படிகத்தில் செம்மைநிறத்தின் ஞானம் உண்டு ! அங்கே செம்பரத்தம்பூவின் சம்பந்தம் ஸ்படிகத்தில் உண்டு. எப்போது அந்தக்கரணத்தின் விருத்தி செம்பரத்தம்பூவின் ஆகாரமாமோ ! அப்போது அவ்விருத்திக்கு விடயமாகவே செம்பரத்தம்பூவின் சம்பந்தியான ஸ்படிகமும் இருப்பதால் புஷ்பத்தின் செம்மைநிறத்தன்மை ஸ்படிகத்திற்றோன்றுகின்றது. அப்படிச்சுத்தியிலோ ! இரஜத ரூபஞானங்கூடாது. என்னை ? சுத்தியினிடத்து அநிர்வசனீயமாக அல்லது, வியாவகாரிகமாக இரஜதம்,அந்நியமதத்தில் இல்லை : சுத்திதான் உண்டு ; அச்சுத்தியின் சம்பந்தத்தால் சுத்தியின் சமானாகாரமாகவே அந்தக்கரணத்தின் விருத்தி உண்டாகும். இரஜதாகாரமாக அந்தக்கரணத்தின்விருத்தி உண்டாகாது. ஆதலால் அவித்தையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாக அநிர்வசனீயரஜதமும், அதன் ஞானமும் உற்பன்னமாம். இதனால், எங்கே இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் உண்டு ! அங்கே ஒன்றன்தருமம் மற்றொன்றில் தோற்றரவாம்; அஃதந்நியதாக்கியாதியேயாம். எங்கே இரண்டுபதார்த்தங்களின் சம்பந்தம் இல்லை ! அங்கே அந்நியதாக்கியாதியில்லை : அநிர்வசனீயக்கியாதியே. எங்ஙனம் புஷ்பசம்பந்தியான ஸ்படிகத்தில் புஷ்பத்தின் செம்மைநிறத்தன்மை பிரதீதியாகின்றதோ ! அங்ஙனம் சொப்பனத்தின் யானை, பருவத முதலியவற்றிற்கும் அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தம் உண்டாகின்றது. ஆகலின் சேதனதர்மமாகிய சத்தியத்தன்மையும் சேதனசம்பந்திகளான யானை, பருவதமுதலியவற்றிற்றோன்றுகின்றது ; அஃதந்நியதாக்கியாதியேயாம் ; இவ்வாறு அதிஷ்டானசேதன தர்ம்மான காரணத்தன்மையும், அதிஷ்டான சேதனசம்பந்திகளான தேசகாலங்களிற் றோன்றுகின்றது.

அதிஷ்டான சேதனசம்பந்தம் சர்வப்பிரபஞ்சத்திற்கும் உண்டு. ஆதலால், சம்பந்தி தர்மமாகிய காரணத்தன்மை அந்நியதாக்கியாதியால் சர்வப்பிரபஞ்சத்திலுந் தோற்றவேண்டுமென்று பூர்வங் சங்கித்ததுகூடாது. என்னை ? சொப்பனத்தில் பிதாரூபமாகவும், புத்திரரூபமாகவுந் தோற்றுகின்ற இரண்டு சரீரங்

கூட்கும் சொப்பனத்தின் அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தமுண்டேனும், பிதா சரீரத்தில் அதிஷ்டானசேதனத்தின் காரணத்தன்மை தோன்றுகின்றது: புத்திரசரீரத்தில் அது தோன்றுமல் பிதாவிலுண்டான புத்திரனென்று புத்திரசரீரத்தில் காரியத்தன்மை தோன்றுகின்றது. இவ்வாறு அதிஷ்டான சேதனத்தோடு சம்பந்தம் சர்வத்திற்கும் உண்டேனும் தேசகாலங்களில் சேதன தர்மமான காரணத்தன்மையும், மற்றவற்றிற் காரியத்தன்மையுந் தோற்றுகின்றன.

அல்லது, அதிஷ்டானசேதனம் அசங்கம்; அஃதொன்றற்கும் பரமார்த்தமாகக் காரணமன்று. மாயையின் கண்ணுள்ள ஆபாசமே காரணமாம்; ஆயினும், ஆபாசரூபம்மித்தை; யாதொன்று தானேமித்தையாம் அது மற்றொன்றற்குக் காரணமாதல்கூடாது. பரமான்மாவில் பிரபஞ்சத்தின் காரணத்தன்மை இருக்குமாயின், அது பிரமையினால் தேசகாலங்களிற்றோன்றக்கூடும்; அப்பரமான்மா காரணமுதலிய தர்மரகித அசங்கமாகலின், அதனது காரணத்தன்மை தேசகாலங்களிற் றோன்றுகின்றதென்னும் வார்த்தை பொருந்தாது. பின்னையோ! மாயையாற் பண்ணப்பட்ட அநிர்வசனீயதேசகாலங்கள் அநிர்வசனீய காரணத்தன்மை யுடையனவாயுள்ளன. பரமார்த்தமாகத் தேசகாலங்கள் காரணமல்ல. புத்திரனில்லாத ஒருபுருடன் சொப்பனத்தில் புத்திரபௌத்திரர் இருவரையுங்கண்டானாக; அங்கே புத்திர, பௌத்திர சரீரங்கள் அநிர்வசனீயமாக வுண்டாகின்றன. புத்திரசரீரத்தில் பௌத்திரசரீரத்தின் காரணத்தன்மை அநிர்வசனீயமாக வுண்டாயிருக்கின்றது; அங்கே பரமார்த்தமாகப் புத்திர, பௌத்திரசரீரங்கள் ஒன்றற்கொன்று காரியகாரணபாவமாக எப்படி உண்டாயிருக்கவில்லையோ! அப்படி அநிர்வசனீயமாகிய காரணம் தேசகாலங்களிற் றோன்றுகின்றது. பரமார்த்தமாகத் தேசகாலங்களும், ஆகாசாதிப் பிரபஞ்சங்களும் காரியகாரணபாவமாக இருக்கவில்லை, இவ்வாற்றால், தேசகால சாமக்கிரியின்றிச் சாக்கிரப்பிரபஞ்சம் உண்டாகின்றதாகலின், சொப்பனம் போலச் சாக்கிரமும் மித்தையாம்; அன்றியும், சொப்பனஸ்திரீ, புத்திராதிகள் சொப்பனத்திலேயே சுகதுக்கங்கட்கேதுவாயிருந்து சாக்கிரத்தில் அபாவமாவது போலச் சாக்கிரபதார்த்தங்களும் சொப்பனத்தில் அபாவமாவதால் இரண்டும் சமானமாம்.

சாக்கிரத்தினின்றும் சொப்பனம் உண்டாய் மீண்டு சாக்கிரம் உண்டாமாயின், அங்கே முன்சாக்கிரத்திலுள்ள பதார்த்தங்களே சொப்பன § வியவகித மற்றைச்சாக்கிரத்திலுள்ளன: முன்சொப்பன பதார்த்தங்கள் மற்றைச் சொப்பனத்திலில்லை. ஆகலின், சொப்பனபதார்த்தங்களிலும் சாக்கிரபதார்த்தங்கள் விலட்சணமாமென்பர். அச்சங்கையும், சித்தாந்தத்தை யறியாமையினால் உண்டாகின்றது. என்னை? சம்சாரப்பிரவாகம் அநாதி, அதில் சீவர்கட்குச் சாக்கிரசொப்பன சுழுத்திகள் உண்டாகின்றன, சாக்கிரகாலத்திற் சொப்பன சுழுத்திகளும், சொப்பனகாலத்தில் சாக்கிர சுழுத்திகளும், சுழுத்திகாலத்

§ வியவகிதம்=மறைப்புடையது.

திற் சாக்கிரசொப்பனங்களும் நஷ்டமாகின்றன, சொப்பன சுழுத்தியுண்டா மாயின் அப்போது சாக்கிரகாலத்திலுள்ள ஸ்திரீ, புத்திர, தனாதிகள் நீங்காம லிருக்கின்றன அவைகளின் ஞானமே நீங்குகின்றன, மீண்டுசாக்கிரம் உண் டாமாகில் அப்போது முந்தினசாக்கிரத்திலிருந்த பதார்த்தங்களின்ஞானம் உண் டாகின்றன என அஞ்ஞானிகட்கு இவ்வாறுனதிருஷ்டி உளதாகலின் அச்சங் கையும் உண்டாகின்றதென்க.

சித்தாந்தமோவெனின் ? சகலபதார்த்தங்களும் சேதனத்தின் விவர்த்தம் : அவித்தையின் பரிணாமமாம். ஆகலின், சுத்திரஜதம்போல எந்தக்காலத்தில் யாதொருபதார்த்தம் பிரதீதியாகின்றதோ ! அந்தக்காலத்தில் அதிஷ்டான சேத னத்தின் ஆசிரிதமான அவித்தையின் தமோகுணக்கூறு கடாதிவிஷயரூபமாக வும், சத்துவகுணக்கூறு ஞானரூபமாகவும் பரிணமிக்கின்றன. இவ்வாற்றால், சாக்கிரபதார்த்தங்களும், அவைகளின் ஞானங்களுங்கூடவே யுண்டாய்க்கூட வே நஷ்டமாகின்றன; இதுவேதத்தின்கூடமான சித்தாந்தமாகலின், சாக்கிரப தார்த்தம் மற்றைச்சாக்கிரத்தில் உண்டாமென்னல் கூடாது.

சொப்பனத்தினின்றும் விழித்தபுருடனுக்குப் பூர்வம் யாதொருபதார்த்த மிருந்ததோ ! அதுவே இந்தப் பதார்த்தமென்று இவ்வாறு பிரத்தியபிஞ்ஞை யுண்டாகின்றதாதலால் சாக்கிரபதார்த்தங்கள் ஞானசமகாலத்தில் உற்பத்திநாச முடையனவல்ல, ஞானத்திற்குமுன்னே உள்ளன, ஞானநாசத்தின் பின்னரும் உள்ளன எனத்தோற்றினும் சொப்பனத்திலுண்டானபருவதம், சமுத்திரமுத லியவற்றில் நான்ஜனித்தற்குமுன்னே இவை உண்டாயினவென்று வெகுகால ஸ்திரத்துவபிராந்தி உண்டாகின்றதாகலால் எவ்வவித்தையினால் மித்தையாகிய பருவதம், சமுத்திரமுதலியவை உண்டாயினவோ! அவ்வவித்தையினால்வெகு காலஸ்திரத்தன்மையும், ஸ்திரத்தன்மையின் ஞானமும் அநிர்வசனீயமாக எப்படி உண்டாகின்றனவோ ! அப்படிசாக்கிரபதார்த்தங்களினிடத்தும் அநே ககாலஸ்திரத்தன்மை அவித்தையின்வலியால் மித்தையாகப் பதார்த்தங்களோடு கூடவேயுண்டாய்த்தோற்றலாகின்றது. சொப்பனபதார்த்தங்கள் சாட்சாத வித்தையின்பரிணாமமாக இல்லாமல் கடத்தினுற்பத்தி தண்டசக்கர குலாலரால் உண்டாகின்றது; அப்படியேசர்வபதார்த்தங்களினுற்பத்தியும் தத்தங்காரணங் களால் உண்டாகின்றது : சாட்சாதவித்தையினலல்ல ; சாட்சாதவித்தையின் பரிணாமமாமேல் ஆகாசாதிக்கிரமத்தால் பஞ்சபூதங்களினுற்பத்தியும், பஞ்சீகர ணத்தால் பிரமாண்டத்தினுற்பத்தியும், பஞ்சீகரணத்தால் பிரமாண்டத்தினுற் பத்தியுஞ் சுருதியிற்கூறியிருப்பது அசங்கதமாம். ஆதலால் ஈசுரசிருஷ்டியா கிய சாக்கிரபதார்த்தங்கள் தத்தம் உபாதானங்களின் பரிணாமங்களாம் : அவை பதார்த்தங்களும் அவித்தையின் பரிணாமங்களாம் ; அவைகட்கு அவித்தை ஒன்றே உபாதானமாகலின் அப்பதார்த்தங்கட்கும், அவற்றின் ஞானங்கட்கும் ஒரே அவித்தையினால் ஒரேகாலத்தில் உற்பத்திபொருந்தும். சாக்கிரபதார்த் தங்கள் வெவ்வேறு காரணங்களால் உற்பத்தியாகின்றன. காரியத்திற்கு முன்னே காரணம உண்டாயிருக்கும் : காரணத்திற்காரியம் லயமாம். ஆத லால் கடத்தினுற்பத்திக்கு முன்னும், கடநாசத்திற்குப்பின்னும் மண்டிரவை

உள்ளது ; இவ்வாறு, சில பதார்த்தங்கள் அற்பகாலஸ்திரமாயும், சில அதிக காலஸ்திரமாயும், காரியகாரணமாயும், உள்ளன : சொப்பனபதார்த்தங்கள் அப்படியில்லையே யெனின் ? அது கூடாது.

என்னை ? சாக்கிரபதார்த்தங்கள் போலச் சொப்பனபதார்த்தங்களிலுங் காரியகாரணத்தன்மை தோற்றுகின்றன. அஃதெங்ஙனம் ? ஒருவனுக்கு எனபதுசு கன்றீன்றது, அல்லது எனது ஸ்திரீ பிரசவித்தாள் என்று இவ்வாறுன சொப்பனமஉண்டாகில் அங்கேபசுவினிடத்தும், ஸ்திரீயினிடத்துங் காரணத்தன்மையின்றேற்றரவும், வெகுகால ஸ்திரத்தன்மையின்றேற்றரவும் உண்டாகின்றன. கன்றினிடத்தும், புத்திரனிடத்துங் காரியத்தன்மையும், அற்பகாலஸ்திரத்தன்மையுந் தோற்றரவாகின்றன ! மூழுதும்சமகாலமாம் ஒன்று ஒன்றற்குக்காரணமாக இல்லை. பசு, கன்று, ஸ்திரீமுதலியவற்றிற்கு அவித்தையே உபாதானம் ; இதுபோலச் சாக்கிரத்திலும் சில பதார்த்தங்கள் அதிக காலஸ்தாயியாயும், காரணரூபமாயும் சில பதார்த்தங்கள் அற்பகால ஸ்தாயியாயும், காரியரூபமாயும் சொப்பனம்போலத் தோற்றரவாகின்றன ! ஒன்று ஒன்றற்குக் காரியகாரணமாக இல்லை ; பின்னையோ சாட்சாதவித்தையின் காரியமாம்.

சுருதியிற்கிரமமாகச் சிருஷ்டிகூறியிருப்பது அத்வைதத்தைப் போதித்தற்பொருட்டேயாம் ! வேறபிப்பிராயங் கொண்டல்ல. சகலபதார்த்தங்களும் பரமான்மாவினின்றும் உண்டாயிருக்கின்றனவாகலான், அதன் விவர்த்தமாம ; யாது யாதொன்றன் விவர்த்தமோ ! அது அதனது சொரூபங்களும் பிரமத்தின் வேறல்ல, பிரமமே யென்னும்பொருளை உணர்த்துதற்பொருட்டுச் சிருஷ்டிகூறினது ஸ்தூலதிருஷ்டியுடையோர்க்கு விபரீதக்கிரமமாகலயசிந்தனநிமித்தம் ; அதற்கும் அத்வைதஞானமே பிரயோஜனம் ; இதனால் கிரமமாக்கூறுவதிலும் அபிப்பிராயமில்லை : சிருஷ்டியிற்கிரமமில்லை. சகலபதார்த்தங்களும் ஓரவித்தையினு லுண்டாயிருக்கின்றன ; அவைகட்குப் பரஸ்பரங் காரியகாரணபாவமும், பூர்வோத்தரபாவமும் அவித்தையாற்பண்ணப்பட்ட சொப்பனம் போலும் மித்தையாகத் தோற்றரவாகின்றன. சகலபதார்த்தங்களும் சாட்சாதவித்தையின் காரியமாம், சுத்திரஜதம்போலும், அல்லது சொப்பனம்போலும் அவித்தையாவிருத்தி உபகிதமான சாட்சியினால் அவைகள் பிரகாசிக்கின்றன , அதலால் சகலபதார்த்தங்களும் சாட்சிபாசியங்களாம் ஞானகார, ஞேயாகாரமான அவித்தையின்பரிணமங்கள் ஒரேகாலத்தி லுண்டாய்க்கூடவே நஷ்டமாகின்றன. அதனால் எப்போதுபதார்த்தஞான முண்டாகின்றதோ அப்போதே ஞானத்திற்கு விஷயபதார்த்தமுண்டாகின்றது : அந்நியகாலத்தி லுண்டாகவில்லை ; இதையே திருஷ்டி, திருஷ்டிவாதமென்பர், இந்தப்பட்சத்தில் பதார்த்தங்களின் அஞ்ஞாதசத்தை இல்லை : ஞாதசத்தைதானுண்டு ; அத்வைதவாதத்தில் இது சித்தாந்த பட்சமாம் ; இத்தப்பட்சத்தில் இரண்டு சத்தை தானுண்டு : மூன்றில்லை. எதனாலெனின் ? அநான்மபதார்த்தங்கண் முழுவதும் சொப்பனம்போலப் பிராதிபாசிகமாம் : பிரதிதிகாலத்தினன்றி அந்நியகாலத்தில் அநான்மாவிற்குச்சத்தை இல்லை ; இதனால் மூன்றுவதான வியாவ

காரிகசத்தை இல்லை ; இந்தப்பட்சத்தில் சகல அநான்மபதார்த்தங்களும் சாட்சி பாசியமாம் : பிரமாதா பிரமாணங்கட்கு விடயமாக யாதொன்றுமில்லை. எதனலெனின் ? அந்தக்கரணம், இந்திரியம், காடாதிகள் ஆகிய சகலதிரிபுடிகளும், அவைகளின் ஞானமும் சொப்பனம்போல ஏககாலத்தி லுண்டாகின்றன ; அவைகட்கு விஷ்யவிஷயீபாவங்கூடாது கடாதிவிடயங்கள், நேத்திராதி இந்திரியங்கள், அப்படியே அந்தக்கரணம் இவைகள் ஞானத்திற்கு முன்னரே யிருந்தால் நேத்திராதிவழியாக அந்தக்கரணத்தின் விருத்திரூபஞானம் பிரமாண ஜந்நியமாம் ; அவ்வந்தக்கரணம், இந்திரியம், விடயம் இம்மூன்றும் ஞானத்திற்குப் பூருவகாலத்தில் இருக்கவில்லை : ஞானசமகாலத்திலேயே சொப்பனம் போலத்திரிபுடி உண்டாகின்றன. ஆதலால், திரிபுடி ஜந்நியஞானம் யாதொன்றுமில்லை. அங்ஙனமாயினும், ஞானத்திற்சொப்பனம்போலத் திரிபுடி ஜந்நியத்தன்மை பிரதீதியாகின்றது. ஆதலால் சாக்கிரபதார்த்தங்கள் சாட்சிபாசியமாம்: பிரமாண ஜந்நியஞானத்திற்குவிடயமல்ல; இதனலும் சொப்பனத்திற்குச் சமானமாக மித்தையாம் என்பது பெறப்படும். அன்றியும், சாக்கிரத்தில் எவ்வளவோபதார்த்தங்கள் மித்தையாரூபமாக அறியப்பட்டிருக்கின்றன : வேறுசில பதார்த்தங்கள் சத்தியரூபமாகவே அறியப்பட்டிருக்கின்றன ; அவைகள் அநாதிகாலபதார்த்தங்கள் ; அவைகளிற் சில நஷ்டமுமாகின்றன : வேறே அவைகட்குச் சமானமாக உற்பன்னமுமாகின்றன. இவ்வாறான பிரபஞ்சதாரை ஓர்போதும் நாசமாவதில்லை. எவனுக்கு ஞானமுண்டாமோ ! அவனுக்குப் பிரபஞ்சந் தோன்றுவதில்லை ; மற்றையோர்க்குத் தோற்றரவாம் ; அந்த ஞானத்திற்குச் சாதனம் வேதமும், குருவுமாம் : அவைகளால் பரமசத்தியம் பெறப்படும் என்று இவ்வாறான தோற்றரவு சாக்கிரத்திலுண்டாகின்றது ; அங்கே சில பதார்த்தங்கட்கு மித்தியாத்தன்மை, சில பதார்த்தங்கட்கு நாசம், சிலவற்றிற்கு உற்பத்தி, வேதத்தினலும், குருவினலும பரமபுருஷார்த்தப்பிராப்தி இவை முழுவதும் அவித்தையினற் பண்ணப்பட்ட சொப்பனம்போல மித்தையேயாம். வாசிட்டத்தில் க்ஷணமாத்திரசொப்பனத்தில் வெகுகாலத் தோற்றரவும், சாக்கிரம்போல நிலையாகப்பதார்த்தங்களின் றோற்றரவும், அவற்றுல் வெகுகாலம்போகமும் உண்டாமென்று அநந்த இதிகாசம் உண்டு. இவ்வாற்றுல், சாக்கிரபதார்த்தங்களுக்குச் சொப்பனத்தைப்பார்க்கிலும் கிஞ்சித்தும் விலட்சணத்தன்மை இல்லை. ஆன்மாவுக் கந்நியமான சகலமும் மித்தையாம் ; ஆகலின்,"சொப்பனம்போலுமென்றே துணிந்தவன் ஞானியாவான்" என்றார். இவ்வாறு சொப்பனத்தைப்பற்றி விசாரசாகரகிரந்தத்தில் விசாரிக்கப்பட்டிருக்கின்றது.

இனி விருத்திப்பிரபாகரகிரந்தத்தில் எடுத்துக் கிஞ்சித்துக்காட்டுதும் ;– அத்வைதவாதத்தின் முக்கியசிந்தாந்தம், சேதனம் சத்தியம் ; அதற்குப்பின்னமான சகலமுமித்தை : அநிர்வசனீயத்தை மித்தையென்பர். ஆதலால் சேதனத்திற்குப் பின்னபதார்த்தங்களைச் சத்தியமென்று சொல்லுதல் அப்பிரசித்தகமாம். சேதனத்திற்குப் பின்னபதார்த்தங்களில் அநிர்வசனீயத்தன்மை அதிப்பிரசித்தமாம். யுத்தியினல் விசாரஞ்செய்யும்போது யாதோர் அநான்மபதார்த்

தங்களின் சொரூபமும் சித்திக்கவில்லை : தோற்றரவாகின்றனவாதலால் சகல அநான்மபதார்த்தங்களும் அநிர்வசனீயமாம். சித்சுகாந்தத்தில் அநான்மபதார்த்தங்களொன்றும் சத்தியமல்ல : கந்தர்வநகரம்போலச் சகலபிரபஞ்சமும் திருஷ்டதிருஷ்டசுபாவமாம் சொப்பனத்தைப்பார்க்கிலும் சாக்கிரபதார்த்தங்களிற் இஞ்சித்தும் விலட்சணத்தன்மையில்லை. சுத்திரஜதம்பிராதிபாசிகம் : காந்தையின் கரமுதலியவற்றிலுள்ள இரஜதம் வியாவகாரிகம். இவ்வாறு அநான்மபதார்த்தங்களில் மித்தியாத்வ, சத்தியத்வமான விலட்சணத்தன்மை பரஸ்பரங்கூறியிருக்கின்றது. அது ஸ்தூலபுத்தியுடையோர்க்கு அத்வைதபோகத்தில் பிரவேசத்தின்பொருட்டு அருந்ததிநியாயத்தாற் கூறினதாம் என்னை ? ஸ்தூலபுத்தியுடையோனுக்கு முன்னமே மூக்கிய சிந்தாந்தரீதியைச்சொல்லில் அற்புதமான அர்த்தத்தைக்கேட்டு அநான்மாவில் சத்தியத்வபாவனையுடைய அப்புருடன் சாஸ்திரத்திற் பராமுகனுய்ப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனுவன் ; வியாவகாரிக பிராதிபாசிகபேதத்தால் அநான்மபதார்த்தங்களுக்கு இருவித சத்தை கூறிச் சேதனத்திற்குப் பாரமார்த்திகசத்தை கூறிடில் சேதனத்தினும் நியூன சத்தை பிரபஞ்சத்திற்கு உளதென்பது புத்தியில் ஆரூடமானபின் சொப்பன மூதலிய திருஷ்டாந்தத்தால் சகல அநான்மபதார்த்தங்களையும் பிராதிபாசிகமாகவதிந்து நிஷேதவாக்கியங்களால் அவற்றிற்குச் சத்தாஸ்பூர்த்தியின்மையை அறிந்து கொள்ளுவனென்றே சத்தைபேதம் கூறினர். அநான்மபதார்த்தங்கட்குப் பரஸ்பரம் சத்தைபேதம் கூறுவதில் அத்வைதசாஸ்திரத்திற்குத் தாற்பரியமில்லை.

"சொப்பனம்போலு மென்றே துணிந்தவன் ஞானியாவான்" எ-கு. உ-ம் விசிட்டம்,

அ - கை.

[இதுகாறுங் கற்பிதம் வந்தவகையைத் தெரிவித்தினியபவாதஞ் சொல்லப்புகுதுமென விக்கவியிற் கூறுகின்றார்.]

45 *கற்பனை வந்த வாறு காட்டி னேங் காண்ப வெல்லாஞ்*
சொப்பனம் போல வெண்ணித் துணிந்தவன் ஞானியாவான்
செற்புதை மழைகா லம்போய்த் தெளிந்தவா காயம் போல
அற்புத முத்தி சேரு மபவாத வழியுங் கேளாய்.

(இ-ள்.) கற்பனை வந்தவாறு காட்டினேங்காண்பவெல்லாஞ் சொற்பனம் போலவெண்ணித் துணிந்தவன்ஞானியாவான்,— எ-து. வெறும்பொய்யாகிய சகசேவபரந் தோற்றன்மாத்திரமாக வந்தவகையைக்காட்டத் தகுந்தவாறு காட்டினேம், ஆதலினகம்புறத்திற் காணப்படுவனவாகிய சமஸ்த திருசியங்களையுமிவ்வேதுக்களே மறவாது சொப்பனம்போலப் பொய்யெனச் சிந்தித்துத்தெளிந்தவன் யாவனுவனே யையமின்றி ஞானியாவான்:—(இங்ஙனமிருக்க), செற்புதை மழைக்காலம்போய்த் தெளிந்தவாகாயம்போல,—எ-து. மேகங்கள் நெருங்

கத்தக்க மழைகாலநீங்க யாதொரு மாசுமின்றித் தெளிந்தவாகாயத்தைப்போல:— அற்புதமுத்திசேரு மபவாத வழியுங்கேளாய்,—எ-து. அற்புதமான வைக்ய முத்தியை யடையத்தக்க அபவாதமென முன்னர் கூறிய யுத்தியின் வகையையும் யாம் கூறக்கேட்பாயாக, எ-று.

பகுதிவிகுதி யிடைநிலை யனைத்துந் தோற்றன்மாத்திரமென ஆங்காங்கு நினைப்பூட்டி வந்தோமென்பர், கற்பனைவந்தவாறு காட்டினே மெனவும், ப்ராதிபாலிகாதிசத்து மூன்றையும் பகுதிவிகுதியிடைநிலையென்றும். யாங் காட்டியவாறு கேட்டல், சிந்தித்தல், தெளிதலால், அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமற்றவன் சீவன்முத்தனுவா னென்பர், காண்பவெல்லாஞ் சொற்பனம் போல வெண்ணித் துணிந்தவன் ஞானியாவா னெனவும்; இங்ஙனமாய விசாரத் தெளிவைக்காட்டச் செற்புதை மழைக்காலம் போய்த் தெளிந்த வாகாயம்போல வெனவும்; தானேதா னுகுமுத்திபோல்வ தொன்றின்மையின், அற்புதமுத்தியெனவுங் கூறினர். ஏனையவை, பசவிமுத்தி. போக வென்பதைப் போயென்றது, காயமயக்கம். மொழியுங்கேளாயென்ற வும்மை, அத்தியாரோபத்தைச் சொன்னதுமன்றி யெனப்பொருடரலா லிறந்தது தழீஇயவெச்சவும்மை. இங்கே கற்பனை, ஒன்றையொன்றுப் புத்திவிகற்பத்தாற் கோடலே. (அ)

அ - கை.

[மேலபவாதமென்று ரமணர்சித்தகையதென விக்கவியிற் பழுதறக் கூறுகின்றார்.]

46 அரவன்று கயிறென் றுற்போ லாளன்று தறியென்றுற்போல்
குரவன்ற னுபதே சத்தாற் கூறுநூல் வெளிச்சங் கொண்டு
புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞானத்
திரமென் றும் பிரம மென்றுந் தெளிவதே யபவா தங்காண்.

(இ-ள்.) அரவன்று கயிறென்றுற்போ லாளன்றுதறியென்றுற்போல் எ-து. இது பாம்பல்ல கயிறென்று காட்டினு லெத்தகைத்தோ வதுபோலவும் இவன் கள்ளனல்லன் கட்டையென்று காட்டினு லெத்தகைத்தோ வதுபோல வும்:—குரவன்றனுபதேசத்தாற் கூறுநூல் வெளிச்சங்கொண்டு,—எ-து. ஞா னுசிரியனுக்கிரகித்த ஞானக்கண்ணினாலும் மகான்களாற் சொல்லப்பட்டவனு பூதிநூலென்னும் விளக்கத்தினாலும். —புரமன்று புவனமன்று பூதங்களன்று, எ-து. யானெனப்படுவது அஸ்திபாதியிருபத்தைந்து தத்துவமாகக்காணப்பட்ட தூலதேகமுமல்ல, இந்தத்தூலதேகத்துக் காதாரமாயுள்ள பூமியுமல்ல, இந்தப் பூமிக்கு மாதாரமாயுள்ள ஸ்தூலபூதமும் மதற்காதாரமாயுள்ள சூக்கும பூதமும் மதற்குமாதாரமா வடுக்கடுக்கா நின்றுள்ள குணத்ரயமும், அகங்காரமும், மக தத்துவமும், மூலப்பிரகிருதியுமல்ல:— ஞானத்திரமென்றும் பிரமமென்றுந் தெளிவதே யபவாதங்காண், —எ-து. பரஞானம், அபரஞானம், ஸ்திரஞான மென்பவற்றுள் ஸ்திரஞானமெனவும், அந்தஸ்திரஞானமே நிரதிசயானந்த

மர்தலின்றுவே பிரமமெனவும், ஐயந்திரிபின்றித் தெளிவுறுவதே யபவாத மென்னு முத்தியெனக் காணுதி, எ-று.

பழுதையைப் பாம்பென்பதும், கட்டையைக் கள்ளனென்பதும் மூடம்; இதனையத்தியாச மென்னுர், இதையுடையாரத்து விதிகளல்லாதார். எங்ஙன மெனில், நானெனற்குச் சுயம்புவடிவம், மெய்யுணர்வு. இசைமறந்த வறிவு, மூலப்பிரகிருதி; இதைமறந்த வறிவு, மகதத்துவம்; இதைமறந்தவறிவு, அகங் காரதத்துவம்; இதைமறந்தவறிவு, குணத்ரயம்; இதை மறந்தவறிவு, ஈசன்; இதை மறந்தவறிவு, சீவன்; இதை மறந்தவறிவு, சூக்குமபூதம்; இதை மறந்த வறிவு, சூக்குமபௌதிகமான மனது; இதை மறந்தவறிவு, ஸ்தூலபூதம்; இ தைமறந்தவறிவு, ஸ்தூலபௌதிகமான ஸ்தூலதேகம்; இதை மறந்த வறிவு, எழுவகைத் தோற்றத்தி லோர்தோற்றம்; இதை மறந்தவறிவு, வர்லமதியூகமதி யுளொன்று; இதை மறந்த வறிவு, வருணாசிரமங்களிலொன்று; இதை மறந்த வறிவு, ஆண் பெண் பேடியுளொன்று; இதை மறந்தவறிவு, தாய், தந்தை, அ ண்ணன், தம்பி, சமக்கை, இளையான், பேரன், பாட்டன் முதலிய பாத்தியவ கையுளொன்று; இதை மறந்தவறிவு, விருப்பு வெறுப்பையியல்பாகக்கோடல்; இன்னுமிதனினுங் கீழாக்கிடந்த வுணர்வுபேதங்களுள. இப்பேத வுணர்வுகளி னின்றுஞ் சற்றுமகலா ராதலினலும், அல்லவில்லையெனற்கே யியைந்த திரிப தார்த்தங்களையு மாராய்ச்சிக்குச் சற்றுமுட்படாது மிருகாதிகளைப்போலெங் ஙன மெங்ஙனம் யாதுயாதுகாணப்படுகின்றதோ அங்ஙன மங்ஙனமதை யதைச் சத்தியமெனக்கண் டுழல்வதினலுமெனவுணர்க. எனவே கீழ்காச் சென்றிழியு மூணர்வின் கடையை யாரோபமெனவும், மேலாகச்சென்றேறு மூணர்வின் முடிவை யபவாதமென்வுங் கூறுவதைக்காண்க. நானல்லாத விப் பேத வுணர்வுகளே நானென் றுணர்தல் தவிர்ந்து, மெய்யுணர்வை நானென்ப் பழுதறவுணர்ந் ததுநாலுகவிளங்கல் அபவாதமென்றார். தத்துவக்குழாத்தையே யானெனக் கொண்டதிடத்தைத் தவிர்க்கப்புரமன்று புவன்மன்று பூதங்க ளன்று-எ-ம்; தனது சொரூபமிஃதன்றிஃதன்றென விசாரித்துக் கையிழந்துழி நீயதிவென விளக்கலினலும்; அவ்விளக்கமே லீட்டா லபரஞானமும் பரஞான மூங் கழன்றுதான் ஸ்திரஞானமாக நிற்றலினலும், ஞானஸ்திரம்—எ-ம்; அதிவேயானந்தமாதலின் பிரமமெனவும், ஞாதேதையத்தி லானந்தோதயமும், ஆனந்தோதயத்தில் ஞாதேதையமும், இவ்விருபேதமுமிறந்து விளங்கலைத் தெளி வதே யபவாதமெனவுங்கூறினர்.

(க-து.) தன்னை யுபாதித்ரயத்து ளொன்றுகக் காண்டல் ஆரோபம். தன்னை ஞானப்பிரகாசமாக விளங்கக்காண்டல் அபவாதமென்பது. இவ்விரு மூயற்சியுந் தன்தாதலில் தானே ஞாதேஞ்ஞானமெனவும், இவைமாறினுந் தான் மாறுததால் தானிவையன்றெனவுங் கண்டாம். இரட்டுறமொழிதலென் னுமுத்தியால், இல்லாதது பாம்புங் கள்ளனுமெனவே, இருப்பது செத்தை யுங் கட்டையு மென்றுயிற்று. அதுபோல இல்லாதது சகசீவபரமெனவே, இருப்பது ஞெப்திப்பிரிய மென்றுயிற்று. இதன்றியும் பழுதையே பாம்பாகத் தோன்று மாறுபோன்று, பிரக்ஞையே சகமாதியாகத் தோற்றலின் அபேத

காரண காரியமாயிற்று. இது சோதனைக் கையைந்தாதலின், கன்மம்பத்தி போற் கதையன்று, உண்மைநூல். விருத்திஞானமும், சான்றோரனுபவமு மின்றி யொன்றன் மாத்திர மையமகலாதாதலி னிரண்டும்வேண்டும். அபவா தம் மயங்காமை. (சக)

அ - கை

[மூன்கவியி லபவாதமாவது ; அபேதகாரணகாரியமெனக் குறிப் பித்தா ரதனை யேகமென்றுணர்த்த இக்கவியிலு மபவாதத்தையே கூறுகின்றார்.]

47. படமூநூலும்போற்செய்தபணியும்பொன்னும் போற்பார்க்கின்
கடமுமண்ணும்போ லொன்றுங் காரிய காரணங்கள்
உடன்மூகற் சுபாவ மீரு யொன்றிலொன் றுதித்த வாறே
அடைவினி லொடுக்கிக் காண்ப தபவாதவுபாய மாமே.

(இ-ள்.) படமூநூலும் போற்செய்த பணியும் பொன்னும்போற் பார்க் கிற், கடமுமண்ணும்போலொன்றுங் காரியகாரணங்கள்,—எ-து. வஸ்திரமும் நூலும்போலவும், செய்தவாபரணமும் பொன்னும்போலவும், மட்பாத்திர மும் மண்ணும்போலவும், திருக்குதிருசியத்தைச் சிந்தித்துப்பார்க்குமிடத்தி லபேதகாரண காரியமாயிருத்தலி லேகமேயாம்:—உடன்மூதற் சுபாவமீரு யொன்றிலொன்றுதித்தவாறே—எ-து. விகுதிதூலதேகமூதல் பகுதிசுபாவமீரு கத் தத்துவங்களைத் தத்தமக்குள் மூன்னரொன்றிலொன் றுதித்தவாறெங்ங மோ வங்ஙனமே:—அடைவினிலொடுக்கிக் காண்ப தபவாதவுபாயமாமே—எ-து. கிரமமாக ஒன்றிலொன்றொடுக்கி யுண்மையைக் காண்ப தபவாதமென்னுந் தந்திரமாம், எ-று.

பார்க்கிலென்றதனால், திருக்குத் திருசியம் வருவித்தாம். இம்மூன்றுபமா னங்களு மபேதகாரண காரியமெனத் தெரிவிக்கப் புகுந்தது, திருக்கு திருசிய நிலைமைநோக்கி ; எங்ஙனமெனில்; நூல், பொன், மண் இவைகளே யன்றிப் படம், பணி, கடம், எங்ஙனமின்றே, அங்ஙனம் ஸ்மரணையையன்றி யவஸ் தாத்ரயம், காட்சித்ரயம், அபிமானித்ரயம், சமஷ்டி வியஷ்டிகளாக விருக்க வேண்டும்; அங்ஙனமின்றே ! ஆதலினையமின்றிப் பொருந்தும். எங்கெங்கே ஸ்மரணையுண்டோ வங்கங்கே சமஸ்தமுமுண்டு, இன்றேலின்றும். தோற்றமு மொடுக்கமும் ஸ்மரணைக்கன்றிச் சகத்துக்கெனின் நன்றே, சகத்தைத்தனித்து விசாரிப்புழி யாராய்தலுக்கு முன்னர் நாமரூபமாகவும், பின்னர் பாழாகவுந் தோற்றலென்னை ? அஃதிங்ஙனமாறியதின்றேல், ஸ்மரணையின் பிறழ்தலாக வேண்டும்; ஸ்மரணையின்பிறழ்த லெங்ஙனமெங்ஙனமோ வங்ஙனமங்ஙனந் தோற்றல் சகத்தினதியல்பாகவேண்டும்; அன்றேல் முரணின்றிக்கூறுக; வலி யின்றேற் சொன்னவாறு கேளுங்; இதனாற் சகமாதிமூன்றும் ஸ்மரணைக்குபா தேயமாயிற்று. சித்துசடபேதமுளதெனின், அறிவையன்றி யறியாமையிருக்க வேண்டும், உண்டெனி ஞராய்தலின்கண் ணல்லவில்லையென் றகன் றறிவு

மாத்திர மிஞ்சிநிற்பானேன் ? நிற்றலினறிவே சமஸ்தத்திற்கு முதற்காரணமாயிற்று. ஆகவே, அறிவுதிருக்கும், அறியாமைதிருகியமுமாயிற்று. அறிவறியாமை யிரண்டாதலா லிவை காரணகாரியமாமேயெனின், பொருளல்லவற்றைப் பொருளென்றறிதலெந்தவறிவோ, அந்தவறிவே பொருளேப்பொருளென் றறிவதன்றே; வேறெனின், எந்தவறிவு பழுதையைப்பாம்பென்றதோ; அந்தவறிவே பழுதையைப் பழுதையென்றதும், வேறன்றுதலால் அறிவேயறியாமையாயிற்று அறியாமைபற்றி யறிவுகாரணமாயிற்று ; அறிவுக் கன்னிய மன்றுமையி னறியாமை காரியமாகாது, அதனு லறிவுகாரணமாகாது. இதனு லறிவே காரணகாரியமாமெனப் பெற்றும். பெறவே காரணகாரியங்க ளொன்றெனற் கையமென்னே ? இன்றுதலி னென்றுங் காரியகாரணங்களென்றுர். இதனே யபவாத வுபாயமெனற் கிழுக்கென்னே? ஒன்றிலொன்றுதித்தது சுபாவமுதலுட லீறுயதெங்ஙனமோ ; அங்ஙனமே யுடன்முதற்சுபாவமீறு யடைவினி லொடுக்கிக்காண்ப தபவாதவுபாயமாமெனமுடிக்க. இம்முறைசற்றுமறியாதா ரிந்நூலேயாளல் குங்குமஞ் சுமந்ததுபோலும், ஆயுதபாணி பேடிபோலுமாம். சாமே யுத்தரவாதியாக விக்கவிக்கு வழக்கறுத்துரைகூறும் வேதாந்திக ளெங்கணுமரியர்; இருக்கி லவர்மொழி புலப்படலரிது; எங்ஙனமெனில், உள்ளதை யில்லாதாகவும், இல்லதையுள்ளதாகவும், ஆமெனலேயல்லதாகவும், அல்லதை யாமென்பதாகவும் ஆக்கும் சுவானுப்பவவலியினராதலின். இங்ஙனமாய மேலாய நிலையைச் சைவத்திலும், வைணவத்திலுங்காணலாம், இவ்விருமதவபிமானங்கழலாதார்க் கிஃதோர்கதைபோலும்.

(க-து.) அபவாதவுபாயம் துவிதமாக்கா தேகமாக்குமென்பது. இது சுபானுபவமின்றேல் முரணும். (எ)

அ - கை க.

[விக்ஷேபம், ஆவரணமெனத் தேவீர் கூறிய சத்தியிரண்டினுள் விக்ஷேபசத்தியை விளக்கியவாறுபோல, ஆவரணசத்தியி னிலையையுமினைய தெனத் தெரிவிக்கவேண்டுமென்று மாணுக்கன்வினவினதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

48. தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஈடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறுங்குருவே யென்னக் கிருபையோ டருள்செய் வாரே.

(இ-ள்.) தூடணதமத்தில்வந்த தோற்றமாஞ் சத்திசெய்யு மீடணைவிகாரஞ்சொன்னீ ரிரண்டுசத்திகளென்றீரே, — எ - து. முக்குணங்களிலுமிழிவாயுள்ள தமோகுணத்தினின்றுதித்தன விரண்டுசத்திகளென்றீரே, யவற்றுள் ஒன்றுகிய விக்ஷேபசத்திசெய்யு மீடணைத்திரயத்திற் கிடமாயுள்ள விகாரரூபமான தேகாதிப்பிரபஞ்சம் வந்தவகையைச்சொன்னீர்: — மூடலாஞ் சத்திசெய்யுமோகமுஞ்சொல்லுமையா கேடறுகுருவேயென்ன, — எ-து. மற்றொன்றுகிய வாவரணசத்திசெய்யும் பிராந்திரூடமான விடரீதத்தையு மினையதென்றை

யனே, களங்கரகிதமான குருமூர்த்தியே யடியேனுக்குத் தெரிவிக்கவேண்டு மென் றிரந்துகேட்க:—கிருபையோடருள்செய்வாரே,—எ-து. மகாகருணை யோடு தெரிவிக்கப்புகுந்தனர், எ-று.

அனர்த்தரூபமாதலின் தூடணதமமெனவும், தூலசூக்குமந் தோற்றன் மாத்திரமாதலின் தோற்றமாஞ்சத்தியெனவும், இத்தோற்றத்தை மெய்யெனக் கோடலால் விளையும்பயனிஃ தென்பார் ஈடனை விகாரமெனவும், திரைபோல் வதின்மூடலாஞ்சத்தியெனவும், ஒன்றை யொன்றுயுணர்தற்கியைதற்பாலதின் மோகமெனவுங் கூறியவாறு காண்க.

(க-து.) விக்ஷேபசத்தியைப்போல வாவரணசத்தியையும் விளக்கவேண்டு மென்பதா. (சஅ)

அ - கை.

[ஆவரணமென்பது மறைப்பாதலா லிச்சத்தி செல்லிடஞ் செல்லா விட மினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

49 தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திக பாதி யென்னும்
ஊனிறை யுயிர்க ளுள்ளி னுணர்விழிக் குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடி மழைவிசு பிருள்போன் மூடும்.

(இ-ள்.) தானிகர் தனக்காமீசன் றனையுந்தங்களைத்தாங்கண்ட ஞானிகடமையுமன்றி,—எ-து. தனக்குத்தானே நிகராயுள்ள மாயாரகிதவீசனையும் தங்களைத்தா முள்ளவாறு கண்டுள்ள மகான்களையுமறைக்காதன்றி:— நாஸ்தி நபாதியென்னு மூனிறையுயிர்களுள்ளி னுணர்விழிக்குருடாமவண்ணம், எ-து. இல்லவே யில்லையென்பதுநாஸ்தியும், இருந்தாற்காணலுவென்பது நபாதியுமா தலி னிவற்றையே யுண்மையென்னும் மாம்சதேகத்தினிறைந்த மூடவுயிர் களினுள்ளத்திற் சகோதயமாக விளங்குஞானக்கண் குருடாகும் வண்ணமெவ் வண்ணமோ வவ்வண்ணம்:—வானிலந்திசை கண்மூடி மழைநிசியிருள்போன் மூடும்.—எ-து. இஃதாகாயம், பூமி, திக்குகள், என்று தெரியவொட்டாமல் மூடிக்கொள்ளுகின்ற மழைகாலத்தமாவாசை யிராக்காலத்துக்கருக்கலைப்போல ஆவரணசத்தி மூடியிருக்கும், எ-று.

(க-து.) இந்தவாவரணசத்தி, மாயாரகித வீசனையும், சிவன்முத்தர்க ளையு மூடாமல்; ஆஸ்திகர்களாக மெய்போனடித் தகத்தில் தேகமேயான்மா போகமே முத்தியென் றுறுதிகொண்டு, ராகாதிகளைக் கைவிடுவது போற் காட்டிக்கரவிலாளுகின்றவர்களையே மூடுமென்பது. மாயாசகிதனன்றெனக்கா ட்டத் தானிகர்தனக்காமீசனெனவும்; அவித்யாசகித ரன்றெனக்காட்டத் தங் களைத்தாங்கண்ட ஞானிகளெனவும்; மூடுமென்னுங் குறிப்பேற்றோர்சகிதரெ னவும்; மூடாமலென்பா ரன்றியெனவும்; நாஸ்தி, நபாதியென்பவற்றைத் திரி காரணசாட்சியாகவேற்பவர் நாஸ்திகர், வாக்குக்காயநீங்கலாக மனச்சாட்சி மாத் திரமாகவேற்பவர் போலியாஸ்திகர் என்பது குறிப்பிற்றோன்ற, நாஸ்திநபாதி

யென்னு மூனிறையுயிர்களெனவுங் கூறினர். ஊனைத்தேகமென்னல், காரண வாகுபெயர். ஒருணர்வுமுத லியுணர்விறுதியாயுள்ளவுணர்கருவிக ளுயிருக் கென்க. சத்தமுதலிய பஞ்சவிடயங்கட்கு மிவையுணர்கருவியாஞ லிவற்றிற் குணர்கருவி மனமாகவேண்டும்; இம்மனதிற்குணர்கருவி யுயிராகவேண்டும்; இவ்வுயிருணர்வாயினு மூடலைத்தானென்றிருத்தலா லதியாமையாகவேண்டும்; இவ்வதியாமைக் குணர்கருவி யோர்சுயம் பதி விருக்கவேண்டும், அதனினுமே லாய கண்ணின்மையி னதனையுருவகப்படுத்தி, யதகுருடாம்வண்ண மிருள் போல் மூடுமென்ற ரிஃதெவர்க்குமனுபவமாதலிற் றடையென்னை? அவ்வு ணர்வு; தன்னையுந் தனக்காதாரத்தலைவனையுங் காணுததற் கேதென்னை? இவ்வாவரணத்தாலன்றே, அன்றேற்கூறுக. இவ்வாவரணமாவது, பஞ்சகோ சம்; ஆவரணமெனினுங் கோசமெனினு மொக்கும். இஃதெவ்வுயிர்பாலின்று, உளதாதலிற் பொதுப்பட வுயிர்களென்றார். இதனைத் தன்பாலிருக்கக்காணத் தெரியாதார் மதத்தராதலி னிதனைமறுப்பர். வேதாந்திமாத்திரஞ்சோதனையக ளானுதலின் மறுக்கான். கண்டதேகாட்சி, கொண்டதே கோலமென்னுங் கொள்கையையகன்று மொருவருமில்லை; இவர்களேவிட மதத்தென்பவர் கிடையார். இவர்க ளிவ்வாவரணசத்தியை யேற்பதெவன். இவ்வாறே போ லிஞானியரும், அடா ஞானியருமிதனையேலார். எலாமைக்கேதிம்மறைப்பாலெ னவுணர்க. (சக)

அ - னை க.

[கூடஸ்தபிரமமாகிய வதிஷ்டானத்திற்கும் சிவேஸ்வரரென்னு மாரோ பத்திற்குமுள்ள பேதந்தெரிய வொட்டாது மறைப்பது மிவ்வாவர ணசத்தியேயென விக்கவியிற் கூறுகின்றார்.]

50. பூன்றமாம் பிரமத் திற்கும் புறத்துள விகாரங் கட்கு
மான்றகூ டத்த னுக்கு மகத்துள விகாரங் கட்குந்
தோன்றிய பேதஞ் சற்றுந் தோன்றுமன் மறைத்து மூடி
மூன்றிய பவவி யாதி யுண்டாக்கு மூபாதி யீதே.

(இ-ள்.) பூன்றமாம் பிரமத்திற்கும் புறத்துளவிகாரங்கட்கும், எ-து. பரிபூரணமாயுள்ள பிரமத்திற்கும்; அதற்குப் புறம்பாயுள்ள ஈசனும், அவ னதுபாதிகுணந் தொழில்களுமாகிய விவைகட்கும்:— ஆன்றகூடத்தனுக்கு மகத்துளவிகாரங்கட்கும்,— எ-து. எவற்றினுஞ்சிறந்த பிரத்தியேகாத்மாவுக் கும், அதற்குவெதிருத்தமாக வகத்திலுள்ள சீவனும், அவனதுபாதிகுணந் தொ ழில்களுமாகிய விவைகட்கும்:— தோன்றியபேதஞ்சற்றுந் தோன்றுமன் மறை த்தமூடும்,—எ-து. உண்டானவதிஷ்டான வாரோபபேதஞ் சிறிதுந்தோன்ற வொட்டாம லதனையறியவெழுந்த வுணர்வைமறைத்துச் சத்தென்றுணரும் படி யசத்தாயுள்ளவைகளே மூடிக்காட்டும்:—'ஊன்றியபவவியாதியுண்டாக்கு மூபாதியீதே,—எ-து நிலையாயுள்ள பிறவிநோயைவிடாது விளைவிக்கத்தக்க வுபாதியாவ திவ்வாவரணசத்தியே வேறன்று,—எ-து.

இவனெதற்கு மூபாதியாயிருக்கிறா னென்னுமிடத்தில் தடையெனப் பொருடரலா லிங்கேதடையெனப் பொருள்கொண்டாம். தன்னேத்தானு ணர்தற்குத்தக்கா முயல்வெங்குளதோ வங்கே தடையாயிரா தேனையவிடத் துத் தடையாயுறுமென்றதனால், பத்திகாண்டி, கன்மகாண்டியைக் குறிப் பிக்கின்றது இவ்விருவருள் பத்திகாண்டியுந் தன்னே யடிமையாக்கியதே யன்றித் தன்னேத்தான் விசாரித்துத் தெளியவில்லை, இதனால் பொருளல்ல வற்றை யாண்டானடிமையென்றான் ; தன்னே யடிமையாக்கிய விம்முயற்சி சித்தசுத்திக் கையந்ததன்றி யாவரணசத்தியை யகற்றற்கன்று, எங்ங னமெனில் பஞ்சகோசவிசாரத் தெளிவின்மையினாலும், ஆசானின்றித் தன் னேத்தானாராய்வுழி யெட்டாமையி னாஸ்திதியெனவும் ; இச்சாஞானக்கிரியை யென்னும் புடைபெயர்ச்சியிருத்தலி னிவை வினைமுதலின்றி நிகழா, வினை முதலிருக்க வேண்டுமெனி னிருந்தாற் காணப்படானா வென்பது நபாதியெனவும் கொள்ளுங்கொள்கை யகலாமையினானுமென்க. சொரூபசமாதி, சகச மெனக்குறிக்க, அகம்புறமென்றது. சொரூபசமாதி யகத்தினிகழ்வது, சொரூ பசமாதியிலதிஷ்டானம், கூடஸ்தன் ; இதற்காரோபமான விகாரங்கள் சிதா பாசன், வியஷ்டிமனமுதலிய கரணக்குழாங்கள், இதற்குவிடயம் சத்த, பரிசு ரூப, ரச, கந்தமென்னுந் தன்மாத்திரைகள், சுரோத்திரம், தொக்குமுதலிய வை யுணர்வுகள், இதற்குவிடயம் சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் ஸ்தூ லபூதாம்சங்கள், வாக்கு, பாணி, பாதம், டாயு; உபஸ்தம் என்னுங் கன்மேந் திரியக்குழாங்கள், இவற்றிற்குவிடயம் வசன, தான, கமன, விசர்க்க, ஆனந் தமென்னுங் குழாங்கள், பிராண, அபானமுதலிய தசவாயுக்கள், இவற்றின் சேட்டைபிரிவுகள், மெய், வாய் முதலியவவயங்கள், இவற்றிற்கவயவி, தூல தேகம் முதலியவைகள், இன்னு மித்தூலதேகத்திற்கு விகாரங்கள் குழவிமுத லியவைகள், இன்னு மித்தூலதேகத்திற்கு விகாரங்கள் குழவிமுதலிய பருவ பேதகங்கள், சாராசபேதங்கள், எழுவகைத்தோற்ற பேதங்கள், வருணாசிரம பேதங்கள், அண்ணன், தம்பி, தாய், தந்தைமுதலிய பாத்தியவகைகள், இவை போல்வனபிறவுமாம். இதனை யிங்ஙனம்விளக்க, ஆன்றகூடத்தனுக்கு மகத் துள விகாரங்கட்குமெனவும் ; இங்ஙனமாய சொரூபசமாதி நிறைவேறி னன்றிச் சகசசமாதி கைகூடாது. இம்மரபு நோக்கிப் புறமெனவும்; சொ ரூப சமாதியாவது; அகத்தில் தேகமுதலான்மா விறுதியாக நின்ற தத் துவங்களை நியதிகளைந்துசேறல், இது வஸ்துவை யணுவுக்கணுவாகத் தரி சித்தல்; இதனைச் சொரூப சமாதியெனவும்; அகச் சமாதி யெனவுங்கூறு வர். இதுநிற்க, சகச சமாதியாவது ; தேகத்துக்குப்புறம்பி லுடலாதிப் பிரமபிறுதி யாகநின்ற வியாபகவியாப்பியங்களை நியதிகளைந்துசேறல்; இது வஸ்துவை மகத்துக்கு மகத்தாகத்தரிசித்தல் ; இதனைச் சகசசமாதியென வும், புறச்சமாதியெனவுங்கூறுவர். சகசசமாதியிலதிஷ்டானம், பிரமம்; இதற் காரோபமான விகாரங்கள் ஈசன், சமஷ்டிகரணங்கள், அதற்கியைந்தவிடயங் கள், ஞானப்பொறிகள், அதற்கியைந்தவிடயங்கள், கன்மப்பொறிகள் அதற்கி யைந்தவிடயங்கள், வாயுக்கள், தேகங்கள், புவனங்கள், தூலபூதம், சூக்குமபூ தம், குணத்ரயம், அகங்காரதத்துவம், மகதத்துவம், மூலப்பிரகிருதி, இவை

போல்வன பிறவுமாம். இதனை யிங்ஙனம் விளக்கப் பூன்றமாம்பிரமத்திற்கும் புறத்துளவிகாரங்கட்கு மெனவும் கூறினர். கற்பனாசகிதத்தைக் கற்பனாரகித மெனச் சீவேஸ்வராக்கோடல், ஆவரணத்தாலாதலின் மறைத்து மூடுமென்றார். இம்மறைப்பையேலாரகன்றவராகவேண்டும். அங்ஙனமின்றே, பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்வராதலின் தன்னேத்தா னெங்ஙனமுணர்வர், அங்ஙனமுணராக்காறு மயலே நானென்னும்பிராந்தி யெங்ஙனமகலும், அகலாக்காறும் வினையுடல்கள் வந்துவந்துநீங்கும், ஆதலின் பவவியாதியுண்டாக்குமுபாதி யீதேயென்றது சத்தியம் சத்தியம். ஞாயமுஞ், சோதனையும், அனுபவமுமிருத்தலி னிதனைமறுத்தல்மூடம்.

(க-து.) மெய்க்கும்பொய்க்கும் பேதந்தெரியவொட்டாமல் மெய்யே பொய்யாகவும், பொய்யேமெய்யாகவும் காணச்செயுமென்பது. (க0)

அ - கை.

[முன்னர் பொய்யை மெய்யாகக்கோடல்போன்று சீவேஸ்வரர்களைக் கூடஸ்தபிரமமாகக்கோடலிற் பொய்மெய்க்குள்ள பேதந்தெரியவொட்டாமல் மறைக்கத்தக்கது ஆவரண சத்தியென்றுசிரியாகூற, மாணாக்கனைய னே! பொய்க்கும்மெய்க்கு மிடைதனின்றொன்றிவற்றைமறைக்க, இதனால் மெய்மறைபடினும், மறைபடாவிடினும், பொய்யங்ஙனமாகா தொருபடித்தாநின்று தோற்றற்கேதென்னையோவென வினவ, அதற்குத் தர மிக்கவியி லாசிரியர் கூறுகின்றார்.]

51. ஆதார மறைந்து போனு லாரோப மெங்கே தோன்றும்
மாதார மறையா தாயி னூரோப மிலையே யென்று
லாதாரஞ் சமம் விசேட மாமென விரண்டு கூறு
மாதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேட மாமே

(இ-ள்.) ஆதாரமறைந்துபோனு லாரோபமெங்கேதோன்றும், எ - து, ஆதாரமாகிய கூடஸ்தபிரமம், ஆவரணசத்திமறைக்க வதனால்மறைபடுமாயின், அவ்வதிஷ்டானத்திற் காரோபமாயுள்ள சகமாதிதிரிபதார்த்தங்களுமெங்ஙனங் காணப்படும், காணுமற்போகவேண்டியதே, அதுனாயம், காணப்படுகின்றதே:— ஆதாரமறையாதாயினூரோபமிலையேயென்றால், எ-து. ஒன்றுமறைக்க வதனாலாதார மறையமாட்டாதென்பீராகி லப்போதாரோபமறைபடவேண்டுமே, மறைபடாததென்னை ? என்று கேட்பையாகில்:— ஆதாரஞ்சமம்விசேடமாமென விரண்டுகூறும், எ-து. அதற்காசிரியராதாரமென்பது; சமமெனவும், விசேடமெனவு மிரண்டுகூறுநிற்கும்:—ஆதாரஞ்சமமாமெங்கு மாரோபம்விசேடமாமே, எ-து. ஆதாரமேசமமாதலி னச்சமமென்ப தெங்ஙனும் பரிபூரணமாநிறைந்துள்ள வதிஷ்டானமாம், விசேடமென்ப தேகதேசமாயுள்ள கற்பிதமாம், எ - று.

ஆதாரங்காணுதபோதாதேயங்காண வேண்டுவதின்றே, காண்பானேன் ? ஆதாரந்தோன்றும்போ தாதேயந்தோன்றவேண்டுவதின்றே, தோன்றுவதென் னே? என்னுங்கேள்வியினப்பிராயம் ; மெய்ஞ்ஞானம் விளங்காதார்க்குச் சகந்தோற்றுவதும், விளங்கினர்க்குந் தோற்றுவது மென்னையென்பது. என வே, ஆதாரமுண்டாயி னுரோபமுண்மையும், ஆதாரமின்றாயி னுரோபங்காண் கையு மிருத்தலி னுதாரவாதேயமென்னுஞ் சொல்லுக்குப் பொருத்தமெங்கே யென்பதைக் குறிப்பிக்க, இங்ஙனம் வினவினதாகப் பெற்றும். அதற்குவிடை கூறப்புகுந்தார்; சூரியனே, கானல், சலமென விரண்டானற்போல, ஆதாரஞ், சமம், விசேடமாமென விரண்டுகூறுமெனவும்; கானலென்னுமுண்மைக்குச் சலங் கற்பிதமாயதெங்ஙனமோ, அங்ஙனமாயதெனக்காட்ட, ஆதாரஞ்சமமா மெங்கு மாரோபம்விசேடமாமேயெனவுங் கூறினர். சமமாதாரமாமெங்கும், விசேடமாரோபமாமெனமுடிக்க. ஆதாரத்தைத்தவிரச் சமம்விசேடமின்றெ னக்காட்ட விங்ஙனங் கூறவந்ததன்றி வேறன்றெனக. மெய்ம்மையென்றுல கைக்கருதிக் கடாவல் தவிர்தியெனச்சொல்லாது சொல்ல விவ்விடைதந்தனர், இவையாவுங் கற்பிதமெனவிடா தாங்காங்கு காட்டிவந்தனராதலினென்க. தனக்கெனச் சொரூபமொன்றிலாத சகசீவபரங்களைச் சத்தெனக்கோடலைத் தவிர்தற் கத்தியாரோபமவாதங் கூறவந்ததன்றியிருந்து கூறவந்ததன்று. சுவா னுபவமுறையே மூற்றியவிடத்தன்றி யிவ்வுள்ளவெங்னந்தெரியும், தூமந்தோற் றியவிடத்துந் தோற்றவிடத்து மக்கினியிருக்குமாறுபோன்று, ஆரோபந் தோற்றியவிடத்துந் தோற்றவிடத்தும்ஆதாரமிருக்குமெனவதிக இதனைத் தின வனுபவத்தில் நம்மிடத்தில் நாமேகாணலாம். எங்ஙனமெனில், சகந்தோற்றிய போதுந் தோற்றதபோதும் ஸ்மரணையிருக்கின்றது, இருப்பதா லேனையவீர வத்தைகளினு நிகழ்வதையுணருகின்றது. (இக)

அ - கை

[மூன்னர் சமம் விசேடமென்றதைத் திட்டாந்த
காட்டந்தங்களினு லிக்கவியில் விளங்கக்கூறுகின்றார்.]

52. சகமதி லிதுவென் சுட்டாச் சமானக்கண் மறைந்திடாது
மிகவுரை கயிறும் பாம்பும் விசேடங்கண் மறைந்து போகும்
அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத்திடாது
பகர்வதோர் விசேடஞ் சீவன் பரனெனு மவரை மூடும்.

(இ-ள்.) சகமதி லிதுவென் சுட்டாச் சமானக்கண் மறைந்திடாது,—எ-து, உலகமெவற்றிலும் யாவராலு மிஃதென்சுட்டியறியவொண்ணுத சம மாகிறகண், ஒன்றுமறைக்க அதலுல்மறைந்திடாது:—மிகவுரை கயிறும் பாம் பும்விசேடக்கண் மறைந்துபோகும்,—எ-து. பெரும்பாலு மூலகத்தார்ல் வழங்கத்தக்க பழுதையும் பாம்புமாகிற விசேடக்கண், ஒன்றுமறைக்க அதலுல் மறைந்துபோகும்:—(அதுபோல்) அகமெனுஞ் சமானந்தன்னை யஞ்ஞான மறைத்திடாது,—எ-து சமமெனப்படுவதாகிய தானெனும்பொருளை, யஞ்

ஞானமென்னு மாவரணமானது மறைக்கமாட்டாது:—பகர்வதோர் விசேடஞ் சீவன் பரனெனுமவனைமூடும், எ-து. சொல்லத்தக்கமற்றெனறு விசேடமெனப்படுவதாம், அங்ஙனம் விசேடமெனப்படுவதாகிய சீவேஸ்வரர்களேமறைக்கும், எ-று.

திருஷ்டாந்தத்தில் சமமாக நின்றதூஉம், விசேடமாக நின்றதூ உங்கண்ணே; எங்ஙனமெனில், பழுதைபாம்பாகவும் மீண்டுமதுபழுதையாகவுமாறவில்லை; இதுபார்வையின் பிரதிபலனமேயன்றிவேறன்று. பார்வைபழுதையையாராய்வதன்முன்னர் பாம்பாகவும், பின்னரன்றுகவுந் தோற்றியதியாது ? பழுதையன்றே. அஃதிருந்தவண்ணமிருக்கின்றதே, பாம்புண்மையன்றே, பிராந்தியன்றே; அந்தப்பிராந்தி யறிதலின்கண்ணதோ, சடத்தின்கண்ணதோ, அவ்வெழுச்சி சடத்தின்றர்மமெனில், உணர்தலின்றிய விடத் துண்டாகட்டும், அங்ஙனமின்றே, யறிதலின்றர்மமே. அன்றெனின் ஞாயம்வேண்டும், இன்றெனின் வாய்பொத்திக்கிடக்கை யுத்தமர்க்கழகு. பாம்பாகப்பிரதிபலித்ததும், அதனை மெய்யெனக்கண்டதும், கண்டுபயகம்பனுகுதிகளாகின்றதும், பின்னர் தெளிந்ததும், அக்குறிகளன்றிநின்றதும், இவ்விருவியப்புமுணர்த்த நின்றதும், பழுதையா, அது சடமன்றே, ஆதலின்கண்ணேயாம். கண்ணிங்ஙனமாறிற்றே, இன்றெனின், கண்ணேயன்றி யிக்குறிகளுண்டாகட்டும், இன்றெனின், கண்ணுக்கிரண்டு தர்மமிருகின்றன. இத்தனைவிகாரமாகின்றதுதானே, அன்றுய்ச்சாட்சியாகின்றதுந்தானே, இஃதன்றியும், பொருளல்லதைப் பொருளென்றுணர்ந்ததும், அங்ஙனமுணர்ந்ததாற் பொருளல்லது பொருளாகத்தோற்றுவதும்பின்னர்பொருளேப்பொருளென்றுணர்வதும்அங்ஙனமுணர்ந்தாற் பொருள்பொருளாகவிளங்குவதும், உணர்தல்தர்மமாகிய கண்ணேயன்றியின்றுமையின்தானே ஞாலஞ்ஞானமாக நிற்பதும், நிற்கவேயிங்கே திருக்குறிருசியம்வேறன்றுயிற்று; ஆகவே, தானே விகாரமும்நிர்விகாரமுமெனப்பொருடருகின்றது; தரவே, கற்பிதமுஞ் சுயம்புந்தானே யெனப்பெற்றும்; பெறவே சமமும், விசேடமும்வேறன்றெனத் தானேயருத்தாபத்தியாற் குறிக்கநின்றது. தானேபழுதையாகவும்பாம்பாகவு மாறியக்கண்ணுந்தானங்ஙனமாகாது சாட்சியாகின்றதுகண்ணுதலால் அதுபோலப் பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்தலும், பொருளேப்பொருளென்றுணர்தலும், அறிவாதலா லிந்தவறிவுக்குக்கற்பிதமென்றும், யதார்த்தமென்றும்பெயர்வரலாமே, ஆதலாற் கற்பித்தவறிவுக்குச் சீவேஸ்வரரெனவும், யதார்த்தவறிவுக்குக் கூடஸ்தபிரமமெனவும் பெயர்வரத்தகும் திருஷ்டாந்தாதார்ஷ்டாந்தங்கட்குப்பழுதின்மையை யிவ்வேதுக்களா லுணர்க. கண்ணென்பதுலகத்தையறிதல்பற்றி யறிதற்கருவியுளென்றெனவுலகத்தாரறிவரேயன்றி, யதுவாதலேயும், அங்ஙனமாதலேதிரிபுடியாதலேயும், இதுதானென வறியாதலெனக்காணலேயும், அங்ஙனங்கண்டு விருப்பு வெறுப்புற்றதிகலேயும், இன்னுமிவைபோன்ற புடைபெயர்ச்சிகளேயும், இவையே பந்தத்துக்கியைந்ததென்பதையும், இது பகிர்முகதிருஷ்டியா லாயதென்பதையும், இத்தனையனர்த்தமுமாயது கண்ணுலாதலா லிவையாவுமழிவதுங் கண்ணுலேயேயெனச் சகசமாதியென் றேரருந்தவமிருக்கின்றதென்பதையும், அஃதகமுகதிருஷ்டியா

லாவதென்பதையும், இதனுலாயபயன்துக்கபாவம், கிருதகிர்த்தியம், சர்வதா மாப்திகம், ப்ராப்திப்ராப்யம் என்பவற்றையுங் கேட்டுமறியார் பார்த்தும்றி யாரிவர்க ளிங்ஙனமாயநிலையதெனக் கண்ணே யெங்ஙனங் கணிப்பதென்பது தோன்றச் சகமதிலிதுவென்சுட்டாக் கண்ணெனவும்; பந்தமுத்திக்கையைந்த புடைபெயர்ச்சி சன்பாலிருப்பினுந் தானங்ஙனமங்ஙனமாவதுபோற் காண்ட லேயன்றி மற்றதென்றுமொருபடித்தாயிருத்தலின், சமம், விசேடம் என்ப வற்றுள் கண்ணேச்சமமெனவும், அதிஷ்டானமாதலின் மறைந்திடாதெனவும், மாறுந்தையதாதலின் கண்ணேவிசேடமெனவும், ஆரோபமாதலின் மறைந்து போகுமெனவும், அதிஷ்டானமு மாரோபமுந் தானேயாதலின் சமானக்கண் விசேடக்கண்ணெனவும், அதுபோலத்தானன்னியமாகாது விளங்குதலின், ப்ரக் ஞையைக் கூடஸ்த பிரமமென்பார், அகமெனுஞ் சமானமெனவும்; அவித்தி யாமாயா ரகிதமாதலின், அஞ்ஞானமறைத்திடாதெனவும், தானன்னியமாகவி ளங்கலின், ப்ரக்ஞையைச் சீவேசரென்பார், விசேடஞ் சீவன்பரனெனவும்; அவித்தியாமாயா சகிதமாதலின், அவனை யஞ்ஞான மூடுமெனவுங் கூறினர். இவ்வுரையை யுத்தமர்மறுக்கார், சோதனைஞாயத்தாற் புகட்டலினென்க. இங் கேயஞ்ஞானமென்ற சாவரணத்தை. இக்கவியில் திருஷ்டாந்தஞ் சமம்விசேட மெனவும், தார்ஷ்டாந்தஞ் சமம் விசேடமெனவு மிருகூறதாநிற்கும், மூன்கவி யில்,விசேடமாரோபமென்றதனுல் சமம்-அதிஷ்டான மென்றுயிற்று. அறிவே யதிஷ்டான மாரோபமெனக்காட்டக் கண்ணே யதிஷ்டான மாரோபமெனக் குறிப்பித்தார். (கூஉ)

இரச்சுவுக்கு இரண்டுரூபமுண்டு; ஒன்று சாமான்யரூபம்: ஒன்று விசே ஷரூபம்; இதுவென்பது சாமான்யரூபம்: இரச்சுவென்பது விசேஷரூபம்; இது சர்ப்பமென்புழி, மித்தியாசர்ப்பத்தோட பின்னமாய்ப் பிராந்தி காலத்தி லுந் தோன்றுநிற்கும் இதுவெனும் ரூபம் சாமான்யரூபம்: யாதுபிராந்திகாலத் திற் றேன்றுதிருந்து தான் தோன்றுவதால் பிராந்திநிவிர்த்தியாமோ! அது இரச்சுவின் விசேஷரூபம்; அப்படியே ஆன்மாவுக்கும் சாமான்யமும், விசேஷமுமாகிய இரண்டுரூபமுண்டு; சத்துரூபம் சாமான்யமாம்: அசங்கத் தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத் தன்மைமுதலியன விசேஷரூப மாம். எனினை? தூலசூட்சும சங்காதங்க ளுள்ளனவென்புழி, தூலசூட்சும சங்காதப்பிராந்தி சமயத்திலும் மித்தியாசங்காதத்தோடபின்னமாய்ச் சத்து ரூபந்தோன்றுநிற்பதால் ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபமாம்: தூல சூட்சும சங்காதங்களின் பிராந்திசமயத்தில் ஆன்மாவின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மை, நித்தியமுத்தத் தன்மைமுதலிய சொரூபந்தோன்றுமல் அசங்கத்வமுதலிய ஆன்மாவின்சொரூபந்தோன்றுவதால் சங்காதப்பிராந்திநிவிர் த்தியாகலின் அசங்கத்தன்மை, கூடஸ்தத்தன்மைநித்தியமுத்தத்தன்மை,வியா பகத்தன்மைமுதலியன விசேஷரூபமாம்.சர்வப்பிராந்திகளிலும் சாமான்யரூபம் ஆதாரமென்றும்,விசேஷரூபம்அதிஷ்டானமென்றுஞ்சொல்லப்படும். எப்படிச் சர்ப்பத்திற்கு ஆதாரமாயுள்ளஇரச்சுவின்சாமான்யமாகியஇதுவெனும்ரூபம்சர் ப்பத்திற்கு ஆதாரமும்,விசேஷமானஇரச்சுரூபம்அதிஷ்டானமுமாகிறதோ!அப்

படியே மித்தியாப்பிரபஞ்சத்திற்கு ஆசிரயமாவுள்ள ஆன்மாவினதுசாமான்யமாகிய சத்துரூபம் பிரபஞ்சத்திற்கு ஆதாரமும், அசங்கத்வமுதலிய விசேஷரூபம் அதிஷ்டானமுமாம் ; இவ்வாறு, ஆதாரவதிஷ்டானங்கட்குச் சர்வஜ்ஞாத்மா என்னும் முனிவரால் கிஞ்சித்பேதஞ் சொல்லப்பட்டிருக்கிறது. மந்தாந்தகாரத்தில் சாமான்யரூபத்தால் ஞாதமாயும்,விசேஷரூபத்தால் அஜ்ஞாதமாயும் உள்ள இரச்சுவில் சர்ப்பாத்தியாசம் உண்டாகின்றதேயல்லாமல் அத்தியந்தம் ஞாதமாயும், அத்தியந்தம் அஜ்ஞாதமாயுமுள்ள இரச்சுவில் அத்தியாசம் உண்டாகக் காணப்படவில்லை. நிர்விசேஷமான ஆன்மாவில்ஞாத,அஜ்ஞாதத்வன்மைகள் கூடாமையால் பிரபஞ்சவத்தியாசமுங் கூடாதே எனின்? இவ்வார்த்தை பொருந்தாது. என்னை ? ஆன்மா உண்டென்பது சகலர்க்குந்தோற்றரவாகின்றது ; தன்னுடைய சொரூபத்துக்கு ஆன்மாவென்று பெயர் : யான் இல்லனென்று ஒருவனுக்குந் தோற்றரவுண்டாகவில்லை ; பின்னைபோ ?உளனென்றே தோற்றரவுண்டாகின்றதாகலான் சத்துரூபத்தால் ஆன்மா ஞாதமாயும், யான் சைதந்நியன், ஆநந்தன், வியாபகன். நித்தியசுத்தன், நித்தியமுத்தன் என ஒருவனுக்குந் தோற்றரவுண்டாகாமையின் சைதந்நிய, ஆநந்த, வியாபக, நித்தியசுத்த, முத்தரூபத்தால் ஆன்மா அஜ்ஞாதமாயும் இருக்கின்றது : இவ்வார்த்தை அநுபவசித்தம் ; இவ்வநுபவசித்தவார்த்தை யுத்தியினால் நிவிர்த்தியாகாது யாவர்க்குந்தோற்றரவாகின்ற ஆன்மாவின் சத்துரூபம் சாமான்யரூபம் : கேவலம் ஞானிக்கே பிரதீதியாகின்ற சேதன, ஆநந்தாதிகள் விசேஷரூபம். யாதொன்று அதிகாலத்தில், அதிகதேசத்திலிருக்கும் அது சாமான்யரூபம் : நியூனகாலத்தில், நியூனதேசத்திலிருப்பது விசேஷரூபம். சத்தைப்போலவே சேதன ஆநந்தாதிகள் ஆன்மாவின் சொரூபமாய் எங்கும் வியாபகமாக இருத்தலால் இவைகட்கு நியூனதேசமும், சத்துரூபத்திற்கு அதிக தேசமும் உளவெனலும், ஆன்மா நிர்விசேஷமாதலால் சத்துரூபம் சாமான்யக்கூறு, சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறு எனலுங்கூடாதே யெனின் ? அற்றன்று; சத்தின்றோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்திலும் உண்டு. ஆன்மா சேதனம், ஆநந்தரூபம் என்னுந்தோற்றரவு யாவர்க்கும் அவித்தியாகாலத்தில் இல்லை : கேவலம் ஞானிக்கே உண்டாகின்றது. அவித்தியாகாலத்திலும் சேதன, ஆநந்த, முத்தத்துவம், சுத்தத்துவமாதியும் உளவேனுந் தோற்றரவாகாமையின் இல்லாதனபோலும் இருந்தன ; இவ்வபிப்பிராயத்தால் அவை நியூனகாலத்துள்ளன எனவும், சத்துரூபம் அதிகாலத்துள்ளது எனவுங் கூறினர். சத்துரூபத்திற்கும், சேதன ஆநந்தாதிகட்கும் சாமான்ய விசேஷபாவம் இல்லையாயினும் அற்பகால, அதிகாலத்திற் றோற்றரவாகின்றமையின் சாமான்ய விசேஷபாவம்போலும் இருந்தன ; இக்காரணத்தால் ஆன்மாவின் சத்துரூபஞ் சாமான்யக்கூறு என்றும், சேதன ஆநந்தாதிகள் விசேஷக்கூறுகள் என்றுஞ் சொல்லப்படும. ஆன்மா நிர்விசேஷமென்னும் சித்தாந்தத்திற்கும் ஆனியில்லை. என்னை ? ஆன்மாவினிடத்துச் சாமான்யவிசேஷபாவம் அங்கீகரிக்கில் ஆன்மா நிர்விசேஷமென்னுஞ் சித்தாந்தத்திற்கு ஆனியாம் ; அவை அங்கீகாரமில்லை : அவித்தையினுற் சாமான்ய விசேஷம்போலத் தோற்றுவதாற் சாமான்ய விசேஷபாவங்கூறினர் ; இவ்வாற்றால் சத்துரூபத்தால் ஞாதமாயும், சேதன, ஆநந்த,

நித்தியசுத்த, நித்தியமுத்த பிரமரூபத்தால் அஞ்ஞாதமாயும் உள்ள ஆன்மாவில் பிரபஞ்சம் ஆரோபமாகக்கூடும் என்றறிக.

உரைவேறு பாடு.

முன்னே இந்நூற்குரை செய்திருப்போர், "சகமதிலிதுவென் கூட்டாச் சமானக்கண்" என்னும பாடத்தை ஒப்பினதும், சிவேசுரரை அஞ்ஞான மறைக்கும் என்று பதவுரையிற் கூறினதும், விசேஷவுரையில், "சீவன் பரனெனும் அவரையுடுமீ" என்றது, அவர்கள் உணர்வை என்றதும், தாற்பரியத்தில் ஆரோபமான சிவேசுரரைத் தமக்கு ஆதாரமான கூடஸ்தபிரமத்தைப் பார்க்கவொட்டாமல் அவரது உணர்வை இவ்வாவரணம் மறைக்குமேயன்றி ஆதாரத்தைமறைக்கமாட்டாது என்று கூறியிருப்பதும் வேதாந்த சம்பிரதாயப் பொருள் அன்றும் ; ஆகலின், அவை சாஸ்திர விருத்தமாம். இலேமறை காய்போற் செய்யுளிற் புதைந்துகிடக்குந் தத்துவார்த்தங்களே விரிக்காமல் செய்யுட்குப் புறம்பாயுள்ள வார்த்தைகளே விரித்திருக்கின்றனர். சிவேசுரரை ஆவரணம்மறைக்கும் என்று இச்செய்யுட்கு உரைசெய்தோர்.

"தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி"

என்னும் - சுகம் செய்யுளே மறந்தனர்போலும்.

சிவேசுரர்சொரூப நிரூபணம் கிரந்தகாரர் வெகுவிஸ்தாரமாகச் செய்திருக்கின்றனர். அங்கே சிவசொரூபத்தில் ஏகத்துவ, அநேகத்துவவிவாதங்களும் பலவுள. சர்வமதங்களிலும் ஈசுரன் ஒருவன், சர்வஜ்ஞன், நித்தியமுத்தன் என்றொப்பினர். ஈசுரனிடத்து ஆவரண அங்கீகாரம் எந்த அத்வைத வாதகிரந்தங்களிலும இல்லை. யாரொருவர் ஈசுரனிடத்து ஆவரணம் உண்டென்பரோ! அவர் வேதாந்த சம்பிரதாயத்திற்குப் பகிர்ப்பூதராம் ; ஆயினும், நாநா அஞ்ஞானவாதத்தில் அஞ்ஞானம் சிவாசிரிதம், பிரமவிஷயகமாம் என்பது வாசஸ்பதியினுடைய மதம். அவர் சிவனுடைய அஞ்ஞானத்தால் ஈசுரன் கற்பிதம் என்றும், பிரபஞ்சம்நாநாஎன்றும் ஒப்பினர்; அப்படி ஒப்பினும், சிவனுடையஅஞ்ஞானகற்பிதமான ஈசுரனும் சர்வஜ்ஞன் என்றேஒப்பினர், ஈசுரனிடத்து ஆவரணம்உண்டென்றங்கீகாரம் இல்லை என்று "விருத்திப்பிரபாகாகிரந்தத்தில் சீவேசுரப்பிரசங்கத்திற்" கூறியிருக்கின்றது. ஈசுரன் உணர்வை அவரணசத்திமறைக்கும் என்று அவ்வுரைகாரர்கூறியது யாதுகருதியோ! அறிகிலேம்.

அ - கை.

[உண்மைவிளங்கவொட்டாமல் மறைப்பது விக்ஷேபசத்தியாயிருக்க, ஆவரணசத்தியின்மே லிப்பழியையேற்றியது யாதுபற்றியோவென, மாணாக்கன் வினவுவதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

53. கேவல நிலைதான் முமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவி தேஷ மண்மே

வாவர ணந்தா னேபா ழுசர்த்தி மென்று ரைத்த தேதோ
மேவரும் குருவே யென்று விளைய மகனே கேளாய்.

(இ-ள்.) கேவல நிலைதோன் றுமற் கெடுத்தது, எ-து. நிரதிசயானந்த வாழ்வு, விளங்கவொட்டாமல் மறைத்துக்கெடுத்தது:— பஞ்சகோசஞ் சீவ னுஞ் சகத்துமாகச் செனித்தவிக்ஷேபமன்றே, எ-து. பஞ்சகோசமாகவும், சீவனுகவும், செகத்தாகவுமுண்டான விக்ஷேப சத்தியல்லவா, இங்ஙனமிருக்க:- ஆவரணந்தானேபா முசர்த்தமென் றுரைத்தேதோ, எ-து ஆவரணசத்தியே பாழென்றும் அனர்த்தரூபமென்றுங் கூறியது யாதுபற்றியோ:— மேவருங் குருவேயென்று விளைய மகனே கேளாய், எ-து. கிடைத்தற்கரியகுருநா தனே யிதனைவிளக்கவேண்டுமென் றிரந்துவிளைவினவினைநோக்கி ஞானபுத் திரா யான்கூறக் கேளுதி, எ-று.

தானேதானாக விளங்குவதைக் கேவலநிலையென்றார். கெடுத்ததென்பதை மறைப்பாற்கெடுத்ததாதலின் மறைப்புவருவித்தாம். விக்ஷேபசத்தியின் சேட்டை, கேவலநிலை தோன்றுமற்கெடுப்பது. அதனதுநிலை ; பஞ்சகோசஞ் சீவ னுஞ் சகத்துமாகச் செனிப்பது. அனர்த்தம், தனக்கெனச்சொரூபமொன் றில்லாதது: நமதுண்மைவடிவை விளங்கவொட்டாமலு மதையுன்னவொட் டாமலு மறைக்கின்றது ; கோசமுஞ் சீவனுஞ் செகத்தும் பிரத்தியட்சமா தலினுனும், இவைமயமாகின்றது ; விக்ஷேபமாதலினுனும் விக்ஷேபத்தின் மேல் வைத்துப் பழிகூறினுன். ஆனந்தமயகோசத்தைப்பற்றி மற்ற நான்கு கோசமு மிருந்தலினுனும், இனம்பற்றி யிருத்தலினுனுமிங்கே கோசமைந்தெ னவும், விக்ஷேபசத்தியன்றேனும் பஞ்சகோசவாதாவிலிற்றலி னிதுபற்றிச் சீவனெனவுங் கூறினுர். இது வழுவன்று. (நிக)

அ - கை.

[செனனத்துக் கனுகூலமாயினு முத்திக்கு மனுகூலமாயிருப்பதன்றே விக்ஷேபசத்தி; ஆவரணசத்தி யங்ஙனமன்றே, செனனத்துக்கே யிடமாயதென விக்கவியிற்கூறுகின்றார்.]

54. தோற்றமாஞ் சத்தி தானே துன்பமாம் பவமா னலு
மாற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூல சகாய மாகு
மூற்றமாம் பகற்காலம்போ லுபகார நிசியி னுண்டோ
மாற்றமென் னுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல்லாதே.

(இ-ள்.) தோற்றமாஞ் சத்திதானே துன்பமாம் பவமானலும், எ-து. விக்ஷேபசத்தியே துக்கரூபமாகிய செனனத்துக் கையைந்தகருவியாயினும்:— ஆற்றலான் முத்தி சேர்வார்க் கனுகூலசகாயமாகும், எ-து. நிட்காமியவலியா லுக்கியமுத்தியடைபவர்க் கையைந்தசகாயமாகவு மிருக்கும்:—ஊற்றமாம்பகற் காலம்போ லுபகாரநிசியினுண்டோ, எ-து. தெளிவுக்கிடமாகிய பகற்காலத் தைப்போல வுபகார மிராக்காலத்திலுண்டா:— மாற்றமென்னுரைப்பேன்

மைந்தா மறைப்பது மிகப்பொல்லாதே, எ-து. அந்தப்பகைமையைக்குறித் தென்னசொல்லுவன் ஞானபுத்திரா, அறிவை மறப்பதே யியல்பாகவுடைய வாவரணசத்தியானது யாதினு மிகக்கொடியது. எ-று.

விக்ஷேபசத்தியைவிடப் பவம்வேறன்றெனத்தோன்றத் தேற்றேகாரந்தந் தனர். பவத்துக்கியல்பு துன்பமெனலைத் துன்பமாம்பவமென்றார்: அறிவென் பதேவிக்ஷேபம் அறியாமையென்பதே யாவரணமெனக்குறிக்க, பகற்காலமெ னவும் நிசியெனவு முவமானித்தார். ஒன்றையொன்றுவுணர்தல் விக்ஷேபம், அதனு லொன்றுமற்றென்றுகத் தோற்றல் ஆவரணம். உணருந்தகையதாதலி னெய்ப்புழிப் பொருளேப்பொருளென வுணரினுமுணரும், உணர்வதாற் றுக் கநிவிர்த்தியுந் தடையற்ற வானந்தமுந்தரும், அங்ஙனம்தரலே முத்தியாதலால் விக்ஷேபசத்தி முத்தியடைவார்க் கனுகூலசகாயமாகுமென்று ரஃதுண்மை. ஆவரண மங்ஙனமாகா தென்பதற்குமாறென்னே ? இவையெல்லாந்தன்னையு மூலகையும் விசாரிக்கத்தக்கவாறு விசாரிப்பார்க்கேதெரியுமன்றி யேனையோ ரெத்திறத்தராயினு மவர்க்கெங்ஙனம் விளங்கும், விளங்குமெனச்செருக்கு தினு மிழுக்குறுவர். உலகம் மெய்மைபோற்றோற்றலி லாவரணமாம், இவ்வு லகம மெய்மையென மயக்காததெவரை ? இன்றுதலி னெங்ஙனமுண்மை யை விளக்கற்பால தன்றுமையின், உயிர்களெங்ஙனமுய்யும், உய்தற்கிட மின்மையின் மறைப்பது மிகப்பொல்லாதேயென்றார். ஒன்றுமற்றென்றுத் தோற்றல், ஸ்மரணைசெகத்தாகத்தோற்றலே. இதனையறியார், மதஸ்தராதலி னஞ்ஞாநிநித்தியமென்பர், படைப்பென்பர், சுபாவமென்பர், தமக்குப் போகசா தன வஸ்துவென்பர், இன்னு மிவைபோல்வனவாகக் குழறிவழிந்துவழக்கி டுவர். இங்ஙனமாகாது ஸ்மரணையாக வுலகைக்கண்டு களித்திருப்பவன் வே தாந்தி யொருவனே, அவனேஞானி. ஏனையர் தத்தமையே ஞானியரெனக் கொள்ளினுமஞ்ஞானியரே. (கூசு)

அ - கை.

[ஆமரணமென்னல் தேகமும் பிரபஞ்சமுமென்றல் பிராரத்தமுடிவிலும் சலப்பிரளயாந்தத்திலு மழியுமன்றே ; அழியினதுமுத்தியன்றே? முத்தியாயின்விக்ஷேபசத்தியால் யாதுபயனென ஆசங்கித்தது போலத் தானே யாசங்கித்ததற்கு விடை யிக்கவியில் தா னே கூறுகின்றார்.]

55 சுழுத்தியிற் பிரள யத்திற் றோற்றமாஞ் சகங்கண் மாண்டு
மழுத்திய பவமபோய் முத்திபடைந்தபே ரொருவருண்டோ
முழுத்தவி க்ஷேப மெல்லா முத்தியிற் கூட்டு கிற்கும்
கொழுத்தவா வரண முத்தி கூடாமற் கெடுத்த கேடே.

(இ-ள்.) சுழுத்தியிற் பிரளயத்திற் றோற்றமாஞ் சகங்கண்மாண்டும்,—எ-து தினசுழுத்தியிலும், சலப் பிரளயத்திலும் தோற்றன்மாத்திரமாவுள்ள தேகமுதலிய சமஸ்த பிரபஞ்சங்களும் மாண்டவிடத்தும்:—அழுத்தியபவம் போய்முத்தி யடைந்தபேரொருவருண்டோ,—எ-து. அவித்தையிற் பதித்திருக்

கின்ற சனனசஞ்சிதங்களுநித்து முத்தியடைந்தவர்கள் யாவராயினு மொரு வருளரோ விலரே:—மூழுத்த விக்ஷேபமெல்லா முத்தியிற் கூட்டுகிற்கும்,—எ-து. தாமசமென்னு மூழுக்குண்டதாகிய விக்ஷேபசத்தி பாகமனைத்தும் முத்தியிற்கூடும்படிசெய்யும்:—கொழுத்தவாவரணமுத்தி கூடாமற் கெடுத்த கேடே,—எ-து. மூடத்தன்மையில் மசர்த்த வாவரணசத்தியானது முத்தியிற் கூடாமற் கெடுத்தகேடிதுவாம், எ-று.

தேகத்துக்குப் பிராரத்தமூடிவுகாலஞ் சேய்மையாதலி னணிமைபற்றிச் சூழுத்தியெனவும், செகத்துக்குப் பிரளயம் பலவற்றுளாதலின் பொதுப்படப் பிரளயமெனவும், சுயம்பாகவொன்றிலாமையிற் றோற்றமாஞ் சகங்களென வும் கணமேனுங் காணுமற்போதலால் மாண்டெனவும், இழிவுசிறப்பும்மை யென்பதுதோன்ற மாண்டுமெனவும், எதிர்மறையெனக்காட்டவுண்டோவெ னவும்; காரணமைத்தும், பொதியைத்தும், இன்னுமிவைபோல் வனபிறவுமாத லின் விக்ஷேபமெல்லாமெனவும், இவற்றுட் சற்கருமந்திரிகரண மொத்துப்புரி பவ ரெங்குமுளராதலினுனும் இம்முயற்சி விக்ஷேபசத்தியின் புடைபெயர்ச்சி யாதலினுனும் முத்தியிற் கூட்டுகிற்குமெனவும், முன்னரே யாவரணசத்தியி னையதென்றும், அதனலுற்றுணருமிடத்தில் முத்திதருதற் கியைந்ததன்றுமை யின், முத்திகூடாமற் கெடுத்தகேடே யெனவுங் கூறினர். பிரளயமுண்டென் பதற் கடையாளம், பூமியைத் தோண்டிக்கொண்டு புகுந்தோறும் வெங்காயப் புரைக ளரிக்கவரிக்க வடுக்கடுக்காயிருக்குமாறு போன்றிருத்தலானும், ஆங் காங்கு பற்பல விநோதங்களிருத்தலினுனும். சர்வமத சாஸ்திரிகளும் மறுத்தற் கிடமின்மையினுனும், சலப்பிரளய மாங்காங்குவரக் கண்டுகொண்டிருப்பமாத லினனு மேற்றற்கையமின்றென வுணர்க. தேகாதிப்பிரபஞ்சநாசமே முத்தி யென்பாரை மறுத்தது. (இரு)

அ - ஸ் க.

[ஆவரணம்போலன்றி முத்திக்குமிடைந்தது விக்ஷேபசத்தியென்றீர், இதவு முன்னர்மித்தையென்றீர், இதுகாரணமாவருமுத்தியு மித்தையாமன் றேவெனத் தானேயாசங்கித்து விடை தானேயிக்கவியிற்கூறு

கின்றார்.]

56 சுத்தியில் வெள்ளி போலத் தோன்றிய தோற்ற மான
சத்தியும் பொய்யே யென்றுற் சத்திசா தனமாய் வந்த
முத்தியும் பொய்யா மென்னின் மோகநித் திரை விலங்கால்
நித்திரை தெளியுமாபோ னிருவாண நிலமெய் யாமே.

(இ-ள்.) சுத்தியில் வெள்ளிபோலத் தோன்றியதோற்றமான சத்தியும் பொய்யேயென்றால்,—எ-து. இளிஞ்சலில் தோற்றிய வெள்ளிப்பிராந்தி யெங் ஙனம்பொய்யோ அதுபோலச் சைதன்னியத்தில் மித்தையாகத் தோற்றிய விக்ஷேபசத்தியும் பொய்யாகுமேயானால்:— சத்திசாதனமாவந்த முத்தியும் பொய்யாமென்னின்,—எ-து. அந்த விக்ஷேபசத்திகாரணமாவந்த மோக்ஷமும் பொய்யாகுமல்லவாவெனக்கேட்பையாயின்:-மோகநித்திரைவிலங்கா னித்திரை

தெளியுமாபோ னிருவாணநிலை மெய்யாமே,—எ-து. மயக்கமான சொப்பன சிங்கங் காண வச்சிங்கத்தினு லக்கணமே யங்நித்திரைநீங்கித் தெளியுமாறு போன்று, அச்சத்தியாலுண்டாய மூத்தியுஞ்சத்தியமாம்,—எ-று.

அதற்குக் கூறியவிடை சொப்பனம் பொய்யாயினு மதிலெழுந்த சிங்கம் பொய்யே யதுவிழிக்கச்செய்ததுபோல விக்ஷேபசத்தியுஞ் சிரவணமனனதி ளாக னிறைத்துச் சாட்சாத்காரம் விளங்கச்செய்ய, அவ்விளக்கமேதீர்க்கசொப் பனசகந் தெளியச்செய்தலி னிங்ஙனங்கூறியதே தகுமெனவுணர்க. மானதம் விக்ஷேபசத்தியாதலானும், அந்தமானதம் விஸ்மரணையாதலானும், அந்த விஸ் மரணை யன்னிதாக்கர்த் தத்துவமாதலானும், விடயமே பயனகதுகர்தலானும், இதற்குக் காலவரையறை யின்றுதலானும், பிறப்பிறப்பு, துன்பவின்பம், மாறுக்கவலை, ஒழியாச்சஞ்சலம், தணியாவவா, முதலியவிவற்றையே விநோத மாகக்கொள்ள வியற்கையாக வரையின்றியவூழ் நிகழ்வதானும், இவையாவு மதோமுகத்தாதலானும், இதனுக்கியைந்தது காமியத்தவமாதலானும், இவற் றிற்சலிப்புறுவ தரிதாசலினனும், தேவகதியா லோர்போதிதுநேரிடினு மந்தர் மூக திருஷ்டி யினேயசென்றறியாததினு னீடேறில்லாதுமாறும், இங்ஙனநே ரிடுவது மீண்டுமாறுவதுங் கணக்கின்றிநிகழும், நிகழ்வுழி யிஃதென்னைகொ லோ ? இங்ஙனம் பலதரமாயினுமேமெனச் சற்றெண்ணம் வரும், அந்த வெண்ணமும் விடயப்பராக்கான்மாறும், மாறுமலிருத்தற் குபரதிபூணவரும், அதுவும் பிறவிமாறமாறும், மாறினும பூர்வசென்ம சமஸ்காரமாதலால் சற்றே நினைவுவரும், வரினத்தவக்குறையினின் றெடுத்தாளவரும், அதுமேலீட்டால், வைராக்கியம்வரும், அதுவும் பிறப்பு மாறுவதால் மாறி மாறி முடிவி னிலையு றும், இது மேலீட்டால் ஞானத்திற் சற்றே விசாரமுறும், அதுவும் பிறப்பு மாறமாற நழுவிநழுவி யெத்தனையோ சென்மாந்தத்தில் நிலையுறும். அதுவும், சிரவணம், மனனம் நிதித்தியாசனம், சமாதி, சரட்சாத்காரம், என வைந்து பாகமாம். இவற்று ளொவ்வொன்று மனக்சபிறவிகளி னிலைத்தலரிது, இவ்வைந் தும் வாய்க்கினும், சகசசமாதி கைகூடலரிது இது கைகூடல்வரையு மெத்த னையோ சென்மங்கன் வந்து வந்து போகும், கைகூடினுமு சொருபசமாதியுஞ் சகசசமாதியு மேதமாதலரிது, அதுவு மெத்தனையோ பிறவிகளில் கைகூடல ரிது, அங்ஙனங் கைகூடலன்றே முக்தி ; இம்முறையாக வரற்பால தாதலினு னும் விக்ஷேபமாகிய மானதம் மூத்தியிற் கூட்டுகிற்குமென முன்கவியிற் கூறி னர் ; அதனை நிலையுறுத்த வக்கவியினு மிங்ஙனங் கூறினரென்பதி லைய மென்னை ? பொய்யே மெய்யை விளக்குவிக்கு மென்றதற் கெடுத்துக்காட்டிய வவமானத்திற் பழுதென்னை ? ஞாயஞ், சோதனை, பொருத்தம், இனையவை னக் கேட்டறியாத ஏட்டுஞானிகளாற பழுதுறினது பழுதன்று. இதனைச் சிந் தித்துத் தெளிக. மயங்கற்கவென்பார் நிருவாண நிலைமெய்யாமே யென்றார். இங்கே சிங்கமென்றது, விருத்திஞானத்தை நிர்வாண நிலையென்பது, ஞானஞ் ஞானரகித நிலையை. என்னை ? "வாலமதி யூகமதி போன்ஞான வஞ்ஞானக் காலமுகாங்கண்டு கழித்தோமே." என்றார் சொருபஞானதேசிகர். கந்தரனுபூதி யில், "குறியைக் குறியாதகுறித் தறியு" மென்னுங் கவியில். அறிவற நிறி பா மையுமற் றதுவே" யென்று ரமணகிரிநாதர்.

(க-து.) பொய்யைப் பொய்யாற் கெடுக்கலாமென்பது. (நிசு)

அவத்தையின் அபிமானமே பந்தம் ; அதுவும் விருத்திவிசேஷமாகலின், விருத்தியினாற் செய்யப்பட்ட பந்தமே சம்சாரமாம். குருவினாலும், வேதாந்த வாக்கியத்தினாலும் உளதாகும் அகம்பிரமம் என்னும் அந்தக்கரணத்தின் விருத்தியினால் பிரபஞ்சத்தோடுகூட அஞ்ஞானத்தினது நிவிர்த்தி யேமோட்சம். கற்பிதத்தின் நிவிர்த்தி எப்படி அதிஷ்டானரூபமாகலின், மோட்சஞ்சத்தியமாம். சர்ப்பத்தினது நிவிர்த்தி எப்படி அதிஷ்டான இரச்சுரூபமோ ! அப்படிச் சகல கற்பிதவஸ்துக்களினது நிவிர்த்தி அதிஷ்டானரூபந்தான் ; அதற் கந்நியமன்று ; இது பாஷ்யகாரரது சித்தாந்தம். இங்கே அனர்த்தநிவிர்த்தி பிரமரூபமாம், எனினை ? சர்வவனர்த்தங்கட்கும் அதிஷ்டானம் பிரமமாகலானும், அப்பிரமம் பாவரூபமாகலானும் மோட்சஞ்சத்தியம்மாம் என்க.

அ - கை.

பொய்யைப் பொய்யாற் கெடுக்கலாமென்றதை வலியுறுத்த
இன்னுந் திருஷ்டாந்த தாஷ்டாந்தங்களை யிக்
கவியிற் கூறுகின்றார்.

57. இம்பரி னஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர்
வம்பிபன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா யதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே.

(இ-ள்.) இம்பரினஞ்சை நஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யு, மம்பினை யம்பாற் பற்று மழுக்கினை யழுக்கான் மாய்ப்பர், எ-து. இவ்வுலகத்தில் விஷத்தை விஷத்தினாலும், இரும்பை யிரும்பினாலும், பிரயோகிக்கின்ற அம்பை யம்பினாலும், படிந்த வழுக்கை யழுக்காலு மாய்த்துவிடுவர். (அதுபோல):—வம்பியன் மாயை தன்னை மாயையான் மாய்ப்பர்,—எ-து. நிலையின்மையையே யியல்பாகவுடைய மாயையென்பதை நிலைமையையே யியல்பாகவுடைய மாயையென்பதினாற் கெடுப்பர்:—பின்னைத் தம்பமாயதுவுங் கூடச் சவஞ்சுடு தடிபோற் போமே,—எ-து. அங்ஙன மாய்த்தபின்னர் நிலையான வந்த மாயையும் நிலையற்ற மாயையோ டொக்கப் பிரேதத்தைத் தகிக்கச்செய்கின்ற தடியுமுடிவி லப்பிரேதத்தோ டொக்க நீறவ தெங்ஙனமோ வங்ஙன நாசமாம்,—எ-று.

விஷத்தை விஷத்தாற் கொல்லல், இரும்பை யிரும்பா லறுத்தல், அம்பை யம்பாற் றடுத்தல், அழுக்கை யழுக்காற் கெடுத்தல். என்னுமத தற்குரிய சிறப்புவினைகளை மாய்த்தலென்னும் பொதுவினையான் முடித்தது, விதிபற்றி யென்க. என்னை, "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும், வேறவற் றெண்ணுமோர் பொதுவினைவேண்டும்" என்றார் பவணந்தி. வம்பென்பதற் கொழுங்கின்மை யெனப் பொருடந்து கூறினுமையும் ; பொருளல்லவற்றைப் பொருளாகக்கோடல். இதனு லசுத்தமாயையென்னும், ஒழுங்கின்மையென்றதனு லொழுங்குண்மையென்கொள்ளக்கிடந்தது. அதா

வது ; பொருளைப் பொருளாகக்கோடல். இதனுற் சுத்தமாயையெனவும் பொருடரகின்றது. நிற்கவே, விக்ஷேபமானதமென்றுயிற்று, ஆகவே, மானதம் மாயாகாரியமாயினுமிங்கே காரியத்தைக் காரணமாக வுபசரித்துச் சுத்த மசுத்தமென விரண்டாக்கிக் கூறியதாகப்பெற்றும். மாயையென்பது ; புத்திவிகற்பமே யஃதல்லாமையிற் சுத்தமெனவுங் காணக்கூறினர். ஒன்றை யொன்றாகக்கொள்வது, மனதாதலா லந்தமனதேயுள்ளதை யுள்ளதாகக் கொள்ளுமன்றே ; இதனுல் மனதுக்குப் பகிர்முகதிருஷ்டி யந்தர்முகதிருஷ்டி யெனப் பெற்றும், பெறவே, பகிர்முகதிருஷ்டியை யந்தர்முகதிருஷ்டியாற் கெடுத்தது மனமாதலாலும், மனதையன்றி யிக்கிரியை யில்லாமையாலும், இக்கிரியையை வினைமுதலாக்கி மனத்தையடக்க மனந்துணை யாகுமென்றார் சான்றோர்பலரும் அதுபோலவே யிந்நூலாசிரியரு மதற்கியைந்த உபமானங்களாலே யக்கருத்தையே கூறினதாகக் கண்டாம். தனது புடைபெயர்ச்சி பேதத்தாற் றுனிரண்டெனப்பட்டதேயன்றி தனது புடைபெயர்ச்சி பேதத்தாற் றுனிரண்டெனப்பட்டதேயன்றி வேறோர்காரணத்தா லன்றுமையின் மனதொன்றேயாம். எங்ஙனமெனில் ; ஒருவனுக்கே, துஷ்டனென்றும் பின்னர் யோக்கியனென்றும் வந்தது, அவன்து சேட்டையால்ன்றி யவனிரண்டல்லன், அக்கிரியையால், துஷடன் யோக்கியனென் றிவனுக் கெங்ஙனமாயிற்றே ; அதுபோல, மனதுக்கும் வந்ததென் வுணர்க. இங்ஙன முரைகாணுதா ரெங்ஙனந் தெளிவர். இது ஒருவன் தன்னேத்தானே யோக்கியனுகத் திருத்திக்கொண்டாற்போலும். ஆதலின் மாயைதன்னை மாயையால் மாய்ப்பரெனவும், பொருளல்லவற்றைப் பொருளெனவுணர்தல், மயக்கம். பொருளைப் பொருளெனவுணர்தல், தெளிவு. மயக்கத்தைக் கெடுக்கவெழுந்தது தெளிவாதலா லது மாய்ந்பின்னர்தானு மொக்க மாயுமன்றே ; அதுபற்றித் தம்பமா மதுவுங் கூடச் சவுஞ்சுடி தடிபோற் போமே யெனவுங் கூறினர். மருளுந் தெருளுந் தானல்ல. தன்னைத் தவிரவு மில்லை. தெருணசித்தவிடத்துந் தானசியாததா லதனைச் சூனியமென் றெண்ணற்க. இந்நிலை தானேதானுக்கற்கென வுணர்க. அஞ்ஞானமே தானென் றிருந்தாற்போல, ஞானமே தானென் றிருந்தால் தானுகுமா, இரண்டுந் தானல்லவெனக் குறிக்க விங்ஙனங்கூறினர். இது மனனத்தாலன்றித் தெளிவுபெறச்செய்யாது. இதைப்பதவுரையாக வாசித்தென்பயன் ? சொல் வெள்ளை, விடயம் வெள்ளையோ ஆழமாழமாதலினவுணர்க.

(இ)

அ - கை க.

[இவ்விரு மாயையுஞ் சீவர்களிடத் திருப்பதைக் காட்டச் சத்தாவத் தைகளைத் தொகையாக விக்கவியிற் கூறுகின்றார்.]

53. இந்தமா யையினுற் சீவர்க் கேழவத் தைகளுண் டாகும்
அந்தவே ழவத்தை தம்மை யடைவினின் மொழியக் கேளாய்
முந்தவஞ் ஞான மூடன் முளைத்தல்கா ணுத ஞானம்
சந்ததங் கண்ட ஞானந் தழல்கெடல் குளிர்மை யாதல்.

(இ-ள்.) இந்தமாயையினுற் சீவர்க்கேழவத்தைக ளுண்டாகும்,—எ-து. சுத்த மசுத்தமெனக்கூறிய விவ்விருமாயையினுல், சீவர்களுக்கேழவத்தைகளுண்டாகும்:—அந்த வேழவத்தை தம்மையடைவினின் மொழியக்கேளாய், எ-து. அந்த வேழவத்தைகளேயுங் கிரமமாக யாங்கூறக் கேட்பாயாக:— (அவை) மூந்தவஞ் ஞான மூடன் மூலைத்தல் காணுதஞானஞ் சந்ததங்கண்ட ஞானந் தழல் தெடல் குளிர்மையாதல்,—எ-து. முதலிலுள்ள அஞ்ஞானமும், ஆவரணமும், விக்ஷேபமும், பரோட்சமும், அபரோட்சமும், துர்க்கநிவிர்த்தியும், தடையற்ற வானந்தமுமாம், எ-று

அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேப, மிவைமூன்று மசுத்தமாயை. பரோட்சம், அபரோட்சம், துக்கநிவிர்த்தி, தடையற்றவானந்தம், இவை நான்குஞ் சுத்தமாயை. அவைமூன்று மசுத்தத்துக் கியல்பு. இவை நான்குஞ் சுத்தத்துக் கியல்பு. அசுத்தம், பந்தம். சுத்தம், முத்தி. எனவே, இவ்விரு தகையாயதும் மாயையென லேற்கப்பெற்றும். வாம்புடையது, வேதாந்தம். வேனைய, பிற. (நி-அ)

அ - கை

[அவ்வவத்தைகளே, வகையாகக் கூறப்புகுந்தாரிக்கவியில் அஞ்ஞானமுதல் பரோட்ச மீறுயுள்ள நான்கினேயுங் கூறுகின்றார்]

59. பிரமமாந் தனேம றந்த பேதமை யேயஞ் ஞானம்
பரனிலை காணு மென்று பகர்தலா வரண மூடல்
நரனெரு கருத்தாற் சீவ னெனைனல்மூலத்த றோற்றம்
குரவன்வாக்கியத்தாற்றன்னைக் குறிக்கொளல்பரோக்ஷஞானம்.

(இ-ள்.) பிரமமாந் தனே மறந்த பேதமையே யஞ்ஞானம்,—எ-து. பிரமஸ்வரூபமாகிய தன்னை மறந்த மறதியே யஞ்ஞானமெனப் படுவதாம்:—பரநிலை காணுமென்று பகர்தலா வரணமூடல், எ-து பிரமசொரூபத்தினிலையெங்ஙனமாயதோ வதனைக் கண்டிலமே யிருந்தாற் காணுதாவெனக் கூறுதல் ஆவரணமெனப் படுவதாம்:—நரனெரு கருத்தாற் சீவனெனை மூலத்த றோற்றம்,—எ-து. புருட னேர்வித நினைவாற் சீவனே நானெனக் கோடல் விக்ஷேபசத்தியெனப்படுவதாம்:— குரவன் வாக்கியத்தாற் றன்னை குறிக்கொளல் பரோட்ச ஞானம்,—எ-து. ஞானசிரிய துபதேசமொழியால் தனதுண்மைவடிவ மினையதெனக் குறியாது குறித்துக்கோடல் பரோட்சஞானமெனப் படுவதாம், எ-று.

சைசன்யத்தை யுன்றித் தனக்கோர் சொருபமின்மையின், பிரமமாந் தனேயெனவும், நாஸ்தி நபாதி யென்பது தோன்றப் பரநிலை காணுமென்று பகர்தலெனவும், இங்கே நரனென்பது புருடன். புருடனென்பது; உடல் தோறு நின்றுணர்வான். அவன் தேகமன்று தேகி. அவனுக் கெவ்வுடலுஞ் சுதந்தரமன்று, ஆதலிற் பிரத்தியேகாத்மா. இவ்வாத்மா, உணர்தல் தகைய தாதலினறிவு. இவ்வறிவே புருடசத்தத்துக் கியைந்ததன்றி வேறுபொரு ளன்மையி னிதுமறக்கற்பாற்றன்று. காரணத்தானென்னு மாகுபெயர் போல்

வதின் மனிதனெனக் கோடற்கவென்பார், நரனெனவும், இந்த வறிவாகிய புருடன் தன்னைமறந்துழிச் சார்பினையதெனத் தெரியாது தத்தளிக்குங்கா லிது நானெனற்குத் தூலதேகம் நேரிட்டதா லிதனைக் கோடல்சீவனெனவும், இஃ தோ ரவசரமாசலி லெருகருத்தாலெனவும், நியதிகளேந்த விடத்தி லாசிரியர் நீயறிவென் றுணர்த்த லுபதேசமாயினு மின்னும் விளங்காமையிற் பரோட்ச மெனவுங் கூறினர்.

(க-து.) தன்னை மறந்தபேதமை யஞ்ஞானம். அப்பேதமையை மறந்த பேதமை, யாவரணம் அப்பேதமைகளைக் கெடுத்தற் கொருவாறு தனக்கு ளெழுந்த மூடஸ்புரிப்பு, விக்ஷேபம். இதனை விளக்கக் குருவாலெழுந்த விசார ஸ்புரிப்பு, பரோட்சம். —எ-து. (ருக)

அ - னை கை.

[ஏனைய வபரோட்சம் துக்கநிவிர்த்தி தடையற்ற வானந்தமென்னு மூன்றையு மிக்கவியிற் கூறுகின்றார்.]

60. தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேக மும்போ
யத்துவி தந்தா னுத லபரோக்ஷ ஞான மாகுங்
கர்த்தனுஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போதன்
முத்தனு மெல்லாஞ் செய்து முடிந்ததா னந்த மாமே.

(இ-ள்.) தத்துவ விசாரஞ்செய்து சகலசந்தேகமும்போ யத்துவிதந்தா னுதலபரோக்ஷ ஞானமாகும்—எ-து. தத்தென்னல் யாது, துவமென்னல் யாதெ னச் சிரவண மனனநிதித்களாற் றக்கோர்பால் விசாரணைசெய்து அவ்வவற்றி லுள்ள சகலசந்தேகமு நீங்கி யசியென்னும் பதத்தினு லத்துவிதமாகிய வைக் கியநிலை தானுகவிளக்க லபரோக்ஷ ஞானமெனப்படுவதாம்:— கர்த்தனுஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போதல்,—எ-து. தானலதைத் தானெனற்குக் கர்த் தத்துவனு நின்றுள்ள சீவ னனந்தபேத சராசரமாக்காண்டலி னந்தச் சீவ பேதங்க ளொக்கநசித்தலே துக்கநிவிர்த்தி யெனப்படுவதாம்:—முத்தனு மெல் லாஞ் செய்து முடிந்தானந்தமாமே,—எ-து. சீவன் முத்தனுய் ஞானுஞ்ஞான சாதனக்கிரியைக ளனைத்தையுஞ் செய்து முடிந்ததே தடையற்றவானந்த மெனப்படுவதாம், ஏ-று.

நிருபாதிகமாக, தத், அது; துவம், நீ; யெனப்பிரித்து, அசி, ஆனுய் எனக் கொண்டு அவ்விருபதங்கட்கு மிடையில் தேற்றேகாரம் வருவித்து, அது, பரம் ; நீ, சீவன் என்றுக்கி, பரமே சீவன் ; சீவனே பரம் என்றைக்கியங் கோடற் கானுயென்பதனை யிவற்றோடு சேர்த்து, அதுவே நீயானுய், நீயே யதுவானு யெனத் தெளிந்து தான் துவிதமற விளங்கலே, அபரோக்ஷ ஞான மெனவும், அவ்விளக்க மேலிட மேலிடப் பழய வாசனைத்துவிதங்களனு வணுவாக்கழியும், கழியவே, சமஸ்தமுஞ் சின்மாத்திரமாக விளங்கும். விளங் கவே, அன்னியமென்ப திறந்துபோம். இறக்கவே, நிஜபாலிடமெனற்கிட மின்றும், இன்றுகவே, காமாதிகளின்றும். இன்றுகவே, மானத மென்ப

தின்றும் இன்றுகவே, யாதொரு துக்கமு மெங்ஙனமெழும். எழுதற் கிட மின்மையைத். துக்கம்போதலெனவும், அந்தத்துக்கநிவிர்த்தி மேலிடமேலிட அஷ்டவிதானந்தத்து ளொவ்வொன் றனுபவத்துக் கையைந்த வவசரவாறு தோன்றித் தோன்றி யடங்கும், அடங்கவே, இத்தடைகளிறந்த வானந்தம தாம். ஆகவே, தானே சச்சிதானந்தமாம். இங்ஙனமாதலை யானந்தமாமென வுங் கூறினர். இரட்டுறமொழித லென்னுமுத்தியால் சத்துவம், உண்மை. ஞானத்தைத் தவிர வுண்மை யெங்கணு மின்றுதலால், தத்துவ மெனற்கு ஞானமெனப் பொருள்கொண் டிக்கவிக் குரைசெயின் முரணுதமையும். ஈச னென்பதற்குச் சீவன் வேறுதலின், சீவன், ஈசனெனப் பேதங் கற்பித்தற்குச் சீவபேதமென்று ரெனினுமமையும். எல்லாஞ் செய்துமுடிந்தனெக் கவி யிருத்தலினதனை யானந்தமென்பதற்கு விசேடணமாக்கி, முத்தனென்பதற் குக் கிருதகிர்த்தியனெனப் பொருளிருப்பினு மங்ஙனங்கூறுதல், கூறியது கூறலென்னுங் குற்றமாம். அங்ஙனம் வராமைக்குச் சீவன் முத்தனெனப் பொருடந்தாம்.

(க-து) 'அங்ஙனமெழுந்த விசாரஸ்புரிப்பே சொப்பிரகாசமாக விளங் கல், அபரோக்ஷம். அங்ஙனமெழுந்த விளக்க மேலீட்டால் பசுபதி பாசஞ் சின்மாத்திரமாக விளங்கும். விளங்கவே, மனோவிர்த்திக் கிடமின்றும், இன் றுதலே, துக்கநிவிர்த்தி. இந்தத் துக்கநிவிர்த்தியே யளவிலின்டமாதலி னிதுவே தடையற்றவானந்தம் என்பது. வியட்டியுபாதி யளவாத் தன்னைக்காண்டல், சீவபேத மெனினுமமையும். என்னை ? ''பொன்று முடம்பள வாகியிருப்பா ரும் பூசுர ராவார்களோ, என்று மூளவறி வானவரன்றே விருபிறப்பாள ராவார்.'' என்றார் தத்துவராயர். சீவபேதத்தா லீசுரபேதம், சாட்சித்துவித பேதம், ஏகவாதம் உண்டாகலாயிற்று. சுசாதிமுதலிய மூன்று மின்மையே யபரோக்ஷமென்பது. (சு0)

அ ை கு.

[இவ்வேழுவத்தையையு மையமின்றி யேற்கத் திருஷ்டாந்தமாகத் தசபுமான் கதையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

61. இதுனைக் கறியும் வண்ண மிப்படி யொருதிட் டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப் புருடரோ ராற்றை நீந்தி
யுதகதீ ரத்தி லேறி யொருவனென் பதுபே ரெணணி
யதனெடு தான்பத் தானென நதியாமன் மயங்கி நின்றான்.

(இ-ள்..) இது நினக்கறியும் வண்ண மிப்படி யொருதிட்டாந்தம் புதுமை யாங் கதைகேள், —எ-து. இந்த வேழுவத்தையினிலை யின்னு முனக்கு விளங் கும்படி யிதே பிரகாரமாகத் தெரிவிக்கத்தக்க புதுமையான தசபுமான்கதை யொன்றுண்டு, அதனைத் திருட்டாந்தமாகக் கூறுகின்றேன் கேட்பாயாக :— (அதாவது) பத்துப் புருடரோ ராற்றை நீந்தி யுதகதீரத்திலேறி,— எ-து. பத் துப்பே ரொருங்கே யோர்நாளாழமுள்ள வோராற்றை நீந்தி யந்த நீர்க்கரையி

லேறி:—ஒருவனென்பதுபே ரெண்ணி,—எ-து. அப்பதின்மருளொருவனென்பது பேரையெண்ணி:—அதனெடு தான் பத்தானென்றறியாமன் மயங்கிநின்றன்,—எ-து. அந்த வெண்ணிக்கையோடே, தான் பத்தாவது புருடனென்றெண்ண வகையறியாமல் திகைத்து நின்றனன், எ று.

நீக்தி யென்பதனால், ஆழமுங் காலமுங் வருவித்தாம். (சுக)

அ - கை

[இக்கதையைப்போல வவ்வேழுவத்தைகளையுந் தனித்தனிக் காட்டப்புகுந்தா ரிக்கவியில் அஞ்ஞானமுதல் பரோக்ஷ மீறுகஞான்கினையுங் கூறுகின்றார்.]

62. அறியாத மயலஞ் ஞான மவனிலை காணே மென்னல்
பிறியாவா வரண மாகும் பீடைகொண் டழல்வி க்ஷேபம்
நெறியாளன் றசம னுண்டு நிற்கின்ற னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணி நோக்கிக் கொள்வது பரோக்ஷ ஞானம்.

(இ-ள்.) அறியாத மயலஞ் ஞானம்,—எ - து. அங்ஙனந் தசமனைக் காணுத மயக்கம்போல்வது அஞ்ஞானமாம்:—அவனிலை காணே மென்னல் பிறியாவா வரணமாகும்,—எ-து. அவனில்லவேயில்லை யிருந்தாற் காணுனுஅதனுலவனைக் காணுமென்பது போல்வதுஅகலாத வாவரணமாம்:—பீடைகொண்டழல்விக்ஷேபம்,—எ-து. விசனமுற் றழுதல்போல்வது விக்ஷேபமாம்:—நெறியாளன் றசமனுண்டு நிற்கின்றனென்றசொல்லை,—எ-து. அவ்வழிச் செல்வோனெருவ னிம்மடமையைக்கண்டிதென்ன வதிசயம்பத்தாவதுபுருடனிருக்கிறன் அவனீயாக நிற்கிறனென்று சொல்ல அச்சொல்லை:—குறியாக வெண்ணி நோக்கிக்கொள்வது பரோக்ஷஞானம்,—எ-து. ஓர் குறியாகநினைத்து அவனிருக்கின்றனென மதிப்புறுவதுபோல்வது பரோக்ஷஞானமாம்,—எ-று.

உண்டென்பதே சாலும், நிற்கின்றனென மிகைபடக்கூறியதனால் நீயாகநிற்கின்றனென வுரைகொண்டாம். இக்கவியும் பின்கவியு மெடுத்துக்காட்டுவமை. (சுஉ)

அ - கை.

[இக்கவியி லேனைய மூன்றினையுங் கூறுகின்றார்.]

63. புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதினமர் தம்மை
யெண்ணிய நீபத் தாவானென்னவே தன்னைக் காணல்
கண்ணினிற் கண்ட ஞானங் கரைதல்போவது நோய்போத
றிண்ணிய மனதி லேயந்தெளிதலா னந்தமாமே.

(இ-ள்.) புண்ணியபதிகன் பின்னும் புருடரொன் பதின்மர்தம்மை யெண்ணிய நீபத்தாவானென்னவே,-எ-து. புண்ணியமான விரக்கருணமுள்ளவந்நெறிச்செல்வோன் மீண்டு மவ்வொன்பதுபேரையு மவனைக்கொண்டே யெணணச்செய்து, இங்ஙனமெண்ணிய நீ பத்தாவது புருடனன்றே வன்னை

யேனெண்ணுது விட்டுவிட்டனே யென்றதட்டி விஷவ, வினவவே:—தன்னைக் காணல் கண்ணினிற்கண்ட ஞானம்,—எ-து. தன்னைத்தானெண்ணிப் பிரத்தி யட்சமாகக் காணல்போல்வது அபரோட்சஞானமாம்:—கைதல்போவதுநோய் போதல்,—எ-து. காணுமென்றதக்க நீங்கல்போல்வது துக்கநிவிர்த்தியாம்:—இன்னிய மனதிலேயந்தெளிதலானந்தமாமே,—எ-து. தன்னைத்தான் கண்டதி னல் திடமுற்ற மனதின்கண்சந்தேக நீங்கித் தெளிதல்போல்வது சடையற்ற வானந்தமாம்,—எ-று.

விடயகதப்பிரத்தியட்சம் ஞானகதப் பிரத்தியக்ஷமெனக் கோடற்கி யைந்த பிரத்தியக்ஷப்பிரமாணம் அஷ்டவிதப்பிரமாணத்து ளொன்று. இங்ங னமிருக்கப் பரோக்ஷஞானத்தை யபரோக்ஷஞானமென வெண்ணிச் செருக் குறுவோரை மறுக்கக் கண்ணினிற் கண்டஞான மென்றார். சந்தோஷவெ ழுச்சி ஐயந்தெளிதலேயெனக் குறிப்பிக்கச் சுருக்கினர். பழுதையெனக் கண் ணுற் காணுக்காறும் பாம்பென்னுந் திகி லெங்ஙன மகலும்; அகலாக்காறும் பயகம்பனதிக ளெங்ஙனமகலும் அதுபோலத் தானறிவெனக் கண்ணுற்கா ணுக்காறும் பாசமென்னுஞ் சோகமெங்ஙன நீங்கும், நீங்காக்காறுமல்ல லெங் ஙன நீங்கும் ஆகலின் ஞானகதப் பிரத்தியட்சமின்றி யமையாது, நெருப் பெனவாயாற்கூறிற் சுமைக்கவொண்ணாது. தீபமெனக்கூறி லிருளீங்காது. இதுபற்றியே வேதமுஞ் சான்றோருமியைந்தனர். கண்ணினிற் கண்டஞான மபரோக்ஷமெனவே, யேனையவை ஞானமன்றுயிற்று ஞானமெனின்கிரிபுடி யகன்றருண்டோ ? உண்டெனின் சுசாதிவிசாதி சுகதபேத மகலாததற்கே தென்னே? மூரணும். விளங்கிஞேரும் நவாவவிஞ்ஞைவழியாக வதிற்பராக்கா கச் சென்றனர். செல்லாதவ்விளக்கத்தையே கைப்பற்றி யவ்விஞ்ஞங்களே யெல்லாம் ஞானகற்பிதமென்றுணர்ந் சவ்வழி மருளாதவற்றை யெரிப்பவனத் துவிதியொருவனே யென்பதுதோன்ற, அபரோக்ஷத்தைக் கண்ணினிற் கண்ட ஞான மென்றார். பெருகுமாதலிற் சுருக்கியுரைத்தாம். தாஷ்டாந்தத்திற் பதி கன், ஆசான், தசமன், ஆன்மா. ஒன்பதுபேர்; விசுவன், தைசதன், பிராக் ஞன், வைசுவாநரன், சூத்திரான்மா, அந்தரியாமி, சிதசொலிதை, பொற்புவி சாந்தன், பிரசாபத்தியன் என்பன. (கூ)

அ - கை.

[தசபுமான் தன்னைத்தான் கண்டதுபோல யானுமென்னையான் காணத் தெரித்தருள வேண்டு மென்ற மாணாக்கனுக்குச்சாமவேத மகாவாக் கியங் காரணமாக விக்கவியிலனுக்கிரகிக்கப் புகுகின்றார்.]

64. தெசபுமான் றனைக்கண்டாற் போற்றெசிக மூர்த்தியேயென்
னிசவடி வினையான் காண நீர்காட்டல் வேண்டு மென்றான்
சுசிபெறு மிலக்கி யார்த்தக் தொம்பதந் தற்ப தங்க
ளசிபத மயிக்கியஞ் செய்யு மதிசய வுண்மை கேளாய்.

(இ-ள்.) தெசபுமான் றனைக்கண்டாற்போல் தெசிகமூர்த்தியேயென்னி சவடி வினையான்காண நீர்காட்டல் வேண்டுமென்றான்,—எ-து. பத்தாவான்

தன்னைத்தான் கண்டதுபோலச் சற்குருநாதனே யெனதெதார்த்தவடிவத்தை யான்காண நீர் காட்டவேண்டுமென்றான்:—சுசிபெறு மிலக்கியார்த்தந்தொம் பதந் தற்பதங்க ளசிபதமைக்கியஞ் செய்யுமதிசய வுண்மைகேளாய்,—எ-து. உனதெதார்த்தவடிவை விளக்கத்தக்கது வாச்சியார்த்தம், லட்சியார்த்த மென்ப வற்றுள், லட்சியார்த்தம். இத்தப்பரிசுத்தமான லட்சியார்த்ததைப்பற்றித் தத் வமசியென்னு மூன்றாவது மகாவாக்கியத்தைத் தொம்பதந்தற்பத மசிபதமென மூன்றாக்க, அதனுலாய மூப்பதங்களுஞ் சீவேசரோகமென வைக்கியஞ் சாதிக் கும் அங்ஙனஞ் சாதிக்கு மற்புதமான வுண்மைநிலையை யாங்கூறக்கேட் பாயாக,—எ-று.

என்னிசவடிவென யான்கொண்டவைகளையெல்லா மன்றென மறுத்த மையி னிங்ஙனம் வினவியதென்க. இனியன்றே மறுக்கப்போவது, மறுத்த தாக விறந்தகாலத்தாற் கூறிய தென்னையெனின், மூன்ன, தேகமல்லாமல் வே றே தேகியார் காணேனென்ற யென்னுங் கவியிலுங், நனவுகண்டதுதான் கண்ட நனவுளதினைவு நீங்கியென்னுங் கவியிலும், பொதுப்ப நியதிகளைந்து காட்டியதா லிங்ஙனந் தானனைத்துமாமெனக் கருதிக் கேட்டதென்க. யானறி யவெனின் பாவனையாமெனக் கருதி யான்காணவென்றது. காணவென்னுந் தன்வினைக்குக் காட்டல் பிறவினை. இத்தப்பிறவினையை யவர்பால் வைத்தது சொல், குணம், குறிகளா லன்றெனற்கு. இதேல்லாஞ் சைக்ஞை இந்தச்சைக் ஞைருபமே யாசிரயராதலின் காட்டவென்றுங் கூறினன். சுசிபெறு யார்த்த மென்றது, வாச்சியார்த்தமசுசியெனற்கு இலட்சியார்த்த மென்றதனுனும், ஐக்கியமென்றதனுனுமிங்கே சற்பத தொம்பதார்த்தமென்றது ; கூடஸ்த பிர மத்தை. காணுமற்காணல், காட்டாமற் காட்டலென்னு மனுபூதியிருத்தலி னிஃதுமறுக்கற்பாற்றன்று. இவன் கல்விஞானத்தில் மிக்கோனென்பது இவன் வினவாலறிக. சுருதி யுத்தி யனுபவமென்னு மூன்றனுள், சுருதிபூர்வமா வுணாத்தப் புகுதலைக் காட்டத், தத்வமசியென்றார். இஃதுபதேசத்துக் கையந்த வாக்கியம். தொம்பதத்தை மூன்னர்க்கூறியது, மூந்தித்தன்னை விளக்கற்கு. ()

பதத்திற்கு அர்த்தத்தோடு உளதாயசம்பந்தம் விருத்தி எனப்படும் ; அவ் விருத்தி இருவகைத்து, ஒன்று சக்திவிருத்தி : மற்றொன்று இலட்சணைவிருத்தி. கடபதத்தில், கேட்பவனுக்குக் கலசரூபமாகிய அர்த்தஞானத்தை உண்டுபண் ணத்தக்க சாமர்த்தியம் சக்தி விருத்தியாம். அப்படியே படபதத்திலும், கேட்ப வனுக்கு வஸ்திரரூபமாகிய அர்த்தஞானத்தை உண்டுபண்ணத்தக்க சாமர்த்தி யம் சக்திவிருத்தியாம் ; இவ்வாறே சர்வபதார்த்தங்களிலுங் காண்க. "சக்தி, ஆற்றல் என்பன ஒரு பொருட்சொற்கள். திருஷ்டாந்தம் ;—அக்கினியிற் றன்னோடு கூடினமாத்திரத்திலே வஸ்துக்களைத் தகிக்கும்படியான சாமர்த்திய ரூபசக்தி எப்படியுண்டோ ! அப்படியே பதத்தில் சுரோத்திரத்தோடு கூடவே அவ்வஸ்துவின் ஞானத்தை உண்டுபண்ணத்தக்க சாமர்த்தியம் உண்டு ; அதுவே சக்தி எனப்படும். இலட்சணையின் ஞானத்தில் சக்தியத்தின் ஞானம் உபயோ கியாம் யாதொரு பதத்தில் யாதோரர்த்தசக்தியுண்டோ ! அப்பதத்தினுடைய அவ்வர்த்தம் சக்தியமாம் ; சக்தியர்த்தத்தையே வாச்சியார்த்தம் என்றுஞ்சொல்

லுவர். வாச்சியார்த்தபோதகபதம் வாசகம் எனப்படும். சக்கியசம்பந்தம் இலட்சணையின் சொரூபமாம். யாதோரர்த்தத்தின்ஞானம் சக்தியினால் உண்டாகாமல் இலட்சணையால் உண்டாமோ ! அது பதத்தினுடைய இலட்சியார்த்தம் எனப்படும்: விட்டலட்சணை; விடாதலட்சணை, விட்டுவிடாதலட்சணை என இலட்சணை, ஜஹதஜஹல்லட்சணை என விடதூல்வல்லோர்கூறுப ; இவற்றை உதாரணத்தோடு எஅ-வது செய்யுட்டொடங்கி, அக-வது செய்யுள்வரையுங் கூறப்படும் ; ஆண்டுக்காண்க.

தாஷ்டாந்தம் ;—க-வது—பிரமாண்டத்தினுள்ளும் புறம்பும் மாஹகாசம்போலப் பரிபூரணமான யாதொரு சேதனம் உண்டோ ! அது பிரமம் என்றுசொல்லப்படும் ; அப்பிரமம் சமீபமல்ல, தூரமுமல்ல, என்னை ? யாதொருவஸ்து தனக்குப் பின்னமாயிருக்குமோ ! தேசரூபவுபாதியுடையதாமோ அது தூரம், சமீபமென்று சொல்வதற்குரித்தாம் ; பிரமமானது பின்னம் அன்று சர்வத்துக்கும் ஆன்மாவாக உள்ளது, தேசமுதலிய வுபாதிரகிதமானது ; ஆகலின் சமீபம், தூரமென்று சொல்லத்தக்கதன்று. ஆயினும் பிரமசத்தத்தின் வாச்சியமும் சோபாதிகமாம். என்னை ? வியாபகவஸ்துவிற்குப் பிரமம் என்று பெயர் ; அவ்வியாபகத்தன்மை இருவகைத்து ; ஒன்று ஆபேட்சிகவியாபகத்தன்மை, மற்றொன்று நிரபேட்சிகவியாபகத்தன்மை. யாதொருவஸ்து ஒன்றைநோக்க வியாபகமாமோ ! மற்றொன்றைநோக்க வியாபகமாகாதோ அதனிடத்துள்ளவியாபகத்தன்மை ஆபேட்சிகவியாபத்தன்மை; அஃதெங்ஙனெனின்? பிருதுவியாதியைநோக்க மாயைவியாபகமாம், சேதனத்தைநோக்க மாயைவியாபகமாம், சேதனத்தைநோக்க வியாபகம் அன்று ; ஆகலின், மாயையின்கண் ஆபேட்சிகவியாபகத்தன்மை உண்டு. யாதொரு வஸ்து சர்வத்தையும்நோக்க வியாபகமாமோ ! அதன்கண் நிரபேட்சிகவியாபகத்தன்மை உண்டு ; அந்நிரபேட்சிக வியாபகத்தன்மை சேதனத்தின்கண் உண்டு. என்னை ? சேதனத்திற்குச்சமானமாகவாவது, சேதனத்தினு மதிகமாகவாவது. வேறொருவியாபகம் இல்லை, சேதனமே சர்வத்தினும் வியாபகமாம் ; ஆகலின், சேதனத்தின்கண் நிரபேட்சிக வியாபகத்தன்மையோடுங் கூடினவஸ்து யாது அது பிரமசத்தத்திற்குவாச்சியமாம் ; அவ்விருவகை வியாபகத்தன்மையும் மாயாவிசிஷ்ட சேதனத்தின்கண் உண்டு. என்னை ? விசிஷ்டனிடத்துள்ள மாயாபாகத்தில் ஆபேட்சிகவியாபகத்தன்மையும், சேதனபாகத்தில் நிரபேட்சிகவியாபகத்தன்மையும் இருத்தலின்என்க. ஆயினும், மாயாவிசிஷ்ட சேதனத்தினிடத்து நிரபேட்சிகவியாபகத்தன்மை கூடாது. என்னை ? மாயா சேதனத்தின் ஏகதேசத்திலிருப்பதாகலானும், அம்மாயாவிசிஷ்டசேதனத்தினும் சுத்தசேதனத்தின் வியாபகத்தன்மை அதிகமாகலானும் சுத்தசேதனத்திலேயே நிரபேட்சிக வியாபகத்தன்மை உண்டென்க. இவ்வாற்றால், மாயாவிசிஷ்டமே பிரமசத்தத்திற்கு வாச்சியம், சுத்தசேதனம் பிரமசத்தத்திற்கு இலட்சியமாம். ஈசுரசத்தம், பிரமசத்தம் இரண்டிற்கும் சமானார்த்தமேதோற்றினும் பிரமசத்தத்திற்கு அநேகவிடங்களில் இலட்சியார்த்தமும், ஒரோவிடங்களில் வாச்சியார்த்தமும் போதிக்கப்பட்டிருக்கின்றது. ஈசுரசத்தத்திற்கு அநேகவிடங்களில்வாச்சியார்த்தம் போதிக்கப்பட்டிருக்கின்றது. பிரமசத்தத்திற்கும்; ஈசுரசத்தத்திற்கும் இவ்

வளவுபேதம் உண்டு; இங்கே இலட்சியார்த்தத்தைக்கொண்டு பிரமசத்தார்த்தத்தைப் பின்னமாக நிரூபிக்கப்பட்டது என்க.

உ-வது—மாயையின்கண் சேதனத்தினது ஆபாசம், மாயைக்கு அதிஷ்டானமாகிய சேதனம் இவ்விரண்டையும் ஈசுரன் என்பர்; அவ்வீசுரன் மேகாகாசத்திற்குச்சமானன்; அவ்வீசுரன் அந்தரியாமியும், சதாமுத்தனுமாம். இங்ஙனங்கூறியதற்கேதுவென்னையோவெனின்;—மாயையினிடத்துச்சுத்தசத்துவகுணம் உண்டு: இரஜோகுண, தமோகுணங்களாற் சூழ்த்தப்பட்ட சத்துவகுணம் இல்லை. இரஜோகுண, தமோகுணங்களைத் தாழ்த்தித் தான்மேலிட்டிருப்பது யாது அது சுத்தசத்துவகுணம் எனப்படும், சுத்தசத்துவகுணத்தினால் ஞானேற்பத்தியாவதால் பிரகாசசுபாவமுடையது சத்துவகுணமாம்; இப்படிப்பட்ட சத்துவகுணத்தையுடைத்தான மாயையினிடத்து யாதொரு சேதனத்தின் ஆபாசமுண்டோ! அதற்குச் சொரூபத்தினிடத்தும், மற்றைப் பதார்த்தங்களினிடத்தும் ஆவரணம் இல்லாமையினால் அவ்வீசுரன் முத்தனும், சர்வஞ்ஞனுமாவன். அதிஷ்டானமாகிய சேதனம் சீவேசுரரிடத்துள்ள பந்தமோட்சபேதரகிதமாய் ஆகாசம்போல ஏகரசமாயிருக்கின்றது. ஆபாசக்கூற்றிற் பந்தமோட்சம் உண்டு. அதிஷ்டானத்தில் ஆபாசனுக்குப் பிராந்தியினாற் பிரதிதியாகிறது கேவலம் ஆபாசத்தில் பந்தமோட்சம் உண்டென்பதிலும் பேதம் உண்டு; அது யாதொரு ஆபாசத்தில் ஆவரணம் உண்டோ அதனிடத்துப் பந்தம் உண்டு. யாதொன்றினிடத்துச் சொரூபத்தின் ஆவரணம் இல்லையோ அது முத்தமாம். ஈசுரனிடத்து ஆவரணம் இல்லையாகலின், ஈசுரன் சதாமுத்தனும், சீவனிடத்து ஆவரணம் இருத்தலின் அவன் பெத்தனும். எஃனை? யாதொரு அவித்தைக் கூற்றில் சேதனத்தின் ஆபாசத்தைச் சீவன் என்று சொல்லப்படுகிறதோ அவ்வவித்தைக்கு ஆவரணம்பண்ணுவது சுபாவமாம். ஆயினும் அவித்தை, அஞ்ஞானம், மாயைஎன்பன ஒன்றற்கேபரியாயம்; அங்ஙனமாயினும் சுத்தசத்துவகுணப்பிரதானத்துவத்தால் மாயையென்றும் மலினசத்துவகுணப்பிரதானத்துவத்தால் அஞ்ஞானமென்றும், அவித்தையென்றுஞ் சொல்லப்படும். இரசோகுண, தமோகுணங்களாற் சூழ்த்தப்பட்ட சத்துவகுணம் மலினசத்துவகுணமாம். தமோகுண, ரசோகுணங்கள் அதிகரித்திருப்பதால் அவித்தையின்கண்ணுள்ள சீவனுடைய ஆபாசக்கூற்றிற்குத் தன் சொரூபந்தோற்றமற் போகும்படிக்கு அவ்வவித்தை ஆவரணம்பண்ணுகின்றதால் சீவனிடத்துப்பந்தம் உண்டு, ஈசுரனிடத்து அஃதில்லை. அதிஷ்டானசேதனத்தோடுகூட மாயையில் ஆபாசரூபமான ஈசுரன்தற்பதத்திற்கு வாச்சியன். கேவலம் அதிஷ்டானசேதனம் தற்பதத்திற்கு இலட்சியம்.

ஊ-வது—புத்தி அல்லது, வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானசேதனங் கூடஸ்தன் என்று சொல்லப்படும்; எப்பட்சத்தில் புத்திசகிதசேதனம் ஜீவனை! அப்பட்சத்தில் புத்திக்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும், எப்பட்சத்தில் வியஷ்டி அஞ்ஞானசகிதசேதன சீவன் என்று சொல்லப்படுமோ! அப்பட்சத்தில்வியஷ்டி அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானங் கூடஸ்தன் என்று சொல்லப்படும். சித்தாந்தம்;—சீவத்தன்மைக்கு யாதொரு

விசேஷணம் உண்டோ அதனதிஷ்டானத்திற்குக் கூடஸ்தன் என்று நாமம்; அக்கூடஸ்தன் உற்பத்திரகிதன்; இதற்கபிப்பிராயம்;— பிரமத்திற்கு வேறாக எப்படிச் சிதாபாசன் உற்பன்னமாகின்றனனே அப்படிக் கூடஸ்தன் உற்பன்னமாக இல்லை. பின்னே எப்படியுள்ளனெனின்? பிரமரூபமாகவே உளன் இக்கூடஸ்தனே ஆன்மபதத்திற்கு இலட்சியார்த்தம்; இவனையே பிரத்தியக் கென்றும், நிஜரூபமென்றுங்கூறுவர்; இவனே சீவசாட்சியாம்

அ - கை.

[இந்தமகாவாக்கியம் மூப்பதத்தா லுணர்த்துவதைத் திருஷ்டாந்தபூர்வமா கக் கூறப்புகுந்தா ரிக்கவியில், ஆகாயத்தைப்போலச் சைதன்யம் நான்காயிருப்பதைக் கூறுகின்றார்]

65. விண்ணொன்றே மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும் பாரின் மண்ணெனற கடவிண் ணென்று மருவிய சலவிண் ணென்று மெண்ணுங்கற் பனேபோ லொன்றே யெங்குமாம் பிரமசீ வண்ணுங்கூ டஸ்தன் சீவ னொன்குசை தன்ய மாமே.

(இ-ள்.) விண்ணொன்றே மகாவிண் ணென்று மேகவிண் ணென்றும், எ-து. ஆகாயமொன்றே மகாகாயமென்றும், மேகசலப் பிரதிபிம்பாகாயமென் றும்:—பாரின் மண்ணென்ற கடவிண்ணென்று மருவிய சலவிண்ணென்று மெண்ணுங்கற் பனேபோல்,—எ-து உலகத்தில் மண்மயமென்குரியகடத்தி லிருப்பதைக் கடாகாயமென்றும், அக்கடசலத்திற்றோற்றுவதைக்கடசலப் பிர திபிம்பாகாயமென்றும், நினைக்கத்தக்க விபரீதமா யிருப்பதுபோல:—ஒன்றே யெங்குமாம் பிரமசீவனண்ணுங்கூடஸ்தன் சீவனொன்குசைதன்யமாமே,-எ-து. ஏகசைதன்யமே, பரிபூரணப்பிரமமெனவும், ஈசனெனவும், நிரந்தரமாயுள்ள கூடஸ்தனெனவும், சீவனெனவுங் கற்பிதமாகநான்குசைதன்யமா யிருக்கின் றது, எ-று.

கடசலவிண்ணென்றதனால், மேகசல விண்ணெனக்கொள்க. ஏகாகாயத் துக்கு நான்காகாய மெங்ஙனமோ, அங்ஙன மேகசைதன்யத்துக்கு நான்குசை தன்ய மிருத்தலி னிவ்வுவமை பொருந்தும். சைதன்யமாமென்றதனால், ஒன் றேயென்பதை யேகசைதன்ய மென்றும். அறிவையன்றி யொருநானெனற் குப்பொருள்வேறில்லை இல்லையாகவே சமஸ்தமும்நானெனலெல்லா மறிவை யன்றி வேறுகுமோ; ஆகுமெனிற், சோதனையிற் புகுதும். புகுதற்கு வலி யின்றேல் வாய்பொத்திக் கிடக்கை நன்று. உபாதிகுண பேதமாயினுஞ் சல பேதமுண்டோ; அதுபோல வுபாதி குண பேதமாயினு மறிவுபேத முண் டோ. உண்டெனி னெந்தநானுக் கெப்பிறவி சுதந்தரம். இன்றேலெந்தத்தினை பாலிடஞ் சுதந்தரம், சுதந்தரம்போற் காண்டலே யன்றியாது முடன்பா டன்று. இங்ஙன மெல்லாவறிவுமானு லொன்றே பலவோ; ஒன்றெனிற் பல வாகாதிருக்கவேண்டும். பலவெனினு பாதிகுணந்தானுகவேண்டும். இருமையு மன்றெனில், சாயாதிருக்கவேண்டும். அதுகாறும் பலவாகத்தோற்றலின், ஒன் றே நான்கு சைதன்யமாமே யென்றார்.

(க-து) இந்த கேகசைதன்யம் சமஷ்டி வியஷ்டி சகிதத்தாற் சீவேச னெனவும், ரகிதத்தாற் கூடஸ்த பிரம மெனவுங் காணு மாதலி னொன்குசை தன்னியமெனல் கூடுமென்பது. சோதனைஞாயந் தெரியாதாரிதனமறுத்தென்?

நாநாகாம கர்மங்களோடு கூடிய புத்தியின்கண் பிரதிவிம்பிக்கும் சே தனப்பிரதிவிம்பத்தைச் சீவனீ என்பர், கேவலம் பிரதிவிம்பமாத்திரத்தைச் சீவன் என்கிலர் ; எப்படிக் கடாகாசத்தோடுகூட ஆகாசத்தின்பிரதி விம்பத் தைச் சலாகாசம் என்பரோ ! அப்படி விம்பமான கூடஸ்தனோடுகூடச் சிதா பாசனைச் சீவன் என்பர்; இதனால் புத்தியிற் சிதாபாசனும், புத்திக்கதிஷ்டான மானசேசனமும் ஆகிய இரண்டனது நாமம் சீவனும் ; அச்சீவன் துவம்பதத் திற்கு வாச்சியன். அவனிடத்திற் சிதாபாசபாகம் ஒழிந்த கேவலம் கூடஸ்தன் துவம்பதத்திற்கு இலட்சியனும் அகம் சப்தத்திற்கு வாச்சியஞ் சீவனும் : கேவ லங்கூஸ்டதன் இலட்சியமாம் என்றறிக, (சூஞ்)

அ - கை.

[அந்தமுப்பதங் காரணமாக நான்கு சைதன்யத்திற்கு வாச்சியார்த்த லட் சியார்த்த மினையவெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

66 பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டி னுக்கும்
வாச்சிய மிலக்கி யந்தான் மலமிலாப் பிரம மான்மா
காய்ச்சிய பாலி னெய்போற் கலந்தொன்றுங் கடைந்தெ டுக்கு
மாச்சிய மென்ன வுன்னை யறிந்துநீ பிரிந்து கொள்ளே.

(இ-ள்.) பூச்சிய வீசன் சீவன் புகல்பத மிரண்டினுக்கும் வாச்சியம், எ-து. வெறும் பெயர்மாத்திர வடிவாயுள்ள சீவேசர்கள் முன்னர்க் கூறிய தத்துவமென்னு மிருபதங்கட்கும் வாச்சியார்த்தமாம்:—இலக்கி யந்தான்மலமி லாப் பிரமமான்மா,—எ-து. மலரகிதமான கூடஸ்தன் பிரம மிரண்டுமிலக் கியார்த்தமாம்:—காய்ச்சிய பாலினெய்போற் கலந்தொன்றும்.—எ-து. காய்ச் சின பாலின்கண் வெண்ணெ யெங்ஙனம் வேற்றுமையின்றி யபேதமாக் கலந் தொன்றுயிருக்குமோ, அதுபோல;வாச்சியார்த்தத்தி லிலக்கியார்த்தம் வேற்று மையின்றி யபேதமாகக் கலந்தொன்றுயிருக்கும்:—கடைந் தெடுக்கு மாச்சிய மென்ன வுன்னையறிந்து நீ பிரிந்து கொள்ளே,—எ-து. அங்ஙன மிரிம்பித்த வெண்ணெயை மாத்திரங் கடைந்தெடுக்குமாறுபோன்று வாச்சியார்த்தத்தில் மிரிம்பித்திருக்கின்ற வுனதெதார்த்த சொரூபத்தை மாத்திரஞ் சிரவண மன னநிதிகளா லியந்திரிபறச் சிந்தித் தணர்ந்தக்கற்பனைகளினின்று பிரத்தியேக மாக நிற்றி, எ-து.

அவன்காரியம் பூச்சியமாயிற்றென்னு மூலகவழக்கத்தில், பூச்சியம்-வெறு மையைத் தரஞின்றது. பொன்னையன்றிப் பணிக ளெங்ஙனமோ வங்ஙனஞ் சாட்சியையன்றிச் சீவேசர் தோற்றன்மாத்திரமா யிருத்தலின் பூச்சிய வீசன் சீவனெனவும், இவ்விருவரு மூபாதி குணசகித கற்பிதராதலின் வாச்சியார்த்த மெனவும், பொன்போன்று டாரமார்த்திகமாயிருத்தலின் மலமிலாப் பிரம மான்மாவெனவும், இவ்விருசாட்சியு மூபாதிரகித வதிஷ்டானமாதலி னில்க்கி

யார்த்தமெனவும், காய்ச்சிய பாலினெய்யென்றதனாற் காய்ச்சாத பாலினெய் சிறந்ததன்றெனக் குறிப்பிக்கின்றது. அதுபோல, ஐயந் திரிபற்ற வுணர்வு நிரதிசயானந்தோதயத்துக்கிடமாம். அறிதவுணர்வவ் வுதையத்துக் கிடமன்றும். கடைந்தெடாவிடத்தும் பாலாயினும் வெண்ணெய் மிசிரிம்பித்திருக்குமாறுபோன்று, ஆயாதவிடத்து மறிவாயினும் நிரதிசயானந்த மிசிரிம்பித்திருத்தலின் பாலினெய்போற் கலந்தொன்றுமெனவும், கடைந்தவிடத்தன்றி வெண்ணெயெழாததுபோல, ஐயந் திரிபறுவிடத்தானந்தமெழாது; ஆதலின், கடைந்தெடுக்கு மாச்சியமென்ன வுன்னை யறிந்துநீ பிரிந்து கொள்ளே யென வங் கூறினர்.

(க-து.) வாச்சியார்த்தத்தை விட்டு லட்சியார்த்தத்தைப்பற்றுக வென்பது. இதைப்பற்றலே யகிதார்த்தங் கைகூடல். தத்-ஈசன், துவம்-சீவன், அசி-பிரமம், இது வாச்சியார்த்தம். தத்-பிரமம். துவம். கூடஸ்தன், அசி - ஐக்கியம், இது லட்சியார்த்தம். (சுசு)

அ - கை.

[பிறிந்துகொள்ளும்வகை தெரிகிலனே யென்ற மாணாக்கனுக்காசிரியர் தூலதேகமும் பிராணாதி வாயுக்களு நீயல்லை யென் பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

67. பிறிவதெப் படியென் றக்காற் பிணமாகு முடனு னென்னு மறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகார மன்றே வெறியதோர் தருத்தி மூச்சு விடுவது போல மூக்கா லெறிபிரா ணனுநீ யல்லை யிராசத குணவி காரம்.

(இ-ள்) பிறிவதெப் படியென்றக்காற் பிணமாகு முடனுனென்னு மறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூதவிகாரமன்றே, —எ-து. பிறிந்து கொள்ளுமவகை யெங்ஙனமெனக் கேட்பையாயின் சொல்லுதுங் கேட்பாயாக; — இனிப் பிணமாதற்கியைந்த தூலதேகத்தை நானென்னு மகங்காரமாகிய வறிவைக் கொல்லல்வேண்டும்; யாதினுலெனில், ஸ்தூல பஞ்சபூதாம்ச சையோக விகாரப்பொருளன்றிச் சுயம்பெனற்குப் பொருள் யாதானும் வேறுளதோ, ஆதலினது நீயல்லை ஆயிற் பிராணவாயு யானுகல்வேண்டுமேயெனின்: — வெறியதோர் தருத்தி மூச்சுவிடுவது போல, —எ-து. உணர்விழந்ததாகிய வோர் தருத்தியானது காற்றை வாங்கி விடுவதெங்ஙனமோவதுபோல: — மூக்காலெறி பிரா ணனுநீ யல்லை யிராசத குணவிகாரம், —எ-து. மூக்கினுற் காற்றை வாங்கிவிடுகின்ற தசவாயுக்களிற் சிறந்த பிராணவாயுவும் நீயல்லை; யாதினுலெனி லிராசதகுணத்தின் விகாரத்தா லாயதன்றே; சுயம்பன் றுதலிற் கூடாது, எ.று.

இருக்கும்போது நடைப்பிணமென்றும், இறந்தபோது கிடைப்பிணமென்றும் வழங்கலிற்பிணமென்றார். தனித்தனி சொல்லப்புகினு மில்லையல்லையென னற்கே யுரியவாமாதலின் மூக்கியத்தைப் பிராணனுமென விறந்ததுதழீஇய வெச்சவும்மை கொடுத்துக்கூறியதென்க. தன்னையுமறியாது மற்றென்னையு

ம்றியாதென்னு மிழிவுதோன்றப் பிராணவாயுக் குவமைகூறவந்தவர் தருத்தி யென்னுத வெறியதோர் தருத்தியென வடைகொடுத்துக் கூறியதைக்காண்க. தாமதகுணத்தில் இராசதகுணவிகாரம் பிராணாதிவாயுக்களும், கன்மேந்திரங் களுமாதலின், இராசதகுண விகாரமென்றார்.

(க-து) தூலதேக்மும் பிராணாதி வாயுக்களுநீயல்லையென்பது. பின்சவியி லவஸ்தை, தனு, கோசம், அபிமானி, காட்சி, நீயல்லையெனக் கூறப்புதலா லிக்கவியில் தூலம் பிராணனோடன்றிச் சாக்கிராவஸ்தையும், அன்னமயகோச மும், பிராணமயகோசமும், விசுவனும், தூலக்காட்சியும் நீ யல்லையெனக் கூட்டுக. முன்பின்னேக்கலா லிது சிங்கநோக்கு. (சூஎ)

அ - கை க.

[ஏனைய தத்துவங்களு நீயல்லையென விக்கவியிற் கூறுகின்றார்.]

68. கரணமா மனது புத்தி கருத்தாவா மிவையான்மாவோ
தாமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்
வரமறு கனவா னந்த மயனீயு நானென் னுதை
விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே.

(இ-ள்.) கரணமா மனது புத்தி கருத்தாவா மிவையான்மாவோ,—எ-து. அந்தக்கரண மென்ப்படுவதாகிய மனதும் புத்தியுமாகிய விவைக ளகர்த்தாவா தலின் கர்த்தாவாகிய வான்மாவாகுமா ? ஆகாவே; ஆதலி னீயல்லை:—தாமுள விரண்டு கோசஞ் சத்துவகுண விகாரம்,—எ-து. முதல்தர பிரண்டாந்தரங் கூறியதால் ஏனைய மூன்றாந்தரம் நான்காந்தரமாயுள்ள மனோமயகோசமும் விஞ்ஞானமயகோசமுமோ வெனில், தாமதத்தில் சாத்துவித குணவிகாரமாதலி னிவை நீயல்லை:— வரமறு கனவா னந்த மயனீயுநானென்னுதை,—எ-து. சிறப்பற்றகனவையும் ஆனந்தமயகோசத்தையும் ஆனந்தமயகோசனுகிய பிராக் ஞனையும் நானெனக்கொள்ளற்க. யாதினுலெனில்:— விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகாரமாமே,—எ-து. சுயம்பல்லாத தாமதமும் அவித்தையுமாகிய விவ்விரண்டு விருத்தியின் விகாரமாகும்; ஆதலிற்கூடாது, எ-று.

சித்தத்தை மனதிலும், அகங்காரத்தைப் புத்தியிலு மடக்கிக் கூறியது சுருங்கச்சொல்லலென்னுஞ் மழகுபற்றி. கரணமெனப் பொதுப்படக் கூறி யதனுற் புறக்கரணத்தையுங் கொள்க ஆன்மாவைக் கர்த்தாவென்பதனுற் கர ணத்தையகர்த்தாவென்றும். கரணம், சூக்குமதனு காட்சி, சூக்குமப்பிரபஞ் சம். அபிமானி, தைசதன். ஆனந்தயசகோசத்தையு மபிமானியையுஞ் சொன்ன திலுல் அவஸ்தை, சுழுத்தியும், காட்சி, பாழுமெனக்கொண்டாம். தனு, அவித்தை எனவே, இஃதொன்றினமுடித்தலென்னு முத்தியாயிற்று. ஆகவே" சொற்றவற் நியலான்மற்றைய பிறவுந்தெற்றென வுணர்தல் தெள்ளியோர் கடனே" யென்னும் விதியால் இவ்வவசரத்திற்கூறுத தத்துவங்களே யெல்லாங் கூட்டி நியதிகளேக வென்பது பெற்றும்.

(உ-து.) இதுகாறுங் தத்துவங்களே நியதிகளேந்ததென்பது. (சுஅ)

அ - கை.

[நீயாவ தினேயதென விக்கவியிற் கூறுகின்றார்.

69 சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாக்ஷி யேக
நித்தியம் வியாபி யான்மா நீயது வாவ றிந்து
பொத்தொடு சடந்துக் காதி பொருந்துபே தங்க ளான
குத்திரப் பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியி லாவாய்.

(இ-ள்.) சத்தொடு சித்தா னந்தஞ் சமந்திரஞ் சாக்ஷி யேகம், நித்தியம் வியாபி யான்மா நீயது வாவறிந்து,—எ-து. சத்து, சித்து, ஆனந்தம், சமம், திரம், சாக்ஷி, ஏகம், நித்தியம், வியாபி யெனப்படுவன ஆன்மாவாதலின், நீ யந்தவான்மாவென வுன்னை நீ யறிந்து:—பொத்தொடு சடந்துக்காதி பொருந் துபே தங்களான,—எ-து, அசத்து, சடம், துக்கமுதலியவைகளோத் தமக்கியல் பாக வுடைய பேதப்பொருள்களா நின்றுள்ள:—குத்திரப் பஞ்சகோசக் குகை விட்டு வெளியி லாவாய்,—எ-து. பஞ்சகோசமென்னும் வஞ்சகக் குகைகளி னின்று வெளுப்படுதி,—எ-று,

சத்து-உள்ளது ; சித்து-இங்கே தன்னையறிவது ; ஆனந்தம்-மாறுச்சுகம், சமம், என்று மெங்கு மொருபடித்தா நிற்றல் ; திரம், இங்ஙனநிற்றற்கு மா றின்மை சாட்சி, அதுவது வாகியு மாகாதவற்றை விலட்சணமாக நின்றுணர் தல் ; ஏகம், பலவாகியுமாகாதுத் தனியாநிற்றல் ; நித்தியம், இங்ஙனமா நிற் றல் ; ஆன்மா, இக்குணங்களுக்கெல்லாங் குணியாக நிற்குமறிவு. நீ, இக்கு ணிதா னீயெனப்படுவது, எனவே, நீ வெறுகாது நில்லென்பதாயிற்று. அறி வுக்கயல், பஞ்சகோசங்களுக் கயலன்மையின் அசத்தாதிகளோப் பஞ்சகோசங் களுக்குக் கூறினும். ஆகியென்றதனாற், சமம், திரம், சாக்ஷி, ஏகம், நித்தியம், வியாபி, பூரணம் என்பவைகளுக்கு மாறுய மொழிகளுளவே லவையுங் கொள்க. சென்மங்கட் கியைந்தது தேகம், அறிவன்மையின் அறிவே சத்து. தன்னை யறிதற்பாலது வேறன்றுமையி னறிவே சித்து. சத்தே சித்து சித்தே சத்து எனற் கியைதற்பாலது வேறன்றுமையி னறிவேயானந்தம். யாவு மறிவா நிற்றலி னறிவே சமம். அதனை எவ்வித வாதத்தானு மாற்றக்கூடாமையி னறிவே திரம். தானே சமஸ்தமாயினு மன்றுகநின்றிவற்றைச் சாக்ஷியாக வறிதலி னறிவே சாக்ஷி. சராசரபேத மறிவுக்கன்மையினறிவே யேகம். மூதலிடை கடையின்மையி னறிவே நித்தியம். சமஸ்த வியாபகமும் தன்னி டத் திருத்சலி னறிவே வியாபி. இங்ஙனமாய குணங்களுக் கெல்லாங் குணி யாக வழக்கிறந்து நிற்றற்பாலது வேறன்மையி னறிவே யறிவு நீ யென்பதற் குப் பொருள் வேறின்மையி னீயது வாவறிதெனவும், பஞ்சகோசமு மறி யாமை யாதலி னதனைவிட்டு வெளியிலாவாயெனவுங் கூறினர்.

(க-து.) இங்ஙன மாராய்ந்து களைவதாற் றேறிய வறிவே யான்மாவென் பது. இதனை மறுப்பார் அர்த்தவாதியரல்லர். அர்த்தவாதிய ரரியர். சொல்வா தியர் எளியர். அதனை யாராய்தி.

(அக)

அ - கை.

[அங்ஙனந் தெரிவித்தவாறு நின்ற மாணுக்கன சையந்தெளிய விக்கவியிற் சொல்லப் புகுகின்றார்.]

70. பஞ்சகோ சமும்விட் டப்பாற் பார்க்கின்ற போது பாழே
விஞ்சிய ததுவல லாமல் வேறொன்றுந் தெரியக் காணே
னஞ்சன விருளே யோகா னகமென வனுப விப்பேன்
வஞ்சமில் குருவே யென்ற மகன்மதி தெளியச் சொல்வார்.

(இ-ள்.) பசஞ்சகோசமும்விட் டப்பாற் பார்க்கின்றபோது பாழேவிஞ் சியது.—எ-து. தேவீர் நியதிகளேந்தவாறு பஞ்சகோசமுந் தாண்டி யப்பா னிட்டையிற் பார்க்குமபோது மிஞ்சிநின்று காண்பது பாழே:—அதுவல்லா மல் வேறொன்றுந் தெரியக் காணேன்,—எ-து. அந்தப்பாழ் காணப்படுகின்ற தேயன்றி, வேறொன்றுங் காணக்கண்டிலன்:—அஞ்சன விருளேயோ-கானக மென வனுபவிப்பேன்,—எ-து. கருமையான விருளேயா நானென்றனுபவிப் பன்:—வஞ்சமில் குருவேயென்ற மகன்மதி தெளியச் சொல்வார்,—எ-து உண்மையாகத் தெளிவிக்க வெழுந்தருளிய குருநாதனே யென் றிரந்துகேட்ட மாணுக்கனது மதிதெளியும்வண்ணந் தக்கவிடைதருகின்றார்,—எ-று.

பஞ்சகோசத்தை விடுதலாவது ; அவை தானுகின்ற அழுத்தத்தை அதாவது, பஞ்சகோசமும் விகாரரூபமன்றிச் சுயம்பன்றெனக் காட்டியத னும், காட்டியவண்ணந் தானுந் தோடங் காணத்தானே யவ்வழுத்தஞ்சிறிது சிறிது தளருமாதலினுலும், தளர்த்தளர அவ்வவற்றினுள்ள பாசமணுவணு வாக நழுவுமாதலானும், நழுவினும், அவ்வவ்வாசனை விரைவிலகலாது, சிறிது சிறிதகல அவ்வவ் வவற்றினிலக்கும் விடும், இங்ஙனம் விடுதலேயெனவறிக. இங்கே பாழாவது ; பஞ்சகோசமுங்காணுமை. முன்னர் பஞ்சகோசமாநின்ற தறிவாதலா லிப்போ தன்றுநிற்பது மறிவே. முன்னரறிவு விளங்கிலிப்போது மறிவுவிளங்கலாம் முன்னர் நாமரூபமா விளங்கியவாறுபோன் றிப்போது பாழா விளங்குகின்றது என்னும் விவேகமினுலுங்கின்றேனும் பாழித் பயனின் மைபற்றிப் பஞ்சகோசமும்விட் டப்பாற் பார்க்கின்றபோது பாழே விஞ்சிய தறிவல்லாமல் வேறொன்றுந் தெரியக்காணேனெனவும், நாமரூபமும், பாழுமற றிவினது கற்பிதத்தோற்றம், அவையோர் முதலன்று இவ்விருமைக்கு முதலா யிருப்பதறிவு இவ்வறிவே யிவையினும் விளங்காமைபற்றி யஞ்சன விருளே யோகா னகமெனவனுபவிப்பனெனவுங் கூறினன். பஞ்சகோசமும் பாழு மறிவையன்றி யில்லையென்னுமுளவு அவ்வனுபவிக்குத் தெரியுமன்றி யேனை யோர்க் கெங்ஙனந்தெரியும் இவரனுபவியாதலிற் தெளியச் சொல்வாரெ னப்பட்டது. உலகில் ஞானுனுபவிக ளொழிய வேனையகுருக்களனைவரும் இது பஞ்சகோசத்தி லொன்றுமேயெனத் தெரியாததனை மெய்த்தேவபாவமெ ன்க்கொண் டுபதேசித்துக் களித்துத்திரிகின்றனர். இங்ஙனமாயபாவமெல்லா மனோசங்கற்பமன்றே ; இது மனோசங்கற்பமெனவறிந் திவற்றைவேண்டாது

மெய்ப்பொருளே யுணர்த்தத் தக்கவனைக் குருவாக விவன் விழைந்து பல்லூழி காலமெய்த் தவம் புரிந்ததனு லன்றே வித்தகையான குரு விவனுக்கு வாய்த்தனர். யாவரு முணர்ந் துய்யும்படி யிங்ஙனமாய மரபு தெரிவிக்கப் பட்டது. (எo)

அ - கை.

[தசமன்பாழாகி னீயும் பாழாகலாமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

71. முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணி யெண்ணி
யொன்பது பேரைக் கண்ட வொருவனுந் தனைக்கா ணாது
பின்பவ னிடையிற் கண்ட பெரியபா ழவனே பாரா
யன்புள மகனே காண்ப தடங்கலுங் காண்பா னீயே.

(இ-ள்.) முன்புகல் தசமன் புத்தி மோகத்தா லெண்ணியெண்ணி—எ-து. முன்னர்க்கூறிய பத்தாவான் தனது புத்திவிகற்பத்தாற் பலகா லெண்ணி யெண்ணி:—ஒன்பது பேரைக்கண்ட வொருவனுந் தனைக்காணாதுபின் பவனி டையிற் கண்ட பெரியபாழவனே பாராய்,—எ-து. ஒன்பதுபேரைக்கண்ட வொருவனுகிய தன்னை யெண்ணிக்காணாது, பின்னரவன் தன்னிடத்திற்கண்ட பெரிய பாழ்தானு ; தசமனெனப்படுவோ னிதனை நன்குசிந்தித்துக்காணுதி:— அன்புள மகனே காண்பதடங்கலுங் காண்பானீயே,—எ-து. எனதுபிரியமுள்ள ஞானபுத்திரா ; அகம்புறத்திற் காணப்படுவனவா நின்றுள்ள திருசியமனைத் துங் காண்பவனீயேயாகும், எ-று.

புத்திமோகம், கலக்கபுத்தி. அவன் பாழல்லனென மறுக்க வெதிர்மறைப் பொருடர நின்றது ஓகாரமெனவறிக. இங்கே பாழாவதொன்றுந்தோன்றுமை. நாமரூபமுதல் பாழீறுய வனைத்தையுங்காண்ப தடங்கலுமெனவும், அடங்க லுங் காண்பதறிவு, அவ்வறிவு நீயேயெனக் குறிப்பிக்க, அடங்கலுங் காண்பா னீயே யெனவுங்கூறினர்.

(க-து.) பகுதி விகுதி யிடைநிலைக் கற்பிதங்களீயல்லை யிவற்றிற்குச் சாக்ஷி நீயென்பது. (எக)

அ - கை

[முன்னர்ச் சாக்ஷி நீயேயென்பதை வற்புறுத்தக்கூறிய வாணையை யிக்கவியில் மீண்டுங் கூறுகின்றார்.]

72. தூலசூக் குமவஞ் ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்
காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோ லங்கள்
போலவே வந்து வந்து போன்தெத் தனையென் பேனு
ஞலமர் கடவு ளாணை யவைக்கெலாஞ் சாக்ஷி நீயே.

(இ-ள்.) தூலசூக்கும வஞ்ஞானந் தோன்றுமூன் றவத்தை தாமுங்கால மோர் மூன்றும்,—எ-து. தூலம், சூக்குமம், காரணம் என்னு மிம்மூன்று தனுக்களும், இவை காணப்படுதற் கிடமாயுள்ள சாக்கிரம் சொப்பனம் சுழுத்

யென்னு மூன்றவஸ்தைகளும், இவற்றிற்குக் காலவரையறையா நின்றுள்ள இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னு மூக்காலங்களுமாகிய விவைகள்:— சன்மக் கடலெழும் கல்லோலங்கள்போலவே வந்துவந்து போனதெத்தனையென்பா னேன்,--எ-து. பிறவிசாகரத்தில் தானே யெழுந்தடங்குதலே யியல்பாகவுடைய பேரலைகளைப்போலவே தோன்றித்தோன்றி யழிந்ததாகிய தொகை யெத்தனை யெனக் கணக்கிடுவன் யான்:— ஆலமர்கடவு ளாணை யவைக்கெலாஞ்சாக்ஷி நீயே,—எ-து. முன்னர்ச் சனகாதிகட் கனுக்கிரகிக்கக் கல்லால விருக்ஷத்தின் கீழ்க் குருமூர்த்தமாக வெழுந்தருளிய பரமசிவத்தின்மே லாணைப்படி யந்தத் திருசியங்களனைத்திற்குஞ் சாக்ஷியாகின்றுளது நீயே வேறில்லை நீயிதனையனு பவித்துக் கேட்பாயாக, எ-று.

போனதென்பது, தொகையொருமை. கடலுக் கலைக ளியல்பாமாறு போன்று, பிறவிக்குத் தூல முதலிய விவ்வொன்பது மியல்பாமென்றதா யிற்று. இதற்குத் தடையுளதேல் கூறுதும், நம்பிக்கை யன்று. கேளுதி ஞாயமுகத்தால். எங்ஙனமெனின், இப்போது யாம் நின்றுளது பிறவியோ, அன்றே ; பிறவியெனின், இந்தப்பிறவியில் தூலமுதலிய விவ்வொன்பதுந் தோன்றித்தோன்றி மறைகின்றனவோ; இன்றே ; மறைகின்றனவெனின், இப்பிறவி நழுவுமளவு மிங்ஙனமாய தொகையொருமை யெத்தனை. கணக் கில்லை யெனின், பிறவிதோறு மிங்ஙனமாவதளதோ, இலதோ ; இல்லையெ னின், இப்பிறவிக்கையிலதாகவேண்டும். உளதாசலிற் பிறவிதோறுமுளதாக வேற்கவேண்டும், இதனை மறுத்தற்கிடமின்று இனிப் பிறவிக ளுபாதிக்கோ, அறிவுக்கோ ; உபாதிக்கெனின், உபாதி சடமாதலி னறிவாகுமா ?ஆகுமெ னின், சொப்பனசுழுத்திகளிலறிந்துகொள்ளவேண்டும் ; அங்ஙனமின்றுமைக் கேதென்னை?அறியாதேனும் யோனிவழித்தாயி றுடலாதலினுபாதிக்கேயாம். யோனியென்பது, நால்வகையை, இதுநிற்க ; இனி உபாதிக் கறிவோ, அறிவுக் குபாதியோ ; உபாதிக்கெனின், உபாதிக் கறிவு யாதுக்கு ? சுகசாதனத்துக் கெனின்; அறிவு சுகசாதனமாயின் சுகத்தை யனுபவித்தல் யாது ? உபாதியெ னின், தன்னையேனு மன்னியத்தையேனு மூணரத் தகையதாகவேண்டுமே, அப்போது தூலமன்று. சூக்குமமெனின் சுழுத்தியிற் கேவலசுகத்தை யனுப விக்கற் கியைந்த வுணர்வினதாகவேண்டுமே, இல்லாததால் சூக்குமமன்று. காரணமெனின், அவித்தையாகவேண்டும், தன்னைத்தா னறிதற்பால தன்றுமை யின் தன்னைத்தான் சுகிகுமா றெங்ஙனங்கூடும் ? கூடாததால் உபாதிக் கறி வன்று. அறிவுக் குபாதியெனின், ஒருவாற்றாற் பொருந்தும். அவஸ்தாத்ரயம், சாட்சித்ரயம், உபாதித்ரயம், அபிமானித்ரயமா நிற்ப திவ்வறிவேனும், சாக் கிரத்தில் தூலத்தைத் தனுவாகப்பெற் றுலகபோகத்தை நுகர்வதும், சொப்ப னத்தில் சூக்குமத்தைத் தனுவாகப்பெற் றங்குள சுகத்தை நுகர்வதும், சுழுத்தி யில் காரணத்தைத் தனுவாகப்பெற் றங்குள கேவலசுகத்தை யனுபவிப்பது மறிவெனினும், அஃதிங்ஙன நிற்றலே யறிவா ரெங்ஙனு மின்றுதலா னதனைக் கணிப்ப தெளிதன்று. இதுநிற்க. அறிவுக்கு பாதியெனல், இது தன்னைத்தா னறியுமட்டுள்ள தந்திரம். எங்ஙனமெனில், இம்மூன்று தனுவு மஞ்ஞான தனுவாகும்போது ஞானதனு விருக்கவேண்டுமே, அதுவு மறிவுக்குச் சுத்த

வுபாதியாகவேண்டுமே, சுத்தவுபாதியி லசுத்தவுபாதியும், அசுத்தவுபாதியில் சுத்தவுபாதியு மின்றியினும், அறிவிருத்தலாற் சாக்ஷியாகவேண்டும். அறிவே நீயே சாக்ஷியென்றார். இதற்குமே லுண்மை யின்றுதலாற் கடவுளாணை யெனப்பட்டது. வந்துவந்து போன தெத்தனை யென்பேனாயினனவே, இனி வரப்போவ தெத்தனையோ வெனக் குறிக்கின்றது. உபாதிக்கே பிறவி, அறிவுக்கன்று ; அறிவு நீயாதலி னீயே சாக்ஷியென்பது பொருந்தும்.

(க-து.) இதனிலு மையங்கொள்ளா திருப்பதற் கிங்ஙனங் கூறியதென்பது. (எஉ)

அ - கை.

[ஒவ்வொன்று மற்றொன்று லறியப்படுமாறுபோன்று யானும்
யாதா லறியப்படுவனென்ற மாணாக்கன் வினவுக்
கிக்கவியில் விடை கூறுகின்றார்.]

73 எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று
சொலலாதே சுயமாஞ் சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ
பல்லார்மூன் றசமன் றன்னைப் பார்த்ததுந் தனைக்கொண் டேதா
னல்லாது பதினொன் றனு மவனிடத் துண்டோ பாராய்

(இ-ள்.) எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று சொல்லாதே,—எ-து. சமஸ்தத்தையும் பார்த்தறியப்பட்ட வென்னை யெதைக் கொண் டறிவேனென்று பிறர் சொல்வதுபோலச் சொல்லாதே:—சுயமாஞ் சோதி சுடருக்குச் சுடர்வே றுண்டோ,—எ-து. சுயம்பாயுள்ள பிரகாசரூபமான சூரியனைக் காண்டற்கு வேறோர் சூரியன் வேண்டுமோ, அல்லது வேறுண்டோ:—பல்லார்மூன் றசமன் றன்னைப் பார்த்ததுந் தனைக்கொண் டேதானல்லாது,—எ-து. தானல்லாத மற்றொன்பதுபேர்மூன் பத்தாவான் தன்னைக் கண்டுகொண்டதுந் தன்னைக்கொண்டே யல்லாமல்;—பதினொன் றனு மவனிடத் துண்டோ பாராய்,—எ-து. தன்னைத்தான் ஈனும் தொழிலிற் பதினொன்றுவது புருடனு மவனிடத் துளனோ நீயேகாணுதி,—எ-று.

சுடருக்குச் சுடர்வே றுண்டோவென்னு முவமையால், ஆன்மா பிரகாசவடிவமெனவும், சுயமாஞ்சோதியென்னு முவமையால், சொப்பிரகாசமெனவும் பெற்றும். மற்றொன்றலன்றி யான்மா தன்னைத்தானறியாதென்னும் போலி ஞானிகள்போல் கூறற்கவென்பார், எல்லாங்கண் டறியு மென்னை யேதுகொண் டறிவே னென்று சொல்லாதே யெனவும். தன்னைத்தான் விகற்பித்துப்பார்க்குந்தொழில் தன்னிடத்தல்லது வேறிடத்தின்மைபோலத் தன்னைத்தானிர்விகாரமாக்கிப் பார்க்குந்தொழில் தன்னிடத்திலல்லது வேறிடத்தின்மையின் பதினொன்றனு மவனிடத்துண்டோ பாராயெனவுங் கூறினர். ஒன்பது பேரெனக் குறிக்கப் பல்லாரென்றது. என்னை? ''ஒன்றல்லன பலதமிழ்நடை வடநூலிரண்டல் லனபல வென்றிசினோரே.'' என்றார் பிறரும். நினைவினுங் கனவினுஞ்சுழுத்தியினுந் திரிபுடியைவிளக்குவிப்பது சோமசூரியாக்கினி யவ்விடத்தின்

நேயாது விளக்குவிப்பது, ஆன்மப்பிரகாச மென்றற் கையஞ் சிறிதுமில்லை. இஃதோருயிர்பாலன்று, எவ்வுயிரிலு மாதலின் தடுத்தற்பால தன்று.

(க-து.) தானுகிய வறிவு சொப்பிரகாசமென வுணர்த்தினுரென்பது. இத, னைநம்பற்க வென்னுது பாராயென்றார். ஜயந்திரிபகன்றார்க்கே யிது விளங்கும்.

அ - கை.

[நீ சகத்துமல்லை பாழு மல்லை யறிவேயென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

74. அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென் றெண்ணு
மறிவற்ற குதர்க்க மூடர்க் கனவத்தை பலமாத் தீரு
மறிபடி பொருணீயல்லை யறிபடாப் பொருணீ யல்லை
யறிபொருளாகு மூன்னை யனுபவித் தறிவாய் நீயே.

(இ-ள்.) அறிவுக்கு மறிவுசெய்யு மறிவுவேறுண்டென் றெண்ணும், எ-து. ஞானத்துக்கும் ஞான முணர்த்தத்தக்க ஞானம் வேறுளதென் றெண் ணுகின்ற:—அறிவற்ற குதர்க்கமூடர்க் கனவத்தை பலமாத்தீரும்,—எ - து. மெய்யுணர்விழந்த குதர்க்கவாதிகளாகிய மூடஞானிகளுக் கனவஸ்தாதோஷமே பிரயோசனமாக முடியும். (ஆதலினந்நெறிச் செல்லற்க):—அறிபடு பொருணீ யல்லையறிபடாப் பொருணீயல்லை.—எ-து. அறிபடு பொருளாகிய பதிபசுபா சமு நீயல்லை, அறியப்படாததாகிய பாழெனும்பொருளு நீயல்லை. (ஆயின் யானுவதியாதெனின்) :—அறிபொருளாகு முன்னையனுபவித் தறிவாய் நீயே, எ-து. கன்னைத்தானுணரற்பாலதாகியபொருள் மெய்யுணர்வாதலா லதுவே நீ, அங்ஙனமாய வுன்னை நீயே யனுபவித்தறிதி, எ-று.

கைவெண்ணெயை நெய்யென்றறியா தலைவார்போன்று, தானுகியவறி வினுண்மைநிலை யிஃதென் றுய்ந்தனுபவிக்க வகையறியாது, அறிவுக்கறி வென்பர், (அதாவது) சீவவறிவு, பரவறிவு, எனவிரண்டு பரவறி வுணர்த் தல் பரவுணர்வு; பரவுணவுணர்த்தல், வேறுணர்வுண்டாகவேண்டும். அதனை யுணர்த்த வேறுணர் வுண்டாகவேண்டும். அதனை உணர்த்தவேறுணர் வுண் டாகவேண்டும். இங்ஙனஞ் செல்லில் மூடிவெங்குளது. இன்றுதலி னிதனை யனவத்தாதோடமென்பர் கலைவல்லோர். இங்ஙன மாகுமென வறியாது, அறி வுக் கறிவெனக் கூறற்குப்பயன் அனவத்தாதோடம். இதனை யறியாததா லறி வற்ற குதர்க்கமூடரென்றார். இதில் தோடமென்னை? இவரை ஞானியென்பா ரிவரினும் வீவேகியர்போலும். இது ஞானமாகுமா, இவர் ஞானமென்பதைக் கேட்டுமறியார் போலும், அந்தவூரிலு மிருந்தறியார்போலும். இங்கே குதர்க் கமூடரென்பதில், குதர்க்கமாவது; ஒழுங்கின்றிவாதித்தல். அதாவது, ஸ்மரணை யன்றிச் சகசீவபரத்துள் சகமெனல் யாதெனில், இதோ தோற்றுகின்றதே யதுதானெனல். அதற்குரிய பெயருளதாயிருக்கச் சகமெனும்பெய ரேற் றற்பால தெதுவெனில், முன்போலமீண்டும் விடைகரல். இது தோற்றமன்றே, உளதேல் காயத்தாற் சுட்டிக்காட்டெனில், விரலாலிதுதானெனச் சுட்டிக்

காட்டல். இவ்விரானுடலன்றி யில்லை, இவ்வுடல் உலகன்றி யில்லை, நீ யுடலன்றுதலால், நீ வேறுயிருந்துலகைக்காட்டுகவெனின், இதற்கு நேராக வுத்தரவின்றிக் கண்டபடி சொல்வாதஞ்செயல், காயத்தாற் சுட்டிக் காட்டவொண்ணுதேனும், வாக்காலேனுங் காட்டுதியெனின், சொல்லா லிதுனைக்கூறல். சொல், சத்தத்தையன்றி யில்லை, சத்தம், ஆகாயத்தையன்றி யில்லை, நீ யாகாயாகாயமன்றுதலால், நீ வேறுயிருந் துலகைக் காட்டுதியெனின், இதற்கும் மூன்போலச் சொல்வாதஞ்செயல். காயத்தாலும் வாக்காலுஞ் சுட்டிக்காட்ட வகையின்றேனும், மனத்தாலேனுஞ் சுட்டி யறிதியெனின், எங்ஙனமெனவரும். மனம் உலகாய்நில்லாது வேறுயிருந்துன்னவேண்டுமெனின், வேறுயிருந்து தானுன்னினே னெனவரும். வேறிடம் பாழன்றே, அங்கே மனமெங்கே, உன்னுதலெங்கே, காணப்படு மூலகெங்கேயெனில், மூன்போலச் சொல்வாசம் வரும் இங்ஙனஞ் செய்தலே சூதர்க்கமென வுணர்க. இங்ஙனமாய வழக்கில் மூழ்கியெழாதார்க்கு வேதாலந்தட்சமித வென்றெங்ஙனந்தெளிதற்கிடந்தரும். ஆதலினவர்வழிச்செல்லாதிதனைக் கேளுதி. நீயுன்னுலறிபடு பொருளாமெனினுலகமாம், உலகஞ் சடமாதலினீயலை. நீயுன்னுலறிபடாப் பொருளாமெனின் சூனியமாம், சூனியஞ் சடமாதலினீயல்லை. இவ்விரண்டையு மறிவ தறிவாதலினது நீயாமென்பார், அறிபடுபொருணீ யல்லை யறிபடாப்பொருணீயல்லை யறிபொருளாகுமெனவும், சொல்லளவாகவும், நினைவளவாகவும் போகாதேயென்பார், அனுபவித்தறிவாய் நீயேயெனவுங் கூறினர். நியேயென்பதில் ஏகாரந்தேற்றப்பொருள். இவ்வுரை காணிலன்றிக் குதர்க்க மடங்காது. (எசு)

அ - கை.

[அறிவாகிய நினதம்ஸ்த்தை யன்றித் துவிதத்திற்குப் பசையின்றென வுவமானத்தாலிக்கவியிற் கூறுகின்றார்.]

75. மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யாரமெல்லா
மதுரமாக் கியவதற்கு மதுரந்தான் சுபாவமன்றே
வதுவிது வெனுஞ்சடங்க ளறிவாக வறிவைத்தந்தே
யதுவிது விரண்டுமாகா வகம்பொருளறிவாம நீயே.

(இ-ள்.) மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணியார மெல்லாம்—எ-து. தித்திப்பாகிய வெல்லக்கட்டி சேர்த்துச்சுட்ட மாப்பலகாரங்களெல்லாம்:—மதுரமாக் கியவதற்கு மதுரந்தான் சுபாவமன்றே,—எ-து. தித்திப்பாக்கிய வவ்வெல்லக்கட்டிக்குத் தித்திப்பு சுபாவமல்லவா. (அதுபோல):—அது விது வெனுஞ் சடங்களறிவாக வறிவைத் தந்து,—எ-து. அதுவென்னும் பிரமமும், இதுவென்னுங் கூடஸ்தனும், ஏகசைதன்யத்துக்குச் சடங்களாதலா லந்தச் சடங்கள் ஏகசைதன்ய மாகும்படி நின்னுடைய ஞானதிருஷ்டியைக் கொடுத்து:—அதுவிட விரண்டு மாகாதகம்பொரு ளறிவாய் நீயே,—எ-து. அதுவிதுவென்னுங் கூடஸ்த பிரமத்துவிதமாகா தகம்பொருளாகிய தானென்னு மேகசைதன்னியத்தை யதுவாகத்தரிசனஞ்செய்தி, எ-று.

வெல்லமானது தன்மதுரத்தால் மாவைத் தன்மயமாக்குவ தெங்ங னமோ ? அங்ஙனம் உனது ஞானதிருஷ்டியானது தனது சொப்பிரகாசத் தால் சாட்சித்துவிதத்தைத் தன்மயமாக்குமெனப் பொருள்படநின்றது. தன்மயமாக்கல், ஏகமாக்கல். இங்ஙனமாக்கலால் வெல்லப்பலகாரங்கள் மதுர மாத்திரமா நின்றுற்போலச், சாட்சித்துவிதங்கள், ஞெப்திமாத்திரமாய் நிற்கு மென வறிக, இதுதா னத்துவிதமெனப்படுதல் இதனேயே யகம்பொருளென வும், இது மெய் பொய்யென்பதை அறியவேண்டின் நிட்டை கூடுதி யப் போது நீயே யறிவாயென்பார், அறிவாய் நீயே யெனவுங் கூறினர். சாட் சித்துவிதத்திற்குச் சீவேசர் சடமானதற்போல, ஏகசைதன்யத்திற்குச் சாட் சித்துவிதஞ் சடமாகவேண்டுமே, அதனு லதுவிது வெனுஞ் சடங்களெனப் பட்டது. ஐக்கியமாக்கற் கையைந்தது சாட்சித்துவிதமன்றிச் சீவேசரெனல் பொருந்தாது. அது நேரேயையையும், இது வலிந்து இயையும். வலிந் தியையி னுந் தூரத்தாம்.

(க-து.) சாட்சிகள் துவிதமாக்காணில், அதனனுபவ ஸ்புரிப்பைக்கொடுக்கி லம்; தேகமாக விளங்கும். அங்ஙனம் விளங்கலே வியாபகவிளக்கம், அவ்வியாபக விளக்கமாக நில்லுதியென்பது. (எ து)

அ ை க.

[உபதேசிக்க வெடுத்துக்கொண்ட தத்தொர்மசி யென்னு மகாவாக்கியத்தில், தத்தொமென்பதை வாச்சியார்த்தம் · இலட்சியார்த்தமென விரண் டாக்கி, வாச்சியார்த்தத்துக் கைக்யங்கூடாதென விக்கவி யிற்கூறுகின்றார்.]

76. இந்தநீ தொம்ப தத்தி னிலக்கியப் பொருளா மென்றும்
பந்தமில் பிரம மேதற் பதந்தனி னிலக்கி யார்த்த
மந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தஞ்
சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூ டாதே.

(இ-ள்.) இந்த நீ தொம்பதத்தி னில்க்கியப் பொருளாம்,—எ-து. இந்தநிலை யாயுள்ள நீ யென்னுங் கூடஸ்தனே தொம்பதத்தினது இலட்சியார்த்தமாம்:— என்றும் பந்தமில் பிரம மேதற் பதந்தனி னிலக்கி யார்த்தம்,—எ-து. எப்போ தும் பந்தரகிதமாயுள்ள அதுவென்னும் பிரமமே தற்பதத்தின் இலட்சியார்த் தமாம:—அந்தமாஞ் சீவ னீச னவர்களே வாச்சி யார்த்தம்,—எ து, மூதலி லுள்ள சீவேசரெனப்படுபவர்களே, நீ யென்னுந் தொம்பதத்திற்கும், அது வென்னுந் தற்பதத்திற்கும் வாச்சியார்த்தமாம்:—சந்ததம் பேத மாவார் தமக்க யிக் கியங்கூடாதே,—எ-து. ஐக்கியமாக்கினும் எப்போதும் பேதமுறுவரா தலி னிவர்களுக் கைக்கியமென்பதே கூடாது,—எ-று.

நீ தொம்பத மென்றதனுல் அது தற்பதமெனவும், பிரமந் தற்பத மென் றதனுல், கூடஸ்தன் தொம்பதமெனவும், அந்தமாமென்றதனுல் ஆதியெனவும். சிவ னீச னவர்களே வாச்சியார்த்த மென்றதனுல் தொம்பந் தற்பதம் நீ அது வெனவும், உரைகொண்டாம். பேதமாவாரெனப் பொதுப்படக்கூறினும்

சமஷ்டி வியஷ்டிபேதஞ் சாதிக்கின்மையின் சீவேசரைக் குறிக்கப்பெற்றும், பெறவே கற்பித சைதன்னியமென்றுயிற்று, இதுசுருதிபூர்வமாக வுபதேசிக்கப் புகுமர்த்தம்.

(க-து) ஐக்கிய மினையதற்கெனவும், கூடாமை யினையதற்கெனவுங் கூறியதென்பது. அந்தத்தா லாதிவருவித்தாம். (எசு)

அ - கை.

[ஐக்கியங் கூடாமைக் கே திக்கவியிற் கூறுகின்றார்]

77. பேதமா னதுவுங் கேளாய் பேராலு மிடங்களாலு
மோதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும்
பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்ப
ராதலா லிவர்க்கெங் நாளு மயிக்கியமென் பதுகூ டாதே.

(இ-ள்.) பேதமா னதுவுங் கேளாய்,—எ-து. முன்னர்ப் பேதமென் றேமே யதுவு மின்னதெனக் கூறக்கேட்பாயாக:— பேராலு மிடங்களாலு மோதரு முபாதி யாலு முடலாலு முணர்வினாலும்,—எ-து. சீவேசரென் னும் பெயர்களாலும் பூமி முதலிய விடங்களாலும், கைலாய முதலிய விடங்களாலும், சொல்லுதற்கரிய சமஷ்டி வியஷ்டி யென்னு முபாதிபேதங்களாலும், காரணசரீரம் காரியசரீரமென்னுந் தேகபேதங்களினாலும், பேரறிவு சிற்றறிவென்னு முணர்வுபேதங்களினாலும்:— பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பார்,—எ-து. பாதாளமுஞ் சுவர்க்கமு மெங்ஙன மதிதூரமோ வதுபோலவ்வள வகிதூர நீங்கிநிற்பார்கள்:—ஆதலாலிவர்க் கெங்நாளுமைக்கியமென் பதுகூடாதே,—எ-து. ஆகையா லிவ்விருவர்க்கு மைக்கிய மென்ப தெந்நாளுங் கூடாது,—எ-று.

பெயர், இடம், உபாதி உடல், உணர்வு, என்னுமிவைகளால் தனித் தனி பேதமுடையோர் சீவேசர். எனவே, இங்ஙனம் பேதமுற்ற சித்தம் என்று மல்லலறுதென்பதைக் குறிக்கப்பெற்றும். அவர் பேதமுறுவதா லாயபய னெடக்கென்னையென்னுங் கடாவரி னிதுவிடையெனக்கொள்ச. நானென்னுதாருலகி லொருவரு மில்லை, அதனை யாராயப் புகுவாரு மில்லை. இல்லாததாற் சிற்றறிவு சிற்றின்பம், பேரறிவு பேரின்பமென்னும் பேத, மெங்ஙன மகலும், அகலாததால், சுகம் சனக்கயலென்ப தெங்ஙன நீங்கும் ; நீங்காததாகவே, தேகமே நானென மூன்போல் வரும். வரவே, ஆண் பெண்பேதந் தானேவரும், வரவே, மோகாதிகட் கிடமாம், இடமாகவே பந்தம்பலப்படும், படவே, ஆலம்விழுதுபோற் கெட்டியாம். இவையெல் லாம், நானலதை நானுகக்கொண்ட விபரீதத்தாலன்றே ; இங்ஙனமாய வவசரத்தில் உடனழுவில் உடலையன்றி நானெனற்குப் பொருளறியா ரெதை நானென வறிவர். உடலோடொழிந்தசெனில், உட னுனுகவேண்டும் ஆகுமெனின், அன்னியத்தா லறியப்படாமலும் அபிமானிக்கப்படாமலும் உபசரிக்கப்படாமலும் தானே கர்த்தத்துவமாய் நின்று ஆலிங்கன முதலியவற்று

லாய சுகப்பேற்றை யனுபவிக்கவேண்டும் ; அங்ஙனமின்றே ஆகலினகர்த்தரீ. இதனைத் துணைக்கருவியாகக்கொண டனுபவிப்போன் கர்த்தா. அவன் ஆன்மா. அவனுடலன்று. அவன் சித்து. உடல் சடம், ஆகலின் எங்ஙனம் ஒன்றும். போகதாகமுடையோன் ஆன்மா, அவனுக்கிவ்வுடல் நீங்குவதாற் போகதாக மொழிந்ததோ ? இல்லையே. ஒழியாதளவு மிதுபோன்ற வுடல் யாதேனும் வேண்டும். வேண்டவே, எங்ஙனஞ் சொனனமகல்வர். அகலாதளவும், அல்ல லறறது ஆகலால், நானென்பதை யறிந்தே தீரவேண்டும். இதனை மறுத்தற்கிட மின்று. நானென்பதை யுள்ளவா றறிந்தாலப்போது பேசமெங்கே ? அறியா தளவு மூண்டெனக் குறிப்பிக்கப் பேதங்காட்டப் புகுந்தனரன்றி வேறன்று. அறிவையன்றிச் சீவேச ரின்றாலலாலந்தநாட்டத்தி லேகம். இது இலட்சியார்த் தம். தன்னை யறிவேவடி வெனக்கேட்டுங் காணுதானுக் கயலுனெனக் காணுமாதலா லவனுக் குபாதி யன்றிச் சீவேசரெனற்குப் பொருள் வேறென் றெங்ஙனம்படும படாது, ஆகலினந்நாட்டத்திற் சீவேசர் பெயர் இடம் உபாதி உடல் உணர்வு மூதலியவற்றாற் பேத மாகக் காணப்படுவரன்றே ; ஆதலிற் பேதம் இது வாசியார்த்தம்;

(க-து) இலட்சியார்த்தம் ஏகதையும் வாச்சியார்த்தம் பேதத்தையும் விளக்கநின்றதென்பது, இனி யேகமாக்கற்குப் பேதங் காட்டியதெனவறிக. ()

அ - ஞை க.

[வாச்சியார்த்தமென்னும் பேதத்தை மறுத்தற்கு இலட்சியார் த்தமென் றபேதவாதமாய் நின்றுள்ள மூன் நிலகணு வாக் கியத்தின் பெயரை யிக்கவியிற் கூறுகின்றார்.]

78. வடநூல்வல் லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராம
லிடராகிற் பொருளாம் வணண மிலக்கணை யுரையாற் கொள்வர்
திடமான வதுவு மூன்றுச் செப்புவார் விட்ட தென்று
விடலிலா தென்றும் விட்டு விடாததென் றும்பே ராமே.

(இ-ள்.) வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப் பொருள்சே ராம லிடராகில் —எ-து. சமஸ்கிருதப் பூரணபண்டிதர் வாச்சியார்த்தத்திற் பிரதி வாதிக்கும் வாசகார்த்தம் பொருத்தமாகாமற் பேதிக்குமாயின்: — பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வர், —எ-து. பேதநீங்கி யனர்த்த மர்த்த ரூபமாக விளங்க இலட்சணைவாக்கியத்தால் திருத்திப் பொருள்கொள்வார் கள்: — திடமாக வதுவு மூன்றுச்செப்புவார், — எ-து. அந்த இலட்சணைவாக்கி யமு மூன்றுவிதமா யிருப்பதாகத் திடமாகக் கலைவல்லோரே சொல்வார்கள்: — விட்டதென்றும் விடலிலா தென்றும் விட்டு விடாததென்றும் பேராமே, — எ-து. அவை, விட்டலக்ஷணையென்றும், விடாதலக்ஷணையென்றும், விட்டு விடாதலக்ஷணையென்றும் பெயர்பெறுவனவாம், —எ-று.

வாசகப் பொருள் சேராம லிடராதல் என்பது ? அவர்கள் வாச்சியார்த்த மூழுது மூணர்ந்தவிடத் தையந்தோன்றுமாறு ; நாமுஞ் சிவாதலி னிப்பேத மென்றகலுதுமோ வெனவரும், வரின். யாமாரெனவரும். நல்வினைதீவினைக்

கியைந்த சுகதுக்கமெனின், ஒன்றிலொன் றில்லாமற்போத லப்பயனுக்கியல்பு. நமக்கியல்பி வற்றோடு மொத்துண் டிருத்தலோ வெனவரும். இருவினை யொப்பு மலபரிபாக முதலிய பயன் வேறுள, இவற்றிற் கியைந்த தவப்புரியி னிவையும் வாய்க்கு மப்போ திவ்விடர் நீங்குமெனின், இப்போதில்லாத வப்பய னெப்போது மிருக்குமாவெனவரும். அது கேள்வியல்லவெனின். யானே யைய மயமாயிருக்கின்றேன், விடையு மையமயமாயினென் செய்வேனெனவரும். அதற்குறுதிமொழி யில்லாமற்போதலே யிடராதலெனவறிக. பொருளாம்வண் ணமென்றது ; எதைச் சீவனெனல் எதை யீசனெனல். உபாதிகுணமெனின்; ஒர்முதலன்றே யிவை யோர்முதலுக்குத் துணைக்கருவியாமே யெனவரும். எதுவானு லறிகின்றதோ வதுவெனின் புடைபெயர்ச்சியா ? அதுவும் வினை முதலன்றே யெனவரும். விகுதிமுதல் மகுதியிறுதியாகக்கிடந்த தத்துவக்கூட் டங்களெனின், தத்துவசோதனையில் அல்லவல்லவென்றுவரலாமாவெனவரும். அறிவெனின், சின்னவறிவு, பெரியவறிவென்று வரலாமா வெனவரும். உபாதியாதியாலெனின், முன்னமே யறிவன்றென முடிந்ததே யெனவரும். இங்கே விடைதரற்கு மொழியின்மையி னிது இலக்ஷணவாக்கியமின்றியமை யாதென் றதுபற்றியென்க. கொள்வரென்னும் வினைக்கு வடநூல்வல்லவர்க ளெனவே, சொல்லுமென்னும் வினைக்குக் கர்த்தா சுருதியெனக்கொள்க.

(க-து) லக்ஷணார்த்தமின்றித் துவிதபேத மறுதென்பது. லக்ஷணார்த்த மெனினும், லக்ஷியார்த்தமெனினு மொக்கும்.

வினா.—மீமாம்சத்திலுள்ள கர்மம். பத்தி, ஞானம், என்பவற்றுள் கலை வல்லோரும் ஞானத்தை யேலாததற் கேதென்னை ?

விடை.—அஃதெட்டாமைபற்றி.

வினா.—அதனுற் கல்விஞானத்துக்குச் சிறப்பென்னை ?

விடை.—தம்மை யொழுக்கவழி நடாத்துதலே யென்க.

வினா.— இவரேனு முணராவிடத் திவர்செய்த பாஷியத்தி லென் சிறப்பு ?

விடை—இவர்போன்றனர் மதிக்குமதிப்பே யெனவுணர்க.

வினா:—துவிதபாவ முடலிலோ ? உணர்விலோ ? உட்லிலெனின், உண ருமா ? உணர்விலெனின், அவ்வுணர்வு தன்னை யறிதற்பாலதா ? அயலை யறி தற்பாலதா ? தன்னை யறிதற்பாலதெனின், அயலெனலுண்டா ? அஃதிர ணடாகுமா ? இவையெல்லாஞ் சொல்வாதமெனின் ?

விடை:—இதற்குமேற் றேன்றுமையின், குதர்க்கமென வோராது தர்க் கமெனவெண்ணி முன் பின்பொருத்தமின்றி வாதிப்ப ரிதுவேயன்றி வேறோர் பசையு மின்றென வுணர்க. (எஅ)

அ - கை

[மூன்று லக்ஷணார்த்தத்தையு முதாரணமுகத்தா லிக்கவியிற் கூறுகின்றார்,]

79. கங்கையிற் கோஷ மென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றுந்
தங்கிய சோயந் தேவ தத்தனென்றுஞ்சொல் வார்க
ளிங்குதா ரணங்க ளாக்கி யிந்தமூன் றுரைக ளாலே
துங்கநூல் விரோத மான சொலலெலாம் பொருளாந் தானே.

(இ-ள்.) கங்கையிற்கோஷமென்றுங் கறுப்புச்சேப் போடு தென்றும், — எ-து. விட்டலக்ஷணையென்பது ; கங்கைக்கண்ணுள்ளது இடைச்சேரியென்றும், விடாதலக்ஷணையென்பது ; கறுப்புஞ் சிவப்பு மோடுகின்றனவென்றும்:—தங்கிய சோயந் தேவ தத்தனென்றுஞ் சொல்வார்க ளிங்குதாரணங்க ளாக்கி, — எ-து. விட்டுவிடாத லக்ஷணையென்பது ; அவனெனவு மிவனெனவு நின்றுளான் தேவதத்தனென்று மிவற்றை யிங்கே யுதாரணங்களாகச்சத்துக்கள் சொல்லுவார்கள்:—இந்த மூன்றுரைகளாலே துங்கநூல்விரோத மானசொல்லெலாம் பொருளாந்தானே, — எ-து. இந்த மூன்று லக்ஷணார்த்தத்தினுற் பிரபலசுருதிக்கு மூலனுயவற்பசுருதி வாக்கியங்களனைத்தும பொருளாகமுடியும், — எ-று.

கங்கைக் கிக்கரையினின்றேன் செவியிலக்கரையில் தயிர்விற்போள் சத்சங்கேட்டவளவி லிச்சங்கத்தங் கங்கையின் கண்ணுள்ளதாகக் கருதி நீரிலிருக்குமா விடைச்சேரி, கரையிலிருக்கும். நீரிலிராதென்புழிக் கங்கைவிட்டது. அதுபோல, உணருந்தர்ம மூபாதிதோறு மிருத்தலி னஃதுபாதியின் தர்மமா ? வேறென்றின் தர்மமா ? சடமாதலி னுபாதியின் தர்ம மன்றென்புழி யுபாதி விட்டது. (இது விட்டலக்ஷணை.) இங்கே யுபாதியென்றது, தூல முதலிய மூன்றுதனுவை. ஒருவன் தனது கறுப்புப்பசுவையும், சிவப்புக்கு திரையையும் பற்றச்செல்லும்போது; அவைகள் விரைவாகவோட விவனுமத்துநின்று அம்மார்க்கமா யெதிரில் வருவோனைக்கண்டு, கறுப்புஞ் சிவப்புங் கண்டையாவெனக் கேட்க, அதற்கவ னிரண்டு மோடுகின்றனவெனக் கூற, இதனுல் கருமையுஞ் செம்மையுங் குணமாயிற்றே யஃதோடுமா ? ஓடுதலாகிய புடைபெயர்ச்சிக்கு வினைமுத லுடலாயிற்றே, அந்தவுடலே குணியென்னப்பட்டது, உடலே அவன் குணத்தைக்கேட்க குணத்தைவிடாது குணியைக்கண்டு விடைதந்தானென்றுயிற்று. ஆகவே குணம்விடாதது. அதுபோல, முன்ன ருபாதியன்றென நின்றது யாதெனின், அது மனுவாக்குக்காயங்களா லின்னசென வறிதற்கரிதாதலின், குணங்காரணமாக வறியவேண்டுமென, நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், சத்து, சித்து, ஆனந்தம், இவைபோன்ற பரவஸ்துவுக் கியைந்த எண்ணிறந்த குணங்களமைக்கப்பட்டன. இவைகளில் யாதேனு மோர்குணங்காரணமாக வறியநின்றது, பரம், எனவே, குணம்விடாதது இது விடாதலக்ஷணை.) இங்கேகுணமென்றது, சகுணங்களே. தேவதத்தனென்னும் பெயருடையோ னெருவன் காசியிற் சிலகால மரசனுயிருந்தான். அஃதுழ்வழியா வந்ததுபோனீங்க, அதனுல் விரத்திவந்து தென்திசையில் கடந்துறவியானுன் என்னுமிடத்து, அவ்வரசவேடமும், அக்காலமும், அவ்விடமும் ; இந்தச் சந்நியாசவேடமும், இக்காலமும், இவ்விடமும், தேவதத்தனே யன்றி யில்லாமையின்,

அரசனே சந்நியாசி, சந்நியாசியே அரசன், என்றுகவேண்டுமென்றே ; ஆயினும், குடும்பத்திற் சந்நியாசமும், சந்நியாசத்திற் குடும்பமும், ஒன்றிலொன்றில்லை, இல்லையேனும், இவ்விரண்டினுந் தேவதத்தனிலனே, உளனெனின், இவ்விரண்டுந் தேவதத்தனு அலனெனின், இவனையன்றி யவையுளவோ? இல்லையெனின், தேவதத்தன் மாத்திர முண்மை, ஏனைய வேடமுதலிய வீனைத்துங் கற்பனை. இவனவையல்லனுதலின்விட்டும், இவனேயன்றி யவை யில்லையாதலின் விடாதும இருப்பதுபற்றி இது விட்டுவிடாதது. இதுபோல அறிவல்லாத நானென்பதெங்கணுமில்லை, உளதே லறியட்டும். இலதே லறிவாகட்டும். எனவே, அறிவையன்றி நானெனலில்லை. நானென்னு மகம்பாவ மில்லாத வுயிர்களில்லை யென்றுயிற்று. ஆகவே, திணைபாலிடமல்லாத வுயிர்களுளவோ ? இலவோ ? இல்லெனின் எந்தத திணைபாலிடங்கட் கென்று முரியன ? யாதுக்கு முரியதன்றெனின், இந்தவுயிராகிய வறிவு ; எந்தக் காலமிடங்கட்கும் பெயர்கட்கு முரியது ? யாதுக்கு முரியதன்றெனின், அப்போதறிவு யாவுமல்லவாகவேண்டும். அல்லவெனின், இத்திணைபாலிடங்க ளன்னியமாகவேண்டும். ஆகாதெனின், யாவு மறிவல்லவெனவும், அறிவன்றி யில்லையெனவும் பெற்றும் அறிவு உண்மை. அயல்கற்பிதம். அயலல்ல வறிவென்புழிவிட்டது. அறிவன்றியயவில்லையென்புழி விடாதது. (இது விட்டுவிடாத லக்ஷணை,) இங்ஙன முணர்ந்தனுபவித்தல், இலட்சியார்த்தம் இங்ஙனமுணராது பாவித்தல், வாச்சியார்த்தம் இது நிஷ்டானுபூதி வாக்கியமென்பதை யறியவேண்டின், தினந்தோறும் சகலத்தில் யாவுமாயும் கேவலத்தி லலலாததாயும், நீயாகிற வறிவு நிற்பதைக்காணலாம். ஐயந்திரிபுக்கிடமின்று. இங்ஙனமுணர்ந்தார்க்கே யிம்மையில்தானே முத்தியென்பது கூடும. என்னை, "ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வான நணிய துடைத்து" என்றுந் திருவள்ளுவநாயனர். ஞானகாண்டமாகிற விம்மூன்று லக்ஷணவாக்கியத்தால், கர்மம் பத்தியென்னு மிவ்விரண்டு காண்டமாகிற வாச்சியார்த்தமனைத்தும் பொருளாதற் கிடமுண்மையின் இந்த மூன்றுரைகளாலே துங்கநூல் விரோதமான சொலலெலாம் பொருளாந்தானேயென்றார். துங்கநூல், உயர்வுநூல். அது, பிரபலசுருதி. அது, ஞானகாண்டம். விரோதம், எதிர்மறை. துங்கநூலுக்கெதிர்மறை. பத்தி, கர்மம், இவை யற்பசுருதி. ஆதலின் துங்கநூலென்பது, பண்புத்தொகை. ஞானகாண்டமின்றேல் யாவுமுரணும். மதத்தரோ சான்று. (அக)

அ - கை.

[இந்த விலக்கணை வாக்கியத்தைமாத்திரம் விடாது சிந்திக்கின் துவிதபாவ மிறக்குமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

80. பன்னிய சோய பென்னும் பதங்களின் வாச்சி யார்த்த
மன்னிய தேயங் கால மவனிவ னென்ப வெல்லாஞ்
சொன்னவிவ் விரோதம் விட்டுத் தொகையிலக் கியமவிடாம
லுன்னிடிற் றேவ தத்த ளெவருவனே வெளியாக் காட்டும்.

(இ-ள்.) டன்னிய சோயமென்னும் பதங்களின் வாச்சியார்த்தம்.—எ-து. முன்னர்க் கூறிய சோ, அயம் என்னப்பட்ட பதங்களின் வாச்சியார்த்தமாவது,— அன்னிய தேயங் காலமவனிவ னென்பவெல்லாம், —எ-து. வெவ்வேறான இடமும், காலமும், அவனும், இவனும், எனச்சொல்லப்பட்ட வனேத்தமாம்:— சொன்னவிவ் விரோதமவிட்டுத் தொகையிலக்கியம் விடாமலுன்னிடின்,—எ-து. இங்ஙனமாகக்கூறிய விவ்விரோதக் கற்பித நிலைகளை விட்டு முடிவாயுள்ள இலக்கியார்த்தத்தை விடாது சிந்திப்பையாயின் :— தேவதத்தனொருவனை வெளியாக் காட்டும்—எ-து தேவதத்தன் கற்பிதங்களல்லனுதலினவனேமாத்திர மவ்விலக்கியார்த்தம் பிரத்தியக்ஷமாகக் காட்டிவிடும். எ-று.

சோ, அயம், வாச்சியார்த்தமெனவே, தேவதத்த னிலக்கியார்த்தமென்றுயிற்று. ஆகவே, சோ, அயம், என்பவை, சுத்தம், அசுத்தமென நிற்கும். சுத்தம், கூடஸ்தபிரமம், அசுத்தம், சீவனீசன், கூடஸ்த பிரமத்திற் கைக்கிய மூரணின்றித் தானேயமையும் சீவேசருக் குபாதி குணங்கள் சமஷ்டி வியஷ்டியாயும், பேதகாரண காரியமாயுமிருத்தலின், ஐக்கியம் முழுது மூரணும். மூரணுவவசரம், இலட்சியார்த்தம். மூரணுமவசரம், வாச்சியார்த்தம். ஆதலின் தொகையிலக்கியம் விடாமலெனவும், சொன்னவிவ் விரோதம் விட்டெனவும், இங்ஙனமாகிய நிலையாலன்றி யேகசைதன்னியம் விளங்காதாதலின் உன்னிடிற் றேவதத்த னொருவனை வெளியாக் காட்டுமெனவுங் கூறினர்.

(க-து.) உண்மை விளங்கற்பாலது விட்டுவிடாத இலட்சணையென்பது. விளங்கல், தன்னேத்தான் காண்டலை. தன்னேத்தான் காணுமாறிங்ஙனமென வறியாதார், எங்ஙனமாய நிலைசொல்லினுங்கேளார். சுரப்புநீர் போல்வதன்றி யானந்தம் மோழைபோல்வதன்று. இனிக்கூறுநிலையானுமுணர்க. ச:—அயம், சோயம். இது குணசந்தி. (அ0)

அ - கை.

[தற்பதம் தொம்பதமென்னு மிருபதங்களும் அவற்றினி லக்கியார்த்தங்களு மைக்கியத்தை யுணர்த்தற்பாலவென வசிபதங் காட்டுநிலையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

81. தத்துவப் பதங்க டாமுஞ் சாட்சியாய்ப் பிரம மான
வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தைவிட்டு
நித்தமு மதுவே யாகு நீயது வாகு மென்னு
மர்த்தமு மகண்ட மென்றே யசிபத மைக்கியங் காட்டும்.

(இ-ள்.) தத்துவப் பதங்கடாமும்—எ-து. பேதம் அபேதமென்பவற்றுள் அபேதநிலையை யேற்றற்கியைந்த வவசரத் தற்பதந் தொம்பதமென்னு மிவ் விருபதங்களும்:—சாட்சியாய்ப் பிரமமான வத்துவைவிடாமல்,—எ-து. சாட்சியாய் நின்றுள்ள கூடஸ்த பிரமமாக விளங்கிய சுயஞ்சைதன்யத்தை இலட்சி

யிக்கும் இலட்சியம் விடாமல்:— பேதவாச்சியார்த்தத்தை விட்டு,—எ - து. சீவேஸ்வர பேதமாயுள்ள வாச்சியார்த்தத்தைக் கையறவிட்டு:— நித்தமும் மதநீ யாகு நீயது வாகுமென்னு மர்த்தமும்,—எ-து. எப்போதும் பிரமமே கூடஸ் தனும், கூடஸ்தனே பிரமமாம் என்னு மர்த்தமும்;— அகண்டமென்றே யசி பத மயிக்கியங் காட்டும்,—எ-து. ஏகமென்றே யசிபதமானது துவிதநாசத்தை விளக்கும், எ-று.

சாட்சியாய்ப் பிரமமான வத்துவென்றதனால், இலட்சியார்த்தமாயிற்று. பேதவாச்சியார்த்த மெனவே, அபேதலட்சியார்த்தமென வுரைகொண்டாம். தத்துவப்பதங்கடாமும் அர்த்தமும் ஏகமென்றே அடசிதமானது ஐக்கியங் காட்டுமெனக் கூட்டிப் பொருள்கொள்க அசிபதமானது ; வாச்சியார்த் தத்தை விட்டு வத்துவைவிடாமல் ஐக்கியங்காட்டுமென முடிக்க. அது நீ யாகும் நீயது வாகுமென்பது ஏகாரந் தொக்கு நின்றனவெனக் குறிக் கின்றது. இலட்சியார்த்தங் கூடஸ்த பிரமமென்றதனால் வாச்சியார்த்தஞ் சீவேசரென்றாயிற்று. அசியென்னும் பதமானது ஐக்கியத்தையே காட்டநிற் கும்பதம்.

(க-து.) அசியென்னும் பதம், வாச்சியார்த்தத்திற் பிரமமெனப் பொரு டந்து, இலட்சியார்த்தத்தில் ஐக்கியப்பொருளைத் தரும் இவ்வைக்கியத்தை மறுப்பா ரிதனை யேற்றற்கோ ருத்தி சொல்லுதம். அதாவது ; உடல் தோறு நிற்கு மறிவு வுடலன்று, அப்போது பிரத்தியேகவஸ்து. அதனை யறியவேண்டினேன் குறியி லுடல் தட்டுமா ? தட்டாவிடத் தவனுக் கறிவு பலவா ? ஏகமா ? பலவெனின், உபாதிதட்டவேண்டும். இன்றெனின், ஏக மாக்கவேண்டும். இங்ஙனமாவதாலும, அனுபவ மிருத்தலாலும், மறுத்தற் கொண்ணாது. (அக)

அ - கை.

[ஐக்கியத்திற் கையவு தினேயதெனவும், இயையாத தினேயதெனவும், உபமான பூர்வமாக விக்கவியிற்கூறுகின்றார்.]

82. கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும பொய்யே
குடவானும பெரிய வானுங் கூடியொன் றுமெப் போது
மிடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போது மேகக்
திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்திடாயே.

(இ-ள்.) கடநீரின் மேக நீரிற் கண்டவானிரண்டும் பொய்யே.—எ-து. கடசலப் பிரதிபிம்பாகாயமும், மேகசலப் பிரதிபிம்பாகாயமு மித்தையே:— குடவானும் பெரியவானுங் கூடி யொன்றுமெப்போதும்,—எ-து கடாகாய மும் மேகாகாயமு மெப்போதுங் கலந் தேகமாதற்பாலன:— (அதுபோல,) இடமான பிரபஞ் சாட்சி யிரண்டுமெபபோது மேகம்,—எ-து. எவற்றிற்கு மிடமாயுள்ள பிரமமும், கூடஸ்தனுமாகிய விரண்டு மெப்போது மேகமே யாம்:—(ஆதலின்,) திடமாகச் சுவானு பூதி சிவோகமென் றிருந்திடாயே,—

எ-து. யாதோரையமின்றித் திடமாகச் சுவானுபூதியாகிய சிவோகமென்றி ருந்திடுதி, எ-று

வாச்சியார்த்தமாகிய சீவேசர் மித்தையாதலா லவர்கட் கெங்ஙன மைக் கியங் கூறத்தகுமென்பார், உபமானத்தாற் கடநீரின் மேசநீரிற் கண்டவா னிரண்டும் பொய்யேயெனவும், மேகநீரில் வானென்றதனால், குடவானென் றற்சீபால மேகவானென்றும். இதனால் கடாகாயமும் மேகாகாயமு முண் மையாதலி னிரண்டுங்கூடி யேகாகாயமாகத் தகுமென்பார், குடவானும் பெரி யவானுங் கூடியொன்று மெப்போதுமெனவும், அதுபோலக் கூடஸ்தனும் பிரமமு முண்மையாதலி னிரண்டுங்கூடி யேகசைதன்னியமாகத் தகுமென் பார், இடமான பிரமஞ் சாட்சி யிரண்டுமெப் போதுமேக மெனவும், இதுவே ஸ்திரமான வனுபூதியென்பார், திடமாகச் சுவானுபூதியெனவும், இதுதா னகம்பிரம மென்பார், சிவோகமெனவும், இதனினு மேலாயநிலை யெவ்விதத்தினு மில்லையாதலி னிருந்திடாயே யெனவுங்கூறினர். சிவ: அகம், என்பது, சிவோகமென்றாயிற்று. எவ்வுயிருமாகிய வறிவும் தேகோகம், பிராணோகம், இந்திரியோகம், மனோகம், புத்தியோகம், முத்தோகம், பூரண னந்தோகம், சத்தோகம், சித்தோகம், சாந்தோகம் முதலிய விவைபோல்வன பிறவுமாகத் தானுதற்பாலதின் முடிவாகச் சிவோகமெனல் சுருதி யுத்தி அனு பவ சம்மதமெனவறிக.

(க-து.) ஐக்கியநிலை சிவோகமென முடித்துச் சும்மாவிருந்தன ராசிரிய ரென்பது. இஃதுபதேச முடிபு. (அஉ)

அ - கை.

[அவ்வுபதேசத்தா லிவன் தரிசித்த தினையதென விக்கவியிற் கூறுகின்றார்.]

83. தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமற்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளிற்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்த பிரம மென்னு
நெஞ்சமு நழுவி யொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான்.

(இ-ள்) தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப்பாமல்,—எ-து. துக்கநிவிர்த்திக்குத் தஞ்சமாய் நின்றுள்ள குருநாத னனுக்கிரகித்த தத்துவ சோதனை வழித்தாய்ச் சென்று சிறிதுந் தவறாமல்:— பஞ்சகோசமுங்கடந்து பாழையுந் தள்ளி,—எ-து. பஞ்சகோசங்களோடு மொவ்வொன்றாகக் கடந்து அப்பாற்றோற்றும் பாழையுமொழித்து:—உள்ளிற் கொஞ்சமா மிருப்பும் விட் டுக் கூடஸ்த பிரமமென்னு நெஞ்சமு நழுவி,—எ-து. உள்ளத்தின்கண்ணெ ழிந்த பற்றுக்களன்றி மிச்சமாக வொதுங்கி மறைந்துநின்ற அற்பவாசனை விருப் பையும் விட்டுக் கூடஸ்த பிரமமென்னுநினைவும் மெல்லநழுவி:— ஒன்றாய் நின்ற பூரணத்தைக்கண்டான்,—எ-து. ஏகமாகப் பிரகாசித்துநின்ற பரிபூரண சைதன்னியத்தை யகக்கண்ணால் தரிசித்தனன், எ-று.

தத்துவவழி, தத்வமஸியென்னும் வாக்கியவழியைத் தப்பாமல், கடந்து, தள்ளி, விட்டு, நழுவி, கண்டான் எனமுடிக்க. கொஞ்சமாமிருப்பென்பது போனதொழிய மீந்தவாசனை நழுவுதல் சுத்தசங்கற்பமுஞ் சிறிது சிறிதகலல். ஒன்றுய்நின்ற பூரணத்தைக் கண்டானென்பது திரிபுடி யிழப்பைக்காட்ட நின்றது மெய்யே, கண்டானென்புழிக் காணுதல் ஞானம் காணப்படுதல்ஞேயம், காண்பான் ஞாதுரு; இங்ஙன மிருக்கத்திரிபுடி யிழப்பென லெங்ஙனங்கூடும் ? இது சொப்பிரகாசத்தின் மகிமை என்னை, "அத்துவிதசத்துவைச் சொப்பிரகாசத்தனியை" என்றார் தாயுமானவர். உள்ளதிலென்பது உள்ளிலென விடைக்குறையாய் நின்றது.

(க-து.) குருநெறிச் சேறலாய பயனைக்கண்டனனென்பது. இது தான் ஞானகதப் பிரத்தியட்ச மெனப்படுதல். இதனையறியாதா ரென்சொலினு மென்னை ? இதனைத் தானேதானுகவிளங்கலென்பர் சத்துக்கள். (அசு)

அ - ஸை க.

[முன்னர் விளங்கிய பிரத்தியட்சஞானத்தின் பின்னர் விளைந்த வனுபூதிநிலைக லினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

84. அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானன்.

(இ-ள்.) அனுபவா னந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகி,—எ-து. சொப்பிரகாச வெழுச்சிக் கனுபவமாயுள்ள தடையற்றவானந்தப் பிரவாகத்தில் மூழ்கி மூழ்கவே யகண்டபரிபூரணமே தானுகி:—தனுகர ணங்களாதி சகலமு மிறந்து,—எ-து, தனு கரண புவன போகங்கள் முதலிய சகலகற்பிதமு நீங்கி:—சித்தாய் மனதபூ ரணமாய்,—எ-து. தெரிவேவடிவாகியும் சின்மாத்திரமானதால் மனது பரிபூரணமாகியும்:—தேக மானசற் குருவுங் காண:—எ-து. பூரணமே மானிடத் திருமேனிகொண் டெழுந்தருளிய சற்குரு நாதனுங் காணுமபடி:—நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவமானன்,—எ-து. தூங்காமல் தூங்குதலாகிய நனவிற்சுழுத்தி நிலையதாகியுஞ் சற்புத்திரனின்று தனது சுபாவமாகிய நிரதிசயானந்த வடிவமாயினன்,—எ-று.

பிறவியந்தக நெருவ னேர்நாள் தேவகதியால் தனக்கு விழிவர அதனுல் பூததினகரனைக் கண்டாங்கு இவன் ஞானதினகரனைக் கண்டான், அவனுக்குப் பயகம்பனுதிக லெங்ஙன மின்றே ? அங்ஙன மிவனுக்கு மின்றும். இன்றுகவே யிங்ஙனமாய வனுபவானந்த மவனுக்குச் சற்றே, அதுபோலிவனுக்குச் சற்றே அன்றுதலின் அனுபவானந்த வெள்ளத் தழுந்தியே யகண்டமாகியெனவும், அவனுக்குச் சூரியப்பிரகாச மேலீடும் ஆனந்தமேலீடு முண்டாகுமன்றே ? அம்மேலீட்டால் தனுகரணுதி நான்கு மிருக்க அவனுக்குக் காணுமா இவனுக்குக் காண, காணுதாதலின் தனுகரணங்களாதி சகலமு மிறந்தெ

னவும், அவனறிவு சூரியப்பிரகாசமாய்நின்று பூரணமாகுமே, அதுபோல இவ னறிவும் ஞானசூரியப்பிரகாசமாய்ப் பூரணமாகலாமே; ஆகலின் சித்தாய் மனதுபூரணமா யெனவுங் கூறினர். ஊன விழித்திறப்புக்கே யிவ்வளவு வியப் பாயின் ஞானவிழித்திறப்புக் கெவ்வளவுகோடி வியப்பாகலாம். இதனைத் தெரி விக்க விவ்வுவமைகூறினும். இங்ஙனமாய ஞானனுபவமில்லா ரெங்ஙன மிதனை யேற்பர். என்னை, "மூக்கனியும் பாற்சோறு முன்பிருக்க நாயருந்திக், கக்கிய சோற்றைக் கருதுவார் எக்கலேக்கும, எல்லாப்பொருட்கு மிரும்பொருள்யா மென்னது, வல்லார்க் 'கடிமைபுகுவார்" என்றார் சொரூபானந்தர். தானுகிற வறிவைக் காணுதார் அறிவுக் கறிவெனக்குழறி ஞானவரம்பைக் காணுது வாளாபோயினர் இவரை ஞானியென்றேற்பா ரிவர்போல்வார். இவர் 'மோன மென்பது ஞானவரம்பு" என்னும் பிரபலசுருதி முடிவை யெங்ஙன மெட்டு வர். ஆயி னிவர்கூறு மோனமோ இதனுக்குக் கீழாய மோனவகையுளொன்று. இவருந் தானனந்தமென்பர், இஃதயலேயோ ? தன்னேயோ ? தன்னேயெனின் தானே சச்சிதானந்த மென்னுர்களா ? அயலேயெனின் தானுகிற வறிவை யள வைகளா லளந்து தனக்கயல்காட்ட வலியுண்டாகவேண்டும், வலியின்றேல் சும் மாவிருக்கவேண்டும். தானறிவு, அயலானந்தமெனின், தனக்கானந்த மன்னிய மாகவேண்டும். அன்னியமாயின் தா னானந்தமென்னு திருக்கவேண்டும். நல் லது, தனக்கயல் சிவம்; அது சச்சிதானந்தமெனின் தானென்னவாகவேண்டும், சத்துஞ் சித்தெனின், அந்தச்சித்து தன்னேயறிதற்பாலதோ ? அன்னியத் தையோ ? அன்னியத்தையெனின், அட்போது சடமாகவேண்டும். சடமெனின் சத்தென்ப தசத்தாகவேண்டும். எனெனின், தன்னுல் தானறியப்படுவது சத்து. அன்னியத்தா லறியப்படுவ தசத்து, அசத்த சடத்தையா சத்துசித்தென்னல். இப்படித் தானிருக்கு மயலேச் சச்சிதானந்தமெனலும் போலும் இது நிற்க. பின்வரு மப்போது விளக்குதும். (அச)

(க-து) நனவிற் சுழுத்திநிலேயோடு சுபாவநிலேயு மெய்திற்றென்பது.

அ - கை க.

[இவ்வாறுய நிட்டைதெளிந் தாசிரியரை வணங்கி நின் றுன்று சொல்வாளுயினு னென்பதை யிக்கவி யிற் கூறுகின்றார்.]

85. அளிமக னெடும்போ திவ்வா றுனபின் மனது மெல்ல
வெளியில்வந் திடவு ணர்ந்து விமலதே சிகனைக் கண்டு
குளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்து
குளிர்முகச் சுவாமி கேட்கக் குமபிட்டு நின்று சொல்லுவான்.

(இ-ள்.) அளிமக னெடும்போ திவ்வா றுனபின் மனது மெல்ல வெளியில் வந்திட வுணர்ந்து விமலதே சிகனைக் கண்டு,—எ-து. அன்புள்ள புத்திரனுகிய மாணுக்கன் வெகுநேர மிங்ஙனமாய நிட்டை புரிந்தபின்னர் மெல்லத் தனது மனம் துரியாதீதத்தினின்று துரியத்தில்வர அதினின்று சாமானியமாக விஸ்ம

ரணையில்வர அதினின்றும் விசேடமாகச் செகத்தாகஸ்புரிக்க அதினின்றும் பௌதிகமாக ஸ்புரிக்க இங்ஙனம் ஸ்புரித்ததனை லுலகை நன்குணர, இங்ஙன மூணர்ந்ததனல் களங்கரகிதமாக விளங்கிய குருநாதனேக்கண்டு:—துளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து சூழ்ந்து,—எ-து. கண்களினின்று மானந்தபாஷ்பஞ் சொரியத் திருவடிகளே யஞ்சலியோடு வணங்கி மீண்டெ ழுந்து வலம்புரி யிடம்புரியாகப் பிரதட்சணம்வந்து;—குளிர்முத்ச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான்;—எ-து. உபசுாந்தவதனத்தையுடைய குருநாதன் கேட்கும்படி யஞ்சலிகரத்தனுக நின்றுகொண் டிதனேச்சொல்லு வான்,—எ-று

உணர்ந்து கண்டு தொழுது வீழ்ந் தெழுந்து சூழ்ந்து கும்பிட்டு நின்று சொல்வான் எனமுடித்தல் சிறப்பேயன்றித் தனித்தனி வினைமுற்றுக்குதலிற் சிறப்பில்லேயாதலின் ஒரு வினைமுற்றுக்கி முடித்தாம், (அகு)

அ - கை

[இங்ஙனமாய வுதவிக்குக் கைம்மா றறியேனென்னத் துதித்தலே யிக்கவியிற் கூறுகின்றார்.]

86. ஐயனே யெனது ளேநின் றனந்தசென் மங்க ளாண்ட
மெய்யனே யுபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
யுய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யவே றொன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி.

(இ-ள்.) ஐயனே எனதுளேநின் றனந்தசென் மங்களாண்ட மெய்யனே எ-து. கர்த்தனே அடியேனுளத்தகலாது நின்றனந்த சென்மங்கடோறு மாண் டுவந்தமெய்யனே:—உபதேசிக்க வெளிவந்த குருவேபோற்றி,—எ-து. என்னை விளக்குவிக்க எளிதிலெழுந்தருளிய குருநாதனே நமஸ்காரம்:—உய்யவேமுத்தி நல்கு முதவிக்கோ ருதவி,—எ-து. பிறவியினின்றுய்யும்படி நிரதி சயானந்த மாக்குவித்த வுதவிக்குப் பதிலுதவியை:—நாயேன் செய்யுமா றொன்றுங்கா ணேன் திருவடி போற்றிபோற்றி,—எ-து. நாய்போல்பவனுகிய யான் செய் யும்படியான மார்க்கம் வேறொன்றுங் கண்டிலன் தேவீர் திருவடிகளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், எ-று.

பிறவிகடோறு மெனதுளேநின் றுண்டதென்பது ஏற்றற்பாலதோ? தள் ளற்பாலதோ? தள்ளற்பாலதெனின், யாவரு மிங்ஙனமாய சுவானுபூதி யெளி தித்பெறலாமே; யா னெளிதி லிம்மையிற்பெற்றது, பிறவிகடோறு மெனதறி வைத் திருத்தி வந்தமையால் ஏற்றற்பாலதேயென வறிக. இதனுலன்றே வுப தேசிக்க வெளிவந்த குருவேயென்றார். இதற்குக் கைம்மா றிவ னறிவாய விடத்து வேறின்மையின், உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன் செய்யுமா றொன்றுங் காணே னெனப்பட்டது. இதனினு மேலாய வுதவி யின்றென்பதைச் சுருதி யுத்தி யனுபவத்தாற் காணலாம். இவ்வனுபவ மத்து

விதத்தி லொழிய வேனையவிடத் தின்றென்பதை ஞாயஞ் சோதனையாற் காணலாம். (அசு)

அ - னை கை.

[அதற் காசான் சொரூப நிட்டனுக மாறு திருப்பதனினும் வேறு கைம்மா றில்லையென விக்கவியிற் கூறுகின்றார்.]

87. சிட்டனிவ் வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப ஞான
நிட்டனை யிருப்பா யாகி னீசெயு முதவி யாமே.

(இ-ள்.) சிட்டனிவ்வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்துநோக்கி,—எ-து. மாணுக்க னிங்ஙனங்கூற வதற்காசிரியர் மகிழ்ந்தவனைப்பார்த்து:— கிட்டவா வென விருத்திக் கிருபையோ டருளீச்செய்வார்,—எ-து. கிட்டவாவென் றவனை யருகிலிருத்தி மிக்க கிருபையோ டின்னு முறுதிமொழி கூறலாயி னர்:— (அதாவது) துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமல்,—எ-து. மிகக் கொடியனவாகிய தடைகள் மூன்றுள, அவை மூன்றும் நின்னைத்தொ டராமல்:—சொரூப ஞான நிட்டனை யிருப்பாயாகி னீசெயு முதவியாமே,—எ-து. சொரூபஞான நிட்டையில் மாறு திருப்பையாயி னதுதானீசெய்வதாகிய வுதவியர்கும், எ-று.

சொரூப ஞான நிட்டையாவது;—அறிவே வடிவாய்விளங்கல். உண்மை ஞானிகள் வேண்டுங் கைம்மா றிதனையேயன்றி வேறன்றெனக் குறிக்க நின் றது, இவர் கூறிய கைம்மாறு. எனவே, பொருள் புகழ் அடிமை முதலி யவை வேண்டியன்று. இவை வேண்டினோர் அநாசியரெனப்படுவோர். இவரே யுலகிற் பெரும்பான்மையோர். அவரரியர். ஆதலி னிந்நிலை வழுவற்கவென் றுரையிற்று. வழுவற்கவென்றது, நீ வழுவின் அந்நிலை வழுவும், வழுவின் முன்போற் சகந்தோன்றும், தோன்றின் அகமமதை யுண்டாம், உண்டா யின் பந்தவினைவுக் கிடமாம், இடமாயின் தளையாம், தளையாயின் பிறவிக்கிட மாம், இடமாயின் ஒழிவின்றாம், இன்றாயின் அமைதியின்றாம், இன்றாயின் நித்தியதிருத்தியின்றாம், இன்றாயின் அல்லலே யொழிவின்றிய பயனுமுடியு மாதலைப் பற்றியென்க.

(கு-து.) நீ வழுவாதிருப்பினுந் தடைக ளிருப்பதால் வழுவச்செய்யும், செய்யினும் முன்னரவைகளால் நீ பட்டவருத்தத்தை யுன்னுக உன்னிடில் சொரூபநிட்டனையிருப்பை, இருத்தலே கைம்மாறென்பது. (அக)

அ - னை க.

[இங்ஙனந் தெளிந்த ஞானமு நழுவுமோவென் றையுற்ற மாணுகனை நோக்கித் தடைகள்வரின் அனுபவநழுவுமென மீண்டுங் கூறுதலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

88. நீ நானென் றிரண்டி லாம னிறைந்தபூ ரணமா யெங்கு
நானுகத் தெரிந்த ஞான நழுவுமோ குருவே யென்றன்
றானுகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்று
மானுலுந்தடைக ளுண்டே லனுபய முறைத்திடாதே.

(இ-ள்.) நீ நானென் டிரண்டி லாமனிறைந்த பூரணமாயெங்கும்,—எ து. நீயென்றும் நானென்றுங் கூறப்படும் பேதமிரண்டின்றி யெங்கணும் பரிபூரணமாக வியாபித்துநிற்பது:—நானுகத் தெரிந்த ஞான நழுவுமோ குருவே யென்றன்,—எ-து எனது சொரூபமாகத் தெரிந்து கொண்ட ஞானமானது நழுவிப்போகவுங் கூடுமா? எனது குருமூர்த்தமே? யென்று மாணுக்கன் கேட்டான்:— தானுகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்,—எ-து. தானேதானுக விளங்கிய பிரமஸ்வரூபமானது சற்குருவினுலும், பிரபல சுருதியினுலுங் காணப்படும்:— ஆனுலும் தடைக ளுண்டே லனுபவ முறைத்திடாதே,—எ-று. அங்ஙனம் காணப்படுவதாயினும் அதனை மறுக்குந் தடைகளுள, உளவாகவாய்க்கினனுபவ முறுதிப்படுமா? உறுதிப்படாதே, எ-று.

தத்துவங்க ளனைத்தையு மாராய்ந்து தெளியத்தகுவது ஞானமன்றி வேறன்று. அந்த ஞானத்தையன்றி நானென்பது வேறன்று. அந்த நான் பகிர்முகத்தில் நா னீயென விரண்டாதற் கியைந்த கண்டங்களாயும், அந்தர்முகத்தில் நா னீயென விரண்டாதற் கியையா தகண்டமாயும் நிற்பதால் இங்கே முத்திதிசைக் கியைந்தவாறு நீ நானென் றிரண்டிலாம னிறைந்தபூரணமாயெங்கு நானுகத் தெரிந்த ஞானமெனவும், அஞ்ஞானதிசையினும், ஞானதிசையினு மூள்ள நானெனல் அவ்வவ்வாறு விளங்கும், விளங்கினு மவை தானன்று தன்னையன்றி யவையில்லை, ஆதலினழுவும் இந்நில பேதங்களனைத்தும் விளக்கத்தக்கது ஞானனுஷ்டானம். இவ்விளக்கத்தில்தான் ஞானஞ் ஞான ரகிதமாயிருக்கவேண்டும், இங்ஙனமாக வேண்டுநில ஞானுஷ்டானமின்றியக்கண் ணுறுதிபடாது, அது பற்றித்தடைகளுண்டே லனுபவ முறைத்திடாதே யெனவுங் கூறினர்.

(கு-து.) தடைகள்வயத் தாகாவிடி னனுபவ நிலைக்குமென்பது. நூலால் மாத்திரமெனின் அனுபவம்வராது, சற்குருவால் மாத்திரமெனின் சான்றோரனுபவமு மிதுதானே என்னுமையந்தீராது. ஆதலினிரண்டு மின்றியமையாது. இது தெள்ளியோர்கடமை. (அ)

அ ை க.

[தடையென லினையதெனவும், அதனைக்கெடுத்த லினையதெனவு மிக்கவியில் கூறுகின்றார்.]

89. தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே

யுடனுடன் வரும்வக் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த தெளித லாலே.

(இ-ள்.) தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீதங்கள்,—எ-து. தடைகள் யாதெனின்; அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமென்பன:— படர்செயு மந்த மூன்றும் பலசென்மப் பழக்கத்தாலே யுடனுடன் வரும்,—எ-து. துன் பத்தையே விளைவிக்கு மந்த மூன்றுவிதமும் அனந்தசென்மப் பழக்கத்தினு லடிக்கடிவரும்;—வந்தக்கா லுயர்ஞானங் கெடும்,—எ-து. வந்தால் மேலாய ஞானப் பிரகாசங்கெடும்:— (ஆதலின்) அவற்றைத் திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே,—எ-து. அம்மூன்றையு முறுதியாக நின்று கெடுத்தல் செய்தி கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னு மிம்மூன்றேதுக்களா னும், எ-று.

அஞ்ஞானம் ; பொதுவாகப் பழுதையைப் பாம்பெனவும், கட்டையைக் கள்ளனெனவுங் கோடல். சந்தேகம் ; பழுதையோ பாம்போ வெனவும், கட்டையோ கள்ளனேவெனவுங் கோடல். விபரீதம் ; ஸ்திரமாகப் பழு தையன்று பாம்பெனவும், கட்டையன்று கள்ளனெனவுங் கோடல், கேட் டல் ; சிரவணமாகிய சட்விதலிங்க தாற்பரியம். சிந்தித்தல்; மனனமாகிய யுத்தி, தர்க்கம், அனுமானமென்பன. தெளிதல் ; நிதித்தியாசனம், சமாதி, சாட்சாத்கார மென்பன. நிதித்தியாசனம் ; மந்திரயோகம் பரிசயோகம் பாவயோகம் அபாவயோகம் மகாயோகமென்பன. சமாதி ; சவ்விகற்பசமாதி நிர்விகற்ப சமாதி யென்பன. சாட்சாத்காரம் ; சீவன் முத்தி விதேகமுத்தி யென்பன.

(க - து.) தடைமார்க்கமும் அதனைக் கெடுக்கு மார்க்கமு மினைய வெனத் தெரிவித்தாரென்பது. கணமும் விடாது பழகுக வென்றார் சான் றோர். (அக)

திடம் என்பதற்கு. சிட்டுக்குருவி தர்ப்பை நுனியால் கடனீரை இறைத் துப் பாழ் படுத்தத்தான் கொண்டமுயற்சிபோலும் பிரதிபந்தங்கள் அடிக்கடி யுதிப்பதான் மலையாமல் அவைகெடுதற்குரிய வாயிலில் நெடுங்காலம் ஆதர வோடு கூடிநிற்குமுயற்சி. என்றும் நயங்கூறுவரறிஞர்.

அ - கை.

[இங்ஙனஞ் செய்யாவிடிற் பந்த நசியாதென்பதற் குவமை யிவிக்கவியிற் கூறுகின்றார்.]

90 அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தீயால் வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்த தெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே.

(இ-ள்.) அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட்டாது,—எ-து. மந்திரத்தினு லக்கினி கட்டுப்படுமாயின் சிறுதுரும்பையு மெரிக்கமாட்டாது:— (அதுபோல) மக்கின ஞானத் தீயால் வந்தபந் தமும்வேவாது,—எ-து. ஞானுக்கினி மந்தப்படுமாயி னக்கணத்தெழுந்த பந்தந் தினைத்துணையாயினு மதனை யெங்ஙன மெரிக்கும், அதனுலஃதெங்ஙன மெரிபடும்:— (ஆதலின்) சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே,—எ-து. உடனே சான்றோர்பா லிடைவிடாது பழகிச் சந்தேகங்களைக் கேட்டலும் விடையைச் சிந்தித்தலும் சிந்தித்தவாறு தெளிதலுமாகிய விவ்வேதுக்களால்:— விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்குவாயே,—எ-து. அனுபூதிக்குத் தடையாயுள்ள அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமென்பவற்றைப் போக்குதல் செய்தி எ-று.

ஞானம் அக்கினியாகாவிடின் பந்தம் நீறுவதெங்ஙனம், நீறுகாவிடின் சின்மாத்திரமாகச் சகலமும் விளங்கலெங்ஙனம், விளங்காவிடின் அல்லலற்று மனமமைதிபெறலெங்ஙனம், இன்றேல் ஞானசாதனத்தாலென்பயன், ஆதலின்சான்றோர் பலரும் ஞானத்தழலென்றார். இதனை மறுப்பா ரனுபவித்தறியார். பிரமமெனினும் ஞானமெனினு மொக்கும். என்னை "பிரம நேரப் பிரம நெருப்பிடை, பிரமமாகிய மந்திரந் தன்னினுல், பிரம மாயசருவுடன் பெய்தபின், பிரம மேயடை வாருளர் பின்னுங்கேள்" எ-ம். "அறிவதாகிய வங்கியிலே கொள, அறிவை யேசில ராகுதிபண்ணுவார், செறிவ தாஞ்சமத் தீயிடை யேசில, பெறிய தாய புலன்களே யீவர்கள்" எ-ம். கூறினர் கண்ணபிரான். மக்கின ஞானத்தீயால் எனப்பாடமோதி யுரைகூறினும். வந்தபந்தமும் வேவாது என்றதனுல் இனிவரும் பந்தமும் வேவாதெனப் பொருடாலால் எதிரது தழீஇய வெச்சவும்மையாயிற்று. (கo)

அ - கை.

[அத்தடைகளி லிலக்கண மினையவெனத் தனித்தனி யிக்கவியிற் கூறுகின்றார்.]

91. *பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானங்*
குரவன்வாக் கியநம் பாமற் குழம்பின மனஞ்சந் தேகந்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று மூள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்.

(இ-ள்.) பிரமபா வனையை மூடிப்பேதங்காட் டுவதஞ் ஞானம்,—எ-து. சைதன்னியத்தைக் கண்டுகண் டிதுநா னிதுநானெனக் கொள்ளுந் திடபாவனையை மறைத்துத் தினைபாலிட பேதங்களைக் காட்டுவது, அஞ்ஞானமெனப் படுவது:— குரவன்வாக்கிய நம்பாமற் குழம்பின மனஞ்சந்தேகம்,—எ-து. ஞானுசிரியருபதேசமொழியை நம்பாமல் கலங்கின மனதே சந்தேகமெனப் படுவது:—திரமறு சகமெய் யென்றுந் தேகநானென்றும்,—எ-து. நான்கு காலத்து நிலையில்லாத செகத்தை மெய்யெனவும், ஸ்தூலதேகத்தை நானென

வும்:— உள்ளே விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர், —எ-து. அகத்திற் கலங்கிய அந்தமயக்கமே விபரீதமெனப் படுவதெனக் கூறுவர் சான் றோர், எ-று.

பேசம், அபேதமென விருவகை. அவற்றுள்; உபாதான முபாதேயமெ னத் தோன்றுமை பேதமும், தோன்றுதல் அபேதமுமாம். அதாவது ; கட பேதங்களே மண்ணெனவும், பணிபேதங்களைப் பொன்னெனவு முணராமை, தோன்றுமை. உணர்தல், தோன்றுதல் சைதன்யவிளக்கமே பரமென்பதோ, ஆனந்தப்பெருக்கே பரமென்பதோ எனக்கலங்கல் சந்தேகம். இவற்றுளொன் றும் நிலையுறுமை விபரீதம். இம்மூன்று முறுதாரெங்கணுமிலர், இதனைக் காட்ட இங்கே விளக்கியதென்க. (கக)

அ - கை.

[அத்தடைகளைக் கெடுக்கத்தக்க கேட்டல் முதலியவற்றி னிலக்கண மினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

92. தத்துவ வனுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பா
சொத்துள பொருளு கத்தா னுசாவல்சித் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே.

(இ-ள்.) தத்துவ வனுபோகந்தான் சாதித்தல் கேட்டலென்பார், —எ-து. தத்துவமசியென்னு மகாவாக்கியானுபவம் விளங்க, விடாது நிட்டை கூட லைக் கேட்டலெனவும்:— ஒத்துள பொருளு கத்தா லுசாவல்சித் தித்தலென் பார், —எ-து. பேதமாகா சொத்துநின்றுள்ள அசிபதார்த்தமாகிற வைக்கியப் பொருளி லையமறி லதற்கையைந்த யுத்திதொ டாசான்டால் விசாரித்தலைச் சித்தித்தலெனவும்:—சித்தமே காந்தமான தரிசனந் தெளிதலென்பார், —எ-து. அங்ஙனம் விசாரித்துச் சிந்திக்கச் சிந்திக்க வையந் தங்கற் கிடமின்றுக வக்கணமே விபரீத மகலு மாதலின் மனமானது சர்வ கற்பிதமு மிறந்த விடத்துச் சதோதயமாக விளங்கு மேகாந்த தரிசனத்தைத் தெளிதலென வுங் கூறுவர் சத்துக்கள், நித்தமிப்படி செய்தக் கானிர்வாணம்பெறுவாய் நீயே, —எ-து; இங்ஙனமனுதினமுஞ் செய்துவருவையாயின் நீநிருவாணம் பெறுவாய் —எ-று.

ஆசான்பாற் கேட்டவாறு நிட்டை கூடலைக் கேட்டலெனவும், ஐக்கி யங் கூடுமா றெங்ஙனமெனச் சிந்திக்க வுசாவலைச் சித்தித்தலெனவும், அங் ஙனஞ் சிந்தித்தலாலாய பயன் சித்தமயக்கந்தீர்ந்து சுயம்பாய் விளங்கலைத் தெளிதலெனவுங் கூறினர். இங்கே அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம், என் பன மூன்றும் பந்தம். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனமூன்றும் முத்தி. இந்தப் பந்தமுத்தி யெய்துவது செயற்கையாலோ ? இயற்கையா லோ ? இயற்கையாலெனின், விதி நிடேதம் வேண்டுவதின்றே. செயற்கை யாலெனின், இந்தச்செய்கைக்கு வினைமுதல் சீவனே ? ஈசனே ? ஈசனெ னின், பிறந்திறந்தானென் றிருக்கவேண்டும், சீவனெனின், பந்தத்துக்கா ? முத்

திக்கா ? பந்தத்துக்கெனின், முத்திக்கோ ? ஈசனெனின், இவன் விளைவிப்பானேன் ? அவனதை யழிப்பானேன் ? சுபாவமெனின், முடிவுதானின்றே? இன்றெனின், உபசாந்தமின்றுமே ; இன்றுயின் அல்லலற்றிருப்பதற்கிடமின்றே ; ஆதலின், இங்ஙனம் வாசித்துத் தெளிவதினு மூடனுயிருக்கை மிகவுநன்று, இங்ஙனமன்று. நானல்லாதவுடலே நானென்னுமபிமானித் தழுந்திய தெந்தவுணர்வோ அந்தவுணர்வா லப்பந்தத்தைக் கெடுக்கவேண்டுமன்றி வேறென்றுரென்பது மூடம். எங்ஙனமெனின், அவனவன்பந்த மவனவனுல் விளைந்ததன்றேல் அவனவன்பந்த மவனவனுற் கழைதலொண்ணுது. தேகோகபாவத் தோற்றம் உடலாலோ ? உணர்வாலோ ? உடலாலெனின், சடம். உணர்வாலெனின், தரும். அந்தவுணர்வுதானே யுயிர். அந்தவுயிர் தேகநீக்கத்தில் தேகோகபாவவிழப்பு, தன்னுலோ ? வேறென்றுலோ ; வேறென்றுலெனி னனுபவமிருக்கவேண்டும். தேகோகபாவந் தன்னுலாயதால் தன்னு லிழப்பாகவேண்டும். அந்தவிழப்பே மரணவாதனைக்குறி. சிலருக் கிவ்வாதனை யில்லாமையுமுண்டு. தமாகவாய்வினுலேனும் மூச்சுஸ்தம்பித்தலாலேனும், ஞானநாட்டத் தறுதியாலேனு மெனவுணர்க. பெண்டு பிள்ளை பண்டங்களி லனவன் வைத்தபாசம் ஆனிவந்தழி யவனவனை வதைக்கக் காண்கின்றோம். தன்னுல்வந்த பந்தந்தன்னுலழிவுறுமன்றிவேறென்றுலாகாது. தன்னுலனுபவித்தேனும் ஞானுக்கினிகொண்டெரித்தேனுமென வுணர்க. என்னை,"தன்னுல் விளையுஞ்சகசவபரக், தன்னுலழியுந்தனதாம் விதியால், என்னுலெனையென்னிலெனக்கருளும், மன்னையடியேன பய மபயம்" என்றுர்த்தத்துவராயர். "தன்னுல்விளைந்தது, அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமாதலினவை தன்னுலழியவேண்டுமென்பதுபற்றிக் கேட்டல் நித்தித்தல் தெளிதல்செய்தி. இங்ஙன மனுதினமுஞ் செய்வையாயின் நிர்வாணம் பெறுவாயென்றுர் ஏனையோ ரன்றெனவிலக்கற்கு நீயேயெனப் பிரித்தலின் பிரிநிலையேகாரம். இந்த ஏகாரத்தா லனவன்பந்த மவனவ னறுக்கவேண்டுமென்பதாயிற்று. இதனை யறிந்துசெய்தி. (கூ௨)

அ - கை.

[நித்தமு மிங்ஙன முயல வேண்டுமென்றீர், முடிவின்றே
வென்ற மாணுக்கனை நோக்கிக் காலவரையறை
யிக்கலியிற் கூறுகின்றுர்.]

93. எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு மென்பை
யத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்ப ரென்றும்.

(இ-ள்.) எத்தனை நாண்ஞா தாவு ஞானமு மிருக்கு மென்பை,—எ-து, எவ்வளவுகாலங் காண்பானுங் காட்சியு மென்னைவிட்டகலவில்லை யென்பையோ:—அத்தனை நாளும்வேண்டுமப்பாலோர் செயலும் வேண்டாம்,—எ-து. அல்வளவுகாலமு மிவ்விடைவிடாமுயற்சி வேண்டுமேயன்றித் திரிபுடியதிலப்பாலோர் முயற்சியும் வேண்டுவதின்று:—நித்தமும் வெளிபோற்பற்று ஞேய

மாத் திரமாய்ச் சீவன் முத்தரானவர்,—எ-து. எப்போதுந் தன்னே யொன்று பற்றினுந் தானொன்றையும் பற்றாத பூதாகயமம்போலச், சகல கற்பிதங்களுந் தன்னேப்பற்றினுந் தானொன்றையும்பற்றாத சிதாகாயமாத்திரமாகச் சீவகற்பி தங் கடந்த சீவன்முத்தர்கள்:—விதேகமுத்திபெற் றிருப்பரென்றும்,—எ-து. விதேகமுத்திபெற்றுக் காலவரையறையின்றித்தானே தானுகவிளங்கிநிற்பர்,—

விடயம்பயனுகப்பெறின் ஞாதுருஞானம்வேண்டும்,அறிவுதன்னேத்தானே பயனுகப்பெறின் ஞாதுருஞானம்யாதுக்கு ? எனவே, தானேஞாதுருஞான ஞேயமெனப்பெற்றும். விடயந்தனதுகற்பிதமாதலின் திரிபுடிவேண்டும் ஞா னந்தனததிட்டானமாதலின் திரிபுடிவேண்டுவதின்று. திரிபுடியைத் தனது விருத்திஞானத்தைக் கொடுத்துக்காணின் அனேத்துஞ்சொப்பிரகாசமாக விளங் கும். அங்ஙனங்காணுவிடில் திரிபுடிமயமாய் நிற்கும். இதனைத் தினவனுபவத் திற்காணலாம். புராணம்போ னம்பிக்கையன்று. பிரத்தியட்சம். நீ முன்னர்க் கற்பிதமாயவிடத்துத் திரிபுடியுங் கற்பிதமாயிற்று. நீ யிப்போது சொப்பிர காசமாகப்பழகில் திரிபுடியுஞ் சொப்பிரகாசமாக விளங்கும். அங்ஙனமாயதும் நினது முயற்சிகாரணமாகவன்றே ? இங்ஙனமாவதும் நினது முயற்சிகாரண மாகவெனக் கூறவேண்டுமோ ? அப்போது விடயமயமானதுபோல, இப்போது சின்மயமாவையென்ப துறுதியாதலால், சின்மாத்திரமயமாகச் சின்னுள்பழகில் திரிபுடியு மங்ஙனமாம், ஆதலின் அப்பாலோர்செயலும் வேண்டாமென்றார். பகிர்முகத்தில் ஞேயம்விடயத்தையும், அந்தர்முகத்தில் ஞேயம்ஞானத்தையுங் குறிக்க நின்றது. ஆதலிற் சிதாகாயமென்றும்.

(க-து) பொன்னைப் பற்பல பணிபேதங்களாக்கற்குப் பன்னுள்வேண்டும், அவையனேத்தையும் பொன்னுயருக்கற்கு நிமிடமாகிற சின்னுள்வேண்டும். அதுபோலத், தன்னைக் கற்பிதமாகிய சகசீவபரமாக்கற்குப் பன்னுள்வேண்டும், அவற்றைத்தானுக்கற்குத் தவமுடிந்தோனுக்குச் சின்னுள்வேண்டும், ஆதலினீ பழகுகவென்பது. இங்ஙனமாய முயற்சிவிடாதோரே சீவன் முத்தராகிப் பின் னர் விதேகமுத்தரானர், இகனேயு முணர்கியென்பார், ஞேயமாத்திரமாய்ச் சீவன் முத்தரானவர் விதேகமுத்திபெற்றிருப்பாரென்றார். இதுகாறு முரைத் தருளியது சிதாகாயமார்க்கமெனவுணர்க. (கூ)

அ - கை.

[இனிஞானத்தின்மகிமைதோன்ற, அதனேத் தானுகப்பெற்ற சீவன்முத்தர்நால்வரின் பெயரினேயவெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

94. ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வரன்வரி யான்வ ரிட்ட
ஞனவர் காம மீதா மவர்களிற் பிரம வித்தின்
ரூனமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன்.

(இ-ள்.) ஞானமார் சீவன்முத்தர் நால்வகையாவர்கேளாய்,—எ-து. அறிவேவடிவாகப் பரிபூரணமாநிறைந்துள்ள சீவன் முத்தரென்போர் நான்குவகையாயிருப்பார், அவ்வினையாங்கூறக்கேளுதி:—வானிகர்பிரமவித்து வரன்வரியான் ஆனவர்நாமமீதாம்,—எ-து. ஆகாயம்போன்ற பிரமவித்தெனவும், வரனென வும், வரிட்டனெனவுமாயினோர் நாமமிதுவாகும்:—அவர்களிற் பிரமவித்தின் ரூனமு மற்றைமூவர் தாரதம்மியமுஞ் சொல்லுவேன்,—எ-து. அந்நால்வருள் பிரமவித்தினிலையையும், ஏனைய மூவரின்தாரதம்மிய நிலைகளையு மினிச்சொல் லப்புகுவன்,—எ-று.

இந்நான்குவகையான சீவன் முத்தருஞ் சிதாகாயமேதானெனத் தெளிந்த வராதலின் வானிகரென வுவமைகூறினர். பிரமவித்தை யும்மைகொடுத்துப் பிரித்தது, விதிவிலக்குவழுவாது பல விவகாரங்கள்செய்ய அதனல்வரு மின்ப துன்பங்கள் நுகர்தல்பற்றி நுகரினுஞ்சிதாகாயமாக்குவன். இதனைப் பின்வருங் கவிகளாலுணர்க. (கூ)

அ - கை.

[இந்நால்வருள் பிரமவித்துக்கள் தமதொழுக்கநடைகளில் வருணச் சிரமங்களைவழுவின்றி நடத்திக்காட்டலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

95. தீராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு மூன்னர்
வாரமா யிருந்த தங்கள் வருண மாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னாலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலைவிடாச் சீவன் முத்தர்.

(இ-ள்.) தீராய்ப் பிரமவித்தாய்த் தெளிந்தவர்,—எ-து. (பிரமவித்தெனப் படுவோர்) யாதோரபாயங்கட்கும் கலங்காத தீரமுடையராயும், பிரமவித்தென் னும் பெயருடையோராயு நின்று ஜயந்திரிபின்றித்தன்னைத் தெளிந்தவர்:—தெளியுமூன்னர் வாரமா யிருந்த தங்கள் வருண மாச்சிரமம்,—எ-து. இங்ங னந் தெளிதற்குமுன்னரே தமக்குரிமையாய்நின்றுள்ள வருணசிரமதருமம்:—சொன்னபாரகாரியமானாலும் பலர்க்குபகாரமாக நேரதாச்செய்வார்,—எ-து. கன்மிகளுக்காகச்சொன்ன பாரமானகாரியமாயினு மவற்றைப்பலருக்கும் முன் னடையாகக்காண விதிவிலக்கொழுங் கொக்கச்செய்துகாட்டுபவர்:—தீர்ந்தநிலை விடாச் சீவன்முத்தர்,—எ-து. வழக்கனைத்துந்தீர்ந்த நிலையாதோ ? அந்நிலையி னின்றுநீங்காத சீவன்முத்தி திசையுடையவர்,—எ-று.

சர்வமுஞ் சின்மாத்திரமாய் விளங்கலின் பயகம்பஞ்சிகளுக் கிடமின்று, ஆதலின் தீராரெனவும், தாம்பிரமஞானமாய்நிற்றலின் பிரமவித்தெனவும், தாம்முன்னர் வருணசிரம வொழுக்கவழித்தாய்ச்சேறலி னிவ்வுண்மைநிலை வாய்த்தது இவ்வாறனைவர்க்கும் வாய்க்கவேண்டு மென்னுங் கருணைபற்றி முன்னடந்து காட்டலேயன்றித் தமக்காக வன்றென்பார், பலர்க்குபகாரமாக நேரதாச்செய்வரெனவுங் கூறினர். (கூ)

அ - கை

[இதுமுதன் மூன்றுகவியானு மந்தப்பிரமவித்துக்களினரிய வியப்புநடை-களே விளங்கக்கூறுகின்றார்.]

96 காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மன்றிற் பற்றார்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டா
ரூமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்.

(இ-ள்.) காமமா திகள்வந்தாலுங் கணத்திற்போ மனத்திற்பற்றார்,—எ-து. காமக்குரோதாதிகள் யாதோரேதுவினுல் நேரிடினு மக்கணமேயவற்றை யறிவாய்க்கரைத்தலி னெங்ஙன நிலையுறும், நிலையுறுவாதலின் கணத்தினசிக் குமன்றே நசித்தலின், எங்ஙனம்மனம், பற்றவிடம்பெறுவர், பெறார்:—தாம ரையிலைத்தணணீர்போற் சகத்தொடுங்கூடிவாழ்வார்,—எ-து. தாமரையிலை தண்ணீரிலிருந்து மெங்ஙனம் பற்றற்றுநிற்குமோ, அங்ஙனஞ்சகத்தோடுகூடி நின்றும் பற்றின்றி வாழாநிற்பர்:—பாமரரெனக் காண்பிப்பார் பண்டிதத்திற மைகாட்டார்,—எ-து. மூடரைப்போலத் தம்மைக்காட்டிக் கொண்டுதிரிவர் பண்டிதராயினு மத்திறமை தம்மிடத்தி லில்லாததாகக் காட்டிக்கொண்டிருப் பர்:—ஊமருமாவாருள்ளத் துவகையாஞ்சீவன்முத்தர்,—எ-து. ஊமைகள்போ லவுமிருப்பர், உள்ளத்தின்கண் மாறுதஞானக்களிப்புடைய பிரமவித்தாகிய சீவன்முத்தி நிசையுடையோர்,—எ-று.

மனஞ்சொப் பிரகாசமாக விளங்கலின், மனத்திற் பற்றரெனவும் ; சொப்பிரகாசப் பிரதியலனஞ் செகத்தெனக்காண்பரன்றி யஃதோர்முதலென வெங்ஙனஞ் சித்தத்தில்வைப்பரென்பார், தாமரையிலைத் தண்ணீர்போற் சகத் தொடுங் கூடிவாழ்வாரெனவும் ; தோற்றினுஞ் செகத்தைச்சின்மாத்திரமாகக் கரைப்பதேசொழிலாகவுடையவ ரிவரெங்ஙனம்பண்டிதத் திறமைகாட்ட நேர முடையவரென்பது தோன்றப் பாமரரெனக்காண்பிப்பார் பண்டிதத்திறமை காட்டாரெனவும் ; யாதோர் கற்பிதமுமின்றிச் சொப்பிரகாசமாத்திரம் விளங் கிக்கொண்டிருக்க வேறென்னசொல்ல விடமுண்டென்பார், ஊமருமாவா ரெனவும் ; சொப்பிரகாசமாக வவருள்ளந் தேர்தலினுலும், அன்னியக்களிப் புக் கெங்ஙனமிடமாம், தற்பிரிதிக்கே யிடமாதலினுலும் உள்ளத்துவகையாஞ் சீவன்முத்த ரெனவுங் கூறியவாறுகாண்க, வந்தாலும், சகத்தோடும், ஊமரும், ஆகியமூன்று மிழிவுசிறப்பும்மை, ஊழாலன்றித் தமக்குச் சற்றும் பிரியமில் லையென்பது தோன்றச் சகத்தொடுங் கூடிவாழ்வாரெனப்பட்டது. (கஜ)

இ து வு ம து.

அ - ஙை

97. பேதகன் மத்தால் வந்த பிராரத்வ நாசா வாகு
மாதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகு

மரதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்ப ரையம் புகுத்துண்பர் சீவன் முத்தர்.

(இ-ள்.) பேதகன்மத்தால்வந்த பிராரத்வ நாநாவாகும்,—எ-து. பேத கன்மம், அபேதகன்மமெனக் கன்மமிரண்டாம், அவற்றுள், பேதகன்மம், உலகம்வேறுகக் கண்டுபுரியுங்கன்மம். அபேதகன்மம், தானுகக்கண்டுபுரி யுங்கன்மம். இங்ஙனமிருக்கப் பேதகன்மத்தால்வந்தவுழ் நாலுவிதமாம்:— ஆதலால் விவகாரங்க ளவரவர்க்கானவாகும்,—எ-து. ஆதலின் விருத்திகளெவ ரெவர்க்கெதெதுவோ அவ்வவர்க் கதுவதுவாம்:—(எங்ஙனமெனின்,) மோத வஞ்செயினுஞ்செய்வர் வாணிபஞ்செயினுஞ்செய்வர்—எ-து. மகாதவத்தைச் செய்யவிருப்புற்றுச்செய்யினுஞ்செய்வர், வியாபாரஞ்செய்ய விருப்புற்றுச் செய்யினுஞ் செய்வர்:—பூதலம்புரப்பாயம் புகுந்துண்டர் சீவன்முத்தர், எ-து பூமியையாள வேண்டினுமாளுவர், பிச்சைபுகுந்திரந்துண்பினு முண் பர் (இவர்களாகினின்,) பிரமவித்தென்னுஞ் சீவன்முத்தர்கள், எ-று.

ஊழென்பது, பூர்வஞ்செய்தவினையை. அபேதகன்மமாதலின்நிலையொத் தனர். பேதகன்மமாதலின், கிர்த்தியம்பேதித்தனர். என்னை, "ஊழிற்பெரு வலியாவுளமற்றென்று சூழினுந்தான்முந்துறும்" என்றார் திருவள்ளுவர். ஞானமாத்திரம், அபேதகன்மம. ஏனையவிரண்டும் பேதகன்மம். பேதகன் மம், உடலுக்கியைந்தது. அபேதகன்மம், உணர்வுக் கியைந்தது. அபேதகன் மமிருப்பதுபற்றிப் பேதகன்மமென்றார். புரப்பினுமென்றதெஞ்சியது, ஐயம்பு குந்துண்பினுமென்றது மற்றே. இந்தவும்மைகளிட்டதைக்காட்டநின்றன. ()

இ து வு ம து

அ - கை க.

98 சென்றது கருதார்நாளைச் சேர்வது நினையார் கண்முன்
னின்றது புசிப்பார் வெய்பி னிலவாய்விண் விழுது வீழ்த்தும்
பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமைபா வொன்றும்பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர்.

(இ-ள்.) சென்றதுகருதார்நாளைச்சேர்வதுநினையார்கண்முன் னின்றதுபுசிப் பார்,—எ-து. போனதைப்பற்றிநினையார், இனிவருவதைப்பற்றியுநினையார், இப்போதியாது கிடைப்பதோ அதனைமாத்திரம்புசிப்பார்:—வெய்யிலவாய் விண்விழுது வீழ்த்தும்,—எ-து. உட்டணகிரணமானது சீதளகிரணமாயாகா யத்தினின் றுலம் விழுதுபோற் பலரும் வியக்கவிதங்கினும்:—பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையாவொன்றும்பாரார்,—எ-து. செத்தபிணமீண்டு முயிரோடுகூடிவாழினும், ஒன்றையு மதிசயமாகப் பாராரார்கள்:—நன்றுதீசென் னுர்சாட்சி நடுவானசீவன்முத்தர்,—எ-து. இதுநன்று, இதுதீசென்றுஞ் சொல் லார்கள், இவ்விரண்டிற்கும் நடுவாகச் சாட்சியா நின்றுள்ள பிரமவித்தாகிய வன்முத்தர்கள், எ-று.

வீழ்ந்தாலு மென்பது வீழ்ந்தமென வந்தது காலமயக்கம். இன்னதனு பவித்தது அனுபவிக்கின்றது, அனுபவிப்பது, என்னு மூக்காலபேசம், அவருக் குச்சின்மாத்திரமாய் விளங்கினும், பசிதணிதல்பற்றி வேண்டுவதாதலின் கண் முன்னின்றது புசிப்பாரெனவும், எத்தனையற்புதமான வியப்புஞ் சிதாகாயமாய் நிற்றலினச்சிதாகாய நாட்டமகலார்க் கெங்ஙனந்தோன்றும், எங்ஙனம்வியப்ப தென்பார், புதுமையாவொன்றும் பாராதெனவும், யாவுமித்தையாய்த் தானு விளங்கலின், நன்று தீதென்னுதெனவும், ஞானஞ்ஞானங்கட் காதாரமான நிலையினரென்பது தோன்றச், சாட்சிஉடுவானசீவன் முத்தனெனவுங்கூறினர். இவையனுபவவிரோதம். (கஅ)

அ - கை.

[ஏனைய மூவரினரிய வியப்பு நடைகளை யிக்கவியிற் கூறுகின்றார்.]

99. பின்னைமூ வரிலிரண்டு பேர்களுஞ் சமாதி யோகந்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானு
வுன்னுவோன் வரன்வேற் றோரா லுணர்பவன் வரியானது
மன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்டனு மே.

(இ - ள்.) பின்னைமூவரிலிரண்டு பேர்களுஞ்சமாதியோகந் தன்னையுற் றிருப்பார்,—எ-து. மற்றமூவரிலிரண்டுபேர் சமாதிஞானத்தை யகலாதிருப் பர்:—தேகசஞ்சார நிமித்தந்தானுவுன்னுவோன்வரன்,—எ-து. தேகசஞ்சாரத் துக்காக வுண்ணநினைப்போன் வரனெனப்படுவோன்:—வேற்றோரா லுணர்ப வன் வரியானுகும்,—எ-து. பிறர்வலிந்தூட்டலா லுணவதிவோன் வரியானெ னப்படுவோன்:—அன்னியர்தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்டனுமே,—எ-து. அன்னியராலும், தன்னுலுமுணவுநேரிடலையறியாதோன் வரிட்டனெனப்படு வோன். எ-று.

தானேசென்றிரந் தோர்வேளையேனும்புசிப்பவன் வரன், பிறர்வலிந்தூட் டவுணவுண்போன் வரியான், உறக்கத்தில்வலிந்தூட்டிய தாயைநோக்கியெ னக்கேனிராத்திரியுணவிடவில்லையென்ற சிறுபிள்ளையைப்போலத் தானுமுண வுண்டதையறியாதான், வரிட்டன். எனவே, தன்பசியைத்தன்னுலறிவோன் வரனெனவும், பிறரானறிவோன் வரியானெனவும், தன்னுலும் பிறரானுஞ்சற் றும்றியாதோன், வரிட்டனெனவுங்குறிக்கப்பெற்றும்- தானேதன் பசிதெரிந்து ணவ லுடல்வளர்த்தற்கன்றே, வதைதவிர்த்தற்கன்றி வேறுக்கன்று, வதை யால் நிட்டைபங்கமும், நிட்டைபங்கமும், மனக்கலக்கமும், மனக்கலக் கத்தால் முன்போலச் சுகதுக்கத்தில் மொத்துண் டலேதலுமாம், ஆதலி னென்க. இச்சை, பரவிச்சை, அநிச்சையெனப்பிராரத்வமூன்றெனலையிங்கே காண்க. (கக)

அ - கை.

[இந்நால்வகையாயசீவன்முத்தர்களுக்கு முத்தியிற்பேதமில்லை. ஆயினும், பேதகன்மங்களாலுண்டாகுந்தாரதம்மியங்களை யிக்கவியிற்கூறுகின்றார்.]

100. அரிதாகு மிவர்களிவ்வா றனேகராலுலுமுத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றுற்
பெரிதான விட்ட துக்கம் பிரமவித் தனுப விப்பன்
வரியானும் வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமா வாழ்வார்.

(இ-ள்.) அரிதாகு மிவர்களிவ்வா றனேக ராலுலு முத்திசரியாகும்,—எ - து. கிடைத்தற்கரிதாகியவிச்சீவன்முத்தர்க ளிங்ஙன மனேகபேதமுடையராயினும், முத்திப்பேற்றில்பேதஞ்சற்றுமிலர்:—பாடுபட்ட சமாதிக்குப்பலனேதென்றால்,—எ-து. பாடுபட்டபேதகன்மமாகிய சமாதிக்குப்பலன்யாதெனின்:—பெரிதானவிட்டதுக்கம் பிரமவித்தனுபவிப்பன்,—எ-து. மிக்கவின்பத்துன்பங்களேப் பிரமவித்தேயனுபவிப்பன்:—வரியானும் வரனுமற்றைவரிட்டனுஞ் சுகமாவாழ்வார், எ - து. மற்றவரியானும், வரனும், வரிட்டனும் நிரதிசயானந்தமாகவாழ்வார்கள், எ-று.

சிதாகாயத்தையன்றி யிவர்களுக்கு நிலேவேறின்மையின், முத்திசரியாகுமெனவும், பலவாறுனவிவகாரங்களிற் சம்பந்தப்படுதலி னவ்வவற்றிற்குரிய நயநஷ்டங்கள்தாமேவரும்; வரவே, அதனுலின்பத்துன்பங்கள்விளேயும், விளேதலேயனுபவிக்கத்தக்கோன்தானுதலால், பெரிதானவிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பனெனவும், அனுபவித்தாலுமித்தனேயுஞ்சிதாகாயமாகிய தன்னேயெட்டிப்பார்க்கத் தினேத்துணேயுமில்லாததாகக் கண்டுகொண்டிருப்பதுதலி லிவனுக்கும் முத்திசரியாகுமெனவுங்கூறினர். கூறவே, நனவு, நினேவு, கனவு, சுழுத்தியெனநான்காம். இவை, விஸ்மரணேயாகவேணும், தஸ்மரணேயாகவேனுமிருக்கும் இந்நால்வருந்தஸ்மரணேயர். ஆயினும், பிரமவித்து நனவாகவும், வரன் நினேவாகவும், வரியான் கனவாகவும், வரிட்டன் சுழுத்தியாகவு மிருப்பரென்பதுபெற்றாம். நனவுவிஸ்மரணேயாதல், சுகத்தாகப்பரிணமித்தலே. நனவுதஸ்மரணேயாதல், சிற்ப்ரகாசமாக விளங்கலே. நனவுவிஸ்மரணேயாயினங்ஙனமாகவும், நனவுதஸ்மரணேயாயினங்ஙனமாகவும் விரிந்தொடுங்கும். இங்ஙனமாயவிரிவொடுக்கத்தை சங்கோசவிகாசமென்பர். இச்சகலகேவலங் கற்பிதமெனவும், எதார்த்தமெனவு மிரண்டாநிற்கும். கற்பிதங்கெடுதல், எதார்த்தத்தில், எதார்த்தங்கெடுதல் ததாகாரத்திலென்றிருத்தலினிவர்சாதனந்ததாகாரமாதற்கெனவறிக. இவர்சுழுத்தினவிற்சுழுத்தியெனவும், ஏனேயசுழுத்தி மக்கினசுழுத்தியெனவுமாம். மூவரும்விடா நிட்டையிலிருப்பதுபற்றிச் சுகமாவாழ்வாரெனவும், விவகரித்தலேப்பற்றி யிட்டதுக்கம்பிரமவித்தனுபவிப்பனெனவுங் கூறினதேயமையுமெனின், பிரமவித்தைப்பற்றியுள்ளதுவகையாஞ்சீவன் முத்தனெனதாமையிலத்தண்ணீர்போற் சகத்தொடுங்கூடிவாழ்வாரெனவும், இன்னுமிவைபோன்ற வற்புதகுணமுடையரெனவுங் கூறியதெற்றுக்கு ? பார்ப்பவர்களுக்கிங்ஙனந்தோற்றலேயன்றிவேறன்று. இதுமுடிந்தது முடித்தலென்னுமுத்தி.

அ - ஈக.

[அஞ்ஞானியர்போல் ஞானிகள் விவகரிப்பினு மாகாதெனற்கிக்கவியிலுவமைகூறுகின்றார்.]

101. பிரமஞா னிகளுங் கன்மப் பேதையர் போலே வாழ்ந்தார்
நிரமறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்னிற்
பாவுமா காயமொன்றிற் பற்றுது மற்றை நான்கும்
விரவின தோடு கூடும் விதமிரு வோரு மாவார்.

(இ-ள்.) பிரமஞானிகளுங்கன்மப் பேதையர்போலேவாழ்ந்தால்,—எ-து, பிரமஞானமுடையோருங் கன்மத்தையே பயனுகவுடைய மூடர்களேப்போல் விவகரிப்பிலொத்துவாழின்: — நிரமறுமஞ்ஞானம்போய்ச் செனியாதவழியே தென்னில், — எ-து நிலையின்றியவஞ்ஞான நசிப்பதெங்ஙனம் ? நசியாவிடில் இனிச்செனியாவாதெங்ஙனம் ? அமையுமெனக்கேட்பையாயின், (இதனேக்கூறக்கேளுகி :— பாவுமாகாயமொன்றிற்பற்றது, — எ-து. எங்குமொருதகைத் தாவியாபித்துள்ளவாகாயமானது தன்னிற்பற்றினுந் தானென்றினும் பற்றாது: — மற்றைநான்கும்விரவினதோடுகூடும் விதமிருவோருமாவர், — எ-து. ஏனையநான்குபூதமுந்தமதகம் புறத்திற் பூரணமாநிறைந்து கலந்துள்ளதாகத் தோற்றுமாகாயத்திற் பற்றும் விதமெங்ஙனமோ ? அங்ஙன மிவ்விருதிறத்தோருமாவார், எ று.

பற்றல்லாதவாகாயத்தைப் பற்றுகநான்குபூதமும் பற்றுமாறுபோன்று, யாதோர்பற்று மல்லாதசுகத்தைப் பாசபந்தமாகக்கருதிப்பற்றுவ தஞ்ஞான மாதலினஞ்ஞானியரெனவும், யாவுந்தன்னேப்பற்றுகப்பற்றினுந் தானங்ஙன மாகாது விலட்சணமாநின்றுள்ளவாகாயம்போன்று, எல்லாப்பற்றுக்களுஞ் சுகமாகக் காண தன்னேப் பற்றுகப் பற்றினுந் தானங்ஙனமாகா தல்லவல்லவென்றகன்று விலட்சணமாகநின்று விளங்குஞ்சுகந்தானுதல் ஞானமாதலின் ஞானியரெனவும், உபமானமுகத்தாற்கூறியது பேதங்காட்டற்கென்க. ஐயந்திரிபகன்ற ஞெப்திப்பிரியமாகவிளங்குவோர்ஞானியர், ஏனையரல்லாதார்; இதுவே பேதம். மற்றைநான்கும் விரவினதோடுங் கூடும் விதமிருவோரு மாவாரெனப்பாடமோதி நான்குபூதமுந்தம்மால் மிசுரிம்பித்த பவதிகங்களோடும்பற்றும் ; இவ்விதமாக ஞானியஞ்ஞானியிருவரும் பேதமாவாரென்றுரை கூறுவாருமுளர். உபாதிகாரணமாக ஞெப்திப்பிரியமிரண்டாகநிற்போரஞ்ஞானியர்; உபாதிரகிதங்காரணமாக ஏகமாகவிளங்குவோர் ஞானியர்; ஏனெனில், ஞெப்திப்பிரியத்தைகதத்பிதமாகக்காண்போரியர். அன்றுகக்காண்போரவர். கற்பிதமெனின், சோதனேயிலன்றுகப்போவானேன் ? ஆதலினிரண்டுமேகம், ஏகமெனின், முன்னிரண்டாஞலன்றே இப்போதேகமென்னலாம். இரண்டாகக் காணப்படுதலுபாதிசகித நாட்டத்தாலன்றியின்றெனின், ஒன்றுகக்காணப்படுதலு மூபாதிரகிதநாட்டத்தாலன்றியின்றென்பம். நாட்டபேதத்தாலங்ஙனந் தோற்றியதன்றி ஞெப்திப்பிரியமிரண்டுமன்று, ஒன்றுமன்று. இங்ஙனங் காண்போர்திர்ந்தஞானியர்; இதில்தமோற்றமுடையோர் ஞானியரேனுமஞ்ஞானியரே, இவரைத்தானஞ்ஞானியரென்று ரிந்தூலாசிரியர். ஏனேயோரைச் சொல்வதிலிவ்வளவு சிறப்பின்று. வெள்ளேமொழியெனக் கண்டபடியுரை கொள்ளற்க. இதுவேபரம்பரை யுரையெனலேஞாயத்தாற்காணுதி.

(க-து.) ஞெப்திட்பிரியமேசமெனற்கும், அன்றெனற்கு மியையுமென் போர் ஞானியன்பது. இது தீர்க்கவாராய்ச்சியின்றேல் விளங்காது, உலகு ளோரையஞ்ஞானியனெக்கொள்ளினிழிவென்னை ? (கடு)

அ - கை.

[சீவன்முத்தரைச் சேவித்தலாலாயபயனையும், இவர்களினியாகும விதேக முத்தி நிலைகூறப்புகுதலையு மிக்கவியிற் கூறுகின்றார்.]

102. சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னேடுமா சம்ம
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து லான
பாவன மானு ரென்று பலமறை முழங்கு மிப்பான்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய்.

(இ-ள்.) சீவன்முத்தரைச் சேவித்தோர்,—எ-து. யாவரிடை விடாமல் சீவன்முத்தரை முறைப்படி தரிசனஞ்செய்து வருபவரோ அவர்கள்:— சிவ னயனெடுமாலான மூவருமகிழ நோன்பு முழுவதுஞ்செய்து,—எ-து. சிவனும் பிரமாவும் விஷ்ணுவுமாகிய மும்மூர்த்திகளு மகிழும்படி செய்யவேண்டிய தவங்க ளனைத்தையுங் குறைவின்றிச் செய்துமுடித்து:— சன்மபாவனமானு ரென்று பலமறைமுழங்கும்,—எ-து. சென்மஞ்சுத்தமாயினரென்று சகல வேதங்களு முறையிடும்:— இப்படல்மேவருஞ் சீவன்முத்தர் விதேகமுத்தியு நீ கேளாய்,—எ-து. இனிக்கிடைத்தற்கரிய சீவன்முத்தர்களைப்பற்றிச் சொன் னது மன்றியும் அவர்களடையும் விதேகமுத்திநிலையையும் யாங்கூறக் கேட் பாயாக, எ-று.

இவரைத் தரிசித்தலா லிவரதநோக்குப் பட்டுக்கொண்டே வரும், வருத லன்றியும் இவர்கள் நல்லவர்களென் றுன்னவுங் கிடைக்கும், இங்ஙனமாய நலன், எந்தத் தவப்பேற்றினு மிக்குறலின் சன்மபாவனமாதற்குத் தடை யென்னை ? சென்ம நாசனமானுரெனக் கூறுமையினேற்றற்பாலதே. சென்ம சுத்தமென்றது, ஞானசாதனத்துக்கையந்த தனுவை. பலமறைச் சுருக்கம் நான் மறையாதலின் பலமறையென்றார். சீவன்முத்தியறிவேதானுதல் ; விதேக முத்தி தூரியா தீதமாதல். இதெல்லாஞ் சொல்லாலன்று, உழப்பாலென வுணர்க. (தி)உ)

அ - கை.

[ஞானிகளின் ஆகாமியமுதலிய மூன்றுவினைகளும் படும்பாட்டை யிக்கவியிற் கூறுகின்றார்.]

103. பஞ்சினை யூழித் தீப்போற் பலசென்ம விவித வித்தாஞ்
சஞ்சிதா மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ ருக்குங்
கிஞ்சிதா காமி யத்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சிய பிராரத் தவத்தின் வினையனு பவித்துத் தீரும்.

(இ-ள்.) பஞ்சினையூழித்தீப்போல்,—எ-து. பஞ்சைவடவாக்கினி யெங்ஙன நீறாக்குமோவதுபோல :— பலசென்மவிவிதவித்தாஞ் சஞ்சிதமெல்லா ஞானத்தழல் சுட்டுவெண்ணீறாக்கும்,—எ-து. பலசென்மங்க ளுண்டாதற்கு நாலுவித விதைபோலுமிருக்கின்ற சஞ்சித வினைகளனைத்தையும் ஞாலக்கினி யெரித்து வெண்ணீறாக்கிவிடும்:—கிஞ்சிதாகாமியந்தான் கிட்டாமல்விட்டுப்போ கும்,—எ-து. ஆகாமியந்தினைத்துணையேனுங் கிட்டாமல்விட் போடிப்போகும்: விஞ்சியபிராரத்துவத்தின் வினையனுபவித்துத்தீரும்,—எ-து. அவை நீங்கலாக மி ஞ்சினின்ற பிராரத்துவவினையை யனுபவித்தேதீரவேண்டும்,—எ-று.

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் என வினைமூன்றும். அவற்றுள் ஆகாமியம், மதி விதி யெனவிரண்டாம். தானிச்சித்தவண்ணம் வேண்டுமெனல், மதி. அவ்வண்ணங்கைகூடல், விதி கூடாமை. சஞ்சிதம். சஞ்சிதம், பை. என் றல், கைகூடா அவாக்களனைத்து மடைக்கப்படும்பை. விதி, ஊழ், பிராரத்துவ மென்பன வொருபொருட்கிளவி. மதி ; பந்தம், விடுதியென விருதிறத்ததாம். பந்தகன்மம் ; பொருளல்லவற்றைப் பொருளெனவேண்டியவாவல். விடுதிகன் மம், பொருளல்லவற்றைப் பொருளன்றெனச் சோதனை, ஞாயம், பொருத்த மென்னு மிம்மூன்றுமுகத்தால் ஐயந்திரிபின்றிக்களைந் துள்ளதையுள்ளதாக் கோடல். விடுதிகன்மவிதி, இவ்வண்ணநேரிடல். பந்தகன்மவிதி, அவ்வண்ண நேரிடல். இப்பாகுபாட்டின் முறைப்படி செல்லில் யாதும்மூராது. விதிமதி யளவுதெரியாதார் தீர்வுகொள்ளின் ''வரம்பின்றி வட்டாடியற்றே'' யென் பதுபோலும். பிறவிக் கேதுவாதல், பந்தகன்மம், மூத்திக்கேதுவாதல் விடுதி கன்மம்.

(க-து.) இந்நால்வரும் விடுதிகன்மத்தாரென்பது. ஞாலக்கினியின் மிக்க வக்கினியுண்டென்பார் தற்காணூர். பந்தகன்மமாகின்றது, அஞ்ஞானம். விடுதி கன்மமாகின்றது, ஞானம் இங்கேஞானமென்றது, பராஞானமாதலின் ஞானத் தீயென்றார். இந்த ஞானத்தீயேயெங்கணுமேலிடலின், சஞ்சிதம்பஞ்சுபோல் வதா லெங்ஙனமதன் முன்னிற்கும். இனியவாவுமாகாமிய மெங்ஙனந்தோன் றும். இங்ஙனமிருக்கப் பிராரத்துவமனுபவித்துத் தீராமலெங்ஙனமொழியும் ; ஆதலின் விஞ்சிய பிராரத்துவத்தின் வினையனுபவித்துத் தீருமென்றார். இந் நெறிச்செல்லார், குதர்க்கிகள். (கoக.)

அ - கை.

[இவர்கள் முன்னர்செய்த நல்வினை தீவினைகளகலும் வகை யிங்ஙனமென விக்கவியிற் கூறுகின்றார்.]

104. பொறுமையாற் பிராரத்துவத்தைப் புசிக்குநாட் செய்த கன்ம
மறுமையிற் றொடர்ந்திடாமன் மாண்டுபோம்வழியேதென்னிற்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வ
ரறிபவ ரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரே.

(இ-ள்.) பொறுமையாற் பிராரத்துவத்தைப் புசிக்குநாள் செய்தகன் மம்,—எ-து. மிக்கவமைதியோடும் பிராரத்துவத்தை யனுபவிக்குங் காலத்தில்

தன்னையறியாமல் செய்தகன்மமானது:—மறுமையிற்றெடர்ந்திடாமல் மாண்டுபோம் வழியேதென்னில்,—எ - து. இனிவரும் பிறவியில்தொடர்ந்து வராமலழிந்துபோதற்கு வகையாதென்னில்:— சிறியவரிகழ்ந்து ஞானிசெய்த பாவத்தைக்கொள்வர்,—எ-து. மெய்ன்போனடித்துக்காட்டும் புத்தியீனர் மெய்ஞ் ஞானியரைத் தமது புன்னடைவழிச்சென்றிலரெனவைது அவரறியாது செய்தபாவத்தைப் பறித்தனுபவிப்பார்:— அறிபவரறிந்து பூசித்தறமெலாம் பறித்தண்பாரே,—எ-து. இவர்சிறிய ரிவர்பெரியரென வதியத்தகுந் திறத்தினரிவர் மெய்ஞ்ஞானியரென்றுணர்ந்து அர்க்கியபாத்திய முதலியவற்றால் திரிகரணமொத்தமெய் யன்புகொடுபூசித் தவர்செய்த நல்லறமனைத்தையு மபகரித்தனுபவிப்பார், எ-று.

பொறுமையாவது; முன்னும் பின்னும் யோசித்துநடத்தல். அதாவது; இன்பமுந் துன்பமுமாறத் தகையதாதலின் செல்வம்வந் தழிக்களிப்பதும், வறுமைவந் தழித்துக்கிப்பது மின்றிகிற்றல். செய்தகன்மமென்றது; நற்கன்ம தூர்க்கன்மத்தை. நற்கன்மம், நடந்துகாட்டல். தூர்க்கன்மம், பொய்சொல்லல். பொய் சொல்லலாவது, இவர்நின்றழி விரைந்தோடும் பசுவைத்தான் காணினும், பின்னரைர் நாழிகைகழித்ததனைப்பற்ற வவ்வழித்தாய்க் கைவாள் கொடுவினைந்தோடுவோ னிவரைக்கண்டுகேட்க, இவரிவன் கைவாள் கண்டறியேனென்னல், இதுபோல்வனபிறவுமாம். சிறந்ததுயிரோ, உணவோ ? உணவெனின்; அன்னம், காய், கனி, கிழங்கு முதலியவை யன்றே ? அதனுள் வலியின்றெனின் ; உன்னுடல் எறும்பு, கரையான், நாய் புலிமுதலியவற்றிற் கிரையாக நீ சம்மதிப்பையா ? அதுபோலென்றறி. கொலைப்பாதகன் புலிமுதலியவைக ளுயிரன்றே விவற்றைக் கொல்லலாமென்பதென்னை ? இடுக்கணேரிட்டுழியென்க. தன்னுயிர்போற் காணுதுழியென்பயன் ? இவை யனைத்தையு மனுநூலாற்காண்க. இஃதறிந்துசெய்தல். அறியாது செய்தலாவது; நடந்துசெல்லுழி எத்தனையோ வுயிர் காலிலகப்பட்டுமாளலும், இன்னுமிவை போல்வன பிறவுமாம். செய்தகன்ம மெனப் பொதுப்படக் கூறியதனால், அறிந்து செய்தகன்மம்; அறியாது செய்தகன்மமென்றும். இஃதன்றியு மிக்கவியில் தானே இவர்செய்த பாவம், இவர்செய்த புண்ணியமென் றிருக்கின்றன, ஐயமென்னை ? (கoச)

அ - கை.

[அவித்தைமுதலிய மூன்றுதனுவு நசிக்குமா றிங்ஙனமென விக்கவியிற்கூறுகின்றார்.]

105. அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா மூடனீ ருமே
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமந் தோ
முரியருக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போற்
றுரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே.

(இ-ள்.) அரியமெய்ஞ்ஞானத்தீயா லவித்தையாமூட னீறுமே,—எ-து. கிடைத்தற்கரிய மெய்ஞ்ஞானமென்னு மக்கினியினு லவித்தையென்னுங் கார

ணசரீரம்பஸ்மமாம்:— பெரிய தூலமுங்காலத்தாற் பிணமாகி விழும்—எ-து. பருத்த தூலதேகமும் பிராரத்தமுடிவுகாலத்திற் பிணமாகவிழுந்துவிடும்:— அந்நேரமுரிய சூக்குமசரீர மூலையிரும்புண்ட நீர்போல்,—எ-து. அக்கணமே தனக்கென்றுரிய சூக்குமசரீரமோ உலக்களத்தி லக்கினியிற்காய்ச்சி வெளியிலெடுத்த விரும்பிற்பெய்த நீரெங்ஙனஞ் சுண்டிப்போமோ அதுபோல:—துரியமாய் விபுவாய்நின்ற சொரூபத்திலிறந்துபோமே,—எ-து. துரியமாயும் வியாபகமாயும் விளங்காநின்ற பிரமசொரூபத்தில் நாசமாம், எ-று.

அவித்யாநாசம் வேறொன்றுலன்மையின் ஞானத்தீயா லெனவும், புல் பூண்டு நாசமாயினு மீண்டுமுளைப்பதுபோலா மென்னுங் குறிப்பை மறுக்க நீறுமெனவும், தூலநாசம் வேறொன்றுலன்மையின் காலத்தாலெனவும், அவித்தை நீறுயவிடத்து மீண்டும் மூளைக்காதென்பது தோன்றப் பிணமாகி விழுமெனவும், அவித்யாநாசம்வரினும் சொரூப முதியாவிடத்து திக்குமென்பது தோன்ற, அந்நேர முரிய சூக்குமசரீரமூலையிரும்புண்ட நீர்போல் துரியமாய் விபுவாய்நின்ற சொரூபத்தி லிறந்துபோமே யெனவுங்கூறினர். அவித்தை, ஒன்றையொன்று வுணர்தல். அவித்தையாகிய காரணசரீர நீங்காவளவும் மனமாகிய சூக்குமசரீரங் கணக்கின்றி வந்தழியும். அம்மனமாகிய சூக்குமசரீரம் நீங்காவளவும் தூலசரீரங் கணக்கின்றி வந்தழியும். காரண சரீரநசிப்பே சூக்குமசரீரநாசம், சூக்குமசரீர நசிப்பே தூலசரீரநாசம். இங்ஙனமாதலே விளக்க விக்கவியிற் கூறியமுறையென்க. (கo)

அ - கை.

[காரணசரீர நாசவாசனை விழப்பே விதேக முத்தியாதலா லிந்த விதேகமுத்தி நிலையைச் சீவன் முத்தர்க ளடைவரென் பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

106 கடமெனு முபாதி போனற் ககனமொன் றுனற் போல
வுடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்த
ரடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமடைந் திருப்ப ரென்றும்.

(இ-ள்.) கடமெனு முபாதிபோனற் ககனமொன் றுனற்போல,—எ-து. குடமெனு முபாதியழிந்துபோனல் நான்காகாயமு மேகமாவதெங்ஙனமோவது போல:—உடலெனுமுபாதி போனவுத்தரஞ் சீவன்முத்தர்,—எ-து. காரண சரீரத்தோ டேனையவிரண்டு சரீரமுமொக்கநசிக்கும், நசித்தவக்கணமே சீவன் முத்தர்கள்:—அடிமுடி நடுவுமின்றி யகம்புறமின்றி,—எ-து. ஆதிமத்தியாந்தமென்பதின்றியும் அகம்புறமென்பதின்றியும்:—நின்றபடி திகழ்விதேகமுத்திப் பதமடைந் திருப்பரென்றும்,—எ-து. இருந்தவண்ணமிருந்தென்று மொருதகைத்தாக விளங்குகின்ற விதேகமுத்தி நிலையை யென்றுமொரு படித்தா யடைந்திருப்பர், எ-று.

கடமெனுமுபாதிபோலுந் ககனமொன்றுளதற்போல என்றதனால், மேக மென்னு மூபாதிபோலுந் ககனமொன்றுளதற்போல வென்பதைவருவிக்க வேண்டும், வருவித்தால் மாத்திரம் நான்காகாயமும் மேகமாகலாம். அங்ஙன மன்றேல் கடாகாயமும் கடசலப்பிரதிபிம்பாகாயமும் மொன்றுளதற்போல வெனப்பொருள்படும். படவே, சீவனுஞ் சீவசாட்சியுமேகமாம் ; ஏகமாயின், ஈசனும் ஈஸ்வரசாட்சியு மேகமாவதென்றோ, இன்றாயின், மாயாநாசமின்றும்; இன்றாயின் மீண்டுமவித்தைதோன்றும் ; தோன்றவே, முன்போலவிபரீதம யமாம், ஒன்றைச்சொல்லும்போ தசனினத்தையுங்கூட்டி முடிக்கவேண்டும். என்னை, "ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல்" என்பதோருத்தி, என்றார் பவணந்தி. உடலெனுமுபாதிபோன வுத்தரமென்பதற்குப் பொருள், மாயை, அவித்தையென்னுங் காரணசரீரத்தைக்கொள்ளாவிடில், சூக்கும, தூல தனு நாசத்தான் முத்தியெய்தற்பாலதோ, அடைந்தாருளரோ, அங்ஙனங்கூறுஞ் சுருதியாதானுமுளதோ, உளதெனிலஃதற்பசுரூபி, இஃதாகமப்பிரமாணமல்போ லன்று, எதார்த்தம். எங்ஙனமெனின், உணர்தற்பாலதுடலன்று, உயிராத லின், உணர்வை யுயிரெனப்பெற்றாம், இங்ஙனமாயதைவிளக்க விதேகமுத்திப் பதமடைந்திருப்பரென்றார்.

(க-து.) சீவன்முத்திமேலீடே விதேகமுத்தியென்பது, (கo கூ)

அ - மை கூ

[இவ்வனுபவம்பண்டையதேயென வுதாரண முகத்தாலிக்கவியிற்கூறுகின்றார்.]

107. சொல்லிய மகனே யெங்குஞ் சூழ்வெளி யிருக்க மண்ணைக்
கெல்லிய பின்னர்த் தோன்றுங் கிணற்றினு காயம் போல
வொல்லையாம் பிரம நூலா லுற்றது போலே தோன்று
மெல்லையி னுமெப்போது மேகமென் றிருந்தி டாயே.

(இ-ள்) சொல்லியமகனெயெங்குஞ் சூழ்வெளியிருக்க,—எ-து. என திட்டப்படி நிட்டைகூடிச் சொல்லியஞானபுத்திரா ! பூமியைச்சூழ்ந்த வெளி யான தள்ளும்புறம்புமெங்கணும் பூரணமாயிருக்க வதனைவிட்டு:—மண்ணைக் கெல்லியபின்னர் தோன்றுங் கிணற்றினுகாயம்போல,—எ-து. மண்ணைக் கிண்டி யாழமாகத்தோண்டியபின்னர் புதிதாகத்தோன்றுங் கிணற்றிலுள்ள வாகாயத்தைப்போல:—ஒல்லையாம் பிரமநூலாலுற்றதுபோலே தோன்றும்,— எ-து. பழமைக்கெல்லாம் பழமையாகிப் பிரமசொரூபமானது, ஞானசாஸ் திரத்தா லிப்போது நூதனமாக வுதித்ததுபோல விளங்கும். (அங்ஙன மன்று.):—எல்லையி னுமெப்போது மேகமென்றிருந்திடாயே,—எ-து. காலா தீதமானநா மெப்போதுமேகமாக விளங்கும் பிரமசொரூபமென்றகலாதிருந் திடுக,—எ-று.

கிணற்றாகாயம் புதிதாகத்தோன்றுமாறுபோன்று, ஞானசாஸ்திரவிசார முகத்தாற் பிரமம் நூதனமாகவுதித்தது போற்றோன்றினும் அங்ஙனமென்

ணற்க. நாமே பிரமசொரூபமா யிருக்க முன்னர் விளங்காதென்னே ? இப்போது விசாரித்ததுபோல அப்போதும் விசாரிக்கினிதேபிரகாரமாக விளங்குதும், ஆதலி னப்போதொருபடித்து மிப்போதொருபடித்துமன்று நாமென்பார், எல்லையிலுமெப்போது மேகமென்றிருந்திடாயே யென்றார்.

(க-து.) என்று மொருபடித்தா விளங்குவமாதலின் விடாதபற்றுகவென்பது. இன்னகிலையினம்யாமென் றளவைநூலாலெல்லைகணித்தற் கரியமெனப் பொருள் கொள்ளினும், எல்லையிலுமென்பது பொருந்தும். (கoஎ)

அ - கை.

[இதனினு முறுதிமொழி வேறின்றென விக்கவியிற்கூறுகின்றார்.]

108. கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க னவூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு
பீனமாக் கறிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய்ம் மகனே யுன்னே நம்மாணை மறந்தி டாதே.

(இ-ள்.) கானனீர்கிளிஞ்சில்வெள்ளி கந்தர்ப்பநகர் கனவூர் வானமை கயிற்றிற்பாம்பு மலடிசேய் முயலின்கோடு பீனமாந் தறிபுமானிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே,—எ-து. கானலின்கண்ணீர்போலவும், கிளிஞ்சலில் வெள்ளி போலவும், கந்தர்வநகரம்போலவும், சொப்பனப் பிரபஞ்சம்போலவும் ஆகாயத்திற் கருமைபோலவும், பழுதையிற் பாம்புபோலவும், மலடிபுத்திரன்போலவும், முயல்கொம்புபோலவும், பருத்தகட்டையிற் கள்ளன்போலவும், சமஸ்தபிரபஞ்சமும் பொய்யே:—ஞானமெய்ம்மகனே யுன்னேநம்மாணை மறந்திடாதே,—எ-து. பரஞானமொன்றுமே மெய், சற்புத்திரா நீ ஞானமாதலினுன்னே யென்மேலாணைப்படி மறவாம லதுவாக விளங்குதி,—எ-று.

சமஸ்தமும் மித்தையென்பதற்குத் திஷ்டாந்த மொன்பதுவகையுள், மலடிசேயென்பதொன்றுஞ் சொன்மாத்திரம். ஏனையவெட்டும், சொன்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமாம். ஒவ்வொருபூதமுந் தத்தங் காரியவகையால் மகத்தும், காரணவகையா லணுவுமாதல்போல, அண்டபிண்டமுதலிய பௌதிகமுமாம். இதனை வஸ்துபரிசோதனையாற்காணலாம். இந்தன்றியும், ஆகாயத்தையன்றி நான்குபூதமும், நான்குபூதத்தையன்றி யண்டபிண்ட சராசரவடிவங்களுமில்லையே ; ஆகாயம், சமஸ்தத்திற்கு மாதாரமும் மகம்புறமுமாநிற் றுபோலத் தனக்கெங்கே ? இன்னெனின், யாதுபொருள் ? இருந்தாலன்றே கணிக்கலாமெனின், எவற்றிற்கு மாதாரமாவானேன் ? அங்ஙனந் தோற்றன்மாத்திரமன்றி வேறன்றெனின், சூனியமென்னலாமே ; இதனை மறுப்பது வழு. சூனியமெனல் பொய்யன்றேவெனின், தனக்கெனச்சுயம் பொன்றின்மையின் பொய்யே. ஆகாயம் பொய்யாயின், அதன் காரியமனைத்தும் பொய்யாகவேண்டுமே யெனின், சூனியமா முடியாது சோதனையிற் காட்டவேண்டுமே, கூடாதெனின், மறுப்பதென்னே ? ஆகலின் சமஸ்தமும் பொய்யெனவும், பொய்யென்றேற்றற்கியைந்த வொன்பதுவகை திருஷ்டாந்

தமினைய வெனவுங்கூறினர். கூறியதாற்குற்றமென்னை, உண்டெனின், சோதனையாதியா லுணர்த்தவேண்டும். கூடாதேல் பேசாமைநன்கு. கான லாதியே நீராதியாக மாறுத்தோற்றுமாறுபோன்று, ஞெப்தியே சகமாதி யாகமாறுத்தோற்றலினிவ் வுவமைபொருந்தும். நீராதியாரோபம், கான லாதியதிட்டானம் அதுபோலச் சகமாதியாரோபம், ஞெப்தி, அதிஷ்டா னம் சமஸ்தமும் ஞெப்தியன்றேல், சோதனையில் சமஸ்தமும் ஞெப்தியாக மூடிவதென்னை. ஆதலின், பொருந்தும். இதன்றியும், ஆராய்வதன்முன்ன ருலகம் நாமரூபமாகவும், பின்னன்றாகவுங் காண்டலியாது. நாமரூபம்பா ழிலும், பாழ்நாமரூபத்திலுங் காணுதலென்னை. ஒன்றிலொன் றின்றாதலி னிஃதன்னியோன் னியாபாவமாயிற்று. இங்ஙனமாகநிற்பதும், நின்றுணர் வது மதிவாதலாலிதுபாவம். பாவம், மெய். அபாவம், பொய். எனவே, அறிவையன்றி யாதுமின்றெனப்பெற்றாம். பெறவே, அனேத்துந்திரிசியம், ஞானறிவு. என்றாயிற்று. ஆகவே, தன்னையன்றி யனேத்துமின்றெனக் கண் டாம். காணவே, மறக்கவேண்டியதனேத்தையும், மறவாமலிருப்பது தன்னை யுமெனப் பொருடருகின்றது. தருதலின், ஞானமெய்மகனேயுன்னை மறந்தி டாதேயெனவும், இதுதோற்சத்தியம் வேறென்றின்மையின் நம்மாணையென வுங்கூறினர். மதத்தரிதனை மறுக்கவலியுளரேல் தம்து ஞெப்தியைத்தள்ளி யுலகிருக்கத்தெரிவிக்கட்டும். பூரணபண்டிதருமோ ; யாதானுமோர்பெயர்ச் சொல்லையேனும், வினைச்சொல்லையேனும், வஸ்துசோதனையில், அல்லவல்ல, இல்லையில்லையென்றகலா திருக்கவு மூபாதான வுபாதேயவகையால் விகார மின்றியோர்முதலிருக்கவுந் தெரிவிக்கட்டும். கூடாதெனின், மறுத்தலும் வலிவுளர்போற் கூறலும், தம்போற்பேதையர் வியக்கவன்றோ. இதுநிற்க. அனேத்துமித்தை, அறிவேசத்தியமென்று வேசமுடிவும் கீதைகளும், உபநி டதங்களுங் கூறுவது, மூடத்தாலோ, விவேகத்தாலோ ? மூடத்தாலெனின், அறிவையன்றித் திணபாலிடமிருக்கத் தெரிவிக்கலாமே, கூடாதெனின், விவேகத்தாற்கூறியதென்பம். கூடாதெனின், சொல்வாதமாமுடியும், முடி யவே, பயனின்றியசொல்லாற் பகைநேரிட்டழிதும். இக்கவி தத்துவவிளக் கப்படலமுடிவாதலா லிங்ஙனங்கூறினரெனவறிக. நான்குகாலத்தினு மித் தையெனற்குத் தக்கவுதாரணங்கூறியது ; என்று மூலகுண்மையெனக்கொள் ளாதிருத்தற்கும், இப்போது மித்தையல்லவெனவும், ஓரவஸ்தையில்மற்றோ ரவஸ்தையில்லாததால் மித்தையெனவும், வேதம் பொய்சொல்லுமாவென வும, இதெல்லாம் பக்குவமுமனுபவமும் வந்தால்தெரியுமெனவும, இங்ஙன மெல்லாம்விளவாது சொல்வதைக்கேட்ப தெமதுமரபெனவுங்கூறி யுணர் வைவளர்க்கத்தெரியா துணர்வுவளர்ப்பார்போற் காட்டி யுடலிவளர்க்குங் கள்ளஞானியரிவரெனக்காட்டற்குமென்க. இப்போது மித்தையல்லவெனின், அந்நியோன்னியாபாவம்யாதுக்கு, ஆதலின்வழு. ஓ ரவஸ்தையில் மற்றோரவ ஸ்தையில்லாததா லப்போது மித்தையெனின், அவஸ்தையொன்றிலொன்றில் லாதேனுமுலகமின்றே ? உண்டெனின், உலகைமித்தை யென்னலாமோ ? இவனுக்கில்லையெனின், இவனுவுலகம். அன்றெனின், வேறுயிருக்க, இல்லை யென்னலாமா ? அதுவழு. வேதம்பொய்சொல்லுமாவெனின், உயிர்கள் செ

னிக்காததற் கிவ்வுலக காலவரையறையாதோ. இன்றெனின், வாயின்றிய வுலகை வேதமித்தை யென்னலாமோ? இதனைச் சான்றோர்களேற்பதென்னை கொலோ? அபிமானத்தாலன்றே அன்றெனின்; எப்போதின்றே வுலகம். எப்போதுமிருக்கின்றதெனின், வேதமுஞ் சான்றோருமுலகை மித்தையெனக் கூறுவதுவழு. இதெல்லாம் பக்குவமானபவமும் வந்தால் தெரியுமெனின், இவ்விரண்டு நிலையும்வந்த நீர்மித்தையென்றுலகைக் கூறலாகாதோ? கூறுவதை யுணர்தற்கு வலியின்றே லென்செய்வேனெனின், சுருதி, யுக்தி, அனுபவமென்னுமூன்றனுள், அனுபவம் பின்னராகட்டும், இப்பொது முரணின்றிச் சுருதி யுலகமித்தையெனற் குரைகூறலாகாதோ? வாசித்தால் தெரியுமெனின், வாசிக்கத்தெரிந்துமெவரு முரைகேட்பானேன். இன்னெருபோதாகட்டுமெனின், எங்கேனுங் கேட்டுவந்து சொல்லுதற்கோ? அன்றெனின், இப்போது சொல்லலாமே யோசிக்கவேண்டுமெனின், யோசியாமற் தெளிந்த தெங்ஙனம். இதெல்லா முழுப்புரட்டு, ஆதலின் வழு. இங்ஙனமெல்லாம் விளவாது சொல்வதைக் கேட்பதெமது மரபெனின், அஞ்ஞானஞ் சந்தேகம், விபரீதந் தெளிவதெங்ஙனே? கேட்டுக்கொண்டு வரில்தானே தெளியுமெனின், அங்ஙனந் தெளிந்த நீர்சொல்லலாமே. சொன்னால் கேட்கவலி யுண்டோவெனின், உண்டோவில்லையோ? அதைக்குறித்து முன்னமே பேசியாயிற்று. முன்போல் வளர்த்துச்சொல்லல் விவர்த்தமாம். ஆதலினிதுவும் வழு. முறையே யிவையெல்லாந் தெரியாதார், உலகுபொய், ஞானமென்பதை வாசித்துமென்பயன். கேட்டுத் தெளிந்தாலன்றிப் பயன்படா. கேட்டுத்தெளிந்தவனீயாதலின், ஞானமாகிய வுன்னை மறந்திடாதேயென வாணையிட்டுக்கூறினர்.

சத்தியஞ் சத்தியம். (கஅ)

தத்துவவிளக்கப் படலம்

மூற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தேகந்தெளிதற்படலம்.

சந்தேகந்தெளிதலாவது ; சந்தேகத்தினின்றுதெளிதல். முன்னர் தத்துவவிளக்கப்படலத்தில் தானுகிற வான்மாவைவிளக்க விளங்கினற்போல, செகமாதிதிரிபதார்த்தங் காரணமாக வெழுமையத்தைத் தெளிவிக்கத்தெளிதல். இஃதைந்தாம்வேற்றுமைத்தொகை நீங்கற்பொருள். ஆதலின் தத்துவவிளக்கப்படலத்தின்பின் வைக்கப்பட்டது.

அ - கை.

[முன்னர்சொரூபசமாதிக்கண் தானே தானுகத்தளித்தசித்த விருத்தியானது மீண்டுந்திரும்பாதங்ஙனந் திரப்படவேண்டியதற்கு மாறுவுதிக்குமையங் திரிபுகளேயகற்றித் தெளிவுபெறுநெறியை யிக்கவியிற் கூறுகின்றார்]

1. *நார்குழி பறித்து மெள்ள நாட்டிய நெடிய கம்ப*
மூரமூறக் குத்திக் குத்தி யுரப்பிக்கு முபாயம் போலப்
பரமமாஞ் சொரூபத் தன்னிற் பற்றிய மனே விருத்தி
திரநிலே பெறச்சந் தேகந் தெளிதலே மொழிகின் றேனே.

(இ-ள்.) நார்குழிபறித்துமெள்ள நாட்டியநெடியகம்பம்,—எ-து. மனிதர்களாழமாகக்குழிதோண்டி மெதுவாகநாட்டின பெரியகம்பமானது:—ஊரமூறக்குத்திக்குத்தி யுரப்பிக்குமுபாயம்போல,—எ-து. இனியாதினுனுமசையாதுறுதிபடவேண்டிக் கல்முதலியவைகளேப்பெய் தக்குழியைக் குத்திக்குத்திப் பலப்படுத்துமாறெங்ஙனமோவதுபோல்—பரமமாஞ்சொரூபத்தன்னிற்பற்றிய மனேவிருத்தி;—எ-து. பிரமசொரூபத்திலூன்றிய மனேவிருத்தியானது:—திரநிலேபெறச்சந்தேகந் தெளிதலேமொழிகின்றேனே,—எ-து. அங்ஙனமேயுறுதிபெறுமவண்ணஞ் சந்தேகந்தோன்றுமாயினதனேக்களேந்து தெளிவுபெறுமாறெங்ஙனமோ வங்ஙனமாயநெறியைத் தெரிவிக்கின்றேன், எ-று.

" சித்தின்முயல்வாற்சித்தாகுஞ் செடத்தின்முயல்வாற் செடமாகும் " என்று மனேவிருத்தியிருப்பதனுல், மீண்டுஞ்சடமாகாவண்ணங் காக்கவேண்டும், காத்தற்கிடையூறென்னே ? சகசசமாதியின்றுதலின் உலகந்தோன்றும். தன்னெறிக்கண்ணிற்கினஃதிருக்கினுந் தோன்றுது. அயர்ந்தால் தோன்றும், ஆதலினுலகைச் சின்மாத்திரமாகக்காக்கில் தோன்றினுந்தோன்றுவிடினுமிடையூறின்று. அங்ஙனங்காப்புழித்தடைகள்வரும். அத்தடைகளாவன;

மலவிசர்ச்சனம், சலவிசர்ச்சனம், இவைபற்றியேனும், உணவுபற்றியேனுஞ் சொரூபசமாதிவிட்டகலவேண்டும், அகல்வுழித்தேகந்தோன்றும், தோன்றவே சராசரந்தோன்றும், தோன்றவே, தேசம் - காலம் - வீடு பட்டணமுதலிய வைதோன்றும், தோன்றவே திரிபுடிதோன்றும், தோன்றவே இச்சாஞானக்கி ரியையுண்டாம், உண்டாகவே, விர்த்திகள்மேலிட்டழிவதுபோல்வன. ஆதலின் நிட்டைகலையும்போதே சங்கற்பந்தோன்றும், அங்ஙனந்தோன்றுவது ஞெப் தியாதலா லதனையங்ஙனே சிற்ப்ரகாசமாகவிளக்கி லனைத்துமங்ஙனமாம் திரி புடியுஞ்சிற்ப்ரகாசமா யேகமாகவிளங்கும். இங்ஙனம்பழகல்சகசசமாதி. இதற் குத்தடைசந்தேகம். இதனைக்கெடுத்தல் தெளிதல்; ஆசலின்திரநிலைபெற்றச் சந்தேகந்தெளிதலைமொழிகின்றேனேயென்றார். திரநிலை, திரஞானமெனினு மமையும்.

(க-து.) பரஞானமாகவிளங்கியமனம், திரஞானமாதற்குத் தடைகளைக் கூறுதலென்பது. (க)

அ - கை.

[தத்துவவிசாரமுதல்விதேகமுத்திபரியந்தம் ஆசிரியரைப்பிரி யாதிருந்தனனென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

2 நற்கருத் துடையோனுகி ஞானவானுகி னின்றோன்
மர்க்கட ஞியாயம் போல மகாபூத விகாரந் தொட்டு
நிர்க்குண விதேக முத்தி நிலைபரி யந்தஞ் சொன்ன
சற்குரு வினைவிடாமற் சந்தத மனுசரித்தான்.

(இ-ள்.) நற்கருத்துடையோனுகி ஞானவானுகினின்றோன்,—எ-து. சிற் சோதிநாட்டமகலாக் கருத்துடையோனுகியும், அயல்வடிவந்தானுகாது ஞான வடிவமேதானுகியும் விளங்கினின்ற மாணுக்கன்: — மர்க்கட ஞாயம்போல மகாபூதவிகாரந்தொட்டு நிர்க்குண விதேக முத்திநிலைபரியந்தம், — எ - து. மர்க்கடஞாயமெங்ஙனமோ வதைப்போலத் தூலபஞ்சமகாபூதவிகாரமாகியதூ லதேகமுதல் குணரகிதமாவிளங்கும் விதேகமுத்திநிலை பரியந்தமுள்ளவனுப வரசங்களை:— சொன்னசற்குருவினைவிடாமல் சந்ததமனுசரித்தான்,— எ-து. விடாமற்சொன்ன சற்குருவைவிட்டு நீங்காமல் சதாகாலமுந்தொடர்ந்திருந் தனன், எ-று.

மர்க்கடஞாயம், குரங்குபோற்பற்றுஞாயம் அதாவது, கோபுரமேறிக் கீழ்க்குதிக்கினுந் தனதுதாயைவிடாதுபற்றுமுறைமை. மர்க்கடம் - நிர்க்குண மாரியமொழியாதலின் ரகரமாயிற்று என்னை, "றனழஎஒவ்வுமுயிர்மெய்யு முயிரள பல்லாச்சார்புந்தமிழ்பிறபொதுவே" என்றுர்பவணந்தி. மர்க்கடஞா யம்போலச் சற்குருவினைவிடாமல் சந்ததமனுசரித்தானெனமுடித்துப்பொ ருள்கொள்க. (உ)

அ - கை.

[மாணுக்கனைச்சோதிப்பான்வேண்டி மூன்றுகேள்விகேட்டலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

3. சந்ததம் புருடன் றன்னைச் சாயைபோல் விடாத வன்பா
மைந்தனை நோக்கிச் சாட்சி மாத்திர மாகின் றீயோ
சிந்தையி லேய மெல்லாந் தீர்ந்தவோ தெளிவி னுள்ளே
யந்தரங் கலந்த துண்டோ வனுபவ முரைசெய் வாயே.

(இ-ள்.) சந்ததம்புருடன்றன்னைச் சாயைபோல்விடாதவன்பாமைந்தனை நோக்கி,—எ-து. ஓர்புருடனது தேகசாயையானது எப்போதுமவனைவிட்டு நீங்காவா றெங்ஙனமோ அதுபோல ஆசிரியனைவிட்டு நீங்காத வன்பேவடிவாயமைந்த சற்புத்திரனைநோக்கி:—சாட்சிமாத்திரமா நின்றீயோ,—எ-து. கூடஸ்தபிரமமாக விளங்குகின்றனையோ:—சிந்தையிலேய மெல்லாந்தீர்ந்தவோ, எ-து. உன்மனதிற்கிடந்த சந்தேகங்களனைத்து நீங்கினவோ:—தெளிவினுள்ளே யந்தரங்கலந்துண்டோ வனுபவமுரைசெய்வாயே,—எ-து. பேதரகிதமான சுவானுபவத்தெளிவின்கண் யாதானும்பேதம்வந்து கலந்ததோ ? இஃதெனக்குத்தெரியும்படியா வனதனுபவத்தைச்சொல்லுதி, எ-று.

விடாமலெனின், வினைகொண்டுமுடியவேண்டும். அங்ஙனமின்றே, மைந்தனென்னும் பெயர்கொண்டுமுடிவதால் விடாதவெனப்பெயரெச்சமாக்கினும். வலிந்துமாற்றிப்பொருள்கொள்வதினு மிதுநேரானதாலென்க. சாட்சிமாத்திரமா நின்றீயோவென்னுங்கால், சீவேசராகிய கற்பிதத்தை விட்டென்றற்றொடக்கத் தொழிந்தசொற்களைத் தருதலினெழியிசை. சகசமாதியாலன்றி யகலாச்சந்தேகங்களின்னின்னவாதலி னதனையுணர்த்தச் சிந்தையிலேயமெல்லாந் தீர்ந்தவோவெனவும், பேதரகிதமேதெளிவாதலின் தெளிவினுள்ளேயெனவும், விகற்பபுத்தி சற்றேவருதலியல்பாதலின், அந்தரங்கலந்ததுண்டோவெனவும், நினதனுபவமுரைத்தாலன்றி யிவற்றைத் தெரிந்தகற்றற் கொண்ணுமையின், அனுபவமுரைசெய்வாயே யெனவுங்கூறினர்.

(க-து.) களங்கமற்ற வனுபூதியாகிறகண்ணுடியி லழுக்குப்படிதலியல்பாதலெனத் தெரிந்தவராதலினிங்ஙனம்விளவினரென்பது. இதுசோதனை.

அ - கை

[தனதனுபவவிளைதவுல்லாசத்தைத் தானே தனக்குள்கண்டு வியப்புற்றாசிரியனைப்புகழ்ந்து துதிக்கின்றனென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

4. எனவுரைத் தருளு மாசா னிருபதம் வணங்கி யெந்தாய்
சனனவன் காட்டின் மோகத் தமத்தெழு பேதப் பேய்க
ளுனதரு ளுதய வெற்பி லுபதேச வருக்கன் றோன்றி
மனவிழி தெரிய ஞான வான்கதிர் பரந்த லுண்டோ.

(இ-ள்.) எனவுரைத்தருளுமாசா னிருபதம்பவணங்கி,—எ-து. என்றுவினவியஞானாசிரியரதுபயபாதங்களையும்வணங்கி:—எந்தாய் சனனவன்காட்டின் மோகத்தமத்தெழுபேதப்பேய்கள், —எ-து. எமதுகர்த்தனே பிறவியாகிய கொடியவனத்தின்கண் மூடியமோகமென்னுமிருளிலெழுதற்குரிய பேதமாகிற

பேய்க்கணங்கள்:—உனதருளுதயவெற்பிலுபதேசவருக்கன்றேன்றி— எ-து உனதருளாகிறவுதயகிரியில் ஞாலேபதேசமென்னுஞ்சூரியனுதமாய்:—மனவிழிதெரியஞான வான்கதிர்பரந்தாலுண்டோ,—எ-து மனமாகிறகண்ணுக்குத் தெரியும்படியாக மேலானஞானகிரணங்க ளெங்கணும்வியாபித்துக்கொண்டாற் கணமேனுந்தங்குமா, எ-று.

சஞ்சிதங்கள் காடுபோலடர்ந்திருத்தலின், சனனவான்காடெனவும், கா டென்னுதுவன்னென்றது, எவருந்திகைத்து மீளாத்தகையதெனற்கு ; இத னைத்தத்துவஞானானுபவிக ளறிவரன்றி யேனையோர் சற்றுமறியார், இது நிற்க மோகம், மயக்கம் அதாவது ; தேகமுதலிய பிரபஞ்சங்களே மெய்யெ னக்காண்டல். அடர்ந்த காட்டுக்கிருளகலாமைபோன்று, அடர்ந்தசெனனங் கட்கு மோகமகலாமையின், மோகத்தமமெனவும், உடலுமுயிரும்பேதம் போற்றோற்றினுஞ் சடமுஞ்சித்துமாதலி ளெங்ஙனமேகமாம், இங்ஙனமாய பேதமயமேயன்றி யனைத்து மெங்ஙனமேகமாகலாம், இப்பேதபுத்தியகன்ற சமயவான்க ளெங்ஙனுமில்லவேயில்லை. பேதபுத்தியைப் பேதமென்றது, குணவாகுபெயர். பேதபுத்திதனியேநிற்பதுகூடாமையி னிங்கேயதனையுடை யோரையென்க. அதனையுடையோரத்துவிதி நீங்கலாகச் சமஸ்தமதஸ்தரும் அபேதவாதத்திற் கத்துவிதியொருவனே யூத்தரவாதி. அவ்விருளே யகலாது வாழ்தல் பேய்களாமாறுபோன்று, அம்மோகஞ் சற்றுமகலாதுவாழ்த்தல் பேத வாதமாதலின் பேதப்பேய்களெனவும், எழுவென்றது வினைத்தொகை. பேய் களெழுந்து சஞ்சரித்தற்குரிய நிராக்காலம், அதுபோலப் பேதவாதிகளெ ழுந்து வாதித்துத் திரிதற்குரியது மோககாலம், ஆதலினெழுவெனவுங் கூறி னர். இதபந்தத்தைக் கியைவதுபற்றியென்க. அருளின்றியக்கண் ணுபதேச மெழாது, உதயகிரியின்றியக்கண் சூரியோதயமெங்ஙனமாம், ஆதவின் உனதருளுதயவெற்பெனவும், பூதசூரியனுதித்துழியன்றி யூனக்கண்காண வறியாது, அதுபோல ஞானசூரியனுதித்துழியன்றி யக்கண் காணவறியாது ஆதலி னுபதேசவருக்கன் றேன்றியெனவும், கண்ணில்லாவிடத்துப் பூத சூரியோதயத்தாலென்னபயன், அதுபோலப் பரிபாகமனமில்லாவிடத்து ஞான சூரியோதயத்தா லென்னபயன், ஆதலின் மனவிழிதெரியவெனவும்; இவ் விருசூரியரெழினுஞ் சோரர்முதலிய சத்துருக்கள் பதுங்கற்கிடஞ் சற்றுண் டாயினு முண்டாகலாம். தமது கிரணங்க ளெங்கணும்பரவி னப்போதிட மெங்கே, இடமின்றுகவே, யவர்களுளரோவென்பார், கதிர்பரந்தாலுண் டோவெனவுங் கூறினர். இது விடுதிக்கியைவதுபற்றியென்க. உண்டோ வென்பதெதிர்மறை, உண்டோவென்னுங்குறிப்பு வினைமுற்றுக்கெழுவாய், பேதப்பேய்கள். சனனவான்காடு, மோகத்தமம், பேதப்பேய்கள், இவை மூன்றும், இவற்றிற்கெதிர்மறையாய, அருளுதயவெற்பு, உபதேசவருக்கன், மனவிழி, ஞானவான்கதிர், இவைநான்கு முருவகம். இக்கவியிற்கூறியது நிச்சயஞானமன்று பிரத்தியட்சஞானத்தை. எவ்வுயிருமறிவையன்றியில்லை, அறிவன்றே வுடற்றோறுநானென்பது. அந்தவறிவுதானே, தேகோகமுதல் சிவோகமிறுதியாகநின்றது, வேறெனின் காட்டவேண்டும், கூடாதெனி லெத்தக்கொள்ளவேண்டும். இன்றேனு னறியாதிருக்கவேண்டும். ஆக

லின்; தேகமுதல் சிவம்வரையு மிவற்றையகமெனிலிவையகமாகுமா, இவை யயலன்றே, இது ஞானமாகுமா, அறிவு தன்னையேதானெனச் சுருதியுத்தி யாலோர்தல், நிச்சயஞானம். அது சுசாதிமுதலிய கற்பனையற்றதெனத் தேர்த்தல். அபரஞானம். அதனையுள்ளவாறுகாண்டல், பரஞானம். திரிபுடி யினைத்துஞ் சின்மாத்திரமாகவிளங்கல், திரஞானம். இங்ஙனமிருத்தலி னிதனை மறுப்பார், அதிஞரெனப்படினு மேற்பதெங்ஙனம். (ச)

[இங்ஙனந் துதித்தமா ணுக்க ஞசிரியரைநோக்கி யின்னுமடியே னைத் திருத்தவேண்டியதளதே லதனைத் தெரித்தருள வேண்டுமென் றிரந்துகேட்டதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

5. மந்திர மூர்த்தி தன்னுன் மாற்றிய பேய்போ னலு
மெந்திர மெழுதிக் கட்டி யினிவரா வகைசெய் வார்போன்
மூர்த்தியுன் னுபதே சத்தான் மோகம்போ னலு மையா
புந்திநின் றுறைக்க வின்னும் புகலும்விண் ணப்பமுண்டே.

(இ-ள்.) மந்திரமூர்த்தி தன்னுல் மாற்றியபேய்போனலும்,—எ-து. மந் திரக்காரனுலே புத்தியைவிகாரப்படுத்திய பேய்நீங்கினும்:—எந்திரமெழுதிக் கட்டி யினிவராவகைசெய்வார்போல்,—எ-து. எந்திரஸ்தாபிதஞ்செய்து அந் தப்பேய் மீண்டுமெனுகாவண்ணந் தக்கதந்திரஞ்செய்பவர்களைப்போல:—முந்தி யுன்னுபதேசத்தால் மோகம்போனலும்,—எ-து. முன்னரே தேவீருபதே சித்ததாலுதித்த ஞானசூரியனுல் மோகவிருணீங்கினும்:—ஐயா புந்திநின்று றைக்கவின்னும் புகலும்விண்ணப்பமுண்டே.—எ து. ஐயனே யெனதுபுத்தி யான தப்பிரமத்திலுறைந்திருக்கவேண்டி யடியேன் கேட்டுக்கொள்ளவேண் டிய விண்ணப்பஞ் சிலவுள,—எ-று.

சிற்சிலதடுமாற்றந் தனக்குளே தோன்றலைப்பற்றிப் புந்திநின்றுறைக்க வின்னும் புகலும்விண்ணப்பமுண்டேயென்றார். (ரு)

[தரியாதீதமாகக் குருவைக்காண்டலி னிவரைச் சிவமெனக்கருதித் தேவீர்யாதுபற்றிப் பிரமம் மலேவாக்குக்கெட்டு மெட்டா தென வேதத்திற்கூறினீ ரதனைத் தெரிவிக்கவேண்டு மென்று மாணுக்கன் விஞவியதை யிக்கவி யிற் கூறுகின்றார்.]

6. ஆகமப் பிரமா ணத்தா லறியென்றும் வாக்குக் கெட்டா
தேகமாம் பிரம மென்று மிதயத்தா லுணர்வா யென்றுஞ்
சோகமா மனதிற் கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ் சொன்னீர்
மோகமா மிரண்டு சங்கை மூளாத்தன பறித்தி டீரே.

(இ-ள்.) ஆகமப்பிரமாணத்தா லறியென்றும் வாக்குக்கெட்டா தேகமாம் பிரமமென்றும்,—எ-து. அஷ்டவிதப்பிரமாணத்து ளொன்றுகிய சத்தப்பிர மாணத்தா லறிவாயென்றும், மீண்டுமந்தச் சத்தப்பிரமாணத்தா லந்த ஏகமா

கிய பிரமமூனக்கெட்டாதென்றும்:—இதயத்தாலுணர்வாயென்றுஞ் சோகமர் மனதிற்கெட்டாச் சுயஞ்சோதி யென்றுஞ்சொன்னீர்,—எ-து. மனத்தா லறிவாயென்றும், மீண்டுமந்தச்சோகமாகிய மனத்தினு லந்தச்சுயஞ்சோதியா கிய பிரமமூனக்கெட்டப்ப—ாதென்றும் பூர்வத்தி லீசலுகினின்று வேதத்தைச் சொன்னீர்:—மோகமாமிரண்டுசங்கை மூளத்தனபதித்திடரே,—எ-து. இப் போதடியேனுக் கந்தமமக்கமான விரண்டுசங்கைகளென தகத்திலுதித்தன வவற்றை மெல்லத் தேவீர் களைந்தருளவேண்டும், —எ-று.

பிரமசொரூபம் ; வாக்குக்கெட்டு மெட்டாதென்றும், மனதுக்கெட்டு மெட்டாதென்றுமாதியி லசரீரியாகினின்று வேதங்கூறினது நீரன்றே ? அன் றெனில்; இப்போதடியேனுக் கவ்வேதத்தி னரியரகசியங்களெயெல்லாம் வெளி யாகவிளக்கிவித்தது நீரன்றே ? ஆதலின், நீரேயென்பதைத்தோன்றே வெழு வாயாக்கினும். சொன்னீரென்பதற்கு வேறுவினேமுத லின்றுதல் பற்றி யென்க. அன்றுசொன்னவர் நீராதலி னின்றுவிளக்கற்கு நீரானீர், ஆதலின் பரமசிவமே குருமுகுர்த்தமென்பசற் கையமின்று. இந்நூலில்தானே மாணுக் கன்சொன்னது ; ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங் குருவேயென்றன், என்னை, 'மறைமூடியதனில் விளங்கிடுமொளியே மனிதரைப்போல்வந்ததெனு மென் சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாசதேசிகன்' என்றார் சாந்தலிங்கசுவாமி கள். இன்னும் பலருஞ்சொல்லினர். இங்ஙனமிருப்பதுபற்றி வேதத்திற்கூறிய தன்றி யில்லாததைச்சொல்வதன்று. விபரமாகப் பின்னர்கூறுதும். (சு)

[முன்னர் பிரமம் வாக்குக்கெட்டாதென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

7. மற்றைமூப் பிரமா ணத்தால் வஸ்துநிர் ணயங்கூ டாதே .
யுற்றதோர் விடயம் பூத முபயமன் றுத லாலே
குற்றமாங் குணவி சேடங் கூடாம லிருக்கை யாலே
யிற்றது வாக்குக் கெட்டா தென்பது மறிவாய் நீயே.

(இ-ள்.) மற்றைமூப்பிரமாணத்தால் வஸ்துநிர்ணயங்கூடாதே,—எ-து. சத்தப்பிரமாணத்தா லன்றியும், வேனய பிரத்தியட்சம். அனுமானம், உப மானமென்னு மூன்றினும் பிரமவஸ்து இன்னநிலையதென யாவரானு நிச்ச யிக்கவொண்ணாது:—(ஏனெனில்.) உற்றதோர் விடயம்பூத முபயமன்றுத லாலே குற்றமாம்,—எ-து. எதிரிற்காணவுற்றது பிரத்தியக்ஷமாகத் தகுவதெ னின், அஃதோர்விடயமாம். அனுமானிக்கத்தகுவதெனின், தனது காரியத்திற் குத் தானேர்காரணமாம்: உபமானிக்கத் தகுவதெனின், தனக்கோருபமா னம்வேண்டலி னிரண்டாம். இங்ஙனமெல்லாந் தானன்றுய்விளங்கலின், இவற்றை யதன்மேலேற்றிக்கூறுவது குற்றமன்றே ஐயமின்றிக்குற்றமே யாம்:—குணவிசேடங் கூடாமலிருக்கையாலே யிற்றதுவாக்குக்கெட்டாதென் பதுமறிவாய்நீயே,—எ-து இங்ஙனமாயவப்பரவஸ்து, தன்பாற் பிரத்தியட்ச முதலிய குணவிசேடங்களைப் பிறரேற்றிக்கூறினுந் தானவற்றிற் குடன்படா திருத்தலின் வேதமாகிய சத்தப்பிரமாணத்துக் கெட்டப்படாதென்று கூறுவ தையு நீயறிதி,—எ-று.

மற்றமூப்பிரமாணத்தா லென்றதனால், சத்தப்பிரமாணத்தா லன்றியுமெனக்கொண்டாம். மற்றையென்பது கடைக்குறை. நாதாதீதமாதலிற் சத்தத்தானும், திரிபுடிரகிதமாதலின் பிரத்தியட்சத்தானும், காரணகாரிய ரகிதமாதலின் அனுமானத்தானும், சுசாதி, விசாதி, சுகதபேதமிறந்ததாதலின் உபமானத்தானும் எங்ஙனமெட்டப்படும் படுமெனிற்குற்றமாம், ஆதலிற் குற்றமாமெனவும், பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், சத்தம், என்னு மிங்ஙான்கையும் பிறர் தன்மேலேற்றிக்கூறினுந் தானன்றுதலின் உற்றதோர்விடயம் பூத மூபயமன்றுதலாலேயெனவும், இம்மூன்றும் வேதத்தையன்றியில்லாததால், வாக்குக்கெட்டாதெனவுங்கூறினர். குணவிசேடமென்பது மீமிசைப்பதம் குணவிசேடமென்ப திங்ஙான்கையுமெனக்கொள்க,

(உ-ம்.) புனிற்றிளங்கன்று, மீமிசைஞாயிறு, நாகிளங்கமுகு, உயர்ந்தோங்குபெருவரை, என்பன, மீமிசை.

வினு:—ஏனைய அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவமென்னு மிங்ஙான்காணு மெட்டாதெட்டலா மென்னுதலென்னே ?

விடை:—அருத்தாபத்தி, குறியாலுணர்தல், குறிகடந்ததாதலின்கூடாது. அபாவம் ; பொய். நான்குகாலத்துஞ் சதோதயமாகவிளங்கலின் கூடாது. ஐதீகம் ; தொன்றுதொட்டுவழங்கல். சகசீவபரம்போலத் தொன்றுதொட்டுவழங்கலன்று. தொன்று. நூதனம் என்னுங்காலங்கட் கதீதமாதலின் கூடாது. சம்பவம் ; ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபிலுக்கமெனப்படல். அது பிண்டப்பொருளுமன்று பிண்டித்தபொருளுமன்று, ஆதலிற்கூடாது, இதுபற்றியென்க. இங்கே பிரத்தியட்சமெனல், ஞானகதப் பிரத்தியட்சத்தை. பிரத்தியட்சம்-தரிசனம். அனுமித்தல்-அனுமானம். அருத்தத்துக்காபத்துவரல்-அருத்தாபத்தி. என்றுமுண்டெனல்-சம்பவம். இன்றெனல்-அபாவம். இகம்-இயதி, ஐதீகம்.

(க-து) இன்னின்ன வேதுக்களால் வாக்குக்கெட்டாதென்பது. இதனை மறுத்தந்கேதென்னை. வலியுளர்போற்காட்டுவார், அர்த்தவாதியரல்லர். உற்றதோர்விடயமபூத மூபயம் வஸ்துவன்றுதலாலே மற்றை மூப்பிரமாணத்தால் வஸ்துநிர்ணயம் கூடாதேயெனவும், கூடாவிடத் திவைகுற்றமாம், இந்தக்குற்றமாங் குணவிசேடங்களைக் கூட்டினுங் கூடாமலிருக்கையாலே யெனவும், ஆதலி னிற்றதுவாக்குக் கெட்டாதெனவுங் கூட்டிமுடிக்க இவற்றால் நாம் வஸ்துநிர்ணயம் பண்ணவுங்கூடாது, பண்ணினுமெட்டாது, என்பது முக்கியத்துணிவு. என்னை, "வேதமுதல்கலைகாட்சி முதலளவைவிரிஞ்சன்முதல் விண்ணோர்செய்யுஞ், சோதனையுளகப்படாச் சோதியுனைச்சோதிக்கத் துணிந்தேனந்தோ" என்றார் பரஞ்சோதிமுனிவர். நான்மாடக்கூடலானபடலத்தில். ()

[எட்டாதெனக்கூறியவேத மெட்டுமெனமீண்டுங்கூறும், ஆயினு
மிவ்விரண்டுவிதமு மின்னின்னவேதுவினற்கூடுமென
விக்கவியிற் கூறுகின்றார்.]

8. வாக்கியந் தனக்கெட்டாத வஸ்துவென் றுரைத்த வேதம்
வாக்கிய விருத்தி யாலவ் வஸ்துவைக் காட்டிற் றன்றே
வாக்கியங் களிலே மான மாவதே தென்ரு யாகில்
வாக்கிய மிரண்டு மெய்யே மறைகள் பொய் யாநீ கேளாய்.

(இ-ள்.) வாக்கியந்தனக்கெட்டாத வஸ்துவென்றுரைத்தவேதம்,—எ-து. வாக்குக்கெட்டாதது பரவஸ்துவெனக்கூறிய வந்தவேதமே:—வாக்கியவிருத்தி யாலவ் வஸ்துவைக்காட்டிற்றன்றே,—எ-து. ஒருவன் கேட்டவாறுநில்லா தவ்வாக்கியத்தைச் சிரவணமனனாதிகளா லேயந்திரிபறவிர்த்திசெய்வதினு லஃ தவ்வஸ்துவைக்காட்டினதல்லவா:—வாக்கியங்களிலே மானமாவதேதென்றுயா கில்,—எ-து. இங்ஙன மிருவகையாகக்கூறிய வாக்கியங்களில் யாது சிறந்ததெ னக் கேட்குதியேல்:—வாக்கியமிரண்டுமெய்யே மறைகள் பொய்யாநீகேளாய், எ-து. இவ்விரண்டுவாக்கியமு முண்மையே வேதங்கள் பொய்சொல்லுமா, சொல்லாவே, யிதனையாங்கூற நீ கேளுதி,—எ-று.

வாக்கியவிருத்தி, வாக்கியார்த்தம் விளங்கமுயறல். அதாவது ; சொல் லெலாம் பொருளாம்வண்ணஞ் சிரவணமனனாதிகளா லேயந்திரிபறமுயறல். இங்ஙனம்விடாது முயன்றுலவ்வஸ்துவைக் காட்டுமோ, காட்டாதோ ? காட் டாதெனின், தீவரதரமெற்றிற்கு காட்டுவது திண்ணமாதலால், காட்டிற் றன்றேறுவென விறந்தகாலத்தாற்கூறினர். எறும்புமூட்டைகொண்டு திட் டையேறின் என்றற்போலும். என்னை, ''சொற்றிரியினும்பொரு டிரி யாவினைக்குறை'' என்றுர்பவணந்தி. வாக்கியவிருத்திசெய்தலினுல் மகான் களுக்குவஸ்துவைக் காட்டிற்றெனப்பொருள்கொள்ளின், அப்போது காலவ ழுவமைதியன்று. வாக்கியவிருத்திசெய்யினும் வஸ்துவைக்காட்டாதது அபக் குவங்காரண மாதல்பற்றி. ஆயினும், எங்ஙனமேனுங்காட்டிவிடும், இத் திண்ணநோக்கித் 'தெய்வத்தாலாகாதெனினு முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்'' எனவும், இன்னும், ''ஊழையு முப்பக்கங் காண்ப ருலவின்றித் தாழாதுஞற்றுபவர்'' எனவுங்கூறினர் திருவள்ளுவர். காட்டும் காட்டாதென் றது அவரவர் முயற்சியளவும் பக்குவவளவும்பற்றி. ஆதலி னிரண்டுமெய்யே மறைகள்பொய்யாவென்றுர். வேறுகப்பாடமோதவியையி னேற்க ? உபாதேய ங்காண்டலா லுபாதானந்தக்கமுயல்வாற் காணுததற்கேதென்னை. உபாதேயம், விடயம் உபாதானம்,ஞானம். இவ்விரண்டும்பேதம். (அ)

[சுருதிகாட்டாமல்காட்டுமென்பதை யிக்கவியிற் கூறுகின்றுர்.]

9. தன்பதியல்லாப்பேர்க டமையல்ல னல்ல னென்ரு
னன்பனைக் கேட்ட நேர மவள்வெட்கி மௌன மானு
ளென்பது போல நீக்கி யிதன்றிதன் றெனச்சே டித்த
பின்பரப் பிரமந் தன்னைங் பேசாமற் பேசும் வேதம்

(இ-ள்.) தன்பதியல்லாப்பேர்க டமையல்லனல்ல னென்றுள்,—எ-து. தனதுநாயகனல்லாதபேர்களே யிவளுவிவளுநினது நாயகனெனப் பிறர்வினவுந்

தோறுமிவனல்லனிவனல்லனென்று சொல்லிக்கொண்டிவந்தாள்:—அன்பனைக் கேட்டனேமவள்வெட்கி மௌனமானளென்பதுபோல.—எ-து. முடிவினைய னைக்கேட்டவக்கணத்தே யவள்நாணமுற்றுப்பேசாதிருந்தனளென் றுலகத் தார்கூறுவதுபோல:—நீக்கியிதன்றி தன்றெனச்சேடித்த பின்பரப்பிரமந்தன் னைப் பேசாமற்பேசும்வேதம், —எ-து. ஒவ்வொருகத்துவத்தையுந் தனித்தனி விசாரியாநிற்புழி வேதமானதிதல்லவிதல்லவென்றுசென்று முடிவிலினிக்கூறவி டமின்றி மிஞ்சிநின்றபரப்பிரமவஸ்துவை யுணர்த்தாமலுணர்த்தும், —எ-று.

மணம்புரிந்தானை மருவிடவேண்டித் தன்மனைக்கண் மாமனழைப்பித்தழி யவன்தோழரோடுங்கூடியிருக்க, அக்கலியாணப்பெண்ணை யவளதுதோழிகளி வனுவிவனு நினதுநாமகனென்னுந்தோறு "மல்லவல்லவெனக்கூறி முடிவிலி வனுவெனக்கேட்கவிடையின்றிமௌனமானாள். இஃதைதிகம். இதனைத்திருட் டாந்தமாக்கினர், வஸ்து இதுபோன்றிருத்தலின். என்னை, ,,ஆணல்லன்பெண் ணல்ல னல்லாவலியுமல்லன், காணலுமாகானுளனல்லனில்லனல்லன்'' என்றார் சடகோபர். இன்னும், ,,உருவன்றருவன் றுளதன்றிலதன், றிருளன்றெளி யன் றெனநின்றதுவே'' என்றாருணைகிரிநாதர். ,,அல்லேயல்லேயீ தெனவரு மறைகளு மன்மைச்சொல்லினற்றுதித்திலேக்கு மிச்சுந்தரநாடற்கு எல்லேயா குமோவென்மொழி'' என்றார்பரஞ்சோதி முனிவர், தானறிவு அவனின்பமாத லின், அவள்வெட்கிமௌனமானளெங்ஙனமேர்;அங்ஙனந் தத்துவக்குழாங்களை நியதிகளேந்துசென்றதறிவு, பிரமமானந்தமாதலிற்பேசாமற்பேசும் வேதமென் றார்.சிற்றறிவும் சிற்றின்பமும் மௌனமாக்குழிப்,பேரறிவும் பேரின்பமும் மௌ னமாக்கற்கிடையுநென்னை, கேட்பானேன். எனவே, அறிவேசுகமெனக்காட் டநின்றது. ஆதலினறிவானந்தமென்றார்கண்டோர். அறிவுதன்னையயலாகக்கா ணுங்காறு மானந்தந்தனக்கயலாகக்காணும். அறிவைக்கண்டார்க்கானந்தமயல ன்று தானேயானந்தம். எங்கெங்கின்பஞ் செனிக்கின்றதோ, அங்கங்கறிவைக் காணின் மோனமாம், ஆதலின்மோனமென்பது ஞானவரம்பென்றுணர்வையா யார். அங்கங்குபாதியைக்காணின் மாளாமோகமாம். மௌனமாவென்பார் பே சாமற்பேசும்வேதமென்றார், மௌனமாவது ; அல்லவல்லமெனற்கெல்லை. இ ன்னும். பேசிக்கொண்டேவந்துபேசாமனிற்றல் காட்டிக்கொண்டேவந்து காட் டாமனிற்றலெனினுமமையும். இதனைக்குருசேடவனுபவவகையுட்காண்க.

(க-து.) சுருதிகாட்டாமற்காட்டல், அல்லவல்லவெனக்கூறிக்கொண்டேவ ந்தயர்ந்து நிற்றலென்பது. அங்ஙனநிற்றலனுபூதிமுடிபு- இதனையறியார் பலபி தற்றியுமென்னை. (கூ)

[இதுகாறு முதற்சங்கைக்குத்தரங்கூறி, இனியிரண்டாஞ்சங்கைக் குத்தரங்கூறுவான்வேண்டி மனமினையதெனத் தெரிவிக்க வதனுற்பத்தியை யிக்கவியிற் கூறுகின்றார்.]

10 முந்திய சங்கைதீர மொழிந்ததை யறிந்து கொள்வாய்
பிந்திய சங்கை தீரப் பேசுமுத் தரமீ கேளா
யிந்தியங் களுக்கி ராச னிதயமா மதினெண் ணங்கள்
புந்தியு மனமு மென்றே புறத்தகத் துலாவி யாடும்.

(இ-ள்.) மூன்றியசங்கைதீர மொழிந்ததையறிந்துகொள்வாய்,—எ-து. மூதற்சங்கைக் கையந்தீர விடைதந்ததை யறிந்துகொள்ளுதி:—பின்றியசங்கை தீரப்பேசுமுத்தரமீதேளாய், எ-து. பின்சங்கைக் கையந்தீரக் கூறுமுத்தரத்தை நீ கேளுதி:—இந்தியங்களுக் கிராசனிதயமாம்,—எ-து. மனமுதலிய விந்திரி யங்களுக்குத் தலைவனுயிருப்பது ஞானமாம்:—அதினெண்ணங்கள் புந்தியு மனமுமென்றே புறத்தகத்துலாவியாடும்,—எ-து. அதினது சங்கற்பங்கள் புத்தியெனவும் மனமெனவுங் கூறப்பட்டு புறம்பிலுமகத்திலு முலாவி நட மாடும்,—எ-று.

இந்தியங்களுக் கிராசன்மனமெனின், புந்தியுமனமுமெனச் சொல்லா திருக்கவேண்டும், சத்தப்பிரகாணமுதலிய கட்டளைகளில் ஞானம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், எனக்கூறியிருக்கின்றது. ஆகாயத்தி லாகாயம், ஞானம்; ஆகாயத்தில் வாய்வு, மனம். ஆகாயத்தி லக்கினி, புத்தி. ஆகா யத்தி லப்பு, சித்தம். ஆகாயத்திற்பிரிதிவு, அகங்காரம். அங்ஙனங்கூறியது. மின்னகாரணம்பற்றியென்க. எனவே, மனமுதலிய நான்குமதிவின் ஸ்புரிப் பென்றுயிற்று. அன்றேல், அறிதல்தர்மமில்லாதிருக்கவேண்டும். இருப்பதால் மறுக்கற்பாற்றன்று. ஞானமின்றியாதுநிகழும் யாதுண்டு. இன்றுதலினேற் றற்பாலதே. ஆதலினிதயத்தை ஞானமென்றும். அதினெண்ணங்கள் புந்தியு மனமுமெனவே, அதனது புடைபெயர்ச்சியி னவசரநிலைகளேயன்றி மன மும்புத்தியுமோர்முதலன் றெனக்குறிக்கக் கூறியதாகக்கண்டாம். எவ்வுயிரும் தேகோகமாநிற்றலின் தேகத்துக்குபபுறம்பகமெனவும், அகத்தில்மனமிச்சாஞா னமாக நின்றுழறலும், புறத்தில் பத்தியலகிரியைகளாகநின்று நடித்தியற்ற லும்பற்றி யுலாவியாடுமெனவுங்கூறினர், உலகத்தாரவனவன் புரிதொழிலைக் கண்டு வியப்பதும் இகழ்வதும் புத்தியையன்றிமனதையன்று. விஞ்ஞதேவேலை யைக்கண்டு இவனது புத்தியென்ன சிறந்ததெனவும், இழிதொழிலைக்கண்டு இவனது புத்தியென்னமடமையெனவுந் தொன்றுதொட்டு வழங்கலினிதுவே சான்று. புந்தியுமனமுமெனக்கூறியவற்றின்புடைபெயர்ச்சிகளாகிய வுலாவி யாடுமென்பவைகளே முன்பின்னுகக்கூறினும், புறத்தகத்தென்றதனுல் மாற் றிப்பொருள்கொள்ளின் வழுவன்று. மனமாவது ; சமிசயநிச்சய சாஞ்சலிய அபிமானங்களில், சமிசயமாதலினுனும், அறிவின்புடை பெயர்ச்சியாதலானு மிஃதோர்முதலன்று. அன்றேனும், முதலாகநடித்தலினதனைவினைமூலாக்கி யெட்டுமெட்டாதெனற்குக்கூறவந்தா லிதனது நிலையினையதெனக்காண்க.

(க-து.) மனமெனலினையதெனவறிவித்தசென்பது புத்தியைப் புந்தியெ னல்மெலித்தல்விகாரம். உரையிற்கோடலென்னு முத்தியால் புறத்தகத்தென் பதைப் பகிர்முகமந்தர்முகமென்றுக்கிப் புத்தியுமனமு மிவ்விருமுகத்தில் யாதா னுமொன்றிலேனு முலாவியாடுவதியல் பாதலெனக்கொண் டிங்ஙனங் கூறினு ரெனினுமமையும். பகிர்முகம் ; பொன்னைப்பணியெனவும், பழுதையைப் பாம்பெனவுங்கோடல் அந்தர்முகம் ; பொன்னைப் பொன்னெனவும், பழுதை யைப் பழுதையெனவுங்கோடல். கொள்ளவே, சுத்தபுத்தி சுத்தமனம்,—எ-து. அசுத்தபுத்தி அசுத்தமனம்,—எ-ம். பாகுபடுதற்கிடம்பெறலாயிற்று. இதனைப் பின்வருவதாற்காண்க.

(கo)

அ - கை.

[முன்னரிதயமென்றஞானம் ; விருத்தியெனவும் சிதாபாசனெனவு மிருபாலதாயமுறையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

11. உன்முகம் போற்கண் ணுடிக்குள்ளொரு முகங்கண்டாற்போற்
சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்
நின்மல விருத்தி யந்த நிழல்வழி யாயு லாவுந்
தன்மகன் மகனே யித்தைத் தானன்றே ஞான மென்பார்.

(இ-ள்.) தன்மகன்மகனே உன்முகம்போற்கண்ணுடிக் குள்ளொருமுகங் கண்டாற்போல்,—எ-து. அறம்வழுவின்றியசற்புத்திரா உனது முகம்போ லொருமுகங் கண்ணுடியிற்காணப்படுமாறுபோன்று:—சின்மயவடிவின்சாயை சித்துப்போற் புத்திதோன்றும்,—எ-து. சின்மாத்திரமாக விளங்குஞ் சைதன்ய மானது புத்தியிற்றானே காணப்படுமாறுபோன்று சாயாரூபமாகப் பிரதிபலித் துக்காணப்படும்:—நின்மலவிருத்தியந்த நிழல்வழியா யுலாவும்,—எ-து. மேற் கூறிய சைதன்யமென்னு நின்மலவிருத்தியானது, அந்தச் சாயாரூபவழித்சா கவே யுலாவிக்கொண்டிருக்கும்:—இத்தைத்தானன்றே ஞானமென்பார்,— எ-து. இதையல்லவா சத்துக்கள் ஞானமெனக்கூறுகிற்பர்,எ-று.

இங்கே சாயையென்றது, சிதாபாசனே. ஆடியால் முகம் ; பிம்பம் பிரதி பிம்பமெனப்பட்டாற்போலப், புத்தியால் சைதன்னியம் ; விருத்தி சிதாபாச னெனப்பட்டது. ஆடியாலன்றி முகத்திற்குமாறுப் பிரதிபிம்பமுகமெனவருமா, அதுபோலப் புத்தியாலன்றிச் சைதன்யத்திற்குமாறுச் சிதாபாசனெனவருமா? வந்ததால், சைதன்யம் விருத்தியெனப் பெயர்பெற்றது. இங்கே புத்தியென் றது பகிர்முகநோக்கத்தை. அதில், தோற்றியசித்தைச் சாயையென்பதிலைய முளதேற் சோதனையிற்காணலாம். எங்கெங்கே நானெனலுண்டோ வவை யெல்லாஞ் சிதாபாசனன்றே ? சிதாபாசனெனினுஞ் சீவனெனினு மொக்கும். அறிவு நானலதை நானென்றதனு லிக் கற்பிதப்பெயர்கள் தனக்குவந்தன. இந்த வறிவு சுயஞ்சைதன்யத்தின் பிரதிபலனமாகச் சோதனையில் முடிவதா லித னைச் சாயையெனவும், இஃததிஷ்டானமாகக் காண்டலி னிதனைச் சித்துப் போலெனவும், சாத்தனென்னுஞ்சொல் தன்பால் புடைபெயர்ச்சியின்றியக் கண்பெயரெனவும், ஆகியக்கண்ணெழுவாயெனவு மெங்ஙனமாயிற்றே வது போலச், சிதாகாயமானது ; புத்தியில் சித்துபோற் சாயையாகப் பிரதிபலித்த லாகிய புடைபெயர்ச்சியைத் தன்பாலில்லாவிடத்துச் சின்மயவடிவெனவும், உடையவிடத்து நின்மலவிருத்தியெனவும், அல்லது விருத்தியெனவும் பெயர் பெறும். இங்ஙனமாதல்பற்றி யிப்பெயர் தந்தனரெனவும், நீரைவிட்டகலாத கான லெங்ஙனமோ அங்ஙனம் அக் கற்பிதவறிவினின்று நின்மலவிருத்திய லாதுலாவலின், நின்மலவிருத்தியந்த நிழல்வழியா யுலாவுமெனவும், இங்கே நிழலென்பது சிதாபாசனே. இச் சிதாபாசன் கற்பிதவறிவன்றியும், இக் கற்பித வறிவு நின்மலவிருத்தியன்றியும், இந்த நின்மலவிருத்தி சின்மயவடிவன்றியு

மின்றெனச் சான்றோர்கண்டுரைப்பதால் இத்தைத்தானன்றே ஞானமென்பா ரெனவுங் கூறினர். கூறவே, சித்துசம்பந்தஞானமாதலினதனை விருத்தியெனப் பெயரிடக்கண்டாம்.

(க-து.) இனி விருத்தியெனவும், பலமெனவு மெடுத்தாளவேண்டுதல்பற்றி யிக்கவியில் விருத்தி யினையதெனக் கூறியதென்பது. (கக)

அ - கை க.

[சிதாபாசனையே பலமெனக்கூறி விருத்தியைக் கண்ணுவும், பலத்தை விளக்காகவு மிக் கவியிற் கூறுகின்றார்.]

12. உருக்கிய தராநீர் நானா வுருவங்க ளானற் போல
விருத்தியே கடப டாதி விடயமாப் பரிண மிக்கு
மருப்பல விடய மெல்லா மாபாசன் றேற்று விக்கு
மிருட்டினில் விளக்குங் கண்ணு மில்லா மற் பொருள்கா ணுதே.

(இ-ள்) உருக்கியதராநீர்நானு வுருவங்களானற்போல,—எ-து. குகையிலிட்டுருக்கியதராநீரானது; கட்டியவச்சின்விகாரவண்ண மெங்ஙனநானுவடிவங்களாகுமோ அங்ஙனம்:—விருத்தியேகடபடாதி விடயமாப்பரிணமிக்கும்,—எ-து. சித்துசம்பந்தஞானமே சடசம்பந்தமாகின்று கடபடமுதலிய விடயங்களாகவிகாரப்படும்:—அருப்பலவிடயமெல்லா மாபாசன்றேற்றுவிக்கும்,—எ-து. அருமையானபலரூபமாகநின் றவ்விடயங்களனைத்தையுஞ் சிதாபாசனுகிறசீவன் தெரிவிப்பன்:—இருட்டினில விளக்குங்கண்ணு மில்லாமற்பொருள்காணுதே,—எ-து. இருட்டினுள்ளபொருள்கள் விளக்குங்கண்ணு மின்றியவிடத் தெங்ஙனங்காணப்படுங் காணப்படாவே,—எ-று.

பொருள்காணுதேயென்பது தொகையொருமை. முன்கவியிலொருமையாகக்கூறியவிருத்தியென்பது விரிவி லிக்கவியிற்பன்மையாதற்கே தென்னை கொலோ வின்றுதலி னுருமையாக்கினும். பரிணமித்த லதையன்றி யில்லை யெனத் திண்ணமாக்கற்குத் தேற்றேகாரங் கொடுத்தாமெனவறிக. என்னை, "சிற்சொருபந்தானே சகசொருபமென்றார்" சொரூபானந்ததேசிகர். ஏற்றற் றாலதன்றெனின், பொருளிடங்காலமயமன்றிச் சகத்துக்குத்தனியேசொரூபமென்னை ? இன்றெனின், தெரிவையன்றியிம் மூன்றையுங்காட்டவேண்டும். கூடாதெனின், தெரிவேயாதாரமாகவேண்டும். ஆதாரமாயினும், மூதற்காரணமென்னலாமாவெனின், தெரிவாக முடியாதவற்றைச்சோதனையில்! சுயம்பாகமுடித்துக்காட்டலாமே ? காட்டப்படாது சூனியமாகமுடிகின்றதெனின், அன்னியோன்னியாபாவத்தாலொன்றிலொன்றின்றுயழியும், அழியினும், அறிதலழியாமையாதலால், அந்தவறிவே யிங்ஙனந்தோன்று மென்றார். மறுப்பதென்னை. அறிவுக்குச்சகத்து சத்தாகக்காண்டலோ ? சத்தாகவெனின், அறிவினதுசத்தைத்தவிரச் சகத்துவேறு சத்தாகக்காணலாமே ? கூடாதெனின், மறுக்கற்க. எல்லாவிடயங்களையுஞ் சிதாபாசன்பலரூபமாகநின்று தெரிவித்தலினும். அனுபவித்தலினும் சிதாபாசனைப் பலமெனல்கூடும். கூடவே,

விருத்தி கண்ணும். பலம் விளக்குமென்றுயிற்று. ஆகவே, இவ்விரண்டி லொன் றில்லாவிடத் தோர்பொருளுங்காணுதாதலா லிரண்டுவேண்டுமெனப் பெற் றும். இதுபகலிலன்றதலினிருட்டினிலென்றார். அறிவுவிகாரியாதுநின்றதியின் திரிபுடிகாணுமா ? காணுமாயின், தனதுவிகாரம். பிம்பமெங்ஙனமோ அங்ங னம்பிரதிபிம்பமாதலின் மயக்கமென்னை. இன்னும், கட்டியவச்சுகளெவ் வெவ்விகாரமோ அவ்வவ்விகாரமாந் தராதரென வுவமைகூறியதும் பொருந் தும். இவையெல்லாந்தன்னைத்தான்விடாது சோதிப்பார்க்கேயன்றியேனையோ ர்க் கெங்ஙனமுண்மையாம். உரூக்கியதராதரர் கற்பிதவழிச்செல்லாதழித் திரி யுமா அதுபோல, அறிவுதனதுகற்பிதவழிச்செல்லாதழித் திரியுமா ? என்ப தற்கேயிவ்வுபமானமெனவறிக. பரிணமித்தல், பால்தயிராதல்போலும். இதனை நான்குதிருஷ்டாந்தத்தினுள் பரிணமதிருஷ்டாந்தமென்பர். இதுசத்தியம். சோ தனையிற்காணலாம்.

(க-து.) விருத்தி பலனெனவுருவகப்படுத்தக் கண்விளக்கென்றொன்பது. இதுமுன்மொழிந்ததோடலென்னுமுத்தி. (கஉ)

அ - ஈ க.

[கண்ணும் விளக்குமாகியவிவ்விரண்டும் வேண்டுமவசரமினையதெ னவும், இவற்றுளொன்று வேண்டுமவசரமினையதெனவுமுப மேயத்தோடிக்கவியிற் கூறுகின்றார்.]

13. எரிகின்ற விளக்காற் கண்ணு லிருட்பொருள் காணல் வேண்டுந்
தெரிகின்ற பரிதிகாணச் சென்றிடிற் கண்ணே போதும்
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்
புரிகின்றவிருத்தி யொன்றே போதுமெய்ப் பொருள்காண் போர்க்கே.

(இ-ள்.) எரிகின்றவிளக்காற்கண்ணு லிருட்பொருள்காணல்வேண்டும், — எ-து. எரிகின்றவிளக்கினாலும் கண்களாலு மிருட்டினுள்ளபொருளைக் காண வேண்டும்:-தெரிகின்றபரிதிகாணச்சென்றிடிற்கண்ணேபோதும், -எ-து. பிரத் தியட்சமாகக்காணப்படுகின்ற சூரியனைப்பார்க்கச் செல்லவேண்டில், கண் ணொன்றேபோதும்:— விரிகின்றசகத்தைக்காண விருத்தியும்பலமும்வேண் டும, — எ-து. எங்குமாவிரிந்திருக்கின்றசகத்தைக் காணவேண்டில், விருத்தி யும்பலமுமாகிய விவ்விரண்டும்வேண்டும்:— புரிகின்றவிருத்தியொன்றேபோது மெய்ப்பொருள்காண்போர்க்கே, — எ-து அகமாகப்புரிகின்ற விருத்தியொன் றுமே மெய்ப்பொருளைக்காண்போருக்குப்போதும் —எ-று.

எனவே, கற்பிதரகிதவறிவைவிருத்தியெனவும், கற்பிதசகிதவறிவைப்பல மெனவுங் கூறியதாகப்பெற்றும். பெறவே, ஓரறிவே யில்லதையுள்ளதாக நோக்கலிற்கற்பிதமெனவும், உள்ளதையுள்ளதாநோக்கலின். எதார்த்தமென வும்படுதலாலும், ஓரறிவேயீரறிவாக்காணப்படுதலாலும், சகத்தைக்காணவேண் டிலீரறிவும்வேண்டும். தன்னைத்தான்காணவேண்டி லெதார்த்தவறிவொன்று

மேபோதும். யாதினுலெனில், செகத்துகற்பிதவஸ்து அதனேயறிவது கற்பித வறிவாகவேண்டும். அவ்வறிவு எதார்த்தவறிவையன் றிவேறன்றுதலினிரண் டும்வேண்டும். தான் கற்பிதரகிதவஸ்து, தன்னேத்தான்காணவேண்டில் எதார்த் தவறிவாலன்றிக் கூடாது தான்கற்பிதரகிதமாகும்போது அறிவுங் கற்பித ரகிதமாகவேணடும். தன்னேத்தன்னு லறிவதன்றி வேறென்றுலன்றுதலின், பூரிகின்றவிருத்தியொன்றே போதுமெய்ப்பொருள் காண்போர்க்கேயென்றார். விளக்குங்கண்ணும்போலப் பலமும்விருத்தியுமெனக்கொள்க.

(க-து.) விளக்குங்கண்ணுமின்றியக்கண் ணிருட்பொருள்விளங்காமைபோ லப்,பலமும்விருத்தியுமின்றியக்கண் செகத்துவிளங்காது. சூரியனேக்காண்டற்கு விளக்குவேண்டாவாறுபோன்று, தன்னேக்காண்டற்குப் பலம்வேண்டுவதின் றென்பது. மெய்ப்பொருளேக்காணும்விருத்தியாவது; ஐயந்திரிபகலத்தெளிந்த ஞானம். இதனேயறியா ரபரஞானமென்பர். (கூ)

அ - கை.

[மனமாவதித்தகையதெனத்தெரிவித்து, அது வஸ்துவையெட்டு மெட்டாதென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

14 விருத்தியும் பலமுங் கூடும் விகாரமே மனமென் பார்கள்
கருத்தெழும் விருத்திவேண்டுங் கணக்கிலுன் மனதிற் கெட்டும்
வருத்திய பலமாமிந்த மனதிற்கெட்டாது கண்டா
யருத்தமிப் படியென்றைய மகன்று நீ தெளிந்திடாயே.

(இ-ள்.) விருத்தியும்பலமுங்கூடும் விகாரமேமனமென்பார்கள்,—எ-து, சித் தசம்பந்தமானவிருத்தியும், சடசம்பந்தமானபலமு மிசிரிம்பித்தவிகாரரூப மே மனமெனச் சத்துக்கள்சொல்லுவார்கள்:—கருத்தெழும்விருத்திவேண்டுங் கணக்கிலுன்மனதிற்கெட்டும்,—எ-து, அகமுகநாட்டக்கருத்திலெழும் விசார ஞானத்தெளிவுகாரணத்தா லந்தமனதிற்கப்பாவஸ்துவான தெட்டுமெனவும்:— வருத்திய பலமாமிந்த மனதிற்கெட் டாதுகண்டாய்,—எ-து யாவையும்வருத் துகின்ற பலமேவடிவாநின்றுள்ள விந்தமனதிற்கெட்டாதெனவுங்காணுதி:— அருத்தமிப்படியென்றைய மகன்றுநீதெளிந்திடாயே,—எ-து, மனதிற்கெட்டு மெட்டாதெனற்கருத்த மிங்ஙனமாமென்று சிந்தித்தையந்தவிர்ந்து நீ தெளிந் திடுக,—எ-று.

சிற்சடவடிவமனமெனற்கு, விருத்தியும் பலமுங்கூடும் விகாரமேமனமெ ன்பார்களெனவும், கருத்தாகவெழும் விருத்தியெனப்பதம்பிரித்து, இனிப்பகிர் முகமாகாதிருக்குது மென்றக்காையோடெழும் விருத்தி யெனப்பொருள்கொ ள்க. இஃதுரையிற்கோடலென்னுமுத்தி. இங்கேகணக்கென்றது விபரம் அல் லது காரணம்- விருத்திரூபமாயது சுத்தமனமெனவும், பலரூபமாயது அசுத் தமனமெனவும் பொருள்கொண்டெட்டுமெனவும், எட்டாதெனவுந், திண் ணம்பற்றிக்காணுதியென்பதைக் கண்டாயெனவுங்கூறினர். இங்கேயத்தமென் பது சாம்பராதாயப்பொருள். சித்தியாதழியைய மகறலுந்தெளிதலுங்கூடாமை

யால் சிந்தித்தென்வருவித்தாம். எங்கணும் பரிபூரணமாநிறைந்துள்ளது சை தன்யமாதலின் "உள்ளத்திருந்துமொளித்தான்பரனெனவும்," "பொன்னுல கத்தினிற் புவியிலந்தரத், தென்னுடையுட்புறத் திலங்குகின்றது, மன்னுசிற் சோதியே வடிவம்யாவுமாய்த், தன்னுவதெனவும்," "உலகெதுயாமாகொன் னவுற்றுநின்றுணருமட்டுங் கலகமார்பிறவிமோகங் கங்குல்போல் மூடிநிற்கும் அலகிலாவுலகும்யாமு மழிவிற்சிற்சோதியன்றே" வெனவுங்கூறினர் சான் றோர்பலரும். கழுத்தளவாநின்றுள்ளோ னிதுபாற்கடலென்றெண்ணுதுமறந்து ழித் தண்ணீரொங்கேயெங்கேயெனத் தாகமேலிட்டலைவான்போன்றுசித்தாயி ருந்தும் மனந்தவித்தலினெட்டாதெனவும், அங்ஙனம் பல்லூழிகாலமலைவான் தெய்வகதியாகக் கழுத்தளவாநின்றதைக்கண் டெளிதிற் பருகித்தணிப்பான் போன்று, இங்ஙனம்பல்லூழிகாலம் பற்பலகோடி சென்மமெடுத்தும் பற்பல வரியதவஞ்செய்து மெட்டவதியாதுதவித்து நின்றமனம் தெய்வகதியால் தனக் குள் பூரணமா நிறைந்துள்ள சிதாகாயத்தைக்கண்டெளிதி லுபசாந்தமெய்தலி னெட்டுமெனவுங்கூறுவது, கூடுமோ கூடாதோ? கூடாதெனின், இப்போ தவர்மனமு மல்லலகலாததா லெப்போதகலும் சுபாவமெனின், தினசுழுத்தி யிற் சுபாவமெங்கே. ஆதலினனவிற்சுழுத்தியென் றொன்றுளது, அது வாய்க்கி னல்லலென்று மசலும். கூடாதெனமறுத்தல் விசாரத்தவறு

(க-து.) மனதுக் கெட்டுமெட்டாதென லிங்ஙனமாய நிலையாலென்பது. சோதனைஞாயந்தெரியாதா ரிதனைமறுத்தல், தன்போல்வார்களிப்புக் கங்காந்து திரிதற்கென்க. அசுத்தம் பகிர்முகம். சுத்தம் அந்தர்முகம். என்றுரைகொள்க.

அ - கை

[இதுகாறு மனைவாக்குக்குப் பிரமமெட்டு மெட்டாதென்பதைப் பற்றி
விளங்கக்கூறினீர், இனிமனம்நிவாததீபம்போ லென்று மிருத்தற்
குபாயங் கூறவேண்டுமென்று மாணக்கன்வினவுதற்
குத்தாமிக்கவியிற் கூறுகின்றூர் வேறு.]

15. வஞ்சகமில் பரமார்த்த குருவே சொன்ன வழிகளறிந் தேனினி யோர் வசனங் கேளீர், சஞ்சலமற் றகண்ட பூரணமாய்ச் சித்தந்ததா காரமாவதன்றே சமாதியோக, முஞ்சலையொத் தலைவதுதன் சுபாவ மாகி யொருகணத்திற் பலவுலகா வுதிக்குமித்த, நெஞ்சகம்வஸ் துவி லைசையா கிவாத தீப நிலையடைவ தெப்படியோ நீர்சொல் வீரே.

(இ-ள்.) வஞ்சகமில்பரமார்த்தகுருவேசொன்ன வழிகளறிந்தேனினி யோர் வசனங்கேளீர்,—. களங்கரகிதமான பரமார்த்தகுருவே தேவீரனுக்கிரகித்த மார்க்கங்களேயெல்லாந் தெரிந்துகொண்டேன். இனியடியேனிரந்து கேட்டுக் கொள்ளும் விண்ணப்பமொன்றுளது அதனைக்கேட்டருளும்:— சஞ்சலமற்ற கண்டபூரணமாய்ச்சித்தந் ததாகாரமாவதன்றே சமாதியோகம்,—எ-து. மன மானது யாதோர்சலனமுமின்றி யகண்டபரிபூரணமாகவுந் தன்மயமாகவும் விளங்கலன்றே சமாதியோக மெனப்படுவது. (அங்ஙனமின்றி):-உஞ்சலை

யொத்தலேவது சன்சுபாவமாகி யொருகணத்திற் பலவுதிக்கும்,—எ-து. உஞ் சலேப்போலலேவது தனதுசுபாவமாகி யொருகணத்திற்பலவுலகாகப் பரிண மிக்கும்:—இந்த நெஞ்சகம் வஸ்துவிலசையா நிவாததீப நிலேயடைவதெப்படி. யோகீர்சொல்வீரே,—எ-து. இங்ஙனமாய மனமந்தப் பாவஸ்துவி லசையாமல் நிவாததீபம்போன்ற நிலேயினே யடைவதெங்ஙனமோ வதனேயடியேனுக்குத் தெரித்தருளும்,—எ-று,

கரவாமல்விளக்கியதால் வஞ்சகமிலெனவும், அநாசிரியரன்றெனற்குப் பா மார்த்தகுருவேயெனவுங் கூறினர். அசையாவென்பது, அடைவதென்னும் வினேகொண்டுமுடிவதுசிறப்பு. அசையாதவெனக்கடைக் குறையாக்கிப் பெய ரெச்சமாக்கினு மமையும்.

(க-து.) மனஞ் சற்றுஞ் சலியாநிலேயை யடையவேண்டினனென்பது. இவ்வேண்டுகோள் சகசநிட்டையில், இன்னுமிவன்பயிலாததாலென்க. உஞ் சலேயொத்தலேவது மனதின்சுபாவமாகில் மாற்றினுந்தன்னியல்பாமேயெனின், பற்றுக்களேயெல்லாஞ் சின்மாத்திரமாக்குமளவுமியல்பென்பம்' அப்பா லெங்ங னமாம். சிற்சடபேதந்தவிரின் மனமெனலேது. சிற்சடபேதங்கற்பிதமன்றிச் சைதன்யத்திலெங்கே அறிவு வுள்ளும்புறம்புமொருதகைத்தா விளங்காவரையு மிப்பேதமகலாது. இதனே யிருவகைச்சமாதியுழப்பாலன்றி யுணரவொண் ணாது. (கடு)

அ - கை.

[அவ்வினேவுக்கு விடை கூறுவான்வேண்டி மனதிற்குரிய மூக் குணத்தினிலேயினேயும், அவற்றாலாய பயனேயு மிக் கவியிற் கூறுகின்றார்,

16 கருதுமனே குணமூன்று மூன்றிலொன்று கதித்தெழுந்தான் மற்றிரண்டுங் கரந்துநிற்கும், தருமமிகு சத்துவ மேலானபோது சன் மார்க்க மானதெய்வ சம்பத் துண்டா, மருவுமிரா சதமாகி லுலக தேக வாதனேயாஞ் சாத்திர வாதனேயுமாகு, மருமகனே தாமதமே லானபோதி லசுரசம்பத் துண்டாகு மறிந்துகொள்ளே.

(இ-ள்.) கருதுமனேகுணமூன்று மூன்றிலொன்று கதித்தெழுந்தால் மற் றிரண்டுங் கரந்துநிற்கும்,—எ-து நினேத்தலேயே யில்பாகவுடைய மனமானது மூன்று குணமாயிருக்கும், அம்மூன்றில் யாதானுமோர்குணமேலிட்டெழின் மற்றிரண்டுகுணமு மறைந்திருக்கும்:—தருமமிகுசத்துவமேலானபோது சன் மார்க்கமான தெய்வசம்பத்துண்டாம்,—எ-து. சற்கருமத்தால் மிகுந்தசாத்து விதகுணமேலிட்ட வவசரத்தில் சன்மார்க்கமே வழிவாயுள்ள தேவசம்பத்து கிடைக்கும்:—மருவுமிராசதமாகிலுலகதேக வாதனேயாஞ் சாத்திரவாதனேயு மாகும்.—எ-து. அடுத் தராசதகுணமேலிட்ட வவசரத்தி லுலகவாசனேயுந் தேகவாசனேயுஞ் சாஸ்திரவாசனேயுமுண்டாம்:—அருமகனே தாமதமேலான

போதி லசுரசம்பத்தண்டாகு மறிந்துகொள்ளே, எ-து: எனதருமையான ஞான புத்திரா தாமதகுணமேலிட்ட வவசரத்தி லசுரசம்பத்துகிடைக்கு மிதனை யறிந்துகொள்ளுதி, — எ-று.

அந்தந்தகுண மேலிடலுக்கியைந்த பயனினையதெனவே, மனது மங்ஙன மாமென்பதுபெற்றும். குணமியைந்தவாறு மனமுநிற்பதால் மனோகுணமெ னப்பட்டது. ஒன்றுமேலுறிலிரண்டுகரந்துநிற்றலியல்பு அதுபோலப் பலனு மவ்வாறியைதலியல்பு. எங்ஙனமெனில், ஐம்பூதங்கட்குச்சனித்தலி சுபாவம்வெவ் வேறு, ஒன்றோடொன்று மிசிரிம்பித்தவிடத்திலுண்டாஞ் சுபாவம்வேறு; அவ் வவற்றிற்குரிய காரணங்களேயுன்னும்போது சுபாவமென்பது மாறும், இவை யெல்லாம் வஸ்துசோதனையாற் காணலாம். (கசு)

அ - கை.

[மனதுசத்துவாம்சமாதலா லந்நிலையில்மாறுதுநிற்கி னிர்வி
கற்பசமாதியெளிதிலெய்துமென்பதை யிக்கவி
யிற் கூறுகின்றார்.]

17. மனதுசத் துவசொரூப மற்றி ரண்டும் வந்துகலந் தனவவற் றைமாற்றி னற்போ, தனதுசன் மார்க்கம்விடா திருந்தபோது தாம தமு மிராசதமுஞ் சமிக்கும் பின்னெக், கனபரிணமஞ்சலனம்போம் போனக்காற் களங்கமற்று நின்றவா காயம்போலு, நினதுளமப்படி யாமப்பிரமத் தொன்றுய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே.

(இ-ள்.) மனதுசத்துவசொரூபமற்றிரண்டும் வந்து கலந்தன வவற்றை மாற்றினுற்போம், — எ-து. மனமென்பது சத்துவாம்சவடிவமாம், ஏனையராசத தாமதகுணமோ விடையில்வந்து கலந்தன, அவற்றை யொழிக்கி லொழிந்து போம் (எங்ஙனமெனில்,:—தனது சன்மார்க்கம்விடாதிருந்தபோது தாமதமு மிராசதமுஞ்சமிக்கும், — எ-து. சைதன்யத்தை யகலாநாட்டமுறலாகிய தனது சன்மார்க்கநடையைவிடா திருந்தபோது தாமதமு மிராசதமுந்தானே நசிக் கும்:—பின்னெக்கனபரிணமஞ் சலனம்போம் போனக்கால் களங்கமற்றுநின்ற வாகாயம்போல நினதுளமப்படியாம், — எ-து. நசித்தபின்னர் கனமாகப் பரிண மித்துக் காணப்படுந் திரிசியமும் போக்குவரத்துமுதலிய சகலவித கிர்த்தியங் களு மக்கணமே நீங்கும் நீங்கினவக்கணமே களங்கரகிதமான வாகாயமெங்ங னமோ அதுபோல வுமதுமனமு மங்ஙனமாம்; — அப்பிரமத்தொன்றுய் நிருவி கற்பசமாதியிலே நிற்குந்தானே, — எ-து ஆதலா லந்தப் பிரமத்தினிடத்தி னிர்வி கற்ப சமாதியி னினதுமன மசைவின்றி நிற்கும், — எ-று.

நிற்பிரகாசப் பிரதிபலனமே சாத்துவிதமாதலாலும், அந்தச்சாத்துவிதமே மனமாதலாலும், மனது சத்துவசொரூபமெனவும், அக்குணநெறித்தாநின்று ஏனையகுண மிரண்டையுந் தவிர்க்கத் தவிர்ந்துவிடும், அங்ஙனந் தவிர்ந்தென நில்லாது விடாதொளிரும் தனது சத்துவகுணத்தை யகலாதுநிற்கில் முன்னர்

தவிர்ந்தகுண மிரண்டுந் தாமேநாசமாமென்பதை விளக்க, மற்றிரண்டும்வந்து கலந்தன வவற்றைமாற்றினாற்போம் தனது சன்மார்க்கம் விடாதிருந்தபோது தாமதமுமிராசதமுஞ் சமிக்குமெனவும், வேனைய விரண்டுகுணமும் தனது சுய வடிவன்றெனக் காட்ட வந்து கலந்தனவெனவும், பரிணமம், பரிணமித்தல். அது பால்தயிராதல்போலும். இது திரிசியத்தைக்காட்ட நின்றது. இந்தத் திரிசியம், மகத்துக்கு மகத்தாகக்காண்டலிற் கனமெனவும், இக்குணத்தை யகலாத குணி திரிசியமாதலால், பரிணமமெனவும், பரிணமித்தல் பரிணமமாதலின், தொழிலாகுபெயர். சகந்தோற்றுந்தோறுஞ் சகல விவகாரங்கட்கு மிடமாதலின், சலனமெனவும், சகஞ் சின்மாத்திரமாக்கரைந்துழிச் சலனத்துக் கிடமின்மையின், பரிணமஞ் சலனம்போமெனவும், வேறுநிகழாமையின் போனக்காலெனவும், மழைகாலந் தவிர்ந்ததெனக்காட்டக் களங்கமற்றுநின்ற வாகாயம்போலவென்வும், மனஞ் சிதாகாயமாத்திரமா விளங்கலின், நினதுளமப்படியாமெனவும், அச் சிதாகாயத்துக்கு வேறுபடாமையின், அப்பிரமத் தொன்றுயெனவும், இங்ஙனநிற்குநிலைக்குப்பெயராதலின், நிருவிகற்பசமாதியெனவும், நித்தியதிருத்திக்கிதைவிடநிலைவேறின் றுதலின், நிற்குமெனவுங் கூறினார்.

(க-து.) மனோவமைதிக்கு, நிர்விகற்பசமாதியெனக்காட்ட வதினிலையினையதெனக் கூறியதென்பது. உபநிடதநெறித்தாச்சென்றோர்க்கன்றி யிந்நிலை சற்றுமையையாது, இயைந்ததபோற்காணினு மிடையினழுவும். இதனை யுய்த்துணர்ந்துகொள்க. இஃதுபநிடதநெறித்தாதலின் விடாதமுயலுக. முயலாவிடில், உபநிடதமேற்பழி யுன்னுல்வரும், இது சத்தியம். (கஎ)

அ - கை.

[பிரமம்போனதுள்ளமுங் களங்கரகிதமாகாவிடத்துப் பயனின்றென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

18. களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும்போது, விளங்கிய தன்மயமாகி யபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்பமானாற் போல, வளந்தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச் சித்தா யானந்த மாம்பிரமத் தயிக்கியமான, வுளந்தெளிந்தபடியிருந்தா லுலகமெங்கே யுலவெங்கே யென்றுசங்கை யொழித்திடாயே.

(இ-ள்.) களங்கமற்றகண்ணாடி தன்முன்வேறோர் களங்கமற்றகண்ணாடி காட்டும்போது.—எ-து களங்கரகிதமான கண்ணாடியானது தனக்குமுன் வேறோர் களங்கரகிதமானகண்ணாடியைக் காட்டியவிடத்து:—விளங்கியதன்மயமாகியபேதமாகி விகற்பமின்றி நிருவிகற்பமானாற்போல,—எ-து. களிம்பின்றி விளங்கிய தானெங்ஙனமோ வங்ஙனமாகி யாதோர் விகற்பமுமின்றிப் பேதப்படாது நிர்விகற்பமாகிநின்றாற்போல:—அளந்தறியப்படா விபுவாய்ச் சத்தாய்ச் சித்தா யானந்தமாம்பிரமத் தைக்கியமான,—எ-து. இவ்வள வளவினதென் றளவைகளாலளந்தறியப்படாததாயும், விபுவாயும், சத்தாயும், சித்தாயும், ஆனந்தமாயுமிலங்கும் பிரமத்தினிடத்தி லைக்கியமான:—உளந்தெளிந்தபடியிருந்தா

லுலகமெங்கே யுலேவெங்கேயென்று சங்கையொழித்திடாயே,—எ-து. மனந் தெளிந்ததெங்ஙனமோ வங்ஙன்பிருந்தால் உலகமென்பதெங்கே, அதுபற்றியுண்டாஞ் சகலபிரவிர்த்தி நிவிர்த்திகளுமெங்கே, யில்லேயே யாதலா லுலகையு மூலேவையு மொழித்தலெங்ஙனமெனக் கேட்குஞ்சங்கைகள் யாதுக் கதனை யொழித்திடுதி,—எ-று.

மனதைக் களங்கமற்றகண்ணுடியாக்கியது, ஐயந்திரிபகலவேண்டுவதைப் பற்றி. இன்றேல், ஐக்கியம்போல்வதன்றி யைக்கியமன்று. பிரமங்களங்கமற்ற கண்ணுடிபோல்வதால் மனமு மங்ஙனமிருக்கவேண்டுமென்பது பற்றி யிவ்வுவமைகூறியதென்க மனந்தெளியின் தானப்போதளந்தறியப்படாவிபுவாய்ச் சத்தாய்ச்சித்தா யானந்தமாநிற்குமெனக் குறிக்கவிவற்றைப் பிரமவிலக்கணமாகக் கூறியது. இஃதெடுத்துக்காட்டுவமை. மனஞ்சித்தின்முயல்வால் சித்தாகுஞ் சடத்தின்முயல்வால் சடமாகு மென்பதொக்கும். ஆகலிற் சிற்சடமெனப்பட்டது. எங்கேயென்பது, உளதோவெனப்பொருடராநின்றது. இல்லேயேயாதலா லுலகையு மூலேவையுமொழித்த லெங்ஙனமெனவருவித்தது, இசையெச்சம். அதாவது ; நால்வகைச்சொற்களுள் வேண்டுவனவெல்லாந் தந்தகலங்கூற்வேண்டிநிற்பது. உதாரணம். ''இணரெரிதோய்வன்ன வின்ஞசெயினும் புணரின் வெகுளாமைநன்று.'' என்றார் திருவள்ளுவர். கேட்குமென்பது, ஒழியிசை.

(க-து.) உள்ளந்தெளிந்தவண்ணநிற்கில் எல்லாச்சங்கையுந் தாமேயகலு மென்பது, விஞவலெற்றிற்கு. (கஅ)

அ - கை.

[மனமிறக்கி லின்றியமையாச்செயல்க ளெங்ஙனமாமென மாணுக்கன் விஞவலே யிக்கவியிற் கூறுகின்றார்.]

19. ஏகமாய் மனமிறந்தாற் சீவன் மூத்த ரிருக்குமட்டும் பிராரத் வமெதினு லுண்பார், போகமா னதுபுசித்துத் தொலேப்ப தன்றே புசித்தாலு மனந்தானும் போன தன்றே, சோகமா மனமிறந்தாற் போக மிலேலே தோன்றுமெனின் மூத்தரென்று சொலக்கூடாதே, மோகமா மிதுதெளியக் குருவே நன்றாய் மொழிந்தருள வேண்டு மென்றான் முழுது மானேன்.

(இ-ள்.) ஏகமாய்மனமிறந்தாற் சீவன்மூத்த ரிருக்குமட்டும் பிராரத்வமெதினுலுண்பார்,—எ-து. பிரமத்தோடொன்றுக மலேலயமாயின் சீவன்முத்தர்கள் தாமுயிர்த்திருக்குமட்டுந் தமதுபிராரத்வத்தை யெங்ஙனம் யாதினுலனுபவிப்பர்:—போகமானது புசித்துத் தொலேப்பதன்றே,—எ-து. பிராரத்வபோகத்தை யனுபவித்துத்தொலேத்தாலன்றிப் போகுமோபோகாது:—புசித்தாலு மனந்தானும்போனதன்றே,—எ-து. புசித்துத் தான்தொலேக்கவேண்டும், அங்ஙனம்புசித்தாலு மனமுமிறந்ததோ விறக்கவில்லேயே:—சோகமாமனமிறந்தாற் போகமெங்கே —எ-து. போகத்தையே சோகமாகவுடைய மனமிறக்குமாயின், எங்ஙனம் போகநுகர்தல்:—தோன்றுமெனின் மூத்தரெனச்சொலக்கூடாதே,—எ-து. போகநுகரவேண்டி மனமெழுமாயின், அவரைச் சீவன்மூத்தரெனச்சொ

ல்வசெங்ஙனம்:—மோகமாமிதுதெளியக் குருவோன்றுய் மொழிந்தருளவேண் டுமென்றன் முழுதுமாலேன்,—எ-து.குருநாதனே மயக்கமாயுள்ள விச்சந்தே கந்தெளிவுபெறச் செவ்விதாத்தெரித்தருள வேண்டுமென்றிரந்துகேட்டனன் சமஸ்தமும் ஞானவிளங்கியமாணாக்கன்,—எ-று.

(க-து.) இவ்வைந்துவிதமாகத் தோற்றுமையந் தொலைப்பதெங்ஙனமென குருவைமாணாக்கன் வினவினனென்பது. (ஙக)

அ - கை.

[இவற்றிற் குத்தரங்கூறுவான்வேண்டி மனோநாசமிருவகை யாமென விக்கவியிற் கூறுகின்றார்.]

20. மனநாசஞ் சொரூப மென்று மரூபமென்றும் வகுத்துரைப் பாரிருவகையா வருமிவற்றில், வினவாத சீவன்முத்தரிடத்திலொன் றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவு மைந்தா, தனதான சத்து வமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ரா சதநசித்தல் சொரூப நாச, மன நாசத் துவந்தானு மிலிங்க தேக மடங்கும்போ தடங்குவதே யரூப நாசம்.

(இ-ள்.) மனநாசஞ் சொரூபமென்றும் மரூபமென்றும் வகுத்துரைப்பா ரிருவகையா வருமிவற்றில்,—எ-து. மனோநாசத்தைச் சொரூபநாசமெனவும் அரூபநாசமெனவு மிருவகையாக வகுத்துச்சொல்லுவர்பெரியர், இங்ஙன மிரு வகையாக வழங்கிவருமிவற்றினுள்:—வினவாத சீவன்முத்தரிடத்திலொன் றும் விதேகமுத்தரிடத்திலொன்று மேவுமைந்தா,—எ-து. ஞானபுத்திரா வினவுதல் வேண்டாத சீவன்முத்தரிடத்திலொன்றும், விதேகமுத்தரிடத்திலொன்றுமிருக் கும்:—தனதானசத்துவமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ராசதநசித்தல் சொரூப நாசம்,—எ-து தனது சுயரூபமான சாத்துவிசகுணமாக மனமேலிடில் தாமத குணமும் ராசதகுணமுந் தாமேநாசமாம், அங்ஙனநாசமாதலே சொரூபநாச மும்:—அனசா சத்துவந்தானு மிலிங்கதேக மடங்கும்போ தடங்குவதேயரூப நாசம்,—எ-து. மலரகிதமானவனே யந்தச்சாத்துவிசகுணமோ வதுவுஞ் சூக் குமசரீரநசிக்கும்போ தொக்கநசிக்கும், அங்ஙனமொக்க நசித்தலே யரூபநாசமு மாம்,எ-று.

சங்கைதவிர்ந்தவராதலின். வினவாத சீவன்முத்தரெனவும், சேடித்தெ னப்பாடமோதில் காலவழு-என்னை, "மூதலினன்குமென்னுஞ்" சூத்திரவிதி யாலென்றார் பவணந்தி சொப்பிரகாசமேலீட்டில் சமஸ்தவிகாரகுணங்களு நில்லாவாதலின், தனதானசத்துவமாய் மனஞ்சேடிக்கத் தாமதம்ராசதநசித்த லெனவும், சூக்குமதேகநாசத்தைப்பற்றிச் சொப்பிரகாசமேலீட்டாதலா லதனை டொக்க நசித்தல்கூடுமென்பார், சத்துவந்தானு மிலிங்கதேகமடங்கும்போ தடங் குமெனவுங்கூறினர். இசலுல், மனமெனல் ; ரூபாரூபமெனப்பெற்றும். ரூப மெனல், செகசீவபரம் ; அரூபமெனல் அசன்வாசனை மனோநாசம்வேண்டின், ரூபாரூபநாசம்வேண்டும் இன்றேல், ஆகா. (சின்மாத்திரமாக்கரைத்தல்) ரூபநா

சம். அதுவுமெல்லமெல்லவூர்த்தமூகமாக நழுவல், அரூபநாசம். எனவே சைதன்யத்தின்ஸ்புரிப்பே மனமெனப்பெற்றும். பெறவே சித்துசடமும், ரூபாரூபமும், ஸ்புரிப்பையன்றியின்றுதலின், மனேநிலையெனக்கண்டாம். காணவே அரூபத்தைப்பாழெனல, குற்றம். அன்றேல், அந்தப்பாழையறியுந் தானென லின்றே ? உளதெனில், அது, பாழுமன்று, நாமரூபமுமன்று ஞானமுமன்று அஞ்ஞானமுமன்றென்பதாயிற்று. இதனை யிவ்வாறென்றறியாதார் கண்டபடியுரையிடினுமோ ? ஆமெனின், யுத்திக்குமுரணும், முரணின், அனுபவமுமுரணும், முரணின் மூன்போற்பெத்தநிலையாம். இப்பேதமைக்கு ஞானநூல் முற்றுமுணர்ந்து மோதியும்பயனென், என்னை, 'புராணமிதிகாசமெவையுங் கலையனைத்தும் பிராணனறியாதுள விடத்திவை பிதற்றேயென்றார்'' தத்துவாயர்.மேல்காரணதேகநாசங்கூறுது சூக்குமதேகநாசங்கூறியது, ஐயந்திரிபுக்குவினைமுதன சிக்கில்தானே யவித்தையழியுமெனக் கூறவேண்டுமோ, என்பதுபற்றியென்க.இதனை லட்சியார்த்தத்தாலன்றி வாச்சியார்த்தத்தா லெங்ஙனங்கணிப்பது. கூடாதிருக்கப் பதவுரையாற் கணிக்கப்புகுவார் மிக்கவிவேகியர்போலும், அவர்சாம்பரதாயமுமங்ஙனம்போலும், தற்கண்டார்க்கென்னை முடியும். ஆதலின், புகழுக்கும், அபினி, கஞசா, மூதலியபோதைக்கும், கள்ளமங்கையர் போகத்துக்கும் விழைந்தலைகின்றனர். கள்ளங்கடந்தஞானிய ரெங்ஙனுமரியர், இதுநிற்க. இங்ஙனமாய விவ்விரண்டுமுத்திமேற் பழுதுரைப்பாருளரேல், அவர் எத்தேகமாயினும், எப்போகமாயினும், ஆன்மாவெனவும், முத்தியெனவுங் கொள்வார்போலும் தேகமும்போகமுந்தனக் கன்னியமெனத் தெளிந்தனரோ, தெளியாதாரோ ? தெளிந்தனரெனின், லட்சியார்த்தமுகர்ந்தனரன்றே. இவர் கட்சியை யெங்ஙணுங் கடைப்பிடியற்க.

(க-து.) மனேநாசம்வேண்டின் ரூபாரூபநாசம்வேண்டுமென்பது. (20)

அ - கை.

[சீவன்முத்தருருவநாசமனதினாசலினுலும், அதனுலெவற்றையும்பற்றின்றி யனுபவிக்கக்கூடுமாதலானு மிங்ஙனங்கூடுமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்]

21. சுத்தமாஞ் சத்துவமே யுண்மையாகுந் துகளிருள்போ னன்மனமென் சொல்லும் போம்போம், வர்த்தமானத்தில்வந்த வுணர்வையுண்பார் வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார், கர்த்தாவா மகங்தையைவிட்டகர்த்தராகிக்கரணவிருத் திகளவத்தைகாண்பா ராகி, முத்தரா யிருக்கலுமாம புசிப்புங கூடி முட்டிலையென்றறிந்தசங்கை மோசிப் பாயே.

(இ-ள்.) சுத்தமாஞ்சத்துவமேயுண்மையாகுந் துகளிருள்போலுல் மனமென்சொல்லும்போம்போம், எ-து. சுத்தமாயுளன்சாத்துவிதகுணமே மெய்யுணர்வாம், இம்மெய்யுணர்வே பழுதின்றி யெங்கணு மொருதகைத்தாவிளங்குஞ் சொப்பிரகாசமாம் இச்சொப்பிரகாசமேலீட்டில், ராசத, தாமதமென்னுங் குணங்களிருளாம். இவ்விருளெங்ஙனமகலுதுநிற்கும், அகலுமாயின்.மனமென்

பதும் எங்ஙனநிற்கும், நில்லாதாயின், மனமென்னுஞ்சொல்லு மெங்ஙனமக லாதுநிற்கும், அகன்றேவிடும் : — (ஆகலின்) வர்த்தமானத்தில் வந்த வுண வையுண்பார் வருவதும்போவதுநினைந்து மகிழார்வாடார், எ-து. நிகழ்காலமா கியவிப்போது கிடைத்தவுணவுபாதோ அதனையுண்பார்கள், இனிவருவதைப்பற் றியும் வந்துபோவதைப்பற்றியும் நினைக்கமாட்டார்கள் நினைத்துச்சுகத்தால் சந் தோஷித்தலும் இடுக்கத்தால் துக்கித்தலுங்கொள்ளார்கள்:—கர்த்தாவாமகந்தை யை விட்டகர்த்தராகிக் காணவிருத்திகளவத்தை காண்பாராகி, எ-து. கர்த்தத் துவமாகின்றுள்ளயானென தென்னுமகம்பாவத்தை யொருங்கேவிட்டு அவ்வக ந்தைசிறிதுமிலராகியும் அகக்கரண புறக்கரணவிருத்திகளையும் மூன்றவஸ்தாச் சுழலினையுங்காண்பவராகியும்:—முத்தராயிருக்கலுமாம்புசிப்புங்கூடி முட்டி லையென்றறிந்து சங்கைமோசிப்பாயே, எ-து. சீவன்முத்தராகியு மிருக்கவுங் கூடும் சகலபோகமுநுகரவுங்கூடும் இவற்றிற்கெல்லாம் யாதோர்தடையுமின் றென்றுணர்ந்து இதுபற்றியினிவினவப் புகுதலையொழிதி, எ-று.

சாத்துவிதத்தைச் சுத்தமெனவு மூண்மையெனவுங்கூறியதா லேனையகு ணமிரண்டையு மசுத்தமெனவும் மித்தையெனவுங் கொண்டாம், இருளபோல் பவைகளையிருளென்றதுஉவமையாகுபெயர். இவ்விரண்டையுமிருளென்றதனால் ஏனையொன்றும் பிரகாசமெனப்பெற்றாம். கர்த்தராமகந்தையெனின் தினைவழு வாதலின் கர்த்தாவாமகந்தையென்றாம். எதுகைபற்றி யெனின்முதலடியிரண டாமடிக்கென்செய்தும். அகர்த்தராகியென்றதனால்சைதன்யத்தையானெனவும் பொதுப்படக்கரண மென்றதனால் அகக்கரணம்புறக்கரணமெனவும், அவத்தை யென்றதனால் மூன்றவத்தையெனவுங்கொண்டாம். ரகரவொற்றெதுகையா செதுகை.

(க-து) மனது விஸ்மரணையாகின்று சகலவிவகாரங்களையும் வழுவாதந டத்தும்போதும் தஸ்மரணையாகின்று நடத்தும்போது தமஸ்மரணையாகின்று நடத்துவதற்குத்தடையென்னை. மூடஞானக்கிரியையினும் கல்விஞானக்கிரியை சிறந்ததா, அதனினுந் தத்துவஞானக்கிரியைசிறந்ததன்றே? ஆதலால் மனத்தால னுபவித்தல்கூடுமென்பது. எனவே, எல்லாமாயல்லவுமாயிருப்பதனது நிலை யாயினும் நடுநிலையாகின்றெவற்றையுமனமியற்றுமென்க: இதனினுமிக்கதெளி வோடுநின்றியற்றல் யாதுமின் றெனவுணர்க பிரவிர்த்திநிவிர்த்திகளை விருத்தி யென்றாரெனக்கொண்டு காண்பாரென்றுரைக்கினுமமையும் அனுபவிமுன்னி லையிலிதுதெரியும். (உக)

அ - கை.

[விவகாரங்கள்மனவலிவுக்கிடமாதலின் கூடாதென்ற மாணாக்கற்குத் திருஷ்டாந்தபூர்வமாக ஆசிரிய ரிக்கவியில் விடைகூறுகின்றார்.]

22. விவகார வேளையெல்லாஞ் சமாதி யென்றல் விகற்பமன்றே மனமலக்கு விடாதேர் விட்டா, லவதான மழுவுமன்றே வென்றுயா கிலதற்கொருதிட்டாந்தங்கேளாசை கொணர்ந், நவமரகப் பரபுருடன்

றன்னைக் கூடி நயந்துசுக மனுபவித்தநாரி நெஞ்சம், தவமான மனைத் தொழில்கள் செய்யும போதுந் தழுவியனு பவித்தசுகந்தனைவிடாதே.

(இ-ள்-) விவகாரவேளையெல்லாஞ்சமாதியென்றல், விகற்பமன்றேமன மலைந்துவிடாதோவிட்டா, லவதானநழுவுமன்றேவென்றுயாகில் எ து, விவ கரிக்குங்காலமெல்லாஞ் சமாதிசெய்தலெனத்தேவரீர்கூறின் பலவாகச்சிதையு மல்லவோ பலவாகச்சிதையின் மனமலைந்துவிடாதோ அங்ஙன மலைந்துவிடு மாயின் உண்மைஞானநழுவுமல்லவா இதனுக்கென்செய்துமெனச்சங்கிப்பை யாயின்:—அதற்கொருதிட்டாந்தங்கேளாசைகொண்டு நவமாகப்பரபுருடன்றன் னைக்கூடி,—எ-து. நீவிஞ்வியதற்காக வோர்திருட்டாந்தமூளதாயானைக்கூறக் கேளுந்தி மிக்கவாசைகொண்டு புதிதாகவோர்சோரநாயகனைக்கூடி: நயந்துசுக மனுபவித்தநாரிநெஞ்சம்,—எ-து. மிகவும் விருப்பமுற்றுச்சுகத்தை யனுபவித்த வோர்ஸ்திரீயின்மனமானது—தவமானமனைத்தொழில்கள்செய்யும்போதுந் தழு வியனுபவித்தசுகந்தனைவிடாதே,—எ-து நோன்புவழுவாதியற்றற்குரிய வில்லற மார்க்கத்தொழிலகளைக் செய்கிறபோதும் கள்ளநாயகனைத்தழுவியனுபவித்த மிக்கசுகப்பெருக்கைவிடுமா விடாதே. அதுபோன்றிருக்கும், —எ-று.

விகற்பம் - விடயம்பலவாகச்சிதைதல் அவதானம் பேரின்பமெனினும்மை யும். பரபுருடனென்றதனாற்சோரஸ்திரீயென்பதுதானேயமைதலின், நாரியென் பதற்குவிசேடமெற்றிற்கு. விதிவழுவாதியற்றுமனைத் தொழிலெனினுமமை யும். எனவே, அவள் பலதொழில்புரியினு மப்போதெல்லாஞ்சோரவின்பழு வாததுபோலப் பேரின்பழுவாதென்க. இவளெய்தியபயன்சுகமாதல்போல நிட் டையாலெய்தியபயனுஞ்சுகமாம். இவள்பலதொழிலாற்பிரியினுமிவளிச்சுகம்வி டாததுபோலச் சான்றோர்பலதொழிலாற்பிரியினு மவரைச்சுகம்விடாததுபற்றி யிவ்வுவமைகூறினர். இதுகூடாதெனின், அதுவுங்கூடாதென்பம். சோரவின்ப மிவளைவிடாததுபிரத்தியட்சமெனின் அவரையதுவிடாததும்பிரத்தியட்சமென் பமே. பருவமிலலாதழலு மங்கைக்கதுதெரியாததுபோல, பரிபாகமில்லாதழலு வோர்க் கிஃதெங்ஙனந் தெரியும், தெரியாததாலதுபொய்யோ ; அன்றேல், இது வும்பொய்யன்று. விவகாரத்தாலிவளுக்கு மனம்பேதிக்கினுஞ் சுகம்பேதித் ததோ ? இன்றெனின், அவருக்கு மங்ஙனமாமெனவறிக. இந்தச்சுகமிவள்போன் றவளுக்குத்தெரியுமாறுபோன்று, அந்தச்சுகமு மவர்போன்றவர்க்குத்தெரியும் என்னை, ‘ பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம பிள்ளைப் பெறாப்பேதையதிவா ளோபேரானந்த, மூற்றவர்க்கேதெரியும’’ என்றார் தாயுமானார். இதனைமறுப் பார்போலிஞானியருமடாஞானியருமெனவறிக. இதுகுறிஞானமன்று, எதார்த் தஞானம். எதார்த்தஞானம், குறியாலன்றிச்சுயமாவிளங்கல்.

(உ-து.) பலவிவகாரத்தினுஞ் சுகபோத நழுவாதென்பது. ஆதலின் விவ காரவேளையெல்லாஞ் சமாதியென்பது பொருந்தும். (உஉ)

[சீவன்முத்தர்களகர்த்தாவெனின் போகநுகர்த்தலெங்ஙனமென்றசங் கைக்குத்தரங்கூறுவான்வேண்டிச் சத்துக்கள்மூன்றுவித மாவதையும், அவர்நிலமகிமையையு மிக்கவி யிற் கூறுகின்றார்]

23. தேகத்தனலனுகியகர்த்தனுகிச் சீவனன்றிப் பிரமமாய்த் தெளிந்த முத்தன், போகத்தை யுண்பனென்றுற் கர்த்தா வாமே பூரணமாமகர்த்தனுக்குப் போக முண்டோ, சோகத்தை யறுத்தரு ளுங்குருவே யிந்தத் துகளறுக்க வேண்டுமெனச் சொல்வையாயின், மாகர்த்தன் மாபோகி மாதியாகி வகைமூன்று யவரிருக்கு மகிமை கேளாய்.

(இ-ள்.) தேகத்தனலனுகியகர்த்தனுகிச் சீவனன்றிப் பிரமமாய்த்தெளிந்த முத்தன், —எ-து பிரக்ஞானமன்றித் தேகந்தானல்லாதவனுகியும், மறந்துந்தே கந்தானெனக்கோடலின்மையினகர்த்தனுகியும், சீவத்துவமன்றிப் பிரமமேதா னுகியும் தெளிந்த சீவன்முத்தனென்போன்:— போகத்தையுண்பனென்றுற் கர்த்தாவாமே பூரணமாமகர்த்தனுக்குப் போதமுண்டோ,— எ-து. விடயபோக மனுபவிப்பனெனில், தேகந்தானென்கிறகர்த்தத்துவம்வாய்ப்பதாமே. பூரண னெனில், பூரணமாமகர்த்தாவுக் கனுபவித்தலில்லாவிடத்துப் போகமெங்ஙன முண்டு. இல்லையே:—சோகத்தையறுத்தருளுங் குருவேயிந்தத் துகளறுக்க வேண்டுமெனச்சொல்வையாகின்:—எ-து. அடியேன் துயரமனைத்துந்தொலைத் தருளிய குருநாதனே, இங்ஙனமாகவெழுந்தி விந்தச்சந்தேகமாகிற களங்கத்தை நீக்கியருளவேண்டுமெனக் கேட்பையாயின்:—மாகர்த்தன் மாபோகிமாதியாகி வகைமூன்றுயவரிருக்குமகிமைகேளாய்,—எ-து. மாகர்த்தனெனவும், மாபோ கியெனவும், மாதியாகியெனவு மூன்றுவகையாயவரிருக்குமகிமையைக் கூறு தும் நீகேளுகி,—எ-று.

தேகமிருந்துமிதுபூதவிகாரந் தானல்லவெனத்தெளிதலின், தேகத்தனலனு கியெனவும், இவ்வுடலிருப்பும், அபிமானித்தலும் காத்தலும், உபசரித்தலும், இதுதானெனக்கோடலும், இதனதுபூரிப்புவாடலுக் கின்பதுன்பமெய்தலும், இன்னுமிவைபோன்றபிறவுமாதலும், அறிவாதலா லறிவேதானெனக்கண்டா ரிவ்வுடல்தானென்பரோ என்னர். ஆகலின் அகர்த்தனுகியெனவும், அறிவுதா னென்றுயபோது கூடஸ்தனென்பதாயிற்று ; ஆகவே சீவனுயிருந்துஞ் சீவனல் லன், உடலாகாரந்தவிர்ந்துவருதலின் சீவன்றியெனவும், உடலுமுயிருமின் னுமேவறுபடுதலின்மையின், சீவன்றியெனப் பாடமோதி யுரைகோடல் கூடாது. கூடுமெனின், மகானெனப்படாது, படுதலின், அதுவழு. சீவத்துவ நழுவியக்கண் ணீசத்துவமெங்கே, ஒருவனுக்கின்றியக்கண் பலருக்குமின்றே, பலருக்கு மிவ்வனுபவமொருங்குவாய்க்கின் பலருக்குமெங்கே ? ஆயின் சீவத்து வங்காரணமாக வீசத்துவமென்பதருத்தாபத்தியாற் கோடலாகின்றதே யீதென் னைகொலோ விபரீதமென்னற்க. எங்கெங்கே சீவத்துவபாவமுண்டோ. அங்கங் கேயீசத்துவபாவமுண்டு. இன்றேலதுவுமின்றும். இதிலென்னவையமுள. இன் றுதலாலதுபொருந்தும் சீவத்துவநழுவியக்கண் கூடஸ்தனுமெனல்வழுவன்றே வழுவெனில் கூறியது கூறலென்னுங்குற்றமாம். வழுவன்றெனின், ஈசத்துவ நழுவியக்கண் பிரமஸ்வரூபமாவனென்ப தெங்ஙனம்றுக்கப்படும் படாதாத லின், பிரமமாயெனவும், சுருதியுத்தியனுபவத்தாலன்றி யையந்திரிபற்று அறுமெனின் வறியசொல். மூன்றுமொக்கத் தேர்ந்தவிடத்தேவிபரீதம்றும்,

அறுதலேதெளிவாம். அன்றேல், மருளாம். சீவன்முத்தனெனற்பாலதுதெளிவாதலால், தெளிந்தமுத்தனெனவுங் கூறினர்.

(க-து.) சீவன்முத்தர் போகமனுபவிக்கக்கூடுமெனற்கு விடைகூறுவான் வேண்டி விரதத்திரயந்தொகுத்துக்கூறினரென்பது. இது தொகுத்துச் சுட்டலென்னுமுத்தி. இனி வகுத்துக்காட்டலென்பதனாலவற்றைத் தனித்தனிக்கூறுதும், மாகர்த்தன்முதலிய மூன்றுமாரியமாதலின் மிகாவாம். (உங)

அ - கை.

[முன்னர்கூறியமுறையே மாகர்த்தனிலக்கணமினையதென விக்கவியிற் கூறுகின்றார்.]

24. செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச் சிலைமலை முன்னிரும்புகள்சேட் டிக்கு மாபோற், செய்கையுஞ்செய் விக்கையு மற்றிருக்கு மென்மூன் செடமான வுலகமெலாஞ் சேட்டைசெய்யு, மெய்கலந்த விந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும் விருத்தி தானு, மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யேயான் வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன்.

(இ-ள்.) செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குங்காந்தச் சிலைமலைமுன்னிரும்புகள்சேட்டிக்குமாபோல்,—எ-து. தன்வினையாகிய செய்கையும், பிறவினையாகிய செய்விக்கையுமின்றிச் சும்மாவிருக்குங்காந்தக்கற்களாலமைந்தபர்வதத்துக்கெதிரில், இரும்புகளெங்ஙனமசையுமோவதுபோல:— செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்குமென்மூன் செடமானவுலகமெலாஞ் சேட்டைசெய்யும்,—எ - து. செய்கையுஞ்செய்விக்கையுமின்றிச் சும்மாவிருக்கின்றவெனக்கெதிரில் சடரூபமாயுள்ளசெங்களனைத்தும் பற்பலகிரியைகளைச் செய்யாநிற்கும்:—மெய்கலந்தவிந்திரிய விகாரரூபவிவகாரவிருத்திக்கும் விருத்திதானு மெய்கலந்தசமாதிக்கும்.—எ-து. தேகசம் பந்தமானஞானேந்திரியசன்மேந்திரிய காரணமாகநிகழும் பற்பலவிகற்பரூபமாயுள்ள விவகாரச்சேட்டைகட்கும், சகலவிருத்திகளுந்தானுவிளங்கிய வாத்மசம்பந்தமாக நிகழுஞ் சொரூபசமாதிக்கும்:—சாட்சியேயான்வெயில்போலென் றுறைத்தவனே விபுமாகர்த்தன்,—எ-து தன்முன்சகலவுயிர்களும் பற்பலகிரியைகளியற்றற்குச் சாட்சியாகின்றுள்ளசூரியனைப்போல நானேசாட்சியெனத்திரமாகக்கலங்காதுநின்றுனெவனே வவனேவிபுவனைத்நிற்கும் விபுவாயுள்ளமாகர்த்தனெனப்படுவோன்,எ-று.

செய்கையுஞ்செய்விக்கையுமாவது ; அசைத்தலையு மசைப்பித்தலையுமெனக்கொள்க. காந்தமலையானது அசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க, இதினெதிரிலிரும்புகளசையுமாறுபோல; உபாதிரகிதமாகவிளங்குநானசைக்கவுமில்லை யசைப்பிக்கவுமில்லை யிங்ஙனமிருக்க, எனக்கெதிரில் சமஸ்தவுலகமுமசையுமாதலால், என்மூன்னுலகமெலாஞ்சேட்டை செய்யுமெனவும், சகலவுயிர்களுந் தத்தங்கிரியைகளியற்றற்குச் சாட்சியாகின்றுளோன் சூரியனதல்போல, அநாத்மவிவகாரம் ஆத்மவிவகாரமெனவிரண்டாம். அநாத்ம

விவகாரம்; தேகாகாரமாகவகக்காண புறக்காணங்களோடுகூடி யியற்றுங்கிரி யை. ஆக்டவிவகாரம்; மெய்யுணர்வுசம்பந்தமாகக விவேகாகாரமாகக் காணசம் பந்தமின்றிகின்றியற்றுங்கிரியை. அந்தக்கிரியை மூடமெனவும், இந்தக்கிரியை சமாதியெனவுமாம். இவ்விருவகைக் கிரியையு மென்னலியற்றப்படினுநா னன்று. அஞ்ஞானமாகின்றக்கிரியையுபுரிந்தமாநானே. ஞானமாகின்றி கிரியை புரிந்தமாநானே. ஆயினும், இவ்விரண்டுகாலத்தும் நானென்னலிருத்தலானும, இவ்விரண்டு மொன்றிலொன்றில்லாதகானும் நானெனலேயுண்மை, நானே சாட்சி என்பதுபற்றி மெய்கலந்தவிருத்திக்கும் மெய்காலந்தசமாதிக்குஞ் சாட் சியாகவுகின்றமைகாண்க. விருத்திசாஞ்மென்றதனால், அறிவையன்றிச்சகலவி ருத்திகளுமின்றெனப்பெற்றும்

(க-து.) சகலமுமெனக்கு மூன்னிகழுமெனவும், சகலகிரியைகட்குஞ் சாட்சியானெனவுந் திடமாகத்தெளிவுற்று நின்றுனேமாகர்த்த னென்பது இதுதுணிபு. (உச)

அ - கை க.

[நிறுத்தமுறையானே யேனையமாபோகி மாதியாகிகளினிலக்க ணங்களே யிக்கவியிற்கூறுகின்றார்.]

25. அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த மபத்தியம்பத்தி யமெனவுணர்ந்திடாமற், பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற் போகங்கள் புசிப்பவன்மா போகி யாகுஞ், சிறிதுவலிது கடனதன் னியங் கணன்மை தீமைகள்சே ரினும்படிகச் செயல் போற் சித்தம், வெறிதிருக்கு மவனேமா தியாகியாவன் விரதமிம் மூன்றுள்ளவரே வீடுள்ளோரே.

(இ-ள்.) அறுசுவையின் குணங்குற்றமசுத்தஞ்சுத்த மபத்தியம்பத்திய மெனவுணர்ந்திடாமல், —எ-து. அறுவகைருசியினிதனவும் அன்றெனவும் அசுச்தமெனவும் சுத்தமெனவும் அபத்தியமெனவும் பத்தியமெனவும் தானு ணர்வுமுணவுகாரணமாக வதனைப்பகுத்துணராது:—பொறுமையுடன் கிட்டி னதைக்காட்டுத்தீப்போற் போகங்கள்புசிப்பவன்மா போகியாகும், — எ - து. பொறுமையோடெதுகிடைத்தகோ வதனைப்பகுப்பின்றிப்பற்றிபெரியுங் காட் டுத்தீயைப்போலப் பிராரத்தமாகிற வின்பதுன்பபோகங்களெனப் பகுப்பின்றி யனுபவிப்பவனெவனே வவன்மாபோகியெனப்படுவன்: -- சிறிதுவலிதுகடன தன்னியங்கணன்மைதீமைகள் சேரினும்படிகச் செயல்போற்சித்தம், —எ-து. பிராரத்துவபோகமற்பமகத்தாகவேனும் கனதாகவேனு மன்னியமாகவேனும் நன்மையாகவேனுந் தீமையாகவேனுநேரிடினுமதன்பால், தனதிடத்திலியல் பாகத்தோற்றும் பிரதிபிம்பந்தானுகாதிநிற்கும் படிகக்கண்ணுடியின்செயலைப் போலத் தனதுசித்தம்: -- வெறிதிருக்குமவனேமாதியாகியாவன் விரதமிம்மூன் றுள்ளவரேவீடுள்ளோரே, —எ-து. பற்றின்றிநிற்பவனெவனே வவனேமாதி யாகியெனப்படுவோன். ஆதலினிவ்விரதமூன்றுமுள்ளவர்களே யைக்கியமுத் தியுடையவர்களாம், எ.று.

அறுசுவையாகின்ற பதார்த்தங்களே யறுசுவையென்றது, குணவாகுபெயர். உண்ணற்பாலதியாதோ வதனையுணென்றது, தொழிலாகுபெயர். ஆய்ந்திடாமல் புசிப்பவனெனவும், சேரினும்வெறிதிருக்குமவனெனவுங் கூட்டிமுடித்திடுக. அதன்பாலென்பதைவருவித்தாம். இங்ஙனம்போகதுகர்தலும் சித்தம்வதிதிருத்தலும் சன்னிபித்தம் முதலியவியாகிமேலிட்டோர்பாலுமுளவே யிவர்களும் மாகர்த்சன் மாபோகியெனப் படுவார்களே பேதமென்னை, இவர்கள் மூடத்தாலும் வியாதிமேலீட்டாலும், ஆபத்துமேலிட்டாலும், கவலைமேலீட்டாலும், அவர்கள் ஐயந்திரிபகன்ற தெளிவுமேலீட்டாலும் மரணமரவாமை மேலீட்டாலும் சுகமுஞ்சுகியுமெங்கேயென்னு மாரய்ச்சிமேலீட்டாலும் இவை போன்றபிறவற்றாலுமாதலின் பேதமேயெனவுணர்க. இதனைச்சொல்லாலுணர்வார், மறுப்பர்.

(க-து.) இவ்விரண்டுகவியாலும் விரதத்தி ரயங்கூறியதென்பது. (உடு)

"தூணம்"=ரசமுடைய உக்கிருஷ்டாந்நாதிகள். "தூற்றம்"=ரசமில்லாத நிகிருஷ்டாந்நாதிகள்; அல்லது, சாத்துவீகாகாரம், தாமதாகாரமெனினு மொக்கும். "அசுத்தம்"=ஊசிஞபழஞ்சோறு, உச்சிஷ்டம், தேவாராதனத்துக்கு அருகமல்லாதது முதலியன. "சுத்தம்" சீராக அப்போது சமைக்கப்பட்டுக் கண்ணுக்கு ரம்மியமாயும், நாவுக்கு ருசியாயுமுள்ள அந்நாதிகள், "அபத்தியம்"=வைத்தியசாஸ்திரத்தில் நிஷேதித்தவை: "பத்தியம்"=அதில் விதித்தவை என்க. இங்கே "பொறுமை"—எ-து. விகாரம் அடையாமையை: காட்டுத்தீயானது இது சந்தனமரம், இஃதெட்டிமரம், இது பச்சைமரம், இது பட்டமரம் எனப்பகுக்காமலும், கிட்டினதைவிட்டு அப்புறந்தாவாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாக அவைகளைத் தகிப்பதுபோலத் தத்துவஞானியும் உசிதமான உணவுகளை நிரதிசயாநந்தபூரண அத்வைதாத்மபுத்தியால், அல்லது மித்தியாபுத்தியால் பகுத்தப்பாராமலும், கிடைத்ததைவிட்டுக் கிடையாததை இச்சியாமலும், தான் அவைகளின் மயமாகாமலும் தன்மயமாகவே புசிப்பன்; இங்ஙனம்புசிப்பினும் நித்தியதிருப்தாத்ம சரிசனத்தாற் புசித்திலன் "ஊணுயிர்த்திடாமல்" என்றதால், நன்றெனப் புசியாநிற்ப னென்பது கொள்ளக்கிடந்தது. இதற்கு, முன்னுரான வாசிட்டத்தில்,

"அகலரசு மிடிகளு நன்றெனப் புசிப்போன்".—

என்று கூறியிருப்பதால் "உணவாதி" என்றும். சுவர்ணத்திலுற் செய்யப்பட்ட வியாக்கிரம் இரம்மியமான சுவர்ணதிருஷ்டியால் இரம்மியமாவது போலப் பிரமதிருஷ்டியால் சகலபோகங்களும் சிவன்மூத்தனுக்கு இரம்மியமாகத் தோற்றுவதால், "ஆயிந்திடாமல்" என்றார் "வெறிதிருக்கும்"—எ-து, மித்தியாபுத்தியாலென்க. "விரதமிழன்றுடையவரே" என்னுந் தேற்றேகாரத்தால் தவம், மகம், தீர்த்தம், சேவை, அருச்சனை, தானமாதிய புறக்கருமங்களையுடைய மற்றையர் நிரதிசயாநந்த மோட்சம் அடையாரென்பது பெறப்படுகின்றது. இம்மூன்றையும் விஸ்தாரமாக அறியவேண்டில் வாசிட்டத்தில் விரதஆயைகதையில், பரமசிவனுல் பிருங்கீசற் கருளிச்செய்யப்பட்டிருப்பதால் அதிற்காண்க. இம்மூவகைவிரதங் கூறினவழியால், "போகத்தையுண்

பனென் றுற்ருத்தா வாமே பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ'' என்னும் சங்கைக்குப் பிரார்த்தவசத்தால் போகத்தையுண்பவனுயும், உசித மான கருமத்தைச்செய்பவனுயும் ஞானிதோற்றினும் அகர்த்தாத்ம திருஷ்டி யால் அவை அவனுக்கு இன்றென் றுத்தரங் கூறினதாம்.

அ - ஃ கை.

[விதிவிலக்குவழுவின்றியசெயல்களைகலாதிருக்க விவனைக்கிருதகிர்த்தியனென்பதெங்ஙனங்கூடுமென விளைதலை யிக்கவியிற் கூறுகின்ருர்.]

வே று.

26. மெய்யுங் கொண்டு பிராரத் வந்தரு விதிவழி நின்றிடவு
மூய்யுங் கன்மிக ளுக்கனு குணமா வுறுதொழில் செய்திட வுஞ்
செய்யுஞ் செய்கை முடிந்தவ னென்றுரை செப்பவ தெப்படியோ
கையுந் துன்ப மகற்றிய குருவே கலமா வருள்வீரே.

(இ-ள்.) மெய்யுங்கொண்டுபிராரத்வந்தரு விதிவழிநின்றிடவும், உய்யுங்கன்மிகளுக்கனுகுணமா வுறுதொழில்செய்திடவும்.—எ-து. அகக்காரணபுறக் காரணங்களேயன்றியுந் தேகத்தையுந்தோணக்கருவியாகக்கொண்டு, பிராரத்வந்த ருகின்ற நெறிவழித்தாய் வழுவின்றிநின் றநியதொழிலியற்றுநிற்கவும், திரிசி யமேபொருளெனநம்பி யுய்யுங்கன்மகாண்டிகளுக் கனுகூலமாவதற்கியைந்த விதிமார்க்கக்கிரியைகளேச் செய்துகொண்டிருக்கவும்:— செய்யுஞ்செய்கை முடிந்தவனென்றுரை செப்புவதெப்படியோ,—எ-து. இங்ஙனமிருக்கச்செய் யவேண்டியசெய்கையெல்லாஞ் செய்துமுடிந்தவனென்று சொல்மாத்திரமா வெவருங்கூறுவதென்னைகொலோ:— கையுந்துன்ப மகற்றியகுருவே நலமாவ ருள்வீரே,—எ-து. வருத்தத்தையேசெய்யுந் துன்பமாவுள்ளவினைத்தையு நீக்கிய ருளியவென துகுருநாதனே யிதனுக்கு விடைசெவ்விதா வுரைத்தருளுவீராக வென்றிரந்துகேட்டனன், எ-று.

மெய்யுமென்னுமும்மை; இறந்ததுதழீஇயவெச்சவும்மை. உய்யுங்கன் மிகளென்றது; கன்மமேபயனுகவுய்தலை. கன்மிகளுக்கனுகுணமாவுறுதொழில் செய்திடல்; சரியை கிரியைகளே விதிவழித்தாச்செய்துகாட்டலை. செய்யுஞ் செய்கைமுடிந்தவனென்றதனுல், கிருதகிருத்தியனென்றுயிற்று. துன்பஞ்செய் பவைகளேத்ததுன்பமென்றது, குணவாகுபெயர்.

(க-து.) விதிவிலக்குவழுவாச்செயல்முயலாநிற்க இவனைக்கிருதகிருத்தி யனென லெங்ஙனகூடுமென்பது. (உரு)

ஞானத்தால் அஞ்ஞானநிவர்த்திசெய்து துன்பம் ஒழிவித்தமையின், நை யுந்துன்பமகற்றிய குருவே.'' என்றுன்.

அ - கை.

[பலவியாப்தி விர்த்திவியாப்தி யென்பவற்றுள் இவன்விர்த்திவியாப்
தியைதலி னிவன்செய்துஞ்செய்திலனென்பதை
யிக்கவியிற் கூறுகின்றார்.]

27. ஆடவர் செய்தொழின் மூவகை யாகு மவித்தை வசத்துறுகா
ளீடணை மமதை யகந்தை யுளார்க்கே யிகபர விலகாரம்
வீடணு குவமெனு மிச்சை யுளார்க்கே வித்தை படிப்ப வெலாம்
பாடன் மிகுந்தொழி லாற்பல னுண்டோ பரிபூரண மானல்.

(இ-ள்.) ஆடவர்செய்தொழில் மூவகையாகும்;—எ-து. புருடர்செய்யுந் தொழில்கள் மூன்றுவிதமாயிருக்கும்:-அவித்தைவசத்துறுகாளீடணை மமதை யகந்தையுளார்க்கேயிகபரவிலகாரம்,—எ-து. அவித்தாமயமாய காலத்தில் ஈடணைத்திரியமும், அகமமதையுடையார்யாரோ வவர்களுக்கே யுரியது, இகலோகசுகத்தையும், பரலோகசுகத்தையும்பற்றி முயலும்விலகாரம்:— வீடணுகுவமெனுமிச்சையுளார்க்கே வித்தைபடிப்பவெலாம்,—எ து. முத்தியடைகுதுமென்றவாசையுடையோர்யாரோ வவர்களுக்கே யறிவைப்படிக்குமுயற்சியனைதும்:—பாடன்மிகுந்தொழிலாற்பலனுண்டோ பரிபூரணமானல், —எ-து. அறிவேவடிவாகப்பரிபூரணமாயிடினவர்கட்குஞான நூல்முதலியவைகளிலுள்ளபாடல்களை மிகவுமப்பியாசிக்குமுயற்சியால் யாதானுங் கிஞ்சித்பயனுளதோ இல்லையே, எ-று.

வித்தைபடித்தல்; கல்விபடித்தலெனின், அஃதஞ்ஞானதிசை, எல்லாக்கல்வியையும்பழுதறக்கற்ற வறிவைக்கற்றல். அன்றெனின், வீடணுகுவமெனுமிச்சையுளார்க்கேயென்பானேன் ? புகழணுகுதுமெனுமிச்சையுளார்க்கேயெனப்பாடமிருக்கின், கல்விபடித்தலெனக்கூறலாம். ஆதலின், அதுவழு. இகபரவிவகாரம், அஞ்ஞானதிசை. வித்தைபடிப்பது, ஞானதிசை. பரிபூரணமாதல், இவ்விரண்டுநிலையுமகன்றதிசை. வித்தைபடித்தலாவது ; பொன்னையன்றிப்பணிபேதங்களில்லாவாறுபோன்று, அறிவையன்றிச்சகசிவபரபேதங்கள் சற்றுமின்றெனவாச்சியார்த்தத்தால் திரவுணர்ந்து, அதனைச்சற்குருவினருளாலிலக்கியார்த்தத்தால் தெளிவுபெறவிளக்கிக்கொண்டதனைக்கண்டிதுகானெனப் பலகாலமும்விடாதபயிறல். இதனையப்பியாசமெனினுமமையும். அமையவே, பரிபூரணமாதல், ஆருடமென்றுயிற்று. இதனைப்புறக்கணிப்போரகங்காரிகள். சுயமாகப்பாடமிக்கவலியுளதாதலின்பயனெனினுமமையும். பரிபூரணமாதல், தானேயனைத்துமாவிளங்கல், இத்திசையில் செய்திலனென்றுயிற்று.

(க-து) பரிபூரணஞதலால் பாசமுயற்சியெய்தாதென்பது. (உஎ)

"பாடல்."—எ-து, உபலட்சணம்.

"யாதொன் றினைப்பெற் றவரிதனின் மிக்கதொப்பதுண்டென்னர்."—

என்று கீதையில் பகவானாலும், யாதொருலாபத்துக்கு மேலானலாபம் வேறென்றுமில்லையோ அது பிரமமென்று ஆத்மபோதத்தில் பூஜ்யபாத ரான சங்கராசாரியராலும் அருளிசெய்யப்பட்டிருப்பதானும், தமது அநுபவபலத்தானும் பிரமலாபத்துக்கு மேலானதாக ஞானிகளால் அடையத்தக்கதான இலாபம் வேறென்றுமில்லையென்பார், பலனுண்டோ பரிபூரணமானஃ'' என்றார்.

குடும்பபுத்தியும், போகத்திச்சையும் இன்மையின், உழவாதிகளும், கிஞ்சிஞ்ஞனுக்குவிஷயமான எக்ஞாதிகள் தனக்கு விஷயமாகாமையின் அவ்வெக்ஞாதிகளும், பிரமமானது கண்டசாமீகரநியாயம்போல ஞானியால் அடையப்பட்டிருத்தலின் சிரவணாதிகளும் ஞானிக்குச் செய்யவேண்டுவனவாகவில்லை; இதுவே கிருதகிருத்தியத்தன்மையென்றறிதி என்பதாம்.

அ - கை.

[தேவரீர்கூறியதொக்கும், இனியோர்சங்கை. அதாவது; ஞானமேதானெனப்பழதுவோர்க்குச் சிரவணாதிகள்வேண்டுவதின்றேவென வினவல். அதனை யிக்கவியிற் கூறுகின்றார்.]

28. குரவர் சிகாமணியே நீர்கேளீர் கூறிய வழியொக்கும், பரமுடனிகமு மிகந்தவ ரன்றே பழதுவர் மெய்ஞ்ஞானம், விரவு முயற்சியின் மீண்டவ ரதையினி வேண்டுவ ரோவேண்டார், சிரவண மனனநிதி தியாசனம் வேண்டாவோ சித்த முறைத்திடவே.

(இ-ள்.) குரவர்சிகாமணியேநீர்கேளீர் கூறியவழியொக்கும்,—எ-து. எல்லாவாசிரியர்க்குஞ் சிகாமணிபோன்று விளங்குபவரே அடியேனிரந்து கேட்கும்விண்ணப்பமொன்றுள ததனை நீர் கேட்டருளும் அதாவது; தேவரீரிதுகாறுங்கூறிவந்த மார்க்கமனைத்து மங்கிகாரமே:—பரமுடனிகமு மிகந்தவ ரன்றே பழதுவர்மெஞ்ஞானம்,—எ-து. பரலோகவிச்சையும், இகலோகவிச்சையுங் கடந்தவரன்றே மெய்யுணர்வேயானெனப்பழகாநிற்பர்:—விரவுமுயற்சியின்மீண்டவரதையினி வேண்டுவரோவேண்டார்,—எ-து. இச்சையில் மேல் மெனமிசிரம்பிக்குநின்றுள்ள முயற்சியினின்று வெறுத்துத் திரும்பினவர்களினியதைமறந்தும் விரும்பியுழல்வரோவுழலார்:—சிரவணமனனநிதிதியாசனம் வேண்டாவோ சித்தமுறைத்திடவே,—எ-து. இங்ஙனமாயினுமிவர்கட்குஞ்சித்தங்கலங்காதுறுதிபெறநிற்றற்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்வேண்டுவனவின்றே,—எ-று.

பரமுடனெனவுடன் கொடுத்துப்பிரித்தது; சொற்கம், சத்தியமாதியென மதத்தர்கூறு மேலிட்ட பதவிகளோநோக்கியென்க. ஒன்றினுநிலையுறாத முயற்சியாதலின் விரவுமுயற்சியெனவும், ஓர்கால்சித்தங்கலக்கமுறற்பாலதின் சித்தமுறைத்திடவெனவுங் கூறினர். மூடிந்தவனுக்குச் சிரவணாதிகள்மீண்டும் வேண்டுவது, மாயாமயமாசலிப்பற்றியென்க. களங்கமற்றகண்ணாடி பலவாடைகளால் மூடப்பட்டிருக்கினும் ஆசடையுமாறுபோன்று, தெளிவுற்றதேனும் அறிவாகிறகண்ணாடிக் கையந்திரி பெங்ஙனமேனுஞ் சற்றடையும்.

(க-து.) மகான்கள் கிருதகிர்த்தியரன்றெனக் குறிப்பிக்கச் சிரவணஞ்செய்தல் வேண்டாவோவென்பது. இச்சை-தொக்கது. (உஅ)

அ - கை க.

[அதற்குவிடைகூறுவான்வேண்டிக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்செய்வாரின்னின்னதகையினராவரென விக்கவியிற் கூறுகின்றார்.]

29. கிளர்மக னேகேள் தத்துவ மறியார் கேட்டல் செயக்கடனே
தளர்வறு சிந்தித் தலின்முயல் வார்சிலர் சந்தே கங்களு ளார்
தெளிதலி னிற்பார் விபரீ தப்பேய் தீரா வாதனை போர்
வெளியுரு வாயறி வாய்நிறை வாயினர் வேண்டுவதொன் றுண்டோ.

(இ-ள்.) கிளர்மகனேகேள் தத்துவமறியார் கேட்டல்செயக்கடனே,—எ-து சின்மாத்திரமாவிளங்கு ஞானபுத்திரா யான் கூறுவதைக்கேளுதி, மெய்யுணர்வினையதெனக்கேட்டு மறியாதார் சிரவணம்பண்ணிக்கொண்டிருப்பர்:—தளர்வறுசிந்தித்தலின் முயல்வார் சிலர் சந்தேகங்களுளார்.—எ து. சந்தேகங்களகலாதசிலர் ஓயாதமனனவயத்தராய் முயலாநிற்பர்:—தெளிதலினிற்பார் விபரீதப்பேய்தீராவாதனையோர்—எ து விபரீதமென்னும் பேயினல் தீராதவாதனையுடையோர்கள் சித்தந்தெளிவுபெறு முயற்சியில்விடாதநிற்பர்:—வெளியுருவாயறிவாய் நிறைவாயினர் வேண்டுவதொன்றுண்டோ,—எ து சுத்தமான வெளிமயமாகியும், ஞானப்பிரகாசமாகியும், அகண்டபரிபூரணமாகியும் விளங்கினர்; யாதானுமிம்மூன்றனுள் வேண்டுவதொன்றுளதோ இல்லையே,—எ-று.

தத்துவம், அறிவு அது ; கற்பிதம், எசார்த்தமெனவிருபாற்று. கற்பிதம், அனர்த்தம. எசார்த்தம், அர்த்தம். கற்பிதமெனினும். விபரீதமெனினுமொக்கும். விபரீதவுணர்வு. பண்டிசர்பாமரரிடத்தும் எதார்த்தவுணர்வு, தத்தெரிசனமுடையோரிடத்துமெனவுணர்க. உத்தமம், மத்திமம், அதமமெனமூன்றும். தெளிதலினிற்றல், உத்தமம் சிந்தித்தலினிற்றல், மத்திமம். கேட்டலினிற்றல், அதமம். இமமுத்திசையுங்கடந்தவரென்பதுதோன்ற, வெளியுருவாயறிவாய் நிறைவாயினரென்றார்.

(உ-து.) கிருதகிர்த்தியரெனக்குறிப்பிக்க விம்மூத்திசையுங்கடந்தவரென்றாரென்பது. செயக்கடனென்பதை மூதனிலத்தீபமாக்கி. வினையிரண்டிடத்துமொட்டுக. விபரீதப்பேயெனல், உருவகம். ஒன்றையொன்றுக்கோடல் சர்வமதத்தராதலினிதனையே பேயெனலறிக. அறியார், உளார், வாதனையோர், எழுவாய். வினையாலணையும்பெயராசலினென்க. (உக)

திதி, வார, நட்சத்திர, யோக, கரணங்களே அறியாதோர் பஞ்சாங்கத்தைக் கேட்டாவது, பார்த்தாவது அறியவேண்டுவதுபோலத் தத்துவம் அறியாதோர் சிரவணஞ் செய்யவேண்டுவது. பொன்னின்மாற்று நிர்ணயத்திற் சந்தேகமுள்ளவர்கள், ஆணிவைத்து உரைத்துப் பார்த்துக்கொள்ளுவதுபோலச் சிவப்பிரமங்களின் அபேதஞ்சத்தியமா? அல்லது பேதஞ்சத்தியமா என்பதுமுத

லிய சந்தேகமுடையவர்கள் மனனம் பண்ணவேண்டுவது. திக்குப்பிரமை கொண்டோர் அதற்குக் காரணமான சூரியாதிகளே நாடித் தெளிவதுபோல விபரீதபாவனையுடையோர் நிதித்தியாசனஞ் செய்யவேண்டுவது. "வெளியுரு வாயி" என்றதால் சிரவணஞ் செய்தற்குக் காரணமான அஞ்ஞானமும், "அறிகாய" என்றதால், மननஞ்செய்தற்குக் காரணமாகிய சந்தேகமும், "நீறைவாயி" என்றதால், நிதித்தியாசனஞ்செய்தற்குக் காரணமான விபரீத பாவனையும் ஆருடர்க்கு இன்றென்பதைக் குறிப்பித்தனர் என்க.

அ - கை

[அஞ்ஞானியர்போலப் பலவேறு விகற்பக்கிர்த்தியம்புரிதருளே,
கிருதகிர்த்தியநிலைக்கடையாளம். இதனைத் தெரித்தருளு
மெனவிளவியதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

30. ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போ லச்
செய்யாநின்றேன் கண்டேனுண்டேன் சென்றேனெனலாமோ
பொய்யாம் விபரீதங்க ளவர்க்குப் போயின வென்றீரே.
மெய்யாம் பிரமவிசார மிதன்றே வெளியா யுரையீரே.

(இ-ள்.) ஐயாகேளீர்தத்துவஞானியு மஞ்ஞானியர்போலச் செய்யா நின் நேன்கண்டேனுண்டேன் சென்றேனெனலாமோ,—எ-து. ஐயனே யின்னு மடியேன்கேட்கும் விண்ணப்ப மொன்றுளதனைக்கேட்டருளும். உண்மை ஞானியருமஞ்ஞானிகள்போலச் செய்யாநின்றேன், கண்டேன், உண்டேன், சென்றேனெனச்சொல்லத்தகுமா:—பொய்யாம் விபரீதங்களவர்க்குப் போயின வென்றீரே,—எ-து. பொய்மயமாகிய விபரீசங்களவர்க்கு நீங்கிப்போயின வென்றுகூறினீரே:—மெய்யாம் பிரமவிசாரமிதன்றே வெளியாயுரையீரே,—எ-து மெய்ம்மையாகிய பிரமவிசாரணையிதல்லவே யிதனைவிளங்கத் தெளிவா யுரைத்தருளும்,—எ-று.

செய்யாநின்றேன், உண்டேன் சென்றேனென்பவை, மித்தையாத்தியா சம். கண்டேனென்பது, இதராத்தியாசம். இங்ஙனமிருக்க, இவைபோயின வெனக்கூறுவதெங்ஙனமையையும். இதுமெய்ம்மையான பிரமவிசாரமல்லவே, யிதனைத்தெரித்தருளுமென்பார், மெய்யாம் பிரமவிசாரமிதன்றே வெளியா யுரையென்றார்.

(க-து.) கிருதகிர்த்தியரென்பதற் கிது தக்கவுதாரணமன்றெனக் குறிப்பித்ததென்பது. (கo)

"பிரமவிகாரமிதன்றே" என்றும் பாடமுளது; அது பிறழ்ந்தபாடம். "பிரமவிசாரமாவது"

"அணுவினுக் கணுவு நானே யப்படி மகத்து நானே
துணிபிலெப் பொருளு நானே சோதிபுட் சோதி நானே

பணிவுறத் தகுவே னுனே பணையனும் புருடனுனே
யிணைதனக் கில்லா வீச னுகிய வின்ப னுனே.”—எ-ம்,

“ஒன்றி லணுகே னுன் சரைபற் றுள்ள மமதை யகங்கார, மென்ற
வொன்று மிலன், துன்றுகுண மூன்றிலன் சரைசா விலனுன்சுத்தன்
றூவறிஞன் நின்ற சாந்தன் சமரசனுன்.”—எ-ம்.

“திரண நுனிகள் விசும்பிரவி தேவ ருரகர் நரிடத்தில், விரியுமறி
வே கான், குறுக்கு மேல்கீ ழென்போ தப்பெருமை யுளாவியது.”
—என்பதுமாம்.

நான் சென்றேன், கண்டேன், உண்டேன் என்பது அதற்கு முரணுதலான், இங்ஙனம் வியவகரியாநின்ற ஞானிக்கு விபரீதபாவனை இன்றுவது எவ்வாறுமென்பது சேடன்கருத்து

அ - கை.

[இவ்விவகாரம் விதேகமூத்திபரியந்தம் சொடர்ந்தேநிற்கும்.
தொடரினுந் தெளிவினிற்றலி னேனையர்போலன்
றெனவிக்கவியிற்கூறுகின்றிலர்.]

31. ஓய்ந்த கனவிற் கண்ட பழங்கதை யோதுவன் வாதனை யா
லாய்ந்தறி வுற்றவ னப்படி செப்புவ னுபா சனுமா கான்
மாய்ந்த னுடல்வே மளவும் விண்ணவன் மனித னெனப்படு வான்
வீய்ந்தசி தாபா சன்போ மளவும் விவகாரந் தொடரும்.

(இ-ள்.) ஓய்ந்தகனவிற்கண்டபழங்கதை யோதுவன் வாதனையால்,—எ-து. கனவுக்கண்டவன் ஒய்ந்துபோன தனது கனவிற்கண்டபழங் கதையினை மறவாது வாதனையாற்சொல்லுவன்:—ஆய்ந்தறிவுற்றவனப்படிசெப்புவ னுபாசனுமாகான்,—எ-து. தானினையனெனச்சுருதி, அனுபவத்தா லேயந்திரிபறவாராய்ந்த தெளிவுற்றவறிவுடையோனு மவன் கூறுமாறுபோன்று கூறுவன். கூறினும், இவனவன்போலசனை மெய்யெனநம்பிக் கூறுவனல்லன். அசனுல், இவனவன்போலாபாசனுமல்லன். ஆவனெனின் தெளிந்தசிந்தையனதலி னங்ஙனமொருக்காலுமாகான்:—மாய்ந்தனுடல்வேமளவும் விண்ணவன் மனித னெனப்படுவான்,—எ-து. முன்னரே பிரக்ஞோதயத்தால்மரித்த தனது காரண சரீரம் ஞானுக்கினிமேலிட்டால் நீறுமளவும், மனிதனுயினும், தேவனே. இவனுக்கிவன்தேவனுயினும், பார்ப்பவர்க்கு மனிதனுகக் காணப்படலின் பிறரால் மனிதனெனவழங்கப்படுவன்:—வீய்ந்தசிதாபாசன்போமளவும் விவகாரந்தொடரும்,—எ-து. ஆதலின், அறிவே தானெனக்கண்ட வக்கண்மே மரித்த சிதாபாசத்துவ மவித்தைபோற்போமளவு மிவனுக் குலகவிவகாரந் தொடர்ந்தேநிற்கும்,—எ-று.

அவனுலகமறந்தது நித்திரைவந்துழி, இவன் மறந்தது விசாரத்தெளிவுவந்துழி கனுக்காட்சியவனுக்குச் சொற்பனம், நனுக்காட்சியிவனுக்குச் சொற்பனம். அது கணசொற்பனம். இதுதீர்க்கசொற்பனம். அவன்விழிப்பு, அந்நா

னம். இவன்விழிப்பு, ஞானம். அஃதவன்மறந்தழிநடந்தது. இஃதிவன்மறவாது மறந்தழிநடந்தது. அதனையவனுலகாக விழித்தழிச்சொல்லுமாறு போன்று, இதனை யிவனறிவாக விழித்தழிசசொல்லுவன், அதனை யவன்மூடவிஞ்ஞதமாகச் சொல்லுமாறுபோன்று, இதனையிவன் ஞானவிஞ்ஞதமாகச சொல்லுவன். பண்டிதனதனையாதோவென வுண்மையாகக்கொள்ளாவாறுபோன்று, ஞானியிதனைத்தற்போதபிலனமென வுண்மையாகக்கொள்ளான். அவனுக்கது சொல்லுகயமுமாத்திரமாயதுபோல இவனுக்கிது சொலலுந்தோற்றமுமாத்திரமாயது. ஆகலினிவ்வுவமை பொருந்தும், பொருந்தாதென்டாரை யவாந்தரவாதிக ளெனவறிக. அவாந்தரவாதம்; கோழிகோழி என்னவிலை யென்னவிலை யென்ருற்போல்வது. ஆய்ந்தறிவுற்றவனுமென்றவும்மைதொக்கது. ஆபாசனுமென்றவும்மையிழிவுசிறப்பு. மாய்ந்தெனவினையெச்சமாக்கினு மொருசாரமையினு மமையும். இருமுகநோக்கு முணர்ந்தவனுதலி னாபாசனுமாகானெனக்கொள்க. உலகிருப்புந் தன்னிருப்புமுணராவிடத்ததவன்விவகாரம் உணர்ந்தவிடத்ததிவன்விவகாரம். இங்கேயுடலென்பது, தூலமெனின், அதுமாய்ந்தவிடத்து மதுவெந்தவிடத்துந் தேவனுதலெவருந் தூலசேகத்தராலிதன் பொருந்தாதே: இவனுக்குமாத்திரமெனின், அப்போது தூலதேசமன்று சூக்குமவுடலெனின், சொப்பனஞ்சுழுத்தியிலும் சர்வசங்காரகாலத்திலு மெவரும் விண்ணவராக வேண்டும் இன்றே. இங்கேவிண்ணவன், ஐக்கியமுத்திக்குரியோன் அன்றெனின், "ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு வையதின்வானநணியதுடைத்து." என்னுங்கவியில் வானம் பதவிமுத்தியோ; பதவிமுத்தியெனின், ஐயந்திரிபறத்தேர்தலும் யாகாதிருத்தியமியற்றலுமொன்றே? ஒன்றெனின் தன்னேத்தானெய்தில், அயலெனலில்லை. இல்லையாகவே, சுகமுமயலெனலின்றித் தானே சுகவடிவாகத் தன்னேத்தா னனுபவித்தல் கன்மகாண்டத்திலுண்டோ. இதனைப் பாடுதறையில், ககக-அதிகாரத்திற்காணலாம். இன்றெனின், ஒன்றெனல்கூடாது. இதுகூடாதாகவே, அதுவுங்கூடாதெனமுடியும். ஆசலின், காரணவுடலாகிய யவித்தையையுடலென்றார். வீய்ந்தசிதாபாசன்போமளவும் விவகாரந்தொடருமென்றது; மாய்ந்தசன்னுடல்வேமளவும் விண்ணவன் மனிதனெனப்படுவானென்பதுபற்றி மாயினுங் காரணவுடனீறுமளவு மனிதனெனப்படுவான்போன்று, வீயினுஞ்சிதாபாசன்போமளவும் விவகாரந்தொடரும். உடனீறுயின், சிதாபாசன் மாப்பிள்ளேச்சேமமுன்போற் சொல்வாதுழுவுவன். அது நீறுமளவு மனிதனெனலுண்டு. இவன்போமளவும் விவகாரமுண்டு, மனிதனெனப்படினுந்தனக்கில்லை. அதுபோல, விவகாரந்தன்பாலிகழினுந் தனக்கில்லை. சிற்பிரகாசநாட்டத்தில் தாரெவ்வகைத்தோற்றச்சானு மல்லஞ்தல்போலத், தற்பிரிபமகலாநாட்டத்திற் கிரியைசெய்துஞ் செய்திலனென்றுயிற்று, இங்ஙனநின்றார்க்கேயிதுரியமன்றிச் சொல்லாலும் நினைவாலுமென்னை பயனுள. இவற்றுலிதனைமறுக்கிற் பயனின்மையின்சள்ளுதும.

(க-து.) சதாகாரத்தில்செய்துஞ் செய்திலனென்பது இச்சை. அநிச்சை. பரவிச்சையுளென்றுகாரணமாக வினைநிகழினும், தன்னை யகண்டமாகக் காண்டலின், கிருதகிர்த்தியனெனக்குறிப்பிக்கது. இதனைத் தற்சோதனையிற் காண்க.

(கக)

அரசனுயுள்ளோன், நித்திராமோகத்தாற் சொப்பனத்தில் பிட்சை யேற் பவனுகத் தன்னைக்கண்டு விழித்த்பின் அம்மோகம் நீங்கி அரசனு யிருந்து கொண்டு முன்னே சொப்பனத்திற் கண்டவாசனையால் தன்னைப் பிட்சகனு கச்சொல்லினும் உண்மையாகத்தான் பிட்சகனென்பது அவனுக்கு உள்ளே இல்லாமைபோல ஞானியும் பூர்வவாசனையால் சிதாபாசனுகத் தன்னைவியவகா ரத்திற் சொல்லினும் அவனுள்னே அகங்காரக்கிரந்தி யின்மையின் அவன் சிதாபாசனல்லன்.

தான் தேவனுகவேண்டுமென்று அக்கினியிற் புக்கிறந்தோன் உடனே தே வனுனலும் அவன் தேகம் நசிக்குமளவும் மதுடனுக அந்நியரால் எப்படி விய வகரிக்கப்படுவனே அப்படித் தத்துவஞானத்தால் ஞானியும் உடனே பிரமமா னலும் பிராரத்ததேகம் நசிக்குமளவும் அந்நியருடைய திருஷ்டிக்குச் சிதாபா சனுக வியவகரிக்கப்படுவன்; அவ்வியவகாரம் விதேககைவல்யமளவுந் தொடரா நிற்குமென்பது கருத்து.

அ - கை.

[நிட்டையகலானெனினு மதுவுஞ்செயலன்றே; கிருதகிர்த்தியனென லெங்ஙனங்கூடுமென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

32. ஆனு லையா குருவே காண்ப தசத்திய மென்று லு
நானு விவகா ரந்துய ரலவோ ஞானசு கந்தரு மோ
போனு லன்றே நன்று நிட்டை புரிந்திடல் வேண்டா வோ
தானு நிட்டை புரிந்தாற் செய்கை தவிர்ந்தவ னெப்படி யோ.

(இ-ள்.) ஆனுலையாகுருவேகாண்ப தசத்தியமென்றுலும் நானுவிவகாரந் துயரலவோ ஞானசுகந்தருமோ, —எ-து ஐயனே, குருநாதனே, மகானென் போன்கிருதகிர்த்தியனுலல் காணப்படுவனவனைத்துந்திரிசியமன்றே; அதுதிரி சியமாயினுமநித்தமன்றே; அநித்தமெனினும், அதனைமெய்யெனக்கொள்வ தென்னையோ, கொண்டுநானுவிவகாரம்புரிதலென்னையோ, புரிந்து மதனுலெய் தும்பயன் சுகமாயினும், அதுமெய்ப்பொருள்காரணமாக வந்ததன்றுமையின் துயராகமுடியுமன்றே; அதனுலதுதுயரல்லவோ, அதுமேலிடுமன்றே; மே லிடுந்தோறும் தனித்துநிற்கைவாய்க்குமோ; வாய்க்காவிடத்து அது சிதானந்த வாழ்வைத்தருமோ: — போனுலன்றேநன்று நிட்டைபுரிந்திடல் வேண்டா வோ,—எ-து. இவ்விவகாரமொருங்கே நீங்கினுலன்றே. தனித்திருக்கைக்கு நன்கு. இந்நன்குநிலைத்தல் நிட்டைபுரியாதுழிவாய்க்குமோ; வாய்க்காவிடத்து நிட்டைபுரிந்திடல் வேண்டாவோ:— தானு நிட்டைபுரிந்தாற்செய்கை தவிர்ந்த வனெப்படியோ,—எ-து வேண்டுமெனின், தானேதானுதற்கியைந்த விந்த நிட் டைபுரிதலுஞ் செய்கையன்றே, எந்தச்செய்கையுமகன்றவனுயினும், இந்தச் செய்கையகலாததலின், கிருதகிர்த்தியனென்பதிவனுக் கெங்ஙனமியையுமோ வறிகிலன், எ-று.

(க-து.) கிருதகிர்த்தியனெனல் சொல்லாலன்றி யர்த்தங்கண்டிலனென் பது. இதினுன்கோ காரமுமெதிர்மறைப்பொருள். விடாவழக்கென லிங்ஙன

மாயதெனவுணர்க. அசத்துகாரணமாகவரும் விவகாரமாதலின், துயரலவோ வெனப்பட்டது அறிகிலனிசையெச்சம். (கூஉ)

அ - கை.

[இக்கிரீயைகளகத்திலன்றிப் புறத்தினிகழின், கிருதகிர்த்தியனெனக் கோடற்கவென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

33. தெரிதரு மகனேயாரம் பத்தொடு தீரும் விவகார
மூரிய சமாதியும் விவகா ரங்களு முள்ளத் தொழிலன் றே
துரிய பரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய் வதுமுண்டோ
வரிய சமாதிகள் பழகுவ னேலவ ளருடனுமன்றே.

(இ-ள்.) தெரிதருமகனேயாரம்பத்தொடுதீரும் விவகாரம்,—எ-து. சகல வர்த்தங்களையு மெளிதில்தெரிந்துகொள்ளத்தக் ஞானபுத்திரா ; ஆரம்பத்தில் சிரவணமனனதிகள் செய்யும்போதே சகலவிவகாரங்களும்:—உரியசமாதியும் விவகாரங்களு முள்ளத்தொழிலன்றே,—எ-து. தன்னேவிளக்கற்குரியநிட்டை யும், கேட்டவாறுசிந்தித்துத் தெளிதலாகியசகலவிவகாரங்களு முள்ளத்தின் கணிகழுந்தொழில்களன்றே:— துரியபரம்பொருளானவர் வேறொருதொழில் செய்வதுமுண்டோ,—எ-து. துரியமாகவிளங்கும் பிரமசொரூபமானவர்கள் பிறிதோர்தொழில்செய்வதுமுளதோ:— அரியசமாதிகள் பழகுவனேலவ ளருடனுமன்றே,—எ-து செய்தற்கரியசமாதிகள் கைகூடும்படிபழகுவளையி னவ ளருடனுமல்லனே. எ-று.

சகலவிவகாரங்களோடு சிரவணாதிகள் செய்யின்பயன்படா. படுமெனின், பெருமைபற்றியெனவேண்டும் அதுபற்றியெனின். துக்கநிவர்த்திக்கென்செய் தும் இன்றுதலின், சிரவணாதிகள்செய்யுமாரம்பத்தில்தானே சகலவிவகாரங் களுநீங்கியேவிடும். (எங்ஙனமெனின்,) சிரவணமாறுவகைப்படும். அவை; உபக்கிரமோபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், உற்பத்தி, அர்த்த வாதமென்பன. உபக்கிரமமாவது ; சிருட்டிக்குமுன் சகத்து சத்தெனல், உப சங்காரம் ; அந்தச்சத்து, சுசாதிக விசாதிக சுகதபேதமிறந்ததெனல். இதனை யொன்றுக்கி உபக்கிரமோபசங்காரமென்பர். இந்தவொன்றைவிசாரித்துத்தெளி தற்கே விவகாரசிந்தைசற்றுமிலதாகவெண்டும் ஆதலின், ஆரம்பத்தொடுதீரும் விவகாரமெனவும், சவ்விகற்பசமாதி, நிர்விகற்பசமாதியைச் சமாதியெனவும், இவற்றிற்குரியவறியவுழைப்புகள் பலவாதலின் விவகாரங்களெனவும், இவை யனைத்துமகத்திலாதலின், உள்ளத்தொழிலெனவும், துரியமேபரமாதலின், துரியபரம்பொருளெனவுங்கூறினர். ஆருடனுயின்சமாதிபழகுவனே ; பழகு வனேலாருடனுமன்றென்பதிலும்மை இழிவுசிறப்பு. ஆருடனுமன்றெனவே அப்பியாசியென்றுயிற்று.

(உ-து.) சமாதிகூடப்பழகின், கிருதகிர்த்தியனன்றென்பது. ஏழாம் வேற் றுமை மூன்றும் வேற்றுமையாயதருபுமயக்கம் (கூஉ)

வியுத்தான சம்ஸ்காரத்தினெழிவும், நிரோத சம்ஸ்காரத்தின் பிரகடத்தன்மையுமாகிய அந்தக்கரணத்தின் ஏகாக்கிரத்தன்மை ரூபமானபரிணமஞ்சமாதி எனப்படும்; அச்சமாதியும் சவிகற்பசமாதி, நிருவிகற்பசமாதிஎன இருவகைத்தாம். ஞாதா, ஞான, ஞேயரூபத்திரிபுடித்தோற்றத்தோடுகூட அத்விதீயப்பிரமத்தின்கண் அந்தக்கரணவிருத்தியின்ஸ்திதி சவிகற்பசமாதி எனப்படும்; அதுவும் சத்தாநுவித்தம், சத்தாநுவித்தம்என இருவகைத்தாம்; அவர்றுன், அகம்பிரமம் என்னும் சத்தத்தோடு கூடியிருப்பதைச் சத்தாநுவித்தமெனவும் சத்தரகிதத்தைச் சத்தாநது வித்தமெனவுங்கூறுவர். திரிபுடித்தோற்றமின்றி அகண்ட பிரமாகாரமான அந்தக்கரண விருத்தியின் ஸ்திதியை நிருவிகற்ப சமாதியென்பர். இவ்வாறு சவிகற்பசமாதி, நிருவிகற்ப சமாதிகட்குப் பேதமுண்டு; அவைகளில் சவிகற்பசமாதிசாதனம்: நிருவிகற்பசமாதிபலமாம்: நிருவிகற்பசமாதியும் அத்வைதபாவனை ரூபமென்றும், அத்வைதாவஸ்தாரூபமென்றும் இருவகைத்தாம். அத்வைதப் பிரமாகாரமான அந்தக்கரணத்தின் அஞ்ஞாத விருத்தியோடுகூடில் அது அத்வைதபாவனைரூபநிருவிகற்ப சமாதியெனப்படும்; அச்சமாதியின் அப்பியாச மிகுதியால் பிரமாகாரவிருத்தியுஞ் சாந்தமாய்விடில் விருத்திரகிதமான அச்சமாதி அத்வைதாவஸ்தாரூப நிருவிகற்பசமாதியெனப்படும். அத்வைதாவஸ்தாரூப நிருவிகற்பசமாதியே முக்கியபலமாம்: அத்வைதபாவனைரூப நிருவிகற்பசமாதி அதற்குச்சாதனமாம் என்ப; இவ்வபிப்பிராயத்தால் இவ்வாசிரியருஞ் "சமாதிகள்" என்று பன்மையாக் கூறினர்.

ஆரூடஞானிக்கு மனன, நிதித்தியாசனமும் கர்த்தவ்வியமன்று: சீவன்முத்தியின் ஆநந்தநிமித்தம், மனன நிதித்தியாசனங்களிற் பிரவிர்த்தியாநிற்பன்; எதுவும் தனதிச்சையாற் பிரவிர்த்திப்பன். நான் வேதத்தின் ஆக்ஞையைச்செய்யாவிடில் எனக்கு ஜநமரணரூப சம்சார முளதாமென்னும் புத்தியோடுகூடிக் கிரியைசெய்யில் அதுகர்த்தவ்வியமெனப்படும். ஞானி ஆன்மாவை அசங்கமாக அறிந்துளனேனும், தேகத்தின் போசனாதிவியவகாரங்களை, அல்லது ஜநகன்முதலியோர் போல அதிகமான இராச்சியபாரபாலனாதிவியவகாரங்களைச் செய்வன்; அவ்வியவகாரத்திற்கு ஞானம்விரோதியன்று: வியவகாரமும் ஞானத்திற்குவிரோதியன்று. என்னை? யாதொரு ஆன்மசொரூபத்தை அசங்கமாக அறிந்துளனை அவ்வான்மாவின்கண் வியவகாரந் தோன்றுமாயின் வியவகாரத்திற்கு விரோதி ஞானமாம்; அப்படியே ஞானத்திற்கு விரோதிவியவகாரமாம்; அங்ஙனந் தோன்றுமற் சம்பூர்ண வியவகாரங்களும் தேகாதிகளின் ஆசிரிதமென்றும், ஆன்மாவின்கண் வியவாகாரத்தோடு கூடியதேகாதிகளின் சம்பந்தமில்லையென்றுந் தோன்றுகின்றது. இக்காரணத்தால் ஞானிக்குந் பிரவிர்த்தியும் நிவிர்த்தியென்றே சொல்லப்படுகிறது. ஆதலான், "உரியத் யானமும் விவகாரங்களு முள்ளத் தோழிலன்றே, துரியபரம்பொருளானவர் வேறெந் தொழிலுஞ்செயீ வதுமுண்டோ" என்றனனொன்க.

அ - கை.

[ஆரூடர்களிற்சிலர் தியானாதிகளைச்செய்வதென்றிற்கென விஞ்ஞாபிக்கற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

34. உத்தம குருவே யாரூ டருமா யொருதொழி லற்றவருள்
சித்த மடங்கு தியானி திகள்சிலர் செய்குவ தென்னென்ரு
வித்தல மருவும் பிராரத் வப்பிறி வெப்படி யப்படியே
மூத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே.

(இ-ள்.) உத்தமகுருவேயாரூடருமா யொருதொழிலற்றவருள் சித்தம டங்குதியானதிகள்சிலர் செய்குவதென்னென்ரால்,—எ-து. உத்தமமானகுருநா தனே, விவகாரங்களூளோர்தொழிலுமின்றி யெக்தொழிலுமிறந்து நிற்பவர் களுக்குள் சிலராரூடாயிருந்துஞ் சித்தமொருப்படற்கியைந்த தியானதிகளைச் செய்வதியாதிற்கெனக் கேட்பையாயின்:—இத்தலமருவும் பிராத்வப்பிறிவெப் படியப்படியே,—எ-து. பிறவிகாரணமாகவிப்பூமியினேரிடும் பிராரத்வபேதங்க ளெங்ஙனமெங்ஙனமோவங்ஙனமங்ஙனமே:—மூத்தரும் வெகுவிதமாகுவரென் பது முன்னேசொன்னேனே,—எ-து சீவன்மூத்தரு மனேகவிதமாவாரென்ப தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கின்றேனே யடிக்கடிகேட்பதென்னை,—எ-று.

(க-து.) ஆரூடராயிருந்துஞ் சிலர்கிருதகிர்த்தியராகில்லாது தியானதிகள் செய்வதென்னையென்ற வினவிற்குத்தரம் பிராரத்வகன்மபேதத்தாலெனவறிக வென்பது. ஆரூடருமாயென்பதிலும்மை, இழிவுசிறப்பு. பிராரத்வகன்மபே தச்சேடைகளே யவர்மேலேற்றிக்காணி னப்பியாசியரெனவும், அவரதீர்ந்த நிலையினே யவர்மேலேற்றிக்காணி ரூடரெனவுந்தோன்றுவர். (பிழை) காண் பார்மிசைத்தாதலினவராரூடரேயெனவதிகவென்பார்,பிராரத்வப்பிறிவெப்படி யப்படியே முத்தரும்வெகுவிதமாகுவரென்பது முன்னேசொன்னேனேயென் ரூர். சித்தமடங்குதியானதிகள்செய்தல், அப்பியாசம். இத்தலமருவும்பிராரத் வப்பிறிவு, அவரவர்வினைக்களவாக விம்மையிலவரவர்பாலெய்தும் பிராரத்வ பேதங்கள். இது பசுக்குழாத்துளதனதன்கன்று தேடித் தாயைமருவுமாறு போல்வது. என்னை, தாந்தாமுன்செய்தவினைதாமே யனுபவிப்பர்" என்ரூளை ளவையார். திரிசியநாட்டத்தில் வினையுண்டெனவும்,திருக்குநாட்டத்தில் வினை யின்றெனவுங்காணும். அதோமுகமாதலி னன்மாபலவாகவும், ஊர்த்தமுக மாதலினன்மாவொன்ரூகவுங் காணடலினதுபொருந்தும். இருவகைமுகமும், இருவகைநாட்டமுமின்றேல், அன்மாபலவெனலும், ஒன்றெனலும், வினை யுண்டெனலும் இன்றெனலுமெங்கே ? இவ்வுளவறியாதா - லெத்தனைபல்லூ ழிகாலம் வாதிங்கினுமென்பயன் ? உடலுஞ்சேட்டையுங்காரணமாக மாணுக் கன்கேட்டலின் விடையுந்தக்கது. (கூச)

[ஞானிகள்விவகார மூலகோபகாரம்காகவன்றித் தமக்கன்றென வுபமானபூர்வமாகவிக்கவியிற்கூறுகின்ரூர்.]

35 நல்லவ னேகே ளுலகுப காரஞ் ஞானிகள் விவகார
மல்லது வேறொரு பெறுபே றும்மிலை யதனற் பிணியுமிலை
வல்லி ருட்டி முதற்பல தொழிலால் வருபுண் ணியபாவ
மெல்லவ ருக்கு மனுக்கிர கஞ்செயு மீச னடைந்திலனே.

(இ-ள்.) நல்லவனே கேளுலகுபசார ஞானிகள்விவகாரம் அல்லது வேறே ருபெறுபேறும்மிலை யதனுற்பிணியுமில்லை,—எ-து. சற்புத்திரா வீணுச்சங் கியாதயான் கூறுவதைக்கேளு கி. ஞானிகள்செய்யும்விவகாரங்களனைத்து மூல கோபகாரமாகவன்றித்தமக்கன்று. அதனுல் தாமடையும்வேறேர்சுகப்பேறுமசு கப்பேறுமுளவோ யாங்கண்டிலம் இதுயாதுபோல்வதெனின்:—வல்ல சிருட்டி முதற் பலதொழிலால்வரு புண்ணியபாவம்,—எ-து செய்தற்கு வலியுள்ள சிருட்டியாதி பலதொழிலியற்றுவதால் வரக்கிடந்த புண்ணியபாவங்களை:— எல்லவருக்கு மனுக்கிரகஞ்செயு மீசனடைந்திலனே,—எ-து. ஏற்றற்பாலரெ வரோவவரவர்களுக்கெல்லாந் தரமறிந்துகொடுத்கருளுவனன்றி யீசன் தான டைந்தனனே, இலனே, இதுபோல்வதென்றறிதி,—எ-து.

அவரவர்சன்மார்க்கத்தாலுய்யும்பொருட்டவரவர்கருத்தின்வண்ணஞ் சிரு ட்டியாதிகன்மமீசன்செய்வனன்றிக் கெடுக்கற்கன்று. அதுபோல, ஞானவான் களுமுயிர்களுய்யும்பொருட்டவரவர்க்கியைவதும் கடிவதுமன்றித் தம்பயனுக் காகவன்று, இவர் சீவகாருண்ணியரன்றே லிவையெற்றிற்கு. ஈசன்முத்தியிலு யிர்களைக் கூட்டுவான்வேண்டிக் கனுகரணாதிகளைக்கொடுப்பித்துப் புசிப்பித் துத்தொலைப்பிப்பானென்பது பொய்யோ, மெய்யோ ? பொய்யெனின், புடை பெயர்ச்சியில்லாதிருக்கவேண்டும். இருத்தலின், காணப்படானேனும் வினை முதலிருக்கவேண்டும். இல்லாதயாதும்நிகழாது. ஆதலின், அவனன்றியோர ணுவு மசையாதென்றனர் சான்றோர்பலரும், இதனை மறுப்பார் தாம்யாதால் மூன்றவத்தையினுமாறதசைக்கப்பட்படுவதுமெனக்கிஞ்சித்துமறியாதார், பிறர் கூறினுங்காதுகொடார். இவரைவிவேகியென்பாரிவர்போல்பவர். இந்தத் தனு கரணபுவனபோகம்வாய்ந்தது, அவரவர்வினையாலன்றி யவனலன்று அவனு லெனின், விதிவிலக்கெற்றிற்கு. எதுகாறுமெனின். அயலத்தானென சென்னு ளவும். அப்பாலோவெனின், தானே தானுகில் விதிமதியெழற்கிடமின்றே ; இன்றாகவே, அனேத்துஞ் சின்மாத்திரமாவிளங்கும் விளங்கவே, மேல்கீழொப் பின்றியும் சுசாதியாதிமூன்றுமின்றியும் தான்மாத்திரமாக மிஞ்சிநிற்குதும். அப்பாலோர்செயலுமில்லை. இது தனது சுயகஷ்டத்தா லுணர்வதன்றிப் பேச் சாற் பயனின்றியமையும்.

(க-து) ஈசனேப்போல ஞானிகள்விவகாரமும், அசன்பயனு மூலகோப காரமாக முடிவதன்றித் தமக்கன்றென்பது. இதனலிவர்கிருதகிர்த்தியரென்ற யிற்று. (கடு)

[அனந்தவேதுக்களிலெந்தவேதுவினுல் ஞானியீசனுக்கொப்பா வனேவென்ற விஞவிற்குத்தரமிக்கவியிற்கூறுகின்றார்.]

36 ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுத்தரு ளுங்குரு வீச
யீசனு ஞானியு மொப்பென் றீசரெ யெப்படி யொப்பென்று
லீசனு ஞானியு மமதை யகந்தை யிகந்தது ஞலொப்பா
ரீசனு மம்பல சீவரு மாமுல கெல்லா மிவனுமே.

(இ-ள்.) ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவே.—எ-து ஈசனுகியும், அருவமாகியும், உருவமாகியு மெளிதிலெம்பா லெழுந்தருளுங் குருமூர்த்தமே:—ஈசனுஞானியுமொப்பென்றீரே யெப்படி யொப்பென்றால்,—எ-து. ஈசனுஞானியுஞ்சமானமாவரென்று முன்னர்கூறினீரே யெங்ஙன மொப்பாவரெனக் கேட்பையாயின்:—ஈசனுஞானியுமமதையகந்தை யிகந்தி னலொப்பார்,—எ-து. ஈசனும்ஞானியு மகமமதையற்றிருப்பதா லொப்பாவர். (இஃதன்றியும்)—ஈசனுமாம் பல சீவருமாமூலகெல்லா மிவனுமே,—எ-து. இந்தஞானி ஈசனுகியும், சமஸ்தசீவர்களாகியும், சகல லோகங்களாகியு மிருப்பன்,—எ-று.

சலட்சணவிலட்சணமாயும், நிட்களமாயும், சகளமாயுங் குருவிருத்தலின், ஈசனுமாயருவாயுருவாகி யெழுந்தருளுங்குருவே,—எ-ம், தன்னேயன்றிச் செகசீவபரமின்றுதலின் ஈசனுமாம் பல சீவருமா மூலகெல்லா மிவனுமே யெனவுங்கூறினர். சீவன்முத்தர் பிரக்ஞா சொரூபமாகவிளங்கலி னிவையெல்லாம்பொருந்தும். எங்ஙனமெனில், பிரக்ஞையையன்றி யிவைமூன்றுமுளவோ, இலவோ ? உளவெனில், சோதனை ஞாயங்களாற்காட்டலாம். கூடாதெனில், இலையென்பமே தோற்றுமாவெனின், ஓரணுவேனுஞ் சுயம்பாச்சோதனையிற் காட்டலாமே. கூடாதெனின், இல்லையென்றெடுத்துக்கொள்ளலாமே, இதன்றியும், அறிவு தன்னையதிஷ்டிச்சாஞானக்கிரியையுரியுமாவெனின், புரியும். எங்ஙனம். பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்தல், மருளோ, தெருளோ ? தெருளெனின், அறிவு சலனமுறுமா ? சுபாவமெனின், சுபாவத்துக்கு விதிவிலக்கெற்றிற்கு. மருளெனின், பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்வதினலன்றே அறிவு மருளென்றுயிற்று. ஆகலாமா, ஆகக்கூடாதே அதனே யுன்னுதலென்னே. தோற்றத்தைமெயயென்பதூஉம், அறியாமையை யறிவென்பதூஉம் நமதுபிழை அதனே மறுக்குதும். தோற்றமா நின்றதும் மருளாநின்றதும் ஒப்பியே வேறன்றென வுணர்க மருளில் பல விவகாரமியையும்போது தெருளிலியையாதோ ? கூறவேண்டுமோ.

(க-து.) இவன் ஒப்பிமாத்திரமாவிளங்கலி னிவனுக்கீசனேயுவமிதத்தி லென்னிழிவெனக்குறிப்பித்தாரென்பது. தன்னே மறந்தியற்றுவதிலு மறவாதியற்றல், மிகச்சிரேட்டமாதலி னீசனுக்குவமிக்கப்பட்டதென்க. (கூசு)

அ - கை க.

[எல்லாச்சீவருமிவனுமெனவே, யதுகாணமா வினுதலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

37. எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்றன் முத்தியடைந்
தெல்லாச் சீவரு முத்தி பெறுமை யிருப்பா னேனையா
வெல்லாச் சீவரும் வெவ்வே றுனு லிவனெல் லாமலனே
யெல்லாப்பொருளு முரைத்தருள் குருவேயிதைநீர் மொழியீரோ

(இ-ள்.) எல்லாச்சீவருமிவனுமென்றீ ரிவன்றான் முத்தியடைந்தெல்லாச் சீவருமுத்திபெறுமலிருப்பானேனையா,—எ-து. ஐயனே சமஸ்தசீவர்களு மிவனேயென்றுரைத்தீர், இவன் முத்தியடைந்ததுபோலெல்லாச்சீவரு முத்தியடையவேண்டுமே, அடையாததற்கேதென்னே கொலோ:—எல்லாச்சீவரும்வெவ்வேறுமன்றே. வெவ்வேறுகுமாயல், இவனெல்லாச்சீவருமல்லனுமே:—எல்லாப்பொருளு முரைத்தருள்குருவே யிதைநீர்மொழியீரே,—எ-து. அரியபொருளனைத்தையுமுரைத்தருளிய குருநாதனே யிதையும்நீர்விளக்கியருளும்,—எ-று.

இவனே யெல்லாச்சீவருமெனின், இவன்போலவை முத்தியடையாததென்னை. அடையாததா லுயிர்வெவ்வேறுகவேண்டும் வெவ்வேறுகுமெனின், இவனெல்லாச்சீவருமெனல் பொருந்தாதென்க. முத்தியடையவெனற்பாலது, முத்தியடைந்தென்றுரையது; "சொற்றிரியினும்பொருடியாவினைக்குறை" யென்பதனுற்காண்க. எல்லாச்சீவரு முத்திபெறுமலிருப்பானே னென்றவிடத்து ஞானி முத்திபெற்றவனெனக் குறிப்பாற்கொள்ளவொட்டாது இவன்றான் முத்தியடைந்தென வெள்ளிடையாகக் கூறினர். இனி முத்தியடைவானேயடைந்தவனென்றது துணிவுபற்றி. இமையளவிற் பூர்வவாசனையாலேனு மாடியிற் பிரதிபிம்பம்போல வறிவிற்சடதியிலெழுந்தடங்குந்தேகாதி பிரபஞ்சப் பாவைகளாவின்றே யெங்ஙனந் துணிவுபெறலாம். "களங்கமற்றகண்ணுடிதன்முன் வேறேர்களங்கமற்றகண்ணுடி காட்டும்போதென்ற" கவியிற் கூறியவாறிருப்பாதலி னங்ஙனங்கூறவேண்டுவதாயிற்று. ஆதலிற்பழுதின்றென்னின், அங்ஙனமிருப்பினுமிப்போதே முத்தியென்னலாமா, இனியெய்தற்பாலதாகியநிரதிசயானந்தவாழ்வுங்ஙனேயெய்திய தாலெனென்னையெனின், இங்ஙனமேற்கோளுளவோ? "ஏட்டிலறிவின்றி யிறைதன்னிலறிவின்றியிவ்வுடம்பினுடனே வீட்டிலுறைவானையினிவீடு பெறுமென்பதுவிளம்புகிலமே" என்றுர்த்தத்துவராயர். 'ஐயத்தினீங்கித்தெளிந்தார்க்கு வையத்தின்வான நணிய தடைத்து" என்றுர்திருவள்ளுவர். இதுநிற்க.

(க-து.) இவன்போலெவ்வுயிரு முத்தியடையாததற்கேதென்னை யென்பது. (கஎ)

[பொதுப்படச்சீவனெனினு மதுமலரகிதத்தாலான்மாவெனவும், சகிதத்தாற்சீவனெனவுங்கொளக்கிடத்தலின், ஆன்மா, ஏகமெனவும், சீவன் பலவெனவுமிக்கவியிற் கூறுகின்றுர்.]

38. அகமெனு மான்மா பூரணமேக மநேக விசஞ்சீவ
னகமெனு மந்தக்கரண வுபாதிக ளளவிலை யாதலினுற்
சகமுழுதுங் குளிர் சந்திர னேகஞ் சலசந் திரர்பல வாஞ்
சகமதி லேரி குளஞ்சிறு குழிசால் சட்டி குடம்பல வால்.

(இ-ள்.) அகமெனுமான்மாபூரணமேகம்,—எ-து. நானென்னுமான்மாவானது பரிபூரணமாகவிளங்கலின், ஏகமெனவும்:—அனேகவிதஞ்சீவன் அகமெனுமந்தக்கரணவுபாதிக ளளவிலையாதலினுல், —எ-து. நானென்னுமந்தக்கரணோபாதிக ளளவின்றுதலின் சீவன்பலவித மெனவுமாம்:—சகமுழுதுங் கு

ளீர்ச்சந்திரனேகஞ் சலசந்திரர்பலவாம், எ-து. உலகமுழுதுங் குளிர்ச்சிசெய்கின்ற வானசந்திரனேகமும், சலப்பிரதிபிம்பசந்திரர்கள் பலவுமாம்:—சகமிதிலேரிகுளஞ்சிறுகுழிசால் சட்டிகுடம்பலவால், —எ-து. இவ்வுலகத்தின்கண்ஏரியும், குளமும், சிறுகுழிகளும், சாலும், சட்டியும், குடமும், இவைபோல்வனபிறவும் பலவாயிருத்தலால, எ-று.

அகமென்பது, நான். தேகோகமுதல்சிவோகமீறாவுள்ள வகமென்னும் பேதங்களளவிற்புகாதன. இதிலந்தக்கரணவுபாதிகளுமடங்கின. அந்தக்கரணபிரதிபலனன் {சிதாபாசனென்றிருத்தலானும், இவ்வந்தக்கரணமே வுபாதியாநிற்றலானும், இவ்வுபாதிபேதங்களளவைகடந்தனவாதலானும், இங்ஙனமளவுகடந்ததுபற்றி யனேகவிதஞ்சீவனெனப்பட்டது. அறிவு, உபாதியெனவிரண்டாம். மெய்யறிவுநானுகவிளங்கல், ஆன்மா. யாதானு மோருபாதியையானெனவழங்கல், சீவன். இதுவுமறிவேனுங் கற்பிதத்தையானெனலால், அறியாமையே. ஆதலினிதனைச்சிதாபாசனென்பர். அகமெனுமான்மாவென்றூற்போல, அகமெனுமுபாதியெனக் கூட்டிப்பொருள்கொள்க. அகமெனுமான்மாவென்றூற்போல, அகமெனுஞ்சீவனென்றுரையாதது, ஆன்மாபொருண்மாத்திரமாயும்; சீவன் சொன்மாத்திரமாயிருத்தல் பற்றியென்க. என்னை, "சீவனென்கின்றசொல்லும் பொருளுமாச்சிதந்தவான்மா." என்றூர் வசிட்டபகவான். அறிவையன்றி யானெனற்குப்பொருளின்மையின், ஆன்மாவெனப்பட்டது. மூன்றவஸ்தாவயமாகாதவற்றைச் சாட்சியாநின்றுணர்வ செவ்வறிவோ, அஃதான்மாவெனவும், அவஸ்தைதோறு மவ்வவ்வுபாதிவயத்தாநின்றுணர்வதெவ்வறிவோ, அதுசீவனெனவுங்கொள்க, தன்னைச்சொப்பிரகாசமாக்காண்டல், ஆன்மா. தன்னையுபாதியாக்காண்டல், சீவன், எனவே, சொன்மாத்திரமாயும் பொருண்மாத்திரமாயுமெனக் கூறியதிலையமென்னை. வானசந்திரன்போல்வதான்மா. சலசந்திரன்போல்வதுசீவன். வானசந்திரன்; எதார்த்தமாயும், ஏகமாயும், பிரதிபிம்பமாயும்நிற்கும். அதுபோல, ஆன்மா ; எதார்த்தமாயும், ஏகமாயும், பிம்பமாயும்நிற்கும். சீவன்; கற்பிதமாகவும், பலவாகவும், பிரதிபிம்பமாகவுநிற்கும் ஆதலினுவமைபொருந்தும். எழுவகைத்தோற்றமாநின் றுயிரெனப்பெயர்கொண்டு சுகத்தைதுகர்வதுடலோ, உணர்வோ ? உடலெனின், தன்னைத்தானுணரவேண்டும். உணராதெனின், உடலன்று, உடலன்று. உணர்வெனின், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனுதியந்தக்கரணங்கள், உயிர் இவைதன்னைத்தானறியாததாலிவையனைத்துமுணர்வன்று. தன்னைத்தானுணரற்பாலதெதுவோ வதுமெய்யுணர்வென்னப்படும். இந்தமெய்யுணர்வையான்மாவெனவும், அவையனைத்துங்கற்பிதவுணர்வாதலின், சீவனெவுங்கொள்க தானுகிறவுணர்வையெட்டவறியார் கற்பிதவுணர்வைச்சீவனெனவும், ஆன்மாவெனவும் பாகுபாடு சற்றுமுணராது மிசிரிம்பித்துக்கூறுவர். இவர்மொழி வாய்மையன்று. எந்தவுயிரைச் சோதிக்கினும், அறிவாகவேமுடியுமாதலாலது நிணபாலிடங்கழன்றது, அதனை யான்மாவென்பதற்கையமென்னை. அவ்வறிவையுபாதியுளொன்றுமுடிக்கினதனைச்சீவனென்பதற்கையமென்னை. அறிவொன்றேபல்லுயிராக்காண்டலி னிவ்வுவமைதள்ளற்பாற்றன்று இதனைமறுப்பார், தன்னைவிட்டுசோதிப்போர்.

(க-து.) இவன்போலவெவருமுத்தியெய்தாதவென்னையென்ற விஞவிற் குத்தரங்கூறுவான்வேண்டி யிக்கவியிலுவமைகாரணமாக வுயிரொன் றெனற்கும் பலவெனற்குமிலக்கணங்கூறியதென்பது. (கூஅ)

அ - ஸை க.

[ஞானியேபலசீவனொனற்கும் இவன்போலவர்கள் முத்தியடையாததற்கு முதாரணமுகத்தா லிக்கவியிலுத்தரங்கூறின்றார்.]

39. சட்டி குடங்களி னொன்று நசித்திட வதனுட் சலசந்த்ர
னொட்டு முதற்சந் திரனெடு கூடி மொழிந்தவை கூடாவே
கட்டு முபாதி நசித்திடு சீவன் காரண வான்மாவிற்
கிட்டு மயிக்கிய முபாதி கெடாதவர் கேவல மாகாரே.

(இ-ள்.) சட்டிகுடங்களி லொன்றுநசித்திட வதனுட்சலசந்த்ரன் ஒட்டு முதற்சந்திரனெடுகூடி மொழிந்தவைகூடாவே,—எ - து. முன்னர்சட்டிகுட முதலாகக்கூறிய வுபாதிகளுளோருபாதிநசிக்க வக்கணமே யதனுட்காணப் பட்டுநின்றசலசந்திரன் தனக்குமுதலாகவானத்தினின்றுள்ள பிம்பசந்திரனே டொட்டியேகமாகும். ஏனையபிரதிபிம்பசந்திரர்க ளங்ஙனமேகமாகக் கூடுமா கூடாவே. (அதுபோல :— கட்டுமுபாதிநசித்திடுசீவன் காரணவான்மாவிற்கிட் டுமயிக்கியம்,—எ - து. பஞ்சாத்திருக்குங்காரணோபாதியை நசிக்கச்செய்தசீவன் எல்லாவுயிர்க்குமுதற்காரணமாநின்றுள்ள வதிஷ்டானவான் மாவிற்கலந்தேக மாவன்:— உபாதிகெடாதவர்கேவலமாகாரே,— எ-து. காரணோபாதியைநசிக் கச்செய்யாத வேனையசீவர்களயிக்கியமாகார்,—எ-று.

உபாதிநசித்திடுசீவன், உபாதிகெடாதவரென்னுமிடத் திவ்விருவுபாதிக ளுந் தூலதேகமென்றருத்தங்கோடற்கன்றே ; சட்டிகுடங்களி லொன்று நசித்திடவென்றுவமானித்தார். இங்ஙனமிருக்க அவித்தையாகியகாரணவுபாதி யென்றருத்தங்கொண்டதெற்றிற்கோ, சட்டிகுடசந்திரனென்னுஞ் சலசந்திர னென்றமையானும், சலாதாரத்துக்காகவன்றிச் சட்டிகுடங்களாதி கூறற்கவ சரமின்றுதலானும், பிரதிபிம்பித்தற்காய தர்மஞ் சலத்திலிருப்பதானும், அந் தத்தர்மஞ்சலமுமன்று சலத்தையன்றிவேறுமன்று. சலமெனின், சலம்பிர தி பிம்பமாகுமா; வேறெனின், சலச்தையன்றிவேறுகுமா; இங்ஙன முரணுமாத லானும், அந்தத்தர்மம்பேதாபேதமாநிற்குமாறுபோன்று, தூலான்மாவென்னு தந்தக்காரணபிரதிபலன வான்மாவென்றமையானும், காரணதாரத்துக்கன்றி யெவ்வகைதூலமுங்கூறற்கவசரமின்றுதலானும், பிரதிபிம்பத்திற்காயதர்மங்கர ணத்திருப்பதானும், அந்தத்தர்மங்காரணமெனின், காரணம்பிரதிபிம்பமாகுமா? காரணத்தையன்றிவேறுகுமா; இங்ஙன்முரணுமாதலானும், அந்தத்தர்மம்பேதா பேதமாநிற்குமாதலானும், இதனையேய வித்தையெனக் கொண்டுவமானித் ததென்க. மகானிடத்துமேனையோரிடத்துங் காரணமிருந்துமையங்கிரிபுரிந்தற் கும் அகறற்குமிடமின்மையின் நசித்திடவென்றதவித்தாவுபாதிக்கே தகுமென வறிக, இதுநிற்க. தூலதாசம் முத்தியெனின், பிரளயமுத்தியாகக்கண்டிலமே.

சூக்குமநாசம்முத்தியெனின், சர்வசங்காரம்முத்தியாகக்கண்டிலமே. ஆதலினு பாதியைக் காரணவுடலென்றன்றொமதாசிரியர். காரணவுடல், அறியாமை. அதவாது; செகசீவ பரஞ்சுயம்பன்றியிருக்க விவற்றைச்சுயம்பென்றும், அநாதிசித்தியத்துவமென்றுமுணர்தல். எனவே, அறியாமையெனலெங்கெங்குள்ளதோ, அங்கங்குளதுசீவன். இலதேலிலதென்றுயிற்று. ஆகவே, சீவன், அறியாமைவடிவ னெனப்பெற்றும். பாலையன்றித்தயிரோர் முதலன்றுமைபோல, அறிவையன்றி யறியாமை யோர்முதல்ன்று. அறியாமைநசித்தவிடத்தஃ தெங்ஙனமாம், தனதுமுதலாம். நசியாவதியாமை தனதுமுதலாகாது. ஒர்சந்திரனே பலசந்திரஞகக்காண்டல்போல, ஓரறிவேபலவறிவாகக் காண்கின்றது. அவைபலவுஞ்சந்திரர்களாயின், இவைலபவுமறிவுகளாகலாம். ஆகாவேலாகாவென்க அவற்றுளோர்சந்திரனசிக்கில் முதல்சந்திரனேடொட்டும். அதுபோல, அவற்றுளோரறியாமை நசிக்கின் முதலறிவோடொட்டும். ஏனையவையங்கேயொட்டாவாறுபோன்று,இங்குமொட்டாவாம், ஆதலினிவ்வுவமைபொருந்தும்.

(க-து.) சீவன்முத்தனேபலசீவனெனலும், பலசீவருமுத்தியெய்தாரெனலு மேற்கவனமந்ததென்பது. (கூக)

அ - கை.

[முன்னர் ஞானியீசனுமாமென்றதற் கொருவாற்றலுத்தரங்கூறினீ, ரதனேப்பூரணமாகவேற்றற்குத்தடைகளுள, அவற்றிற்குவிடை தரவேண்டுமென்லே யிக்கவியிற்கூறுகின்றார்.]

40 இவனயன் மால்சிவ னெனிய வீசரோ டெப்படி யொப்பா வன்சிவன்முதன் மூவரு மகில சிருட்டித் திதிநா சங்கள்செய் வா ரவர்பிறர் மதிகளு மூக்கா லங்களு மறிவார் விபுவா வார் தவமிகு குருவே யிவனுக் கவைபோற் சற்றுங் காணே னே.

(இ-ள்.) இவனயன்மால்சிவனெனிய வீசரோடெப்படியொப்பாவன்,எ-து. இந்தஞானவான், பிரமா, விட்டிணு. ருத்திரன், என்றீஸ்வரத்துவம் வாய்த்தவரோ டெப்படியொப்பாவன்:(—ஏனெனில்) சிவன்முதன்மூவருமகிலசிருட்டி திதிநாசங்கள்செய்வார்,—எ-து. உருத்திரன்முதலியமூவருஞ் சமஸ்தத்தையுஞ் சிருட்டி, திதி, சங்காரங்கள்செய்யாநிற்பர்:—அவர்பிறர்மதிகளு மூக்காலங்களுமறிவார்விபுவாவார்,—எ-து. இன்னுமவர்கள் பிறர்நினைப்பவைகளையுந் திரிகாலங்களையுமறிவார்கள், அறிவதுமன்றி, விபுவுக்கெல்லாம் விபுவாவார்கள்:—தவமிகுகுருவேயிவனுக் கவைபோற்சற்றுங்காணேனே,—எ-து. தவத்தில்மிகுந்தகுருநாதனே இந்தஞானவானுக்குச்சாமர்த்தியங்களிலொன்றுமிருக்கக்கண்டிலனே யிதென்னசிறுமை,—எ-று.

மூவருக்குமீசத்துவஞ் சிருட்டியாதிதொழில்களால்வாய்த்தலி னீசனெனவும், குரு எல்லாத்தவங்களிலுமிக்கவராதலின் தவமிகுகுருவேயெனவுங்கூறினார்.

(க-து.) மும்மூர்த்திகோலமீசனுதலி னிவனுக்கு ஞானியொப்பாவனெனில், 'சிருட்டியாதிதொழில்களும், சர்வஞ்ஞத்துவமும், திரிகாலஞானமும்,

வியுத்தவமுமெங்கே, இல்லையேயென்பது. ஞானமாலைங்நான்கு மிருக்க வேண்டும். இன்றேல், ஞானமல்லவென்பார்பலரும் ; இவ்வேதகொண்டுகேட்டனனென்க. இங்நான்கும், ஞானத்தினதுசேட்டைகள் இது, புரிவானதுசேட்டைகளைப் புரிவானென்பதுபோலும். ஆகுமா ? ஆகுமெனின். வினைமுதலே வினையென்னல்வேண்டும், அங்ஙனமெப்பாடையிலக்கணமுமின்றே, இதுஞான்த னவிலக்கணமாகவேண்டும், இங்ஙனமெங்குமின்றே, ஆதலிற்பொருந்தாது. பொருந்துமெனில், குதர்க்கம். குதர்க்கம், முறைவழுஞானமெனல், எல்லாச் சேட்டைகளுமற்றுத் தான்மாத்திரமாவிளங்கலென் போர்துண்ணுணர்வோர். இவரேஞானியரென்போர். இப்பேதஞ்சிலவரிது, (சo)

அ - கை க.

[ஞானியுமீசனுமாயையாற்பேதமாவரன்றி, யாதிவாற்பேதமாகா தென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

41. தடத்து நீர்நிலாத் திரியெரி யுபயமுந் தழுவுமூர் தனைக்காக்குங், குடத்து நீர்விளக் கினிலொளி யிரண்டுமோர் குடும்பமாத்திரங்காக்கு, மடித்த மைந்தனே ஞானியு மீசனு மறிவினுற் பிறிவில்லை கெடுத்த மாயையின் குணங்களான் மேலென்றுங் கீழென்றும் பிறிவா மால்.

(இ-ள்.) தடத்துநீர்நிலாத்திரியெரியுபயமுந் தழுவுமூர்தனைக்காக்கும்,—எ-து. தடாகசலமும், மத்தாப்புமாகியவிவ்விரணமும், ஏகமாதின்றுள்ளவோரூரைக்காக்கும்:-குடத்துநீர்விளக்கினிலொளி, யிரண்டுமோர்குடும்பமாத்திரங்காக்கும்,—எ-து கடசலமும் தீபவொளியுமாகியவிவ்விரண்டும் ; ஒர்குடும்பமாத்திரங்காக்கும்:—அடித்தமைந்தனேஞானியுமீசனு மறிவினுற் பிறிவில்லை, எ-து. என்னைவிடாதடித்தஞானபுத்திரா ஞானியும் ஈசனுமாகியவிவ்விருவரும், ஞானத்தினுற்சற்றும்பேதமிலராவர்;-கெடுத்தமாயையின்குணங்களால் மேலென்றும் கீழென்றும் பிறிவாமால்,—எ-து. ஒன்றுபடாமற் கெடுத்தமாயையின் குணபேதத்தால் மேலென்றும் கீழென்றும்வேறுபாட்டையடையும்,—எ-று.

தழுவுமூரென்றது; வெவ்வேறுகாதேகமாகநின்றவூர். குடும்பத்தைக்காப்பது, ஊரைக்காக்காது. ஊரைக்காப்பது, குடும்பத்தையுங்காக்குமெனப்பொருள்படலின், ஞானிகாத்தல், தன்மட்டும். ஈசன்காத்தல், ஞானியுடனனைத்தையுமெனக்கொள்க. இங்கேகாத்தல், தனுகரண புவனபோகங்களே. இதமாயாசம்பந்தமாதலின், கெடுத்தமாயையின்குணங்களால் மேலென்றுங்கீழென்றும்பிறிவாமால்,—எ-ம், சமஷ்டிவியஷ்டியென்னும்பேங்களே யிருவருஞ்சின்மாத்திரமாக்காத்தலின், ஞானியுமீசனுமறிவினுற்பிறி வில்லையெனவுங்கூறினார். அறிவினுற்பிறிவில்லையென்பதைப் பிரமன் கூறியபிரமதேதையினும், விஷ்ணுபகவான் கூறியபகவத்தேதையினும், சிவன் கூறியசிவஞானபோதத்தினுங்காணலாம். இம்மூவரும் ஞானத்தையேபிரதிபாதித்தனர். ஆதலினிவர்மூவரும் ஞானியரே. இவர் உபாதி குணந்தொழிலாற்போல, ஞானியும்பேதித்தலின்

இதமாயாசம்பந்தமென்றுயிற்று, தனுகரணபுவனபோகங்களைத் தனித்தனிசீவர்காக்கினும், பிரித்தலுங்கூட்டலுமீசனுதலா லிவ்விரண்டுகாத்தலுமிவனுக்கேபொருந்தும.

(க-து.) ஞானியுமீசனுமாயையாற்பேதமுறுவரன்றி யறிவாற்பேதமுறுரென்பது. மாயையென்பதறியாமை. அதுசெகசீவபரங்களேமெய்யென்றுணருமறிவு. இம்மூன்றுமறிவுக்கனர்த்தம், அறியாமைக்கருத்தம். இதமூடர்பாலது, அதுவிவேகியர்பாலது ; அறிவுவொத்தலின் ஞானியையீசனென்பதேற்கும் (சக)

அ - கை.

[மாலிடரிற்சிறந்தோர்சித்துப்புருடர், பிரவியிற்சிறந்தோர்தேவர். அதுபோலப் பிரமபாவனையிற்சிறந்தோரெவர். என்பதையிக்கவியிற்கூறுகின்றார்.

42 நரரின் மன்னனைச் சித்தரைப் போலவே நாரணன் முதலான சுரர்கண் மாயைவல் லவரணி மாதிக டொக்கமா தவமிக் கோர் தரணி மானிடர்க் கவைகளில் லாமையாற்றுழ்வள ரானு லும் பிரம பாவனை யாலிவ ரவரெனும் பேதமொன்றிலை பாராய்.

(இ-ள்) நரரின் மன்னனைச்சித்தரைப்போலவே,— எ - து மானிடர்களில் அரசனும், அரசனில் சித்துப்புருடனு மெங்ஙனமதிகாரத்தானும், மகிமையானுமேலிட்டார்களோ அவர்போலப் பிரவியில்; — நாரணன்முதலானசுரர்கள் மாயைவல்லவரணிமாதிக டொக்கமாதவமிக்கோர்,— எ - து. விட்டுணுமுதலியதேவர்கள் மாயாவல்லபமுடையோர், அணிமாதிசித்திரிணிறைந்துள்ளமகத்தானதவத்தில் சிறப்புற்றோர்: —தரணிமானிடர்க் கவைகளில்லாமையால்தாழ்வுளரானுலும், —எ - து. பூமியில்மனிதர்களுக் கவ்வல்லபங்களில்லாமையா லந்நிலைக்குத்தாழ்ந்தநிலையினராயினும்: — பிரமபாவனையா லிவரவரெனும்பேதமொன்றிலைபாராய், —எ-து, பிரமமே தானெனச்செய்யும் பாவனையினுல் மானிடரிவரென்றும், தேவர்களவர்களென்றுங் கொள்ளும்பேதம் யாதானுமொன்றுளதோ ? இல்லையே நீயேயிதனைச்சோதித்துக்காணுதி, —எ-று.

பிரமபாவனைசெய்வோர் மானிடர்மாத்திரமன்று தேவருமாதலி னிவ்விருபேதமுமதினுண்டோ ? உண்டெனில், அதுபிரமபாவமன்று. நரரிலென்பது போலத் தேவரிலெனக்கூறலாமெனின் நாரணன்முதலான சுரர்களென்றிருக்கின்றதே, ஆதலிற் பிறவியிலெனவருவித்தாம். பிறவியிற்சிறந்தனரென்றுணர்த்த எழுவகைத்தோற்றத்தில் தேவரைமுதலில்வைத்து வழங்குகின்றதன்றே ? இதனுலுமுணர்க. மனிதரில் மன்னனும், சித்துப்புருடனு மென்சிறப்புரினும், மனிதரே. அதுபோலப் பிறவியிற்சிறந்ததேவரில், இந்திரனும், பிரமனும், ருத்திரனும், நாரணனும், அணியணியாகவென்சிறப்புரினுந்தேவரே. இவர் பிரமபாவனையிலெவர் பேதமின்றுதலால், ஞானி தேவனுமல்லன், மானிடனுமல்லனென்றுயிற்று. சித்திபெற்றதாலுயர்வும், பெறுததாலிழிவும், பிரமபாவனையிலெங்கே, யின்றுதலால், பிரமபாவனையாலிவரவரெனும் பேதமொன்றிலைபாரா யென்றார்.

(க-து.) பிரமபாவனையில்பேதமின்மையின் ஈசனுஞானியுமொப்பனென்ற தையபின்றியேற்கப்படுமென்பது. இதனைச்சோதனையாற்காண்க. (சஉ)

அ - கை.

[அஷ்டமாசித்திகளு மிவ்வுலகில்முனிவர்பாலதாநிகழ யாங்கண்டிருக்க, இவையீசனது சுதந்தரமென்ற தென்னையென்றவிஞவிற்கு, இவர் கள்தத்தந்தவமுயற்சியாற் சித்சிலவடைந்தனரன்றிச்சுதந் ரரல் லனென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

43. முத்தி நல்கிய சற்குரு வேபல முனிகளுக் கணிமாதி, சித்தி பூமியிற் கண்டிருக் கவுமந்தச் செல்வமீ சனதென் றீர், புத்தியொத் திட வுரைத்தரு ளென்றிடிற் புகழுமீ சனேவேண்டிப், பத்தி செய்திடுந் தவத்தினுல் யோகத்தாற் பலித்ததென் றறிவாயே

(இ-ன்.) முத்திநல்கிய சற்குருவேபல முனிகளுக்கணிமாதி சித்திபூமி யிற்கண்டிருக்கவும்,—எ-து. முத்திசாம்பராச்சியத்தை யடியேனுக்களுக்கிர கித்தசற்குருநாதனே, பலமுனிகளுக்கணிமாமுதலிய சித்திகளுளவாகப்பூமி யில்கண்டிருக்கின்றனமே யங்ஙனங்கண்டிருக்கவும்: — அந்தச்செல்வமீசன தென்றீரே புத்தியொத்திட வுரைத்தருளென்றிடில்,— எ-து. அந்தமகா செல்வமான தீஸ்வரசுதந்தரமாமென்றுரைத்தருளினீர் ; அஃதெங்ஙனம் அடி யேன் புத்திக்கொத்திருக்கும்வண்ணந் தெரிவிக்கவேண்டுமெனக் கேட்பையா யின்:—புகழுமீசனேவேண்டிப் பத்திசெய்திடுந்தவத்தினுல் யோகத்தாற் பலித் ததென்றறிவாயே,—எ-து யாவரானும் புகழ்ந்தருச்சிக்கத்தக்க பரமசிவத்தை வேண்டி யிருந்தபத்தியோடுசெய்யுந்த வத்தினுனும், கிரியாயோகத்தினுனும் வாய்த்ததென்றறிந்துகொள்ளுதி,—எ-று.

முன்கவியில் நாரணன்முதலியதேவர்கள் ; அணிமாதிகடொக்கமாதவமிக் கோரெனவும், இக்கவியில் பலமுனிகளுக் கணிமாதிசித்திகள் தவத்தினுல் யோ கத்தாற்பலித்ததெனவுங் கூறினதால் இருவருக்குந் தவங்காரணமாக அணிமா திகள்வாய்த்தவென்றுரையிற்று. இவர்களுக்குவாய்த்ததீசனுல், அவர்களுக்குவாய்த் ததாராலெனின், அவ்வீசனுலெனவறிக. ஈசனெனல் மாயாரகிதனே. ஏனை யோர்மாயை வல்லவரென்றதனுல் மாயாசகிதரெனத்தானே யமைகின்றது. அவர்கள்மிக்கதவத்தா லணிமாதிகள் முழுதும்பெற்றனர், இவர்கள்தவத்தளவா கச்சிற்சிலபெற்றனர். அணிமாதிகளவர்கட்கேயுரிமை. இவர்கட்கிரவல். என வே, ஈசனதமிசந்திரிமூர்த்திகளென்றுரையிற்று. ஆயினீசனல்லர். இவர்களீசனு டையகோலமன்றே, கோலமாவீசன் ? அல்லவே, இதுநிறம்.

(க-து.) ஞானிகள் சித்திகளேதவத்தினு லடைந்தனரென்பது. சுதந்தர ரன்று. (சஊ)

அ - கை.

[இப்போது ஞானிகளுக் கவர்கள்போற் சித்திவாய்க்காததற் கேதென் னையென்று விஞவலி யிக்கவியிற் கூறுகின்றார்.]

44. சிவசொ ரூபமாந் தேசிக மூர்த்தியே சித்திமுத் திகளிரண் டுந், தவமு ளோரடைகுவரெனி லவர்கள்போற் சகலரு மடையா ரோ, வவர்கள் பூருவஞ்சித்தியு ஞானமு மடைந்ததுங் கண்டோமே, யிவர்கண் ஞானிகளென்றிடிற் சித்திக ளிவர்க்கிலா வகையேதோ.

(இ-ள்.) சிவசொரூபமாந்தேசிகமூர்த்தியே சித்திமுத்திகளிரண்டுந் தவமு ளோரடைகுவரெனிலவர்கள்போற் சகலருமடையாரோ,—எ-து. சிவசொரூப மேதருமுகுர்த்தமாக வெழுந்தருளியகர்த்தனே சித்திமுத்திகளென்னு மிரண் டினையுந் தவமுடையவர்க ளடைவார்களென்றுரைத்தால் அவர்களைப்போலச் சகலமானிவரு மதனை யடையாததற் கேதென்னைகொலோ:—அவர்கள் பூருவஞ் சித்தியுஞானமு மடைந்ததுங்கண்டோமே,—எ-து. அந்த ஞானிகள் பூர்வத்திற் சித்தியையும், ஞானத்தையுமடைந்ததையுஞ் சுருதியாற்கண்டிருக்கின்றனமே: இவர்கள்ஞானிகளென்றிடிற் சித்திகளிவர்க்கிலாவகையேதோ,—எ-து. இப்போ திருக்கிறவர்களையும் ஞானிகளென்றுசொன்ன லிவர்களுக்கச்சித்திகளில்லாத தற் கேதென்னைகொலோ, அறிகிலம்,—எ-று.

அவர்கள்போற் சகலருமடையாரோ, அடைவார்களெனின், இவர்க்கிலா வகையேதோ என்று வினவவேண்டியது. இதைவிட்டு அடைவாரோவெனப் பாடமோதி அடைவார்களாவென்றுரைகூறின், அடையமாட்டார்களென்ற தாகின்றதே, இது வினவா ? அல்லவே. அடையாரோ இவர்க்கிலாவகையேதோ என்பதிரண்டுஞ் சேடன்வினா. அடைவாரோவென்றது விடை. இவ்விடை குரு வினதாகவேண்டும். இக்கவியில் வினாவையன்றி விடையொன்றுமின்றே யிது தோன்றுமை. வழுவன்று. பின்கவி ஆசான்விடை. இக்கவிமாணாக்கன்வினா. இதையறிந்துரைகூறவேண்டும். இது நிற்க.

(க-து.) பூர்வஞானிகள் சித்தியெய்தினரெனில், இப்போதுள்ளஞானிய ரடையாரோ, அடையாரதென்னையென்பது இவை வினா. (சக)

அ - கை.

[முன்னர்தவமென்றார் அஃதிருவகையெனவும், அவற்றுலெய்தும் பயனினையவெனவு மிக்கவியிற்கூறுகின்றார்.]

45 காமி யத்தவங் காமிய மொன்றையுங் கருதிடாத் தவமென்றும்
பூமி யிற்றவ மிருவகை சித்தியும் போதமுந் தருமைந்தா
வாமி வத்திலொன் றியற்றினு லொன்றையே யடைகுவ ரிதுதீர்வை
யாமு ரைத்தவவ்விரண் டையு மியற்றினுன் றுள பெரியோரே.

(இ-ள்.) காமியத்தவங்காமியமொன்றையுங் கருதிடாத்தவமென்றும் பூமி யிற்றவமிருவகைசித்தியும் போதமுந்தருமைந்தா,—எ-து. காமியத்தவமெனவும், நிட்காமியத்தவமெனவும் பூமியிலிருவகைத்தவமுண்டு. ஞானபுத்திரா ! இவை சித்தியையேனும் முத்தியையேனுந்தவறு தந்துவிடும்:—ஆமிமற்றிலொன்றி யற்றினு லொன்றையேயடைகுவரிதுதீர்வை,—எ-து. இங்ஙனமாகநின் றுள்ள

விரண்டினுள் தவமொன்றையேபுரிந்தோ ரதற்குரிய பலனென்றையே யடை வார்க்ளிதுதீர்ப்பாம்:—யாமுரைத்த வவ்விரண்டையு மியற்றினுரன்றுள பெரி யோரே,—எ-து. யாமுன்னர்கூறிய வவ்விருதவங்களையுஞ், செய்தவராகும் பூர்வத்திலுள்ளஞானிகள்,—எ-று.

ஒன்றிலிச்சைகருதிச்செய்யுந்தவம், காமியத்தவம் கருதாதுசெய்யுந்தவம் நிட்காமியத்தவம். காமியத்தவம் சித்தியையும், நிட்காமியத்தவம் முத்தியையுங் கருமெனக்கொள்க. ஒன்றியற்றில் மற்றோர்பயனுறுதென்பார், ஆமிவற்றி லொன்றியற்றினு லொன்றையேயடைகுவரெனவும், முன்னர் சித்திமுத்திய டைந்தோ ரிருவருமுமையன்றவராகுமென்பார், யாமுரைத்த வவ்விரண்டையு மியற்றினு ரன்றுள பெரியோரேயெனவுங் கூறினர்.

(க-து.) இருவகைத்தவமுயற்சியாலன்றி யிவ்விருபயனுஞ் சிறிதுமெய்தா தென்பது. இவ்விருபயனுங் கடவுளிட்டத்தாலெனின், யாவரிடத்துமோர்படித் தாநிகழவேண்டும். இன்றேல் பாரபட்சமுடையராம். இது கூடாது. சுபாவ மெனின், முயற்சியும் விதிவிலக்குவழுவாதியற்றவேண்டுமென்பது மெற்றிற்கு. கண்டபடிநடக்கலாமெனின், மிருகங்களினுமென்சிறப்பு மனுநீதிக்கொத்து நடக்குதுமெனின், "மறுமைக்கெதற் கொத்துநடக்கவேண்டும். வேண்டுவதின் றேல், இதுவும்வேண்டுவதின்று அரசனுக்கினேநேரிடுமேயெனின், அதுவுமீசு ராக்கினேயா லிடுக்கணேரிடுமன்றே, அது பிரத்தியட்சமன்றேயெனின், இந்தப் பிரத்தியட்சத்தாற் கணிக்கவேண்டுமன்றே ? அன்றேல், மானிடத்தன்மைக் கென்சிறப்பு. ஆதலி னவரவர்வினைகாரணமாகவே யவரவரின்பதுன்பநுகர்வர். ஒருவரின்பதுன்பம் பிறருக்கியையாததென்னை ? இதுபற்றிக் கன்மகாண்டத் தில் விபரமாகக்காணலாம். இதுஞானகாண்டமாதலின் வினைவழியேவந்தவினை வசமையென்றார் சான்றோர். அவரினுந் தெளிந்ததென்னை, இதனையுமறுப் பார், மக்கட்பதர். (சுரு)

அ - கை.

அந்தச் சித்திமுத்தியாற் பயனெய்திலை ரினையரென
விக்கவியிற் கூறிகின்றார்.

46. அனகமைந்தனே முத்திஞா னத்தையே யடைந்தனரல் லாமல், சனகன் மாபலி பகீரதன் முதலினோர் சித்திகள் படித்தாரா, வினைய சித்தியை விரும்பினர் சிலர்சில ரிரண்டையு முயன்றார்கள், முனிவர் சித்திகள் விநோதமாத் திரந்தரு முத்தியைத் தாராவே.

(இ-ள்.) அனகமைந்தனேமுத்திஞானத்தையே யடைந்தனரல்லாமல் சன கன்மாபலிபகீரதன் முதலினோர்சித்திகள்படித்தாரா,—எ-து. அகமமதையிறந்த ஞானபுத்திரா ? சனகமகாராசனும், மகாபலிச்சக்கிரவர்த்தியும், பகீரதராச னும் முதலியசான்றோர் முத்திவேண்டி ஞானத்தையே சாதனமாக வடைந்த னரன்றிச் சித்திகள்வேண்டிமுயன்றனரா இலரே:—இனியசித்தியைவிரும்பி னர்சிலர் சிலரிரண்டையுமுயன்றார்கள்,—எ-து. கண்டமெழுத்திற்கினியதாயுள்ள

வணிமாதிசித்திகளோமாத்திரஞ் சிலர்விரும்பிமுயன்றார்கள். சிலர்சித்திமுத்திகளி ரண்டையும் வேண்டிமுயன்றார்கள்:—முனிவர்சித்திகள்விஞ்ஞதமாத்திரந்தரு முத்தியைத்தாராவே,—எ-து. இவ்விருதிறத்தினரு முனிவரேயன்றி வேறல்லர், அஷ்டமாசித்திகளும்வாய்க்கில் விஞ்ஞதமாக வினையாடல்புரிதல்மத்திரந் தரு மன்றி யைக்கியமுத்தியைச் சிறிதுந்தாரா,—எ-து.

எனவே, சித்தி அதிசயானந்தத்தையும், முத்தி நிரதிசயானந்தத்தையுந் தருமென்பதாயிற்று. சித்தி, காலம்போக்கல், முத்தி, காலாதீதமாதல்.

(க-து.) சிலர்முத்திக்கும், சிலர்சித்திக்கும், சிலரிருமைக்குமுயன்றன ரென்பது. இங்ஙனமனுபவமிருத்தல்பற்றிக் கூறியதென்க. (சசு)

அ - கை.

[ஞானிகளிற்சிலர்பயனின்றெனத்தெரிந்துஞ் சித்திபற்றி
வருந்திமுயன்றதெற்றிற்கென்ற வினவிற்குத்தர
மிக்கவியிற் கூறுகின்றார்]

47. யோக ஞானமே முத்தியைத் தருமெனி னெழிற்சசித் திகள் வேண்டி, மோக மாயுடல் வருந்தினர் சிலசில முத்தர்க ளேனென் றூற், போக மாய்வரும் பிராரத்வ கன்மங்கள் புசித்தன்றே நசித் தேகு. மாகையாலந்தச் சித்திகள் பிராரத்வ மாகுமென் றறிவாயே.

(இ-ள்.) யோகஞானமே முத்தியைத்தருமெனி னெழிந்தசித்திகள்வேண்டி மோகமாயுடல்வருந்தினர்சிலசில முத்தர்களேனென்றால்,—எ-து. ஞானயோ கமே முத்தியைத்தருமாயி னதுநீங்கலானசித்திக ளடையவேண்டிச் சில சீவன் முத்தர்கள்மிகவுமதில்மோகமுற் றுடலம்வருந்தினர்களே யஃதியாதுக்கெனின்: போகமாய்வரும்பிராரத்வகன்மங்கள் புசித்தன்றே நசித்தேகும்,—எ-து. போக நிமித்தநேரிடும் பிராரத்வ கன்மங்களே யனுபவித்தாலன்றே வவையொழிந்து போகும்:—ஆகையாலந்தச் சித்திகள் பிராரத்வமாகுமென் றறிவாயே,—எ-து. ஆதலினந்தச்சித்திகள் பிராரத்வ கன்மபலனென்றுணர்தி,—எ-று.

கிரியாயோகம் ஞானயோகமென்றிருத்தலின் யோகஞானத்தை ஞான யோகமென்றும். மோகமாயுடல்வருந்தல் ; அதிக மோகங்கொண்டு கனலிடை யிலும் ஒற்றைக்காலாற் கழுத்தளவுநீரிலும் ஊசிமுனையிலும் காற்றுப்பட்ச ணையிலும் இன்னுமிவைபோன்ற வரியவிடுக்கண்களிலும் புற்றுயக் கல்லாய்மர மாய்ப் பன்னாள்நின்றிபகநந்தவழுபறலே. சித்திகள்வேண்டி யுடல்வருந்தல் இச்சைபற்றியாதலின், இச்சாபிராரத்துவமென்க. பிராரத்வகன்மம்புசித்தல் தனுகரணபுவனபோகங்களிலொன் றுதலின், போகமென்றார். யாவருமனுப வித்துத்தொலைப்பதெல்லாம் பிராரத்துவமென்றுணர்த்தப் பிராரத்வகன்மங்கள் புசித்தன்றே நசித்தேகுமெனப்பட்டது.

(க-து.) ஞானிகள்மிகமுயன்றெய்தியசித்திகளிச்சாபிராரத்தவமென்பது. இது; இச்சை அணிச்சைபரிச்சையென்னும் பிராரத்துவத்துளொன்று.

அ - கை.

[இங்ஙனமுரைத்தருளிய வாசிரியரைப்புகழ்ந்து துதித்தலி
யிக்கவியிற் கூறுகின்றார்.]

48. இலக்மாயிரஞ் சுருதிபா லூகத்தா லென்மன மசையாமல், பிலக்க வேண்டுமென் றருள்குருவேயகப் பிராந்திபோய்த் தெளிவா னேன், துலக்கமானகண் ணுடியை யடிக்கடி துலக்கினுற் பழுதன் றே, யலக்கண் மாற்றிய தேவரீ ரெனக்குரை யமுதங்க டெவிட் டீரவே.

(இ-ள்.) இலக்கமாயிரஞ்சுருதியாலூகத்தா லென்மனமசையாமல் பிலக் கவேண்டுமென்றருள்குருவேயகப் பிராந்திபோய்த்தெளிவானேன்,— எ - து. எண்ணிறந்தசுருதிகளாலும், யுத்திகளினாலும், என்மனமானது கலங்காதறு திபெறவேண்டி யனுக்கிரகஞ்செய்தருளிய குருநாதனே ! எனதுமனோமயக்க நீங்கித்தெளிவுற்றனன்:- துலக்கமானகண்ணுடியையடிக்கடிதுலக்கினுற்பழுதன் றே,—எ-து. களங்கரகிதமான கண்ணுடியை யடிக்கடிதுலக்கிக்கொண்டுவந் தாற் குற்றமுண்டோ ? இல்லையே:—அலக்கண்மாற்றிய தேவரீரெனக்குரைய முதங்கடெவிட்டீரவே,—எ-து. துயரங்களனைத்தையு மொருங்கேயொழித் தருளியதேவரீ ரடியேனுக்குச்சொல்லிக்கொண்டுவரு மமிர்தானுபவங்கள் தெ விட்டவில்லையே,—எ றது.

அகிலாண்டகோடியெல்லாமென்கிற விடத்தில், அகிலாண்டகோடியென் பது; கணக்கின்மையெனப்பொருள்படுதல்போல, இலக்கமாயிரஞ்சுருதியென் பது ? கணக்கிறந்தசுருதியெனப்பட்டது. பலக்கவென்பது, பிலக்கவெனமரீ இயது. அகப்பிராந்தி, சித்தப்பிராந்தியை. தெளிவாதல், சங்கற்பத்தைத்தவிரச் சகமின்றெனத்தெளிதலே. அமிர்தங்கள், சுருதியாதிமூன்றையு மெனப்பன்மை கொடுத்தார். இது, உவமையாகுபெயர். அறிவேயானந்தமாகமுடிதலின், தெ விட்டாவேயென்றார்.

(க-து.) தேவரீரருளியசுகப்பேறுகள், தெவிட்டாவமிர்தம் போல்பவென் பது. இதனால், மூன்றுமொத்துத் தெளிந்தனனெனக் குறிப்பிக்கப்பெற்றும். ()

அ - கை.

[அவரவருந் தத்தம்வினைகளை யனுபவித்தே தீரவேண்டுமென றும், அவை
ஞானுக்கினியானீரு மென்றும் வேதங்கூறில், யான்தணிவதெங்ஙன
மென மாணுக்கன்வினவலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

49. கைதவங்களைச் சாத்திரஞ் சொல்லுமோ கருணையா லெனை யாளு, மைய னேகுரு வேயெவ ராகிலு மனுபவித் தாலன் றிச்செ ய்த கன்மங்கள் விடாதென்ற வசனமுஞ் சென்மசஞ் சிதம் வேவத், துய்ய ஞானத்தீச் சுடுமென்ற வசனமுந் துணிவதெப்படி நானே.

(இ-ள்.) கைதவங்களைச்சாத்திரஞ்சொல்லுமோ கருணையாலெனையாளு மையனேகுருவே. எ-து. கிருபையோடென்னையாள வெழுந்தவையனே குரு

நாகனே ! பிறழ்ந்துகூறுமொழிகளை வேதஞ்சொல்லுமா ? அஃதியாதெனில்:— எவராகிலு மனுபவித்தாலன்றிச் செய்தகன்மங்கள்விடாதென்றவசனமும்,— எ-து. யாவராயினுந்தான் தான் முன்செய்தவினைகளைத், தாமேயனுபவிக்க வேண்டும், அனுபவித்தாலன்றிவிடாதென்ற வசனமும்:—சென்மசஞ்சிதம்வே வத் துய்யஞானத் தீச்சுடுமென்றவசனமுந் துணிவதெப்படிதானே,—எ-து. பிறவிக்குகாரணமாநின்றுள்ள சஞ்சிதவினைவேரும்படி யதனைப்பரிசுத்தஞா ஞக்கினி நீறுக்குமென்றவசனமுமாம். இவ்விருவசனங்களிலிஃதுண்மையென யான்துணிவதெங்ஙனம் அதனைத் தெரித்தருளும்,—எ-று.

கைதவம்; உறுதியின்றியமொழியெனினுமையும். எவராகிலுமென்றது எவ்வளவுயர்ந்தநிலையினராயினுமென்பதை. இவர்திரிமூர்த்திகளெனினுமையும், நாரணன்முதலானசுரர்க ளணிமாதிக டொக்கமாதவமிக்கோனென்பதனலென்க. நாரணன்முதலினரும் செய்தமாதவமிகுதியாலன்றே, தொக்கவணி மாதிகளென்றார் அணிமாதிசித்திமுழுது மிவர்களுக்குவாய்த்தல், பிராரதத்து வம். யாதுமுயற்சியால், தத்தந்தவமிகுதியாலென்றுயிற்று. ஆகவே, இவர்களும் வினையனுபவித்துத் தீரவேண்டுமென்பதுபெற்றும்.

(க-து.) எவரேனும்வினையனுபவித்துத் தீரவேண்டுமென்றும், அவ்வினை ஞானக்கினியானீறுமென்றும், வேதங்கூறுவதில்யாதுண்மையென்பது. செய் யுங்கன்மமென்றது செய்தகன்மமென விறந்தகாலத்தாற்கூறியதால் சஞ்சித வினையென்றேகொள்ளவேண்டும். (சசு)

அ-ை க.

[அவ்வினைவிற்குவிடைகூறுவான்வேண்டி வேதங்கள்கூறும் பூர்வபட்சம் சித்தாந்தம் இனையவென விக்கவியிற் கூறுகின்றார்.

50. சீவ பேதங்க ளளவிலை மைந்தனே செய்கையு மளவில்லை
யாவ வாமவ ரவரதி காரங்களறிந்துபக் குவநோக் கிப்
பூவலர்ந்துபின் பலங்கள்காட்டி வனபோற் பூருவஞ் சித்தாந்தங்
காவல்வேதங்களிரண்டையும்வசனிக்குங்காண்டமூவகையாலே

(இ-ள்.) சீவபேதங்களளவிலைமைந்தனே செய்கையுமளவில்லை,—எ-து ஞானபுத்திரா ! சீவபேதங்களளவுபடாததா லவர்கள்முயற்சிபேதங் களுமள வுபடாவாம்:—ஆவவாமவரவரதிகாரங்க ளறிந்துபக்குவநோக்கி,—எ-து அவ சியமாகவேண்டுவனவாகிய வவரவரதிகாரதாரதம்மியங்களையுற்றுணர்ந்து தக்கபக்குவங்களையுநோக்கி:—பூவலர்ந்துபின்பலங்காட்டுவனபோல்,—எ-து. விருட்சங்கள்முன்னர்புஷ்பித்து பின்னர்பலன்தருமாறுபோன்று:— பூருவஞ் சித்தாந்தங் காவல்வேதங்களிரண்டையும் வசனிக்குங்காண்டமூவகையாலே,— எ-து நமக்குவிதிவிலக்காற்காவலாநின்றுள்ள வேதங்கள்; பூர்வபட்சம், சித் தாந்தமென்னுமிரண்டுநியமங்களையும், கன்மம்பத்தி ஞானமென்னுமூன்று காண்டங்கள் காரணமாகத்தெரிவிக்கும்,—எ-று.

சைதன்யம்; உபாதிசகிதத்தாற்சீவனெனவும், உபாதிகளெண்ணிறந்தன வாதலின் சீவனுமெண்ணிறந்தனவாயிற்று. இங்ஙனமாதல்பற்றிச் சீவபேதங்

களளவிலேயெனவும், அச்சீவர்கள் சுகம்வேண்டிப் பற்பலகிருத்தியங்களியற்று நிற்றலின், செய்கையுமளவில்லேயெனவும், அதிகாரம், ஆளுகை. அறிந்து, நிறமறிந்து. எனவே, அவனவனுளுகைத்திறமறிந்து பூர்வபட்சத்தைச்சித்தாந்தமாகவும், சித்தாந்தத்தைப்பூர்வபட்சமாகவும், மூன்றுகாண்டங்களாலே வேசங்கள்பிரதிவாதிக்குமென்பார், ஆவவாமவரவதிகாரங்களறிந்து பூருவஞ்சித்தாந்தங் காவல்வேதங்களிரண்டையும் வசனிக்குங்காண்ட மூவகையாலேயெனவுங்கூறினர். பலங்கள்காட்டுவன விருட்சங்களாதலினிவ்விருட்சங்களோத்தோன்றுவெழுவாயாக்கிவருவித்தாம். அறிந்துவசனிக்குமெனவும், நோக்கி அலர்ந்துகாட்டுமெனவுமுடிக்க. மூன்றுகாண்டங்களேயு மாங்காங்குமுத்தியெனவேதங்நலினிதுபற்றிப் பூர்வபட்சஞ்சித்தாந்தமென்றேற்கலாயிற்று. பட்டிமாடுபோற்றிரிவானைக் கன்மகாண்டவிதிவிலக்கு வயப்படுத்தவேண்டி யிதமுத்தியெனல், சித்தாந்தம். மூன்பட்டிமாடு போற்றிரிந்தது பூர்வடசம், சமஸ்தத்தையுமீஸ்வராற்பணம்பண்ணுதுதேகமேயான்மா போகமேமுத்தியென்றிருத்தலினிதன்மேற்பழுதுசாத்தல், பூர்வபட்சம். அதனைச்சுத்தமாக்கல், சித்தாந்தம். அங்ஙனமீஸ்வராற்பணம் பண்ணினுந் திரிபுடியறுதற்பாலதன்றுமையினதனைச்சோரவிடல், பூர்வபட்சம். அறுத்தற்பாலதுண்மைஞானமாதலினதனைவிடாதுபற்றல், சித்தாந்தம் இதுபற்றியிவ்விரண்டும். வேண்டுவதாயிற்று.

(க-து.) முன்கவியிற்கூறிய விரண்டுவசனம்பற்றித் துணிவுகூறுவான் வேண்டியிக்கவியில்பூர்வபட்சசித்தாந்தங்களைக் கூறியதென்பது பூர்வபட்சம், அன்றெனல். சித்தாந்தம், ஆமெனல். (இ0)

அ - கை.

[அவசரம்பற்றியவ்விரண்டுவசனமு மேற்றற்பாலதென இக்கவியிற் கூறுகின்றார்.]

51. ஆன பாவிக ளடைவன நரகங்க ளவசிய மாலு
தான மந்திர விரதமோ மங்களாற் றவிருமென் பதுபொய்போ
வீன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யாலு
ஞான மாங்கனல் சுடுமென்ற மறைமொழிநம்பினுல்வீடுண்டே.

(இ-ள்.) ஆனபாவிகளடைவனநரகங்க ளவசியமாலுலும்,—எ-து. கொடியபாதகங்களேயேவிரதமாகச் செய்தற்குரியபாவிக ளவசியமடைய வேண்டிய துநரகங்களேயே, அங்ஙனமாயினும், (அவைகள்,) :—தானமந்திரவிரதமோமங்களாற் றவிருமென்பதுபொய்யோ,—எ-து. தீர்த்தங்களினம்பி மூழ்குஞ்ஸ்தானங்களினுலும், மந்திரங்களினுலும், விரதங்களினுலும், யாகங்களினுலும் நீங்கிவிடுமென்றுவேதங்கூறுவதுபொய்யாகுமோ:— ஈனமாம் பலசென்மசஞ்சிதவினையெத்தனையாலும்,— எ-து. இழிவுக்கிடமாவுள்ளபலசென்மசஞ்சிதவினைக ளெத்தனைபற்பலவிகற்பமாயினும்:— ஞானமாங்கனல் சுடுமென்றமறைமொழிநம்பினுல் வீடுண்டே,—எ-று. அவற்றைஞானமாகிற வக்கினிநீறுக்கிவிடுமென்று கூறும்வேதவசனத்தைத்திரிகரணமொத்து நமபியனுட்டிக்கின்முத்தியுண்டாகுமே,—எ-று.

நரகங்கள்; மந்திரமுதலியவற்றுற்ற விருமென்பதும், சஞ்சிதவினைகள்; ஞாலைக்கினியானீறுமென்பதும் வேதமாதலாலிதனை நம்பிப்புரியாவிடத்துப் பொய்யாம். நம்பிப்புரிந்தவிடத்துப்பொய்யாமா வீடாமேயென்பார், மறை மொழிநம்பினுல் வீடுண்டேயென்றார். இரண்டும்வீடெனினும், அதுபதவிமுத்தியும, இஃதயிக்கமுத்தியுமாம். ஞானமாங்கனலென்பது, வீர்த்திஞானத்தை. அதனுல்நரகங்கள்தவிரும், இதனுலினிப்பிறப்பதுதவிரும். இதனேயனுபவத்தாற் காண்பதன்றி வறுமொழியாலன்று ஞானமாங்கனலுருவகம்.

(க-து) அவ்விரண்டுவசனமுமவசரம்பற்றி மெய்யென்றேற்கப்படுமென்பது. தானம், ஈகையெனினுமமையும். (ஙக

அ - கை.

[சென்மசஞ்சிதத்தை நீறாக்குவது ஞானமாயிருக்கக் கன்மத்தை விரும்பி மூயல்வ செற்றிற்கெனவினவலே யிக்கவியிற் கூறுகின்றார்.]

52. என்மனந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள் குருமூர்த்தி
சென்மசஞ் சிதவினையவே றறுத்திடுந் தேவரீர்மெய்ஞ்ஞானந்
தன்மயந்தரு மகிமையை விபுதரர் சகத்துளோ ரறியா மல்
கன்ம மாங்குழி யினில்விழுந் தழிகின்ற காரண முரையீ ரே.

(இ-ள்.) என்மனந்திருக்கோயிலாத்தினங்குடி யிருந்தருள்குருமூர்த்தி,—எ-து. என்மனதையேகிறந்தவாலயமாகத் தினமுங்குடிகொண்டெழுந்தருளிய குருமூர்த்தியே:— சென்மசஞ்சிதவினையைவேரறுத்திடுந் தேவரீர்மெய்ஞ்ஞானமான தசென்மசஞ்சிதவினையை வேரோடுகல்லிவிடும்:—தன்மயந்தருமகிமையை விபுதரர்சகத்துளோரறியாமல்,—எ-து. சமஸ்தமுந்தன்மயமாகும்படியாகவுஞ்செய்யும், இங்ஙனமாயநிலையைத்தரத்தக்கமகிமையைத் தேவருஞ்சகத்திலுள்ளமானிடருமறியாமல்:—கன்மமாங் குழியினில்விழுந்தழிகின்ற காரணமுரையீரே,—எ-து. கிரியாமார்க்கமென்னும்படுகுழியில் வீழ்ந்தழிகின்றகாரணம்யாதுக்கோ, அகனேத்தெரித்தருளும் —எ - து.

துரியாதீதநிலையே சிற்தையனுதலின் என் மனந்திருக்கோயிலாத்தினங்குடி யிருந்தருள்குருமூர்த்தியெனவும்: சங்கற்பமெழுந்தோறு மதனேச்சின் மாத்திரமாக்கு மகிமையதாதலின் மெய்ஞ்ஞானந்தன்மயந் தருமகிமையெனவும், சமஷ்டிவியஷ்டிகளே யாண்டானடிமையெனக்கொண்டு பூசிக்கின் உபாதியன்றே சீவனீசனுயா ஆகாதே ஆகாதளவும் பூசிப்பதிலென்பயன், பராக்கிலதிவரன்றே ? அழிவதபற்றிக் கன்மமாங்குழியினில் விழுந்தெனவுங்கூறினர். இது படுகுழியென்றறியா ததனேச்சிறப்டென்றுன்னுவோர் தேவரு மனிதரு மாதலின், இவர்களேவிபுதர் சகத்துளோரெனப்பட்டது. இங்கே கன்மமென்றது, சரியைகிரியைகளே இவற்றுற்பயன், சித்தசுத்தியன்றி நிரதிசயானந்தமன்று. இவற்றையே மேலெனத் திடமுற்றே ரெங்ஙனஞானமொன்றுளதாகக் கருதியனுட்டித்துத்தெளிவர். இன்றுதலினழிவரெனப்பட்டது. சரியைகிரியைகளேப்புரிவது தோடமன்று, சித்தசுத்திக்கிடம். இடமாயினும், அவ்வள

வோடுநில்லாது, மேற்கிரியாயோகத்துக் கிடம்பெறவேண்டும். இடம்பெறின் ; ஞானயோகத்துக்கிடம்பெறும். இடம்பெறின் தானேதானுதற்கியையும். இம் முறையறியார், யோகத்தையும், ஞானத்தையும் பழுதுகூறுநிற்பர். இதுநிற்க.

(உ-து.) ஞானனுட்டானஞ்செய்வது சித்தாந்தமாயிருக்கக் கன்மானுட்டானம் புரிவதெற்றிற்கென வினவியதென்பது. கன்மமேபுரிவார்பலருமாதலின் இவ்வையந் தவிர்தற் காசிரியரைவினவினனென்க, கன்மத்தைக் குழியென்றது, மனவலிவுக்கொழிவின்மைபற்றி. (கூஉ)

அ - கை

[அதற்குவிடை கூறுவான்வேண்டி யந்தர்முகம்பகிர்முகமெனப் பிரித்து அவற்றின்பய னினையவென விக்கவியிற் கூறுகின்றார்.

53. அழிவி லாததற் பதந்தனை மைந்தனே யகமுகத் தவர்சேர் வார், வழிந டப்பவர் பராமுகமாகினுன் மலர்ந்தகண் ணிருந்தாலுங், குழியில் வீழ்வர்கா ணப்படி வெளிமுகங்கொண்டுகா மிகளா னோர், பழிதரும்பிற விக்கட லுழலுவார் பரகதி யடையாரே.

(இ-ள்.) அழிவிலாததற்பதந்தனைமைந்தனே யகமுகத்தவர்சேர்வார்,— எ-து. ஞானபுத்திரா அழிவின்றிச்சதோதயமாக விளங்குந் தானுகியபதத்தை யந்தர்முகமாக நின்றவரெவரோ அவரேயடைவார்:—வழிநடப்பவர் பராமுக மாகினுல் மலர்ந்தகண்ணிருந்தாலுங் குழியில்வீழ்வர்கா ண்,—எ-து வழிநடப்ப வர்கள் பராமுகமாகச்செல்லிலவர்கள் கண்கள்மூடாது திறந்திருக்கினுந் தப்பா தெகிரினின்றபள்ளத்தி லவசியம் விழுவார்கள், அதுபொய்யோ நீயேகாணுதி.— அப்படி வெளிமுகங்கொண்டு காமிகளானோர்,—எ-து. அவ்வாறு பகிர்முகமே சமக்குப்பயனுகக்கொண்டு விடயவிச்சைமேலிட் டுழலுங்காமிகள்:—பழிதரும் பிறவிக்கடல்மூழ்குவர் பரகதியடையாரே,—எ-து. பழியையேதரற்பாலதாகிய பிறவிசாகரத்தில்மூழ்குவரன்றிப் பரகதியாகிய முத்தியையடையவேயாட்டார் கள்,—எ-று.

அழிவிலாதபதந்தனையென்னுது தற்பதமென்றதனுல், தானுகியபதமென் றும். தொம்பதந்தற்பதமென்பவற்றுள் ; தற்பதம், பிரமமெனினுமமையும். ஆயினும், சத்துவக்குழாமனைத்துந் தானல்லதானல்லவெனவிலக நியதிகளேய மிஞ்சிநின்றது தானே, அயலோ ? அயலெனின், உடலாதிசத்து வக்குழாங்களே யயலெனக்களவதெற்றிற்கு. பிரம மயலோ ? தானுயின், சீவேஸ்வராகியவா ரோபபங்கட்குக் கூடஸ்தபிரமமதிஷ்டானமெனக் கூறவாலாமா ? கூறவந்தது தானெனும் பதமதிட்டானமெனற்கு. எங்ஙனம், தானதிட்டானம், தனக்குக் கூடஸ்தபிரமமாரோபம். இவற்றிற்குச் சீவேஸ்வரர் ஆரோபம். எனவே, கூடஸ்தபிரமம் சீவேஸ்வரர்களுக்கதிட்டானமெனவும், தானெனுநிலைக்காரோ பமெனவும் பெற்றும். சீவேஸ்வராகநின்றதுங் கூடஸ்தபிரமமாகநின்றது தானே. தானென்பதைத்தள்ளி யின்னான்கு சைதன்யமுமெங்கே. தானின்ருன் குமன்று. தன்னைத்தவிரவுமில்லை. ஆகலின் தானயலன்று. இதுபற்றித் தானு

கிய பதமென வுரைகொண்டாம் அறிவே தானெனக் காண்பாரகமுத்தவர் அயலே தானெனக்காண்பார் வெளிமுகத்தவர். அதற்குப்பயன் சிதாகாசமாதல். இதற்குப்பயன் பிறவியாதல். இதுபற்றி யவர் தற்பதத்தனைச் சேர்வரெனவும், இவர் பிறவிக்கடலுழல்வரெனவுங் கூறினர். உயர்வுபற்றி யழிவிலாததற்பத மெனவும், இழிவுபற்றிப் பழிதரும் பிறவியெனவு மடைகொடுத்தசென்ச. வெளிமுகமாதலுக்குவமைபராமுகம். அகமுகமாதலுக்கு வமையெங்கே. இன்றேனுமிசையெச்சத்தாற் பராமுகமாகாமையெனக்கொள்க. என்னை, "பிற விப்பெருங்கடனீந்துவர்நீந்தா ரிறைவனடிசேராதார் என்னுங் கவியில், நீந்துவரென்னும் வினைமுற்றிற் கெழுவாயின்றேனு மிசையெச்சத்தாற் சேர்ந்தா ரெனவருவித்தாற்போலும்,

(க-து.) அகமுகத்தவர் தானுவர், பகிர்முகத்தவரயலாவரென்பது. இவ்விரு முகமுஞ் சொல்லாலறிவார்க் கென்பயன். (நிகூ)

அ - கை.

[சற்பதமடைவதும் பிறவியடைவது மீசச்செயலாலன்றிச் சீவச் செயலாலன்றேயென்பானோக்கி யிது மூடர்வசனமாகு மென் றிக்கவியிற் கூறுகின்றார்.]

54. சிறந்த வன்மையுந் தீமையு மீசனுர் செய்விக்குஞ் செயலன் றே,பிறந்த சீவர்க ளென்செய்வ ரவர்கள்மேற் பிழைசொலும் வ கையேதோ, துறந்தசேசிக மூர்த்தியே யென்றிடிற் சுருதிநூற்பொரு ண்மார்க்கம், மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண் மைந்தனே யதுகேளாய்

(இ-ள்.) சிறந்தவன்மையுந்தீமையுமீசனுர் செய்விக்குஞ்செயலன்றே,—எ-து. சீவர்கள் சிறந்த சற்கிருத்தியஞ்செய்வது மிழிந்ததற் கிருத்தியஞ்செய்வ தும் ஈஸ்வரன்செய்விக்குஞ் செயலினலல்லவா:—பிறந்தசீவர்களென்செய்வா ரவர்கள்மேற்பிழைசொலும் வகையேதோ,—எ-து. அவன்பிறப்பிக்க வதனற் பிறந்த சீவர்கள் சுதந்தரவீனராயிற்றே யவர்க ளென்னசெய்வார்கள் அவர்கள் மேற்பிழைசொல்லும்வகையாதோ:—துறந்தசேசிக மூர்த்தியேயென்றிடில்,—எ-து. சகலபற்றினின்றுநீங்கிய வாசிரியமுகுர்த்தமேயெனக் கேட்பையாயின்:—சுருதிநூற்பொருண்மார்க்கமறந்த மூடர்கள்வசனிக்கும் பிராந்திகாண் மைந் தனேயதுகேளாய்,—எ-து. வேதசாஸ்திரங்களித்கூறிய வர்த்தமார்க்கங்களேம றந்த மூடர்களெவர்களோ வவர்கள் பிதற்றுமயக்கவசனமேயன்றி யறிஞர்கூ றும்வசனமன்று ஞானபுத்திரா! இதனைப்பற்றி யாங்தெளிவாகக் கூறுதுமத னைக்கேளுதி,—எ-து. காண், அசைநிலை.

பிராந்தி, ஒன்றையொன்றாகக்கொண்டு பிதற்றும்வசனம். ஆட்டுவிப்பா னையன்றி யாடுவார்க் கென்னசுதந்தரமுண்டென்பார்போலச் சீவர்களென் செய்வாரவர்கள்மேற் பிழைசொல்லும்வகையேதோவெனவும், உயிரு மூட லுங்கூட்டலும்பிரித்தலுஞ் சீவத்தொழிலன்றே இரண்டுங்கூட்டியவிடத்தியங்

குமியக்கமுஞ் சீவத்தொழிலாமா ஆகாதேயெனமறுத்தசென்னில், ஒருவன் தன் மண்பெண்பொன்னைப் பிறனபகரிகஇ லிவன்சம்மதியான் பிறர்பொருளையிவன் கவர்தற்குச் சம்மதிப்பதென்னை இதஞாயமாவெனவிவனைக்கேட்கில் நானென் செய்வன் சிவனிப்படிக்குப்புத்திகொடுத்தானென்பன் அவனு மங்ஙனஞ்சொல் வானன்றே ? அதற்குமறுமொழியென்னையுள, ஆகலி னிவையெல்லாஞ் சிவன் செயலேயன்று சீவன்செயலேயென்பதை மறந்தவர் பேசுமொழியென்பார் சுருதிநூற்பொருண்மார்க்க மறந்தமூடர்கள்வசனிக்கும் பிராந்திகாணெனவுங் கூறினர்.

(க-து.) அனைத்துஞ் சிவன்செயலன்றென்பது (ருச)

அ - கை.

[மூன்கவியிலனைத்துமீசச்செயலன்றெனவே சீவச்செயலென்ப தாயிற்று அப்பேதங்களை யிக்கவியிற் கூறுகின்றார்]

55. திகழ்ந்தவீசனர் சிருட்டியுஞ் சீவனர் சிருட்டியும் வெவ்வேறே சகந்தனிற்பொது வீசனர்சிருட்டிகள் சராசரப்பொருளெல்லா மகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளிவையெல்லா திகழ்ந்த சீவனர் சிருட்டி களாகுங்கா ணிமலர்னர்செயலன்றே.

(இ-ள்.) திகழ்ந்தவீசனர்சிருஷ்டியுஞ் சீவனசிருஷ்டியும் வெவ்வேறே,—எ-து. எங்குந்தானுவிளங்குமீசசிருட்டியும் சீவசிருட்டியு மனுபவமாயிருக்க வீசனதென்பதுகூடாது, வெவ்வேறும்:—சகந்தனிற் பொதுவீசனர் சிருட்டி கள் சராசரப்பொருளெல்லாம்,—எ-து. (எங்ஙனமெனில்) உலகத்திற் பொது வாநிற்பன ஈஸ்வரசிருஷ்டிகள். அவை சராசரமாநின்றுள்ள பொருள்களனைத் தும். இது சீவச்செயலன்று:—அகந்தையாமபிமானங்கள் கோபங்களாசைகளி வையெல்லா நிகழ்ந்தசீவனர்சிருட்டிகளாகுங்காணிமலனர்செயலன்றே,—எ-து. உலகத்தில் மிகவுந் தம்மைமறந்து தமதிட்டப்படிநிகழ்வன, சீவசிருஷ்டிகள். அவை ; அகந்தையாகிய வபிமானங்களும் கோபங்களும் ஆசைகளும் இவை போல்வனபிறவுமாம். இஃதுநின்மலமான வீசச்செயலன்று. ஆதலின் சிருஷ்டி யிருவகையாம்,—எ-று.

சகத்தையிருவழியுமொட்டுக. பொதுவென்றதனைச் சிறப்பெனவும், நிமல னர்செயலன்றே யென்பதனால், சீவனர்செயலன்றேயெனவும் வருவித்தாம். சீவனரிவை மரூஉமொழி. பொது ; தனுகரணபுவனங்கள். சிறப்பு, போகம். போகமென்பது, இன்பதுன்பங்களை. போகநுகர்தலுக்குத் தனுகரணபுவனமின் றேற்கூடாது ஆகலி னிம்மூன்றையும் பொதுவெனவும், தத்தமுயல்வாலன் றிப்போகமெய்தாது, ஆகலிற் போகமொன்றையுஞ் சிறப்பெனவுங்கண்டாம். சராசரமென்பன, இங்கே யுடல்களை. சீவனெனின், சிருஷ்டிபேதம்பிரிப்பா னேன் ? சராசரந்தனுவாகுமி, பொருளெல்லாமென லேனைய கரணபுவன மென்றுயிற்று. புவனமென்றது, பூமிமாத்திரமன்று. சகலவண்டாண்டகோடி

களேயும், கயிலாயமுதலியபதவிகளேயு மெனக்கொள்க. இதுபற்றிச் சராசர மும் ஏனையபொருளிடங்காலமுமென வும்மைத்தொகையாக்காது, சராசரமா கியபொருளெல்லாமென்பணபுத்தொகையாக்கின் முரணும்.

(க-து.) செய்கைபேத்தாற் சிருஷ்டிபேதங்தெரிவித்தனரென்று. அச்செ யலாலாயவை, சராசரப்பொருளெல்லாம். இச்செயலாலாயவை, அகந்தையபி மானமுதலியன. (இஇ)

அ - கை

[சராசரமுதலியனமுத்திசாதனமெனவும், அபிமானமுதலியன பந்தசாதனமெனவும், சராசரமாதிகஸிக்கிற் பிறவிகஸியா வெனவும, அபிமானமாதிகஸிக்கிற் பிறவிகஸிக்கு மெனவு மிக்கவியிற் கூறுகின்றார்.]

56 மூவராம்பரன் சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசா தனமா குஞ், சீவனுரது சிருட்டிக டங்களேச் செனிப்பிக்கும் பிணியாகுர், தாவராதிக ணசித்திடி லொருவர்க்குஞ் சகநங்கணசியாவாங், கோப மாதிக ணசித்திடிற் பந்தமாங் கொடும்பிற விகள்போமே

(இ-ள்.) மூவராம்பரன்சிருட்டிக ளுயிர்க்கெலா முத்திசாதனமாகும்,—எ-து. மும்மூர்த்திகோலமாகின்றுள்ள வீஸ்வரசிருஷ்டியாலாயவை யெல்லாவு யிர்களுக்கு முத்திசாதனமாயிருக்கும்:—சீவனுரது சிருட்டிகடங்களேச் செனிப் பிக்கும்பிணியாகும்,—எ-து சீவசிருஷ்டியாலாயவை தங்களேச் செனிப்பிக்கத் தக்க வியாதியாகிற்றலி னிவைபந்தசாதனமாயிருக்கும்:—தாவராதிகணசித்திடி லொருவர்க்குஞ்சனனங்கணசியாவாம்,—எ-து. விருட்சமுதலியசராசரப்பொ ருள்கணசித்திடில் யாதோருயிர்க்குஞ்சனனங்கணசிக்கமாட்டாவாம்:—கோப மாதிகணசித்திடிற்பந்தமாங்கொடும்பிறவிகள்போமே,—எ-து. கோபமுதலியவை நாசமாகுமாயின் பந்தமாநின்றுள்ள கொடியபிறவிகணுசமாகும்,—எ-று.

சிருட்டியாலாயவைகளேச் சிருட்டிகளென்றது, தொழிலாகுபெயர். ஈச காரியம், தாவராதிகள். சீவகாரியம், கோபமாதிகள். முத்திசாதனம், இருக்கி னுமழியினும், கோபமாதிகணசியாவிடத்தென்பயன். எனவே, ஈசன்மேற்பழி யின்றென்பதாயிற்று. தாவராதிகள்பெரும்பாலும் பந்தசாதனமாயிருக்க, முத் திசாதனமென்றது ; தவம்புரிவோர்க குணவுக்கிலை காய்கனிகிழங்குகளும் தங் கற்குவனம் குகையாதியையந்தவிடமும் தாகந்தணிதற்குச் சுனையாதி நீருமா யிருத்தல்பற்றி. கோபம் கௌதமரிடத்தும், காமம் கிஷ்ட்ணபகவானிடத்தும், இருந்தும் கொடும்பிறவிபோய தென்றதென்னே ? துஷ்டநிக்கிரகத்திற்கும் முன்னர்கூறிவந்தவேற்பாட்டிற்கும் எழுந்ததேயன்றித்தம்பொருட்டாகவன்று. குணமென்னுங்குன்றேறிநின்றார் வெகுளிகணமேயுங் காத்தலரிதெனவும், நித் தியபிரமசாரியெனவும் வழங்குவதெற்றிற்கு.

(க-து.) பிறவிக்கிடம், பந்தம். பந்தத்திற்கிடம், காமவெகுளிமயக்கம். இவற்றிற்கிடம், சீவச்செயலென்பது. இவ்வடுக்குநூலின், பிறவிநசிக்கும். காமாதிமூன்றுமீசச்செயலாயின், தாவராதிகள்சீவச்செலென்பம். அன்றேல், சொன்னவாறுகேளுதி. (இசு)

அ - கை

[காமாதிகள் சீவச்செயலன்றி யீஸ்வரச்செயலன்றென
விக்கவியிற்கூறுகின்றார்.]

57. ஈசர் காரியம் பிரளயத் தொழியவு மெவர்பவ மொழிந்தார்க
டேச காலதே காதிக ளிருக்கவுஞ் சீவகா ரியமேர்க
நாச மாகியவ் விவேகத்தி னுயிரொடு ஞானமூத் தர்களா னுர்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப்பசுபதிசெயலன்றே.

(இ-ள்.) ஈசகாரியம் பிரளயத்தொழியவு மெவர்பவமொழிந்தார்கள்,—எ-து. ஈஸ்வரசிருஷ்டியாலாய பூதபௌதிககாரியங்கள் பிரளயகாலத்தொழிந்தும் பவமொழிந்தவரெவர் கண்டிலமே:—தேசகாலதேகாதிகளிருக்கவுஞ் சீவகாரியமோகநாசமாகி யவ்விவேகத்தினுயிரொடு ஞானமூத்தர்களானுர்,—எ-து. தேசமும் காலமும் தேகாதிவஸ்துக்களும் சிறிதுமழியாமலிருக்கவும் சீவசிருஷ்டியாலாய மோகாதிகாரியங்கள் மயமாகாது விவேகத்தானுசமூற்றுயிரிருக்கவும் அவ்விவேகங்காரணமாக வைக்கியமூத்தியடைந்தனர்:—பாசமோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதிசெயலன்றே, எ - து பாசத்துக்கியைந்த மோகாதி காரியங்கள் சீவசிருஷ்டியா லாயதன்றி யீஸ்வர சிருஷ்டியா லாயதன்று, எ - று.

சீவன்காரியம் சீவகாரியமென்றுற்போல. ஈசன்காரியம் ஈசகாரிய மென்பதில் வழுவென்னே. ஈசகாரிய மிருக்கவு மெவர்பவ மொழிந்தார்க ளெனப் பொருடர ஒழியவுமென்றுர். ஒழியவுமென்பதி லுள்ளவும்மை, இறந்தது தழீஇயது. இது சாத்தனும் வந்தானென்பதுபோலும். இருக்கவு ஞானமூத்தர்களானு ரென்பதனுல் இருக்கவுமென்ப திருமூகத்ததாகும். ஆதலின் இஃதரிமாநோக்கென்பப்படும். இதுபற்றி யிம்மொழியை யிரட்டித்துக் கூறுதொழிந்தனர். பாசமோகங்கள் இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுந் தொக்கதெனினுமையும். பாசத்துக் கிடமாதலின் பாசமோகங்களென்னவும், பசுவுக்குப் பதியாதலின், பசுபதியெனவுங் கூறினுர். பசு உயிர். ஞான மூதிர்ச்சிக்குஞ் ஞானமூத்தரெனினு மமையும்.

(க-து.) காமாதிகள்வினை வீசச்செயலாலன் றென்பது. பந்தமு மூத்தியும்: காமாதிகள் வினைவினுலும், ஒழிவினுலு மெய்துமென்றுயிற்று. இவ்விருமூயற்சியு மீசனதன்றென்க. காமாதிகள் வினைவே, பந்தம். பந்தவினைவே, பிறவி. காமாதிக ளொழிவே, பந்தநாசம் பந்தநாசமே, பிறவிநாசம். இஃ தெவர் மூயற்சி. (நுஎ)

"நாசமாகிய" எ-ம் பாடமுளது. சுமூத்திரியப்போலப் பிரளயத்தில்அகந்தைமூதலிய வாசனைகள் அதுபுத்தமாயிருத்தலின், சிருஷ்டியாதிற் சகலபிராணிகளுந்தத்தம்வாசனையின்படியே நால்வகை யோனிகளை யடைகின்றன: ஆதலால், "எவர்பவ மொழிந்தார்" என்றுர்.

"இறப்பிலா வின்த மோக மிறையுமீட் டெண்ண மின்றி, மறப்ப தே கல்லதென்று,,—

வாசிட்டத்திற்கூறியிருபபதால், 'மீண்டெழாமல்,, என்பதுவருவித்தாம். "மோகம்" எ-து, அகந்தையாதிகளை; இவை ஜநநபந்தத்திற்குக காரணமாகலி ன், "பாசம்" எ-ம், சுதந்தரனேராகலின் சீவரை "பசுக்கள்" எ-ம், இவர்க் குச் சுதந்தரமுடைய இறையாதலின் ஈசுரனை "பசுபதி" என்றுங்கூறினர்,

அ - கை

[சீவேசநிலைமையித்தகையதென்றுணர்த்த உவமையாலிக் கவியிற் கூறுகின்றார்,]

58. அச்சுவத்தமென் றொருமர மதிலிரண் டரும்பற வைகள்வாழ் நச்சு மங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன் றெனத்தின்னு மெச்சு மங்கொருபறவைதின் ஞதென வியங்கியப் பொருளாக வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்தவா றறிவா யே.

(இ-ள்.) அச்சுவத்த மென்றொரு மரமதிலிரண் டரும்பறவைகள்வா மும், எ-து. அரசெனப்பெயருள்ள விருட்ச மொன்றுளது, அவ்விருட்சத்தில், அரிய பட்சிகளிரண்டு வாழாநிற்கும்:— நச்சுமங்கொரு பறவையம் மரக்கனி நன்றுநன்றெனத் தின்னும், எ-து. யாவரானும் விரும்பத்தக்க வங்குள்ளபற வைகளி லொன்று; அம்மரக்கனிகளைக் கண்டு கொத்திக் கொத்தி நன்றுயிருக் கின்றது நன்றுயிருக்கின்ற தெனத்தின்னு நிற்கும்:— மெச்சுமங்கொருபறவை தின்னுதென வியங்கியப் பொருளாகவைச்சு, எ - து. யாவரானுந் துதிக்கப் பெற்ற வங்குள்ள மற்றோர்பட்சியக்கனிகளைத் தின்னுதென்று பெருமைதந்து அந்தப்பட்சிகளுக்குறிப்பொருளாகவைத்து:— மாமறைசீவனை யீசனைவகுத்த வாறறிவாயே, எ-து. மகத்தானவேதங்கள் சீவனையு மீசனையும் வகுத்துக் கூறி யிருமுறையை நீயறிந்துகொள்ளுதி, எ-று.

அச்சுவத்தம், தலைகீழ்தாவள்ள மாயாவிருட்சம். எனவே, எமதறியாமை யென்றுயிற்று ஆகவே, சீவேஸ்வரர்கள் சற்பிதமெனக் கொண்டாம். கொள் ளவே. கனிகள் விடயமெனவு மவற்றை நுகர்வது சீவனெனவும், தின்னுத சீசனெனவும் பெற்றாம். இங்ஙனம் வகுத்தது யாமன்றென்பார், மாமறைவ குத்தவா றறிவாயே யென்றார். இங்கே யறியாமையி லறிவறியாமை. இவ்வி ருவருந் தன்னைத்தா னறியாராதலினிவரறிவு, அறியாமை யென்னப்படும். ஆதலினிதனை மாயா விருட்சமெனவும், தன்னைத்தானறியாத கடுந்துறவி போறலி னீசனையறிவெனவும், கடுந்துறவி யல்லார்போறலிற் சீவனை யறியா மையெனவும், இவ்வேதபற்றி யம்மரக்கனியைத் தின்னுமெனவுந் தின்னு தெனவும், இவ்வறிவறியாமை மூடத்திலாதலி னிம்மூடஞ் சத்தன்றுமையா னும், இவ்வசத்தில் பரஞானமபரஞானமாகவும், அபரஞானம் பரஞானமாக வும், மாறிக்காண்டலானும், அச்சுவத்தமென்றது; தலைகீழ்தானவிருட்சமென வும், இதுமாயையெனவுங் கூறியவாறுகாண்க. அனிர்தசட துக்கத்தைச் சச்

ஜீதானந்தமெனக்காண்டல் மாறுயவுணர்வாதலினிதனைத் தலைகீழ தெனவும், சுயம்பல்லாததைச் சுயம்பெனக்கோடல் தேகாதிக்ளெயாதலி னிதுவுந் தலை கீழதென்வும், நிரவயவமான தன்னைச் சாவயவமாகக் காண்டலும், அவஸ் தாரகிதமான்தன்னை யவஸ்தாமயமாகக் காண்டலும், காரணகாரிய ரகிதமா ன தன்னைக் காரண காரியமாகக் காண்டலும், தந்தையாகிய கற்பனை யிறந்த தன்னைத் தந்தையாகியாகக் காண்டலுமாகிய விவையனைத்துந் தலைகீழ தெ னவும், பிறப்பிறப்பற்றதன்னைப் பிறப்பிறப் பூடையஞகக் கோடல் தலைகீழ தெனவுங் கொள்ளினுமையும். இன்னு மிவைபோல்வன பிறவுங் கொள்க. இன்னு மூரைக்கிற்பெருகும். என்னை, ''சொற்றவற்றியலான்மற்றையபிறவுந், தெற்றெனவுணர்தல் தெளளியோர்கடனே,, யென்றார் சான்றோர். ஆகலின் தலைகீழதான மாயாவிருட்சமென்பது தடையின்றி யமையும்,

(க-து.) சமஸ்தமு மித்தையெனக் காட்டியதில் சிவேஸ்வர தராதம்பிய மினையவென வுணர்த்தியதென்பது. அறிவையன்றிச் சீவேச ரின்மையா னும், அவ்வறிவு பொருளல்லவற்வைப் பொருளாயறிவதா னும், இவ்வறிவை நிதான மெனக் கூடாமையானும் தலைகீழதான மரமாகவு வமித்ததிலென்பிழை. மறு ப்பார்தன் னறிவைச்சற்றுஞ் சோதித்தறியார்போலும். தத்தெரிசனத் தா லன் றிக் கல்விஞானம் திரிகாலஞான முதலியவற்ற னிபிரா ஞானமாதலி னிதனை யச்சுவத்தமென்றதை மூடத்தால் மறுக்கிலென்பயன். (அடு)

ழலசுருதியின் பாஷியார்த்தம்,— நியம்ய, நியாமகபாவப் பிராப்தி ரூபமான சுபனத்தால், அல்லது பட்சியைப்போல விருட்சத்தை ஆசிரயித்திருப் பதாற் சீவேசுரரை, ''பறவை'' என்றது. விருட்சம்போலச் சேதிக்கப்படுந்தரு மமுடையதாயிருத்தலாற் சரீரத்தை, விருட்சம்'' என்றது. சரீரரூபவிருட்சமா னது மேலானபிரமத்தை மூலமாகவுடையது, கீழானபிராணன் முதலியவற் றைச் சாகைகளாகவுடையது, தனது திதிநியமம் இன்மையின், அச்சுவத்தம் என்னும் நாமமுடையது, அஞ்ஞானபரியந்தம் இருப்புடையது, க்ஷேத்திரம் என்னும் நாமமுடையது, சர்வப்பிராணிகளின்கர்ம பலங்கட்கும் ஆசிரயமானது பட்சிகள்போல அவித்தை காமகர்மங்களினுடையவாசனைக்கு ஆசிரயமாகியலிங் கசரீரவுபாதியுடைய சீவனும், ஈசுரனும் ஆகியஇருவருங் கூடியிருப்பது; கூடி யிருக்கும் அவ்விருவருள்ளும், லிங்கசரீரரூபவுபாதியுடைய க்ஷேத்திரஞ்ஞன் என்னுஞ் சீவனே அவ்விருட்சத்தின்கண் ஆசிரயித்திருக்குங் கர்மஜந்நியங்களா கிய சுகதுக்கமயமான அநேகவிதவேதனைகளின் அநுபவரூபமென்னும்இஷ்டப லன்களை அவிவேகத்தாற்புசிக்கின்றனன்; நித்தியசுத்த, நித்தியபுத்த, நித்திய முத்த சுபாவமுடைய சர்வஜ்ஞரூபியசுத்த சத்துவகுணப்பிரதானமான மாயா வுபாதியுடையவீசுரன் புசிக்கின்றிலன். ஏன்னை? அவ்வீசுரன் நித்தியமான சாட்சித்தன்மையின் சத்தாமாத்திரத்தால் போக்கியம், போக்தாவள்ளும் இவ் விரண்டின்பிரேரகனுயுளன் ஆகலின் அவன் புசிக்கின்றிலன், விருட்சத்திற்கு அந்நியனுய்க் கேவலம்பார்ட்பவனுகவே இருக்கின்றனன், அவனுடைய சரிசன மாத்திரத்தாலேயே இராஜாவைப்போலப் பிரேரகத்தன்மை சித்திக்கிறது என் து ழலசுருதியின் பாஷியார்த்தம்.

* வியஞ்சனவிருத்தியால் யாதொருபொருள் தோன்றுநிற்குமோ அது வியங்கியப்பொருளெனப்படும். வியஞ்சனவிருத்தியிக்குஉதாரணம்;—சத்துரு வின்கிரகத்திற்போஜனநிமித்தம்புக்கபுருடனை, அவனிடத் தன்புடைய மற்றை ருபுருடன்பார்த்து விஷத்தைப்புசிஎன்புழி, விஷத்தைப்புசிஎன்பதற்குநஞ்சை யுண்ணு என்பது சக்திவிருத்தியாற் போந்தபொருளாம். வக்தாவினுடையதாற் பரியமோஅதுவன்று, புசிக்கவேண்டாம் என்பதாம். போஜனத்தில் சக்தியு டைய பதத்தின் அபாவத்தில் சம்பந்தத்தினபாவத்தால் லட்சணை என்னவுங்கூ டாது; ஆகலால், சத்துருகிரகத்திற் போஜனநிவிர்த்தி வாக்கியத்தின் வியங்கி யார்த்தமாம்; அதுபோலப் பறவையென்னும் பதத்தின் சக்தி விருத்தியானும், இலட்சணைவிருத்தியானும் சிவேசுரர்பெறப்படாமல் வியஞ்சன விருத்தியினாற் பெறப்படுதலின், "வியங்கியப்பொருளாக." என்றார்.

அ - கை.

[காமாதி சேட்டைகள் தம்மால் விளைந்ததெனக்கண்டார், அவற் றையங்ஙனேகளையத்துணிவர். ஈசனுல்விளைந்ததெனக் கொண்டார், களைதற்குச்சற்றுமெண்ணமுறு ரென்பதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

59. இந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாம
லந்தத் தேவனுல் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்க
ளிந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாம
லந்தத்தேவ னன்றெனும் விவேகியே யமலவீ டடைவாரே.

(இ-ள்.) இந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல், எ-து. இந்தச் சீவனுல்விளையுங் காமக்குரோ தாதிகளென்னும் பகையினைத்து மிவன்செயலா லுண்டாயினவென் றுணரவேண்டுவதன்றி:— அந்தத் தேவ னுல்வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள், எ-து. அந்தத் தேவனுல் விளையுமென்ற மூடர்கள் நரகமே யடைவார்கள்:— இந்தச் சீவனுல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல், எ - து. இந்தச் சீவனுல் விளையுங் காமக் குரோதாதிபகைக ளனைத்து மிவன்செயலா லுண்டாயினவென் றுணரவே ண்டுவதன்றி:—அந்தத் தேவனு லன்றெனும் விவேகியே யமலவீ டடைவாரே, எ-து அந்தத் தேவனுல்விளைந்த தன்றென வூகிக்கத்தகும் விவேகிய ரெவரோ வவரே நின்மலமுத்தியை யடைவார், எ-று.

அணிமைபற்றி யிந்தச்சீவனுலெனவும், சேயமைபற்றி யந்தத் தேவனு லெனவுங் கூறியதென்க அணிமைசேய்மை; காமாதிகள் தனது விகற்பபுத்தி யேயெனக் களைதல்காறு நீங்காமையல். அறுபகை ;காமக், குரோத, லோப, மோக, மத, மாச்சரிய மென்பன. இவற்றைப் பகையென்றது வமையாகு பெயர். அதோகதி; எவற்றினுங் கீழாயகதி. அதாவது; தேவகதி, மனுடகதி,

* "வியஞ்சனவிருத்தி" =பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம்: ஒட்டு அணியெனினும் ஒக்கும்.

வினங்கின்கதி, நரககதி யென்பவற்றுள் நரககதி. விவேகியே யென்பதிலேகாரம் பிரிநிலை. "திரிவித வுலகத்தரி தொருஞானி,, யென்றலி னருமைபற்றி விவேகியேயென் றேருமையாக்கியதென்க. அறுபகையுந்தமது வினவென்பார், அவற்றை நசிக்கத் துணிவர். அவன் வினவென்பார், அவற்றை விலேதமாகக்கொள்வர். இவனை மூடரென்பது, அவனை விவேகியரென்பதும் குற்றமோ? குற்றமெனின், அவர்கட்கு மலேசலனமும் இவர்கட்கின்மையும் வரற்கிடமென்னை, ஆதலிற்பொருந்தாது.

(க-து.) காமக்குரோதாதிவினவு தமதுசெயலா லெனக்கண்டார் விடுவரென்பது. இவன்செய லென்னமலெனப் பாடமுமிருக்கின்றது. இவன் செயலா லாயதென்னமலெனப் பொருள்படும், இதுவுங்கூடும் காமக்குரோதாதிவினவையும், அவற்றலாய வின்பதுன்பத்தாக்கையு மீசச்செய லென்னுதாரெங்கணுமரியர். இதுபற்றியவனை மறுத்ததென்க. இம்மூடபாத்திரர் மதத்தர். அல்லாதாரத்து விதிகள். அவர்களயலே நானென்போர் இவர்க ளறிவை நானென்போர். ஆதலினவனை மூடரெனவும், இவனை விவேகிய ரெனவுங் கூறப்பட்டது அயற்கோடற் பாலதன்றமையின், நானென லறிவென்றும். அல்லவென்பார் மூடரெனற்குரியர் இவர்வாதமே மாயாவாத மெனப்படுவது. இது தன்பாலதெனச்சற்றுந் தெரியாதயலார்மே லேற்றினரே. இவமைமிருகமென்னுத பிறப்பால் மனிதரென்பதி லென்சிறப்பு. முன்கவியிற் சீவரென்போ ரிவரெனத் தெரிவித்தற் கிக்கவயிலிங்ஙனங் கூறியதென்க. இவர்களே நாஸ்திக ராஸ்திக ரென்பவரும், யுத்திக்கொவ்வாதகூறும் வேதாந்தியரு மென்பதிற் சிறிதுமையங்கோடற்க. (நிகு)

அறுபகை எனினும், அரிசட்வர்க்கம் எனினும் ஒக்கும். தற்செயலானகாமமுதலிய ஈனகுணங்களைச் சர்வஜ்ஞத்வமுதலிய கல்யாணகுணங்களை யுடைய சிவச்செயலாகச்சொல்பவர், பின்னராயினும் அப்படிச்சொல்வது குற்றமென்றுகருதி அவைநீங்கி க்ஷேமமடையச் சன்மார்க்க முயற்சி யடையாமையின், தனது உடற்கட்பொருந்தியநோய்க்குச் சிகிச்சைதேடாமல் அபத்தியஞ்செய்துவருபவன் அந்நோய் அதிகரிக்கப்பெற்றுப் பின்னும் நானாவித துன்பத்துளாழ்வதுபோலப் பாவம் அதிகரித்துப் பின் நரகமுதலிய நானாவித துன்பங்களையடைதலால், "அதோகெதியடைவார்" எ-ம், அவ்வீனகுணங்களைத் தற்செயலாகவேசொல்லும் விவேகிகள் அவைநீங்கி க்ஷேமமடையக்கருதிச்சன்மார்க்கத்திற் பிரவர்த்தித்தலாற் புண்ணியமிகுந்து சித்தசுத்தியுடையராய் ஞானமடைந்து அஞ்ஞானத்தினும், அதன்காரியமான அநர்த்தத்தினுமின்றுவிடுபடுவதால், "அமலவீடடைவார்" என்றுங்கூறினர். "மூடர்களதோ கெதியடைவார், விவேகிகளமலவீடடைவார்" எனக்கூறினும் மூடர்கள் அதோகெதியை விரும்பாமையானும், விவேகிகள் அமலவீடடையத் தாமேசுதந்தர முடையராகாமையானும் உலகில் அரசனுலேன் தனது நியதிப்படி நடவாதோரைத்தண்டித்து, நடப்போரைச்செய்து, விதித்தவற்றைச் செய்யாதோரை நரகமுதலிய துன்பங்களாற் றண்டிப்பன், விலக்கியவற்றைச் செய்யாதொழித்து, விதித்தவற்றைவிருப்பமாகச் செய்யாநிற்பவரைப் பரமசவுக்கியமடையப் பண்ணுநிற்பன் என்பது பெறப்படுகின்றது.

அ - கை.

[ஈஸ்வரசிருஷ்டிபொதுவெனல் மூரணுவதென்னையென்றதற்கு விடையிக்கவியிற்கூறுகின்றார்.]

60 நலமெய் யையனே யெல்லவர்க் குந்தெய்வ நாயகன் பொது வானற், சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதேனென் றீரேற், குலவு மைந்தனைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்து துட்டரைக்காய் வன், கலிகணல்வழி வரச்செய்யுந் தண்டமுங் கருணை யென் றறிவாயே.

(இ-ள்.) நலமெய்ய்யனே யெல்லவர்க்குந் தெய்வநாயகன் பொதுவானல், எ-று. நன்மையே மெய்வடிவாயமைந்த கர்த்தனே! யாவருக்கு மீஸ்வரன்பொதுவாயிருப்பனையின்:—சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதே னென்றீரேல், எ-து. சிலரை வாழ்வித்தலும் சிலரைக் கோபித்தலுஞ் செய்வதெற்றிற் கெனக்கேட்பையாயின்:—குலவு மைந்தனைத் தந்தை போற் சிட்டரைக் குளிர்ந்து துட்டரைக் காய்வன், எ-து. குலவிக் கொண்டிருக்கும் புத்திரரைத் தகப்ப னெப்படி நேசிப்பதுங் கோபிப்பதுமோ அதுபோலச் சிவன் சிட்டபரிபாலனமுந் துட்டநிக்கிரகமுஞ் செய்வன்:— கலிகணல்வழிவரச் செய்யுந் தண்டமுங் கருணையென்றறிவாயே, எ-து. துன்பமுறத் தண்டித்தலும்; வேதாகம சன்மார்க்க நெறியில் வரும்படிசெய்யுங் கிருபையென்றறிதி, எ-று.

சிட்டரைக்குளிர்ந்து துட்டரைக் காய்வனென்பது; சிட்டரை நேசித்துத் துட்டரை வெறுப்பனென வுரைகொளற் கியையும். தண்டித்தலுங் கருணை யென்றதனால் பகையாகவன்றென்பதாயிற்று.

(க-து.) ஈசன், எவர்பாலு மிரக்கமுடைய னென்பது. இதனால் பட்சபாதனல்லனெனப் பெற்றாம். நீதிவான் தண்டித்தல் ஒழுக்கநெறி சேறற்கு. இது போலுமெனின், யாதோர் காரணமாகவேனு நடுநிலைமை சற்றுநழுவினுநழுவுமெனத் தந்தையை யுபமானித்தார். (சு0)

மூனிதல்=தாரித்திரம், வியாதி, நரகமுதலிய துன்பங்களால் வருத்துவிப்பது. நன்னெறியிற்செல்லும்புத்திரரைச் சந்தோஷித்துஅவர்கட்கு வேண்டிய கன்மைகளைச்செய்வதும். தீநெறியிற்செல்லும்புத்திரரைத் தவேஷித்து நன்னெறியில்வரத்தண்டிப்பதும் பிதாவுக்கு எப்படிப் பாரபட்ச மில்லாத கருணையாமோ அப்படியே சாது, அசாது இருவரிடத்தும் ஈசுரன்செய்யும் அருண், மூனிவுகள் இரண்டுங்கருணையேயல்லாமல் பாரபட்சமான விஷமதிருஷ்டியன்றுஎன்பதாம்.

அ - கை.

(இன்னுமவர் பட்சபாதரல்லரெனலை வற்புறுத்தவிக்கவியிலு முபமானபூர்வமாகக் கூறுகின்றார்.)

61. மனைவி லங்கறு மைந்தனே சற்பக மரங்கனல் புனன்மூன் றுந், தனைய டைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந் தவிர்த்தாளு மனைய வீசனு மடைந்தவர்க் கருள்செய்வா னன்கன்றவர்க் கருள் செய் யா, னினைய குற்றங்க ளெவருற்ற மாகுமென் றெண்ணினீ, யறிவா யே.

(இ-ள்.) மனைவிலங்கறு மைந்தனே கற்பகமரங் கனல்புனல் மூன்றும்; எ-து. சுடும்பவிலங்கைத் தறித்தெறிந்த ஞானபுத்திரர்! கற்பக விருட்சமும் அக்கினியும் சலமுமாகிய விவைமூன்றும்: — தனையடைந்தவர் வறுமையுஞ்சீத மும் தாகமுந் தவிர்த்தாளும், எ-து. தன்னை யடைந்தவ ரெவரோ வவரது, தா ரித்திரியத்தையும் குளிரையும் தாகத்தையுநீக்கி யிரட்சிக்கும்: அனையவீசனு மடைந்தவர்க் கருள்செய்வா னன்கன்றவர்க் கருள்செய்யான், எ — து. அத்த கையதாகவீசனுந் தன்னை யடைந்தவர்களுக் கனுக்கிரகிப்பன் அடையாதவர் களுக்கனுக்கிரகிக்கான்:— இனியகுற்றங்க ளெவர்குற்ற மாகுமென்றெண்ணி நீயறிவாயே, எ து. இப்படிப்பட்டகுற்றங்க ளெவர்குற்றங்க ளாகுமென்று நீ சிந்தித்துத்தெரிந்துகொள்ளுதி, எ-று.

கற்பகமாதிமூன்றும் வறுமையாதிமூன்றும் நேரினிறை இவ்வுவமை யேற்பதற் கையஞ்சிறிதமின்றெனக் கொள்க. மூன்றுமென்பது: தொகை யொருமையாதலின் தனையடைந்தவ ரென்றெருமையிற் கூறினுர். பாரபட்ச னல்லனென்கருதிக்க அனையவீசனென்றார். இவ்வளவு தெரியாதா ரவரிஷ்ட மென்பர். இவர்களுருத்தன மையமகலாமைக் கிடமாம். எங்ஙன மெனில், சீவர்களென்செய்வ ரவர்கள்மேற் பிழையேதோ வென்பதையும், ஈசன்பார பட்சமுடைய னென்பதையும், அல்லனென மூரணின்றிக்கூற வகையின்மை யையும், அதனை வெறுத்துக்கொள்ளுதற் கிடமா மென்பதையும் வற்புறுத்து கின்றது. இனியங்ஙன் மாகாமல் விதிவிலக்கியற்றின ரெனில், இப்போ தவரி ஷ்டமென வந்ததற் கேதென்னையோ இனியுமவரிஷ்டப்படி நடத்துவரென்ற தானே பொருள்படு கின்றதே. ஆதலின் விதிவிலக்கா லென்பயன். இனி விதிவிலக்காற் பயனுளதெனின், அப்போ தெந்த சென்மத்திற் செய்த விதி விலக்காற் சிலரின்பமும் சிலர்துன்பமு மனுபவித்துக்கொண் டிருக்கின்றனர்; இதுவகையறுதலோ தஃசெங்ஙனம் வகையறும். இவையெல்லாஞ் சந்தேகவிப ரீதமறுத்த வேற்பாடாம். இதுநிற்க,

(க-து;) சற்கருமங் காரணமாக் வின்பத்தையும் துற்கருமங் காரண்மாகத் துன்பத்தையுந் தருபவனீசனென்பது. இஃதறுதி தொட்டென்வறிக. அஞ் தியிற் சீவர்கள் கன்மம்புரிவானேனெனின், இப்போது புரிவானேன். இனிவ ரும்பயனுக்கெனின், இப்போதுவந்தபயனுக் கெட்போது செய்தது. அவரிஷ் டமெனின், கூறியது கூறலாற் கூடாது. முன்பின் முரணுறாது கூறவகையறி யாசாரத்துவிதிமூன் றென்செய்வர், இவரா ணண்ணற்க. (சுக)

"அனைய வீசனு மடைந்தவர்க் கருள்செயீவ னகன்றவர்க்கருள் செயீ யான்" எ-து, உ-ம்பகவற்கீதை,

"எப்பொரு டனக்கு மியாஞைத் திருத்தலா லெனக்கி யாரு மொப்பார்களினிய ரின்னு தாரென வொருவ ரில்லை

யிப்படி யறியு மன்பர் பக்கலே யானுநிற்ப
னப்படி யவரு மென்பா லங்ஙன மமர்ந்து நிற்பார்.”—

என்வரும் மற்றும்வருவனவற்றுக்காண்க.

“இனைய தற்றங்க ளெவர்தற்ற மாகும்” எ-து, உ-ம் பட்டினத்துப்பி ள்ளையார் திருவிடைமருதூர்மும்மணிக்கோவை,

“பொருதிடங் கொண்ட பொன்னி புரக் கு
மருதிடங்கொண்ட மருதவா ண
கின்னது குற்ற முளதோ கின்னினை ங்
தென்ணருங்கோடி யிடர்ப்பணக் களேந அ
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதை யா
இறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்போ டு
தேவ ராவின் கன்றெனத் திரியா ப்
பர்விக் டமதே பாவம் யாதெனீ ன்
மூறியற் பெறுக்கன் மூப்பழங் கலந் த
வறுசுவை யடிசி லட்டினி திருப்ப ப்
புசியா தொருவன் பசியால் வருந்து த
லபினியின் குற்ற மன்று வெயிலின்வை த்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட்டிருப் ப
மடாஅ ஒருவன் விடாஅவேட் கை
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன் று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் தூறு மி
வாலுகங் கிடந்த சோலை கிடப் ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப் ப
வடிபெயர்த்திடுவா னெரு வ
னெடிதுவருந்துதனிழற்றீங்கன் றே:

என்வரும். மற்றும்வருவனவற்றுக் காண்க.

அ - கை.

[ஐயனே விடாதுயிர்களியற்றுமிருவினைக்கேடாக வின்பதுன்பங் களேயீசன்தருவனெனி னிதற்குமுடிவுதானின்றேவெனின், உண்டென விக்கவியிற் கூறுகின்றார்.]

62. ஒன்று கேண்மக னேபுமான் முயற்சியா லுரைத்துமா னிடர்க் கீச. னன்று செய்பவே காட்டிய நூல்வழி நடந்துகல் லவர்பின்னே, சென்று கூட்டவா தனைவிட்டு விவேகராய்ச் செனித்த மாயையைத் தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிது தானே.

(இ-ள்) ஒன்றுகேண்மகனேபுமான் முயற்சியா லுரைத்துமாணிடர்க்கே சன், எ-து, அங்ஙனமாயின் ஞானபுத்திரா, யான்கூறவேண்டுவ தறுதிமொழி யொன்றுள ததனைக்கேளுதி. அதாவது: புருடப் பிரயத்தினத்தினு லன்றிவே றொன்றுலாகாதெனமுன்னர்கூறிப் பின்னரீசன்மனிதர்களுக்கு:— நன்றுசெய் யவேகாட்டியநூல்வழி நடந்துநல்லவர்பின்னேசென்று.எ - து. மிக்கவுபகாரஞ் செய்யு நிமித்தமாகவே யேற்படுத்திக்காட்டியவேதாகமநூல்களுக்கும் விதிவழி யேதவறுதுங்டந்து சற்சனரைவிடாதவர்பின்சென்று:—துட்டவாதனை விட்டு விவேகராய்ச் செனித்தமாயையைத்தள்ளிநின்று, எ – து. துட்டசேட்டைகளை யும் அதிகாரணமாகப்பற்றுந் துட்டவாதனைகளையு மொருங்கேயொழித்துவிட் டுவிவேகபாத்திரராய் முன்னர்புத்திவிகற்பத்தாற்றமதிடத்திற்செனித்த பிராந் திரூபமானமாயை யென்பதைத் தள்ளவேண்டியவாறுதள்ளிமனஞ்செல்லுழிச் செல்லாதுநின்று:—ஞானத்தை யடைந்தவர்பவங்கள்போ நிச்சய மிதுதானே, எ-து. ஞானமினையதென வுணர்வேண்டிய வாறுணர்ந் ததனைத்தானுகவனுட் டித்தடைந்தவர்களெவர்களோ வவர்கள் பவத்துக்கேதுவானசஞ்சிதவினைகளினை த்து மொருங்கேயொழிந்துபோம்இதிலையமென்னை இன்றுதலானிதுவேநிச்சய மாம், எ-று.

விவேகியாயெனினுமமையும், ஆயினிதுபலர்பாலேத்தராமைபற்றி விவே கரானென்றும். நடக்குதலும் செல்லுசலும் விடுதலும் விவேகராதலும் தள்ளு தலும் அடைதலும் புருடப்பிரயத்தினமன்றிக் கூடாமையின், புமான்முயற்சி யாலெனவும், ஏனையவுயிர்கட்கன் றென்பார் மானிடர்க்கெனவும், ஏனையவுயி ரையொழித்தது; பெரும்பாலுந் தேவர்புண்ணியகன்மத்தராதலின் சுகத்துக்கே டாயபோகத்துக்கேயுரியர். மிருகாதியைவகைத்தோற்றவுயிர் பாபகன் மத்தராத லின் துக்கத்துக்கேடாயபோகத்துக்கே யுரியராதலினென்க. மனிதர் மிசிரகன் மத்தராதலினிவ்விரண்டிற்கேடாய போகத்துக்கேயுரியராதலைப்பற்றியும், சுகது க்கநிலையைக்கலந்தனுபவித்தலி னிவர்களைநிலையைக்கணித்தொழிப்பரென்பதுப பற்றியும், இவரொழித்தற்கியைந்தவராதலின் ஞானமெய்துவரென்பதுபற்றியுந் தெரிந்தவனீசனுதலினீசனுரைத்தெனவுங்கூறினர், முத்தியெய்தற்பாலரிவராத லினிவர்கட்கே நன்றுசெய்யவேகாட்டியநூலெனத்தகும். பொதுப்பட மானிட ரெனினும், சாத்துவிதகுணமிக்காரையெனக்கொள்க, ஏனையகுணமானிடரை மத்திமவதமத்திற்கூட்டுக. நூல்வழிநடப்பதினுல் விதிவிலக்குக்குக் கட்டுபடுத லும், நல்லவர்பின்னேசெல்லுதலாலவர துநல்லொழுக்கம்படிதலும், ஞானத்தைய டைதலால் சானன்னியமாகாதுஞானமாய்விளங்கலுமாம். இது கிருதகிருத்திய மார்தலா லினிப்புண்ணியபாவவினைக் கிடமின்றெனவுணர்க.

(க-து) ஞானகாரமேசங்கற்பநாசமெனவும், சங்கற்பநாசமேபிரவினை நாசமெனவும், இருவினைநாசமேபுண்ணியபாவநாசமெனவும், புண்ணியபாவநா சமே சுகதுக்கநாசமெனவுங்குறிப்பிற் றெளிவித்தாரென்பது. இதுவீன்வினை புரிதற்கும். ஈசனிதற்கியைந்தபலன்தருதற்கும். ஞானகாரமுடிவாதலாலிதுமு டிவிடங்கூறலென்னுமுத்தி. பொதுவாகஞானத்தை யிங்கேசொல்லியினியித னையே சொல்லப்புகுதலால் துதலிப்புகுதலென்னுமுத்தி. பவமகற்றத் தக்கது

ஞானமெனவே, பொருளேப்பொருளாகக்கொள்ளுமெய்யுணர்வென்பதாயிற்று இதுபரிச்சின்னதோடமற்றது. (சூஉ)

எவ்வகை முயற்சிசெய்பவரும், நெடுங்காலம், நிரந்தரம் நேசத்தோடு செய்யினன்றி அவ்வப்பயனே யடையாராகலின், ''புமான்முயற்சியாலுறைத்து' என்றார். ''மாநுடீக்கு'' எ-து,

''மடல்வி ரிந்தம ரைமலர் வைகுவோன்
சடம னேத்தையுந் தந்துமு வந்தில
னிடர றுக்குமென் றெண்ணிகன் மாநுட
வுடல்படைத்தபி னேகையுற் றுனரோ.''—

என்னும் பாகவதத்தின் கருத்தினுல் என்க. ஈசுராப்பணமாகச்செய்யும் நிஷ்காமகர்மானுஷ்டானத்தால் அந்தக்கரணத்தின் மலதோஷமும். ஈசுரோபாசனையினுல் விக்ஷேபதோஷமும் நீங்கித் தீவிரமானசிஞ்ஞாசையோடுகூடிப்பெரியோர்களே யடைந்தென்பார், ''நூல்வழிநடந்து நல்லவர் பின்னேசென்று'' என்றார்.

ஞானம் சர்வப்பிராயச்சித்த ரூபமாகலின், இதனைச் சொல்லிய சோபானக்கிரமமாகவடைந்தாலன்றித் தற்செயலே ஈசுரச்செயலாகச்சொல்லித் திரிந்த பெருந்தோஷந்தவிராது என்பது கருத்து.

அ - கை.

[இந்தஞானமுதிக்குமாறெங்ஙனமென்றவினாற்கு விடைவிசாரத்தாலெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

63. இந்த ஞானந்தான் வருவதெப் படியெனி லிடைவிடா விசாரத் தால்
வந்த் டைந்திடும் விசாரந்தா னேதெனின் மனுதியாஞ் சரீரத்தி
லிந்த நானெவன் சித்தெது சடமெது விரண்டுமொன்றுக்கூடும்
பந்த மேதுவீ டேதென வுசாவுதல் பகர்விசா ரமாமே.

(இ-ள்.) இந்தஞானந்தான் வருவதெப்படியெனி லிடைவிடாவிசாரத் தால்வந்தடைந்திடும்,—எ-து. இந்தஞானமுதிக்குமாறுதா னெங்ஙனமெனவினவில், !க்ணநேரமுமிடைவிடாது விசாரிக்கும் விசாரத்தினுல் வந்துகிடைக்கும்:—விசாரந்தானேதெனின் மனுதியாஞ்சரீரத்தில்,—எ-து. ஆயின்விசாரமென்பதுதான்யாதோவெனின், மனமுதலாக நின்றுள்ள தேகங்களிலிருக்கின்ற:—இந்தநானெவன் சித்தெதுசடமெதுவிரண்டுமொன்றுக்கூடும் பந்தமேது வீடேதெனவுசாவுதல்பகர்விசாரமதாகும்,— எ-து. இந்தநானென்பவனெவன் சித்தெனலுஞ்சடமெனலுமெது இவ்விரண்டுமொன்றுகச்சம்பந்தித்தசம்பந்தம் யாது இனிச்சம்பந்தமுறுத்தற்குவிடுதியாது என்றேயாது விசாரணபண்ணிக்கொண்டிருத்தலே முன்னர் கூறியவிசாரமாவதென்றறிந்துகொள்ளுதி,—எ-று.

மனுதியாஞ்சரீரமென்றது; சூட்சுமதூலகாரணமென்றுரையிற்று. உசாவுதல்; சான்றோரிடத்திவற்றைவிளங்கவிசாரித்தலே.

(க-து.) ஞானம்; விசாரத்தாலன்றியெய்தாதென்பது. இங்ஙனமாயவி சாரமின்றியெய்த லஃதபரஞானம், இங்ஙனம்விசாரித்தல் விடுதிவிசாரம். ஏனை யவிசாரம் பந்தவிசாரம் விசாரமென்றறிவாயேயென்னது பகர்விசாரமதாமே யெனப் பாடமோதியதெற்றிற்கெனின், மோனைபகரம் போலவியையுபகரம் வராமைபோலென்க. என்னை, ''எழுவாயெழுத்தொன்றின்மோனையிறுதியியை'' யென்பதனுற்காண்க. விசாரமினையதென்றுணர்த்தியது. விசாரமதாகுமென்னது பகரொன்றமிகையால், ஐயந்திரிபகற்றத் தக்கோனிடத்தென்றுரையிற்று. (சுரு)

"ஞானக்கு முந்துசவ ணாதிகமே காரணம்"—

என வேதாந்தசூடாமணிழுதயலிநூல்களிற் கூறியிருப்பதுபோற் கூறு மல் இடைவிடா விசாரத்தால் வந்த டைந்திமீம் விசாரந்தான், நானெவன் சித்தெதுசட மெது, எனவுசாவுதல்'' என இங்கே கூறினதற்குக் காரண மென்னையோ வெனின்; — விவேகம், வைராக்கியம், சமாதிசட்சம்பத்தி, முமுட்சுத்துவம் இவைநான்கும், சிரவண, மனன, நிதித்தியாசனங்கண்மூன் றும், தற்பதார்த்த, துவம்பதார்த்த சோதனையென்றும் ஆக இவ்வெட்டும் அந்தரங்க சாதனமென்றும், எக்ஞாதிகர்மங்கள் பகிரங்கசாதனமென்று சொல் லப்படும்; அவைகளில் சிஞ்ஞாசுக்குப் பகிரங்கசாதனங்கள் தள்ளற்பாலன: அந்தரங்கசாதனங்கள் கொள்ளற்பாலன. சிரவணத்தில் அல்லது, ஞானத்தில் யாது பிரத்தியட்சப்பயனை யுடையது அது அந்தரங்கசாதன மெனப்படும். [பலன் எ-து இங்கே உபயோகத்தை] விவேகாதிகளின்றிப் பகிர்முகபுரு ஷனுக்குச் சிரவணங்கூடாதாகலின், விவேகாதி நான் கனுபயோகஞ் சிரவ ணத்திலுளது; அப்படியே சிரவணாதிகளின்றி ஞானமுண்டாகாதாகலின் சிர வண, மனன, நிதித்தியாசனங்களினு னுபயோகம் ஞானத்திலுளது; அப்படி யேதற்பதார்த்தம், துவம் பதார்த்தங்களை யறிந்தாலல்லாமல் அபேதஞானம்உண் டாகாது. இவ்வாற்றால், விவேகாதி நான்கு சாதனங்களினுபயோகம் சிரவணத் திலும், சிரவணாதி நான்கு சாதனங்களினுபயோகம் ஞானத்திலு மிருப்பதால் எட்டும் அந்தரங்கசாதனங்கள்; யாது ஞானத்தில் அல்லது, சிரவணத்தில் பிரத் தியட்சப்பயனை யுடைத்தாகாமல் அந்தக்காரண சுத்தியாகிய பயனையுடைத்தா யிருக்குமோ அது ஞானத்திற்குப் பகிரங்க சாதனமெனப்படும்; இப்படிப்பட் டவை எக்ஞாதிகர்மங்களாம். எப்படியும் எக்ஞாதிகர்மங்கள் சம்சாரத்திற்குச் சாதனங்களாகலின் அவைகளால் அந்தக்காரணசுத்தி உளதாமெனலுங்கூடாது; அப்படியானாலும் சகாமபுருஷனுக்குச் சம்சாரத்திற்கேதுவாம்: நிஷ்காமனுக்கு அந்தக்காரணசுத்திக்கு ஏதுவாம்; இவ்வாற்றால், நிஷ்காமபுருஷனுக்கு அந்தக் காரண சுத்திவாயிலாக ஞானத்திற்குஏதுவாகலின், பகிரங்க சாதனமென்றும், விவேகாதிகள் அந்தரங்கசாதனமென்றுஞ் சொல்லப்படும். தூரமாவுள்ளதற்குப் பகிரங்கமென்றும், சமீபமாவுள்ளதற்கு அந்தரங்கமென்றும்பெயர். எக்ஞாதி கர்மங்களையும், அவைகளின் சாதனங்களான ஸ்திரீ, தன, புத்திராதிகளையும் விடில் அவன்ஞானத்துக்கு அதிகாரியாவன். ஞானத்திற்கு அதிகாரியிடத்து எக் ஞாதிகள் பொருந்தாமையின் அவைதூரமாம். விவேகாதிகள் ஞானாதிகாரியிடத் துப் பொருந்தியிருத்தலின் சமீபமாம்; இவற்றினும்பேதமுள; அவையாவை

யோவெனின் ?—விவேகாதிகளினுபயோகம் சிரவணத்திலும், சிரவணாதிகளினுபயோகம்ஞானத்திலு மிருப்பதால்விவேகாதிகளோநோக்கச் சிரவணாதிகள் அந்தரங்கமாம் : சிரவணாதிகளோநோக்கவிவேகாதிகள் பகிரங்கமாம். எப்படியும், விவேகாதிகளும் ஞானத்திற்கு அந்தரங்க சாதனங்களென்றே சர்வசிகாந்தங்களிலும் கூறியுள்ளன : பகிரங்கமாகக்கூறவில்லை ; அப்படியானாலும் ; விவேகாதிகட்கு ஞானத்தின் சாவனமான சிரவணத்தில் பிரத்தியட்சப் பயனிருக்கின்றது. சிரவணாதிகளோப்போல விவேகாதிகளும் சிஞ்ஞாசவினுலடையற்பாலனவேயாம்:எக்ஞாதிகளோப்போலத் தள்ளற்பாலனவல்ல; ஆதலால்,அந்தரங்கமென்றனர்:எக்ஞாதிகளோநோக்கவும் அந்தரங்கமாம் ; ஆகலின், அந்தரங்கசாதனத்திற் சேர்த்துக்கூறினர். விசாரத்தினுற்பார்க்கில் ஞானத்திற்கு முக்கியவந்தரங்கசாதனம்தத்துவமஸியாதிமஹாவாக்கியங்களாம் :சிரவணாதிகளுமல்ல.என்னை? யுத்தியினுல்வேதாந்தவாக்கியங்களின் தாற்பரியநிச்சயம் சிரவணமெனப்படும. சிவபிரமங்களின் அபேதத்தின்சாதகமும், பேதத்தின்பாதகமுமாகியயுத்திகளால் அத்துவிதீயப்பிரமத்தின் சிந்தனம் மனனமென்றுசொல்லப்படும். அநான்மாகார விருத்தியின் வியவதான ரகிதமான பிரமாகார விருத்தியின் ஸ்திதி நிதித்தியாசன மென்று சொல்லப்படும். நிதித்தியாசனத்தின் பரிபாகா வஸ்தையையேசமாதியென்பர் ; இதனுல் சமாதியும் நிதித்தியாசனத்தில் அந்தர்ப்பாவமாம் : வேறுசாதனமல்ல ; இந்தச்சிரவண மனன நிதித்தியாசனங்கள் ஞானத்திற்குச் சாட்சாத்சாதனமல்ல ; பின்னை எப்படிப்பட்டதெனின்;—புத்தியினது தோஷமாகிய அசம்பாவனை, விபரீதபாவனைகளின் நாசகமாம். சமூசயத்தை அசம்பாவனை என்பர். இப்படி விசாரசாகரத்திற் கூறியிருக்கின்றது ; இவ்வபிராயத்தினுலேயே இவரும் சிரவண, மனன, நிதித்தியாசனங்களால் ஞானம்வருமென்னுது, "இடைவிடா விசாரத்தால் வந்தடைந்திடும்" என்றார்.

"விசாரமதாம்" எ-கு, உ-ம் வாசிட்டம்,

'கெடாத சிற்கண்ணுனீ தான்கிளர்மே லவர்களுடனேதான், விடாதிவ்வுலகே தியாமாசென் றுறைக்க மெல்ல விசாரிப்பாய், தடாதுட் பொருடேர்வித்தைக்கு விசாரந் தானே தனிஞானங், கடாவி யறியத் தக்கதிற் காணும் பாலின் மதுரம்போல்,"—எ-ம்,

"மூனிய கன்றபின் னெயினர் கோன் றனியிட முந்திநன் மதியாலே, யனிச நானென்ப தாரென நாடின நாடின னடிமுதன் முடியீறுந், தனியுடம்பைநா னென்பது புதுமையாஞ் சடவுடல் காண்கேனுன், றுனிசெ யிவ்வுடலசேதனந் தசைமுதற்றுன்னுமா தலினன்றே."—எ-ம்.

"கரண மீதைந்துமன்னியுஞ் சடமெனுங் கணக்கினு ணன்றித், திரளெனக்கில வுடன்முதனனன் சேடமே தெனநோக்கில், விரவு சீவனே சேடமா மின்னதும் வேறென்றுற் றெரிகின்ற, தரவி தானவே றென்றிலுற் றெரியு மீதுயர்ந்ததத் தவமாகா."—எ-ம்.

"தெரிவதாகிய வித்தனையு மகற்றுவன் றெரிபொரு ணுனுமோ, பெரிதசேடமாய் விகற்பமற் றமலமாம் போதி யானுகு,மரிய யன்சிவ னிந்திர னந்

தக ஞதியா மிடந்தோறுஞ் சுரிகொண் முத்தினு ணூலென நிற்குமாற் றேன் றுமிவ் வுயர்போதம்.''—

அ - கை க.

[ஞானத்தைப்புண்ணியபரிபாகந்தராதாவென்ற வினவிற்கு விடை யிக்கவியிற்கூறுகின்றார்]

64. போன சன்மங்க டமிலனுட் டித்தநற் புண்ணிய பரிபாக ஞானமாக்குமே விசாரமே னென்றிடி னுமூரைத் திடக்கேளா யான புண்ணிய மீசுரார்ப் பணஞ்செயி னசுசிபோஞ் சுசியாகு மான தம்பினை விசாரித்து ஞானத்தை மருவுமென் றறிவாயே.

(இ-ள்.) போனசென்மங்கடமிலனுட்டித்தநற்புண்ணியபரிபாகம்,—எ-து முன்னனேகசென்மங்களில் யாமனுட்டித்தநல்லபுண்ணிய பரிபாகமானது:—ஞானமாக்குமே விசாரமேனென்றிடி னுமூரைத்திடக்கேளாய்,-எ-து. ஞானத்தையும்விளவிக்குமே இங்ஙனமிருக்க; விசாரணைபண்ணுவதெற்றிற்கு விவர்த்தந்தானேயெனக்கேட்டையாயின், மெய்யே யதுபற்றியாமுரைக்கவேண்டுவதொன்றுள ததனைக்கேளுதி:—ஆன புண்ணியமீசுரார்ப்பணஞ்செயி னசுசிபோஞ்சுசியாகும்,—எ-து. அங்ஙனமாய புண்ணியங்களே யீஸ்வரப்பிரீதிசெய்தா லசுத்தநீங்கும் அசுத்தநீங்கவே சித்தசுத்தியுண்டாகும்:—மானதம்பினை விசாரித்து ஞானத்தைமருவுமென்றறிவாயே,—எ-து. சித்திசுத்தியுண்டாயபின்ன ரங்ஙனமாயமனமானது தன்னையுள்ளவாறுவிசாரணைசெய்துண்மை ஞானத்தைத் தானுகவடையுமென்றுணர்தி,—எ-று.

இச்சனனமுளதாதலின் போனசென்மங்களுமுண்டு இச்சனனத்திலனுட்டிக்கும் புண்ணியர்க ளாங்காங்குள ரதனைக்காண்கின்றோம். இதுபோல, மூன்னருமுளரென்பதற்கையமென்னை. புண்ணியபரிபாகம்; புண்ணியமேலீட்டாலாயபக்குவத்தை. புண்ணியபரிபாகம்; மேலாயபோகபாக்கியத்தைத் தருவதன்றியு ஞானமுமாக்குமே எனக்கொள்ளவேண்டுவதாதலா லிதிலும்மை தொக்கது. விசாரத்தால் ஞானம்வருமென முன்கவியிற்கூறி யிக்கவியில் புண்ணியபரிபாக ஞானமாக்குமேயெனக்கூறில், அதுக்குவிப்பொருளுமிது கர்த்தாவுமாகின்றதேயெனில், மெய்யே ஒருபிறிதி ஞானமாக்குமேயெனவும் மற்றோர்பிறிதிஞானமாகுமேயெனவு மிருப்பதற்கென்செய்தும். புண்ணியபரிபாக ஞானமாகுமேயெனப் பாடமோதி புண்ணியபரிபாகத்தால் ஞானமெய்தலாகுமேயென வெமதாசிரியருரையிட்டன ரதுவேபொருத்தமெனினு மங்ஙனமாக்குக. புண்ணியமீஸ்வரார்ப்பணஞ்செயி னெனவே பாவமன்றென்பதாயிற்று. பாவத்தையெனின், அசுசிபோய்ச்சுசியாகாது. ஆயின்பாவமன்னிப்பென்றதெற்றிற்கு? இடைவிடாது பாவஞ்செய்தற்கு. அன்றேல் மன்னிப்பெற்றிற்கு, தானே விட்டுவிடலாமே, தன்னைப் புனிதனெனப் பிறர் மெச்சற்கோ, பயனென்னை.

(க-து.) புண்ணியபரிபாகத்தால் மனஞ்சுத்தமாம், அந்தச் சுத்தத்தால் விசாரணைக்கிடமாம், அந்த விசாரணையால் ஞானம்வரும், அந்த ஞானத்தால் முத்தி

கைகூடும், இங்ஙனமிருக்கப் புண்ணியபரிபாகம் ஞானமாகுமேபெனக் கூறலாமா ? இது முறையன்றென்பது. புண்ணியம்-சற்கருமம். அது, நிரிகரணமுமொத்துப்புரிதல் இங்ஙனம்புரிதலேவிட்டேச்செய்தல், புண்ணியப்போலி. இதனையாவர்மாட்டுங்காணலாம். (கூசு)

அ - கை.

[கருமம் விசாரம் என்பவற்றுள், விசாரம் கருமத்தைப்போல வெல்லாந்தரவலியதா அல்லவே கருமம் ஞானத்தையுந் தராதாவென்றவினவை யிக்கவியிற்கூறுகின்றார்.]

65. பத்தி யும்வயி ராக்கிய மும்பர லோகமு மணிமாதி
சித்தி யுந்தவ நிட்டையும் யோகமுந் தியானமு ருசாரூப
முத்தியுந்தரும் விசித்திர கருமங்கண் மோகமாத் திரந்தள்ளும்
புத்தி யுந்தர லருமையோ விசாரமேன் புண்ணிய குருமூர்த்தி.

(இ-ள்.) பத்தியும்வயிராக்கியமும் பரலோகமுமணிமாதி சித்தியுந்தவநிட்டையும்,—எ-து. ஈசுரபத்தியையும் நிராசையையும் சுவர்க்காதிலோகங்களையும் அணிமாமுதலிய வஷ்டமாசித்திகளையும் காமியத்தவத்தையும் நிட்காமியத்தவமாகிய நிட்டையினையும்:—யோகமுந்தியானமுஞ் சாரூபமுத்தியுந்தரும் விசித்திர கருமங்கள்,—எ-து. இருவகையோகங்களையும் மூர்த்தியாதியானங்களையும் சாரூபமுத்தியையும் தரத்தகுந்தவிவைதகருமங்கள்:—மோகமாத்திரந்தள்ளும் புத்தியுந்தாலருமையோ விசாரமென்பண்ணிய குருமூர்த்தி, எ-து. தருமசொரூபியாகிய குருமூர்த்தியே ! அஞ்ஞானத்தைமாத்திரந்தள்ளத்தகுந்த ஞானத்தையுந்தருதலவற்றிற்கருமையா ? அல்லவே, விசாரமெற்றிற்கு. இதென்னவியப்பு,—எ-று.

(க-து.) பத்தியாதிமுத்தியிறுவாக்கிடந்த வொன்பதுபேற்றையுந் தரவல்லியுள்ளகருமத்துக்கா ஞானத்தைத்தருதற்கு வலிமையில்லை, யிதென்னவியப்பென்பது. விசித்திரகருமங்களெனப்பன்மையாக்கியது ; விஜேதவித்தைகளளவின்மையினதுபற்றியென்க. மோகந்தள்ளும்புத்தியென்னுது ழூத்திரமெனமிகைபடக்கூறியது, வலியுற்றதெனக்காட்டற்கு. இவ்வொன்பதையுந்தர வல்லியுள்ளகருமம் புத்தியுந்தருமேயெனப் பொருள்படலின், புத்தியுமென்பதிலும்மை யிறிவுசிறப்பாயிற்று. ஏனையவொன்பதுவகையும்மையெண்ணும்மை விசாரமினையதெனத் தெரிவித்துங் கன்மவமூத்தம்விடவில்லையே ஏனையெங்ஙனம்விடுவர். சென்மம்பலவேண்டும். விசாரமில்லாவிடத்து மூற்றத்துறந்துமென்பயனென்பதை யிவனறியான்போலும். அறியினு மாசான்மொழியாலறிதுமென வினவியதாகலாம். ஆதலி னிஃதறிவினு இது பரிட்சிப்பதன்றேவெனின். தெரியினு மின்னும்விடையாதளதோவென்னுமையத்தாற் கேட்டதாகக் கொள்ளலாகாதா ? ஆதலின் பரிட்சிப்பதற்கன்றென்க. இங்ஙனமாகவரும்வினவினத்தும் அறிந்தமறியாவினவு. (சுடு)

அ - கை.

[இதுவிசாரத்தாலன்றிக் கருமத்தாலாகுமாவென யுத்தியாலுபமானபூர்வமாக விக்கவியிற்கூறுகின்றார்.]

66. வேட மாறிய பேர்களே யறியவே வேண்டினுன் மகனே கேள்
கூட மாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்த் தறியாம
லோடி யுங்குதித் துந்தலை கீழ்நின்று மூயர்ந்தகம் பத்தேறி
யாடி யும்பல கன்மங்கள் செய்யினு மவருண்மை தெரியாதே.

(இ-ன்.) வேடமாறியபேர்களே யறியவேவேண்டினுல் மகனேகேள்,—எ-து. சற்றுமொழிவின்றி வேடத்தால்மாறியபேர்களே யினையனென்றறிய வேண்டுதற்கே யெண்ணங்கொண்டு கண்டுபிடிக்கவிருப்பங்கொள்ளில் யாமோர் தந்திரங்கூறுதும் ஞானபுத்திரா! அதனைக்கேளுதி:—கூடமாமவர்சுபாவங்கள் சீலங்கள் குறிகளாயந்தறியர்மல்,—எ-து. இரகசியமாயுள்ளவவர்கள் சுபாவ நடைகளையும் ஒழுக்கங்களையும் குறிகளையும் ஆராய்ந்துணர்வதைவிட்டு:—ஓடியுங் குதித்தும்,—எ-து நாளொன்றுக் கேழுரோடியும் மருள்கொண்டார் போலாவேசம்வந்துகுதித்தும்:—தலைகீழ்நின்று மூயர்ந்தகமபத்தேறி யாடியும் பல கன்மங்கள்செய்யினு மவருண்மைதெரியாதே,—எ-து. தலைகீழதாகநின்று தவஞ்செய்தும் மிகவுமூயர்ந்தகம்பத்தின்மேலேறிக் கூத்தாடியும் இன்னுமிவை போன்ற பல விநோதகன்மங்கள்செய்தாலும் அவ்வேடதாரிகளி னெசார்த்தவ டிவ மெங்ஙனந்தெரியும் தெரியமாட்டாதே,—எ று.

கூடம் மறைவு. தேசவுளவுகாண வரசனுலே வப்பட்டோனது மாறுவே டந்கள்ளியவனேயினேயனென்னக் காணப்புகுந்தமற்றெருவ னவனேடுகூடி யுற வாடிநின்றுபழகி லவனுண்மை வடிவங்கண்டுபிடிக்கலாம் இங்ஙனஞ்செய்தலே விட்டு, அவனுண்மைவடிவங் காணவேண்டிப் பலவிடத்தோடுதலும் குதித்த லும் தலைகீழதாநிற்றலுமாகிய விவைபோன்ற டலகோரணை நடிப்புகள்செய்யி னுங்காணுமா காணுதேயிதுபோலக் கைலாயமுதலியதேசவுளவுகாண வஞ் ஞனென்னுமரசனு லேவப்பட்டோன் அவ னெழுவகைத்தோற்றவேடத்தால் மூடப்பட்டெந்நேமுங்கரந்துள்ளான்;அவன்தமாறுவேடந்தள்ளியவனேயி னேயனெனக் காணப்புகுந்த விவேகப்போலியென்போனெருவன் பகிர்முகமாகா தாங்காங்கு சிந்தைமறந்து சிதறுதுன்னித்தவனேடு பலகானிர்விகற்பத்தாற் பழகி லவனுண்மைவடிவங்கண்டுபிடிக்கலாம். இங்ஙனமாயவதிசூக்குமவாராய் தலை விட்டு இவனுண்மைவடிவங்காணவேண்டிச் சந்நியாசம்பூண்டு மீண்டுஞ்செல் லாது நாளொன்றுக்கேழுர் சுற்றவிரைவாகவோடியும் பரவசமாகிக்குதித்தும் தலைகீழதாநின்றரியதவம்புரிந்தும் ஊசிமுனைபோன்ற உயர்ந்தகம்பத்தேறியாடி யும், இன்னுமிவைபோன்ற அரியபற்பல சற்கருமஞ்செய்தும் பயனென்னை; இன்றுதலாராய்தலே தகுதி ஆராய்தலாலேவெளிப்படுத்தும், சற்கருமங்கள் மனதைப் புனிதமாக்கும். இஃதைச்செய்யாது, அஃதைச்செய்யாது கரு மம்புரிவோர்க் காராய்தல்தோடம். ஆராய்தல்செய்வோர்க்குக் கருமந்தோடம். இது முறையாதலால் வழுவன்று. ஆராய்தல்செய்வோர் பிறர்க்குபகாரமாகக் கன்மம்புரியினும் புரிவர். கன்மம்புரிவோர்புகழ்வேண்டி யாராய்தல்செய்யி னுஞ்செய்வர். உபகாரமும் புகழுந் தன்னேவிளக்கற்கன்று ஒடியும் குதித் தும் தலைகீழ்நின்றும் கம்பத்தேறியும் ஆடியும் பல கருமங்கள்செய்து மவருண்

மைதெரியாதெனமுடிக்க. செய்துமென்றதைச்செய்யினுமென்றது காலமயக்கம். ஐந்துவினையுமிறந்தகாலமாயிருக்க வொருவினையெதிர்காலமாதலைப்பற்றியென்க.

க-து.) ஞாலேதையத்துக்கு விசாரமே தக்கதென்பது. இதனினுந் தந்திரம் வேறில்லையென்பதருத்தாபத்தி. (சுசு)

அ - கை.

[விசாரமின்றியக்கண்ஞானமெய்தலுந் தன்னைத்தானறிதலுங்கூடாதென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

67. இன்னவாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத்தால்வேதஞ், சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமன்றிச் சுருதிநூல் படித்தாலு, மன்னு தானங்க டவங்கண்மந் திரங்களா சாரங்கள் யாகங்க, ளென்ன செய்யினுந் தன்னைத்தா னறிகின்ற திவைகளால் வராதே.

(இ-ள்.) இன்னவாறந்தப்பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத்தால் வேதஞ் சொன்னஞானமும் விசாரத்தால்வருமன்றி,—எ-து. இவ்வண்ணமேயந்தப் பிரமசொரூபத்தை யறிவிக்கத்தக்கவிலக்கணத்தினால் வேதஞ்சொல்லிய ஞானமும் விசாரத்தால்வந்தெய்துவதன்றி:—சுருதிநூல்படித்தாலும் அன்னதானங்கடவங்கள் மந்திரங்களாசாரங்கள் யாகங்களென்னசெய்யினும்,—எ-து அன்னதானங்களையும் தவங்களையும் மந்திரங்களையும் ஆசாரங்களையும் யாகங்களையும் இங்ஙனமாக வென்னகிரியைகள் செய்யினும்:—தன்னைத்தானறிகின்றதிவ்வகளால்வராதே,—எ-து. இக்கிரியைகளால் தன்னைத்தான்றியவருமா வாராதே,—எ-று.

விசாரத்தினலன்றிக் கருமத்தினால் ஞானத்தையடையக்கூடாது. கருமத்தினால் ஞானமெய்தலாமெனி னிங்ஙனமெய்தினுமெங்ஙனுங்கண்டிலமே, அனுபவமுண்டானலேற்கப்படும்.

(க-து.) கருமம்சித்தசுத்திமாத்திரந்தரவலியுள்ளது, ஞானத்தையுந் தரவலியுள்ளதாயின் சிரவணாதிக ளெற்றிற்கென்பது. இதனலொன்று மறறென்றுய பயனைத் தாதென்பதுபெற்றும். பெறவே விசாரமே ஞானத்துக்குத் தக்கதென்பதாயிற்று. ஆகவே முயற்சிதாரதம்மியமினையதெனக்கண்டாம். ()

அ - கை.

[கருமமேதக்கதெனவதற்கையந்த வுபமானபூர்வமாக வுபமேயம் மாணக்கன்கூறுவதை யிக்கவியிற் கூறுகின்றார்.]

68. துளங்கு தர்ப்பண மழுக்கறக் கைகொண்டு துலக்கினுற்போ மன்றி, விளங்கு புத்தியா லுலகிலார் துலக்கினர் விமலதே சிக மூர்த்தி, களங்க மாகுமஞ் ஞானமு மப்படி கருமத்தாற் கழுவாம, லுளங்கு றித்தஞா னத்தினு லெப்படி யொழியுமீ தருள்வீரே.

(இ-ள்.) தளங்குசர்ப்பணமழுக்கறக் கைக்கொண்டு தலக்கினற்போ மன்றி,—எ-து. பிரகாசிக்கின்றசெப்புக்கண்ணுடியைக் களிம்பறக்கையினல் தலக்கினற்போகுமேயல்லாமல்:—விளங்குபுத்தியாலுலகில்யார் தலக்கினர் விம் லதேசிகமூர்த்தி,—எ-து. நின்மலமான குருமூர்த்தியே! தலக்கமாயுள்ளபுத்தி யினல் தலக்கினவர்களெவர்கள், (அதுபோல:—களங்கமாகுமஞ்ஞானமுமப் படிகருமத்தாற்கழுவாமல்,எ-து. அசுத்தமாயுள்ளவஞ் ஞானத்தையுமவ்வண்ணம் புண்ணியகருமச்தினற்சுத்தஞ்செய்யாமல்:— உளங்குறித்த ஞானத்தினு லெப் படி யொழியுமீதருள்வீரே,—எ-து உள்ளத்தின் கண்ணினேயதெனக்குறித் துக்கொண்ட ஞானத்தினுலெங்ஙனமொழியு மீதென்னேகொலோ விதனேய றிந்தில னிதுவிளங்கத்தெரித்தருளும்,—எ-று.

கையால்தலக்கினலன்றிக் களிம்புநீங்கிச்செம்புக்கண்ணுடி விளக்கமா னது, (அ போல) கிரிகரணமுமொத்துச்செய்யும் புண்ணியகருமமேலீட்டா லன்றி யஞ்ஞானநீங்கிஞானம் விளங்காது. இங்ஙனமிருக்க, மனதினிச்சயித்துக் கொண்ட நிச்சயஞானத்தினு லஞ்ஞானமெங்ஙனநீங்கும். ஞானமெங்ஙனங்கை கூடுமென்றனென்க.

(க-து.) அஞ்ஞானவொழிவுக்குப் புண்ணியகருமமேதக்கதாகத் தோன்று கின்றதேயென்றனென்பது. செம்புக்கண்ணுடி, பளிங்குக்கண்ணுடி யென்றி ருபாலது. முன்னர்பெரும்பாலும் பளிங்குக்கண்ணுடிவழங்குதலினமையு மிப் போது செம்புக்கண்ணுடிவழங்குதல் சிறிதுமின்மையுமாம். ஆயினுமிந்நூலா சிரியர்காலத் நிவ்விருவகையாடியும், வழங்கியதாகக்காண்கின்றது இவன்செம் புக்கண்ணுடிபூர்வமாகச் சித்தாந்தப்படுத்தலும், அவர்பளிங்குக்கண்ணுடி பூர்வ மாகச் சித்தாந்தப்படுத்தலுமாயிருத்தலினென்க. ஆயினுமிவன் கருமமேமுக்கி யமென்பன். இதுபற்றியினிவருங்கவிகளாற்காணலாம். (சூ அ)

அ - கை.

[விசாரமேதக்கதெனக்குறிப்பிக்க வதற்கியைந்தவுபமானபூர்வமாக வாசிரியரதனைமறுப்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

69, தர்ப்ப ணத்தினிற் களிம்புவாஸ் தவமலஞ் சகசமா தலின் மைந்தா, கற்ப ளிங்கினிற் கருகிஞ் சகசமாக் கறுத்ததன் ரூரோ பந், தர்ப்ப ணத்தினி லழுக்கற வேண்டினுற் சாதனத் தொழில் வேண் டுங், கற்ப ளிங்கிலா ரோபமே கறுப்பெனக் கண்டிடமனம் போ தும்.

(இ-ள்.) தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ்தவமலஞ் சகசமாதலின்மைந்தா, எ-து. ஞானபுத்திரா! செம்புக்கண்ணுடியிலுள்ளகளிம்பான ததற்குரியவுண் மையழுக்காம், அன்றியுஞ்சுபாவமாம், ஆதலால்:— (இதுபோல) தூர்பளிக்கி னிற்கருநிறஞ்சகசமாக் கறுத்ததன்ரூரோபம்,—எ-து. படிகக்கல்லிற்றோற்று நின்றகருநிறமானது சுபாவமாக்கறுத்ததுமன்று, உண்மையுமன்று சோற்றன் மாத்திரப்பொருளாம்:—தர்ப்பணத்தினிலழுக்கறவேண்டினுற் சாதனத்தொழில்

வேண்டும், — எ து. செம்புக்கண்ணுடியிலுள்ளகளிம்பகலவேண்டில் கடமுதலி யகருவிகளாற்றுடைக்குஞ் சானத்தொழிலவசியம்வேண்டும்:— கற்பனிங்கிலா ரோபமேகறுப்பெனக் கண்டிடமனம்போதும், — எ - து. படிகக்கல்லிற்றோற் றுகின்றகருநிறமானது தோற்றன்மாத்திரப் பொருளெனவதிசற்குச்சாதனத் தொழில்வேண்டுவதின்று மன்மேபோதும், — எ - து.

செம்புக்கண்ணுடியழுக்கு வாஸ்தவம் சுபாவம். படிகக்கல்கருநிறவழுக் கூண்மையுமன்று சுபாவமுமன்று. அதனைப்போக்கச்சாதனத்தொழில் வேண் டும். இதனைப்போக்கவதிதலேபோதும் அசுத்தமுமஞ்ஞானமுமொன்றென்கை யவன்கொள்கை. வேறென்கையிவர்கொள்கை. அவனிவ்விரண்டுநசித்தற்குக் கருமமேபோதுமென்கை. இவரசுத்தநசித்தற்குக் கருமமும், அஞ்ஞானநசித் தற்கு விசாரமும்போதுமென்கை. புண்ணியகன்மங்களிலும் பாவகன்மங்களி லுமெய்ப்பெழுசுத்தநீக்கம். பொருளல்லவற்றைப் பொருளெனக்கோடலிலெ யப்பெழ லஞ்ஞானநீக்கம். களிம்பைப்போக்கப்போக்க, மீண்டுமீண்டெய்தல் செம்புக்கண்ணுடிக்கியல்பு நீலநிறத்தையிதுசோற்றன் மாத்திரமெனக் காணக் காண விடாதுமெய்போலத்தோற்றுதல் படிகக்கல்லுக்கியல்பு. அதனைப்போக் கற்குக்கருமம்பலதரமும், இதனைப்போக்கற்குவிசாரமொரேதரமும் வேண்டு மென்க. இதுபோல மன்தைச்சுத்தமாக்கச்சுத்தமாக்க மீண்டுமீண்டசுத்தமாக்க மீண்டுமீண்டசுத்தமாதல்மனதுக்கியல்பு. அறிவைவிளக்கி யகிற்சகசீவபரத்தை யிவைதோற்றன்மாத்திரமெனக் காணக்காணவிடாதுமெய்போலத்தோற்றுதல நிவுக்கியல்பு. அசுத்தம்போக்கர்குப் புண்ணியகருமம்பலகாலமும், பிராந்திபோ க்கற்குசிர்ந்தவிசார மொரேநிமிடமும்வேண்டுமென்க. அனுபவத்தாலன்றியி வைவிளங்காவாம். (சுக)

அ - கை.

[உபமேயபூர்வமாகவதனை யிக்கவியிலாசிரியர் கூறுகின்றார்.]

70. இங்கு மப்படி சச்சிதானந்தத்தி லிடர்சடம் பொய்மூன்றுக். தங்கு மாயைபின் கற்பித மன்றியே சகசவாஸ் தவமன் றே, பங்க மாகுமஞ் ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா தறவாக்குந், துங்க ஞானமே கருமவஞ் ஞானத்தை சுடுகின்ற தெருப்பாமே.

(இ-ள்) இங்குமப்படி சச்சிதானந்தத்தி லிடர்சடம்பொய்மூன்றும், எ து. உபமேயத்திலு முபமானத்திற்சொல்லியபடி சத்து, சித்து, அனந்த மென்னுமூன்றிலுள்ள பொய்யாகியவசத்தும், சடமாகியமூடமும், இன்பம் போற்காணுந் துன்பமுமாகியவிம்மூன்றும்:— தங்குமாயையின்கற்பிதமன்றி யே சகசவாஸ்தவமன்றே, — எ து. காற்றிற்சலனம்போற் பிரமத்திற்றங்கிய மாயையிஞலாய கற்பனைவடிவமேயல்லாமல் சுபாவமுமன்று, எசார்த்தமுமன் று:— பங்கமாகுமஞ்ஞானத்தைக் கருமங்கள்பகைசெயாதறவாக்கும, — எ-து. அசுத்தமானின்றுள்ளவஞ்ஞானத்தைப் புண்ணியகருமங்கள்கெடுக்காமலதனைவிர்த் யாக்கும் :— தங்குஞானமேகருமவஞ்ஞானத்தைச் சுடுகின்றநெருப்பாமே, — எ-து. எல்லாநிலையினுமேலாயபரஞானமே, கருமமேதனக்குவடிவாநின்றுள்ள வதியாமையைத்தனக்கத்தக்கவக்கினியாம், — எ-று.

சச்சிதானந்தத்தி லதுர்தசடதுக்கமெனவே, சத்தேயசத்தும், சித்தேசட மும், ஆனந்தமேதுக்கமுமென்றுபிற்று. சச்சிதாநந்தம் பிரமத்தின்சுயம் பெ னவும், சகசமெனவும், வாஸ்தவமெனவுந்தோன்ற, இடர்சடம்பொய் மூன் றும் தங்குமாயையின்கற்பிதமன்றியும சகசவாஸ்தவமன்றென்றார். சச்சிதா னந்தத்திலிடர் சடம்பொய்யெனல் ஈதிர்நிரனிறைப்பொருள் கோள் உதார ணம்; களிறுங்கந்தும்போல, களிகடற்கூம்புங்கலனுந்தோன்றும், தோன்றன் மறந்தோர்துறைகெழுநாட்டே. இதுபெயர்ச்சொறகளும் பெயர்ப்பயனிலைக ளுமாநின்றவெதிர்நிரனிறை. அறிவு முதற்காரணங்கருதாதுசத்தெனவறியச் சகஞ் சத்தாக்காணும. சுயம்புயாதெனவறியப்புகச் சகமசத்தாக்காணும். காரா ணங்கருதாமைமூடம், கருதுதல்தெளிவு. இம்மூடத்தாலன்றே சகஞ்சுகமெ னக்காண்டல். மூடங்காரணமாகவெழல்சுகமாகுமா, ஆகாதே, துக்கமே சுக மாகக்காண்டலெனவுணர்க, சுகமெனின், மூடமன்றிக்காட்டவேண்டும். இன் றேல், துக்கமாம். சகத்தைச்சத்தாவறிதலுஞ் சுகமாச்சுகித்தலு மறிவையன்றி யின்மையானும் ; பிராதிபாலிகசத்தையன்றிச்சகத்தும், அறிவையன்றிப்பிரா திபாலிகசத்தும், இன்றுதலாலறிவேசத்து, செகமசத்து. மூடமன்றிச் செகத் துண்மையும் அறிவையன்றிமூடமுமின்றுதலால், அறிவேசித்து, செகம் மூடம். செகந்தனதுபிரிதிபலனமெனக்காணுமையா லெழுஞ்சுகமாதலி னிச்சுக மறியாமையின்பாலது. அறிவேயறியாமையாதலின், அறிவே சுகம், செகம் துக்கம். எனப்படுவதிலுனும் அறியாமையன்றிச்சகமாதிமூன்றுமின்மையானு ம்; இம்மூன்றும்மாயாகாரியமெனப்படலாலறியாமையேமாயையெனப்படுமாத லினுனும்; அறிவேபிரமமெனவும், அறியாமையேமாயையெனவும், அறிவுக் குச்சச்சிதானந்தமெனவும், அறியாமைக்குதுசடதுக்கமெனவும், அறிவையன்றி யறியாமையின்மையின் சச்சிதானந்தமே யதுர்தசடதுக்கமெனவுங்கொள்ளக் கிடந்ததெனவறிக. அறிவானே யறியாதது புண்ணியகன்மம், ஆதலின் பங்கமா குமஞ்ஞானத்தைக் கருமங்கள் பகைசெயா தறவாக்குமெனவும்' சச்சிதானந் தவிலக்கணமினையவெனக்கண் டொருமையாக்கியதெளிவே தெளியாமையை கெடுக்குமாதலின், தங்களுஞானமேகருமவஞ்ஞானத்தைச் சுடுகின்றநெருப்பா மேயெனவுங் கூறியதை மறுப்பதற் கெக்காலத்துமென்னவலியுள. இன்றுதலா ஜிவ்வுவமேயம் பொருந்துமெனவறிக. விசாரஞானத்தாலெய்தவது விருத்தி ஞானமாதலி னிதனைநெருப்பென்றதெனகொள்க.

(உ-து. ஞானத்துக்கஞ்ஞானம்பேதமாதலின் விசாரஞானத்தாலன்றிக்கரு மத்தாலஞ்ஞானநியாசென்பது. இதுபெறுமெனமாட்டலால் மாட்டெறிந்சொ ழுகலென்னுமுத்தி. அஞ்ஞானத்தைக்கெடுத்தற்பாலது கருமமன்று விசாரஞா னமென்றலின், இன்னதல்லதுவென மொழிதலென்னுமுத்தி சச்சிதானந்த மறியார், சகசீவபரமனுதித்தியமென்பர் அறிந்தார்க்கயலேது ஒன்றுமற் றென்றுத்தோன்றலையேழாம் வேற்றுமையாக்கல், வேற்றுமைமயக்கம். இங்ஙு னமருவிவழங்கலால் மரூஉ (எ0)

அ - கை.

[அறிவதியாமை நினைப்புமறப்பெனக்காட்டத் தன்மறதியைக்
கெடுப்பதுதன்னினைவுலன்றி யயலாலன்றென
விக்கவியிற் கூறுகின்றார்.]

71. மனைக்குள் வைத்தபண் டங்களை மறந்தவன் வருடநூ றழுதா லு
நினைத்து ணர்ந்தபின் கிட்டுமப் படியிந்த நிருமல வான்மா வு
மனத்த மானதன் மறதியைக் கெடுக்குந்தன் னறிவினுற் காணு மற்
கனத்த கன்மங்க ணூறுகஞ் செய்பினுங் காணுமோ காணுதே.

(இ-ள்.) மனைக்குள்வைத்தபண்டங்களை மறந்தவன்வருடநூறழுதாலு நினைத்துணர்ந்தபின்கிட்டும்,—எ-து ஒருவனேர்வீட்டினுள்வைத்த பொருள் களைமறந்து விட்டான்; அங்ஙனமறந்தவன் காணேமேயென்று வருடநூறழு தாலுங்காணுமா. இவனுக்கேநினைப்புவந் தின்னவிடத்தில்வைத்தோமல்லவா வென்றுணர்ந்தபின்னரன்றேவகைகிட்டும், அல்லாமற்கிட்டுமா கிட்டாவே:— அப்படியிந்த நிருமலவான்மாவு மறைத்தமானதன்மறதியைக்கெடுக்குந்தன்ன றிவினுற்காணுமல், எ-து. அங்ஙனமிந்தநின்மலரூபமானவான்மபுருடனும் அநாத் தரூபமான தன்மறதியைக்கெடுப்பது தன்னினேவேயாதலால். அதனையுமறியா தஅதனுல்தன்னேயுங்காணுமல்:—கனத்தகன்மங்களூறுகஞ்செய்யினுங காணு மோகாணுதே,—எ-து. மேலானயாகாதிகிருத்தியங்களே நூறுகஞ்செய்தாலுந் தன்னுணமைவடிவம்விளங்குமா விளங்காதே,—எ-று.

செகசீவபரஞ்சுயம்பெனல், விகாரத்தை, அல்லவெனில், சோதனையி லொவ்வொன்றும் விகாரமெனமுடியாது காரணாரியரகிதமாக் காட்டலாம்: கூடாதெனின், இவை மூன்றுமர்த்சரூபமென்னலாமா, அநர்த்தரூபமென்னலா மா? அர்த்தரூபமெனின், ஒவ்வொன்றிற்குஞ் சுயம்பிஃதெனக்காட்டவேண் டும். கூடாதேல், அநர்த்சரூபமென்பதற்குச் சற்றுமையமின்று. ஆதலின், சக மாதிமூன்று மநர்த்சரூபமெனத்தகும். இவை தன்னைமறந்தவிடத்தில் தோற்று பவாதலினுனும், மறதிநீக்கத்தின்றாதலினுனும், மறதியேயிவைமூன்றுமென் றுல் வழுவென்னை, இன்றாதலா லநர்த்தமானமறதியெனவும், நினைப்புமறப்பு ரகிதமானவான்மா தன்னைமறந்ததுபோலவுந் தன்னை நினைத்துக்கொண்டது போலவுந்தோற்றலின், தன்மறதியெனவும், தன்னறிவெனவும், அவஸ்தாவ யப்படாம லவற்றைச் சாட்சியாநின்றுணர்த்தல்; ஆன்மா: அவஸ்தைகடோறு மந்தந்தவுபாதியப்பட் டின்பதுன்பநுகர்தலாகக்காண்டல், சீவன். ஆதலின் மலவான்மாவெனவும், தன்னைத்தானெட்டுங்காலத்துத் தான்சேய்மைத்தாயினு மயலையுணர்த்தத் தானணித்தாநிற்றலி னகத்தச்சுட்டாத வான்மாவெனவும், தன்னைமறந்தது தன்னுலன்றியபலாலன்று இங்ஙனமிருக்கத் தன்னையறிவதுந் தன்னுலன்றியபலாலாகுமா? ஆகுமெனின், தன்னைமறந்தமையலாலென்பம். திரோபவசத்தியால்மறப்பும், அனுக்கிரகசத்தியால் விடுதியுமெனின், இவ்விரு வகைசத்தியுமார்பாலது? மபேஸ்வரன், சதாசிவன்பாலசெனின், ஆன்மாவுக் கென்னசுதந்தரம். ஈனனெனின், இங்ஙனமாட்டுவிப்பானேன்? வினைக்கீடா யெனின், நிரிபதார்த்தமு மாதியாயிருக்க வுயிர்க்குவினைவருவானேன்? சுபா மெனின், இடையிலிவர்கள்முயற்சியானீங்குமா, கூடுமா? இதுவுஞ்சுபாவமெ னின், நாஸ்திநினு மீஃதென்சிதட்பு, இன்றாதலாலிது மறுக்கற்பாற்று. தன் னைத்தான் விசாரித்துழியன்றித் தன்னைத்தான் காணக்கூடாதென்பார், ஆன் மாவுந் தன்மறதியைக்கெடுத்துத் தன்னறிவினுற்காணுமல் கனத்தகன்மங்களூ

றுகஞ்செய்யினுங் காணுமோ காணுதேயெனவுங்கூறினர். ஆன்மாகன்மம்புரி தற்பாலது பலனும்புரிதற்பாலதோவெனின், இம்மையிலொருவன் தீங்கேபுரி யில்துன்பத்தையும், அவனேயதைவிடிலின்பத்தையு மனுபவிப்பது பிரத்தி யட்சமன்றே, இவ்வினைகட்குப்பயன்தர மற்றெருவன்வேண்டுமோ அவ்வவ் வினையே யவ்வவற்றின் பலஞகின்றதியல்பாயிருக்க, இங்ஙனங்கேட்பது விஞ வன்று, வினவழு. இம்மையிலேனுமறுமையிலேனு மவனவன்வினையேயதற் குரியபயனைத்தந்தேவிடும். இதடற்றித் ''தான்றுமுன்செய்தவினை தாமேயனு விப்பரென்றுர் சான்றேர்'' தீவினைவிடிலதன்பயனும், நல்வினைவிடி லதன்பய னும், இவ்விரண்டுமொருங்கேவிடி லதன்பயனுந்தானேயகலும், இதற்கொரு வனெற்றிற்கு. இங்கேயொருவன் வேண்டியதாகக் கூறியது, அவனேவேண்டிப் பூசித்தற்கென்க. எனெனில், பயபத்தியாவேண்டுவது பற்றியாதலினுலும், இன் பமுந்துன்பமுமவன்தருவதாக ஐதீகமிருத்தலினுனும், அவனன்றியோரணுவு மசையாதெனும் பழைய வாப்தமொழியிருப்பதினுனும், அவன்தாளார்தடுப்ப ரென்றிருத்தலினுனுமென்க. அங்ஙனமெவர்வேண்டினு மவரவர்வினைக்கள வாகவன்றித் தன்னிட்டப்படிதரான், தரின், பாரபட்சன். இதுநிற்க. தன்னைத் தவிரவெங்கேயன்னிய மின்றே வதுபரஞானம் ஈசனேனுமுளதேலஃதபர ஞானம். பரஞானத்திலேற்போனிடுவோனெங்கே. தன்னைமறந்ததுதன்னுலே, தன்னையறிவதுதன்னுலே, யாதலின் தன்மறதியைத்தவிர்கவென்பதாயிற்று.

(கது.) ப்ரக்ஞைக்கயலாகத்தோற்றுஞ் சகமாதிமூன்றுமனர்த்தரூபமாக லாலவைதன்மறதியெனத்துணிகவென்பது. தன்மறதியே தனக்கயலெனல்திண் ணம். தனக்கயல்தோன்றுமளவுந்தான்விளங்காது தன்னையுன்னிடில் தான் விளங்குமென்க. (ளகு)

அ - கை க.

[சுகந்தருவதுஞானமெனவும், கன்மமெனவும் வேதங்கூறுகின்ற
தே யிதில்யாததுணிவு, கூறுவதெற்றிற்கென மாணுக்
கன்விளுவலி யிக்கவியிற்கூறுகின்றுர்.]

72. நன்மை யாங்குரு வேசுகந் தருவது ஞானமே யெனும்வேதந்
தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்
சென்ம மாகுவ சாதியா சாரமே செய்கவஞ் சுகமென்று
கன்மகாண்டத்தில் விதிப்பதென்விதித்துள காரணமுரையீரே.

(இ-ள்.) நன்மையாங்குருவே சுகந்தருவது ஞானமேயெனும்வெதம்,— எ-து. நன்மையேவடிவாயுள்ள சற்குருவே ! ஞானகாண்டத்தில், சுகத்தைத் தருவதுஞானமேயென்று விதித்தவேதமானது:—தன்மபாவமிச்சிரங்களாற்றே வர்கடருவிலங்குகண் மாந்தர்சென்மமாகுவ,—எ-து. புண்ணியகன்மம், பாவ கன்மம், மிசிரகன்மமெனமூன்றும். இம்மூன்றுகன்மங்களில் ; புண்ணியகன் மத்தால்மேலாயதேவசென்மமும், பாவகன்மத்தால் கீழாயவிருட்சம் விலங்கு பறவைமுதலியசென்மமும், மிசிரகன்மத்தால் நடுவாயமனிதசென்மமுமாம்:— (இவற்றிற்கேதுவாய) சாதியாசாரமேசெய்தவஞ்சுகமென்று கன்மகாண்டத்

தில் விதிப்பதென் விதித்துளகாரணமுரையீரே,—எ-து. வருணாசிரமத்துக் குரிய விதிவிலக்ககலாதொழுகுமொழுக்கமே செய்கின்றதவமாம், இங்ஙனமாய தவமே சுகத்தைத்தருமென்று கன்மகாண்டத்தில் விதித்ததெற்றிற்கு, அங்ஙனம்விதித்ததற்குக் காரணம்பாது தெரிகின்றிலனிதனைத் தேவீர் தெரித்தருள வேண்டும்,—எ-து.

(க-து.) வேதமானது ஞானகாண்டத்தில் ஞானமேசுகந்தரற்பாலதெனக் கூறித், கன்மகாண்டத்தில் வருணாசிரமவொழுக்கமே சுகந்தருமெனக்கூறுவா னேனென மாணாக்கன்விஞவினனென்பத ஞானமேயென்றதிலுல் செய்தவ மென்றும் ஆசாரத்தையன்றித் தவம்வேறன்றெனற்கு, ஆசாரமேசெய்தவ மென்றார். சாதிகூறியதுபற்றி யாசிரமம்வருவித்தாம். புண்ணியகன்மமுதலிய மூன்றிலுலாய பிறவிபேதங்களைப்பற்றி விரிவாகமுன்னரே கூறியிருக்கின்றன மதனுற்காணலாம். (எஉ)

புண்ணியம், பாவம், மிசிரம் என்னும்மூவகைக்கருமங்களும் உத்கிருஷ்ட மத்திம, சாமான்யபேதத்தால ஒவ்வொன்றும் மும்மூன்றுவிதமாயிருத்தும்; புண்ணிய உத்கிருஷ்டத்தால் இரண்யகர்ப்பாதிசரீரப்பிராப்தியும், புண்ணிய மத்திமத்தால் தேவேந்திராதி சரீரப்பிராப்தியும் புண்ணிய சாமான்யத்தால் யட்ச, ராட்சச, கிந்நர, கிம்புருஷ, பைசாசாதி சரீரப்பிராப்தியும், பாவ உத் கிருஷ்டத்தால்பிராணிகளுக்குத் துக்கத்தைக் கொடாநிற்கும் தேள், பாம்பு, கொசுகு, மூடி புலி, கரடிமுதலிய சரீரப்பிராப்தியும், பாவமத்திமத்தால் புளி, மா, பலா, தென்னை, எருமை பருந்துமுதலிய சரீரப்பிராப்தியும், பாபசா மான்யத்தால் பசு, யானை, குதிரை, அரசு, துளசி முதலிய சரீரப்பிராப்தியும், மிசிர உத்கிருஷ்டத்தால் நிஷ்காம புண்ணியபலத்தாலுளதாகுஞ் சித்தசுத்தி யும், அதனுல் சாதனசதுஷ்டயமும், அவற்றுல் சற்குருலாபமும், அதனுல் சிர வணாதிகளும், சிரவணாதிகளால் அபரோட்சஞானமும்பெற்று அவ்வபரோட்ச ஞானத்தால் சீவன்முத்திச்சுகத்தை யடையத்தக்க சரீரப்பிராப்தியும், மிசிரமத் திமத்தால் ஆசிரமத்திற் குசிதமாகிய காமியகர்ம யோக்கியமான சரீரப்பிராப்தி யும், மிசிரசாமான்யத்தால் சண்டாள பாண்டி, குஷ்ட, பெருவியாதிகளோடு டையசரீரப்பிராப்தியும் உண்டாவதால், "தன்மபாவமிச்சிராங்காற்றேவர்கு டருலங்துகண்மாந்தர், சென்மமாதவ" என்றது.

"சாதியா சாரமே செயீதவம்" எ-கு உ-ம் பகவற்கீதை

"கறைசெயும் புலன்களைக் கரண நான்குடன்
றுறைதுறை யடக்கலுத் தவமுந் தூய்மையும்
பொறைபொடி கலவியும் பொருந்து ஞானமு
மறைபவர் தொழிலென வகுக்கப் பட்டதே." —எ-ம்,

"தலைமையுங் கொடையோடு தறுக ணண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங்
கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளிஞ ரிசர் செய்கையே." —எ-ம்.

"உழுதொழில் பசுக்களே யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்தொழில வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள்வே ளாளர்க் கென்பவே."—எம்,

"தீரா வகைதஞ் செயலே செயலே
நாரா யணனு முச்சு யகனுக்
காரா தனைபர மத்ன லவனே
வாரா வழியாம் வரமே தருமால்."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அ ை க.

[கருமஞ்சுகந்தருமென்றதோரவசரம்பற்றியன்றி ஞானம்
போல்வதன்றெனக்குறிப்பிக்க விக்கவியிற்
லறம்புரியுமாறுகூறுகின்றது.]

73. தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்டமெ
திர்காட்டிச், கனமருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணை
யாந்தாய்போல, மனையறங்களைசெய் மகங்கள்செய் நன்றென்று மலர்
ந்தவா சகஞ்சொல்லு, நினைவு வேறுகாண் சுவர்க்கமா மிகளந்த நிர்
ணயந் தெரியாரே.

(இ-ள்.) தினமு மண்ணுகர்பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்டமெதிர் காட்டி,—எ-து. தினந்தோறுமண்ணைக்கரந்துண்கின்ற குழந்தைக்குநோய்கிகவ தனைக்கண்டிரக்கமுற்றுமதுரமானவஸ்துவையோர்கரத்தேந்தியந்தக்குழந்தைக் கெதிரேகாட்டி:—கனமருந்துகளொளித்துவைத்தழைக்கின்ற கருணையாந்தாய் போல,—எ-து. மேலானவிஷதங்களை மற்றோர்கரத்தேந்தித் தன்பின்னேடொ ளித்துவைத்துக்கொண் டக்குழந்தையையழைக்கின்ற விரக்கமுள்ளதாயைப் போல:—மனையறங்கள்செய்மகங்கள்செய் நன்றென்று மலர்ந்தவாசகஞ்சொல் லும்,—எ-து. இல்லறங்களைச்செய், யாகாதி கிருத்தியங்களைச்செய், ஏனெ னில், இனியடையும்பிறவிக்கிதுன்றென்று வேதமான நினியமொழிகளாற் றெரி விக்கும்:—நினைவுவேறுகாண் சுவர்க்கமாமிகளந்த நிர்ணயந்தெரியாரே,—எ-து. தெரிவிக்கினும், கருத்திற்றன்றுவேறுசான், அக்கருத்தைச் சுவர்க்காதிபோகத் துக்கே யங்காந்தநிரியுங்காமிகள் சற்றுமுணரார்,—எ று.

மண்ணுதல்குழந்தைப்பருவம், ஏனையபருவமன்று, விடயதுகர்தலஞ் ஞானப்பருவம், ஏனையபருவமன்று மண்ணின்னலாலாயநோய் காமாலைமுதலி யன, விடயதுகர்தலாலாயநோய் பிறவிமுதலியன. தீம்பண்டமெதிர்காட்டல் போல் பதவிப்பேறுகளைமெதிர்காட்டல். காமாலைதீர்க்கத்தகு மருந்துபோல்வது பிறவிதீர்க்கத்தகுமருந்து. சாயானவள் தீம்பண்டங்காட்டல்சொல் மருந்தொ ளித்துவைத்தல், கருத்து. அதுபோல. வேதமாதாவும், சுவர்க்காதிபயன்காட் டல் சொல், அனேத்தையு மொருங்கேவிடவேண்டுமெனல் கருத்து.

(க-து.) எல்லாவெண்ணங்களையு மொருங்கேமறந்துவிடலே, பிறவிநோய்க்குத் தக்கமருந்து. அவளொளித்துவைத்தகந்தமருந்து, இவளொளித்து வைத்தகந்தமருந்து, அந்தமருந்தைக்காட்டிலுல் குழந்தைவராது, இந்தமருந்தைக்காட்டிலுல் மக்களுயிர்வராது.

ஆதலாலொளித்துவைத்தெனவும், இவளழைத்தல்போல் வேதமாதாவழைத்தலே யினிவருங்கவிகளாலுங்காணலாம். அவளுக்குக்கருணைதன்குழந்தைமேல், இவளுக்குக்கருணைமக்களுயிர்மேல். குழந்தைக்குத்தாயவள், மக்களுயிர்க்குத்தாயிவள். அவள்சொல்லையுங்கருத்தையுங் குழந்தையறியாவாறுபோல, இவள் சொல்லையுங் கருத்தையு மக்களுயிரறியாது ஆதலால், நினைவு வேறுகாண் சுவர்க்கமோக்ஷ மந்தநிர்ணயந்தெரியாரேயெனவுங் கூறினர்.

(க-து.) வேதம்; கருமமே சுகந்தருவதெனக் கூறினசாகக்கொள்ளின் சொல்லுங்கருத்துமொத்தன்றே கூறவேண்டும், அங்ஙனங்காணுமையென்பது. இது பூர்வபட்சமாகத்தகுவதாதலின் சித்தாந்தமன்று. அந்த நிர்ணயந்தெரியாரேயென்பதினுல் கருமமே சுகமெனப்புரிவரென்பதாயிற்று. தேகபோகத்துக்கியைந்தகருமமேமுக்கியமன்றி விசாரஞானமங்ஙனமன்றென மறுத்தல்தானேகெடவுபமானங்கூறியதென்க.

"தினழ மண்ணுதர் பிஞ்ஞோமீக் கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றுயிபோல" என்றுகூறிய திருஷ்டாந்தத்தால் தாஷ்டாந்தத்தின்கண் ஜநநத்தோறும் சாரமற்ற விஷயங்களை யுண்டு வருவதால் அஞ்ஞானியாகிய பாலனடைந்துள்ள, ஜநமரணரூபமான நோய்குமனமிரங்கி அதனைத் தீர்க்கவல்ல பரமாத்வைதஞானத்தை யொளித்துவைத்து அவனுக்கிதமாகச் சோற்றுகின்ற சுவர்க்கவின்பங்களைக்காட்டி என்னும்பொருள் கொள்ளக்கிடந்தமைகாண்க. 'தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமருந்துக ளொளித்துவைத்து" எ-து. தடசிக்வாநீயாயமி."

அ - கை

[போகநுகர்தற்கன்றே மனையறங்கள்செய் மகங்கள்செய்யென்றது, இம்மையிற்கட்கியல்பாயிற்றே யிதனைவிதிப்பானேனென்ற சங்கைக்குத்தரமிக்கவியிற் வேதம் மூடமன்றெனக் கூறுகின்றார்.]

74. போக மாருயிர் கண்டதை யுண்பதும் புணர்வது மியல்பேகாணகமக்களுஞ் சுபாவத்தை விதிக்குமோவத்தனை தெரியாதோ
காக மேகறுத் திடுகெருப் பேசுடி கசந்திடு வேம்பேசீ
வேகவாயுவேயசையெனவொருவரு மவிதித்திடல்வேண்டாவே.

(இ-ள்.) போகமாயிருயிர்கண்டதையுண்பதும் புணர்வதுமியல்பேகாண் ஆகமங்களுஞ் சுபாவத்தைவிதிக்குமோ,—எ-து. உயிர்களதமக்குப்போகமாகக் கண்டதையெல்லாமுண்பதும், போகிப்பதுமியல்பாயிருக்க, இச்சுபாவத்தை

வேதாகமங்களும்விலக்கா திதனைவிதிக்குமா, இஃதென்னை கொலோவெனின்:– அத்தனேதெரியாதோ காகமேகறுத்திடுநெருப்பேசுடுகசந்திடு வேம்பேநீவேகவர் யுவேயசையென் வொருவரும் விதித்திடல் வேண்டாவே,—எ-து. வேதாகமங் ளுக் கவ்வளவுபூகித்துணர்த்தல்தெரியாதா, அத்தனேமூடமா, காகமேநீகறுத்தி டுவெனவும், நெருப்பே நீ சுடுகவெனவும், வேம்பேநீகசந்திடுகவெனவும், வேக மாயுள்ளகாற்றே நீயசைகவெனவு மொருவர்கட்டளையிடல் வேண்டுமோவொ ருவரும் வேண்டுவதின்றே யதுசுபாவமாயிற்றே,—எ-று.

– உயிர்களிட்டத்தின்படி கண்டுசெல்லுந்தோறு மப்போதப்போதவ்வவற் றுனேரிடு மிடுகண்களைக்காட்டல்வேண்டும், அங்ஙனங்காட்டாவிடில் தோட ந்தோன்றாது, தோன்றுவிடில், இடுக்கணியல்பென வப்பொருங்களிலே யேயு ழன்றழியும். அங்ஙனமுழன்றழியக்காணல்நன்று, ஆதலின் பையவவ்வுயிரி னிட்டப்படிசென்று, ஆங்காங்குள்ளகுற்றங்களைக்காட்டி மீட்கவேண்டும். இங்ஙனமாயதந்திரத்தைவிடடு, நீதிரும்பென்றல் திரும்புமா, அதுபலவத்கா ரமன்றே, அதுமுற்றுநித்குமா, நில்லாதே, இதுவிவேகமா, அல்லவே. இது பற்றியன்றேவெதமும், மனேயறங்கள்செய்மகங்கள்செய்கன்றென்று மலர்ந்த வாசகஞ்சொல்லும். இதனேயறியாதிங்ஙனம்விஞவல்முறையன்று. முறை வழுவென்பார், அத்தனேதெரியாதோவென்றார். காகமாதிகள்சுபாவத்தை யொ ருவரும்விதித்திடல்வேண்டாவேயென்றது;சுபாவத்தைவேதம்விதிகுமாவென க்காட்ட. அத்தனேதெரியாதோவென்றது, இதனைமறுக்க. விதித்தது; உயிர் கள்வழிச்சென்றவைகளைத் தம்வழிமீட்க. இவ்வுளவறியாதார் விடயமோகி கள். இவர்கள்தான்வேதத்தின்கருத்தறியாது வேதத்தின் சொல்வழிச்சென்ற நம்புரிவோர். வேதமானது சுபாத்தைவிலக்குவான் வேண்டியே விதித்த தென்க.

(ந-து.) வேதத்தின்கருத்தறியாதமறுத்தல் பிழையென்பது. (எச)

அ-கை.

[பட்டிமாடுபோற்கட்டுக்கடங்காரைக் கட்டுக்கடங்கக் கன்மம்
புரியவிதித்த தேயன்றி வேறுக்கன்றெனவிக்
கவியிற்கூறுகின்றார்.]

75 கள்ளுமூனுநீ விரும்பினுன் மகங்கள்செய் காமத்தின் மன தானுற், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன்குறை யெலாந் தொடானென் றே, தள்ளும் வேதத்தின் சம்மதஞ் சக லமுந் தவிர்வதே கருத்தா கும், விள்ளு மிவ்விதி பென்னெனிற் பூருவ நியமமாம் விதியன் றே.

(இ-ள்.) கள்ளுமூனு நீவிரும்பினுல்மகங்கள்செய் காமத்தின்மனதானுற் கொள்ளும்பெண்டொடுகலவிசெய்யெனில்' எ-து. கள்ளருந்தவும், மாதிசந்தி ன்னவும் நீயாசைகொள்ளில், யாகாதிகிருத்தியங்களைச்செய்திடுக, புணர்ந்த னுபவித்தலாகியகாமத்தில் மனதைழுமானுல் நீமனம்புரிந்துகொண்டமனை வி

யோடு கூடிப்புணர்த்திடுகவென்றுசொன்னல்:— இவன்குறையெலாந்தொடர்னென்றே தள்ளும்வேத்தின்சம்மதஞ் சகலமுந்தவிர்வதேகருத்தாகும், எ-து. இவன்மற்றவைகளேயெல்லாந்தொடவேமாட்டானென் றெண்ணங் கொண்டதன்றே, இதுபற்றித்தொடானென் றேயவற்றைத்தள்ளிவிடும். ஆயினிதுதானேவேதத்தின்சம்மதமெனில், உயிர்கள்சமஸ்தபற்றுக்களேயு மொருங்குவிட்டுவிடற்கேதனதெண்ணமாம்:—விள்ளுகீவ்விதியென்னெனில் பூருவவிடமமாம் விதியன்றே,— எ-து. இங்ஙனஞ்செய்யெனக்கூறிய விவ்விதியாதுக்கெனக்கேட்பையாயின், பூர்வபட்சமாகத் தருந்தறேயன்றி நிச்சயமானவிதியன்று,—எ-று.

நிச்சயமான்விதி, சித்தாந்தம். எனவே, பூர்வபட்சம், சித்தாந்தபட்சமென விரண்டாம் பூர்வபட்சம், கூறுதற்பாலது. சித்தாந்தபட்சம், நிலைத்தற்பாலது. இவ்விதி நிலைத்தற்பாலதன்றென்பார், பூருவமென்றார். விரும்பினுல்மகங்கள் செய், காமத்தின்மனதானுல்கலவிசெய்யெனவே. விரும்பாமற் போனுல்செய்யவேண்டாம், மனதில்லாமற்போனுல்செய்யவேண்டாமென்றுயிற்று. ஆகவே இதுகன்மிகளுக்குவிதித்ததென்பதுபெற்றும். பெறவே, பூர்வபட்சமெனக்கண்டாம்,

(க-து.) விதிக்கடங்காதார்க்கு விதித்ததந்திரமிஃதென்பது. இங்ஙனமாயதந்திரங்களேக் கன்மகாண்டத்திலறிக, குறையெலாந் தொடுதலாவது; கடைகடோறுஞ்சென்று போதைமிகுதியாலவமானப்படலும், நல்லோராலிகழப்படலும், பிறர்மனேநயத்தலும், அவமானமெய்தலும், நடுக்கமகலாமையுமாம். சகலமுந்தவிர்வதேகருத்தாவதெற்றிற்கு. ஆன்மாக்களெப்பற்றுமகனறிருக்கிற்பிறவியகன்றிருக்குமென்பதுபற்றியென்க. ஆன்மாவதிவாதலிலதிவாமாத்திரநிற்க ஞானகாண்டத்திற்பிரதிவாதிக்கின்றதே. இதனுற், கன்மகாண்டத்தில் பற்றுக்களகற்றற்குத்தந்திரமும்,ஞான்காண்டத்திலறிவாவிளங்கற்குத் தத்திரமுங்கூறுமெனக்கண்டாம். இதுகாருணியத்தை விளக்குகின்றது. (எஇ)

அ - கை க.

[மெல்லமெல்லப்பற்றுக்களற்றற்குத் தந்திரங்களேவேதங் கூறுதலேயறிந்து கருமம்புரிதலேயொழிந்திடுகவென விக்கவியிற் கூறுகின்றார்.]

78. மதுவிறைச்சிகளுண்ணென்ற சுருதியின் மணத்துபா ரென்ல்பா ராய், மிதுன விச்சையும் புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபா ரா' பிதையும் விட்டொழி யதிகபிட்டிகவன்னிக் கிகழ்ச்சியற்றதும்பா ரா, யதைய றிந்துகன் மங்களா சைகளொழிந் தானந்தமடைவா யே.

(இ-ள்.) மதுவிறைச்சிகளுண்ணென்றசுருதியின் மணத்துபாரென்ல்பாராய்,—எ-து. மதுமாமிசங்களேப்புசியென்றவேதமானது பின்னர்மோந்து பார்புசியாதேயென்பதைப்பார் :— மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பென்றவிதிபாராய்,—எ-து, புணர்ச்சியாசையும் புத்திரோற்பத்திவேண்டுமாதலாலதுபற்றிவிருப்பங்கொள்ளென்று கூறும்விதியினேப்பாராய்:— இதையும்

வீட்டொழியதிரயிட்டிகவன்னிக் கிகழ்ச்சியற்றதும்பாராய்,—எ-து, மதுவிதைச் சியோடு புணர்ச்சியையும் ஒருங்கேவிட்டொழிந்தசந்நியாசிச்கும், நயிஷ்டிக பிரமசாரிக்கும் ரியாதோர்பழிப்புமற்றதென்பதும்பாராய் :— அதையறிந்துகன் மங்களாசைக ளொழிந்தானந்தமமைவாயே,—எ-து. இங்ஙனங்கூறுமவ்வேதத் தின்ககருத்தையறிந்து புண்ணியகன்மங்களில்வைத்த, வாசைகளினின்றுநீங் கிப் பிரமானந்தத்தை ஞானத்தினலடைதி,—எ-று.

முதலி லுண்க புணர்க வென்றவேதம் கடையில் முகர்க, புத்திரோற்பத் தியால் விரும்புகவென்றது; பற்றறுத்தற்கென்க முதலிற்கூறியதுயிர் வயப் படற்கும், கடையில்கூறிய துயிர்கேவலமாதற்கு மெனவறிக. புத்திரோற் பத் தியால்மிதனவிச்சையும் விரும்புகவென்றது; புத்திரன்குடும் பங்காக்கும்யோ க்கியம்வரில் புணர்ச்சிவிருப்பம்விட்டுத் தவத்துக்குவனத்துக் சேக வேண்டுமெ ன்றபொருள்படநின்றது, இகழ்ச்சியற்றதென்பதுமென்ன இகழ்ச்சியற்றதுமெ னக்கூறலின், என்பதனல் சொல்லெச்சம். கன்மங்களாசைக ளொழிந் தானந் தமடைவாயேயென்பதனல், கன்மஞ்சுகந்தருமெனல் பூர்வபட்சமெனவும், ஞா னஞ் சுதந்தருமெனல் சித்தாந்தமெனவுங்கொள்க.

(க-து,) இவ்விரண்டில் ஞானமேசுகமெனத்துணிந்தாமென்பது. இது வொருதலைதுணிதலென்னுமதம் இதுகாறுங்கருமமேசுகமெனக்கொண டிங் கேமறுத்தலி னிதுபிறர்தம்மதமேற்கொண்டு கூறுதலென்னுமதம். கருமமேசு கமென்பாரிக்கருத்தறியாதார். அறியினக்கணமேவிடுவார். (எசு)

இனி, இதற்றவிர்தேஷவரை; கோரிட்டஸ்திரீகளைப்புணரில் இம் மையிற்பாவமும், பழியும் மறுமைக்கண் ணரகதுக்கமு முண்டாகுமாதலால், ஒருத்தியை மணஞ்செய்து அவளைப் புணர்தியென்றவேதம் பின்னே விதிபாத தினத்திற்கூடில் தர்ப்புத்திரனுண்டாய் அவனல் இம்மையிற் பாவமும், பழி யும் மறுமையில் நரகதுக்கமும் வருமாதலால், சற்புத்திரனுண்டாய் உனக்கும், உன் குலத்துக்கும் இம்மையிற்புகழும், அறமும் மறுமையிற் சுவர்க்கமுமுண் டாதற்பொருட்டு விதித்ததினத்தில் அவளைப் புணர்தியென்று சொல்லும் விதி யையும் நீ பார்ப்பாய்.)—இதையும் விட்டு ஒழி (என்றவிதிபாராய்) = (யாகஞ் செய்தமது, மாபிசங்களை மணந்து பாரென்றும், விதித்ததினத்தில் உன்மனை வியைப் புணர்தியென்றும் விதித்தவேதம் பின்னே உன்னல் யாகத்திற் கொல் லப்பட்ட ஆடானது சுவர்க்கத்தின் கண்ணே இருப்புக்கொம்போடுகூடிச் சினந் து உனதுவரவை எதிர்பார்த்துக்கொணடிருந்து நீ சுவர்க்கத்துக்குப்போகும் போது உன்னை இருப்புக்கொம்பினற் பாய்ந்துகுத்தி, வயிற்றைப்போழ்ந்து துன்பப்படுத்துமாதலால், யாகஞ்செய்வதையும், மனைவி புத்திராதியரிடத் துள்ள ஆசைகள் அநேகவிதஜநமரண துக்கத்தைக்கொடுப்பதால்,) மனைவி புத் திராதியரையும் விட்டொழிவாய் என்று கூறுவதையும் பார்ப்பாய்;—யதி நயிட்டிக வந்நிக்கு இகழ்ச்சி அற்றதம் பாராய்=(அவைகளைவிட்ட) சந்நியாசிக் கும, நயிட்டிகப்பிரமசாரிக்கும் நிந்தை யற்றிருப்பதையும் நீ பார்ப்பாய்:—அதை அறிந்து = அங்ஙனங்கூறியவேதத்தின் சித்தாந்தத்தையும், (சாதனங்களோடு கூட யக்ஞாதி காமங்களைத்துறந்த சந்நியாசியையும, நயிட்டிகப் பிரமசாரியை

யும் வேதமும், உலகமும் இகழாமற் புகழாநிற்பதையும்) அறிந்து—கன்மங்கள் ஆசைகள் ஒழிந்து=(யக்ஞாதிசகல) கர்மங்களையும், (ஸ்திரீ, புத்திரர், தனமுத லியவற்றிலுள்ள) ஆசைகளையும் விட்டு—ஆநந்தம் அடைவாய்= (சிரவணத்திப் பிரயத்தனத்தாலடையாநிற்கும் சமூசயரகிதமான பிரமான்ம வையிக்கியஞா னத்தால் சகல வநர்த்தத்தினுநின்றுவிடுபட்டு) நிரதிசய ஆநந்தமடையக்கட வாய்.—எ-று.

இல்வாழ்வான் மனைவியோடு கூடுதற்கு விதித்ததினங்களாவன:— மாதர்கட்கு இருதுகாலம் வழக்கமாகப் பதினாறுநாட்களாம்; அவற்றுள், மாத விடாயானதுமுதல் நான்குதினம் பெரியோர்களால் நிந்திக்கப்படுகின்றது; ஆத லால் அந்நான்குதினமும், ஏதாசி, திரயோதசிகளும் நீக்கி ஏனைப்பத்துதினத் திற்கூடுவதுமுறைமை. மாதவிடாயான நாடொடங்கி ஆறு, எட்டு, பன்னிரண் டு, பதினான்கு, பதினாறுந்தினங்களி னிரவிற்சேர்ந்தால் பிள்ளைகளும், ஐந் தாமுதல் ஒற்றைப்பட்ட நாட்களிற்சேர்ந்தால் பெண்களும் பிறக்கும்; ஆத லால், புத்திர விருப்புள்ளவன் இரட்டைத்தினத்திற் சேரவேண்டியது. எவன் நீக்கவேண்டிய முதல்நான்கு தினத்தையும், ஏகாதசி, திரயோதசி, அமாவா சை, பௌர்ணமியையும் நீக்கி மற்றைத்தினத்தினத்தினிரவிற் றன்மனைவி யோடு சேருகிறானே அவன் பிரகஸ்தனுகவிருப்பினும் பிரமசாரியென்றே சொ ல்லப்படுகிறனென்று தர்மசாஸ்திரத்திற்சொல்லி யிருப்பதால் அவையே மனை வியோடு புணர்தற்கு விதித்ததினமாம் என்க. "இதையும் விட்டொழி" எ-கு, உ-ம் பாகவதம் ச-வது ஸ்கந்தத்தில் பிராசீனபர்கிபர்கி ஆவிர்த்தானனுக்கு நாரதர் அருளிச்செய்வது;

"அயம கந்தன்னி லரசகீ படித்தவம் மறிகள்
யெயிர்த ழைந்துகண் டீயுக வாவுபார்த் திருக்கும்
பயில்வி சும்புசெல் காலையில் வெருவரப் பாய்ந்து
வயிறு போழும்வல் விருப்பினெண் மருப்பினின் மாதோ. -எ,

"படித்திடு மறிகள் வேள்வி புரிந்தவன் பனிவி சும்பி
னடுத்திடுங் கால நோக்கி யழல்விழி யொழுகப் பாய்ந்து
வடித்தகா ரிருப்பிற் செய்த மருப்பினல் வயிறு போழ்ந்த
தெடுத்துகாமுனைக்குங் கேட்டி யிறைவனென் றுனைக்கலற்
முன்."—எ-ம்,

"மகமியற் றுழி மாய்த்தம றியெலாங்
திகழி ருப்பினிற் செய்தம ருப்பினு
னகுபொன் னுட்டக நண்ணுபு ரஞ்சன
னகடு கீண்ட வழன்றெதிர் குத்தியே."—எ-ம்.

"பண்ணவ னகல வொன்றும் பற்றில னுகிச் செங்கட்
கண்ணனே யுளத்து நாடிக் கபிலன திருக்கை சார்ந்து
விண்ணவர் வழுத்தும் வண்ணம் விழுத்தவம் பலவுமாற்றி
யண்ணலந் தனிவீட் டின்ப மண்மின னரசனேறே."—

எனவும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்.

"கன்மங்களாசைக ளொழிந் தாநந்தமடைவாயி"—எ - கு, உ - ம். பிரமகீதை,

"திரமாம ருத்தத்தி னுன்மைந்த ராலுந் தீராத வற்றின்றி யாகத்தி னுலே, யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா லுற்பன்ன மாம் விச்சை யாகிச்ச யத்தாற், பரமான வஞ்ஞானவந்தத்திலேயப் படிஞா னவுபதேச மொன்றுலு மேயிப், புரமாமு டப்புக்குளேயந்த முத்திப் பொருள்கண்டு வீடெய்து வாரிப்பு விக்கே."—

எனவும். மற்றும் வருவனற்றுற் காண்க,

பரமாத்வைத ஞானத்தானன்றிக் கர்மத்தால் ஆநந்த மடையற்பாற்றன்று எனக்கூறினதாம். (எசு)

அ - கை.

[சுக மிருவகையுள் கருமசுக மோரவசரம்பற்றிக் கூறியதாகவேற்ற னன், இது நிற்க. முன்னர், எ0-வது கவியில்பங்கமாகு ஞ்ஞா னத்தைப் பகைசெயா துறவாக்குமென்பதைப்பற்றி யை யஞ்சிறிதள தகனேயகற்றல்வேண்டுமென வினு வலியக்கவியிற்கூறுகின்றார்.]

77. உலக மானவஞ் ஞானமுங் கருமமு முறவென்ற வழிகூடிற் பலவு மானவஞ் ஞானமு ஞானமும் பகையென்ப துளதானு, னிலவி லேமறுப் போலவஞ் ஞானமு நிமலஞா னத்தோடே, குலவி நின் றிந்தச் சிருட்டிகள் செய்யவும் கூடுமோ குருமூர்த்தி.

(இ-ள்.) உலகமானவஞ்ஞானமுங் கருமமுமுறவென்றவழி கூடும்,—எ-து. சகத்தருவமாநின்றுள்ள வறியாமையும், யாகாதிகிருத்தியமுமுறவாகுமென்று தேவரீர்கூறியவழியேற்றற்பாலதே:—பலவுமானவஞ்ஞானமு ஞானமும் பகை யென்பதுளதானுல்,—எ-து. சகத்தருவமாகவன்றியு மின்னும்பற்பல விதேத ரூபமாகவுமிருந்துள்ள வறியாமையும், அறிவும்பகையென்பதுண்மையானுல்:— நிலவிலேமறுப்போல வஞ்ஞானமுநிமலஞானத்தோடேகுலவிநின்றிந்தச் சிருட் டிகள்செய்யவுங் கூடுமோ குருமூர்த்தி,—எ-து. குருமூர்த்தியே! நிலவிற்களங் கமுறவாயிருப்பதுபோல, அறியாமையும் நின்மலமானவறிவொடு கூடியுறவா நின்று, இந்தச்சிருஷ்டியாதிகளைச்செய்யத்தான் கூடுமோ கூடாதே,—எ-று.

உலகமானவஞ்ஞானம் பலவுமானவஞ்ஞானமென்பன அஞ்ஞானத்தை முதற்காரணமாக வுலகமுமின்னும்பிறவும்பெறுநிற்றலின் காரியத்தைக்காரண மாக வுபசரிக்கப்பெறநின்றன. நிற்கவே, அபேதகாரணகாரியமெனப்பெற்றும். பெறவே, அறியாமையே சகமாதிமூன்றுமென்றுயிற்று. இத்துணிபுபற்றியே காரியத்தைமுன்னருங் காரணத்தைப் பின்னருங்கூறியதென்க. அறியாமையே செகமாதிமூன்றெனலை ஞாயமாதியாலுணர்த்துதும். இங்ஙனமுணர்த்தவலி

யில்லார், யாதுகூறினுந்திவிதமாகமுடியும். முடியின், பிறவிநாசமின்றும். பயனென்னே, இதுநிற்க. களங்கத்துக்குநிலவிடமாதல்போல, அறியாமைக்கறிவிடமாயிற்று ஆகவே, அறிவு பூரணமும், அறியாமையேகதேசமுமெனக் குறிக்கின்றது. நிமலமின்றுதலினஞ்ஞானமென்றார். நிமலஞானமென்றது; பொருளப்பொருளாகவுணரு மவசரத்தை. சக்கரவர்த்திக்குறவாகின் றவனிலத்தையாளக்கூடும், பகையாகின்றாளக்கூடுமா? அதுபோல, ஞானத்துக்குறவாகின் றதின்கண்ணஞ்ஞானஞ் சிருட்டியாதிகள்செய்யக்கூடும், பகையாகின்று செய்யக்கூடுமாவென்பான், அஞ்ஞானமும்பகையென்பதுளதாலால் நிலவிலே மறுப்போலவஞ்ஞானமு நிமலஞானத்தோடே குலவிநின் றிந்தச்சிருஷ்டிகள் செய்யவுங் கூடுமோவென்றான்.

(க-து.) ஞானத்துக்குப்பகையாக வதினின்றஞ்ஞானஞ்சிருஷ்டியாதிகள் செய்வதெங்ஙனமென்பது. பலவுமென்றதனால், சகமோடேனைய விரண்டும் வருவித்தாம். உள்ளதென்பது உளதெனலிடைக்குறை செய்யவுமென்பதிலும்மை யிழிவுசிறப்பு. கூடுமோவென்பதிலோகாரம், எதிர்மறை. பலவெனல், உயிரையும்பரத்தையும். என்னே, "ஒன்றல்லன பல தமிழ்நடைவடநூலிரண்டல்லனபலவென்றிசிஞேரே" என்பதினுந்காண்க. பலவுமென்ப திறந்தது தழீஇய வெச்சவும்மை. (எஎ)

அ - கை க.

[பொதுப்பட ஞானமென்றாரேனு மது சொரூபஞானம் விருத்தி ஞானமெனவிரண்டாம் அஞ்ஞானத்துக்குச் சொரூபஞான மூறவும், விருத்திஞானம்பகையுமென விக்கவியிற் கூறுகின்றார்.]

78. சொரூப ஞானமும் விருத்திஞானமுமென்று சோதிஞான மதிரண்டாஞ், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாத்தோன்றும்வே றிலைமைக்தா, சொரூப ஞானமஞ் ஞானசத் தருவன்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவமஞ் ஞானத்தைச் சுடும்விருத்தியின்ஞானம.

(இ-ள்.) சொரூபஞானமும் விருத்திஞானமுமென்று சோதிஞானமதிரண்டாம்,—எ-து. சோதிஞானமானது, சொரூபஞானமெனவும் விருத்திஞானமெனவுமிரண்டாநிற்கும்:—சொரூபஞானமே விருத்தியின்ஞானமாத்தோன்றும் வேறிலைமைக்தா,—எ-து. ஞானபுத்திரா! சொரூபஞானமேவிருத்திஞானமாத் தோன்றுவதேயன்றி யஃதோர்பொருளாகத் தனித்தெங்கணுமில்லை:—சொரூபஞானமஞ்ஞானசத்தருவன்று சுழுத்தியிற் கண்டாயே,—எ-து. சொரூபஞானமானதஞ்ஞானசத்தருவேயன்று, இதனைத் தினசுழுத்தியிற்காண்கின்றனையே:— சொரூபஞானத்தின் மருவமஞ்ஞானத்தைச்சுடும் விருத்தியின் ஞானம்,—எ - து. சொரூபஞானத்தி லுறவாமருவினின்றுள்ளவஞ்ஞானத்தை விருத்திஞானமானதெரித்துவிடும்,—எ-று.

என்றெனலே யீரிடத்துமொட்டுக சுழுத்தியிற் செகந்தோற்றவில்லையென் றங்கேயறிய விடாதெவ்வுயிர் கேவலத்தின்கண்ணு மறிவிருத்தலி னது சொரூபஞானமெனவும், தனித்துந் தன்னைத்தான்காணவொட்டாத தறியாமையாதலி னதனையஞ்ஞானமெனவும், அறிவுமறியாமையுமபேதமாயாங் குறவாநிற்ற லின் சொரூபஞானமஞ்ஞானசத்துருவன்று சுழுத்தியிற்கண்டாயேயெனவும், சமாதியிலுதிக்குஞானம் விருத்திஞானமெனவும், ஞானவான்கள் சிந்தையா விளங்குவது சோதிஞானமெனவும் கொள்க. சொரூபஞானமஞ்ஞானசத்துரு வென்றெனப்பாடமோதில் மறுபடியும். மறுபாட்டு முரணுதலுக்கென்செய் தும். வலிந்துரைகோடலிற் பிறர்பழிப்புக்கிடமாம், இதனைவிடுதனன்கு. சுழுத் தியில் மூடவயமாகாது தானறிவாகவிருந் தம் மூடத்தை யெதிரிட்டறிதலைப் பற்றிக் சத்துருவென்றதெனின், சுழுத்தியிலஞ்ஞானக்கே டெய்தியதுண்டா ? மூத்திபெற்றருண்டா, விசாரமெற்றிற்கெனவரும் இங்ஙனமாய வினவுக்கெல் லாமென்செய்தும். உரைக்குப்பாட்டன்று, பாட்டுக்குரையாதலிற் பாட்டி செல்வுழிச்செல்லல்வேண்டும்.

(க-து.) விருத்திஞானமும், அஞ்ஞானமுமுறவன்றென்பது. எனவே, சொரூபஞானமுஞ் சத்துருவன்றென்பதாயிற்று. விருத்திஞானத்தோடன்றிச் சொரூபஞானத்தோடுறவாமளவுஞ் சிருட்டியாதி நடக்குமெனக் குறிப்பித்த தாம். சோதிஞானத்தையன்றிச் சொரூபஞானமும் சொரூபஞானத்தையன்றி விருத்திஞானமு மின்றெனக்கூறவந்தது, அஞ்ஞானஞ்சிருட்டியாதிகள்செய் தற் குத்காரங்கூறவேண்டியென்க. விருத்திஞானமெழி லஞ்ஞானமிருந்தாலன்றே சேட்டையுண்டாம், இன்றுதலா லிதுவே யஞ்ஞானநாசத்துக் கெல்லையென்க. அவனேயிவனென்றற்போலக் சொரூபஞானமே விருத்தியின்ஞானமென்றி ருத்தலின், ஏகாரந்தெற்றம். (எ அ)

சொரூபஞானம் அஞ்ஞானசத்துருவென்றும் பாடமுளது ; அது எழுதி னவன் எட்டைக்கெடுத்தான் என்னும் வழக்குப்படி எழுதினவனுடைய புத்தி தோஷத்தாற் பிறழ்ந்ததேயாம். சாஸ்திரசம்பிரதாயமறியாமல் அதைச்சரியான பாடமாகவொப்பி அவ்வாறே மூன் இதற்குரைசெய்தோர் பொருள்கூறியிருப் பது சுருதி, யுத்தி, அநுபவவிருத்தமாம் என்க.

அ - கை

[அஞ்ஞானஞ்சொரூபஞானத்தாலெரிபடாது விருத்திஞானத் தாலெரிபடுவதை யுபமானபூர்வமாக விக்கவியிற் கூறுகின்றார்.]

79 தூருத்தி மாயையைச் சுழுத்தியிற் சுடாதது சொரூபஞானந் தானே, வீருத்தி ஞானமாச் சுட்டதெப் படியெனில் வெய்யிலா லுல கெங்கும், பரிதத சூரியன் சூரிய காந்தத்திற் பற்றியக்கினியாகி, யெரித்த வாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென்றற் வாயே.

(இ-ள்.) திருத்திமாயையைச் சுழுத்தியிற்சுடாதது சொரூபஞானந்தானே விருத்திஞானமாச் சுட்டதெப்படியெனில், எ-து. திருத்திபோல்வதாவுள்ளமாயையாகிய வஞ்ஞானத்தைச் சுழுத்தியவஸ்தையி லெரிக்காதது சோரூபஞானந்தானே, அதுவிருத்திஞானமானின் றெரித்ததெங்ஙனமோ வதனைத் தெரிவிக்க வேண்டுமெனில்:— வெய்யிலாலுலகெங்கும்பரித்த சூரியன் சூரியகாந்தத்திற்பற்றி யக்கினியாகியெரித்தவாறுபோல், எ-து. உஷ்ட்ணகிரணத்தினா லுலகமுழுவதுஞ்சுமந்தசூரியனனவன் சூரியகாந்தக்கல்லிற்பற்றி யக்கினிவடிவமானின் றனைத்தையுமெரித்துவிட்ட தன்மையைப்போல;—சமாதியில் விருத்தியா லெரிக்குமென்றறிவாயே,—எ-து. நிட்டையின்கண் விருத்திஞானாக்கினியாயெழுந் ததனாலஞ்ஞானத்தையெரித்துவிடுமென்றறிதி,—எ-று.

திருத்திபோல்வது, உசுவாசநிசுவாசம். அதனையுடையதுடல், அவ்வுடனனலறியாமை, அவ்வறியாமையேமாயை, இந்த மாயையேயஞ்ஞானம், ஆதலின் திருத்திமாயையென்றார், திருத்தியென்பதுதூங்குதல். இதுபோன்றது மாயையெனப்பொருள்படும், படுதலாலுவமைத்தொகை, பண்புத்தொகையன்று. இது ; காரணுத்தானென்றாற்போலும். தனதாக்கினியினால் லுலகைச்சுமக்கின்றவனரசனென்றாற்போல, வெய்யிலாலுலகெங்கும் பரித்தசூரியனென்றிருத்தல்முறை. வெய்யிலாலென்பது பரித்தலென்னும் வினைகொடுமுடிய, எரித்தலென்னும்வினைகொண்டு முடித்தற்கிடமின்று. எரித்தலுக்காக்கின், பரித்தலுக்கேதுவெங்கே, இதுநிற்க. சூரியன் தானே பஞ்சையெரிக்காமல் சூரியகாந்தத்திற்பட்டெழுந்த தனதம்சாக்கினியாலெரிப்பன். அதுபோல, சொரூபஞானமானது தானேயஞ்ஞானத்தையெரிக்காமல் சமாதியில்தனிப்பட்டவிடத்துதித்த தனதம்ச விருத்தியாலெரிக்குமெனமுடிக்க:—இதனாலஞ்ஞானத்திற்குநவுசொரூபஞானமுமேயென வற்புறுத்தியதாகப்பெற்றாம்.

(கூ-து.) விருத்திஞானமே யஞ்ஞானநாசமென்பது சொரூபஞானம் சூரியன். பரிபாகவறிவு, சூரியகாந்தம். விருத்திஞானம், அக்கினி. மாயாகாரியத்தை மாயையென்றது, காரணவாகுபெயர். வெய்யிலாலுலகெங்கும் பரித்தசூரியனென் றதடைகொடுத்தது, வெய்யிலா லெரிக்காமலென்னுமெய் தோன்றற்கென்க. (எகூ)

ஆன்மா பிரகாசரூபமாயிருப்பினும், ஆன்மாவின் சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று ; அது அஞ்ஞானத்திற்கு விரோதியாகிற் சுழுத்தியில் பிரகாசரூபமான ஆன்மாவின்கண்ணே அஞ்ஞானம் தோன்றவேண்டுவதில்லை. கோரமான நித்திரையினின்றும் விழித்தவனுக்கு நான் சுகமாகவுறங்கினேன், ஒன்றுமறியாதிருந்தேன் என்றிவ்வாறான ஞானமுண்டாகின்றதாகலான் இஞ்ஞானத்திற்குச் சுகமும், அஞ்ஞானமும் விஷயமாகின்றன ; இவ்விரண்டுஞானமும் சாக்கிரகாலத்தில் பிரத்தியட்சரூபமல்ல:—ஸ்மிருதிரூபமாம் ; அந்தஸ்மிருதியும், அஞ்ஞாதவஸ்துவின் ஸ்மிருதியல்ல:—ஞாதவஸ்துவின் ஸ்மிதியேயாம் : ஆகலின், சுழுத்தியின்கண்ணேசுகம், அஞ்ஞானமுண்டு ; அச்சுழுத்தியின்கண்ணுள்ள ஞானம் அந்தக்கரணத்தினாலும், இந்திரியங்களாலும்

உண்டானதன்று. என்னை ? சுழுத்தியின்கண்ணே ஆன்மசொரூபஞானமே யன்றி அந்தக்கரணமும், இந்திரியங்களும் இல்லையாகலின், அவைகளாலுண்டானதன்று ; [ஞானமெனினும் பிரகாசமெனினும் ஒக்கும்.] இவ்வாற்றால், சுழுத்தியின்கண்ணே ஆன்மா பிரகாசரூபமாகவுளது ; அந்தப்பிரகாசரூபமான ஆன்மாவினுல் சொரூபசுகமும், அஞ்ஞானமும் விளங்காநின்றன. ஆன்மசொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியாமாயின்' ஆண்டஞ்ஞானம் விளங்கவேண்டுவதில்லை ; ஆதலால், ஆன்மாவின்சொரூபப்பிரகாசம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று:—மாறுக அதற்குச்சாதகமாம் ; இவ்வபிப்பிராயத்தாலேயே வேதாந்தசாஸ்திரங்களில் சாமான்யசைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று ; விசேஷசைதந்நியமே அஞ்ஞானத்திற்கு விரோதியாம் என்ப ; வியாபகமானசைதந்நியம் சாமான்ய சைதந்நியம், விருத்தியின்கண்ணுள்ள சைதந்நியம் விசேஷசைதந்நியமாம். காஷ்டத்திலிருக்குஞ் சாமான்ய அக்கினி அந்தகாரத்திற்கு விரோதியாகாமல் மதனத்தினுல் அதினின்றும் வெளிப்பட்ட வகினிவத்தியைப்பற்றிநின்று அந்தகாரத்தை விரோதிப்பதுபோல வியாபகசைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகாமல் வேதாந்தத்தின் விசாரத்தினுலுண்டாகின்ற அந்தக்கரணத்தின் பிரமாகாரவிருத்தியின்கண்ணுள்ள சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாகின்றது ஆதலால், கேவல சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று.

விருத்தியோடுகூடின சைதந்நியம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம் ; அல்லது, சைதந்நியத்தோடுகூடினவிருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம். முதற்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது சைதந்நியமாம்; விருத்திசகாயமாம்.இரண்டாம்பட்சத்தில் அஞ்ஞானநாசத்திற்கேது விருத்தியாம்:—சைதந்நியம் சகாயமாம் ; இஃதவச்சேதவாதத்தின்றன்மை.

ஆபாசவாதத்தில் சாமான்ய சைதந்நியத்தைப்போல விசேஷசைதந்நியமும் அஞ்ஞானத்திற்கு விரோதியன்று ; பின்னை விரோதியாதோவெனின்;—விருத்தியோடுகூடின ஆபாசம் அல்லது, ஆபாசத்தோடுகூடின விருத்தி அஞ்ஞானத்திற்கு விரோதியாம் ; இங்ஙனம் விசாரசாகரசிரந்தத்தில் கூறியிருக்கின்றது. பஞ்சதசி முதலிய கிரந்தங்களின் அப்பிராயமும் இதுவே ; ஆதலால், இவ்வாசிரியரும் "சொரூபஞானமஞ்ஞான சத்துருவன்று" எ-ம், "விருத்தியினஞானஞ்சுடும்" எ-ம், "சமாதியில் விருத்தியாலெரிக்கும்" என்றுங் கூறினர். முன்னிதற்கு உரைசெய்தோர் சுழுத்தியில் சொரூபஞானம் அஞ்ஞானத்தையெதிரிட்டுக்காண்டலின், விரோதியாமென்று பதவுரை செய்திருக்கின்றனர் ; அந்தகாரத்திற்கு விரோதிகளான சூரியன், அல்லது, தீபம் இவை அந்தகாரத்தை எதிரிடுவது எங்கேனும், யாவரேனுங்கண்டதுண்டா ? இங்ஙனமுரைசெய்தோர், "துருத்திமாயையைச் சுழத்தியிற் சுடாததது சொருபஞானந்தானே விருத்திஞானமாயிச் சுட்டதெப்படி" என்னும் செய்யுளை உய்த்துணராமற்பொருள் கூறினமையின், அவருரை * ஸ்வகபோலகற்பனையென்றே நிச்சயிக்கப்படுகிறது.

---

* ஸ்வகபோலகற்பனை என்பது, பிரமாணமில்லாமலும், தம்மனத்தின்கண் ணில்லாமலும் கூறுவது.

அ - கை.

[விருத்திஞானமு மனத்தொழிலாலாயது, இதுவுங் கருமமன்றே, இஃதஞ்ஞா னத்தைக்கெடுக்குமன்றே? இங்ஙனமிருக்க. கருமம், அஞ்ஞானத்தைக்கெ டுக்காதென்ற தென்னேயெனவினவலையிக்கவியிற் கூறுகின்றார்.]

80. அருளுமையனே திரிவித கரணத்தா லாகிய தொழிலெல்லாங் கரு மமல்லவோ விருத்திஞா னமுமந்தக் கரணகா ரியமன்றே வுரிய கன்மமஞ் ஞானத்தைக் கெடுக்குமென்றேதிரு லாகா தோ பெரிய ஞானமென் றதற்கொரு பெயரிட்டபெருமையை யுரையீரே.

(இ-ள்.) அருளுமையனேதிரிவிதகரணத்தா லாகியதொழிலெல்லாங் கரு மமல்லவோ,—எ-து. சகலார்த்தத்தையு முணர்த்தியருளியகர்த்தனே ! மனே வாக்குக்காயத்தாலாகிய கிரியையனேத்துங்கருமமல்லவா :— விருத்திஞானமு மந்தக்கரணகாரியமன்றே வுரியகன்மமஞ்ஞானத்தைக் கெடுக்குமென்றேதி ருலாகாதா,—எ-து. விருத்திஞானமென்பதும் மனதின்காரியமல்லவா, இங் ஙனகாரியமாக்கற்குரிய விருத்திஞானமென்னுங்கன்ம மஞ்ஞானத்தைக்கெடுத் தவிடுமென்று சொன்னலாகாதோ:—பெரியஞானமென்றதற்கொருபெயரிட்ட பெருமையையுரையீரோ,—எ-து. மேலானஞானமென்ற தற்கொருபெரிய பெ யரிட்டமகிமையைத் தேவரீர் தெரிவித்தருள வேண்டும்,—எ-று.

சமாதியாயினுந் திரிவிதகரணமொத்துச்செய்தலன்றே, செய்தல்தொழி லன்றே, இந்தத்தொழிலாலாயது விருத்திஞானமன்றே, இந்தவிருத்திஞான மும், அந்தக்கரணத்தாலாகியபயனன்றே, இந்தப்பயன், அந்தக்கரணகாரிய மன்றே, இதனால் விருத்திஞானம் கருமமாயிற்று. இதைக்கருமமாக்கி, இந்தக் கருமத்தாற்கெடு மஞ்ஞானமென்றலென்னவழு, இங்ஙனமிருக்க, இதற்குப் பெரியஞானமெனப் பெயரிடுவதென்னே.

(க-து) விருத்திஞானமாகியகன்ம மஞ்ஞானத்தைக்கெடுக்குமென்பது இன்னுங்கன்மமே முக்கியமென்றனைக்க (அ0)

அ - கை.

[விருத்திஞானமுங் கன்மமு மந்தக்கரணகாரியமெனல் மெய்யே
இதுவேசித்தாந்தமாயி னிருவகைதந்திரமெற்றிற்கென
விடைதரலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

81. விருத்தி ஞானமந் தக்கர ணத்தொடு விருத்தியா கிலுமைந் தா
வொருத்திமக்களே தங்களிற்பகைக்கின்ற துலகெங்குங் கண்டோமே
கருத்த ஞகிய புருடதந் திரங்களாங் கருமங்க ளவைபோ ல
வருத்த ஞானமோ புருடதந் திரமன்று வஸ்துதந் திரமா மே.

(இ-ள்.) விருத்திஞானமந்தக்கரணத்தொடு விருத்தியா கிலுமைந்தா,— எ-து. ஞானபுத்திரா ! விருத்திஞானமான தந்தக்கரணத்தோடுகூடிச் சம்பந் தித்த புடைபெயர்ச்சியாயினும்: — ஒருத்திமக்களே தங்களிற்பகைக்கின்ற

லகெங்குங்கண்டோமே.—எ-து. ஒருஸ்திரியின்பிள்ளைகளே தங்களுக்குள் ளேயொருவரோடொருவர் பகைத்தடித்துக்கொண்டிறப்பதை யுலகமுழுதுங் கண்டிருக்கிறோமே,—கருத்தனுகியபுருடதந்திரங்களாங் கருமங்ளவைபோல, எ - து. கருமங்கள், அகம்பாவமுடையோனுகிய புருடனது தந்திரங்ளெனப்படும். அவைபோல:—வருத்தனுனமோபுருடதந்திரமன்று வஸ்துதந்திரமாமே. எ-து. அகமுகநாட்டத்தகிவருத்தத்தாலெய்திய விருத்திஞானமோவெனில், புருடதந்திரமன்றுவஸ்துதந்திரமெனப்படும்.—எ-று.

ஒருத்தி. காரணம். அவள்பிள்ளைகள், காரியம். அவர்களொருவரோடொரு வரடித்துக்கொள்ளுதல், புடைபெயர்ச்சி. இறத்தல், அப்புடைபெயர்ச்சி, மாளல், இப்புடைபெயர்ச்சியாலாயபயன். விருத்தியாகிலுமென்பதிலும்மை இழிவுசிறப்பு. புருடனுலாயதந்திரம், புருடதந்திரம், வஸ்துவாலாயதந்திரம், வஸ்துதந்திரம். கர்த்தனும்புருடதந்திரமெனவே, அகர்த்தாவாம் வஸ்துதந்திர மென்றுயிற்று. உபாதியாலெனல், கர்த்தத்துவம், அறிவுயாலெனல், அகர்த் தத்துவம். மனமுபாதிவடிவா நின்றியற்றல, கருமம். அறிவேவடிவாநின்றியற் றல், ஞானம். இவ்விரண்டும்மனத்தின்காரியமாயினும், அஞ்ஞானத்தைநீறுப டுத்தும்வலி யேற்றற்பாலதாயது. இதனைக்கணிப்பார் தத்துவஞானியரேயன்றி யேனையரல்லர். எனையரெனின், சொல்லாலன்றியர்த்தத்தால்லர். ஒருத்திமக் களென்பதனுல், தானேதாயென்றமையும் தாயென்றுகொடூரவேண்டுமோ. கூறல், மிகைபடக்கூறலென்னுங் குற்றமாயமையும், ஆசலின்வேண்டுவதின்று புருடனதுதந்திரமென்றுவதால், வேற்றுமைத்தொகை. புருடதந்திரமென்ற யது, சிலவிகாரமாமுயர்திணையென்பதினுலென்க. புருடனென்னல்போதும், கருத்தனுகியபுருடனென்றது; ஞாயிறு, திங்களென்னல்போதும், செஞ்ஞா யிறு, வெண்டிங்களென்றற்போலும். அடைவேண்டாதவற்றிற்கடைகொடுத் தல் மிகையாயினுஞ், சான்றோரேற்றலின்வழமைதியென்க.

(உ-து.) தந்திரமிரண்டாக்கியதா லஞ்ஞானத்துக்குச்சத்துரு விருத்திஞ னமெனத் தானேயசையுமென்பது. தமதுபுண்ணியகன்மங்களெல்லா மீஸ் ராற்பணஞ்செயல், புருடதந்திரமெனல்மெய்யே, இதுபோல வஸ்துதந்திர நிலையெங்ஙனமாயதோவெனில், அல்லவில்லையாமுண்டென்னற்கியையாது, நின் றுள்ளதுயாதோவதுவஸ்து. சித்தமுமந்நான்கின்வயமாகாதவ் வஸ்துவினேரே நிற்றலைச் சமாதியென்பர். பலகாலமுநேரேநிற்கநிற்க எங்குமாநிறைந்துள்ள சிற்சோதியானது, அங்ஙனமசையாது நின்றுள்ள சித்தத்தின்கண் ணிருளில் மின்மினிபோலவும், சுடர்போலவும், வளர்பிறைவரிசைபோலவும், சூரியோத யம்போலவும், பகலொளிபோலவும், கணக்கின்றிய சூரியர்போலவும், உபா திரகிதப்பிரகாசம்போலவும், தனதுசம்பிரதிபலித்தல் தந்திரமெனவறிக. இம் முறையறியார்பால் கேட்டென்பயன். (அக)

ஓர்மாதாவின்புத்திரரில் ஒருவன்வித்துவானுயும், ஒருவன் மூடனுயும், சிஷ்டனுயும், மற்றொருவன் துஷ்டனுயும், உலகில் மாறுபட்டுக்காணப்படு வதுபோல மானசகிரியாரூபமான நிர்க்குணவுபாசனையும், விவேகஞானமும் ஓரந்தக்கரணத்தின்காரியமேயாயினும, உபாசனை கர்த்ததந்திரமாதலானும், ஞானம் வஸ்துதந்திரமாதலானும் அவை தம்முட்பேதமாமென்பது கருத்து.

அ - கை.

[கருமத்தைதியானயோகமெனவும், ஞானத்தைஞானயோகமெனவு
பிரண்டாக யிக்கவியில்விடை கூறுகின்றார்.]

**82. வகுத்த கன்மங்கள் செய்யவுந் தவிரவு மற்றொன்றுக் கவுங்கூடு
மிகுத்த ஞானமப் படியன்று தியானமும் விவேகஞா னமும்வேறே
சகத்தி லொன்றையொன்றுவிவன் பாவிக்குந்தியானங்கற் பிதயோக
முகஸ்த மசக்கண்ட ஞானமேவாஸ்தவமோகமா மயங்காதே**

(இ-ள்.) வகுத்தகன்மங்கள்செய்யவுந் தவிரவுமற்றொன்றுக்கவுங்கூடும், எ-து சான்றோரால்வகுக்கப்பட்டுள்ள கருமங்களானவை, செய்யவுங்கூடும், விட்டுவிடவுங்கூடும், வேறொன்றுக்கவுங்கூடும்:— மிகுத்தஞானமப்படியன் றுதியானமும் விவேகஞானமும் வேறே;—எ - து. மிகச்சிறப்பித்துள்ளஞானமானது, அவைபோலப் புருடரால்வகுக்கப்பட்டதன்று எங்ஙனமெனில்) தியானமென்பதூஉம், விவேகஞானமென்பதூஉம், வெவ்வேறுவகுக்கப்பட்டுள்ளனவாம்:—சகத்திலொன்றையொன்றுவிவன் பாவிக்குந்தியானங்கற்பிதயோகம் எ-து.—உலகத்திலிவனொன்றைமற்றொன்றுகப் பாவிக்குந்தியானமே கற்பிதயோகமெனவும்: —முகஸ்தமாக்கண்டஞானமே வாஸ்தவமோகமாமயங்காதே, எ - து பிரத்தியட்சமாகக்கண்டஞானமேயுண்மையான ஞானயோகமெனவும்பெயராம். இஃதுபோலத்தெளிவின்மையா லொன்றுமற்றொன்றுகக்கலங்காதே,—எ-று.

இரண்டுமொன்றென விபரீதபுத்தியா னீமயங்காதே யெனினுமையுமி, வகுத்தகன்மங்கள், மிகுத்தஞானமென்றிருத்தலின், புருடதந்திரத்தால் வகுக்கப்பட்டுள்ள கன்மங்ளெனவும், வஸ்துதந்திரத்தால் சிறப்புமிக்குற்ற ஞானமெனவும்பொருள்கொள்ளினுமமையும். வகுத்த, மிகுத்தவென்றதினால் பிறவினையாக்கினும். கன்மானுஷ்டான மிட்டங்காரணமாகவாதலின் வத்தம்பற்றிச் செய்யவுந்தவிரவும்மற்றொன்றுக்கவுங்கூடுமெனவும். ஞானானுஷ்டானஞ் சுகப்பெருக்கேமேலிடச்செய்தலின், இட்டம்வைப்பெற்றிற்று. வருத்தந்தட்டலெங்ஙனமென்பதுகொண் டப்படியன்றெனவும், சகளம்வேடமெனக்கொள்ளாது வேடதாரியாகக்கோடலின், சகத்திலொன்றையொன்றுவிவன் பாவிக்குந்தியானமெனவும், வாஸ்தவஞானமெனினும், விவேகஞானமெனினுமொக்கும். தேவதத்தனை யவன்வேடங்காரணமாகக் குடுமபியென்றும், சந்நியாசியென்றுங்காணுந் துள்ளவாறவன் சுயவடிவைக்காண்டலே முகஸ்தமாக்கண்டஞானமே வாஸ்தவமெனவுங்கூறினர். தியானமும். விவேகஞானமும் வேறேயெனப்பகுத்துத் தியானங்கற்பிதயோகமெனவே, விவேகஞான மெதார்த்தயோகமெனப்பெற்றும். கன்மம் ; தியானமெனவும், கற்பிதயோகமெனவும் பெயர்பெற்றுப்போல, ஞானமும் ; விவேகஞானமெனவும், எதார்த்தயோகமெனவும் பெயர்பெற்றுநின்றது.

(க-து.) இங்ஙனமாயவேதுக்களாற் கன்மமும், ஞானமும், வேறேயென்பது. இன்பதுன்பங்களிடைவிடாதொழிவின்றி வினைவசத்தாலெய்தினும், உள்

ளக்களிப்பணுவேனுந் தாழா துயரா தொருபடித்தாநிற்கும். இங்ஙனநிற்றல் விழிப்பினுமுறக்கத்தினுமாயின் தள்ளுவதெங்ஙனம் ? கொள்ளுவதெங்ஙனம்? இதுயாதுகாரணமாக வெய்தியது ? ஞானங்காரணமாக. அஃதுஞானம் ; வாஸ்தவமாகவும், முகஸ்துதமாகவுமிருக்கு மபரோட்சஞானமன்றிப் பரோட்சஞான மன்று. இஃதென்னவலியது, மேல்கீழொப்பின்றெனச்செய்யும்வலியது. யாதாகச்செய்யும்வலியது? சமஸ்தமுஞ்சின்மாத்திரமாகச்செய்யும்வலியது. இது காரணமாவெய்தியசுக மெங்ஙனமாயதோ ? விதனையுடையாரேயதியவேண்டும். அயலாயினுரெங்ஙனமறிவர். முகஸ்துதமாக்காணுஞான மத்துவிதியிடத்தும், கற்பிறயோக மேனையோரிடத்துமெனக்கொள்க. அஃதாரோபம். அது மாறுதது, இதுமாறுவது. (அஉ)

"ஒன்றை யொன் றுவிவன் பாவிக்குந் தியானங்தற் பிதமீ" என்று இவ்வாசிரியர் கூறியதுபோலவே வாசிட்டத்திலும்,

"ஊன்றுற வொன் றைக்கருத வொன்றுவெளிப் படுங்குருவி னுடதே சத்தால்"

என்று கூறியிருப்பதுகாண்க

அ - னை க.

[மேற்கூறியவிருவகையோகத்தினிலக்கணங்களே விக்கவியில் விளக்கி யஞ்ஞானநாசத்தையுங் கூறுகின்றார்.]

83. கண்ட நிந்தது ஞானங்கேட்ட தெனக் கருதுபா வனையோ கம், கண்ட பேர்சொலக் கேட்டது மறந்துபோங் கண்டது மறவாதே, கண்ட வஸ்துமெய் தியானவஸ் துக்கள்பொய் கறுவியஞ் ஞானத் தைக், கண்ட வக்கணங் கொல்வது ஞானமே கருமமன் றறிவாயே,

(இ-ள்.) கண்டநிந்தது ஞானங் கேட்டதெனக்கருதுபாவனையோகம், — எ-து. பிரத்தியட்சமாகக்கண்டநிந்தது ஞானயோகமெனவும், ஒருவர்சொன்னவண்ணங்கேட்டதனைப் பாவிப்பதுபாவயோகமெனவும் பெயராம்:— கண்ட பேர்சொலக்கேட்டது மறந்துபோங்கண்டதுமறவாதே,—எ-து. கண்டவர்கள் சொல்லக்கேட்டதுமறந்துபோகும், அங்ஙனமாகாதுதான்கண்டது மறந்துபோகுமா, மறந்துபோகாதே: — கண்டவஸ்துமெய் தியானவஸ்துக்கள்பொய்,— எ-து. நேரேகண்டவஸ்துயாதோவதுமெய், பாவிக்கப்பட்டவைகளெவைகளோ வவைகள்பொய்:—கறுவி யஞ்ஞானத்தைக்கண்டவக்கணங்கொல்வது ஞானமே கருமமன்றறிவாயே,—எ-து. அஞ்ஞானத்தைக்கண்டவக்கணமேயதனைச்சீறிக் கோற்றபாலது மெய்ஞ்ஞானமேயன்றிக் கருமமன்றெனவறிஇ,—எ று.

வஸ்து மனோவாக்குக்கெட்டுமெட்டா தென்பதைப்பற்றி முன்னரேகூறியிருப்பதால், இங்கேகூறவருவது முறையன்று. ஆயினும். இங்கேசற்று விசாரிக்குதும். காலதேசவஸ்துவையன்றிச் செகமெனல் தோற்றன்மாத்திரமுஞ் சொன்மாத்திரமுமா முடிகின்றதே, இப்போதுலகமென்றுப்பொருளங்கே ? இதோதோற்றுகின்றதேயெனில், அம்மூன்றிற்படாதுகாட்டலாமே ? பொருளி

டங்காலமென்னுங்காரணங் கருச்சிவிடத்துத்தோற்றலும், கருதியவிடத்துத் தோற்றமையுமானால், அப்போதுலகிருப்புக்கு மின்மைக்குங்காரணங் கருதாமையுங்கருதலுமாகின்றதே, இவ்விருபுடைபெயர்தலுக்கும் வினைமுதல்மனமாகின்றது. இத்மனதையன்றிப் புடைபெயர்ச்சியும், இந்தப் புடைபெயர்ச்சியையன்றிச் செகத்துண்மையு மின்மையுமெங்கே? ஆகலின், மனோகற்பிதமேயுலகமென்றுயிற்று. இதற்குகாரணம். வாசிட்டம், விரதசூயைகதையில், ங்-வது கவியிற்காணலாம். மனமானதுதானே சகத்தாகப் பரிணமித்துத்தானே தன்னைப் பார்க்கின்றதென்றால், தன்னை விகற்பித்துத் தன்னைத்தான்காண்கின்றவிது; தன்னைத்தான் விகற்பிக்காமல் சுயம்பாகக்காண்கின்றதாரிதோ? அங்ஙனந்திரும் பாததறையேயன்றிவேறன்று இதற்குகாரணம்; வாசிட்டத்தில். "ஆன்றவம் மனம்பூர்ணத்தையடைந்தபூரணவெண்டிங்கள்போன்றுறவிளங்கு"மென்னுங் கவியாற்காணலாம்.

(க-து.) இவ்விருவகையோகவிலக்கணங்களைவிளக்கியதா லஞ்ஞானத்துக் குஞானமே சத்குருவெனத்துணிந்தாமென்பது. உலகத்தில். பெரும்பாலுமனோகர்வேதாந்திகளென மடாதிபதிகளாயிருந்து கண்டறிந்தது ஞானமென்பதற்குரை; வேதாந்தநூல்களாலறிவே யுண்மையெனக்கூறியிருப்பதை மனதில் நிடபாவமாயுறுதிகொள்வதெனவும், மனனம், நிதித்தியாசனம், இதுவேயெனவும், இதற்குப்பயனீசனைவந்தித்தலேபெனவும், இதல்லவெனப்பரமஞானிகள் சொல்லினுங் கேளாததங்கள்மரபின்வழித்தா நடக்குதுமெனவுங் கூறுவர். இதென்னபுதுமை. கேட்டதனைக் கருதுபாவனை யோகமெனற்கென்செய்வர். கண்டவஸ்துமெய் தியானவஸ்துக்கள் பொய்யென்பானேன். நிச்சயஞானம்பரோட்சமாயிற்றே, இஃதபரோட்சஞானமாகுமா? ஆகுமெனில், ரவியாதியின்றியிருள்நாசமாகுமா, யுத்தியாவது, அனுபவமாவதுண்டா? இதோசூரியனெனநினைத்தாலும், சொன்னலு மிருள்போகுமா? போகுமானால், கருமமும் விருத்திஞானமுமென் விரண்டாகக் கூறுவானேன். அறிவேயுண்மையெனநினைவால் நிடபாவங்கொள்ளில், அறிவு, திரிசியங்களிலொன்றாய்முடியும், அல்லது, பாழாகவேனும், நினைவாகவேனுமுடியும். பாழெனில், மாயைதிரிசியமெனிலுலகம். நினைவெனில் தனது சூக்குமதேகம். அறிவிங்ஙனமாயதன்றே? என்னை, "அறிபாப்பொருள்காரணமாயைகுறித் தறியும்பொருள் காரியமாமுலகிற், தெரியாற்றிகழ் நான்மறையந்தமெலா நீயன்றெனவோதுதிரந்தரமே."—எ-ம். "அறியும்பொருளன்றறிபாப் பொருளன்றறிவாகிய நீயெனுமப்பொருடான், பொறியின்வழிநின்றறியும் பொருளோ டோதக்கண்விழித்தறியும்பொருளே"—எ-ம். கூறியவற்றற்காண்க. தேசாதிதத்துவக்குழாங்கள், அறிவானால் சிவமறிவாகலாம். சிவதரிசனத்தில் தத்துவங்களும், தத்துவதரிசனத்திற் சிவமு மபாவமாயிற்றே, இரண்டையுமததுவாயிருந் தறிந்ததறிவாயிற்றே, அஃதிருந்தபடியிருக்கின்றதே, அது சிவமாகுமா, தத்துவங்களாகுமா, ஆகாதே; இவ்விரண்டவசரநிலையாயும், அன்றுயுமிருக்கின்றதே இவ்வறிவே, சகலகாலையிருந்து மாங்காங்கெட்டப்புகில் தூரதூரமாகவகன்றேகின்றதே, இதனைத்தரிசிப்பதற்கன்றே, சிரவணமனனநிதிகள் செய்வது. இவ்வறிவைத்தவிர

மேலாயதென்னையுளது. இருக்கின்றதெனின், அதுதானு யிருந்தறிவதுமிவ்வறி வுதானே. அன்றெனின், கருமானுஷ்டானமும், ஞானனுஷ்டானமும்புரியு மறிவுபயன்வேண்டியன்றே ? அப்பயனறிவுக்கன்றே, இம்மைப்பயனுமறி வுக்கன்றே, அப்பயனிப்போதுமுண்டா ? பயனென்றிலொன்றில்லாதாயினு மதனையனுபவிக்குமறிவெப்போதின்று. எப்போதுமிருக்கின்றதெனின், இதனை இலட்சியார்த்தத்தாற்காணுது பராக்கிற்செல்வதென்னை. இவ்வறிவையன்றி நானெனற்குப்பொருள்கண்டிலமே உபாதிநானுகுமா ? ஆகாசவுபாதியைநா னெனப்பார்ப்பதுபோல, நானெனலேவிசாரித் தண்மையாகப்பார்க்கவேண்டு, மன்றே ? எங்கேபார்க்கின்றனம், தன்னைவிட்டுத் தனக்கயலோடப் புறப்பட் டனமே, இதுதானு வேதாந்தியென்பதற் குரிடதசம்மதம் நன்றுநன்று, இப் போதேயிப்பெயரையொழிக்காவிடில், நம்மியடுப்பார்கெடுவர். இது திண்ணம். இதுநிற்க. இவரிப்போதேயுலகைமித்தையாக்கற்கறியா ரெங்ஙனம்பிரமமாக்கு வரெனின், இவ்வுலகஞ்சுழ்ச்தியி லில்லையெனக் கூறுவதாமித்தையாக்கல், நன் குகன்கு. எப்போதுமில்லாதகானனீரை யுவமைகூறவந்த தூலகமிப்போதுமில்லை யெனற்கன்றே. இக்காலத்தில்கேட்கி லக்காலத்தில்கூறவருவது ; கல்வித்தேர்ச் சியையு மனுபவத்தெளிவையுங்காட்டுகின்றதே, இது நல்லவேதாந்தம் இங்ங னங் கூறியுடலேவளர்த்தலேயன்றியுணர்வைவளர்த்ததாகுமா? இனியாவதிம்ம டமைமரபைவிட்டுத் தன்னையுள்ளங்கைநெல்லிக்கனிபோற் காட்டவல்லாரைத் சேடியடுக்கிற் பிழைக்குதும், அன்றேற்கெடுதும். இஃதகங்காரத்தார்கூறிய தன்று. துக்கநிவர்த்திக்கென்க. நாமேகமெனலேச் சொல்லாற்காணுது; கண் ணுற்காணத்துணியினதுபயன்படும் கண்டவஸ்துமெய் தியானவஸ்துக் கள்பொ யென்பதிலேயமென்னை ? தன்னைத்தான்காணுசளவும், சகசிவபரஞ்சத்தியம். காணின்மித்தை. எனவே, காணுமையே சத்தியமெனவும், சாட்சியேமித்தை யெனவுமாயிறறு. ஆகவே, காணுமையுங்காட்சியுந்தனது புடைபெயர்ச்சி க்குவினைமுதல் தான். இங்ஙனந்தன்னையன்றி வினைநிகழ்தலும், நிகழ்சலையன் றிச் சத்தியமுமித்தையு மில்லையெனக்கண்டாம். இதனினுமிக்கவித்தையெங்கு மில்லை இதுபிறவிதவிர்த்திக்கும். ஈஸ்வரார்பணஞ்செய்தலாகிய புண்ணியமோ, அதன்பலனையனுபவிக்கப்பிறவிதருமம் ஆதலின் 'பிறப்பென்னும்பேதமை" யென்றார். கேட்டவண்ணம் பாவித்தல்யோகம். பாவித்தவண்ணங்காண்டல் ஞானம். இங்ஙனங்காண்டலேத்தான் ஞானகதப்பிரத்தியட்சமென்பர். பாவனை யையன்று. (அசு)

மூர்த்தித்தியானம்போலத் தியானமாத்திரத்தால் நாம் பிரமமென்னு நிச் சயமானது தியானம் விடில் இல்லாமற்போவதால், "தியானவஸ்துக்கள் பொய்"—எ-ம், பிராமணனுக்கு நான்பிராமணனென்பது மறந்தும்போகா ததுபோல ஆருடஞானிக்குமறந்திருந்தாலும் பிரமத்துவஞ் சுபாவசித்தமாயிருத் தலால் "கண்டது மறவாது" என்றுங்கூறினர்.

ழுன்று செய்யுளின் திண்டபொருள்:—ஞானமோ பிரமாண, பிரமேயங் களினதீனமாம்:—விதி, புருஷனுடைய இச்சை இவைகளினதீனமல்ல. தியா னம் விதி, புருஷனுடைய இச்சை, விசுவாசம், அப்படியே ஹடம் இவைகளி

னினமாம். பிரத்தியட்சஞானத்தில் பிரமாணம் நேத்திரம்:—பிரமேயம் கடர்திகள் ; அங்கே நேத்திரற்கும், கடத்திற்குஞ்சம்பந்தமாமேல் புருஷனுடைய இச்சையின்றியும் கடஞானம் பிரத்தியட்சமாகின்றது ஆவணிமாசத்தின் சதுர்த்திதினம் சந்திரதரிசனம் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது:—விதியில்லை. புருஷனுக்கும் இன்றைக்குச் சந்திரதரிசனங் கூடாதென்னும் நிச்சயமிருக்கின்றது ; இப்படியிருந்தும், ஏதேனு மொருவிதத்திலுல் நேத்திரமான பிரமாணத்திற்குப் பிரமேயமான சந்திரனோடு சம்பந்தமுண்டாகிவிடில் சந்திரஞானம் அவசியம் பிரத்தியட்சமாகின்றது. ஆகலால், ஞானம் பிரமாணபிரமேயங்களின் அதினமேயல்லாமல் விதியிச்சைகளினதினமல்ல. ஒருவன் சாலிக்கிராமம் விஷ்ணுவினுருவமென்று தியானஞ்செய்யில், இவனுக்கு உத்தமமான பலமடையப்படும் ; அத் தியானத்திலே சாஸ்திரப்பிரமாணத்தால் விஷ்ணுரூபம் சதுர்ப்புஜமூர்த்தியாகச் சங்கு, சக்கிர, கதை, பத்மம், இலக்குமி இவைகளோடு கூட அறியப்படுகின்றது:—நேத்திரப்பிரமாணத்தால் சிலேயாக அறியப்படுகின்றது ; அப்படியறியப்பட்டினும் விதி, விசுவர்சம், இச்சை இவைகளால் சாலிக்கிராமம் விஷ்ணுவென்று தியானபம்பண்ணப்படுகிறது ; அத்தியானம் நாநாவிதமாம், ஓரிடத்து ஒன்றற்றையொன்றுகத் தியானிக்கப்படும் ; அது முன் சொன்ன சாலிக்கிராமத்தை விஷ்ணுரூபமாகத் தியானிக்கப்படுவதாம் ; இது ஊனப் பிரதிகத்தியானமென்பர். வேறே வைகுண்டலோகவாசியாகிய விஷ்ணுவைச் சங்குசக்கிராதிகளோடுகூடின சதுர்ப்புஜமூர்த்தியாகத்தியானிக்குந்தியானம் ஒன்றையொளறுகத்தியானிக்குந் தியானமல்ல:—தியேயாநுசாரத்தியானமாம். என்னே ? வைகுண்டவாசியாகிய விஷ்ணுவின்சொரூபம் பிரத்தியட்சமாகவோ இல்லை:—கேவலம் சாஸ்திரத்தாலறியப்படுகிறது ; சாஸ்திரங்கள் சங்க, சக்கிராதிசகிதமாகவே விஷ்ணுவின்சொரூபங் கூறுகின்றதாகலின், ¶தியேயசொரூபத்தினநுசாரமாகவே அத்தியானமுண்டாகின்றதென்க.

விதி, விசுவாசம், இச்சை இவைகளின்றித் தியானமுண்டாகாது ; இவற்றுள், விதியாவது இவ்வாறு தியானஞ் செய்வாயாக வென்னும் புருஷனது பிரேரகவசனமாம் ; அவ்வசனத்திலுள்ள சிரத்தையை விசுவாசமென்பர். அந்தக்கரணத்தினுடைய காமரூபமான ரஜோகுணவிருத்தி இச்சையாம் ; இம்மூன்றும், தியானத்திற்கேதுவே யல்லாமல் ஞானத்திற்கேதுவல்ல ; இன்னும், தியானம் அடத்தினுலுமுள்ளதாம்:—ஞானத்தில் அடத்தினபேட்சையில்லை. என்னே ? நிரந்தரந்தியே யாகாரமான சித்தவிருத்தியைத் தியானமென்பர் ; அங்கே விருத்தியில் விட்சேப முண்டாகுமாயின், அடத்தினுல் விருத்தியின் ஸ்திதி செய்யவேண்டும். ஞானரூபமான அந்தக்கரணவிருத்தியினுல் தற்காலம் ஆவரணம்பங்கமாயிடில், விருத்தியின் ஸ்திதிக்கு உபயோகமில்லை ; ஆகலின், அடத்தினபேட்சையில்லை. வைகுண்ட வாசியான சதுர்ப்புஜமுடைய விஷ்ணுவின் தியானம்போல நான் பிரமமாகிறேனென்னுந் தியானமும் தியேயாநுசாரமாம் ; ஆகலின், இது பிரதிகத்தியானமல்ல:—அகங்கிரகத்தியானமாம் தியேயசொரூபத்தைத் தன்னோடபேதமாகச் சிந்திப்பதை அகங்கிரகத்தியான மென்

¶ தியேயம் = தியானிக்கப்படுவது:

பர். யாவனொருவனுக்கு அபரோட்சஞான் முண்டாகவில்லையோ! அவன் வேதத்தின் ஆக்ஞாரூபமானவிதியில் விசுவாசஞ்செய்து அடத்திலுல் நிரந்தரம் நான் பிரமமாகின்றேனென்னும் விருத்தியின் ஸ்திதிரூபமான அகங்கிரகத் தியானஞ் செய்யவேண்டுவது; அங்ஙனஞ்செய்யில் அவனுக்கு ஞான்முண் டாகி மோட்சமுளதாம். ''ஒன்றையொன்றுவிவன் பாவிக்குஞ்''—எ-து. சா லிக்கிராமத்தில் விஷ்ணுத்தியானம்போலப் பிரதீகமல்ல:—வைகுண்டவாசியா கிய விஷ்ணுத்தியானம்போலத் தியேயாதுசர்ரமாம்; ஆயினும், அபரோட்ச மாகுமளவும் மனோமயமாகவிருத்தலின் அங்ஙனங்கூறினர்; இவ்வாறுமானசக் கிரியாரூபமான தியானத்திற்கும், ஞானத்திற்கும் தாரதம்மியமிருத்தலின், இவ் விரண்டும் ஒன்றல்ல. விரோதியல்லாமையின், கர்மம் அஞ்ஞானத்தைக் கெடுக் கமாட்டாது; விரோதியாகலின், ஞானமே அஞ்ஞானத்தைக்கெடுக்கும்என்பது.

அ - கை.

[தியானமசத்தியமென்ற லதுகாரணமாவெழுமுத்தியு மசத்தியமன்றே வென்றவினுவிற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

84. சருவமுத்தியைத்தருகின்றதியானமுஞ்சத்தியமன்றென்றால், சருவமுத்தியுஞ்சத்தியமன்றுசங்கியாதேநீகே, ஞருவங்கேட்ட வன்றியானிக்கும்பொழுதிலவ்வுருவம்வாஸ்தமன்றே, யுருவமாகுமப் பொழுதுகண்ணுற்கண்டவுருவம்வாஸ்தவமாமே.

(இ-ள்.) சருவமுத்தியைத்தருகின்ற தியானமுஞ் சத்தியமன்றென்றால், எ-து. சர்வமுந்தானுகவிளங்குமுத்தியை நேரேதருகின்றதியானமோகமு மித் தையாமெனத்தேவீர்கூறினுல்:—சருவமுத்தியுஞ் சத்தியமன்றுசங்கியா தேநீகேள்,—எ-து. சர்வமுந்தானுவிளங்குமுத்தியுந் தியானங்காரணமாகவந்த படியா லதுவுமித்தையாகின்றதேயெனச் சங்கியாமலேயான் சொல்வதைநீ கேளுநி:— உருவங்கேட்டவன் தியானிக்கும்பொழுதி லவ்வுருவம்வாஸ்தவ மன்றே,—எ-து. பிரமஸ்வரூபமிங்ஙனமிருக்கின்றதெனக் கேள்வியுற்றவனத னேச்சிந்திக்கும்பொழுதி லதுவிளங்காமையா லப்போதந்தப் பிரமஸ்வரூபமவ னுக்கு வாஸ்தவமல்லவே, ஆயின்:—உருவமாகுமப்பொழுதுகண்ணுற்கண்ட வுருவம் வாஸ்தவமாமே,—எ-து தானேயந்தப்பிரமஸ்வரூபமாகும்பொழுது பிரத்தியட்சமாக ஞானக்கண்ணுற்கண்ட அவ்வடிவமப்போதுண்மையாகாதா உண்மையாகுமே, எ-று

அதற்கு உத்தரமிருப்பதாற்சங்கியாதே நீகேளெனவும், கேள்விப்பட்டுத் தியானிக்கில், அதுசாதனமன்றே, சாத்தியப்பட்டவிடத்தன்றே வதுதானுக விளங்கும். அப்போது விளங்காததனுற் பொய்யானதும், வினங்கினதால் மெய் யானதுமவனுக்கன்றி வஸ்துவுக்கன்றே. ஆதலின், தியானிக்கும்பொழிதிலவ்வு ருவம்வாஸ்தவமன்றேயெனவும், கண்ணுற்கண்டவுருவம் வாஸ்தவமாமேயெ னவுங்கூறினர். காரணம், தியானம். காரியம், முத்தி. காரணம் பொய்யா கும்போது காரியமெய்யாகுமாவென்பதுசங்கை. இதனைத் தானேயாசங்கித்

தார். தியானமேமுத்தியென்பதை மறுத்தற்குத் தியானமித்தையென்றதென்கீ. தியானமேமுத்தியாயின்மேலேஞானமெற்றிற்கு? தியானத்தாற்பரோட்சமும், ஞானத்தாலபரோட்சமுமெனப்பெற்றாம். பெறவே, தான்சுயம்பிரகாசமாகவி ளங்கல் வாஸ்தவம், அன்றுகவிளங்கல் வாஸ்தவமன்மை யெனலெக்கண்டாம்

(க-து.) பிரத்தியட்சஞர்னமே யஞ்ஞானநாசமாமென்பது. பிரத்தியட்ச ஞானமாயின் திரிபுடியாமேயெனின், சமஸ்தமுஞ் சொப்பிரகாசமாகவிளங்கில யலெனலேது? இல்லையே. ஆதலின். திரிபுடிநாசமெனக்கொள்க. எங்ஙனமெ னின், ஞாதுரு, ஞானம் ஞேயமென்பவற்றுள், இடையி லுள்ளஞானத்தை விளக்காவிடில், திரிபுடியுண்டு. விளக்கில், எங்கே? ஆதலின், அஞ்ஞானவிமோ சனத்துக்குக் கண்ணுற்கண்டவுருவம் வாஸ்தவமெனப்பட்டது. விரிக்கிற் பெ ருகும். (அசு)

தாஷ்டாந்தம் எஞ்சின்றதால் வருவித்தாம். சர்ப்பத்தின்றேம்சரூபம் எப் படி ரச்சுரூபமோ! அப்படிச் சர்வவனர்த்தத்தின்றேம் சரூபம் பிரமமாவ தால், "சர்வழத்தி" என்றார். சர்வவனர்த்தத்தின் அபாவரூபம் பிரமமென்ப தை ழதற்படலத்தில், நூசும் சொரியுளின் விஷேவுரையிற் காட்டினாம்.

"உருவ மாதமப் பொழதுகண் ணுற்கண்ட வுருவம் வாஸ்தவ மாம்" எ-று, உ-ம் வாசிட்டம்,

பிரம னுமே சிருட்டியெலாம் பிறப்ப தெம்பா லென்றுள்ளே, திரம தான மனத்தாலே சித்தித் துடலிற் சித்தையற, மரம தென்ன விருத் தலுமே வருஷட் பலபோய் மனோபாவ, மூம தாகி யயனை சொ ருப துலக முளதான."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற்காண்க.

அ - கை க.

[தியானிப்பானுக்குத் தியானமித்தையாயினும் அவன் தியானித்த வண்ணம் பெத்தமேனு முத்தியேனு மெய்துமெனலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

85. சடமதாகிய தியானமெய் யாகிய சர்வமுத் தியைநல் குந், திடம தானதெப்படியெனி லவரவர் தியானமே பிறப்பாகு, முடல மாசையாற் றியானிக்கிற்றியானித்தவுடல்களாகுவர் மைந்தாதொட ர்ப வங்கெடச் சொருபமே தியானிக்கிற் சொருபமா குவர்மெய்யே.

(இ-ள்.) சடமதாகியதியானமெய்யாகிய சர்வமுத்தியைநல்குந்திடமதான தெப்படியெனில்,—எ - து. சடமாகின்றுள்ளதியானமானது, சர்வமுந்தானுக விளங்குமெய்யாகிய முத்தியைத்தருமென்றதிடத்தை யுறுதியாகக்கொள்வதெ ங்ஙனமெனக் கேட்பையாயின்:—அவரவர்தியானமேபிறப்பாகு முடலமாசை யாற்றியானிக்கிற்றியானித்தவுடல் களாகுவர்மைந்தா,—எ-து. ஞானபுத்திரா! எவரெங்ஙன மெங்ஙனந்தியானிக்கிறார்களோ அவரவர் தியானத்தின்வண்ண மங்ஙனமங்ஙனமாயபிறப்பெய்தும். எங்ஙனமெனில், தேகவாசைகொண்டுசிந்

நிக்கில் சிந்தித்தவண்ண மததற்குரியவுடல்களெடுப்பார்கள்:—தொடர்பவங்கெ டச்சொருபமேதியானிக்கிற் சொருபமாகுவர் மெய்யே,—எ-து. விடாதுதொ டர்ந்துவருகின்ற பிறவிகெடவேண்டிப் பிரமசொரூபத்தியானஞ்செய்யிற்பிரம சொரூபமாகவிளங்குவ ரிதுசத்தியமே யிதனேச்சிந்தித்தறிதி,—எ-று.

சடமாகியதியானமென்றது ; தியானந் தன்னையு மற்றுரன்றையுமறி யாதெனவும், மெய்யாகியசர்வமுத்தியென்றது ; தானன்னியமாகாது தானே தானுகவிளங்கலெனவும், பொருள்படுமாறுகாண்க. உயிரெனல், உணர்வு. என்னை, ''உணர்வியலாமுயிரொன்றுமொழித்த, வுடன்முதலனேத்து முயி ரல்பொருளே'' என்றுர்பவனந்தி. ,இதில், உணர்வியலாமுயிரென்பது அறி வுமயமாகியவுயிரெனக்கொள்க. இதுபற்றி யோரறிவுயிர், ' புன்மரமுதல வுற்றறியுமோரறி வுயிரெனவும் '', ஈரறிவுயிர், '' முரணந்தாதிநாவறிவோ டூரறிவுயிரெனவும்'', மூவறிவுயிர், சிதலெறும்பாதிமூக்கறிவின்மூவறிவுயி ரெனவும்'', நாலறிவுயிர், ''தும்பிவண்டாதிகண்ணறிவி னலறிவுயிரெனவும் '' ஐயறிவுயிர், ''வானவர்மக்கணரகர்விலங்குபுள், ளாதிசெவியறிவோடையறிவு யிரே:'', எனவுங் கூறியவாறுகாண்க. இங்ஙனமாயது; ''மெய்நாமூக்குநாட் டஞ்செவிகளி, ஞன்றுமுதலாக்கிழ்க் கொண்டுமேலுணர்தலின், ஓரறிவாதி யாவுயிராந்தாகு'' மென்பதனுலென்க. சத்வபரிசாதிகளே யுணர்தலேப்பற்றி யுயிரைவகையெனவும், தோற்றபேதத்தாலுயிரொழுவகையெனவும்' உபாதி பேதத்தாலும், குணபேதத்தாலும்' சத்தபேதத்தாலும், உணர்வுபேதத்தாலு மொவ்வொருதோற்றவுயிர் பற்பல பேதமெனவுங் கொண்டதேயன்றி, வேறு காரணம் பற்றியன்றே. எந்தவுயிருக் கெந்தபிறவிசுதந்தரம்? இன்றே. உபா திதோற்றத்தானும். வினைக்கீடாகப் பிறவிமாறுவதானும். மேல் கீழதாகவும், கீழ் மேலதாகவும், உயிராகின்றனவன்றே? உயிரிங்ஙனமாதற்குக்காரணம்; கடவுளிஷ்டமெனில், பாரபட்சதோடமெய்தும். சுபாவமெனின், அந்தந்த வுயிரந்தந்ததோற்றமாகவே மாறிதொருபடித்தா யிருக்கவேண்டும், அங்ஙன மின்றுதலால் தோடமெய்தும். நிலேயாதுமாறுதலே சுபாவமெனின் மூடிவி ன்றும். மூடிவின்றுகவே, ஒவ்வொருயிரும்பிறவியால் மாறிமாறிநிலேயாதலே யுமன்றே? ஏற்றனம். ஒவ்வோருயிர்க்கும் பிறவியளவின்றென நின்மொழி காட்டுகின்றனவன்றே? மாறிமாறிப்பிறவியெய்தற் குயிரொப்போதுமிருக்கவே ண்டுமன்றே? இங்ஙனமிருக்க, உயிர்முன்பின்னில்லாததெனக் கூறலாமா, கூ றுகின்றனரே, இதுபோலவே யவரதுவாதமுமிருக்குமெனவறிக. மீண்டுஞ் சுபாவமெனில், முற்று நிலேயாவாததோடமெய்தும். வினேயெனின், ஏதுகா றும். விருப்புவெறுப்புள்ளளவும் இதுவெதுகாறும், பொருளல்லவற்றைப் பொருளாகக் கருதுமறியாமையுள்ளளவும், இதுவெதுகாறும். தானேதானுக விளங்குமளவும், அப்பாலென்செய்தும். விஞவொழிக. மீறிவினுவலெல்லாஞ் சொல்வாதமாயமையும். உயிர்களிந்நிலேகள் பேதமறியாததால், இவற்றுளொன் றையவாவி வினேபுரியுமன்றே? வினேபுரிதல், சங்கற்பித்தலே. அதாவது:—சிந் தித்தல், சங்கற்பம், சிந்தித்தல், தியானம், இவையனேத்து மொருபொருட் கிளவி. வினேபுரிந்தாலன்றே வதன்பயன் தமக்கெய்தும். எய்தினுலன்றே

அனுபவித்துத்தீர்த்தல். அனுபவித்தற்குத் தூணைக்கருவிபிறவிவேண்டுமன்றே. இதுதியானங்காரணமாக வெய்தற்பாலதாதலின், பந்தத்துக்கேனுமுத்திக்கேனு மவரவர் தியானமேபிறப்பாகுமென்றார். தானே சமஸ்தபோகமுமாகப் பரிண மித்திருத்தலேத் தானென்றறியாது தனக்கயலெனக்கருதலளவு மதனைச்சுகிக்க வுயிர்கள்தாவுமன்றே? அங்ஙனந்தாவுதலேதியானம். அந்தத்தியானபேதமள வின்மையின், உடலமாசையால்தியானிக்கில் தியானித்த வுடல்களாகுவரென் பதூஉம், சமஸ்தபோகமுந் தனதுபரிணமிப்பேயெனத்தெளிந்தார் மீண்டுமய லெனநாடுவரோ. தன்னைத்தானடையத் தியானிப்பரன்றே, ஆதலின், தொ டர்பவங்கெடச் சொரூபமேதியானிக்கிற் சொரூபமாகுவரென்பதூஉம் பொ ருந்தும்.

(க-து.) இருவகையுளைதைத் தக்கவாறுதியானிக்கின்றனரோ, வதுவந் தேதிருமென்பது. இதனை மறுக்காததற் கேதுகூறியதைக்காண்க. பொரு ளேப்பொருளாகக் காணுள்ளவும், அவாநாசத்துக் கிடமின்று. இடமின்றுளள வும் போகதாகாசியாது. நசியாவளவும், அதனையனுபவிக்கயாதானும் வினை புரியவரும். வருமளவும் பிறவியகலாது. அகலாதபற்றி யிங்ஙனங்கூறினு ரென்க. இப்போதே பற்பலபிறவிபேதமுந் தேகபேதமும் கோறிக்கைபேத மும், அடங்காவவாபேதமும். சங்கற்பபேதமும், முயற்சிபேதமுமா யுயிர்க ளிருக்க, இன்னும் பிரத்தியட்சம் யாதுக்கு. (அடி)

தியானமேற்பிறப்பாகும் என்றும் பாடமுளது. இது சுருதிஸ்மிருதி களின் சித்தாந்தமா மென்பார், "மெய்யே" என்றார்.

"அவரவர் தியானமே பிறப்பாதும்" எ-கு, உ-ம் பகவற்கீதை,

"இந்த வுடலம் விடும்பொழுது யாவ னியாதொன் றினைகி னைந்தா, னந்த வளவே யந்தப்பா வனையா லதனை யடையுமா, லென்ற னியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டென்பா லாஞ், சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனலெனையே சேரு தியால்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற்காண்க.

அ - கை.

[தான் பிரமமாதற்குத் தியானமேபோதுமெனின் விசாரமும் ஞானமுமெற் றிற்கென்ற வினவுக்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

86. பிரமரூபத்தைத் தியானித்தபேர்களும் பிரமமாகுவரென்ற னரசரீரமாங் சூரவனே விசாரமேன் ஞானமே னேன்னுதே பரமபாவனபரோக்ஷமாம் பின்பந்தப்பரோக்ஷமே யபரோட்சந் திரவிசாரமா ஞானமேமுத்தியாந் தீர்வையீ தறிவாயே.

(இ-ள்) பிரமரூபத்தைத் தியானித்தபேர்களும் பிரமாகுவரென்றால் நர சரீரமாங்சூரவனே விசாரமேன் ஞானமேனென்னுதே, எ-து. மானிடவடிவா

யெழுந்தருளிய குருநாதனே! பிரமஸ்வரூபத்தைத் தியானித்தவர்களும் பிரமமா கவே விளங்குவரெனத் தேவரீர்கூறினால், மேலேவிசாரமும், ஞானமுமெற்றி, கோவெனச் சங்கியாதுநிற்றி, யான்கூறுவனதனைக்கேளுநி:—பரமபாவனை பரோட்சஞானமாம், பின்னரந்தப் பரோட்சஞானமேயபரோட்சஞானமாம்:- நிரவிசாரஞானமே முத்தியாந் தீர்வையீதறிவாயே, எ-து. நிடமாக விசாரிக் கும் விசாரத்தாலான வந்தவபரோட்சஞானமே நிரதிசயானந்தமாம், இதுவே தீர்ப்பென வறிதி, எ-று.

அறிவினது பிரதிபலனமாதலி னனைத்து மீண்டு மறிவாம் இதுசருதியுத் தியனுபவத்துணிபாதலானும் சோதனைஞாயம் பொருத்த முகத்தாலாய்ந்த தெளிவாதலானும், அறிவேபிரமமெனப்பெற்றும். பெறவே, நினைபாலிட மாயுமன்றியுமிருத்தலி னெல்லாமா யல்லவுமாயிருந்த திஃதெனச்சுட்டாது கூறினர்சான்றோர். ஆயினும் அஃதறிவேயெனக்கண்டாம் கண்டதாலிது மறுத்தற்பாலதன்று, மறுப்பார், கெடுவர். என்னை, "பூதாதியைந்து பொ றிபுலன்களெல்லாஞ்சித் தேதாதியந் தமிவையெல்லாஞ்சித் தோதரிய கற் பனையுஞ்சித்தனைசதங் காண்பானுங் காட்சியுஞ்சித் தற்பமும்வேறில்லா மையால்", என்றார் சொரூபானந்தர், "ஞானமேபிரமமென்ற முதன்மொழி யின்பயன்கேள்," இதனை மகாவாக்கியத்திலும், அறிவேபரமென்பதைப்பற்றி மூக்கியமாய், வாசிட்டத்தில், தேவபூசைகதையிலுங் காணலாம். சகல மதத் தரு மெதனைத் தெய்வமெனினுஞ் சொல்லாலன்றிப் பொருளாலன்று, சொல் லாலெனின், அறிபடுபொருளும் நினைவும் பாழுமாம். பொருளாவது, மெய் யுணர்வு. அதாவது; படிப்பானைப்படிப்ப தெந்தவுணர்வோ வந்தவுணர்வு இங்ஙனமா யவுணர்வே தெய்வமன்றி வேறென்பவெல்லாஞ் சோதனையி னிலையுறாது தத்தளித்தழியும். ஆதலினறிவே தெய்வமென்றும். எல்லா வுயிருமறிவாதலின். ஒவ்வொருயிரும், தன்னைத்தானுரெனச் சிந்தித்தல், தியா னம். அஃதறிவென விசாரத்தாற்றேர்ந்தும் விளங்காமை பரோட்சம். அத னைத் தக்க வாசானால் விளக்கிக்கொள்ளுதல், அபரோட்சம். அதோடு நில் லாது நானெனலாதியாக வனைத்தையு மேல்கீழொப்பின்றி யவ்விளக்கமாகப் னன்னளதிக வருத்தங்கொண் டகமுகமாகப் பழகியாக்கல், ஸ்திரவிசாரமானுா பம். அப்போ தன்னியஞ் சிறிதுமின்றித் தானுய்த் தானன்றுய் விளங்கலின், அதுவே துக்கநிவிர்த்தியுந் தடையற்ற வானந்தமுமாம், இங்ஙனமாயவானந்த மேதானுசல். இங்ஙனந்தானுதலேமுத்தி. இதறியாது பலருஞ்சொல்லப்பட்ட முத்திகளிற்நிலைக்கு மாறுயவ்வாதலானும், இதுபோற் பழமையன்றுமையானும், அந்நியமாதலானும், அஃதாகாவென்க. இது தீர்வையென்பார், பரமபாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமே யபரோட்சந் நிரவிசாரமானுனமே முத்தியாந்தீர்வையென்றார். இந்நூலாசிரியர்; பரோட்சமே யபரோட்ச மெனத் தேற்றே காரங்கொடுத்தமையின், பரமபாவனையே பரோட்சம், பரோட்சமே யபரோட்சம், அபரோட்சமே நிரவிசாரமானுனம், நிரவிசார ஞானமே முத்தியெனத் தேற்றேகாரங்கொடுத்தனம். இங்ஙனங்கொடுத்த தொன்றுக்கொன்று தொடர்பாதல் பற்றியென்க. இத்தொடர்புசெல்லும் வழிச் செல்லவறியாதார், ஆங்காங்கு பயனிதுவேயென நிற்பர். நிற்பதால்,

அவ்வவ்வவசரத்தை முத்தியென்பர். இவைமுத்தியாகுமா? ஆகாமைபற்றி யிவற்றைப் பதவிமுத்தியென்றனரறிஞர். இவ்வுளவறிந்தவராதலினிவற்றைத் தீர்வையென்னு தொழிந்தனர்.

(க-து.) பிரமஸ்வரூபத்தைத் தியானிக்குந் தியானமுள்ளவாறெய்தின தோடுநில்லா ததன்வழித்தாச்செல்லி னிவ்வவசரநிலைகளே முறையேதந்து விடு மென்பது. இன்னுந்தொடர்பிருக்கப் பிரமத்தியானம் பிரமமாக்குமெனல், துணிவுபற்றி. (அசு)

மானசக்கிரியாரூபமான நிர்க்குணவுபாசனைக்கு முத்தியின் சாதனத் தன்மை கூறிடின், விருத்தமாமேயென்னுஞ் சங்கைக்கு அவிமுக்தமென்னுஞ் சகுணப் பிரமத்தின் புத்தியுண்டாவதுபோல நிர்க்குணப்பிரம வுபாசனையின் சாமர்த்தியத்தால் மூலாவித்தையை நிவிர்த்திக்கவல்ல புத்தியுண்டாவதால் விரோதமாகாதென்று பஞ்சதசியில் தீயானதீபத்தில் வித்தியாரண்ணிய சுவாமிகள் அருளிச்செய்திருப்பதுபோல இவ்வாசிரியருங கூறின ரென்றறிக

நிர்க்குணவுபாசனையின் முடிவில் விசாரமும், ஞானமுமுளவாகலின், முத்திக்கு அவை இன்றியமையாதனவென்பது கருத்து.

அ - கை.

[அஞ்ஞானத்தைக் கெடுத்தபின்னர் விருத்திஞானமிருக்க எங்ஙன மனுபவங் கைகூடுமென்ற வினாவிற்குச் சாற்ற மிக்கவியில் கூறுகின்றார்.]

87. வீட தாம்பரி பூரண சொரூபத்தில் விருத்தி ஞானமுங்கூடிச், சேட மாகிஞ லகண்டமா மனுபவ சித்தியெப் படியென் றாற், சாடி நீர்மண்ணைப் பிறித்ததேற் றும்பொடி தானுமண் ணெனுமாயு, மூடி ஞானமு மறிவிலா மையைக்கெடுத் தொக்கவே கெடுத்தானே.

(இ-ள்.) வீடதாம்பரி பூரணசொரூபத்தில் விருத்திஞானமுங்கூடிச் சேட மாகிஞ லகண்டமாமனுபவ சித்தியெப்படியென்றால், எ-து. முத்திக்கு முதற் காரணமாகிய பரிபூரணசொரூபத்தி லஞ்ஞானத்தைக் கெடுத்துத் தான்மாத்திர மிஞ்சி நின்றுள்ள விருத்திஞனமானாது, தானுமப்பிரமத்தோடுகூடி விசேடமா யிருக்குமாலல் துவிதமாகின்றதே, துவிதமாலுல், எங்ஙன மகண்டாகார வனு பவசித்திவாய்க்கும். வாய்க்காதே. இதற்கென் செய்துமெனக் கேட்பையா யின்:—சாடிநீர் மண்ணைப்பிறித்த தேற்றும்பொடி தானுமண்ணெனுமாயும். எ-து. சாடியிலுள்ள கலங்கனீரை, நீர் வேறழுக்கு வேறாகப்பிரித்த தேற்றாங் கொட்டைப் பொடியானது அவ்வழுக்கோடு தானுமொக்கமடியும்:—ஊடி ஞானமு மறிவிலாமையைக் கெடுத்தொக்கவே கெடுத்தானே, எ-து. (அது போல) விருத்திஞானமு மஞ்ஞானத்தோடெதிர்த் ததனைநாசஞ்செய்து, அத னோடு தானுமொக்கவே மடியும், எ-று.

பரிபூரண சொரூபமாதலே முத்தியாதலால் இதனை முன்பின்னுக்கியது, காரியத்தைக்காரணமாகவுபசரித்தற்கென்க. வீடு, முத்தி. பரிபூரணசொரூபம்.

பிரமம். முத்திக்குப் பிரமம் பேதமெனக்கொண்டு நிமித்தகாரணகாரியமென்ப ரந்நிலையறியார்போலும், எந்த வறிவினுல் தத்துவங்களே யெல்லாம் விசாரித்துத் தானல்ல தானல்லவெனச் செல்லுகின்றதோ, அந்தவறிவைவிடநியதிகளே யப்பெற்ற தத்துவக்குழாங்கள் வேறுகுமானுல் பிரமமும் வேறுயிருக்கலாம். அங்ஙனமின்றே யிங்ஙனமிருக்க. சுசாதிகவிசாதிக சுகதபேதமயமாதல் தத்துவக்குழாங்கள் அல்லுதல், பிரமம். அந்தமயமாகின்றதும். இந்தமயமாகின்றதும், அறிவாதலால், அறிவே பிரமமுதலியவனைத்து மெனவும், ஒன்றிலொன்றில்லாமை யறிவிலாதலால், அறிவே பிரமமுதலிய வனைத்துமெனவும், ஒன்றிலொன்றில்லாமை யறிவிலாதலால், அறிவேயுண்மையெனவும் கண்டாம், இங்ஙனமாயநிலை யிவனின்னுமாகாமையா லிங்ஙனம் விஞ்வினனெனப்பெற்றும் பொருளல்லவற்றைப்பொருளென்றுணர்ந்ததும், பொருளைப்பொருளென்றுணர்ந்ததுந்தானுதலாலறிவேயஞ்ஞானமும் ஞானமுமென்றுயிற்று ஆகவே, தன்னுல் விளைந்தவஞ்ஞானந் தன்னுல் விளைந்தஞானத்தாலழியும்போது தன்னைவிட ஞானம் வேறன்றுதலா லஞ்ஞானத்தை யழித்துத் தானுமதனுடொக்கமாயுமெனவுபமானபூர்வமாக விடைதந்ததெனத் தெரிந்தாம்.

(க-து.) ஞானமுஞ் சேடமாகாதழியுமென்பது. சேடம், மிச்சம். இந்த மிச்சம். பரிபூரணமென்றுந் தடை. (அஎ)

"தானே" எ-து, தத்துவஞான நிவிர்த்திக்குக் கதகரேணுவுக்குப் போலச் சாதனாந்தரத்தினபேட்சையின் றென்பதை விளக்கிநின்றது.

மஹாவாக்கியவிசாரத்தால் ஜநியாநிற்கும் அந்தக்கரணத்தின் பிரமாரூபமாகிய விருத்திஞானம் காரியத்தோடுகூட அஞ்ஞானத்தை நிவிர்த்தித்துத் தானும் நசித்துப்போய் அகண்டைகரசப் பிரமமாய்க்கூடும் மென்பது கருத்து,

அ - கை.

[இங்ஙனமிருக்கச் சீவன்முத்தரானுபவமெங்ஙனமோவென
வினவலுக்குவிடையிக்கவியிற்கூறுகின்றார்.]

88. இந்த நிச்சய முத்தரு ளனுபவ மிருப்பதெப்படி யென்றுற்
சிந்தை யற்றபூ மண்டல விராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர்
பந்த முத்திகண் மறந்துபோ முண்டென்று பலர்சொலி னகையா வ
ரந்த ரத்தையுண் டெழுந்ததோர் கொதுகெனு மவர்களே நகையாரோ.

(இ-ள்.) இந்த நிச்சயமுத்தருளனுபவமிருப்பதெப்படியென்றால், எ-து இங்ஙனமாயதீர்ந்த நிலை சீவன்முத்தருக்குளனுபவமாக விருப்பதெங்ஙனமோ வெனக்கேட்பையாயின்: — சிந்தையற்ற பூமண்டலவிராசனுஞ் சிசுவும்போற்சுகமாவர், எ-து. பயசிந்தையற்ற திரிலோகமண்டலாதிபதியாகிய சக்ரவர்த்தியும், இது நன்குதீதென்றறியாத சிசுவும்போலச் சுகரூபமாவர்:—பந்த முத்திகள் மறந்துபோமுண்டென்று பலர் சொலினகையாவர், எ-து. பந்தமுமுத்தியுமறந்துபோகும், பலருமுண்டென்று சொல்லுவாயின் சிரிப்பர்:— அந்தரத்தையுண்டுழ்ந்ததோர் கொதுகெனு மவர்களே நகையாரோ,—எ-து.

ஒரு கொசுகானதாயத்தை யெடுத்து வாயில்போட்டுத் துப்பிவிட்டதென்று சொன்னலவர்களேப்போர்த் தார் தான் சிரிக்கமாட்டார்கள், எ-து.

சிந்தையற்ற பூமண்டலவிராசனுஞ் சிசுவும்போலெனவுவமைகூறியது; அரசனுக்கெதிரின்மைபோல் மகான்களுக்குச் சுசாதிவிசாதிசுகதபேதங்களின் மையிலுலும், சிசுவுக்குப்பகுப்பின்மைபோல் மகான்களுக்குத் தம்மைத்தவி ரச்சிற்றறிவுபேரறிவென்பதூஉம், சிற்றின்பம் பேரின்பமென்பதூஉம், ஆகிய பகுப்புச்சிறிது மின்மையிலுலும், பந்தமுத்திகள் மறந்துபோமென்றது; அஞ் ஞானத்தாற் பந்தமும், ஞானத்தால் முத்தியு மெய்தல்மரபு. இங்ஙனமிருக்க, இவர்களுக்கு ஞானபேதமேது, தம்மைத் தவிர விவ்விரண்டுபேதமுமின்மைபற் றிமறதிக்கே வருதலானும், உண்டென்றுபலர் சொலினகையாவரென்றது; சொல்லுவார் மடமைபற்றியாதலானுமென்க. இங்கே அந்தரமென்பது, ஞானு காயத்தை. கொசுகென்றது, தானலதைத்தானென்போனை. ஆகாயமாகிய வியுத்துவத்தில் கொசுகெனலோர் பரமாணுவினும் பரமாணுவெனத்தகுமா? இஃதாகாயத்தைவிழுங்கி யுமிழ்ந்ததென்றுரல்என்ன வியப்போ, அதுபோல, சொல்லாலன்றிப் பொருளாற் பார்த்தாயினுங் கேட்டாயினு மறியார்.இவர்க ளந்தப்பரமாகாயத்தையன்றி யிவர்களுளரோ, இலரே. இவர்களதை விழுங்கி யுமிழ்ந்தாரெனல் வியப்பன்றே, என்றுரென்க. ஞானுகாயத்தையெடுத்து விழுங்கல், முத்தி, உமிழ்தல் பந்தம். இதனை யார்தானேற்பர், பாமரருமே லாரெனலெக்குறிக்கின்றது. இவர்களவமதிப்புக்கிடம்பெறுரோ பெறுவார்க ளென்னுமெதிர்மறைப்பொருடர நின்றதோகாரமெனக் கொள்க. நகையாரே யெனப்பாடமோதின், ஏகாரம், எதிர்மறை.

(க-து.) மகான்கள் பந்தமுத்தி மறந்தனரென்பது. சிதாகாயத்தையன் றித் தினைபாலிடமில்லாமையி னேற்றற்பாலதேயென்றறிக. இருந்தால்ன் றேமறவாதிருத்தற்கு. இது தன்னைத்தான் சோதித் தழித்தெரியும். (அ அ)

சர்வபோகங்களாலுந் திருப்தரான சார்வபூமனனவன் மதுடாநந்தத்தினவ தியையடைந்து வேண்டற்பாலனவான விஷயங்களின்மையின் இராகாதிரகித னாய், ஆநந்தமூர்த்தியாயிருப்பதுபோலும், அதிபாலன் ஸ்தனபானஞ்செய்து மிருதுவானசையையிற்கிடந்து சிரித்துக்கொண்டு யானெனதென்பனமுதலிய ஞானமின்மையின், இராகாதிரகிதனாய்ச் சுகமூர்த்தியாகவே யிருப்பதுபோ லும், பிரத்தியகபின்னபிரமசாட்சாத்காரமுடையோரும். கிருதகிருத்தியரூப ரான வித்தியாநந்தத்தின்பரம † காஷ்டையான சீவன்முத்தித்தன்மையை யடைந்து பரமாநந்தசொரூபராகவே யிருப்பரென்பார், "சிந்தையற்றபூ மண் டல விராசனுஞ் சிசுவுபோற் சுகமாவர்"—எ-ம், நித்தியமுத்த ஆன்மசொ ரூபந்தாமான சீவன்முத்தர் அந்தக்காரணத்தில் முன்பெத்தராயிருந்து பின்முத்த ராஞ்மென்னும் விகற்பம் மறந்துமெழாமையின், "பந்தழந்தினீ மறந்து போம்"—எ-ம், பகிரிருவர் ஒரிடத்துப்படுத்து ஒருவன்நித்திரைசெய்ய மற் றொருவன் விழித்திருந்தாலுக:—நித்திரைசெய்யாநிற்கும் ஒருவன் கள்ளர்கள்

† காஷ்டை = அவதி.

வந்து தன்னை வாய்திறக்கவொட்டாமலடித்து வுபத்திரவஞ்செய்து கைகால் களைக்கட்டிவிட்டுத் தன்னிடத்துள்ள நிதியைக்கவர்ந்துகொண்டுபோவதாக அந் நித்திராமோகத்திலுற்கண்டு அந் நித்திரையிற்றானே கட்டினையழித்துவிடவல் லோர் ஈண்டிலரோவென்று வெளிக்குக்கேட்பக் கூப்பிட்டலறும்போது விழித் திருக்குமற்றொருவன் ஈதென்ன! பிராந்தியென்று சிரிப்பதுபோலப் பரமார்த்த திருஷ்டியிலில்லாத பந்தமுத்திகளை உண்டென்றுபலமதஸ்தர்கள் வியவகரிக் கில் அவர்களுடையபிராந்தியின் மகிமையை நாடிச்சிரித்தலின், "உண்டென்று பலரிகொலி னகையாவர்" "அந்தாம்"—எ-து, திக்குக், கால, தேசாதிக ளால் அபரிச்சின்னமான சொரூபத்திற்கும், "கோசுது"—எ-து, மண்ணின்கட் கடசத்தி ஏகதேசம்போல அச் சொரூபத்தின்கண் ஏகதேசமாயுள்ள துச்சரூப மானமாயைக்கும் உபமானம். "பலர்" என்றதால், மதஸ்தர் என்றும். மநுஷி யாகந்தத்தி னவதிலையடைந்துள்ள இராசாவைப்போல வென்பது பாமரதிஷ் டியைப்பற்றிய உபமானமாம்:—தத்துவதிருஷ்டியாலோ வெனின்;—சீவன் முத்தருடைய ஆநந்தத்திற்கு அம்சுபமானமல்ல. "வாக்கானது யாதோன்றின் கட்செல்லாதுமீளுமோ" என்பது முதலியசுருதிகளால் இரணிய கற்பாநந் தாந்தந்திவலையாம், பிரமாநந்தமளவிறந்த மஹார்ணவமாம் எனப்பிரதிபாதிக்கப் படுதலின் என்று பெரியவாசிட்டத்தில் வியாக்கியானஞ் செய்திருக்கிறது; இவ்வாறே, "பினவாநந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக்கடல்பிரமா நந்தம்" என்று இப்படலத்தின் கூறுக-வது செய்யுளிற் கூறியிருப்பதுங் காண்க.

சர்வவனர்த்தங்களும், அவைகட்குமூலமான சகலவிகற்பங்களுமொழிந்து பரிபூர்ண பரமாநந்தபரமசீதளமான பிரமமாத்திரமாய்நிற்பதே அகண்டாநுப வமாமென்பது கருத்து.

"சிந்தை யற்றபூ மண்டல விராசனும்போல"—எ-கு, உ-ம் வாசிட் டம்.

"அன்னுன் சமமா மழிவில்லா வான்மா வாய்நின் றின்பமுறு' மென்னு கினுமொன் றுபேப்பவனு யென்னு கினுமொன் றுண்பவனு' யுன்னு தெங்கா கினுமொருபா லுறங்குவோனு யாங்கவனே, பொன் னுர் பூமி முழுதாளும் பூபா லனைப்போற் பொலிவுறுமால்.'—

அ - னை க.

[செகம்பொய்யெனற்குப் பொய்க்கதையொன்றை யிக்கவியிற்கூறுகின்றார்.]

89. மலடி மைந்தனுந் தாணுவீற் புருடனும் வான்மலர் முடி சூடி, யிலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரசிதத்தை விலேபேசிக், கலகமாயினு ரிடையினிற் கயிற்றராக் கடித்திரு வருமாண்டா, ரலகை யாயினு ரெனும்விவ காரத்தை யறிந்துவன் மயங்கானே.

(இ-ள்.) மலடிமைந்தனுந்தாணுவிற் புருடனும் வான்மலர்முடிசூடி,—எ-து. மலடிபுத்திரனும், தறிபுமானும், இருவருங்கூடிக்கலவரவிந்தத்தைக்குடுமியிற்சூடிக்கொண்டு:—இலகுகந்தர்ப்பநகரிலே சுத்திகையிரசிதத்தைவிலபேசிக்கலகமாகியே,—எ-து. விளங்காநின்றகந்தர்வமென்னுநகரின்கண் கிளிஞ்சல் வெள்ளியை விலமதித்து, இவற்றைச் சுதந்தரமாக்கிக்கொள்ளுங் காரணத்திலெனதெனதென்று வழக்கிட்டுத்தமக்குள்ளே கலகமாய்:—இடையினிற்கயிற்றராக்கடித் திருவருமாண்டார்,—எ-து. இங்ஙனங்கலகமிட்டுக்கொண்டிருக்கையில்,பழுதைபாம்புகடிக்க,அதனாலிருவருமிறந்தார்கள்:—அலகையாயினுரெனும் விவகாரத்தை யறிந்தவன்மயங்கானே,—எ-து. அவ்வாறிறந்தவர்கள் பேய்களாஞர்கள், என்னுங்கதையினுழுங்கை யறிந்தவனெவனே அவனிவ்வுலகாதியை மெய்யெனமயங்குவனு மயங்கானே,—எ-று.

மலடியும், தாணுவுமெய். மைந்தனும், புருடனும்பொய். இதுபோல, பிரக்ஞைமெய் ஏனையவைபொய். சூடி, பேசி, கலகமாகி, மாண்டு, அலகையாயினுரென்பனவெல்லாஞ் சேட்டைகள். இதபோல; வந்தான், போயினுன். பார்த்தான். கேட்டான். நினைத்தான், மறந்தான். அறிந்தான், அறியான். என்பனவுஞ்சேட்டைகள். அந்தவினைமுதல் மெய்யாயினாந்தச்சேட்டைகள்மெய்யாகலாம். இந்தவினைமுதல்மெய்யாயினாந்தச்சேட்டைகள் மெய்யாகலாம். ஒருபோதுமாகாவாறுபற்றி இங்ஙனமாயவுவமையால் மித்தையெனத் தெரிவித்தனர். உபமேயத்தைமித்தையெனக்காட்ட முழுதுமித்தையானகதையை யிக்கவியுபமானித்ததால். பிறிதுமொழிதலணி உதாரணம். "தெடும்புனலுள்வெல்லுமுதலே யடும்புனலி னீங்கினதனைப்பிற" என்பதனுனும்; "கொக்கொக்கூம்பும்பருவத்து மற்றதன் குத்தொக்கசீர்த்தவிடத்து"என்பதனுனுங்காண்க. முன்பின்பற்றி யிங்கேயுவமேயமுலகாதியென்றும். ஏனையவையென்பது, தேகமுதலிய தத்துவக்குழாத்தை. இவைபிரக்ஞையினதுசாயையெனவறிக. உபாதானவுபாதேயமயமாகாத தத்துவக்குழாங்களெங்கணுமில்லை, இங்ஙனமாயசோதனையகலாதாரிக்கதையைமறவார். அகன்றார்மறப்பர். அசைகுறைதலைப்பற்றி யிரசிதத்தையென்றும். சிலபிரதி, கலகமாய்மூயற்கொம்பினுற்குத்தியே களைத்திருவருமாண்டாரென்றிருக்கின்றது, இதனை யேற்கினுமேற்கலாம்.

(க-து,) சித்தப்பிராந்தி, செசத்பிராந்திதெளிந்தவன் மயங்கானென்பது. கடிக்கவெனற்பாலது கடித்தென்றுயது காலவழுவமைதி. காலதேசவஸ்துபரிச்சேதபுடைபெயர்ச்சி சுற்றுமின்றிஞப்திமாத்திரமாக வொருசன்மைத்தாவிளங்குந்தன்பாலவாந்தரமாகத் தினைத்துணைபுடைபெயர்ச்சிபோற் றோன்றிய ஞப்திஸ்புரிப்பே, மலடிமைந்தன். பரிபூரணகாட்டவிழப்பே, தாணுவிற்புருடன். இழப்பென்றறிபாமையே, வான்மலர். அது தினைபாலிடமாமீக்குறலே, முடிசூடல். இதிலெய்ப்புற்றவிடத்தினைத்துமித்தையாகக்காண்டலே, கந்தர்ப்பநகர். தன்னைத்தா னுரெனவிசாரித்தலே, சுத்திகாரசிதத்தைவிலபேசல். உபாதிசம்பந்தபாவநாசமெய்தலே, கலகமாதல். அங்கெழுந்தவிர்த்திஞானமே, கயிற்றரா. அஃதெரித்தலே, கடித்தல். ஸ்புரிப்பும், நாட்டவிழப்பும் நசித்தலே, இருவருமாளல். பந்தமுத்தி கற்பிதமாகமுடிதலே, அலகையாதலெனக்கொள்க. பந்தமுத்திபகுப்பின்மையைக்காட்ட, அலகையென்றார். (அக)

கூறிய ஆக்யாயிகையில் அறிந்தவன்மயங்காமைபோல விவேகியாகியநீயும அதுச்சமான சகத்தின்கண் மயங்காதிரு என்பது கருத்து.

அ - கை.

[பொய்யேகதையானவாறுபோலப் பொய்யேசகமெனக்குறிப்பித் தமையின், இந்தப்பொய்யெனலையே மாயையென்றனரறிஞர், இந்தப்பொய்யேசகமாதியாக விகாரித்துத்தோற்றலினனேத்துமாயாகாரியமெனப்படும, இதனிற்சித்தம்வையாதபூரணமானசத்தாநிற்றியென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

90. மாயையென்பது பொய்யெனி லதுபெற்றவகை யெலாம் பொய்யாமே, தாயை யன்றிமக் களுக்கொரு பிறவியுஞ் சாதியுமவேறுண்டோ, சேய சொர்க்கமுநரகமு நன்மையுந் தீமையும் பாராமற், றூய சத்துசித் தானந்த பூரண சொரூபமா யிருப்பாயே.

(இ-ள்.) மாயையென்பது பொய்யெனி லதுபெற்றவகையெலாம்பொய்யாமே,—எ - து. மாயையெனப்படுவதுபொய்யாஞல், அது காரணமாகவந்தவனேத்தும் பொய்யாகவேண்டுமே, எங்ஙனமெனில்:—தாயையன்றி மக்களுக்கொரு பிறவியுஞ்சாதியும்வேறுணடோ,—எ-து. மாதாவினதுபிறவியையுஞ் சாதியையுமன்றி யவள்பின்னேகளுக்கு வேறேபிறவியும்வேறேசாதியுமுளவோ. சேயசொர்க்கமுநரகமுநன்மையுந்தீமையும்பாராமல்,—எ-து. நெடுந்தூரத்தனவாகிய சொர்க்காதிபதவிகளும், ரவரவாதிநரகங்களும், நன்கெனப்பட்டவையும், தீங்கெனப்பட்டவையு மிவையெனப்பகுத்துணர்தல் செய்யாது:—தூயசத்துசித்தானந்தபூரண சொரூபமாயிருப்பாயே,—எ-து. பரிசுத்தமாநின்றுள்ளசத்து சித்து ஆனந்த நித்திய பரிபூரணவிலக்கணமுடைய தெதுவோ, அந்தச் சொரூபமே நீ யாதற்குமுயலுதி,—எ-று.

யாமாசாமாயா, என்னுஞ்சுலோகப்பொருளே யுணர்த்தநிற்றலின், மாயையென்பதுபொய்யெனிலெனவும், சகசீவபரஞ்சத்தியம்போற்றோற்றுவவேனுந் தமக்கெனச் சுயம்பொன்றின்றிச் சோதனையில் யாவுமதிவாமுடிவதென்னே ? முடிதலினனேத்துமதிவின் கற்பிதமெனற் கையமென்னே ? கற்பிதமாதலின்மாயாகாரியமெனப்படும். இத்திண்ணநோக்கி, அது பெற்றவகையெலாம் பொய்யாமேயெனவும், அனேத்துமாயாகாரியமெனற் குதாரணமாகத், தாயையன்றி மக்களுக்கொருபிறவியுஞ் சாதியும்வேறுண்டோவெனவும், அறிவைத்தவிரவயலொன்றுளதாகச் சோதனையிற்காணுமையின், சேயசொர்க்கமுநரகமு நன்மையுந்தீமையும்பாராமலெனவும், அநிர்தசடதுக்க வலித்தியகண்டவிலக்கணங்கட் கறிவதிர்மறையாதலின், தூயசத்துசித்தானந்தபூரண சொரூபமெனவும், நாமெதுவாதலோ வென்னு மையந்தவிர்தியென்பார், சொரூபமாயிருப்பாயேயெனவுங்கூறினர். அது பெற்றவகையெலாமென்பது ; அம்மாயை காரணமாகவுதிக்கப்பெற்ற சகமாதி மூன்றுவகையாயுள்ளனவனேத்துமெனப் பொருள் கொள்ளினு மேற்கப்பெறும் தாயையன்றிமக்களுக்கொருபிறவியுஞ் சாதியும் வேறுண்டோவென்ற வுதாரணம் ; மாயையும், மாயாகாரியமுமபேதமெனற்

கன்றே, இங்கேகூறக்கிடந்தது கிரிபதார்த்தமே மறிவக்கயலென்னுமளவும், மாயாகாரியமெனப்படும். அறிவாயின், மாயையெனலெங்கே, அதன்காரியமெனலெங்கே, இன்றதலின், மறுக்கற்பாற்றே.

(க-து.) யாவும்பொய்யாகமுடிதல்பற்றி யனேத்துமாயாகாரியமென்பது. இவற்றைமெய்யெனின் அஃதாரேற்பர். (கூ0)

"வகையெலாம்"—எ-து. மகதத்துவம், அகங்காரதத்துவம், பஞ்சதன்மாத்திராதிரூபங்களானசகத்தனேத்தையும். தாய் யானையாகில் கன்றும் யானையாய், தாய் பசுவாகில்கன்றும்பசுவாய், தாய் புலியாகில் குட்டியும்புலியாய்ப் பிறக்கக்காண்டலின், "தாயையன்றி மக்களுக்கோர பிறவியுஞ் சாதியும் வேறுண்டோ" என்றார்,

"இதுவே நன்றி தன்றென்னு மிதுவே வித்தா மிடரொழுங் குக்கு"—

என்று வாசிட்டத்திற் கூறியிருப்பதால் துக்கநிவிர்த்தியை யிச்சித்திருக்கின்றநீ காஞ்சனவியதிரிக்தமாகக் கடக. மகுடாதி பூஷணங்களில்லாததுபோல அத்தியஸ்தமானசகத்து அதிஷ்டான வியதிரிக்தமாக இன்றென்று நிச்சயித்துச் சகத்தென்னும் வாசனையையொழித்தென்பார், "சேயசோர்க்கழ நகரழ நன்மையுநீ தீமையும் பாராமல்" என்றார்." தூய" என்பது, லட்சியார்த்தத்தைக் காட்டிநின்றது.

பொய்யில் உறக்கமும், மெய்யில் விழிப்புமாகியிருஎன்பதாம்.

அ - கை.

[அனேத்துமாயாகாரியமாவதால் மித்தையாமேயெனின், எவரேற்பர், இது குற்றமாகமுடியாதா, என்ற விஞவை யிக்கவியிற்கூறுகின்றார்.]

91. பங்கயாசனன் முதற்பல தேவரும் பாருள பெரியோருங்
கங்கை யாதியாங் தீர்த்தமும் தேசமுங் காலமு மறைநாலு
மங்க மாறுமந் திரங்களுந் தவங்களு மசத்திய மெனச்சொன்ஞ
லெங்க ணுபக னேயத ஞற்குற்ற மில்லையோ மொழியீசா.

(இ-ள்.) பங்கையாசனன்முதற்பலதேவரும் பாருளபெரியோரும்,—எ-து. தாமரைமலரையிடமாகவுடைய பிரமன்முதலியபற்பலதேவரும் பூமியிலுள்ள சான்றோர்களும்:—கங்கையாதியாந்தீர்த்தமுந்தேசமுங் காலமுமறைநாலும்,—எ-து. கங்கைமுதலியபுண்ணியதீர்த்தங்களும் காஞ்சிமுதலிய புண்ணியஸ்தலங்களும், சிவராத்திரி, ஏகாதசி, நவராத்திரி, நோன்பு,கார்த்திகை, முதலிய புண்ணியகாலங்களும், நான்குவேதங்களும்:— அங்கமாறுமந்திரங்களுந்தவங்களு மசத்தியமெனச்சொன்னுல்,—எ-து. சந்தசு, கற்ப,வியாகரண, முதலிய வாதங்கங்களும், எழுகோடியாகவிரிந்துள்ள மூலமந்திரங்களும், காமியம், நிட்காமியமென்னுந் தவங்களி லொவவொன்றனேச பேதங்களா நிற்றலிற் றவங்

களும், ஆகியவிவையனைத்தும் பொய்யென்றுசொன்னல்:—எங்களுயகனே யதனற் குற்றங்க ளில்லையோமொழியீரே,—எ-து. எமக்குக்குருவாகவெழுந் தருளியநாயகனே ! பொய்யென்றுசொல்வதனற்குற்றங்கள் சம்பவித்தற்கிட மில்லையோ ? இதனைவிளங்கத்தெரிவித்தருளும்,—எ-று.

பங்கயாசனன்முதலென்றதனற் பிரமாவிஷ்ணுமுதலிய பஞ்சகர்த்தாக்க ளுமெனப்பெற்றும். இக்கவியில் வந்திக்கத்தக்கவைகளேயே மித்தை யாகுமென் றெடுத்துக்காட்டலின், எடுத்துக்காட்டணி. பாங்கயாசனன்முதற் பலதேவரு மெனவும், குற்றமில்லையோவெனவும்பாடமுமுண்டு. ஏனையகாலங்களேயும், தேசங்களேயுமருத்தங்கூறின், வழுத்தற்குரியதன்றும், வழுத்தற்குரியதாக்கின், இந்த அருத்தங்களெல்லாந்தாமேயமையும். ஏனையவுமிங்ஙனமே.

(க-து.) அனேத்துஞ்சத்தியமென்பவர் பலர். மித்தையென்பவரரியர். இதுயாவருக்குங் குற்றமாமுடியுமே யிதற்கென்செய்து மெனவினவினனென் பது. அனேத்துமித்தையெனல் தனக்குடன்பாடன்றெனக்காட்டினனென்க. ()

அ - கை.

[அனேத்தும்பொய்யெனல் குற்றமன்றென விக்கவியிற்கூறுகின்றூர்.]

92. சொர்ப்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்வது பிழையா னு, லற்ப மாயையிற் ரோன்றிய சகங்களே யசத்தெனல் பிழைபா மே, சொர்ப்ப னந்தனிற் கண்டதைப் பொய்யென்று சொல்லலா மெனின்மைம் தா, வற்ப மாயையிற் ரோன்றிய சக மெலா மசத்திய மெனலா மே.

(இ-ள்.) சொற்பனந்தனிற்கண்டதைப் பொய்யென்று சொல்வதுபிழை யானுல்,—எ-து. ஒருவன் தன்கனவிற்கண்டதைப்பிறனுக்குச்சொல்ல அவன துபொய்யெனச்சொல்ல, கனவுகண்டவனதற்குடன்படாமல், நீ சொன்னது தப்பெனச்சொல்லலாகுமெனின்;— அற்பமாயையிற்ரோன்றியசகங்களே யசத் தெனல்பிழையாமே,—எ-து. இயல்பாகவேயணுவாயுள்ள மாயைகாரணமாக வுதித்த வுலகங்களே வேதங்களும் மகான்களும் பொய்யெனக்கூறுவதுதப்பா காலாமே: — சொற்பனந்தனிற்கண்டதைப் பொய்யென்று சொல்லலாமெனின், எ-து. தப்பென்றுசொல்வதுதகாது, கனவிற்கண்டதைப்பொய்யென்றே சொல் லலாமென்பையாயின்:—மைந்தாவற்பமாயையிற்ரோன்றிய சகமெலாம்சத்திய மெனலாமே,—எ-து.ஞானபுத்திரா!இன்னதெனக்கணித்தற்கற்பமாயுள்ளமாயை காரணமாகவுதித்த வெல்லாவுலகங்களேயு மையமின்றிப் பொய்யெனக்கூற லாமே,—எ-று.

நிலையன்றி யப்போதப்போது வெவ்வேறுகத்தோற்றுஞ் சொற்பனக் காட்சிபோல்வதா, என்றுமொருபடித்தாநிலையாயுள்ளவுலகம்? எனச்சங்கை வரின், மெய்யே, அந்தக்காட்சிக்கு மிந்தக்காட்சிக்குஞ்சுயம்புயாது? அதுவுமிது வுமலுகற்பிதமன்றிவேறுயாது. கனவினனவும், நனவிற்கனவுமெங்கே? காட் சியுமிங்ஙனமன்றே. இவ்வுலகம், சாக்கிராவஸ்தையுள்ளளவும். அவ்வுலகம்,

சொற்பனவஸ்தையுள்ளளவும். இவ்விரண்டவஸ்தையுமதிவானேயன்றியில்லே. இவ்விருவிதவுலகமும், இவ்விரண்டவஸ்தையன்றியில்லே. இவ்விருவகையவஸ்தையும், இவவிருவகையுலகமுஞ்சுழுத்தியிற்கண்டிலம். இம்மூன்றவஸ்தையுமதிவானேயன்றி யொன்றிலொன்றின்றிச் சகடக்கால்போல்மாறுவதைத் தினந்தோறுங்காண்கின்றனம். இங்ஙனமாய நிலேகளேயுன்னவுந்தெரியாது, பிறர் சொல்லினுஞ்செவிசாய்க்கவுந்தெரியாது, இவ்வளவுதிறமையற்றவர்கள் கேட்குஞ்சங்கைக்குத்தரம்பஞ்சமோ, கூறுதும். "எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருள்மெய்ப்பொருள் காண்பதறிவு" இந்நெறிச்செல்பவரோ? எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருளப்படிகாண்பதறிவு. இந்நெறிச்செல்பவரோ, சங்கைசெயப்புகுந்தோர். அந்நெறிச்செல்பவராயினிங்ஙனங்கேளார். இந்நெறியிற்செல்பவராயின்கேட்பர், எங்ஙனமெனில், அவர்கள்பொருளேப்பொருளாகவறிபவர்கள். இவர்கள்பொருலலவற்றைப்பொருளாகவறிபவர்கள். இவர்களுக்குவிடையென்சொல்லினு மவிசாரிக்குப்புத்திசொல்வதுபோலும். பேதவாதம், அபேதவாதமித்தகையதெனவறியார். கண்டதேகாட்சிகொண்டதேகோலமென்போர். புறமுகநாட்டமன்றி யகமுகநாட்டங்கேட்டு மறியாஞானிகள். இவரிடஞ்சங்கையிவர்போல்பவர் மதிப்பதன்றி யறிஞரெங்ஙனமதிப்பர், இதுநிற்க,

(க - து.) உலகம்; சொப்பனம்போறலிற்குற்றமன்றென்பது. இவ்வுவமைதக்கதென்க. சொப்பனத்திற்சுகித்தாற்போலு மிவ்வுலகிற்சுகித்தல், துக்கமெனக்காணவும்,

சொப்பனத்தில் நித்திராமோகத்தாற்கண்டு யாவராலும் வழிப்பட்டு வழிபாட்டிற்கேற்ற பலன்களேயடையத் தக்கனவான ஈசுராதிகள் சாக்கிரத்தில் விழிக்கில் அசத்தாய்ப்போதலின், அவைகளே அசத்தென்று சொல்லுதல் அபராதமாகாததுபோலச் சுத்தப்பிரமத்தில் ஏகதேசகற்பிதமான மூலாஞ்ஞானமாகிய நித்திரையினுற் கற்பிக்கப்பட்டு வழிபட்டுவந்த ஈசுராதிகள் ஞானமாகிய சாக்கிரத்தில் அசத்தாய்ப்போதலின், அசத்தியமென்றுசொல்லுவது அபராதமாகாதென்பது.

"அற்பமாயை"—எ-கு, உ-ம் பஞ்சதசி.

"பிரமத்தோ ரிடத்தல் லாது பிறங்குரு தன்ன தெங்கும்
வருகுட சத்தி மென்மை மண்ணினி னீக்கழு மாபோ
லொருபத மிணைத்தா மீகி ஞெரிருமுப் பதமற் றுண்டி
சுருதியோ ரிடத்து மாயை துன்னிமென் றுரைத்சொல்லும்"—

அ - ஸை க.

[இன்னுமதனேயேவைப்புறுத்தப் பொய்யிஃதெனவும் மெய்யிஃதெனவு மிக்கவியிற்கூறுகின்றார்.]

93. பொய்யை மெய்யென்ற மூடர்புண்ணியரென்று புராணங்கூறிடுமானுன், மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்

விதித்தசாத் திரமுண்டோ, பொய்ய தேதெனி ஞமரூ பங்களாம் பூதமா கியமா யை, மெய்யதேதெனிற் சச்சிதா னந்தமா வியாபிக்கு மான்மாவே.

(இ-ள்.) பொய்யைமெய்யென்றமூடர் புண்ணியரென்றுபுராணங்கூப்பிடு மாஞல், எ-து. செகசீவபரமெனனும்பொய்யைப் பொய்யென்றறியாது மெய் யென்றநிந்தார் மூடரன்றே, இவர்கள்செய்த அன்னதானமுதலிய மூப்பத்தி ரண்டறங்களாலும், சிவகயிங்கரியமுதலிய தவசிரேஷடத்தாலும், பதினெண் புராணங்களு மிவர்களைப் புண்ணியவான்களென்று விடாது கோஷ்டிக்குமா ஞல்:—மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத்திரமுண் டோ, எ-து. காரணகாரியரகிதமாயதியாதோ, அஃதன்றே மெய்யெனத்தகு வது, அதனைக்சொல்லாலேலாது விசாரத்தெளிவாலேற்பதன்றேஞானம், அங் ஙனமாய ஞானத்தையுடையாரன்றே ஞானிகளெனப்படுவோர். இவர்களன் றே மெய்யை மெய்யென்ற ஞானிகள், இவர்கள் மெய்யை மெய்யென்றதஞ லிவர்கள்மேற் குற்றம் விதித்தற்கிடமுண்டோ, இவர்கள்மேற் குற்றங்கள் விதித்தசாஸ்திரமேனுமுண்டோ, இல்லையே. இதுநிற்க பொய்யாவதினைய தெனவும், இனிக்கூறுதும் அதனைக்கேளுநி:—பொய்யதேதெனி ஞமரூபங்க ளாம் பூதமாகியமாயை, எ-து பொய்யெனப்படுவதியாதெனில், நாமரூபங்க ளாக வெங்கணும் விரிந்துள்ள பஞ்சபூதமெனப்படுவதாகிய மாயையாம்:— மெய்யதே தெனிற்சச்சிதானந்தமா வியாபிக்குமான்மாவே, எ-து. மெய்யெனப் படுவதியாதெனில் சத்துசித்து, ஆனந்தமென்னுமிலக்கணமே வடிவா யெங் கணு நிறைந்துள்ள வான்மாவாம், எ-று. ஏ - ஈற்றசை.

பிரத்தியட்சமாயுள்ள சகங்காரணமாகவன்றே, அப்பிரத்தியட்சமான சீவேசுராளுண்டெனச்கோடல். விகார தைச் சுயம்பெனக்காட்டாதலகைக் காட்டில், ஏனையவிரண்டையுங்காட்டலாம். அங்ஙனமொருவருமின்றே சொல் மாத்திரத்தாலுந் தோற்றன்மாத்திரத்தாலும் இம்மூன்றுளசத்தென்றேற்பதை விட மித்தையென்றேற்பது மனமலையாமைக்கும், சந்சலமணுகாமைக்கும், உள்ளக்களிப் பகலாமைக்கும். தானே தானதற்கும், இடம்பெறுமன்றே ? இங்ஙனமாயபலனுக்கன்றே, சற்குருத்தியமாதிதொழில்புரிவது. இவற்றைப் புரிவதைவிட வுலகைமித்தையென்று மறப்பதுமாத்திரஞ் செய்யினிப்பயன னேத்தையு மிம்மையிற்றானேயனுபவிக்குதுமே. இது வள்ளங்கை நெல்லிக்க னிபோலாமே. இந்நன்கையறியாமைபற்றிப் பொய்யைமெய்யென்ற மூடரெ னவும், சகமாகத்தோற்றுவதும், அன்றகத்தோற்றுவதும், அறிவன்றே. இது வன்றேமெய், இதனையன்றே மெய்யெனக்கோடல், கொண்டபடி கண்டவ ரன்றே மெய்ஞ்ஞானிகள், காணுதாரன்றேபோலிஞானியர் இவரைப்போலி ஞானியரெனக்குறிக்கவன்றே முன்னர்கண்டறிந்தது ஞானமென்றது. இவற் றையெல்லாங்கருதி மெய்யை மெய்யென்ற ஞானியெனவும், இவர்களே மூடர் களெனற்கென்னையேளாது. இன்றுதலின், ஞானிக்குக் குற்றங்கள்விதித்த சாஸ்திரமுண்டோவெனவும் கூறினர். பொய்யாகிய சகசீவபரங்களைப்பொய் யென்றது, குணவாகுபெயர், மெய்யாகிய ஞானத்தை மெய்யென்றதூஉமிங்

ஙனமே, ஞானமன்றியில்லையாதலின், மெய்யதான்மாவென்றுணர்ந்து கொள்க. சச்சிதானந்தமான்மாவெனவே, அநுர்தசடதுக்கம் பிறவெனக்கண்டாம். சச்சிதானந்தமே யநுர்தசடதுக்கமாகத்தோற்றலன்றி யியலன்றெனச் சோதனையாற்காணுதி. எங்ஙனமெனில்; ஒன்றுசொல்லுதும். ஓர்பாறையாகியகருங்கல்; உளதோ, இலதோ? உளதெனில், சுயமபாகவேண்டும். சுயம்பெனில். உளிமுதலியகருவிகளாற் சேதிப்பதற்கியையாதிருக்கவேண்டும். இயையுமெனில், சுயம்பென்னுதிருக்கவேண்டும். இயைந்தபோதன்றே தூளாக்காணும். இப்போது சுயம்பென்னலாகாதாவெனின், அந்தத்தூளகளின் சையோகமே பாறையாகத்தோற்றலன்றி யிப்போதும் வேறுகக்கூறற்கிடமுளதோ, இன்றே, தூளையன்றிப் பாறையெங்கே, நமதுநாட்டந் தூளாகியக்கண், பாறையின்மையும், ஆகாவிடத்துண்மையுமாகக் காண்படென்னை? நாம் சத்தாகக்காணில் சத்தாகவும். அசத்தாகக்காணில் சத்தாகவுந்தோற்றலின். நமது சத்தைக்கொடுத்துப்பார்ப்பதனுற் சத்தாகத்தோற்றுவதேயன்றி வேறென்னையுள. இதுவே தீர்பெனற்கு மெய்யதேதெனில் சச்சிதானந்தமா வியாபிக்குமான்மாவேயென்றார்.

(க-து) பொய்மெய்யிலக்கண மித்தகையதென வுணர்த்தியதென்பது. பொய்யை மெய்யெனுமளவுஞ் சென்மமே. அதாவது; உருவமாகவேனுமருவமாகவேனும் பாவித்தல். வஸ்து இங்ஙனமன்றுதலானும், தன்னையலாததை விட்டுத் தனக்கயலாகக்கருதியெட்டத் தவம்புரியினும், அணித்தாதற்கியைவதன்றுமையானும், தன்னைத்தான் தேடிக்காணுதளவும், தான் தனக்கயலாகமுடியும். பரமுயலாகமுடியுமெனக் கூறவேண்டுமோ? இதனலன்றே, அருள். பரை ஆனந்தம், ஆனந்தாதீதம். இவைதனசனுபூதிவிலாசமெனக்காணுது, சிவானுபூதிவிலாசமெனப்பராக்காயினர். அங்குந்தானின்றே? இன்றெனில், அங்ஙனமனுபவித்தல்தானன்றே அங்குந்தன்னையாயாமல்விட்டுவிட்டார்களே, இவர்களுக்கெங்கேதான் முடிவுண்டு, இல்லையே. பந்தத்திலயல் நாட்டம்போல முத்தியிலுமயலட்டமென்னினிது ஞானமா? தன்னைவிட்டுவிட்டார்களே, மானிடசென்மத்தில்தானே கண்டுபிடிக்கவேண்டுமே. "இப்பிறவிதப்பினுலெப் பிறவிவாய்க்குமோ," இதற்கென்செய்தும் யாமறிகிலம். ஆன்மாவேயுண்மையென்றனரே யிந்நூலாசிரியர், இதையாவது விசாரித்துத்தெளியயாதது; செல்வக்கல்விமதர்ப்பு, பொய்யென்பதுமாயை. இதனைச்சத்தியென்றைவகையாக்கி மெய்யென்றனர் மூடரெனினுமமையும். (கூ.கூ)

சுருதி, யுத்தி, பிரமவித்துக்களநுபவம் இவைகளான் மித்தையென்று நிஷேதித்த பிரமாமுதலியதேவர்கள், பெரியோர்கள், கங்கைமுதலியதீர்த்தங்கள், தேயங்கள். காலங்கள், வேதங்கள் அங்கங்கள், மந்திரங்கள், தவங்கள்முதலியவற்றைச் சத்தியமென்று நிச்சயித்துத்தீர்த்தமாடல், சேவை; அர்ச்சனை, தானம், தவம், மகமுதலியவற்றைச் செய்யாநிற்கும் பரமார்த்தவறிவின்மையையே தர்மவான்களென்று புராணங்கடுதிக்குமாயின் என்பார் "பொய்யை மெய்யென்ற மூடர்புண்ணியனென்று புராணங்கூப்பிடுமானுல்" எ-ம், பரமாத்வைத ஞானியைச்சுருதி. ஸ்மிருதி, இதிகாச, புராணாகமங்கடுதிக்கக்கண்

டேம்ல்லது நிந்திக்கக்கண்டிலேமென்பார், "மெய்யைமெயீயேன்ற ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத்திரமுண்டோ" என்றுங்கூறினர்.

"ஞானிக்குக் குற்றங்கள் விதித்தசாத்திரமுண்டோ" எ-கு, உ-ம் பிரமகீதை.

"ஈசனுஞானி யிருந்துளவிடத்தே யிருப்பது முத்திதானந்தத், தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியிலிருப்பது மன்னி மாசிலாப் பரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கி, லாசிலா வரியு மொப்பலனனு மொப்பல னேவலொப் பாரே."—

எனவரும், மற்றும் வருவனவற்றுற்காண்க.

அ - கை.

[அனேத்துமாயாகாரியமெனக்கூறி மித்தையென் றீர், அம்மாயா
விலக்கணத்தையும், அதனதுபேதாபேதங்களையுந்
தெரிவிக்கவேண்டுமென, அதுவகையாக
விளவிலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

94. மாயையென்பதே துடையாரெப்படி வந்ததுவருவானேன் மாயை யென்பது பிரமத்தின் வேறெனின் வஸ்து வுமிரண்டாமே மாயை யென்பதும் பிரமமு மொன்றெனின் வஸ்துவும் பொய்யா மே, மாயை யென்றமே கங்களுக் கொருசண்ட மாருத குருமூர்த்தி.

(இ - ள்.) மாயையென்பதேதுடையரா ரெப்படிவந்தது வருவானேன், எ-து. மாயையென்பதியாது. அதனேச்சுதந்தரமாகவுடையார்யாவர், அதுவந்த வகையெங்ஙனம், வருதற்கேதென்னை: — மாயையென்பதுபிரமத்தின்வேறெனின் வஸ்துவுமிரண்டாமே,எ-து, மாயையென்பதுபிரமவஸ்துவினின்றும்வேறுயதெனின், அப்போதுவஸ்து' இரண்டெனக்கொள்ளப்படுவதாமே: மாயையென்பதும் பிரமமுமொன்றெனின் வஸ்துவும்பொய்யாமே, எ - து. ஆயின் மாயையென்பதும், பிரமவஸ்துவுமொன்றெனக் கூறலாமேயெனின், மாயையைப்போலப் பிரமவஸ்துவும் பொய்யெனக் கொள்ளப்படுவதாமே:—மாயையென்றமேகங்களுக் கொருசண்டமாருத குருமூர்த்தி, எ - து. மாயையென்றமேகங்களுக்கெல்லா மோர்பிரசண்டமாருதம்போன்று விளங்குபவராகிய குருமூர்த்தியே, எ - று.

(க-து.) இங்ஙனமாயையைப்பற்றி யறுவகையாக வினவினனென்பது. அறிவேபிரமம், அறியாமையேமாயை. அறிவையன்றி யறியாமைவேறுயின், பிரமத்தையன்றி மாயைவேறுகலாம். யாதுகாரணகாரியங்கட்கு மூடன்படாமையினையதென்றுணர்தல், அறிவு. உணராமை, அறியாமை. யாதுண்மையையுணர்கின்றதோ, அதுவேயுணராததால், அறிவேயறியாமையாயிற்று. அறிவையன்றித்தெளிவும், மூடமும் வேறின்மையின். இவ்விருவினைக்கும் வினைமுதல், அறிவாயிற்று. அறிவாகவே, இரண்டெனப்படாது. ஒன்றெனின், அறி

வையன்றி யறியாமையிருக்கவேண்டும். இன்றுசலின் பிரமத்துக்கென்னது, பிரமத்தினென்றார். மாயை யென்பதும் பிரமமுமொன்றெனில் வஸ்துவும் பொய்யாமெயென்றது; இன்மைப்பொருளுக்கே யியைதற்பாலதுமாயையாதலினதனோடு பிரமத்தையுஞ் சேர்த்தேகமெனின், அதற்குரிய வின்மைத்தன்மையிதற்குமெய்துமென்றதென்க. சண்டமாருதம், பெருங்காற்று. மாயையென்ற மேகங்களென்பது, உருவகம். சண்டமாருதகுருமூர்த்தியென்பது, உவமைத்தொகை.

(க-து.) மாயையைப்பற்றி யறுவகையாக விளுவினனென்பது. இதுதொகுத்துச் சுட்டலென்னுமுத்தி. (கூசை)

"மாயை யென்ற மேகங்களுக்த" என்று பன்மைகூறினது மாயையானது ஆவரணம், விட்சேபமென்னும் இருகூறுயிருத்தலினென்க சொரூபத்தை ஆச்சாதனஞ்செய்தலின் மாயையே, "மேகம்" எ-ம், உபாயத்தால் அதனை நிவர்த்திக்குஞ் சாமர்த்தியமிகுந்துடைமையின் குருவை, "சண்டமாருதம்" என்றுங்கூறினன்.

அ - கை க

[மேலறுவகைவிளுவினுள், இக்கவியினுன்குவகைவிளுவுக் குத்தரங்கூறுகின்றார்.]

95. அதனை யின்னதென் றுரைத்திடப் படாமையா லவாச்சிய வடிவாகு, மிதுதனக்குள தடலியா னுலகுமெய் யெனுமவ ருடையோர்கள், கதையிலாதபொய் வந்ததிப் படியென்று கண்டபே ரிலைமைந்தா, விதன மாயையேன் வந்ததென் றுற்புத்தி விசாரமற் றதனுலே.

(இ-ள்.) அதனையின்னதென் றுரைத்திடப்படாமையா லவாச்சியவடிவாகும், எ - து. அம்மாயையித்தகையதென் றியாவரானு மளவைகளாலெட்டிச் சொல்லப்படாததனு லஃதவாச்சியவடிவ மெனப்படுவதாம்:—இது தனக்குள தடலியானுலகுமெய் யெனுமவருடையோர்கள், எ - து. இது தனக்குச் சொந்தம், இவ்வுடலேயான், இவ்வுலகஞ்சத்தியம், என்னுந் திடஞ்ஞானமுடையாரெவரோ, அவர்களே யம்மாயையுடையோர்கள்:— கதையிலாத பொய்வந்ததிப்படியென்று கண்டபேரிலைமைந்தா, எ - து. ஞானபுத்திரா! கதைகட்டிச் சொல்வதற்கு வழியொன்றுமிலாத பொய்யாகியமாயை யின்னவிதமாக வந்ததென்று கண்டவர்களொருவருமில்லையே:—விதனமாயை யேன்வந்ததென்றுற்புத்திவிசாரமற்றதனுலே, எ - து. விதனத்துக்கேயிடமாயுள்ள மாயையானது, ஏன்வந்ததென்றுல், ஞானவிசாரணைசெய்யும் விடாமுயற்சி சிறிதுமில்லாததினுல், எ - று.

அவாச்சியவடிவம், தனக்கெனச்சொரூபமொன் றில்லாமை. இது தனக்குளது, மமகாரம். உடலியான், அகங்காரம். பொய்யை மாயையென்றது, காரணவாகுபெயர். தாய்தந்தைவந்தவரிசைவகை யாதிதொடங்கிச் சொல்லுதற்

கெட்டாமையால், கதையிலாதபொய்யெனவும், உலகைமெயயென நம்பினே ருயிர்விடுங்கால், உலகைவிடுதற்கிட்டஞ் சற்றுமின்றி வதைவராதலால், விதன மாயையெனவுங்கூறினர். புத்திவிசாரமறுதல், தன்னேத்தானுள்ளவாறராய் தலின்மை. மாயையைக் கதைகட்டிச்சொல்பவரும், அதனை மெய்யெனக் கேட்பவரும், அவிவேகியர். எங்ஙனமெனில், தன்னேத்தானுள்ளவா றெட்டவ கையறியாராதலினென்க.

(க-து) நால்வகைவினுவுக்கும் நால்வகைவிடைநேரே கூறினுரென்பது இதனகத்துள்ளவுடலினு லுலகுமெய்யெனப்பாடமுமுண்டு. அறுவகைவினுவி ருக்க, ஐவகைவினுவெனவும், அறுவகைவிடையிருக்க, ஐவகைவிடையெனவுங் கொண்டுரைகூறுவதென்சிறப்போயாமறிகிலம். இதுநிற்க. இவ்வினுவிடைகள், நிரனிறைப்பொருள்கோள். ஏது, ஆர், எப்படிவந்தது, வருவானேன், இரண் டாமே, பொய்யாமே? இவைவினுவோ. அன்றே? வினுவெனின், ஆறுசதற்குத் தடையென்னை. அவாச்சியவடிவாகும், உடையோர்கள், கண்டபேரிலே, புத்தி விசாரமற்றதனுல் வந்தது. இவை விடையோ, வினுவோ? விடையெனின், நான் காதற்குத் தடையென்னை. வினுவிடையெனலறியார்போலும். (கரு)

அஞ்ஞானம், அவித்தை, மாயை, பிரகிருதி, சத்தியென்பன ஒருபொருட் சொற்கள். மாயை, அவித்தையின் பேதவாதம் ஏகதேசிகள்மதம். நையாயிகர்முத லியோர், ஞானுபாவத்தையே அஞ்ஞானமென்பர்; சித்தாந்தத்தில் ஆவரண, விட் சேபசத்திகளையுடைய அநாதிபாவரூபபதார்த்தம் அஞ்ஞானம். அவ்வஞ்ஞான மும், சேதனத்தோடுபின்னமோ? அபின்னமோ எனின்;—அவ்விரண்டு பட்ச முங்கூடாது. என்னே? "ஈண்டு நாநா அர்த்தமில்லை" என்பது முதலிய சுருதிவசனத்தால் சேதனத்தோடு பின்னமென்பது நிஷேதிக்கப்படுகிறது. சட சேதனங்கட்கு அபேதங் கூடாமையின், அபின்ன மென்பதுங்கூடாது. பின் னத்துவ, அபின்னத்துவங்கள் பரஸ்பரம் விரோதமாகலின், அஞ்ஞானம் சேத னத்தோடு பின்னுபின்னமென்பதுங்கூடாது. அப்படியே அத்வைதப் பிரதிபா தக சுருதிவிரோதத்தால் அஞ்ஞானத்திற்குச் சச்சரூபத்தன்மை கூடாது பிர பஞ்சத்தின் காரணத்தன்மை கூடாமையின், துச்சத்துவரூபஅசச்சரூபத்தன்மை கூடாது. பரஸ்பரம் விரோதிதர்மங்கள் ஒன்றன்கட்சம்பவியாமையின், சதசத் தென்னல் கூடாது. அப்படியே அஞ்ஞானத்தைச் சாவயவமென்று ஒப்பிடில், நியாயமதத்தில் திரவியவாரம் பகஉபாதானத்தை அவயவமென்றனர். சாங் கியாதிமதங்களில் திரவியரூப பரிணுமமுடைய உபாதானத்தை அவயவமென் றனர். உபாதானத்தையே அவயவமென்னில், சத்தத்திற்கு உபாதானவாகாசமும் சத்தத்திற்கவயவமாம்: அப்படியே தமதுகுணம்; கிரியைகட்குஉபாதானகாரண மான கடாதிகளும் உருவமுதலியகுணங்கட்கும் சலனரூபமானகிரியைக்கும் அவ யவமாம்; ஆதலால், திரவுபாதானகாரணத்தை அவயவமென்றனர்: ஆங்கியங்களின் உபாதானத்தை அவயவமென்கிலர், அவயவத்தினின்றும் ஜாங்கியமானதைச் சாவய வமென்பர். அவித்தை திரவியமாயின், சாவயவத்தன்மைகூடும்; திரவியம், திரவி யத்துவம் இரண்டும் அதற்குப் பொருந்தாது. என்னே? சக்தியை அசக்தியுபேதத்

தால் நிரவியம் இருவகைத்தாம்; அவத்தையை நித்தியத்திரவிய ரூபமாகவொப் பிடில், சாவயவத்துவமென்றுசொல்லுதல் அசங்கதமாம் : அப்படியே ஞானத் தால அவித்தை நாசமாகவேண்டுவதில்லை. அநித்தியத்திரவிய ரூபமாகவொப்பி டில், அதனதவயவமும் ஆன்மாவினும் பின்னமாகலின் அநித்தியமேயாம்: அவ யவத்தின் அவயவமும் அநித்தியமாவதால் அநவஸ்தாதோஷம்வரும். அத்தியவய யவத்தைப் பரமாணுவைப்போல நித்தியமாகவொப்பிடில், அத்வைதப் பிரதிபா தக சுருதிவசனத்திற்கு விரோதமாம். நியாயமதத்தில் பரமாணுவையும், சாங் கியமதத்தில் பிரதானத்தையும்நித்தியமாக அங்கீகரித்திருப்பது சுருதி விருத்த மாம்; இவ்வாற்றால், நிரவியத்துவத்தினபாவத்தால் அஞ்ஞானத்தில் சாவயவத் துவங்கூடாது. அப்படியே உபாதானத்தன்மை கூடாமையின், அஞ்ஞானம்நிர வயவமென்றுசொல்லவுங்கூடாது. அப்படியே உபாதானத்தன்மை கூடாமை யின், அஞ்ஞானம் நிரவயவமென்றுசொல்லுதலுங்கூடாது. சாவயவமேஉபா தானகாரணமாம்.நியாயமதத்தில் சத்தத்திற் குபாதானகாரணமான ஆகாசம் நிர வயவமென் றெறப்பினர்; அதுவும்ஆன்மாவினின்றும் ஆகாசமுண்டாயிற்றென் னுஞ் சுருதிக்குவிரோத்தமாம் : அப்படியே துவியணுகத்தின் உபாதான காரண மான பரமாணு நிரவயவமென்றெறப்பினர்; அதுவும் நிரவயவபரமாணுவின்சம் யோகங்கூடாதென்பது முதலிய தோஷத்தால் சூத்திரகாரர் சாரீரகசாஸ்தி ரத்தினீர் துவிதீய அத்தியாயத்திலுள்ள துவிதீயபாதத்திலீ நிஷேதித்திருக்கின் றனர், ஆதலால், பிரபஞ்சத்தின் உபாதானமான அஞ்ஞானத்திற்கு நிரவயவத் தன்மை சம்பவியாது, அஞ்ஞானத்திற்குப் பிரபஞ்சத்தின் உபாதானத்தன்மை மாயையைப் பிரகிருதியென்யறியத்தக்கதென்னுஞ் சுருதியில்பிரசித்தமாயிருக் கிறது. மாயை அஞ்ஞானங்கட்குப்பேதமில்லை. அவ்வாற்றால், அஞ்ஞானத்திற் குச் சாவயவத்தன்மை அல்லது, நிரவயவத்தன்மைகூடாது: அப்படியே பரஸ் பரம் விருத்தமான உபயரூபத் தன்மைங்கூடாது.

இப்படி எவ்விததர்மத்தினுலும், அஞ்ஞானத்தின் நிரூபணம் அசக்கியமா வதால் அதனை அநிர்வசனீயமென்றனர். அநிர்வசனீயமானவஞ்ஞானம் அநாதி பாவரூப பதார்த்தமாமென்று அதற்குப்பாவரூபத்தன்மை சொல்லுவதால் சத்து ரூபத்தன்மை சித்திக்கிறது; சத்துரூபத்தன்மை நிஷேதிக்கப் பட்டிருப்பதால் அங்ஙனங்கூறுதல் கூடாதேயெனின்;-அதற்குசீசமாதானம். அஞ்ஞானம் சத்து விலட்சணமெப்படியோ! அப்படியே அசத்விலட்சணமுமாம். ஆதலால், அபாத் தியரூபசத்துவமோ அஞ்ஞானத்தி லில்லையாயினும், துச்சரூபமான அசத்தி னும் விலட்சணத்தன்மை ரூபமான சத்துவம்அஞ்ஞானத்தில் அங்கீகரிக்கப்பட் டிருக்கிறது; இக்காரணத்தால், சத்து அசத்தினும் விலட்சணமான அநிர்வசனீ யம் அஞ்ஞானமாம். சர்வதாவசனத்தினகோசரம் அநிர்வசனீயமல்ல; பார மார்த்த சத்ரூபப்பிரமத்தின் விலட்சணமும், சர்வதா சத்தாஸ்பூர்த்திரூனிய சசசிருங்காதி அசத்தின்விலட்சணமுமே அநிர்வசனீயசத்தத்தின் பாரிபாஷிக வர்த்தமாம்; ஆதலால், அநாதிபாவ ரூபத்தன்மையதெனல் கூடும்.

உற்பத்தியின்மையின், அநாதியாம். கடம்போல அவயவசமேதரூபமான சாவயமல்ல: அந்தகாரம்போலச் * சாமஸமாம்; ஆகலின் ¶சர்வதாவசனத்திற் கதோசரமென்னுது, "அதனையின்னதென் றுரைத்திடப் படாமையாலவாச்சிய வடிவாதும்" எ-ம், அகந்தை மமதையோடுகூடி அசத்தியமான பிரபஞ்சத்தில் சத்தியத்துவப் பிராந்தியையுடைய சீவரிடத்து நான் அஞ்ஞானியென்னும் அநுபவங்காணப்படுதலின், இது தனக்குள துடலியா னுலகமெயீ யெனுமவ நடையோர்கள்" எ-ம், ஆதியின்மையின் அநாதி: உற்பத்திக்கு ஆதி என்று பெயர்; மாயையின் உற்பத்தி அங்கீகரிக்கில் புத்திரனினின்றும் பிதாவினுற்பத்திகூடாததுபோல மாயாகாரியமான பிரபஞ்சத்தினின்றும் மாயைக்குஉற்பத்திகூடாது. சேதனத்தினின்றே மாயைக்கு உற்பத்தியொப்பவேண்டும்; அங்கே சீவபாவமும், ஈசுரபாவமும்மாயையின் காரியமாகலின், மாயைசித்தியாமற் சீவேசுரருருவம் சித்தியாது; ஆதலால் சிவசேதனம், ஈசுரசேதனங்களினின்றும் மாயையினுற்பத்தி கூறுதல்கூடாது. சுத்தசேதனமோ! அசங்கமாயும், அக்கிரியமாயும், நிர்விகாரமாயும் இருப்பதால் அதினின்றும் மாயையினுற்பத்தியொப்பிடில், விகாரியாம்; அன்றியும், சுத்தசேதனத்தினின்றும்மாயை உற்பத்தியாமேல், மோட்சதசைக்கண் பினனரும் மாயை யுண்டாகாநிற்கும்; அஃதுண்டாகவே, மோட்சநிமித்தமான சாதனங்கள் நிஷ்பலமாம்' இவ்வாற்றான், மாயை உற்பத்திரகிதமாயிருத்தலின்; "கதையி லாதபோய் வந்ததிப்படியென்று கண்ட பேரிலை" எ-ம், பாலனுக்கு அவிவேகத்தால் வெறும்பொய்யானபேய்த் தோற்ற முண்டாவதுபோல அசத்துச் சடதுக்காத்மகமானமாயை அவிவேகத்தாற் றோன்றுவதால், "விதனமாயையென் வந்ததன்றறிப்புத்தி விசாரமற்றதனலே" என்றுங்கூறினர். "விதனம்' என்றதனால், அசத்துச்சடங்கள் வருவித்தாம்.

அ - கை

[வஸ்துவுமிரண்டாமேயென்னு மைந்தாம்விஞவிற்குவிடையிரண்டுகவியினுங்கூறப்புகுந்தார், இக்கவியில், பிரமத்திற்கும், திரிசியங்கட்கும், இடையிலோர்சத்தியுண்டெனக்கூறுகின்றார்.]

96 அருவ மாகுமா யாவிவித் தைகள்விளை யாடிமுன் றெரியா வே, யுருவ மாம்பல கந்தர்ப்ப சேனையா யுதித்தபின் வெளியாகும் ரமசத்திக ளனந்தமா மதைக்கண்டு பிடித்திடல் கூடா தே, பரவு பூதங்கள் கண்டனு மானத்தாற் பலருக்கும் வெளியா மே.

(இ-ள்.) அருவமாகுமாயாவி வித்தைகள் விளையாடிமுன் றெரியாவே எ-து. இந்திரசாலஞ்செய்வோன், தனதுவிஞ்தைங்காட்ட விளையாடிதற்கு முன்னரே. ஒருவர்கண்ணுக்கும் புலப்படா தருவமாகின்றுள்ள தனதுவித்தைகள், எங்ஙனங்காணப்படும், காணப்படாவே:—உருவமாம் பலகந்தர்ப்ப சேனையா

---

* சாம்ஸம்=அம்ஸத்தோடு கூடினது; அம்ஸம்=கூறு. ¶ சர்வதா=சர்வப்பிரகாரம்.

யுதித்தபின் வெளியாகும், எ-து அவை பிரத்தியட்சத்திற் குருவமாக்காண்டற் குரிய பற்பல விசித்திரகந்தர்ப்ப சேனைகளாய்த்தோன்றியபின் யாவருக்குங் காணப்படும் (அதுபோல):=பிரமசத்திகளனந்தமாமதைக்கண்டு பிடித்திடல் கூடாதே, எ-து. பிரமத்திற்குரிய சத்திபேதங்களனந்தவிதமாம், அதனைக் கண்டுபிடித்தல் யாவராலுங்கூடாது. மற்றெங்ஙனமெனின்):—பரவுபூதங்கள்கண்டனுமானத்தாற் பலருக்கும் வெளியாமே, எ-து. எங்குமாவியாபித்துள்ளபஞ்சபூதங்களைக்கண்டு, அதுகாரணமாகவனுமானிக்குமனுமானத்தினால் சகலருக்குமிருப்பதாகவிளங்குதும், எ-று.

கண்டனுமித்தலாலெனப்பாடமுமுண்டு. அருவமாகும் வித்தைகளென முடிந்த. மாயாவி, பிரமம். வித்தைகள், சத்திகள், கந்தர்ப்பசேனை, பூதங்கள். இவையுபமான வுபமேயங்கள். அனுமானம், பலருக்குமென்னு மிவ்விருமொழிகளையு மீரிடத்துமொட்டுக. மாயாவிவித்தைகள் கந்தர்ப்பசேனைகளா லனுமானித்தல்போன்று, பிரமசத்திகள் பரவுபூதங்களா லனுமானிக்கப்படுமெனவுணர்க. பிரமசத்திகளனந்தமென்றது; இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, பராசத்தியெனவைந்தாம். இவற்றுளொவ்வொன்று மெண்ணிறந்த பேதங்களாதல்பற்றியென்க. இவைசோதனையாற்றெரியலாம். அநந்தமென்பது தொகையொருமைபற்றி, அதையென்றார்.

(க-து.) இவ்வுபமானவுபமேயத்தால் சத்திகளிருப்பை யவற்றின்காரியங்களாலறிய லாமென்பது. அதிசூக்குமமான வித்தைகளெல்லாம்; அறிவுபுட்பமேலிடமேலிடக் கண்டுகொண்டேவருவதை யிப்பொது பிரத்தியட்சத்திற்காணலாம். (கசு)

சத்திகள் காரியத்திற்குமுன் ஒருவரானு மறியக்கூடாமையின், காரியரூபமான லிங்கத்தால் அறியலாயினவென்பதாம். "பிரம சத்திகளநந்தமாம்" எ-கு, உம் வாசிட்டம்,

"மூழுதுசத் தியுமாய்ப் புராணமா யென்று மூடிவறு பிரமமாவதுதான், பழுதின் ஞானிகடம் மனமலா தில்லே பரமமா மிதிலிலா தில்லே, யெழுகருஞ் சத்தி யாவுமா யிலங்குமிவைகளோர் கால மொன் றுளதாம், வழுவிலாப் பிரம முடையசிற் சத்தி மறிதருமூடல்களிற் றோன்றும்." —எ-ம்,

"காற்றிலே யசைவுங் கல்லிலே திடமுங் கனலிலே சூடும்வான் றனிலே, தோற்றலாணமகன் னீரிலே நெகிழ்வுந் தொலைவுறு மாய்விலே மாய்வு, முற்றமாம் விதையின் மரங்களும் போல வுள்ளுறை பிரமசத்திகாள், மாற்றல்சால் கால தேசசித் திரத்தா லவனியிற் சாலிபோற் றோன்றும்" —

எனவும்வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அ - கை க.

[வித்தைகள்போலச் சத்திகள்காரியகாரணமாயிருந்தும், ஆகார வாதேயங்காணப்படுமாறுபோலத் தாங்காணப்படா வென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

97. காரி யங்களுஞ் சத்தியா தாரமுங் காணுமற் றதுமாயம் பாரி னின்றமா யாவியுஞ் சேனையும் பார்ப்பவர் கண்கா ணும் வீரி யந்திகழ் வித்தையா யினசத்தி வெளிப்படா ததுபோ லப் பேரி யற்பிர மத்துக்கு மூலகுக்கும் பிறிதுசத் திகளுண் டே.

(இ-ள்.) காரியங்களுஞ் சத்தியாதாரமுங் காணுமற்றதுமாயம், எ-து. சத்திக்குகாரியங்களுங் காரணமும் எவர்க்குங் காணப்படும் எனையசத்தியோ சற்றுங்காணப்படாது:—(எங்ஙனமெனில்,) பாரினின்றமாயாவியுஞ் சேனையும் பார்ப்பவர்கண்காணும், எ-து. பூமியிலிவ்வித்தைகளே விளையாடிக்கொண்டிருந்த, இந்திரசாலஞ்செய்வோனும், அவ்விளையாட்டாற்காணப்படுஞ்சேனைகளும் வேடிக்கைப்பார்க்கப்புறப்பட்டவர்க்கு நேரேகாணப்படும்: — வீரியந்திகழ்வித்தையாயினசத்தி வெளிப்படாததுபோல, எ-து இளையாத வீரத்துவத்தால்விளங்குகின்றவித்தையாகிய சத்தியானது காணப்படாது, எங்ஙனமோவதுபோல:— பேரியற்பிரமத்துக்குமூலகுக்கும் பிறிதுசத்திகளுண்டே, எ-து. மிக்கவிலக்கணங்களேயே யியல்பாகவுடைய பிரமத்துக்கும், உலகத்துக்குமிடையே சிலசத்திகள் பிறிதாகவிருக்கின்றனவே, அவைகாணப்படுமா, காணப்படாவே, எ-று.

சத்திக்காதாரம், பிரமம். ஆதேயம், உலகம். மாயாசத்தியைத்தவிர வுலகிருக்குமாயின். பிரமத்தைத்தவிர மாயாசத்தியிருக்கலாம்; எங்ஙனம்; அறியாமையன்றியுலகிருக்குமாயின், அறிவையன்றி யறியாமையிருக்கலாம். இல்லையெனின்; வஸ்துவுமிரண்டாமேயெனக்கூடாது. மாயாவியும். சாலக்காட்சியும் பிரத்தியட்சம். வித்தை யப்பிரத்தியட்சம். அதுபோல, பிரமமும், உலகமும் பிரத்தியட்சம். மாயாசத்தியப்பிரத்தியட்சம். சத்தியாசாரமுமென்பாடமுமுண்டு: இங்கேயாசாரமுமென்பது பொருந்தாது.

(க-து.) மாயாசத்தி பிரமத்தைத்தவிர வேறின்மையா லிரண்டுவஸ்துவாகாவென்பது. பிரமப்பிரதிபலனமே சத்தியெனவறிக. (கஎ)

அ - கை க.

[ஆறும் விளுவிற்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்]

98. சத்தி சத்தனைத் தவிரவே றன்றுகாண் சத்தனுமாயாவி வித்தை காட்டிய விந்திர சாலம்போய் வித்துவா னும்போலப், புத்தி மைந்தனே சத்திமா னுகிய பூர ணான்மா வாம், வத்து நிர்ணயஞ் சொன்னதிட் டாந்தத்தின் வழிகண்டு தெளிவாயே.

(இ-ள்.) சத்திசத்தனைத்தவிர வேறன்றுகாண், எ-து சத்தியானது சத்தனைத்தவிர வேறோர்முதலன்றெனக்காணுதி:—சத்தனுமாயாவி வித்தைகாட்டிய விந்திரசாலம்போய் வித்துவானும்போல, எ-து, சத்தனுகிய மாயாவித்தை செய்

வொன் சனது வித்தையிஞல்காட்டிய இந்திரசாலக்காட்சி கணீங்கியவிடத்தும் நீங்காதநின்றேன் வித்துவான்மாத்திரமாகுமாறுபோல:—புத்திமைந்தனே சத்திமாஞகிய பூரணவான்மாவாம் வத்துநிர்ணயஞ்சொன்ன திட்டாந்தத்தின் வழி கண்டு தெளிவாயே, எ-து. அறிவுள்ளபுத்திரா! சத்திமானெனப்படும் பரிபூரணமாநிறைந்துள்ள ஆத்மவஸ்து நிச்சயத்தை மூன்சொன்ன திஷ்டாந்தமுறையைக்கண்டு தெளிந்துகொள்ளுதி, எ-று.

இந்திரசாலம்; வித்தையைத்தவிர வில்லாவாறுபோல, வித்தையும், வித்துவானைத்தவிர வேறின்றும், எங்ஙனமோவதுபோல, உலகமும்; மாயாசத்தியைத்தவிர வில்லாவாறுபோல, மாயாசத்தியும்; சத்தஞகியவான்மாவைத்தவிர வேறின்றும். வேறின்றகவே, இருப்பது, ஆன்மாமாத்திரமென்றுயிற்று. ஆகவே, வித்தையிருந்தபோது மில்லாதபோதும் வித்துவானிருக்குமாறுபோன்று மாயாசத்தியிருந்தபோது மில்லாதபோது மாத்மாவிருக்குமெனப் பெற்றும். பேறவே, வித்தை; யாபாசதர்மம்பெற்றுற்போல, வித்துவானுபாசதர்மம் பெற்றுனல்லன். அதுபோல, மாயாசத்தி யாபாசதர்மம் பெற்றுற்போலச், சத்தஞகியவான்மா; வாபாசதர்மம் பெறுவாறுகண்டாம். காணவே, மாயையைப்போல, ஆன்மா பொய்யன்றெனத்தெளிந்தாம்,

(க-து.) வஸ்து; மாயையைப்போலப் பொய்யன்றென்பது. போகவென்றது, போயென்றுயது காலமயக்கம். ஆன்மாவின் வஸ்துவெனின், கிழமைப் பொருளாதற்கிடமின்று. ஆகலின், ஆன்மாவாம் வஸ்துவென்றும். சிலபிறிதிகள், இந்திரசாலம் பொய்வித்துவான் மெய்போல, என்றிருக்கின்றன, அங்ஙனம்பொருள் கொள்ளினுமமையும். (சு அ)

"புத்திமைந்தனே" என்னுஞ் சம்போதனையில், புத்தியென்னும் விசேஷணந்தந்தது பொருணிச்சயத்திற்கு முக்கியகாரணமான அறிவினை யுடையையாதலால், நினக்கஃதரி தல்லவென்பதைக்குறிப்பித்தற்கு என்க. "பூரணவான்மா" எ-து, பிரமத்தினுடைய பாரமார்த்திகரூபம், "சத்திமான்" எ-து. அதற்கே சோபாதிகரூபம் ஆம்.

கானற்சலத்தால் ஊஷரபூமி நனையாததுபோல மாயையால் பிரமத்தின் சொரூபம் ஹானியாகாது. மாயையும், மாயாகாரியப் பிரபஞ்சமும் பிரமமேயல்லாமல் வேறில்லை என்பது கருத்து.

அ-ஸை க.

[முன்னர் மாயையென்பது பொய்யெனக்கூறிப் பின்னர்பிறிதுசத்திகளுண்டேயெனக் கூறுவதென்னை கொலோவென்றவினுவிற்குத்தர மிரண்டுகவியாலுங்கூறப்புகுந்தாரிக்கவியிலுண்டென்றேற்காவிடில் சராசரங்கட்குச் சுபாவங்கள் வேறுமேயெனக் கூறுகின்றார்.]

99. இல்லை யாகிய சத்திபை யுண்டென்ப தெப்படி யெனக்கேட்கிற், புல்லை யாதிபா மசேதனப் பொருளெலாம் பூத்துக்காய்ப் பனபாரசாய், நல்லை யாமக னேயதிற் சிற்சத்தி நடந்திடா திருந்தக்கால், தொல்லை யாய்வருஞ் சராசரவுயிர்க்கெலாஞ் சுபாவங்கள் வேறுமே.

(இ-ன்.) இல்லையாகிய சத்தியையுண்டென்ப தெப்படியெனக்கேட்கில் எ-து. மித்தையாகியமாயாசத்தியை மீண்டுமுண்டென்ப தெங்ஙனங்கூடுமெனக் கேட்பையாயின்:—புல்லியாதியாமசேதனப் பொருளெலாம்பூத்துக்காய்ப் பனபாராய், எ-து. புல்லியாதியாகவுடைய சடப்பொருள்களனைத்தும் புட்பித்துக்காய்க்கின்றவைகளேக்காணுதி:—நல்லியாமகனேயதிற் சிற்சத்தி நடந்திடாதிருந்தக்கால், எ-து. சற்புத்திரா! ஒவ்வொன்றிலுஞ் சிற்சத்தியானது வியாபியாதிருக்குமாயின்:—தொல்லியாய்வருஞ் சராசரவுயிர்க்கெலாஞ் சுபாவங்கள்வேறுமே, எ-து. தொன்றுதொட்டுவிடாதுவருகின்ற சராசரமாகின்றுள்ள வுயிர்களுக்கெல்லாஞ் சுபாவங்கள் வெவ்வேறுமுடியுமே, எ-று.

சேதனம், அறிவு. அசேதனம், அறியாமை. இங்கேநடக்குதல், வியாபித்தல். சரம், அசைவு. அசரம், அசையாமை. சராசரவுயிர்களி லெதெதற்கே தேதியல்போ, அங்ஙனமங்ஙனமாவது சிற்சத்தியின் தன்மையெனக்காண்க. சீர்மிகுமாதலிலதிலெனவடுக்காது நின்றனர்.

(க - து.) சமஸ்தமுஞ் சிற்சத்தியை யாதாரமாகக் கோடலின் தத்தஞ்சுபாவத்தினின்று மாறுதென்பது. அனேத்துஞ்சிற்சத்திவிலாசமாதலின் சிற்சத்தியுண்டெனப்பெற்றும். சத்தியுண்டெனல் பகிர்முகத்தாலென்னை. (கூ)

அ - னை க.

[அனேத்துஞ்சிற்சத்திநியமத்தினுல் தத்தமியல்பைவிட்டு மாறுதலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

100. கருப்பை முட்டையுட் பறவைகள் பலநிரங் கலந்தசித்திரம்பா ரா, யருப்ப மாஞ்சத்தி நியமமில் லாவிடி லரசிலா நகர்போலாம், நெருப்பு நீர்களாங் கசப்புமே மதுரமா நீசனு மறையோதும் பொருப்பு மேகமாங் கடலெலா மண்களாம் புவனமிப் படிபோமே.

(இ-ள்.) கருப்பைமுட்டையுட்பறவைகள் பலநிறங்கலந்தசித்திரம்பாராய் எ-து. கருப்பையிலிருக்குமுட்டைக்குள் பட்சிகள் பலநிறங்கலந்திருக்கின்றவினேதசித்திரங்களாயிருப்பதைக்காணுதி:—அருப்பமாஞ்சத்திநியமமில்லாவிடிலரசிலாநகர்போலாம், எ-து. உணர்தற்கரிதாகிய சிற்சத்தியினியமமில்லாவிட்டால், அரசனில்லாதபட்டணம்போல வொழுங்கற்றநிலையினதாகமுடியும்:—நெருப்புநீர்களாங்க சம்புமேமதுரமா நீசனுமறையோதும், எ-து, (எங்ஙனமெனில்), நெருப்புசலமாகவும், கசப்புத்தித்திப்பாகவும், சண்டாளன் வேதாத்தியாயனஞ் செயவதாகவுமுடியும்:—பொருப்புமேகமாங்கடலெலாமண்களாம் புவனமிப்படிபோமே, எ-து. மலைகள் மேகங்களாகவும், சமுத்திரமுழுதும் மண்களாகவும், இதுபோலப் பூமிமுழுவது நிங்ஙனமாகவுமுடியுமே, எ-று.

அருப்பம், துக்கமெனினுமமையும். நியமம், ஒழுங்கு. பறவைக்கிடம், முட்டை முட்டைக்கிடம், கருப்பை. எனவே, கருப்பையிலிருந்துமுட்டையும், முட்டை யிலிருந்துபறவையுமுண்டாதலால், கருப்பைமுட்டையுட் பறவைகளென்றார்.

(க-து.) அனேத்துமரசிலாககர்போல நிலைமாறுமென்பது. சத்தி ; அகமுகத்திற்சித்சத்தியாகவும், புறமுகத்தில்மாயாசத்தியாகவுமிருக்கும். (கடு)

பிரத்தியட்சப்பிரமாண சித்தமான அக்கினிபாதிகளின் சொரூபம் பிரதிபந்திக்கக் கூடாமையின், மணிமந்திராதிப் பிரதிபந்தமும நிர்விஷயமாம். ஆதலால், சத்திமானேப்பார்க்கிலும் பின்னமாகப் பிரதிபந்தத்தின் விஷயமான சத்தியை ஒப்பவேண்டுவதுபோலப் பிரமத்தினும் பின்னமாகச் சத்தியொப்பவேண்டுமென்பது கருத்து.

மூட்டை கருப்பாசயத்தித்திற் கட்டுப்பட்டுள்ளதென்பதற்கு, உ-ம் சாங்கதசிந்தர் திருவாக்கு,

"கருப்பைக்குண் மூட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்-உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்காளே வேரகெடுவா யன்னுப்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

'நியமமில் லாவிடில்" எ-கு, உ-ம் ஈசுரகீதை,

"உற்பவ சாராசரவி யோனியொரு நாலும்
பறபலவ தாகமொழி பாதலம் னேத்தும்
மெப்புவன மும்பிரம ரண்டமவை யாவும்
இப்படியி ருக்குமது வென்றனிய மத்தால்."—

என்வரும், மற்றும் வருவனவற்றுற் காண்க

அ - கை.

[எல்லாவிபரீதங்கட்குமாதாரமாதலி னிந்தச்சத்தியைநீக்குமாறெங்ங
னம் சத்தனுக்கபேதமெனின், ஏகமாகக்காண்பதெங்ஙனம்.
அரிதெனின், நிரதிசயானந்தமாவதெங்ஙனம். எனுன்
றுவினுவையு மிக்கவியிற்கூறுகின்றுர்.]

**101. ஆர்க்குங் காணவு மறியவும் படாதென்று மவாச்சிய வடி
வென்றுஞ், சேர்க்கு நாமரூ பப்பயிர் வித்தென்றுஞ் செப்பிய சிற்
சத்தி, போர்க்கு மாறெங்ஙன் பிறித்திடப் படாதெனிற் பிரமபா வனை
யொன்றுய், பார்க்கு மாறெங்ஙன் முத்தியா குவதெங்ஙன் பரம
சற் குருமூர்த்தி-**

(இ-ள்.) ஆர்க்குங் காணவுமறியவும்படாதென்று மவாச்சியவடிவென்றும்,—எ-து. அரியராதிகட்குமேனையோரெவர்க்குங் கண்ணுற்காணவும், மனதாலறியவும்படாததென்றும், நிர்வசனரூபமென்றும்:—சேர்க்குநாமரூபப்பயிர் வித்தென்றுஞ் செப்பியசிற்சத்தி, —எ-து. விபரீதத்துக்காளாகச்சேர்க்கின்ற நாமரூபமென்னும் பயிர்களுக்கு விதையென்றுஞ் சொன்னசிற்சத்தியை:—போர்க்குமாறெங்ஙன், —எ - து. நீக்குமாறெங்ஙனம், வேறுபடுத்தக்கூடாதா

யின், பிரமபாவனையேகமாகப் பார்க்குமாறெங்ஙனம்:—முத்தியாகுவதெங்ஙன் பரமசற்குருமூர்த்தி,—எ - து. முத்தியடைவதெங்ஙனம், மேலான சற்குரு மூர்த்தியே,—எ-று.

அறிவையன்றியறியாமையோர்முதலன்று. அறியாமையே சித்சத்தியென்னுமிடத்து, காணவும்படாதென்றும், அறியவும்படாதென்றும், அவாச்சிய வடிவென்றும், நாமரூபப்பயிர்வித்தென்றும், கூறச் சித்சத்தியேற்கலாமே, தடையென்னையுள, இதுபற்றி யிங்ஙனங்கூறினர்.

(க-து.) மாணுக்கனுக்குரைத்தவிது வினையவென்பது. சித்தில்லாவிடிற் சித்தினதுகற்பிதமெங்கே. உண்டெனில், தெரிவிக்கலாம். கல், மரம், முதலியவைகளெனில், சத்தினதுபிராதிபாலிகமன்றி வேறுகக்கண்டிலமே. எங்ஙனமெனின், சோதனையினியதிகளையப்பட்டவையனைத்து மன்னியமாகாதிவிகமுடிவதென்னை ? முடிவதனற்சத்தாகுமாவெனின், சத்தையன்றி யசத்தெனலெங்கே. இன்றுதலாலனைத்துஞ் சித்சத்திநியமமேயென்றறியாஞ்தலின் வினவினென்க. அறிவினை, அறியாவினை, என்பவற்றுளிஃதறியாவினை. (கடு)

அ - கை.

[முதலிலிரண்டுவினவுக்கு மிக்கவியிலுத்தரங்கூறுகின்றார்.]

102. வாயுஸ்தம்பனஞ் சலஸ் தம்பன மணிமந்திர மருந்தாலே, தேயுஸ் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத் திகளெங்கே, நீயச் சச்சிதா னந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல், மாயைச் சத்திபோ மீதன்றி மந்திர மறைகளிற்கா ணுமே.

(இ-ள்.) வாயுஸ்தம்பனஞ்சலஸ்தம்பன மணிமந்திரமருந்தாலே தேயுஸ்தம்பனஞ்செய்திடி லதிலதிற்சிறந்தசத்திகளெங்கே, —எ - து. மணி, மந்திரம், மருந்து, என்னுமிம்மூன்றினும் ; வாயுஸ்தம்பனம், சலஸ்தம்பனம், தேயுஸ் தம்பனஞ்செய்வமாயின், அவ்வவற்றிற்குரிய மூக்கியமாயுள்ள சலனம், நெழ்ச்சி, உட்டணமென்னுமிம்மூன்றுசத்திகளும், எங்ஙனே, இப்போதுகண்டிலமே. (அதுபோல):—நீயச்சச்சிதானந்தமாய்வேறொன்று நினைந்திடாதிருப்பாயேல், எ-து. நீயந்தச்சச்சிதானந்தசொரூபமாகியிவற்றிற்குமாறாக வேறொன்றும் நினையாதிருப்பையாயின்: — மாயைச்சத்திபோமீதன்றி மந்திரமறைகளிற்காணுமே,—எ-து. மாயாசத்தியான தன்னையன்றியில்லாமற்போம், இல்லாமற்போவதற்குபாய மிங்ஙனம்புரிவதன்றி வேறேமந்திரமுளதாக வேதங்களிற்கண்டிலமே,—எ-று.

ஸ்தம்பனம், ஸ்தம்பித்தல். அதாவது ; சற்றடங்கிநிற்றல். சிறந்தசத்திகளென்றதினால், சலனம், நெழ்ச்சி, உட்டணமெனக்கொண்டாம். எங்கேயென்பதனால், இப்போதெனவருவித்தாம். எங்கேயென்பது, எவ்விடம், இல்லையென்னும்பொருள்தரற்பாலதாதலின், பலபொருளொருசொல். இங்கேயில்லையென்னும்பொருடானின்றது. நீயிரு மாயைச்சத்திபோம், எனவிரண்டெழுவாயிரண்டுபயனிலைகளாதலால், இரண்டுவிடையெனக்கொள்க மாயாசத்திபோ

மென்பாருமுளர். நீயச்சச்சிதானந்தமாயிருத்தலேபிரமபாவனையொன்றுப்பார்த்தலுக்கு விடையும் ; வேறொன்றும் நினைந்திடாதிருத்தலே, சிற்சத்திபோர்த்தலுக்கு விடையுமெனக்கொள்க. சத்து, சித்து, ஆனந்தம். இவற்றுள் ; சத்து, தான். சித்து, சுயஞ்சோதி. தானே சுயஞ்சோதியாகவிளங்கல், சத்தே சித்தாகும். சுயஞ்சோதியே தானுகவிளங்கல, சித்தே சத்தாகும். இங்ஙனமாயவொருமையே துக்கநிவிர்த்தியாதலால், ஆனந்தமாகும். இதுதான் சச்சிதானந்தமாயிருத்தல். இங்ஙனமிடைவிடாதுநிற்கில், அநுர்த, சட, துக்கந், தானேயகலும் இங்ஙனமகலல், வேறொன்றும்நினைந்திடாதிருத்தலின்பயன். அவ்விரண்டுவினுக்களுக்கும், இவ்விரண்டும்விடை,

(க-து.) மேற்கூறியவினுக்களிரணடிற்கும் விடையிரண்டுந்தனரென்பது. அனுபவமில்லாரிவ்விடைகாண்டலரிது. (கo2)

சாதனசதுஷ்டய சம்பன்னனான அதிகாரி மாயையை நிவிர்த்தித்தற்கு முக்கியோபாயமான திருசியவிஸ்மரணமே சுருதிகளால் இரகசியமாகக் கூறப்பட்டிருக்கின்றதென்பது கருத்து.

"வேறென்று நினைத்திடாதிருப்பாயேல், மாயச் சத்திபோம்" எ-கு, உ-ம் வாசிட்டம்,

"பிறப்பிறப்பாம் பெயருடைய வித்த மாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேச வொண்ணு
வறப்பெரிய தன்மனத்தை வென்றான் மாளு
மல்லதொரு வகையாலு மகற்ற லாகா
திறப்புடைய வன்மாயை விரிவி னுள்ள
சித்திரத்தோன் றிடவனக்குச் செப்புங் காதை
மறப்பறுசிந் தையனுகிக் கேட்டி யென்னு
மனுகுலகா யகனுக்கு வசிட்டன் சொல்வான்."—

எனவரும். மற்றும் வருவனவற்றுக் காண்க.

அ - கை.

[மூன்றாம்வினுவுக்குவிடை யிக்கவியிற்கூறுகின்றார்.]

103. மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாம் விவகரித் திட வேண்டி, நாவினுன் மண்ணைக் கடமென்ப ரக்கட நசிப்பதும் நாவ ரலே, பார்வு நாமரூ பங்களே மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தஞ், சீவ பேதகற் பிதங்களே மறந்துசீ சின்மய மாவாயே

(இ-ள்.) மேவுமண்ணிலவ்வியத்தமே வியத்தமாம் விவகரித்திடவேண்டி நாவினுன் மண்ணைக்கடமென்பர்,—எ-து. கடசத்திதங்கிய மண்ணினிடத்தில் அக்கடத்தோற்றமெழுதற்குரிய வினைநிகழ்தற்குமுன்ன ரத்தோற்றமெழாது மறைபட்டுநிற்கும், அங்ஙனமறைபட்டுநிற்றலே வினைநிகழாநிற்புழி வெளிப்பட்டுக்காணும், அங்ஙனம்வெளிப்பட்டுக்காண்டலேமே யன்னபானுதிபாகவிவ

காரநிமித்தம், சொல்லாலேமண்மயவடிவைக் கடமெனவுலகர்வழங்காநிற்பார்:— அக்கடநசிப்பதும்நாவாலே பாவுகாமரூபங்களேமறந்து மண்பார்ப்பதேபரமார்த்தம்;—எ-து. அந்தக்கடமுடைந்தசென்பதுஞ் சொல்லாலேயே, முன்னுமண்ணேபின்னுமண்ணே, இப்போதும் பானைசட்டி குடிவைசால் முதலியவாயெங்கணும வழங்கப்பட்டுள்ள நாமரூபங்களேச் சற்று நினையாதுமறந்து மண்ணேகப் பார்ப்பதேபரமார்த்தமாம், (அதுபோல):—சீவபேதகற்பிதங்களேமறந்து நீ சின்மயமாவாயே,—எ-து. சீவபேதமாநின்றுள்ள கற்பிதவடிவங்க ளனைத்தையுமறந்து, நீ சின்மயமாக விளங்குதி,—எ-று.

அவ்வியத்தம், வெளிப்படாமை. வியத்தம், வெளிப்படல். பித்தளேமுதலிய வற்றுலாயபாண்டங்களேக்கூறுதது; செல்வம்வந்துழியன் றிறிந்தரமதின்றுமை யினென்க. விவகரிப்பான்வேண்டிக் கடமெனல், விவகாரிகசத்து. நான்குகாலத்தும் மண்ணேயன்றிக் கடமெனற்குப் பொருள் தோற்றன்மாத்திரமாதலால், அதனே மண்ணேக்காண்டல், பாரமார்த்திகசத்து. மண்ணேயன்றிக்கடமென லோர்முதலன்றென வுணராமல் சுயம்பெனக்கருதிக்கடமெனக்கூறல், மூடம். கடமெனக்காணுது மண்ணேனக்காண்கை, விவேகம் சொல்லாலென்னுது நாவினலென்றது; நாவினலாயதுசொல்லாதலா லிதுதுணேக்கருவியெனப்பெற்றும், ஆதலின் கருவிபாகுபெயர். இவ்வுவமைபோல; அறிவைச், சீவனீசன்செகத்தெனக் கற்பனேயாகக்கொள்ளும் விபரீதங்களே மெய்யெனக்கோடல், விவகாரிகசத்து. இப்பேதங்களேயெல்லாம் விசாரத்தால்மறந்து, அறிவாகக் காண்டல், பாரமார்த்திகசத்து சீவபேதமென்பது; சீவனதியாகப்பேதிக்கும்பேதம் அதாவது; சீவேஸ்வரசகம். இம்மூன்றுமறிவின்கற்பிதமன்றிச் சுயம்பல்லாமையின், சீவபேதகற்பிதங்களென்றார். தெளிந்தவிடத் தனேத்து மறிவாக முடிதலின், நீசின்மயமாவாயேயெனப்பட்டதென்க. கடமெனினுங் குடமெனினுமொக்கும். பரமார்த்தம், உண்மை. எனவே, விவகாரிகம், கற்பிதம் என்றுயிற்று. அவ்வியத்தம், வியத்தம், எனக்கூறவந்தது; மண்ணேயன்றிக்கடமின்றெனற்கு. அதுபோல, அனேத்து மறிவையன்றி யின்றெனற்கென்க. கடாதிகளேமண்ணேப் பார்ப்பதுபோல, சகமாதிநிரிபதார்த்தங்களேயுஞ் சின்மாத்திரமாப்பார்க்கி லன்னியமின்றித் தானுய்விளங்கும், இங்ஙனம்விளங்குதலே முத்தியாதலால், இது மூன்றும்விஞவிற்கு விடையெனக்கொள்க.

(கு-து.) அன்னியமயமாகாமற் சின்மயமாகுதியென்பது. கடமாதற்குரிய தேமண், ஏனேயவைமண்ணன்றெனற்கு மேவமண்ணென வடைகொடுத்ததென்க. இது முடிவிடங்கூறலென்னுமுத்தி. (கo)

தாஷ்டாந்தஞானத்தின்பொருட்டுத் திருஷ்டாந்தத்தை விரிக்குதும். பிருதுபுத்நோதராகாரமானகடம் காரியம்:சத்தாதி ஐந்துகுணங்களோடுகூடிய மண் ஆதாரம்; சத்தி இவ்விரண்டற்கும் விலட்சணம். என்னே? சத்தியின்கண் பிருதுபுத்நாதி காரியதர்மமும் இல்லே, சத்தமுதலான காரணதர்மமுமில்லே; ஆகலான், சத்தி இரண்டற்கும் விலட்சணமாம்; ஆனுல் அஃதெப்படியுளதெனில்? எப்படியோ அப்படியுளது; அப்போதாசிந்தியத்தன்மை யதென்றுமாலோவெனின்;—பேதமென்றுவது அபேதமென்றுவது, அசிந்தியமென்று

வது சொல்லயோக்கிய முடையதன்று. காரணசொநபத்தினும் பின்னமாகச் சத்தியிநந்துமேல், காரணசொநபத்தைப்போலத் தோன்றுததேனெனின்; — மண்ணின்சத்தி கடாதிகாரியோற்பத்திக்குமுன் மண்ணின்கட் கூடமாயிருந்த தால் தோற்றவில்லை என்க. ஆனல் பிரனநந் தோன்றுததேனெனின்; — நவநீத முதலியவை மதநத்தாற் றேற்றநிற்பதுபோலக் குலாலாதிகளின் சகாயத்தாற் கடாதியாகாரத்தை யடையும். உபாதானகாரணத்தினும் பின்னமாகச் சத்தி யின் காரியமுண்டென்றல் காரியகாரணங்களின் பேதம் என்றேற்றவில்லை யெனின்; — அவிவேகசனங்கள் பிருதுபுத்நாதிரூபமான காரியத்தையும், சத்தப ரிசாதி குணரூபமான காரணபூதமாகிய மண்ணையும் ஒன்றுச்சேர்த்துக் கட மென்று சொல்லுவதால் காரியகாரணங்களின் பேதந்தோற்றவில்லை யென்க; அஃதவிசாரமென்பது; என்னை? குலாலவியாபாரத்திற்குமுன் எத்தனைக் கூறுண்டோ அத்தனைக்கூறுங்கட மல்லாமையின் என்க. ஆனல் யாதுகட மெனின்; — குலாலவியாபாரத்திற்குப்பின் பிருதுபுத்நோதராகாரத்திற்கே கட சத்தத்தின் வாச்சியத்தன்மையுசிதமாம். என்னை? சொல்லிய ஆகாரத்தினுற் நியின் பின்னரே கடசத்தவியவகாரங்காண்டலின் என்க. மண்ணினின்றுவேறு செய்யின் கடம் காணப்படாமையின் மண்ணுக்குப் பின்னமுமல்ல: பூர்வம் பிண்டதசையிற் கடம்காணப்படாமையின், மண்ணுக்பின்னமுமல்ல; ஆக லால் சத்தியைப்போலக் கடமும் அநிர்வசனீயமேயாகலின், கடம் சத்தியின் காரியமாம். சங்கை — சத்தியுமீ, காரியமும் அநிர்வசனீயமாயின், சத்தியேன் றும், காரியமென்றும் பேதவியவகாரம் வருவானேனெனின்; அவ்வியத்தமா யிருந்தபோது சத்தியென்றும், வியத்தமானபோது கடமென்றுஞ் சொல்லப் படுகிறது; இது பிரசித்தமாகக் காணப்பட வில்லையேயெனின்; — இந்திர சாலசம்பந்தியான மாயையும் மணிமந்திராதிபபிரயோகத்திற்குமுன்னே பிரக டமாகாமல் மணிமந்திராதிப் பிரயோகத்தின்பின்னர்ப் பிரகடமாவதால் இதுபிர சித்தமாமென்க. மாயையின்காரியமாதலால் கடாதிவிகாரங்கள் மித்தையென் றும், விகாரங்கட் காதாரமான மண்மாத்திரமே சத்தியமென்றும் சுருதிகூறு கின்றது. இதற்கபிப்பிராயமேதோவெனின்; — சத்தியும், காரியமும் ஒவ்வோர் காலத்தில் தோற்றுவதால் மித்தை, ஆகாரம் மூன்று காலத்தினுமிருப்பதால் சத்தியமாம் என்பதாம். காரியம் மூவகையேதுக்களால் அசத்தியமாம்; மூவகை யேதுக்கள், அசத்தாய்த்தோற்றுகின்றதும், உற்பத்திநாசமுடைத்தாய்க்காணப் படுகின்றதும், உற்பத்தியானபின்னர் வாக்கிந்திரியத்தாற்சனியாகின்ற நாமஸ்வ ரூபமாக வியவகரிக்கப்படுகின்றதும் ஆம்.

அன்றியும், கடம் நசித்தும் நாமம் நசியாது: மதுடருடையமுகங்ளிலே பின்னருமிருக்கின்றது; இதனுல் ஏதாயிற்றெனில்? விவாசத்துக்குவிஷயமான கடம் சத்தரூபமாகைக்கு யோக்கியமாம், கடசத்தத்தால் வியவகரிக்கப்படுதலின், கடசத்ததைப்போல என்னும் அநுமானத்தினுலுங் கடம் மித்தையாம்.

இனி விகாரத்திற் கதிஷ்டானநபமான மண்ணின் சத்யத்தினன்மை யின் அநுமானமாமாறு; — மிருத்திகை ரூபமானவஸ்து சத்தியமாகைக்கு

யோக்கியமாம் ; மூன்றுகாலத்திலும் ஒரே ஆகாரமுடையதா யிருப்பதால் ஆன்மாவைப்போல : மிருத்திகைரூபமானவஸ்து சத்தியமாம், வாஸ்தவமாவ தால், ஆன்மாவைப்போலஎன்க.

பரிணமம், ஆரம்பம், விவர்த்தம்எனக் காரியோற்பத்தி மூவகையுள், சித் காந்தத்தில்விவர்த்தபட்சம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், க்ஷீரம்போல அந்நி யாவஸ்தையையடையாநின்ற மிருத்திகை, சுவர்னங்கள் விவர்த்தத்திற்கு எப்ப டித் திருஷ்டாந்தமாமெனின் ;—க்ஷீரமானது பூர்வரூபபரித்தியாகபூர்வகமாக அந்நியாவஸ்தையையடையாநிற்பது உண்மையாகலின், பரிணமமேயாம். மிருத் திகை, சுவர்னங்கள் அந்நியாவஸ்தையை யடையாநிற்பினும் பூர்வரூபத்தை விடாமையின், விவர்த்தத்தன்மையுமாம். மிருத்திகை, சுவர்னங்களைப் பரிணம மும், விவர்த்தமுமாக அங்கீகரித்ததுபோல ஆரம்பமாகவும் ஏன் அங்கரிக்க வில்லையெனின் ;—ஆரம்பவாதிமதத்தில் காரணத்துவ.காரியத்துவரூபவியவகார பேதத்தாற் காரியகாரணங்களின் பேதந்தோற்றுகின்றது. ஆதலால், காரணரூப மாகவும், காரியரூபமாகவும் காரணம் ஒன்றேயிருப்பதால் காரியத்தின் சொரூ பத்தில் காரணத்தின் இருவகைக்குணத்தன்மையுண்டாகும் எப்போதுகார ணத்தில் இருவகைக்குணத்தன்மை யுண்டாயிற்றே அப்போது காரணகதமான சத்த, பரிச, ரூப, ரச, கந்தகுணமுதலிய தர்மங்களுக்கும், காரியகதமான சத்தாதிகுணமுதலிய தர்மங்களுக்கும் இருவகைக்குணத்தன்மையாகிய பின் னத்தன்மையுண்டாதல்வேண்டும். ஆனாலும், இவை தந்துவின்ரூபாதிகளென் றும் இவை படத்தின் ரூபாதிகளென்றும் இப்படிப்பட்ட வியவகாரங்காணப் படவில்லை. காரியத்துவ, காரணத்துவ வியவகாரபேதத்தால் எங்ஙனம் காரிய காரணங்களினுடைய அபேதஞ்சித்திக்கவில்லையோ அங்ஙனம் தந்து அல்லது, மிருத்திகைமுதலியகாரணங்களின் பின்னமாகப் படம், கடம்முதலியகாரியங் கள்தோற்றுமையின், காரியகாரணங்களின்பேதமுஞ் சித்திக்கமாட்டாது. பின் னையோவெனின் ;—காரியகாரணங்களின் பேதங் கற்பிதம் : வாஸ்தவம் அபே தமாம் ; ஆதலால், ஆரம்பவாதமசங்கதமாம் என்க. சாந்தோக்கியத்தின் ஆறும் அத்தியாயத்தில் மண், பொன், இரும்பென்னும் மூன்றும் விவர்த்தத்திற்குத் திருஷ்டாந்தமாகக்கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால், பூதபௌதிகரூபமான சர் வவஸ்துக்களிலும் காரியத்தின் மித்தியாத்தன்மையை அடிக்கடியநுசீலித்து அதனை அவ்வநுபவ ஜந்நியசம்ஸ்காரரூபமான வாசனைக்கு விஷயமாக்கல் வேண்டும்.

இங்கே ஈதிராகரம்;—இரச்சுவைப்போல மிருத்திகை, சுவர்னங்களை அதிஷ்டானமாகவொப்பிக்கடம், குண்டலாதிகளைவிவர்த்தமென்றது ஸ்தூலதி ருஷ்டியால்; சூட்சுமதிருஷ்டியால் விசாரித்துப்பார்க்கின், மிருத்திகை முதலிய வற்றிற்குக் கடாதிகளின் அதிஷ்டானத் தன்மைபொருந்தாது. என்னை ? சித் காந்தத்தில் யாதொருகற்பிதவஸ்துவும் அந்நியகற்பிதங்கட்கு அதிஷ்டான மென் னல் பொருந்தாது. பின்னையாதெனின் ;—சேதனமே சர்வத்திற்கும் அதிஷ் டானமாம். மிருத்திகை முதலியவை தாமேகற்பிதமாகலின், கடாதிகட்கு அதிஷ்டானமென்னல் பொருந்தாது. எப்படி இரச்சுவுபகிதசேதனம் கற்பித

சர்ப்பத்திற்கு அதிஷ்டானமோஅப்படி. மிருத்திகை, சுவர்ன்முதலிய தத்தம் உபாதானங்களால் உபகிதமான சேதனம் கடம், குண்டலமுதலிய காரியங் கட்கதிஷ்டானமாம். ஆதலால், கடாதிகளில் விவர்த்தத்தன்மை நிர்விவாதத்தால் சித்தமாம்.

அ - கை

[திரிசியமெனக்கில்லையாயினுந்தோற்றுவானேன், என்றவினவிற்குவிடையிக்கவியிற்கூறுகின்றார்.]

104. பூரிக் குங்கன சச்சிதா னந்தத்திற் பொய்சடந் துயர்மூன்றுந், தூரத் தாயினுந் தோன்றுபாழ் விபரீதந் துடைப்பதெப்படியென்றால், னீரிற் றோன்றுந்தன் னிழறலை கீழதாய் நின்றலையினுநேராம், பாரிற் றோன்றிய தன்னேநோக் கிடிலந்தப் பாழ்நிழல் பொய்யா மே.

(இ-ள்.) பூரிக்குங்கனசச்சிதானந்தத்திற் பொய்சடந்துயர்மூன்றுந்தூரத் தாயினுந்தோன்றுபாழ்விபரீதந் துடைப்பதெப்படியென்றால்,— எ - து பரிபூரணமாநிறைந்துள்ள மேலாய சச்சிதானந்தசொரூபத்தில் அதுர்த சடதுக்கமென்னுமூன்று மெனதுதிருஷ்டிக்கதி தூரத்தசாயினும், மெய்போலத்தோன்றுகின்றபாழும், நாமரூபவிபரீதங்களுமாகியவழுக்கைத் துடைக்குமா றெங்ஙனமோவங்ஙனமாயநெறி யினையதெனத்தெரித்தருளவேண்டுமெனக்கேட்பையாயின்:—நீரிற்றோன்றுந் தன்னிழறலைகீழதாகநின்றலையினும்,—எ-து. நீரிற்காணப்படுந்தன்னிழல் தலைகீழதாகநின்றலைந்தாலும்:—நேராப்பாரிற்றோன்றிய தன்னேநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமே,—எ-து. தலைகீழதாகவின்றி நேராகத்தரையில்தோற்றியதன்னேக்காண அந்தப்பாழானசாயையான துண்மையன்றுய்முடியும், எ-று.

தூரத்தசாயினுமென்றதிடைக்குறை. சத்தையன்றியசத்தும், சித்தையன்றிச்சடமும், ஆனந்தத்தையன்றித்துக்கமும், இல்லதியனத்திடவிசாரத்தாற்றெளிதலின் தூரத்தாயினுமெனவும், தெளியினும்டாழானசெகசீவபரந் தோன்றுகின்றனவே யிதற்கென்செய்தும் இந்தச்சோற்றத்தையுமகற்றுமா றெங்ஙனமெனவினவினனென்பார், தோன்றுபாழ்விபரீதந் துடைப்பதெப்படியென்றலெனவும், கிணறு, தடாகம், முதலியவற்றின்கரையினின்றுஞெருவன், எட்டிப்பார்க்குமிடத்துத் தன்னிழல்தலைகீழதாகத்தோன்றுமன்றே? அதனைக்கண்டு வியப்புற்றுத் தன்னேக்கரையிற்காண வம்மயக்கமக்கணமேதீரும். அதுபோல, வியட்டியாகவேனுஞ் சமட்டியாகவேனு நின்றுஞெருவன், தன்னையங்ஙனமாக்ககருதிநின்றண்டபிண்டங்களேயெட்டிப்பார்க்குமிடத்துத், தான்சோபாதிகமாகவுந் தலைகீழதாகவு மிடைவிடா தலைவதாகதோற்றக்காண்பனன்றே ? பரிபாககாலம்வந்துழி, அதனைக்கண்டருவருப்புற்றுத் தன்னேநிருபாதிகமாகச்சிதாகாயத்திற்காண வம்மயக்க மக்கணமேதொலையுமென்பார், நீரிற்றோன்றுந்தன்னிழறலை கீழதாநின்றலையினுநேராப் பாரிற்றோன்றியதன்னேநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமேயெனவுங்கூறினர். உபமானத்தா லுபமேயம் வருவித்தாம். நீர், அவித்தைநிழல், தத்தவக்குழாம். தலைகீழதாநின்றலைதல் ; எழுவகைத்தோ

ன்றத் தெதிலுநிலையுறாத புண்ணியகன்மத்தால்மேலும் பாபகன்மத்தாற்கீழுமா பாதியளவாகநின்றலேதலே. பார், சிதாகாயம். தோன்றுதல், நிருபாதிகமாகவிள ங்கல். தன்னைநோக்கிடல், தான்சொப்பிரகாசமாகவிளங்கக்காண்டல். அந்தப் பாழ்நிழல், அந்தவிவர்த்தத்துவக்குழா மாகியதனதுசாயை. பொய், தோன்றி யுந்தனக்கின்மை. எனத் திஷ்டாந்தாஷடாந்தங்களோக்காண்க. நீரிற்றோன்றுந் தன்னிழ றலைமேழதாநின்றலையினுமென்பது, பகிர்முகம். நேராப்பாரிற்றோன்றி யதன்னைநோக்கிடி லந்தப்பாழ்நிழல்பொய்யாமேயென்பது, அந்தர்முகம் இவ்வி ருமுகமும் ஞானஞ்ஞானங்களிலெனவறிக:

தனதெதார்த்தவடிவைநோக்காணத் தனதுகற்பிதவடிவந்தனக்கின்று மென்பது. பொய்சடந்துயர்மூன்று மறிவாகியகண்ணுடிக் கழுக்கெனக்கருதித் தொடைத்தலே வினையாக்கினர்' தனது ஸ்மரணையிருவகைப்படும். அதாவது; விஸ்மரணை,தஸ்மரணையென. விஸ்மரணை, அநுர்தசடதுக்கம்,தஸ்மரணை, சச்சி தானந்தம். தனதுவிஸ்மரணையைத், தன்துதஸ்மரணையாற் றொடைக்கவேண்டு மெனப்பெற்றாம். பெறவே, தன்னைவிடவிவ்விரண்டுஸ்மரணையு மின்றெனக்க ண்டாம். காணவே, இருப்பதுதானேயெனத்தெளிந்தாம். சச்சிதானந்த சிவத் தைச் சச்சிதானந்த மென்றதூஉம், அநுர்தசடதுக்கமாயையை யநுர்த சடதுக் கமென்றதூஉம், குணவாகுபெயர். திரிசியந்தனக்குக்காணவகைக்குத் திரூ பியது. (கஅச)

அதுபோலக் காரணஞானத்தாற் காரியம்மித்தையென்னும் ஞானமுள தாம்; இவ்வாறுளதாகும் ஞானத்தையே அத்வைதவாதத்தீர் புருஷார்த்த மென்றெப்பினர் என்பது எஞ்சிநின்றது.

தடாகசலத்திற் அதோமுகமாகச்சாயைதோற்றினும் வாஸ்தவமாகப்புரு ஷன் அப்படிக்கில்லாததுபோலச் சச்சிதாநந்தப்பிரமத்தில் அநிருதசடதுக்கரூப மான சகத்தித்தோற்றினும் வாஸ்தவமாக இல்லை. யாதொருபுருஷருக்கும் அதோமுகப் புருஷச்சாயையினிடத்து அது சத்தியமென்னும் அபிமானம் யா தொருதேசத்திலும், யாதொருகாலத்திலுங் காணப்படவில்லை. அப்படிச்சோ பாதிகப்பிரம ஸ்தலத்தில் சத்தியபுத்தியின் நாசமே ஞானத்தாலுளதாகும் நிவிர்த்தியெனக்கொள்ளற்பாலதாம் என்பது தாற்பரியம்.

அ - கை

[அறிவையன்றிக்காரணகாரியமின்றென விக்கவியிற்கூறுகின்றார்.]

105 ஞானங் காரண மறிவுகாண் காரிய நாமரூ பப்பேர்க
ளானதெப்படி யழிந்தெப் படியென வாய்குதல் பலனன்றே
மான மைந்தனே தீர்க்கசொற் பனசகம் வந்ததும் பாராமற்
போன தங்கினை யாமலுன் பேதமாய்ப் பூர்ணமாயிருப்பாயே.

(இ-ள்.) ஞானங்காரணமறிவுகாண்காரிய நாமரூபப்பேர்கள்,—எ-து. அறி வேகாரணமாகவும், அவ்வறிவே காரியமாகவுமிருக்கின்றது. அந்தக்காரியமோ நாமரூபப்பேர்களாயுள்ளவைகளாம்:—ஆனதெப்படியழிந்தெப்படியென வாய்

குசல்பலனன்றே —எ-து. இந்தவறிவேதிரிசியமானதெப்படி, யாகாதழிந்தவா றெப்படியென் றராய்ந்துதெளிந்தவாறுநில்லாது மீண்டுமீண்டு மிதுவேதொழி லாக வாராய்தல்புரியாநிற்றல், ஆச்மலாபமன்றே, ஆயின்யாதுசெய்வதெனின்:— மானமைந்தனேதீர்க்கசொர்ப்பனசகம் வந்ததும் பாராமல்போன தங்நினையாம லுன்போதமாய்ப் பூர்ணமாயிருப்பாயே,—எ-து. தனக் கிழிவுவராதகாக்கு மானமுள்ளஞானபுத்திரா ! என்றும்விடாது தோற்றுந்தீர்க்கசொற்பனசகம் போல்வதாகிய விச்சகமானது மூடத்தாலுதித்ததைப்பாராமலும், தெளிவால ழிந்ததைநினையாமலு முனதுஞானப்பிரகாசநின்றவா றெங்ஙனமோ வங்ஙன மாகவேநிற்றி,—எ-று.

அறிவேகாரணகாரியமென்கை ; அறிவையன்றிக்கடபடமென் னுங்காரிய மும், மண்ணூலென்னுங்காரணமுமின்றும். இவ்விரண்டு மறிபடுபொருளன் றேவெனின், காரணநாட்டத்திற்காரியமும், காரியநாட்டத்திற்காரணமுங்காணு தன்னியோன்னியாபாவ மெய்துவதென்னை. இவ்விரண்டவசரத்து மதுவாத் தோற்றலறிவன்றே, ஆனதுகொண்டென்க. இவ்வபிப்பிராயத்தைக் கண்டுபிடித் தல் மிகவுமரிது. எங்ஙனமெனில், அறிபடுபொருளென்னுமயக்க மகலாமை பற்றி யென்க. காரணத்தைத்தவிரக் காரியமோர்முதலெனவுஞ் சுயம்பெனவு மூணர்த லறிவேனுமறியாமையெனப்படும், கடபடத்தைக் காரியமெனக்கோ டல்பற்றியன்றே ? மண்ணூலெயன்றிக்காரியமுளதாயின் மண்ணூல்காரணமா கலாம் மண்ணூல்காரியமல்லாதபோது காரணமுமல்ல. மண்ணூலுக்குக்காரண காரியமெனவந்தது ; கற்பிதமென்றுணர்கைநிசமாதலா லறிவெனப்படும் அறி வறியாமையென்னுமா மிவ்விரண்டவசரம்பற்றிவந்ததன்றி யெதார்த்தமாத் தனக்கின்மையின், ஆய்குசல்பலனன்றே யுன்போதமாய்ப் பூர்ணமாய்யிருப்பா யேயென்றார். அறிவேயறியாமையாதலா லறிவு காண்காரியமெனப்பட்டது. தொன்றுதொட்டுப்பிறவிதோறும் விடாதுவழங்கிவருதலினாலும், சுயம்பெனற் குப் பொருளின்றிச் சொப்பனக்காட்சிபோல்வதினாலும், சொப்பனம்விழித்து ழியில்லாவாறுபோல, இச்சகமுந்தன்னேத்தான்காண விழித்தழி யில்லாமற் போதலானும், சொப்பனபோகத்தினித்தியதிருத்தியில்லாவாறுபோல, இவ்வுல கபோகட்டினுநித்தியதிருத்தி சற்றுமில்லாமையானுந் தீர்க்கசொற்பனசகமெ னப்பட்டதென்க. வந்ததும் பாராமல்போனது நினையாமலென்றது ; இவ்வுல கம்பயனற்றதெனக்குறிக்க. அறிதல்காண்காரியமெனப் பாடமுமுண்டு. அறி யாமையையறிவென்றது, காரணவாகுபெயர். அறியாமையன்றி நாமரூபப்பெ யர்களுண்டாயின் காரியமுமுளதாம். இன்றேலிலதாம். அறியாமையாமுடிவ தென்னை யாராய்தலின்கண் நாமரூபமாயுள்ளவனைத்தும். இஃதறியார்மறுத்த லாற்பயனென்னை ? பிறர்மதிக்கற்கென்க.

(க-து.) இருப்பதறிவொன்றுமேயன்றிவேதின்றென்பது. இதுபற்றியுன் போதமாயிருப்பாயென்றதென்க, ஞானம், அறிவு, ஒருபொருட்கிளவி. ()

"ஆனது, அழிநீர்த்து" என்பன, இயல்பினுல்வந்த காலவழுவமைதி. அறி தல்காண்காரியம் என்றும்பாடம், பாலனுக்குப்பேய்போல அவிவேகதிருஷ் டிக்கு நாமவுருவங்கள் உண்மையாகத் தோற்றரவாகலின், அவற்றை "பேய்"

எ-ம், "பன்மைப்பேயீ, இயக்தங்காணுப்பொருள்" என்னுஞ்சருதியாலும் பிராரத்தத்தாற் பிரதிபந்திக்கப்பட்டுள்ள விட்சேபரூபமான அஞ்ஞானமலமானது பிராரத்தமுள்ளளவில் தக்தபடம்போலத் தோற்றுவதல்லது யாதோ ருபாயத்தாலும் நிவிர்த்தியாகாதாகலானும், "ஆன தெப்படி யழிந்த தெப்படி யென வாயீததல் பலனன்று" என்றும் கூறினர். "தீர்க்தசொப்பனசகம்" எ-து, பிராரத்தமுள்ளளவுந் தோற்றரவாகலின். "சொப்பனம்" எ-து, தேச காலசாமக்கிரியின்றித் தோற்றரவாகலின்; அன்றியும், "சொப்பனம்" எ-து, எ-து கற்பவிசேஷணமுமாம், இதற்கு, உ-ம் வாசிட்டம்,

"பொய்ய தாமுயற் கொம்பினைப் பற்றவும் போக்கவு நிஜைப் பாரா, ரைய னேபர போதபூ ரணத்திலே யயலொன்று வருமா றென், பொய்ய தாகிய வநேகபா வனையினைப் பொருந்தல்புன் பிறப் பாகு, மைய மின்றிய வேகபா வனையினிலழுந்துதல் பவந்தீர்தல்,"—எ-ம்,

"எங்கே யெனினுந் தோன்றுமிந்த மனதைமுத்திச்
சங்கேதத்தா லுலகந்தன்னிற் கூட்டினன்றும்"—எ-ம்,

"யாதினிற் றோன்றிய தென்றுமி யாதீதென்று மிறந்தறெியா தென்று மிறந்தாற் றோன்று, மாதலினுல வன்றுபரின் சாலியா னவ வித்தை யெனுநோய்க்கு மருந்தருந்தச் செய்தாம்"—

என்றும் வரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அ - னை க.

[பகிர்முகத்திலெவ்வளவுகாலம்பழகியதோ, அவ்வளவுகாலமந்தர்முகத்தி லும் பழகவேண்டுமென விக்கவியிற் கூறுகின்றார்.]

106 அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினு யம்மட்டு நிசத்தி லுள்விழிப் பார்வையா யிப்படி நிரந்தரப் பழக்கத் தால் வசத்தி லுன்மன நின்றுசின் மாத்திர வடிவமா கிடின்மைந் தா கசத்த தேகத்தி லிருக்கினு மானந்தக் கடல்வடி வாவா யே.

(இ-ள்.) அசத்திலெம்மட்டுண்டம்மட்டுபராமுகமாகினுய்,—எ-து. மெய் போலத்தோற்றுஞ் செகவேபரமென்னும்பொய்யி லெவ்வளவுகாலஞ் சம்மந் தமுண்டாயிருந்ததோ வவ்வளவுகாலமளவும் பராக்காகியபகிர்முகப்பட்டீனை:— அம்மட்டுநிசத்திலுள் விழிப்பார்வையாயிப்படி நிரந்தரப்பழக்கத்தால்,—எ-து. பகிர்முகமானவவ்வளவுகாலவளவுமறிவென்னு முண்மையிலந்தர் முகநாட்ட மாநின் றிங்ஙனமிடைவிடாதபழகுவையாயி னந்தப்பழக்கத்தால்:— வசத்தி லுன்மனநின்றுசின்மாத்திர வடிவமாகிடின்மைந்தா,—எ-து. மனதின்வசத்திற் செல்லா துன்வசத்திலுன்மனநின்று சைதன்யவடிவமாத்திரமாக விளங்குமா யின் ஞானபுத்திரா:—கசத்ததேகத்திலிருக்கினு மானந்தக்கடல்வடிவாவாயே, எ-து. மலமூத்திரபாண்ட மாதலினருவருக்கத்தக்கதேகத்தினீயிருக்கினும் பிர மானந்தசமுத்திரஸ்வரூபமாவை,—எ-று.

சத்தெனற்குப்பொருளறிவையன்றிச் சகசீவபரமின்மையி னிவற்றைய சத்தெனவும், பராமுகம், பகிர்முகம். நிசம், சைதன்யம். உள்விழிப்பார்வை, தனதெதார்த்தவடிவைவிடாதுகாண்டல். சின்மாத்திரவடிவமாதல், மனஞ்சொப் பிரகாசமாகவிளங்கல். மட்டு, அளவு. தஸ்மரணை, விஸ்மரணையெனஸ்மரணை யிருவகைப்படும். தஸ்மரணை, தன்னைத்தானுள்ளவாறுகாண்டல். விஸ்மரணை, தன்னைத்தானயலாகக்காண்டல். பொருளல்லவற்றைப் பொருளாகக்கொண்ட தெவ்வளவுகாலமோ, அவ்வளவுகாலமும் பொருளைப்பொருளாகப்பழகவேண் டும். அன்றேல், பழகியகாலவளவுபயன்றரும். சைதன்யத்தையன்றியாதுமில்லை ஆயின் யாதுமல்ல. எங்ஙனமெனில், மண்ணேலையன்றிக் கடபடமில்லை, ஆயின் மண்ணல்கடபடமல்ல; என்றாற்போலும். இங்ஙனமாயவிசாரமுகத்தாற்பழகல், நிசத்திற்பழகல், இங்ஙனமாய விசாரமின்றிப்பழகல் அசத்திற்பழகல்,என்பதுப நிடதசம்மதவசனம் கசத்ததேகம், உரிச்சொல்லடியாகப்பிறந்த பெயரொச்சத் தொடர். கசத்தல், தேகத்தியல்பு. உணர்ந்தார்க்குமாத்திரமெனக்கோடல் வழு. ஏனையோர்க்குப்பிரியவடிவாயினும், மலமூத்திரபாண்டமன்றுயிற்றே? ஆசலி னேறபோர்பிழை. அறிவு, சத்து. அறியாமை. அசத்து அறியாமையன்றிச் சகமாதிதிரிபதார்த்தமுமின்றுசலா லிவற்றையோர்மூதலாகவுஞ் சுயம்பாகவுங் கொண்டு சத்தாகவேனும், அசத்தாகவேனும் பிரதிவாதிப்பமல்லம். தன்னைச் சொப்பிரகாசமாகக்காண்டல் அறிவு. அன்றுகக்காண்டலறியாமை.

(க-து.) அசத்திற்பழகியதுபோல், சத்திலும்பழகவேண்டுமென்பது. நிசத் திலுள்விழிப்பார்வையா மிப்படியெனப்பாடமுமுண்டு. அவ்வளவுகாலம் பழகா விடின் ததாகாரமாவதின்றி விவர்த்தமாகமுன்போலழிதும். (கoசு)

ஆசரவு = அபிமானரூபமான ஆசை. உள்விழிப் பார்வை" எ-து, பிரம தரிசனமாமோ அவ்வளவவ்வளவு நாமரூபம் விடப்படும் என்னும் இதற்கு முன்னுலான பஞ்சதசியின்சுலோகார்த்தம் எஞ்சின்றதால் அதனைவருவித் தாம். ஜீவித்தவஞயிருந்தே முத்தனுவாயென்பார், "கசத்ததேகத்திலிருக்கினு மாநந்தக் கடல்வடி வாவாயீ" என்றார்.

இவ்வாசிரியர் கூறினவாறே, பஞ்சதசியிற் கூறியிருப்பதுமன்றி வாசிட் டத்தும்,

"எத்தனையெத் தனைநீத்தா யகிலத்தைப் பரஞ்சுடரா யெறிக் குஞ் சோதி, யத்தனையத் தனைதோன்றும்"—

மேலே, கஉக-வது செய்யுள்தொடங்கிஇனிக்கூறப்படும் எண்வகையானங் தங்களுள், இஃதத்துவிதாநந்தம் என்றறிக.

அ - கை.

[ஆன்மாசச்சிதானந்தமென்றீர், சத்து, சித்தைபோல ஆனந்தஸ்வரூபமா யின், அயலேயவாவுவதென்னை? என்றவினவை யிக்கவியிற் கூறுகின்றார்.]

107. தானன்றி வேறொன்று மில்லாது பூரணச் சச்சிதா னந்தகுண மா, யூனின்ற வுயிர்தோறு மொன்றுகு மென்றுல தொக்கின்ற படி கண்டிலே, னுனென்ற சீவன்கள் சத்தானவகையொக்கு ஞானங்கள் வெளிகண்ட தா, லானந்த மிவைபோல வெளியாக வுதியாத வடை வேதுகுருநாத னே.

(இ-ள்.) தானன்றிவேறொன்றுமில்லாது பூரணச்சச்சிதானந்தகுணமாய், எ-து. ஆன்மா, தான்மாத்திரமிருப்பதன்றித் தன்னைத்தவிரவயலாக வேறையா தொன்றுமிருக்கவிடந்தருதலின் றியங்கிங்கெனுதெங்கும்பரிபூரணமாயும், சத்து, சித்து ஆனந்தகுணமாயும்: ஊனின்றவுயிர் தோறுமொன்றுகு மென்றுலதொக் கின்றபடிகண்டிலேன், — எ-து. மாமிசவடிவாயமைந்ததேகங்களிலுள்ள வுயிர் களிலெல்லாம், அக்குணம் வெவ்வேறுகாம லேகமாநிற்கவிளங்குமாயின் அக்கு ணம் தமக்குள் பேதியாதேகமாநிற்கும்வண்ண மடியேன் சற்றுமையமின்றிக் கண்டிலனே: — நானென்றசீவன்கள் சத்தானவகையொக்கு ஞானங்கள்வெளி கண்டதால், — எ-து நானெனக்கூறுகிற்குஞ்சீவர்க ளறிவதுபற்றிக்காரணேந்தி ரியமென்னுஞானங்களுளவாகநேரேகாணப்படுவதால்சத்தாகவன்றிச்சித்தாது சித்தாயிருப்பதுபற்றி யுயிர்கள்சத்தாயிருக்கிறவிதம் புத்திக்கொத்திருக்கின்றது: ஆனந்தமிவைபோலவெளியாக வுதியாதவடைவேது குருநாதனே, — எ-து. சத் துஞ்சித்துமொத்துத்தோன்றுமாறுபோல, ஆனந்தமுமொத்திருக்கநேரேகாணப் படாதவகையாதுகொலோ யானறிகிலன்குருமூர்த்தியே ! யிவ்வையந்தவிர்த்த ருள வேண்டுமென்றிரந்தனன், — எ-று.

தானெனப்பொதுப்படக் கூறியதால், ஆன்மா வருவித்தாம் என்னை, ,,மூசற்பெயர்நான்குஞ்சினைப்பெயர்நான்கும், சினைமுதற்பெயரொருநான்கு முறையிரண்டுந், தன்மைநான்குமுன்னிலையைந்தும், எல்லாந்தானவின் னன பொதுப்பெயர்'', என்றுர்பவணந்தி. தானன்றிவேறொன்றுமில்லாததான்மாவா தலின், இல்லாதெனவினையெச்சமாக்கினும், பெயரெச்சமாக்கின், குணத்துக் காகின்றது. அங்ஙனமாக்கின், தானன்றியென்னுதிருக்கவேண்டும், ஆசலிற் பொருந்தாது பூரணச்சச்சிதானந்த குணமாயென்றதனால், ஆன்மாவெனப்பெ றற்றும். ஆன்மாதானுதலின் தானன்றியெனவும், ஆன்மாதன்னைத்தான் விசா ரியாதுழி யயலுளவாம். விசாரித்துழிச்சற்றுமின்றும். ஆசலின்வேறொன்று மில்லாதெனவும், சொல்லால்வேறுயிறு மர்த்தத்தாலொன்றுதலின், பூரண சச்சிதானந்தகுணமாயெனவும், தேகத்தை யூனென்றது, காரணவாகுபெயர். ஆன்மா சச்சிதானந்தமாயின் சத்துசித்தைப்போல ஆனந்தமாயிருக்கவேண்டும். இருக்கின்றதெனில், அயலேயவாவியலவதென்னே? ஆசலிற் பொருந்தாதென் பார், ஆனந்தமிவைபோலவெளியாகவுதியாத வடைவேதெனவுங்கூறினர். உபா திபற்றிப்பலவாகக்காண்டலின், சீவனென்றது; நானென்னுத சீவனைக்காட்ட. அந்தச்சீவன், மகான். ஆனந்தமாயிருத்தல்பற்றியென்க.

(க-து,) ஆன்மாசச்சிதானந்தமாயின். ஆனந்தமெங்கேயென்பது. உடன் படாமைக்கேதுஃதெனவுணர்க. சீவன்கள் சத்தானவகை யொக்குமென்பதற்

தேதுகாட்ட, ஞானங்கள்வெளிகண்டதாலெனப் பாடங்கொண்டாம். வெளிக
ண்டதாமெனப் பாடங்கொள்ளின், சத்தானவகையொக்குமென்பதற்குப் பொ
ருத்தமின்றிவேறும். இவ்வியையுணராவிடத்துரையென்பயனுறும். அஃதொக்
கின்றபடியெனினுமமையும். (கoஎ)

"சச்சிதாநந்ததணமாயீ, ஒன்றுதம்" என ஒட்டுக. சீவர்கள்சத்தல்லவா
யின், வந்தியாசுதன்போல வியவகாரங் கூடாமையின், "நானென்ற சீவன்கள்
சத்தான வகையொக்கும்" எ-ம், நேத்திராதி இந்திரியங்களின் வாயிலாகப்
பிரமாணமென்னும் அந்தக்கரணத்தின் விருத்திவெளிப்பட்டு உருவமுதலிய
பிரமேயங்களே யடைந்தபோது நான்கண்டேன், கேட்டேனென்னும் அதுவிய
வசாய ஞானவியவகாரம் உளதாகலின், "ஞானங்கள் வெளிகண்டதால்"
என்றுங் கூறினன். "ஞானங்கள்" என்றபன்மை உபாதியானவிருத்தியின்
பன்மையாம் என்க.

அ - கை.

[அதற்குவிடைகூறப்புகுந்தாரிக்கவியிலுபமானபூர்வமாக விருத்திபேதத்
திலுற்குணங்கள்பேதித்ததாகக் காண்பதைக்கூறுகின்றார்.]

**108. உருவங்களிரதங்கள் பரிசங்களொருபூவி லொன்றுகு
மென்றலுமே, கரணங்களோரொன்றி னேரொன்றுதெரியுங் கணக்
கன்றி வாராதுகா, ணருமந்த சச்சிதானந்தச் சுபாவங்களான்மாவின்
வடிவாயினும், பிரபஞ்ச மயமாம் விருத்திபே தத்தினுற் பேதங்களா
மைந்தனே,**

(இ-ள்.) உருவங்களிரதங்கள்பரிசங்களொருபூவி லொன்றுகுமென்றலு
மே,—எ - து. உருவங்களும், சுவைகளும், பரிசங்களும், ஓர்மலரின்கண்பேத
மாகாதபேதமா யேகமாயிருக்கின்றனவெனினும்:—கரணங்களோரொன்றிலே
ரொன்றுதெரியுங் கணக்கன்றிவாராதுகாண்,—எ - து. புறக்கரணமாகியபஞ்
சேந்திரியங்களி லொவ்வொருபொறிகளால், அததற்குரியவொவ்வொருவிடைய
முமுணரப்படும், இங்ஙனமுணரப்படும்வகையாலன்றி வேறொன்றை லுணரப்
படும்வகை யெங்ஙனம்வரும், வராதே:—அருமந்தசச்சிதானந்தச் சுபாவங்க
ளான்மாவின் வடிவாயினும்,—எ-து. அடைதற்கு மிகவுமரிதாயுள்ள சச்சிதா
னந்தமாவிளங்குஞ் சுபாவங்கள், ஆன்மாவின் சுயவடிவாம், சுயவடிவாயினும்:
பிரபஞ்சமயமாம் விருத்திபேதத்தினுற் பேதங்களாமைந்தனே,—எ-து. சத்தபரி
சாதிவிடயமயமாகின்றுள்ள சாத்துவிதமாகிய மூக்குணத்தால்வரும் விருத்தி
பேதத்தினுல் பேதங்களெய்தற்குரித்தாம், ஞானபுத்திரா,—எ-று.

உருவங்கள், அழகுகள். இது கண்ணுலுணர்பவைகள். இரதம், இனிமை.
காவினுக்கன்றிமூக்கினுக்கெனினுமமையும், அமைதலால் சுகந்தமெனப்படும்.
பரிசங்கள், தொக்காலுணர்பவைகள். என்பனவைதிகம். கண், நா, தொக்கு.
இவற்றிற்குவிடயம், உருவம், இரதம், பரிசம், எனவிக்கவியிற்கூறுமுறைமை.
உருவமுதலிய மூன்றும் மலரிலபேதமாயினு மவற்றைத் தனித்தனியுணரும்
பொறிகளாற் பேதமுறுமாறுபோன்று, சத்தமுதலியமூன்றும் ஆன்மாவில்

பேதமாயினு மவற்றைத் தனித்தனியுணருஞ் சாத்துவிதமுதலியவற்றால் வரும் விருத்திபேதத்தினுற் பேதமுறுமெனவுணர்க. அஃதுகரணம், மனம். புறக்கரணம், பொறிகள். இவ்விரண்டுங்கரணமெனினு மிங்கேபொறிகளேயெனக் கொள்க. கணக்கு, விதம் அருமருந்தன்னசச்சிதானந்தமெனற்பாலது, அருமந்த சச்சிதானந்தமென்றாயது, மரூஉ. ஆனமாவுக்குச் சச்சிதானந்தங்கள் சுபாவமெனவும், வடிவமெனவுங் கூறியதால், மூன்றுமொன்றுக்கொன்றபேதமெனவும், இங்ஙனமிருத்தல் சுபாவமெனவும்பெற்றும், விருத்திபேதத்தினுலென்னுது பிரபஞ்சமயமாவெனவடைகொடுத்தது, விடயாகாரமன்றி வேறுகாரஞ் சற்றுமாகாமையினென்க.

(க-து.) சச்சிதானந்தங்கள்; தத்தமிலக்கணங்களைத்தனித்தனியறிவதாற்பேதமுறுவதுபோற் காண்டலன்றித் தமக்கின்மையினபேதமேயென்பது விருத்திபேதம் மறுபாட்டிலிருப்பதாலாங்கே விளக்குதும். உருவமுதலிய மூன்றும் மலருக்குவேறாயின், சத்துமுதலிய மூன்று மான்மாவுக்கு வேறாகலாம். உருவமுதலிய மூன்றுமறிவதாலன்றித் தனித்தனி வெவ்வேறாயின், சத்துமுதலிய மூன்றுந் தத்தமிலக்கணங்களை யுணர்வதாலன்றித் தனித்தனி வெவ்வேறாகலாம். ஆகாதெனின், ஆன்மாவானந்தவடிவமெனலைத் தடையின்றி யேற்கவேண்டுமென்றாயிற்று. காண், அசைநிலை. (கஎஅ)

அடைந்தோரை அஜராமரண ரூபமாக்குதலின், "அருமந்த சச்சிதானந்தச் சுபாவங்கள்" என்றார்.

அ - னை க.

[விருத்திபேதமினையவெனவும், அவைவந்தவகையும் இக்கவியிற்கூறுகின்றார்.]

109. தாமதமிராசதஞ்சாத்துவித முக்குணத்தால்வரும் விருத்தி மூன்றா, மாமவைகண் மூடமுங் கோரமுஞ் சாந்தமு மபிதானமாகு மகனே, யேமுறவிருக்கின்ற சச்சிதானந்தங்க ளென்றென்று மொன்றுகிலு, நாமுரைக் கும்விருத் திப்பிரிவி னுற்சொரூப ஞானதி பிரிவாகுமே.

(இ-ள்.) தாமசமிராசதஞ்சாத்துவித முக்குணத்தால்வரும்விருத்திமூன்றும், எ-து. தாமதம், இராசதம், சாத்துவிதமெனக்குணமூன்றும், இம்மூன்றுனும்வரும்விருத்திபேதமூன்றும்: — ஆமவைகள்மூடமுங் கோரமுஞ்சாந்தமு மபிதானமாகுமகனே, எ-து. ஞானபுத்திரா ! அங்ஙனமூன்றனவைகள்மூடமுங்கோரமுஞ்சாந்தமுமெனப்பெயர்பெறுவனவாம்:— ஏமுறவிருக்கின்றசச்சிதானந்தகங் களன்றென்றுமொன்றுகிலும் எ-து. கெம்பீரமாயிருக்கின்ற சத்து, சித்து ஆனந்தமென்பன, என்றென்றைக்குமொருபடித்தாயே கமாயிருப்பனவாயினும்:— நாமுரைக்கும்விருத்திப்பிரிவினுற் சோரூபஞானதிபிரிவாகுமே, எ-து. யாமுர்கூறிய விருத்திபேதத்தினு லான்மசொரூபமாகிய சித்துமுதலியமூன்றும்பேதிக்கும், எ-று.

தாமதம், மூடம். இராசதம், கோரம். சாத்துவிதம், சாந்தம். என்பன கேர்நிரனிறை. தாமதமுதலியமூன்றுகுணத்தின்தர்மம்,மூடமுதலியமூன்றும். சத்தாதியென்னுதுஞானஞ்சியென்றது, அடியியையுத்தொடைபற்றியென்க. ஒவ்வோருயிர்க்கண்ணுமேனும், மக்களிடத்துமொவ்வொருவர்பாலுமேனும், மூன்றுகுணமிருக்கின்றன, இருக்கினுமன்றுளோர்குணமேலிட்டுநிற்கும், நிற்பதாலதற்கியைந்தவிருத்தியொன்றுமேலிட்டேநிற்கும். விருத்தியுளொன்றுசாந்தம் இத்தச்சாந்தமிருவகைப்படும். அவை, காருணியசாந்தம், உபசாந்தமென்பன. உயிர்க்கிடுக்கணுறுதுபொறுத்தல், காருணியசாந்தம். அன்னியமின்றிச்சமஸ்தமுஞ் சின்மாத்திரம்மாவிளங்குஞ்சாந்தம், உபசாந்தம் இக்கவியில்சாந்தமென்றது, உபசாந்தத்தை. இந்நெறித்தாயவுபசாந்தமெங்கேயுண்டோ,அங்கேவிடயானந்தமின்றியாத்மானந்தம் விளங்கும். விளங்குதலனுபவமாயென்றுநிகழ்தலாலின்றெனமறுத்தல், தானுகாப்பிழை; எனக்குறிப்பித்தற்கிக்கவிகூறியதென்க.

(க-து.) ஆத்மாவானந்தவடிவமன்றெனல் ; விருத்திபேதமறியாக்குறையென்பது. தாமிகுந்தமசிரசுசத்வமெனு மூக்குணத்தால்வரும் விருத்தி மூன்றுமெனப்பாடமுமுண்டு. "இஃதெஞ்சியசொல்லினெய்தக்கூறலென்னு முத்தி" "பிறிதொடுபடா அன்றன்மதங்கொளலென்னு மதம்". ஆன்மாவைக்காணுதாரானந்தம்வேறெனுஞானியர். (கூக)

"ஏழற விருக்கின்ற" என்பதற்கு, உ-ம் தேவாரம்.

"இறுமாந் திருப்பன்கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமானேத்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங் கிறுமாந் திருப்பன் கொலோ."—

எனவரும். மற்றும் வருவனவற்றுற் காண்க.

அ - கை.

[மூடத்திற்சத்தம், கோரத்திற்சத்துஞ்சித்தும் சாந்தத்திற்சத்துசித்துஆனந்தமுமிருக்கக் காணலாமெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

110. சடமான மூடத் தருக்கல்லு மண்களிற் சத்தொன்றுமே தோன்றுமால், விடமான காமாதி கோரத்தி லானந்தம் விளையாது மற்றவைகளாந், திடமான வொழிவாதி சாத்தத்தி லேசச்சி தானந்த மூன்றும்வெளியா, மடமான மூடங்கள் கோரங்கள் விடசாந்த மனமாதி லானந்தமே.

(இ-ள்) சடமானமூடத்தருக்கல்லுமண்களிற் சத்தொன்றுமேதோன்றுமால்,—எ-து. மரம், கல், மண், இவைபோல்பவைசடமாகின்றுள்ள மூடவிருத்திகளாம். இம்மூடவிருத்திகளில் சத்தொன்றுமாத்திரமிருக்கக்காணும்:—விடமானகாமாதிகோரத்தி லானந்தம்விளையாதுமற்றவைகளாம்,—எ-து. விஷம்போல்வனவாகியகாமம், குரோதம், லோபம், இவைபோல்வனகோரவிருத்திகளாம், இத்தக்கோரவிருத்திகளி லானந்தமாத்திரமிருக்கக்காணுது, ஏனையசத்

தஞ் சித்துமிருக்கக்காணும்:—நிடமானவொழிவாதிசாந்தத்திலே சச்சிதானதந் மூன்றும்வெளியாம்,—எ-து. முத்தியெனற்குத் நிடமாநின்றுள்ள, ஒழிவு, சுத்தம், சூனியமுதலாயுள்ளவை சாந்தவிருத்திகளாம், இந்தச் சாந்தவிருத்திக ளில், சத்து, சித்து, ஆனந்தமென்னுமூன்றும் யாவருங்காணவிளங்கும்:—மட மானமூடங்கள்கோரங்கள் விடுசாந்தமனமாகிலானந்தமே,—எ-து. மடமையே வடிவாயுள்ள மூடவிருத்திகளும், கோரவிருத்திகளுமல்லாதகன்ற சாந்தவிருத்தி மயமாகமனமாயிடி னப்போ தான்மாவியல்பாகவே யானந்தவடிவமெனக்கா ணும்,—எ-று.

சச்சிதானந்தமல்லாத சகசீவபரமில்லை. இல்லையாயினும், உணர்தலாலிப் பேதங்காணும். எங்ஙனமெனின், உணர்தல் ; தாமதமுதலியகுணத்திரியத்தி லொன்றின்வயப்பட்டுநிற்கும். இக்குணத்திரியத்திலொன்று தத்தமக்கியைந்த விருத்திபேத மூன்றனுள் தன்சுயதர்ம்மவிருத்தியதாகு மிதனாலெனவுணர்க. மூடவிருத்தியிற்சத்தும், கோரவிருத்தியிற்சத்துஞ்சித்தும், சாந்தவிருத்தியிற் சத்துஞ்சித்துமானந்தமு மிருப்பதெங்ஙனமெனின், மூடவிருத்தியாகிய மரம், கல், மண்முதலியவைக ளணுக்கள்சையோகமேனு மவ்வணுக்கள் பரமாணு வையன்றியில்லை, அந்தப் பரமாணுதன்மாத்திரையைத் தவிரவில்லை, தன்மாத் திரை யகங்காரத்தைத்தவிரவில்லை, அகங்காரம் மகதத்துவத்தைத் தவிரவில்லை, மகதத்துவம், மூலப்பிரகிருதியைத் தவிரவில்லை, மூலப்பிரகிருதி யான்மாவா கிய தன்னைத் தவிரவில்லை, தானுகிறசத்தேயிங்ஙனம் பிரதிபலித்தலாற் சத் தொன்றுமே தோன்றுமெனவும், கோரவிருத்தியாகிய காமக்குரோதாதிகள் தனது விஸ்மரணை காரணமாகவெழு மனர்த்தரூபமாதலா லவைகளே மெய்யெ னக்கோடலால் யானெனதெனவகமமதைதோன்றும். தோன்றவே, யுத்தாயுத் தந்தெரியாது மனஞ்சென்றவழியே பிறர்மனைநயத்தல், பிறர்பொருளவஞ்சித்த லாதி தீவினைகள்புரியவேண்டிவரும். வரவே, யப்போதுசுகம்போலக்காணினுந் துன்பமாகமுடியும், முடிதலால் கோரத்திலானந்தம்விளையாது மற்றவைகளா மெனவும், சாந்தவிருத்தியாகியவொழிவு சுத்தஞ் சூனியஞ் சுபாவ மதிதமாதி கள் தனது தஸ்மரணைகாரணமாகவெழு மர்த்தரூபமாதலால், அவற்றைத் தனது சொரூபமாகவிடா தனுசந்தானஞ் செய்யவேண்டும். செய்யவே, யானென தென்னுமகமமதைதாமேகழலும், கழலவே, யுத்தாயுத்தமென்பதிறந்து மனஞ் சின்மாத்திரமாக விளங்கும் விளங்கவே, யன்னியமின்றித் தான்மாத்திரமாக நிற்கவே, சத்தே சித்தாகவும், சித்தே சத்தாகவுமைக்கியமெய்தும். எய்தவே, யானந்தந்தானுகமுடியும். முடியவே, சச்சிதானந்தவொருமையதாம், ஆதலிபற்றி யொழிவாதிசாந்தத்திலே சச்சிதானந்தமூன்றும் வெளியாமெனவுங்கூறினர்.

(க - து.) விருத்தித்திரியமினையவெனவும், அவற்றுற் சச்சிதானந்தபேத மினையவெனவம், ஒருமையினையவெனவும் விளக்கியதென்பது. மூடங்கள் கோரங்கள்விடுசாந்த மனமாகிலானந்தமேயென்றது ; மனது மூடவிருத்தியா கில் சத்தும், கோரவிருத்தியாகில் சத்துஞ்சித்தும், சாந்தவிருத்தியாகில் சத்துஞ் சித்துமானந்தமுமெனப் பொருடரற்கென்க. எனவே, மனங்காரணமாகவிப்பே தாபேதந் தோன்றிற்றேயன்றி யான்மாவுக் கின்றெனப்பெற்றாம். பெறவே,

யான்மா சச்சிதானந்த மென்றுயிற்று. யிஃதறியார் சச்சிதானந்தசொரூபந் தன்னைவிட வேறென்பர். இவர் தன்னிலக்கணங்கல்லா தன்னியலிலக்கணங்கற் றூர்போலும். ஆல், அசைநிலை. தருக்கல்மண்ணென்னுது கல்லுமெனவுகரச்சா ரியைபெற்றது ; ''ஞன்மலவள்ளவொன்றிறுதொழிற்பெயரே வல்வினைநனி யவ்வன்மெய்வரி னுவ்வுறுமேவலுறுஞிலசில்வழி'' யென்னும் விதியாலென்க. ஆன்மா சச்சிதானந்தவிலக்கண மகன்றதுங்கூடியதும்போல்வதன்றி வேறன் றென்க. (கக0)

கோர. மூடவிருத்திகளில் சுகாநுபவங்காணப்படவில்லை : சாந்தவிருத்தி யில் சுகாநுபவங் காணப்படுகின்றது ; அதுவும், நியூனமதிகமாகக் காணப்படு கின்றது. கோர மூடவிருத்திகளில் சுகம் என் காணப்படவில்லை எனின் ;— கிரகக்ஷேத்திராதி விஷயங்களும் இது நமக்கு வேண்டுமென்னும் இச்சையுண் டாகும்போது கிடைக்குமோ ? கிடையாதோ என்னும் சமூசயமுண்டாவதாற் றுக்கமுண்டாகின்றது ; கிடையாமற்போமாயின், அத்துக்கமிகுகின்றது ஒருவ ரால் விக்கினஞ் செய்யப்படின், குரோதமுண்டாகின்றது : பிரதிபந்தத்தை நிவிர்த்திக்கக்கூடாவிடின், விஷாதமுண்டாகின்றது ; இப்படிக் குரோதாதிக ளில் மஹத்தான துக்கமே யிருக்கிறது : சுகமுண்டென்பதற் கிடமில்லை. வாஞ் சிதவஸ்து லபித்தபோது சாந்தவிருத்தி யுண்டாகின்றமையின், மஹத்தாகிய சுகமுண்டாம். போகத்தில்மஹத்தரசுகமுண்டாம் : இலாபப்பிரசக்தியில் அற்ப சுகமுண்டாம். சாந்தவிருத்தியிலும் விஷயலாபத்திற்குத்தக்கதாகத் தாரதம்மிய சுகம்பாகமாம். ஞானிக்கு இச்சையினபாவரூப வைராக்கியத்தால் ‡ மகத்தம சுக முண்டாகும் ; இது வித்யானந்தமாம் என்றறிக.

கோர, மூடவிருத்தியிரண்டும் கலங்கியவிருத்தியாதலால், சத்தும், சித்து மன்றி அவைகளி லானந்தந்தோன்றுமல் சாந்தவிருத்தி நிர்மலமாதலால் அதில் சச்சிதானந்தங்கண்மூன்றும் பாகமாகின்றன ; ஆதலால், சத்துஞ் சித்தும்போல ஆனந்தமும், ஆன்மாவின் சொரூபமென்றே அறியற்பாலதென்று தாற்பரியம்.

அ - கை.

[சச்சிதானந்தவிலக்கணமினையதெனத்தெரியாது எங்ஙனமான்
மாவுக்கென் றேற்பனென்றவிஞ்ஞுக்கு விடையிக்
கவியிற்கூறுகின்றார்.]

111. இகமான குருநாத னேசச்சி தானந்த மெனுமிலக் கணமறி கிலே, னகலாத சத்தாவ தேதுசிக் தாவதே தானந்த மேதென்றி டின், மிகுகால மூன்றுங் கெடாதிருப் பதுசத்து வேறுபா டறிதல் சித்தா, மகிழ்காம நுகர்போது சுகமாகு மனுபூதி வாழ்வென்ப தா னந்தமே.

(இ-ள்.) இகமானகுருநாதனேசச்சிதானந்தமெனு மிலக்கணமறிகிலேன்,— எ-து. இம்மையிலடியேனுக்கியைவதான குருசாமியே ! சத்து, சித்து, ஆனந்த

‡ மகத்தமம்=நிரதிசயம்.

மென னுமிலக்கண மினையவெனக்கேட்டதிகிலேன். ஆயினும்:—அகலாதச்ச தாவதே தது சித்தாவதேதானந்தமேதென்றிடின்,—எ-து. விடாதுநின்றுள்ள சத் தென்பதியாது, சித்தென்பதியாது, ஆனந்தமென்பதியாதெனக் கேட்பையா யின்:—மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பது சத்து வேறுபாடறிதல்சித்தாம்,— எ-து. அளவுக்கடங்காதுமிகுகின்ற இறப்பெதிர்நிகழ்வெனக்கூறுங்காலமூன் றினு மிடையினீங்காதிருப்பதுயாதோவதுசத்தெனவும், இங்ஙனமாகநின்றநு கலிங்கவேறுபாடகல வவற்றைவிசாரித்திடுதல்யாதோ வதுசித்தெனவும் வழங் கப்படுவதாம்:— மகிழ்காமதுகர் போதுசுகமாகு மனுபூதி வாழ்வென்பதானந் தமே,—எ-து. எவருமகிழத்தக்க காமவின்பத்தை யனுபவிக்கும்போதெங்ஙனஞ் சுகமெழுமோ வங்ஙனம்போல்வதாகிய சுவானுபூதி சுகவாழ்வெனப்படுவதி யாதோ வஃதானந்தமெனப்படுவதாம்,—எ-று.

சச்சிதானந்தவிலக்கணம் பிரமத்துக்கல்லது வேறென்றுக்கல்லாமையின் பிரமமிலக்கியமெனப் பெற்றும். இலக்கியத்தினமைதி யிலக்கணமாதலானும், இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பலினென்றிருப்பதானும், மாணாக்கனிலக் கியமாகியபிரமத்தை யுணர்ந்ததுபற்றி யதினிலக்கணத்தையுணரவேண்டி விஞ வினனென்க. மிகுமென்னுமிகையா லிங்ஙனங் காலந்திரிவிதமாதல் கணக்கின் மையெனக்குறிக்கக்கண்டாம். மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பது சத்தென்ற தனால், காலாதீதமெனவும் ; வேறுபாடறிதல் சித்தாமென்றதனால், அங்ஙனங் காலாதீதமானின் றறிவதியாமை பாகுபாட்டையேகமாக் கற்குவிசாரியாநிற்ற லெனவும் ; மகிழ்காமதுகர்போது சுகமாகுமனுபூதி வாழ்வென்பதானந்தமே யென்றதனால், ஆலிங்கனகாலத்திருவரு னமொத்துப் புணருங்கா லிருவர்ய னதையுமடக்கி மேலெழுஞ்சுக மெங்ஙனமோ வதுபோல, அறிவு மானந்தமும் தமக்குள் பேதமின்றி விசாரித்துத் தெளியுங்காலத் தறிவேயானந்தமாகவும், ஆனந்தமே யறிவாகவுமாகும். ஆகுங்கால் மனமென்பதிறந்து சின்மாத்திரமாக விளங்கும். விளங்கவே, சங்கற்பமிறக்கும். இறக்கவே, துக்கநிவர்த்தியாம் ஆகவே, தடையற்றவானந்தமாத்திரமேலிட்டுநிற்கும். நிற்கவே, சமஸ்தமுமா னந்தமயமாகவே நிகழுமெனவுமருத்தந்தரக்கண்டாம்.

(க-து) இங்ஙனமாயநிலையே சச்சிதானந்த விலக்கணமென்பது. இந்நிலை வழுவுவார்க்குப்பயனென்.

(ககக)

யாதொருவஸ்து ஞானத்தால்அபாவமாமோ அஃதசத்தென்றும், யாதொ ருவஸ்து யாதொரு காலத்தும் நிவிர்த்தியாகாதோ அது சத்தென்றுஞ் சொல் லப்படும் சர்வபதார்த்தங்கட்கும், அவைகளி னிவர்த்திக்கும் ஆன்மா அதிஷ்டா னமாம் ; ஆன்மாவுக்கு நிவிர்த்தியுணடெனின் ;—சூனியத்தில் நிவிர்த்தி கூடா தாகலின், அதற்கு வேறே அதிஷ்டானஞ் சொல்லல்வேண்டும் ; ஆன்மாவிற் கும், அதனிவிர்த்திக்கும் அந்நிய அதிஷ்டானமங்கீகரிக்கின் அதற்குவேறே அதிஷ்டானமங்கீகரிக்கவரும். இவ்வாற்றால், அநவஸ்தையுளதாம் ; அன்றியும், ஆன்மாவினிவிர்த்தி அங்கீகரிப்பவரை ஆன்மாவின் நிவர்த்தி யாரேனு மநுபவித் ததுண்டா ? அல்லது இன்று என்று வனவுவாம் ; அநுபவித்ததுண்டெனின் ;— அது பொருந்தாது. என்னை ? அநுபவித்ததுயாது அது ஆன்மாவாம் ; அன்றி

யும், தன் சொரூபநிவிர்த்தியினது பவம் தனது மஸ்தகச்சேதனத்திற்குச் சமானவதுபவமாம் ; ஆகலால், ஆன்மாவின் நிவிர்த்தியநுபவம்பொருந்தாது ; ஆன்மாவின் நிவிர்த்தியுணடு, அதனநுபவம் ஒருவர்க்குமில்லையெனின் ;—அப்போது ஆன்மாவின்நிவிர்த்தி இல்லையென்னும் வார்த்தை சித்தித்தது. என்னை? யாதொருவரானும் அநுபவிக்கப்படாத ஒருவஸ்து வந்தியா புத்திரனுக்குச் சமானமாம் ; ஆகலின், ஆன்மா ஒருபோதும் நிவிர்த்தியாவதில்லை ; இதனால், ''மீதகால முன்றுங்கடாதிருப் பதுசத்து'' என்றார்.

ஆன்மா சித்தாம் : பிரகாசரூபமான யாதொரு ஞானமுண்டு அது சித்தெனப்படும் ஆன்மா அப்பிரகாசரூபமென்னின் ; அநான்மாக்களாகிய சடவஸ்துக்கள் ஓர்போதும் பிரகாச மாகா. அந்தக்கரணம், இந்திரியம் இவைகளால் பதார்த்தங்கள் பிரகாசிக்கின்றனவென்னின் ;—அது பொருந்தாது. என்னை ? அந்தக்கரணமும், இந்திரியங்களும் பரிச்சின்னங்களாகலின், காரியங்களாம் : தேசகாலங்களால் யாது அந்தமாமோ அது பரிச்சின்னமெனப்படும் ; யாதொன்றுகாரியமாமோ அது சடமாமாகலின், அந்தக்கரணமும், இந்திரியங்களுஞ் சடமாம் ; அவைகளால் யாதொருவஸ்துவும் பிரகாசியாது ; ஆதலால், யாதொரு ஆன்மா சர்வத்தையும் பிரகாசிப்பிக்கின்றதோ அது பிரகாசரூபமாம் ; ஆன்மா பிரகாசரூபமன்றி பின்னேயோ சடமாம், அதன்கண் ஞானகுணமுண்டு அந்த ஞானத்தால் ஆன்மாவும், அநான்மாக்களும் பிரகாசிக்கின்றனவெனின் ;—இங்ஙனங்கூறநிற்பவரை ஆன்மாவின்ஞானகுணம் நித்தியமா ? அல்லது அநித்தியமா என்று வினவுவாம் ; நித்தியமெனின் ;—ஞானம் ஆன்மாவின் சொரூகமென்றேசித்தித்தது. என்னை? இது நியமம்: யாதொன்று ஆன்மாவின்வேறே அஃதநித்தியமாம் ஞானத்தை ஆன்மாவின்வேறுகவங்கீகரிக்கில், அநித்தியமேயாம்; ஆதலால், நித்தியமாகவொப்பி ஆன்மாவின்வேறுக ஞானமுண்டென்னல் பொருந்தாது. அநித்தியமாகவங்கீகரிக்கில், கடாதிகள்போலுஞ்சடமாம் ; யாதொன்றநித்தியவஸ்துவாமோ அது சடமாம் ; ஆகலால், ஞானம் அநித்தியமென்னல் பொருந்தாது, பின்னேயோவெனின் ;—ஞானம் நித்தியமேயாம்: அந்நித்தியமான ஞானம் ஆன்மாவின்சொரூபமே ; அநித்தியமென்றங்கீகரிக்கில், ஆன்மாவின்கண் ஞானம் ஓர்போதிருப்பதும், ஓர்போதிராததுமாம் ; ஆதலால், ஞானம் ஆன்மாவின்வேறுமாம் ; ஞானம் நித்தியமென்றங்கீகரிக்கில், வேறுகாது. யாதொன்றுகுணமாமோ அது குணமுடையதன்கண் ஓர் பொழுதிருப்பதும், ஓர் பொழுதிராததுமாம் ; அஃதெங்ஙனமெனின் ;—வஸ்திரத்தின்கண் நீலாதிகுணங்கள் ஒருகாலிருப்பதும், ஒருகாலில்லாமற் போவதும் போலாம் ; அப்படிப்போகாமல் ஞானம் நித்தியமாயிருத்தலால், ஆன்மாவின் சொரூபமென்றே கொள்ளற்பாலதாம்.

ஞானத்தை அநித்தியமெனின் ;—இந்திரியம், அல்லது அந்தக் கரணம் இவைகளால் ஞானம் உற்பன்னமாயிற்றென்று சொல்லல்வேண்டும் ; அது கூடாது என்னை ? சுழுத்தியின்கண் இந்திரியாதிகளில்லாதிருக்கவும் சுகத்தின் ஞானம் உண்டாகின்றது ; அஃதுண்டாகவேண்டுவதில்லை ; சுழுத்தியின்கண் சுகத்தின்ஞானம் அங்கீகரிக்கவில்லையாயின், விழித்து நான் சுகமாக நித்திரைப

செய்தேனென்று சுழுத்திச்சுகத்தின் ஸ்மிருதியுண்டாகின்றது ; அஃதுண்டாகவேண்டுவதில்லை. யாதொருவஸ்துவின்ஞானம் பூர்வமுண்டோ அதன் ஸ்மிருதி உண்டாகின்றதே யல்லாமல். அஞ்ஞாதவஸ்துவின் ஸ்மிருதி உண்டாகின்றதில்லை : சுழுத்திச்சுகத்தின் ஸ்மிருதி விழித்தபொழுதுண்டாகின்றது ; ஆதலால், சுழுத்தியின்கண் சுகதன்ஞானம் உண்டாயிருக்கின்றது ; அந்தஞானத்திற்கு ஜகமாக இந்திரியாதிகள் சுழுத்தியின்கண் இல்லை ; ஆதலால், ஞானம் நித்தியமாம் : ஞானத்தைவிடுத்து ஆன்மா ஒருபொழுதுமிருக்கவில்லை ; ஆதலான், ஞானம் ஆன்மாவின்சொரூபமாம். எப்படி உஷ்ணத்தன்மையைவிடுத்து அக்கினி ஒருபொழுதுமிராமையால் உஷ்ணத்தன்மை அக்கினியின்சொரூபமோ அப்படி ஞானமும் ஆன்மாவின்சொரூபமாம். யாதொன்று ஆகமாபாயியாயோ அது குணமாகும் : உஷ்ணத்தன்மையும், ஞானமும் ஆகமாபாயியல்ல ; ஆதலால், முறையே அக்கினி, ஆன்மா இவைகளின் சொரூபங்களாம் : யாதொருவஸ்து ஒருகாலிருந்து ஒருகாலிராதோ அது ஆகமாபாயியெனப்படும் ; உற்பத்தியும், விநாசமும் அந்தக்கரணத்தின்விருத்திக்குளவாகாநிற்கும் : ஞானத்திற்கில்லை. ஆன்மசொரூபமாகிய யாதொருஞானமுண்டோ அது விசேஷவியவகாரத்திற்கேதுவல்ல ; மற்றெது ஏதுவெனின் ;—ஞானசகிதவிருத்தி, அல்லது விருத்தியின்கண் ஆருடஞானம் வியவகாரத்திற்கேதுவாம் : இஃதவச்சேதவாதத்தின்கொள்கை. ஆபாசவாசத்தில் ஆபாசசகிதவிருத்தியால் வியவகாரமாம் ஆபாசவாயிலாக அல்லது நேரேவிருத்திவாயிலாக ஆன்மசொரூபஞானத்தாலே யேசர்வவியவகாரங்களும் உளவாம் : இல்லையாயின், உளவாகா ; இவ்வாறு, ஆன்மாசர்வப்பிரகாசகஞானசொரூபமாக இருப்பதால், "வேறுபாடறிதல்சித்தாம்." என்றார்.

ஆனீமா ஆநந்தரூபமாம் ; அல்லவெனின் ;—விஷயசம்பந்தத்தால் யாதொரு சொரூபாநந்தத்தின் பாகமுண்டாகின்றதோ அஃதுண்டாகவேண்டுவதில்லை. விஷயத்தின்கண் ஆநந்தமில்லை ; உணடெனின் ;—யாதொருவிஷயத்தால் எந்தப் புருஷனுக்குச் சுகமுண்டாமோ அதனுலேயே அந்நியனுக்குத்துக்கமுண்டாகின்றது. அஃதெங்ஙமெனில் ;—அக்கினியின்பரிசத்தால் அக்கினிகேடத்துக்கும், சர்ப்பசிம்மங்களினுருவங்களைக்காண்டலால் † சர்ப்பணி, சிம்மனிகளுக்கும் ஆநந்தமுண்டாகின்றது ; அஃதுண்டாகவேண்டுவதில்லை ; சித்தாந்தத்திலோ அக்கினிகேடத்துக்கு அக்கினியின்பரிசவிச்சையுண்டாமேல், அப்பொழுது சொரூபாநந்தத்தின் பாகமுண்டாகிறதில்லை; அக்கினிசம்பந்தத்தால் கூடணமாத்திரம் இச்சைநீங்கி நிச்சலபுத்தியின்கண் சொரூபாநந்தத்தின் பாகமாகின்றது ; அந்நியபுருஷனுக்கு அக்கினிசம்பந்தத்தினிச்சையில்லை ; பின்னேயாதுண்டெனின் ;—அந்நியபதார்த்தத்தினிச்சையுண்டு ; அவ்வந்நியபதார்த்தத்தினிச்சை அவற்றனன்றி அக்கினிசம்பந்தத்தாலிவிர்த்தியாகாது. ஆதலால், அவனது சஞ்சலவந்தக்கரணத்தின்கண் அக்கினிசம்பந்தத்தால் ஆநந்தமுண்டாகமாட்டாது. சங்கை ;—யாதொரு இச்சாரூபமான அந்தக்கரணத்தின் விருத்தியுண்டோ அது அவ்விஷயப்பிராப்தியால் நாசமாய்விட்டது ; அந்நியவிருத்திக்கு

† சர்ப்பணி, சிம்மனி என்பன, சர்ப்பசிம்மங்களின்பெண்பால்,

யாதொருநிமித்தமுமில்லை ; ஆகலின், அந்நியவிருத்தி உற்பத்தியாகவில்லை. விருத்தியின்றிச் சொரூபாநந்தம் பாசமாகாதாகலின், விஷயத்திலேயே ஆநந்த முண்டெனின் ;—அது கூடாது. என்னை ? இச்சாரூப அந்தக்கரணத்தின் விருத்தி அபாவமாயிருக்கின்றதுணமைதான் ; "அவ்விச்சாரூபவிருத்தி அபாவமா காதிருக்கினும் அஃதிராஜதமாகலின், அதன்கண் ஆநந்தம்பிரகாசமாகாது ; ஆநந்தத்தின்பிரகாசம் சாத்வீகவிருத்தியின்கட் டோன்றும் : சத்துவகுணத்தால் ஞானமுண்டாமென்பது நியமமாகலின் வாஞ்சிதபதார்த்தங்கிடைத்து அதை விஷயம்பண்ணும்பொருட்டு யாதொரு அந்தக்கரணத்தின் ஞானரூபவிருத்தி யுண்டாகின்றதோ அது சாத்வீகந்தான் ; அச் சாத்வீகவிருத்தியில் ஆநந்தம்பாச மாம் ; ஆயினும், அந்த ஞானரூபவிருத்தி பகிர்முகமாகவிருப்பதால் அதன் பிருஷ்டபாகத்திலுள்ள அதனுபகிதசேதனசொரூபாநந்தத்தை அது கவராது ; ஆதலால், விஷயவுபகிதசேதனரூபாநந்தம் அவ்விருத்தியிற் பாசமாகின்றது ; அவ்விஷயவுபகிதசேதனம் ஆன்மாவின்வேறல்ல ; ஆகலின், ஆன்மாநந்தமே விஷயத்தில பாசமாகின்றதென்று சொல்லப்படுகின்றது ; அந்த ஞானரூப விருத்தியில் விஷயத்தோடுகூட நேத்திராதி இந்திரியங்களின் சம்பந்தமே நிமித்தமாம் ; அல்லது, யாதொருஞானரூபபகிர்முக விருத்தியுண்டோ அதனினுமந் நியமாக அந்தர்முகவிருத்தியுண்டாகின்றது, அதன்கண் அந்தக்கரணவுபகிதசே தனரூப ஆநந்தமே பாசமாகின்றதென்னும் இது உத்தமசித்தாந்தமாம் ; அவ்வி ருத்தியினுற்பத்தியில் இச்சைமுதலியவற்றினபாவமே நிமித்தமாம். இச்சை முதலியவையின்றி ஏகாந்தத்துதாசீனனுயிருக்கும் புருஷனுக்குப் பகிர்முகஞா னரூபவிருத்தியுண்டாகாதிருந்தும் ஆநந்தம் பாசமாகின்றது ; ஆதலால், இச்சை முதலியவற்றின் அபாவரூபநிமித்தத்தால் ஆநந்தத்தத்தைக் கவர்வதாய் அந்தர் முகவிருத்தியப்படியுண்டாகின்றதோ அப்படி வாஞ்சிதவிஷயலாபத்தால் உள தாகும் இச்சைமுதலியவற்றின பாவத்தால் ஞானத்திற்குப்பின்னர் அந்தர்முக் விருத்தியுண்டாய் அதனால், அந்தக்கரணவுபகிதவாநந்தமே கவரப்படுகின்றது ; அச் சொரூபாநந்தத்தின் கவர்ச்சியும், விஷயத்தின்ஞானமும் அத்தியந்தம் அவ் வியவகிதமாயிருத்தலின், புருஷனுக்கு யான் விஷயத்தில் ஆநந்தமநுபவித்தே னென்னும் பிராந்தியுண்டாகின்றது. பிரதமபட்சத்தினும் இப்பட்சம் உத்தம மாம். என்னை ? விஷயஞானரூபவிருத்தியினுன் அந்தக் கரணவுபகித ஆநந்த பாநங்கூடாது ; கூடுமாயின், மார்க்கத்திற்செல்லுழியுளதாகும் விருட்சத்தின் ஞானரூபவிருத்தியும் சாத்துவிகமேயாதலால், அதனுனும் விருட்சவுபகிதசே தனசொரூபத்தின் ஆநந்தம் பாசமாதல்வேண்டும். அப்படியே சர்வஞானத்தா லும் ஜேயவுபகிதசொரூபத்தின் ஆநந்தம் பாசமாதல்வேண்டும் ; அங்ஙனமாகா மல் ஆன்மசொரூபத்தின் ஆநந்தமே பாசமாவதால், "மகிழ்காமநுகர்போது சுகமாது மநுபூதி வாழ்வென்ப தாநந்தமே" என்றார். இவ்வாறே வாசிட்டத் தும் சித்தர்,

"அறிவானு மறிபொருளுங் கூடியகூட் டாவிலெழு மறிவானந் தம், பிறிபாத வான்மதத் துவத்தெழுந்த தாமதனைப்பேணல் செய் வாம்."—என்றனர்.

திரிகாலத்தினும் அபாத்தியமாருப்படதே சத்தினிலக்கணமென்று, சர்வப் பிரகாசகஞானசொருபமாக இருப்பதே சித்தினிலக்கணமென்றும், விஷயசம்பந்தத்தாற் சாத்துவீக அந்தக்கரண விருத்தியின்கண் ஏழாநிற்குஞ்சுகமே ஆநந்தத்தினிலக்கணமென்றுங்கூறியதாம்.

அ - கை

[ஆன்மா தான்சச்சிதானந்தமேயென விசாரித்துத்தெளிந்தலிடத்து நிகழு மனுபவம்யாதெனவினவலை யிக்கவியிற்கூறுகின்றார்]

112. நாசச் சரீரத் திருக்குஞ் சரீரிதனே நால்வேத மாவாக்கிய நீசச்சி தானந்த மென்றிடினு மாசிரியர் நீபிரமமாகு மெனினு, மாசற்ற சச்சிதா னந்தநா னென்னவிவன் மன்னுமனு பவமெங்ஙனே, கோசப் புரங்களை யிடித்துத் தகர்த்தமத குஞ்சரக் குருநாதனே

(இ-ள்.) நாசச்சரீரத்திருக்குஞ்சரீரிதனே நால்வெதமாவாக்கியம்—எ-து. நாசமுறுதலையேயியல்பாகவுடைய சரீரத்திலிருக்குஞ்சரீரியாகியவான்மாவை நோக்கிநா ன்குவேதங்கட்கும் முடிவாயுள்ள மகாவாக்கியங்கள்:—நீசச்சிதானந்தமென்றிடினு மாசிரியர்நீபிரமமாகுமெனினும்,—எ-து. நீசச்சிதானத்தசொருபமே வேறன்றெனச்சொல்லினும், .அல்லதுசற்குருநாதனெழுந்தருளிவந்து நீபிரமசொருபமேவேறன்றென வுறுதியாகச்சொல்லினும்:—மாசற்றசச்சிதானந்தநானென்னவிவன்மன்னுமனுபவமெங்ஙனே, எ-து. இயல்பாகவேமலரகிதமாயுள்ள சச்சிதானந்தசொருபமேதனதுசுயவடிவமெனவொருவன் விசாரித்துத்தெளிந்தறியதனலிவனடைந்த சுவானுபவமெங்ஙனமாயதோ:—கோசப்புரங்களையிடித்துத்தகர்த்தமத குஞ்சரக்குருநாதனே, எ-து. தடையாயுள்ளவன்னமயமுதலியபஞ்சகோசமென்னும்பட்டணங்களை யிடித்துத்தூளாக்கிய மதயானைபோன்ற குருசாமியே, எ-று.

நீசச்சிதானந்மென்றதும், நீபிரமமென்றதுமுபதேசமொழி. அங்ஙனமனுஷ்டித்துத்தெளிந்தவனெய்தியபலனை விசாரித்தது, தாழ்தற்சென்க. அவனனுபவமெங்ஙனமாயதோ வதனையானறிய வுணர்த்தியருளுமெனப் பொருடருதலால், ஓகாரமொழியிசை. நானேசச்சிதானந்தசொருபமென வொருவன் விசாரித்துத்தெளிந்து சொல்லாநிற்கவெனப் பொருள்கொண்டு சச்சிதானந்த நானென்னவென்பதைச் செயவென்னும்வாய்பாட்டு வினையெச்சமாக்குக. எங்ஙனேயெனப்பாடமுமுண்டு. கோசப்புரங்கள் உருவகம் புரங்களையிடித்தலுந்தகர்த்தலும் மதங்கொண்டபோது யானைக்கியல்பாமாறுபோன்று, கோசங்களையுருவழித்தலும், அவையிருந்தவிடமுந்தெரியாதழித்தலும் ஞானச்செருக்குமேலிட்டபோது ஞானவானுக்கியல்பாதல்பற்றி யிங்ஙனங் கூறியதென்க.

சச்சிதானந்தமாயவிடத் தெய்தமனுபூதியாதென வினவினனென்பது. ஆன்மாவேச்சிதானந்தமாயவிடத்துப் பிரமமாதற்கையமென்னை ? இவ்விரண்டுமுபதேசமுமொன்றே.

பஞ்சகோசத்தில் நானென்னும் புத்திரூப அபிமானத்தைச் சுருதியுத்திக ளால் அபாவமாக்குவதை,''இடித்துத்தகர்க்கும்', என்றார்.''தூஞ்சாம்'' எ-து. உருவகம். (ககஉ)

அ - மை க.

[ஆன்மாசத்தெனவிக்கவியிற்கூறுகின்றார்,]

113. சென்மாந் தரஞ்செய்த வினைகளுட நருமெனிற் செல்கால மிவ னுண்ட லோ, கன்மானு பவரூக சொர்க்கமெனில் வருகின்ற காலத் து மிவனுண்டலோ,வுன்மாத யாதனு வுடலகடவு ளுடன்மனுட வுட ன்மாறி மாறியழியுந், தன்மாயவுடல்கெடினு மிவனிருப் பதுகொண் டசத்தென்ப தொக்குமகனே.

(இ-ள்.) சென்மாந்தரஞ்செய்தவினைகளுடநருமெனிற் செல்காலமிவனு ண்டலோ, எ-து.. ஆன்மாதான்பூர்வசென்மங்களிற்செய்துவந்த நல்வினைதீவி னைகள்தேகத்தைத்தருமெனச் சத்தப்பிரமாணமிருக்குமெனில், ஆன்மாவாகிய விவன் முன்சென்றகாலங்களிலெல்லா மிருந்திருப்பானலவா:—கன்மானுபவரூ சொர்க்கமெனில்வருகின்றகாலத்து மிவனுண்டலோ, எ-து. இப்போதுசெய் துவருநற்கன்மந் தூர்க்கன்மத்துக்கேடாக வினிவருமனுபவமாவது; நரகமாவது சொர்க்கமாவதெனக்கூறின், இனிவருங்காலத்துமான் மாவிருக்கவேண்டுமல்ல வா:—உன்மாதயாதனுவுடல்கடவுளுடன் மனுடவுடன் மாறிமாறியழியும், எ-து. உன்மத்தமாகியயாதனுசரீரமும், தேவசரீரமும், மனிததேகமும்நிலையா துமாறிமாறியழிந்துபோகும்:—தன்மாயவுடல்கெடினு மிவனிருப்பதுகொண்டு சத்தென்பதொக்குமகனே, எ-து. தனதுபிராந்திகாரணமாகவந்த தேகமழியி னுந் தானல்லாததா லான்மாவிருக்கின்றனன்றே, இவனிருப்பது பற்றிச் சத் தென்பதிவனுக்குப்பொருந்துமச்சற்புத்திரா, எ-று.

சென்மங்காரணமாகவான்மாவுண்டெ னலெவர்க்குமரபாதலினுனும்,அந் நெறியேயேனு மான்மாமுக்காலத்துமுண்டெனலே நிலையுறுத்தப்புகுந்தாரிந் நூலாசிரியராதனுலும், இதனைமறுக்கற்பாற்றன்று. மறுப்பாரான் மாகாரண மாகப்புகவேண்டும், புகினும், ஆன்மாதிரிகரணங்கட்குமெட்டுவதன்று, ஆதலி னனுமானத்தாலுண்டெனலேபொருந்துமென்க. அனுமானம், புகைகாரணமா நெருப்புண்டெனல். இங்ஙனமாகவேனு மான்மாசத்தெனற்குத்தடையென்னே யுள. கன்மத்துக்கிடாகத்தேகங்கள்வந்தகல்வனவெனவே, ஆன்மாவிருந்தன்றே கன்மம்புரிய வேண்டுமென்பதனுணித்தியமாயிற்று. தேகங்க ளான்மாவாயி னவையோலவான்மாவும் வந்துவந்தகலலாம். போகமான்மாவுக்கோ, தேகத் துக்கோ? தேகஞ் சடம், அகர்த்தா, விகாரவடிவம், தூணைக்கருவியாதலின் தேகத்துக்கன்று, ஆன்மாவுக்கெனப்படும். ஆன்மாவிருந்துதானேதேகபோகங் களையனுபவிக்கவேண்டும், இன்றேல்யாதுக்கனுபவம், ஆதலினான்மாவே சத் தெனப்படும். ஆதியந்தமேற்றலின் தேகந்தேகியன்று. ஆராவியற்கையவாக் கோடலும், அகற்றலும், பந்தமுத்தியாதலினிதனையுடையதுதேகமன்று தேகி யெனற்கையமென்னை? இதனுனுமான்மாசத்தெனப்படும். ஆன்மா தானைத்

தேகமுமன்று, தன்னேத்தவிரவுமில்லே. எனவே, யெல்லாமாயுமல்லவுமாயிரு ப்ப தான்மாவெனப்பெற்றம். பெறவே, பிராதிபாலிகசத்து, விவகாரிகசத்து, பாரமார்த்திகசத்தென்னும்போலிசத்தன்று, எதார்த்தசத்தான்மா வென்றுயி ற்று. ஆகவே, யிதனேயகற்றற்கிடமின்றெனக்கண்டாம் இஃதெமதுதுணிபு.

(க-து.) ஆன்மாவே சத்தெனப்படுவதன்றி வேறின்றெனவுணர்கவென் பது. தெளிந்தார்க்கிஃ தடன்பாடு, ஏனேயோர்க்கன்று வேறென்பர். வேறென் னல் சொல்வாதம், அர்த்தவாதமன்று. அல்லவோவெனற்பாலது, அலோவெ ன்றுயதிடைக்குறை. (ககக)

தரித்திரன், மகாராஜன், கருமி, பக்தன் மூமுட்சு இவ்வைவருடைய வசனத்தால, "சென்மாந்த ரஞ்செய்த வினேகளூட நருமெனிற் செல்கால மிவனுண்டலோ, கன்மாநு பவநரக கோர்க்க மெனில் வருகின்ற காலத்து மிவனுண்டலோ" எனினும் ஆம் ; இவ்வைவர்வசனம் வாசுதேவமனனத்தில் சச்சிதாநந்த நிருபணத்திற்காண்க. ()

அ - கை.

[ஆன்மாவேசத்தென்றற்போலச்சித்தெனலேயுமானந்தமெனலேயுமேற்குமென் றிக்கவியிற்கூறுகின்றார்.]

114. இருளாக மூடுஞ் சுழுத்தியி லிராத்திரியி லிரவிசுட ரற்றபொ ழுதும், மருளாம லிருளேயும் பொருளேயுந் தெரிகின்ற வகைகொ ண்டு சித்தாகு மே, பெருவாழ்வு மிக்கதா னேதன் னிடத்தினிற் பேராத பிரியமத னு, லருகாத பிரியஞ் சுகத்தில்வருமாதலா லான ந்த மாமைந்த னே.

(இ-ள்.) இருளாகமூடுஞ்சுழுத்தியி லிராத்திரியி லிரவிசுடரற்றபொழு தும், எ-து. இருள்மயமாக வெங்கணு மூடிக்கொள்ளத்தக்க சுழுத்தியவத்தையி லும், கருக்கலிரவிலும், சூரியனும்விளக்குமில்லாதபொழுதும்:—மருளாமலிரு ளேயும்பொருளேயுந்தெரிகின்ற வகைகொண்டுசித்தாகுமே, எ - து. ஐயத்தால் மயங்காம லங்ஙனமூடியவிருளேயும் வைத்தபொருள்களேயுந் தெரிந்துகொள் ளும்விதத்திலு லான்மாசித்தெனப்படுவதாம்:—பெருவாழ்வுமிக்கதானேதன்னிட த்திற் பேராதபிரியமதனுல், எ-து. தடையற்றவானந்தானுதலால் பெரிதானவாழ் வில்மிகுந்ததுதானே; யிங்ஙனமாய தானேதன்னிடத்தினிக்கமற்ற பிரியவடிவா யிருப்பதினுல்:—அருகாதபிரியஞ்சுகத்தில்வருமாதலா லானந்தமாமைந்தனே,— எ-து. என்றுஞ்சுருங்காததற்பிரியமானது தானுனந்தவடிவமாதலால் தனதான ந்தத்திலெழுகின்றது. இதுபற்றி யான்மாவானந்தசொரூபியெனப்படுவதாம். ஞானபுத்திரா,— எ-று.

இரவிசுடரென்றதனுல், இரவிமுதல்சுடரிறுவாயுள்ள வொளிபேதம்மேற் கினுமமையும். ஏனேயபொருளுணர்த்தற்பாலதன்றுமையானும், மருளாமலென் றமையானும் வைத்தபொருளென்றும். எங்ஙனமாயவாழ்வு மான்மாவுக்கய லாதல்பற்றிப் பெருவாழ்வுமிக்கதானேயெனவும், தன்னிடத்தில் தானே பே

ராதபிரியவடிவாயிருப்ப தான்மாவையன்றி யின்றுதலின், தானேதன்னிடத்தி னிற்பேராதபிரியமெனவும், அருகாதபிரியம், நித்தியதிருத்தி. இதுதன்னிடத்த ன்றிப் பிறிதிடத்தெங்கணுமின்மையின், அருகாதபிரியசுகத்தில்வருமெனவும், தானின்பவடிவமாதலா லான்மாவானந்தமாமெனவுங்கூறினர். இங்ஙனமாஞர் க்கிதுதெரியுமன்றி யயலாரைவெறுப்பதென்னை? யாவரும்நன்குநங்குந்தினசு ழுத்தியி லானந்தம் வருவானேன், சாக்கிரசொப்பனவல்லலைச் சாந்தப்படுத் தவ தியாது, நானின்றுதா னன்கயர்ந்துநங்கினேனென்றெவருசொல்வதற்கு நயமென்னை, சுகவடிவமான்மாவன்றேல், அங்கேயா தோர்விகற்பமின்றித் தனித்துநின்றதுயாமன்றே, அங்கேதன்தேகமுதலியசகமனைத்துங் கண்டில மென்றுணர்ந்து விழித்துக்கூறவந்ததுமாமன்றே, யாமெனற்கான்மாவையன் றிப்பொருளுண்டோ? இன்றே, இங்ஙனமிருக்க, ஆன்மாவை யானந்தவடிவ மெனற் கையுறுவதென்னை. சகலத்திலான்மாவிருந்து மங்ஙனங்காணப்படா தது நமதுகுற்றம், அதன்குற்றமன்று. எங்ஙனமெனில், தேகமாதிஞதமிறுவா க்கிடந்த தத்துவக்குழாமயமாகக்காண்கின்றது, அங்ஙனமாகக்காண்கின்றேரும். விசாரணையி லல்லவல்லவெனப்போவானேன், போவதா லான்மா தத்துவக்கு ழாத்துளொன்றுமன்றே, அப்போதான்மாமாத்திரந் தனித்துவிளங்குவதெ ன்னை, விளங்குவதாலுலகமெங்கே, யுலவெங்கேகாணுதிருப்பதென்னை, கா ணுததாற்றுக்கநிவிர்த்தியுந் தடையற்றவானந்தமுமெய்துவதென்னை, எய்துவ தாலதன்குற்றமன்று, விசாரித்துத் தெளியாத நமதுகுற்றமே. நமதுகுற்றத்தால் நில்லாது, கேவலத்திலானந்தவடிவாகக் காண்கின்ற ததன்சுயவடிவாதல்பற்றி யென்க. ஆன்மாவின் சுயவடிவ மானந்தமெனற் கிழுக்கென்னை ? தினசுழுத்தி யிலியல்பாகவே யான்மா தனிக்குமாறுபோன்று சகலத்திலு மியல்பாகவே தனித்திருத்தலே யாங்கண்டிலம், இது தத்துவக்குழாத்தைவிசாரத்தா லகத்திற் காணும். உதாரணம். "என்று மிருந்தபடியிருப்பதியல்பேயென்னுமொரு வேத" மென்பதனைற்காண்க. என்றுந் தனித்திருத்தலா லானந்தமென்றார். தடுப் பாரயலேச்சுகிப்போர்.

(க-து) ஆன்மாதன்னைத்தா னுணரற்பாலதாதலின் தானே யானந்தவடி வாமெனற் கையமின்றென்பது. (ககச)

ஓர் விருட்சத்தினின்று முண்டானபீஜம் அந்தியவிருட்சத்திற்குக் காரண மாவதல்லது, தன்னை யுண்டாக்கிய விருட்சத்திற்குக் காரணமாகாததுபோல வர்த்தமான தேகத்தினின்று முண்டாகாநின்றவினைகள் மேல்வரும் ஜநநத்திற் குக் காரணமாவதல்லது, அச்சநநத்திற்குக் காரண மாகாமையின், "சென்மாந் தாஞ்செய்த வினைகளுடறும்" எ-ம், இப்படி உத்தரோத்தர ஜநநத்திற்குப் பூர்வ பூர்வவினைகள் காரணமாக மூன்சென்ற அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா சரீரமுடையவனாக இருந்திருத்தலின், "சொல்லாகமிவனுண்டலோ" எ-ம், இச் சநநத்தில் சிரவணுதிப்பிரயத்தனத்தால் பிரமான்ம வயிக்கிய ஞானத் தைப் பிரதிபந்தரகிதமாக அடையாவிடின், பூர்வகர்மத்தின் பயனாக இச் சரீரம் வந்ததுபோல இப்போதுசெய்யுங் கருமத்திற்குப் பயனாக இன்னும் அநேக கோடி ஜநநங்கள் வருமாகலின், அவைகளைத் தரித்துக்கொண்டு இனி வரும்

அநேககோடி கற்பங்களிலும் ஆன்மா இருப்பதால், "கன்மானுபவநாசகசோர்க்கமெனில் வருகின்றகாலத்து மீவனுண்டலோ" எ-ம், முன்வந்ததும், இனி வருவதுமாகிய அநேககோடி சரீரங்களழிந்தும் சரீரியழியாமையின், இவன் சத்தெனல் யாவர்க்குமொப்ப அநுபவமாமென்பார், "யாதனு வுடல் கடவு ளுடன் மநுட வுடன்மாறி மாறியழியுந், தன்மய வுடல்கெடினு மீவனிருப் பது கொண்டு சத்தென்ப தொக்கும்" என்றுங் கூறினர். "இரவி" என்பது, உபலட்சணமாகலின்வாகியப்பிரகாசங்களனைத்துங்கொள்க. "இரவிசுடாற்றபோழுதிராத்திரியில்" என்றதால்காடாந்தகார சமயத்தில்என்பதும், "மருளாமலிருளையும் பொருளையுந் தெரிகின்ற வகைகொண்டு" என்றதால், சாக்கிரத்தின்கண் என்பதும் வருவிக்கப்பட்டன வாகியவொளிகளற்ற சாக்கிரமாவது மழைநாளிரவிற் காடாந்தகார சமயத்திலுளதாகுஞ் சாக்கிரம், அல்லது இரவிற் கபாடமுதலியவை பந்திக்கப்பட்டுத் தீபமணைந்த அந்தர்க்கிரகத்திலுளதாகும் சாக்கிரமெனினுமாம். இங்ஙனங் கூறியது பிரகாசாந்தர அபேட்சையின்றியே ஆன்மா சொப்பிரகாசசித்தரூபமா யிருக்கும் அநுபவம் விளக்குதற் பொருட்டென்க. சூரியன், சந்திரன், அக்கினிமுதலிய பிரகாசங்களொழிந்த சாக்கிரத்தின்கண் நேத்திரமுதலிய இந்திரியவாயிலாக இருண் முதலியவற்றைக் கோசரிக்கும் மந்தக்கரண விருத்தியும், சுழுத்தியின்கண் அஞ்ஞானகோசரம், ஆநந்தகோசரமாகிய அவித்தியாவிருத்தியும் அக்கினியானது உருபபதார்த்தங்களைப் பிரகாசித்தற்குத் திரிமுதலியவைபோல உபாதிமாத்திரமா யிருக்கின்றன. புத்திக்கு ஞான மொருகாலு மின்றென்று ஆன்மபோதத்திற் பூச்சியபாதரான ஸ்ரீ-சங்கராச்சாரியரால் அருளிச்செய்யப்பட் டிருக்கின்றது. சாக்கிரம், சுழுத்தி இரண்டிற்கும் மத்தியமானசொப்பனத்தின் கண்ணும் ஞாதா, ஞான, ஞேயரூபமான் திரிபுடிகளேயும் பிரகாசாந்தரங்களே யபேட்சியாமலே ஆன்மாவாகிய தான் பிரகாசிப்பிக்கின்றதும் இவன், "சித்து" என்பதற்கநுபவமாமெனக்கொள்க. யானெப்போது மிலஞ்காமல், உளஞ்தல்வேண்டும் என்றிவ்வாறான பிரேமை ஆன்மாவின்கண் யாவர்க்குமுளது; அந்நியங்களில் யாதொரு பிரேமையுண்டாமோ அதவும் சன்பொருட்டேயாம்: ஆன்மாவின்கணுள்ள பிரேமையோ அந்நியத்தின் பொட்டன்று; இப்படி ஆன்மாவின்கண்ணே பரமமான பிரேமை யிருத்தலால் இச்சரீரி, "ஆநந்தம்" என்பது அநுபவமாமென்றறிக.

இதற்கு, உ-ம் பிரமகீதை,

"சிவ ணன்று புரமூன்றிற் சித்தாமவனே விளையாடு
மேவு மெல்லா மெய்போல வவனுல் விளைத லான்மெய்யத்
தேவ னேசான் றுதலினுற் சித்து மவனே யத்துவிதன்
யாவுந்தானுதலினெனினுந்தானேயேவிரும்பலாவின்பன்."—எ-ம்,

"இத்தப் புரங்க ளொருமூன்று மிவன்ற னிடையே யிறப்பது கிர்த், தொத்தப் புருட னொருகாலு மசியா னுதலாற் சொல்லு, மத்தப்

பரம னேயவன்ரு னறியா மையினு லப்பரனேப், பந்தப் படுமோர் சீவனெனப் பார்ப்பார் பவத்தே பதைக்கின்ரூர்''—

எனவும்வரும். மற்றும் வருவனவற்ரூற் காண்க.

''இருளாக முழிஞ்சு மூத்தியி லிராத்திரியி லிரவிசுடரற்றபொழது'' எகு, உ-ம் பிரமகீதை,

''காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானலன்ரூன்
காண்டல் கேட்டல் கருதல்செ யப்படு வானெருத்தன்
ரூண்டு சோதியி னுலனல் சோம னருக்கனெல்லா
மாண்ட போதும் விளங்குமனக்கரி யாகிநின்றே''—எ-ம்,

''சித்தமத் தமித்திடத் தபாவமூந் தெரிந்திடுஞ்
சுத்ததி சுழுத்தியிற் றுய்க்குமாயை கண்டிடு
மத்தமித் தலும்பிறத் தலுமிலா னபாவபா
வத்தைவிட் டகண்டமா யறிந்தபோ தடங்கவாம்.''—
எனவும்வரும். மற்றும்வருவனவற்ரூற் காண்க.

அ - கை.

[ஆன்மாசுகசாதனம்போல்வதன்றென விக்கவியிற் கூறுகின்ரூர்]

115. அன்னபா னுதிசுக சாதனமா தாகையா லார்க்கும்வெகு பிரி யமாகு, மின்னவர ரூன்மாவு மானந்த சாதன மெனக்கருதல் பொரு ளல்லவே, சொன்னவான் மாலையொரு சுகசாதனங்களொடுசொல் லுவா யாகின்மகனே, யுன்னதா னந்தமவே ரேவனுப விப்பதாமுப யுவசன் மாவுமுளதோ.

(இ-ள்.) அன்னபானுதி சுகசாதனமதாகையா லார்க்கும் வெகு பிரியமா கும்,—எ - து. அன்னமாகியவுணவும், பானமாகிய நீரு மிவைபோல்வன பிற வும், சுகத்துக்குச் சாதனக்கருவியாயிருப்பதா லெவர்க்கும் வெகு பிரியவடிவா யிருக்கும்:—இன்னவாரூன்மாவுமானந்தசாதன மெனக்கருதல்பொருளல்லவே,— எ-து. இதேபிரகாரமாக வான்மசொரூபமுஞ் சுகத்துக்குச் சாதனக்கருவியென நினைத்தல் பொருளாகுமா ? அகாதே:—சொன்ன வான்மாவையொரு சுகசாத னத்தினெடு சொல்லுவாயாகின் மகனே,—எ-து. ஞானபுத்திரா ! மேற்கூறிய வாத்மசொரூபத்தைச் சுகசாதனங்களி லொன்ரேடுவமையாகக் கூறுவையா யின்:—உன்னதானந்தம் வேரேவனுபவிப்பதா மூபயவான்மாவுமுளதோ,— எ-து. உன்னிலிடவுனதானந்தமென்பது வேறுதானே, வேரூயினதனை யனு பவிப்பதற் கிரண்டாவதாகநின் றுள்ள வான்மாவென்பதுமுண்டோ,—எ-று.

பசிதணித்தற் குரியவைகளே யன்னமெனவும், தாகந்தணித்தற்குரியவை களைப் பானமெனவுங் கூறுவதுபொது. ஆதியென்றமையாற் சத்தபரிசாதி விடய மெனப்பெற்றும். அன்னபானுதிகளைச் சுகமென்னுது சுகசாதன

மென்றது ; பசியுந்தாகமுந்தணிந்தவுடன், எதிரிலிவையிருந்தும் வெறுப்பாகக் காண்டலினென்க, ஒப்பின்மையின் வெகு பிரியமாகுமெனவும், பொருளல்ல வற்றைப் பொருளெனக்கோடலால் சுகமல்லவற்றைச் சுகமெனக்கோடல்வரும், இங்ஙனமாகாரரியர். ஆவாரெவரும். இதுபற்றியார்க்குமெனவும், நிரதிசயா னந்தமொன்று, அதை யனுபவிக்கு மான்மாவொன்று, ஆகவிரண்டாகவேண் டும். இரண்டாயின், விடையானந்தம்போல்வதாகும், அன்றேல், ஆன்மானந்த மெனச் சிறப்பெய்தற்கடையாளமென்னே ? விடயானந்தம்போ லான்மானந்த மஞ் சுகசாதனமெனின், விடயானந்தத்தைவேறுநின்றனுபவிப்ப தான்மாவைப் போ லாத்மானந்தத்தை வேறுநின்றனுபவிப்பதாத்மாவாகவேண்டும். அங்ஙனங் கொள்ளில் இரண்டான்மா விருக்கவேண்டும் ஆதலினுபயவான்மாவு முளதோ வெனவுங்கூறினர். உபயவான்மாவு மென்பதிலும்மை, எதிர்மறை. உளதோ வென்பதி லோகாரம், வினை. விடயானந்தத்தை யனுபவிப்பதாத்மா, ஆத்மாநந் தத்தை யனுபவிப்ப தாத்மாவென்பழி, அஃதயலை, இஃது தன்னைத்தானே யெனத்துணிபுதரலால், இன்னவாறன்மாவு மானந்தசாதன மெனக்கருதல்பொ ருளல்லவே யெனத் துணிந்து கூறினரென்க. இத்துணிபறியா ரான்மாவை யா ன்மாவனுபவிக்குமாவென்றிகழ்ந்துகூறுவ தென்னவிவேகமோ யாமறிகிலம்.

(க-து.) விடயத்தைப்போலவான்மாவையுஞ் சுகசாதனமெனல்கூடாதென் பது. ஆர்க்கும், முற்றும்மை. ஆன்மாவுமென்பதி லும்மை, உயர்வு சிறப்பு. நீயாகிறசுகத்தையனுபவிப்பதற்கு நீயெனல் வேறுளதோவென்பார், உன்னதா னந்தமெனத்தற்கிழமையாக்கினர். (ககடு)

ஒரே ஆன்மாவுக்கு ஒரு-காலத்தில் * உபகாரியத்தன்மை, உபகாரத் தன்மையென்னும் இரண்டுதர்மம் விரோதமாகலின், அங்ஙனங் கூறுதல் கூடாதென்பார், "உன்னதா நந்தம்வே றேதநுப விப்பதா நுபயவான் மாவுழளவோ." என்றார்.

அ - கை.

[ஆன்மானந்தத்தையான்மாவே யனுபவிக்குமென்ற துறுதிபெறு மாறு நால்வகையேதுக்களோ யிக்கவியிற்கூறுகின்றார்.]

116. விடயசுக மதில்வருதல் பிரியமாத் திரமாகும் வெகுபிரிய மான்மாவி லாம், விடயசுகம் வருபிரிய மாறிவரு மான்மாவில் வெகு பிரிய மாறுது காண், விடயசுகம் விடலுமாங் கொளலுமா மான்மாவை விடுவதெவர் கொள்வதெவர் பார், விடயசுக போகங் கள் விடுமவனேயவனுல் விடப்படா தொருநாளு மே.

(இ-ள்.) விடயசுகமதில்வருதல் பிரியமாத்திரமாகும் வெகுபிரியமான்மா விலாம், —எ - து. விடயத்தைச்சுகமெனக்கருதி யனுபவிக்குங்காலச்சுகத்தில் வரும்பயனுகியபிரியம், அப்போதுபிரியம்போற்காணுமளவினதாம், ஆன்மாவை ச்சுகமெனக்கருதிச் சுருதியுத்தியனுபவங்காரணமாக வனுபவிக்குங்கால், அவ்

* உபகாரியத்தன்மை = கர்மம் || உபகாரகத்தன்மை = கர்த்தா.

வான்மாவிலப்போதெழும்பிரியங் கணப்போதளவினதன்று, என்றும்விடாதிரு த்தலின் வெகுபிரியமாயிருக்கும்:— விடயசுகம்வருபிரிய மாறிவருவான்மாவில் வெகுபிரியமாறதுகாண், —எ - து. விடயசுகங்காரணமாக மேலிட்டுவரும் பிரியமானது நிலையாது மாறிமாறி வரும், ஆன்மநாட்டத்தைவிடாதிருக்குங்கா லப்போதவ்வான்மாவில் மேலிட்டமூம்பிரியமான தின்னவளவினதென வுவமை கொண்டு கணித்தற்கரியதாகும். அன்றியு மென்று மாறுதொருதகையதாகவு நிற்கு நிலையினதாம்:—விடயசுகம்விடலுமாங் கொள்ளுமாமான்மாவை விடுவ தெவர்கொள்வதெவர்பார், எ - து. விடயசுகமானது வெறுத்துவிடுதற்கும் விரு ம்பியேற்றுக்கொள்ளுதற்குந் தகுதியாம். இதுபோல, வான்மாவைவெறுத்து விடுவார்யாவர், வெறுத்துவிடாதவிரும்பியேற்பவர்யாவ ரிதனைநீயேயாராய்ந்து காணுதி:— விடயசுகபோகங்கள்விடுமவனை யவனுல்விடப்படாதொருநாளுமே, —எ-து, இஃதன்றியும், விடயசுகமயமாயுள்ளபோகங்களையொருவன்வெறுத் துவிடக் கூடும், அங்ஙனமதைவெறுத்துவிட்டவன் தன்னுல் தன்னைவெறுத் துத் தன்னைத்தான் புறம்பிலகற்றக்கூடுமோ? ஒருநாளுங்கூடாதே, எ-று.

விடயசுகமென்னுதபிரியமென மிகைபடக்கூறியது, விடயஞ்சுகமாயிருப் டதியல்பேனும் பிரியமியல்பாயிருப்பதுமுறையோ? நம்மிடத்தினின்றும் பிரிய யத்தைவிடலுங் கொள்ளுங்கூடும், சுகத்தைவிடயத்தினின்றும் பிரிக்கவுங் கூட் டவுங்கூடுமோ? சுகம், விடயத்துக்கியற்கைபோல்வது. பிரியம், நமக்குச் செயற் கைபோல்வதுபற்றியென்க. விடயசுகமென்றார்போ லான்மசுகமென்ன வேண் டும். ஆதலினிங்கே சுகமெஞ்சினின்றது. விடயசுகப்பிரியமென்னுது விடயசுக மதில்வருதல் பிரியமென்றமையின், சுகம்வேறு பிரியம்வேறெனப்பெற்றாம். ஆன்மாவில்வெகுபிரியமென்றதனுல், வீடயப்பிரியமற்பமெனத் தோன்ற, விட யசுகமதில்வருதல் பிரியமாத்திர மாகுமெனவும், மாத்திரம், அளவு. இங்கே யற்பத்தைக்குறிக்கநின்றது. விடயமான்மாவுக்கன்னியமாகும்போது, அதன்சு கமும், அதுபற்றிவரும்பிரியமும், அன்னியமாகவேண்டுமென்றே? அப்போது பிரியமற்பத்தன்மையையும், மாறும்புடைபெயர்ச்சியையு மேற்பதற் கிடையூ றென்னையுள. அதுபோல, ஆன்மாவுக்கான் மாவன்னியமாகும்போது, அதன் சுகமும், அதுபற்றிவரும்பிரியமு மன்னியமன்றுகவேண்டும். அப்போது பிரியம் அதிகத்தன்மையையும், மாறுப்புடைபெயர்ச்சியையுமேற்பதற் கிடையூறென் னையுளவென்பார், இங்ஙனங்கூறினரென்க. ,,இஃதெஞ்சியசொல்லினெய்தக் கூறலென்னுமுத்தி''.

(க-து.) விடயப்பிரியஞ்சிறுபான்மை, ஆத்மப்பிரியம்பெரும்பான்மை. விடயப்பிரியம் மாறிவரும், ஆத்மப்பிரியம்மாறதுநிற்கும். விடயப்பிரியம்விட வுங்கொளவுமியையும், ஆத்மப்பிரியம்விடவுங்கொளவுமியையாது. விடயப்பிரி யத்தை நீக்கினவன் தன்னைத்தானீக்கிவிடக்கூடுமா கூடாது. இங்ஙனமாயவே தக்களா லான்மாவுஞ்சுகசாதனமெனலை மறுத்தாரென்பது. எப்போதுமென் றுணர்த்த, ஒருநாளென்னுதொருநாளு மெனப்பட்டதென்க, இஃதாத்மானுப விக்குடன்பாடன்றி விடயானுபவிக்கெங்ஙனமுடன்பாடாம். உடன்படாமை விசாரியாக்குற்றமன்றி யான்மகுற்றமன்று. தன்னைத்தான்விசாரித்துத் தெளி

யாதார், ஆன்மா சச்சிதானந்தமெனலேலாது வேறென்பார் இதுநிற்க. இதுகன் மம்பத்திபோனம்பிக்கையன்று, பிரத்தியட்சமாதலின்பாரென்றார் நிரதிசயானந்த மான்மப்பிரியம், ஏனையவிடயானந்தம் பிரமானந்த மன்னியோன்னியபாவமெய்தலால், அதிசயானந்தமெனப்பெற்றாயல்பிரியமென்றாயிற்று, (ககசு)

ஆன்மாவைத் தியாகஞ்செய்யுவும், கிரகணஞ் செய்யவுங்கூடாமையின், அவனிடத்துள்ளபீதி எப்படிவியபிசாரத்தையடையு மென்பார், "விடயசுக போகங்கள் விடுமவனே யவனுல் விடப்படாதொரு நாளுமே." என்றார்

அ - கை க.

[ஆன்மாவிடயம்போல விருப்புமெறுப்புருவன்றெனின் சிலர்தன்னைத் தான்வெறுத்துக் கொலைசெய்துகொள்வானேனென்றவினாவிற்கு விடையிக்கவியிற் கூறுகின்றார்]

117. வேகின்ற கோபங்க ளாலென்னை நான்கொன்று விடுகிறே னென்றுசில பேர், சாகின்ற படியினுற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கை யலவே, தேகந் தனைக்கொல்லு மவனுல் விடப் பட்டதேகமவ னல்லன்மகனே, யாகந் தனிற்கோப மலதுதனை யொ ருநாளு மான்மா வெறுப்பதிலையே

(இ-ள்.) வேகின்றகோபங்களாலென்னை நான்கொன்றுவிடுகிறேனென்று சிலபேர்,—எ-து. சிலபேர் யாதேனுமோர் காரணம்பற்றி மிக்க கோபங்கொண் டென்னை நான் கொலைசெய்துகொள்ளுகிறேனென்று:—சாகின்றபடியினுற் றன்னையேதான்கொன்று சாவனெனல் சங்கையலவே,—எ-து. அதற்கையங்க முயற்சிசெய்து சாகின்றபடியினு லிதற்கென்செய்தமெனக்கேட்பையாயின் மெய்யே, இங்ஙனந் தன்னையேதான் கொலைபுரிந்துகொண்டொருவன்சாகின்றனனே யிஃதென்னைகொலோவெனச் சங்கித்தல் சரியானசங்கையல்லவே:—(எங்ஙனமெனின்.) தேகந்தனைக்கொல்லுமவனுல்விடப்பட்ட தேகமவனல்லன் மகனே,—எ-து. ஞானபுத்திரா! தன் தேகத்தைத்தானே கொலைசெய்துகொள் பவனெவனே வவனுல்விடப்பட்ட அவன்தேகமவனுகுமா, அவன்தேகமல்லனே யாயின்சம்மதிவசனம்யாதெனின்: — ஆகந்தனிற்கோபமலதுதனை யொருநாளு மான்மாவெறுப்பதிலையே,—எ-து. அவனுக்கெழுந்தகோப மவன்தேகத்தின் மேலன்றி யவனுகிய வான்மாவின்மேலன்றே, ஆன்மா தன்னைத்தான் வெறுத்துக்கொள்வதுமுண்டோ, ஒருநாளுமில்லையே, இதனை யோசியாது கூறுவ தென்னை கொலோயாமறிகிலம்,—எ-று.

வேகின்றகோபமென்றமையின் மிக்ககோபமென்றும். பலருக்குமுண்டாங் கோபமனைத்து மொருங்குதிரண்டுருக்கொண்டாற்போல்வதின், கோபங்களெனப்பன்மையிற் கூறியதென்க. அவன் சங்கித்ததாக விவராசிங்கித்துக்கொண்டது, விடயம்போலான்மாவும் விருப்புவெறுப்புருவாமெனலைக் குறிப்பித்தற்கு. தேகஞ் சடமகர்த்தாவாதலின் தன்னைத்தான் கொலை செய்துகொள்ளுமோ கொள்ளாதே, ஆதலின், தேகியாகிய வான்மா தன்னைத்தான் கான வகையறியாதே தன்னைத்தா னெங்ஙனங் கொலைசெய்துகொள்ளும், அங்ஙன

மன்று. ஆன்மா தன்னைத் தேகமெனக்கருதிய பாவமேலிட்டாலதனைத் தானெனத் தொன்றுதொட்டு வழங்காநிற்றலின், அதுபற்றிமீக்கொண்டகோபத்தாலென்னைகான்கொலைசெய்துகொள்ளுகிறேனென்றுசொல்லித் தன்னைத்தான்கொன்று செத்தானெனலுலகவழக்க மதனைச் சங்கையெனக்கொள்வது தவிர்கவென்பார், தன்னையேதான்கொன்று சாவனெனல் சங்கையலவேயெனவும், ஆன்மா தேகமாலல் தேகத்தை மாய்த்துக்கொள்வதுகூடும், அங்ஙனமன்றே இதுபற்றித் தேகமவனல்லனெனவும், மூடத்தனத்தாற் றன்கோபத்தைத் தன் தேகத்தின்மேற் காட்டினதன்றித் தன்மேலன்றென்பார், ஆகந்தனிற்கோப மலதுதனை யொருநாளு மான்மாவெறுப்பதிலையேயெனவுங் கூறினர். விடயமல்லாதது பிரமம், அதற்குரிய வானந்தவிலக்கணத்தை யான்மாவுக்குமுரியதென மாட்டிநடத்தலின், இது மாட்டெறிந்தொழுகலென்னு முத்தி.

(க-து.) ஒன்றை யொன்றாகக்கொண்டு சங்கிப்பது தவிர்கவென்பது. சங்கையென்ற லென்றோர்பிறிதியிருக்கின்றது. தன்னையே தான்கொன்று சாவனெனல் மயக்கவணி. (ககஎ)

ஆன்மா அந்நாதிபோலப் பிரியவிஷயமும், விருச்சிகாதிபோலத் துவேஷவிஷயமும் அல்லனையின், திரணாதிபோல உபேட்சா விஷயமாவனேவெனின்;— உபேட்சிப்பவனுடைய சொரூபமே யவனுதலால் உபேட்சாவிஷயமுமாகான் என்றறிக.

அ - கை.

[ஆன்வாவேபிரியவடிவமெனக்காட்டப் பிரியபேதங்களே யிக்கவியிற்கூறுகின்றார்.]

118. தாகப் படும்பொருளி லும்மகன் பிரியமாந் தனயனிலுமுடல்பிரியமா, மாகத்தி லும்பிரிய மிந்திரிய மான்காண மதனிலும் பிரியமுயிரா, மேகப் பிராணனிலும் வெகுபிரிய மான்மாவி லிந்தவான் மா மூக்கிய, மூகத்தி னுற்கௌண மித்தைகர்த் தாமூன்று மொன்றி னொன் றதிகமகனே.

(இ-ள்.) தாகப்படும்பொருளிலும் மகன்பிரியமாந் தனயனிலுமுடல்பிரியமாம்,—எ-து. எவரும்பிரியப்படற்கியைந்தது தனம், அந்தத்தனத்திலு மிக்கது சுயபுத்ரப்பிரியம், அந்தச் சுயபுத்திரப்பிரியத்திலு மிக்கது தன் தேகப்பிரியம்:—ஆகத்திலும் பிரிய மிந்திரியமாங்காண மதனிலும் பிரியமுயிராம்,—எ.து. அந்தத் தேகப்பிரியத்திலுமிக்கது பஞ்சேந்திரியப்பிரியம் அந்தப் பஞ்சேந்திரியப் பிரியத்திலும் காணமாகியமனம்பிரியமாகக்காண்கை, அந்தமனம்பிரியமாகக் காண்பதிலுமிக்கது, உயிர்பிரியமாகக்காண்கை:—ஏகப்பிராணனிலும் வெகுபிரியமான்மாவி லிந்த வான்மாமுக்கியம்,—எ-து. அந்தத் தனதொன்றன வுயிர்பிரியமாகக் காண்கையிலுந் தனதான்மப்பிரியம் மிகப்பெருக்காக்காண்கை, ஆதலி னிந்த வான்மாவேயெவற்றிலுமுக்கியமாகும் :— ஊகத்தினுற்கௌணமித்தைகர்த்தா மூன்று மொன்றினொன் றதிகமகனே,—எ-து. ஞானபுத்திரா ! இவற்றையெல்

லாமனத்திலுலாகிக்குங்கால், கௌணம், பித்தை, கர்த்தா, எனவாத்மா மூன்று வகையினதாகப் பெயர்பெறக்காணும், இம் மூன்றுவகையு மொன்றுக்கொன்றதிகமாகக்காணும்,எ-று.

தனம், மகன், உடல், புறக்கரணம், அகக்கரணம் உயிர், ஆன்மா, எனப்படுவனவாகியவிவ்வேழும், பிரியத்திலொன்றுக்கொன்றதிகமேனும், ஆன்மா மகாமுக்கியமென்றதனுலேனையவாறும், அமுக்கியமெனப்பெற்றும். இனி இவற்றையெல்லாஞ்சுருக்கி நான்காத்மாவாக்கப்புகுந்தாரிக்கவியில் தொகையாக மூன்றைக்கூறியொன்றுக்கொன்றதிகமென்றாரென்க. ஒருவன் தன்வீடு பற்றிவேவதையசதியிற்காண மூன்னர் தன்பணப்பெட்டியை யெடுக்கத்துணிவன். கூடாவிடத்தில், தொட்டிலிலுறங்குந் தன்மகனேயெடுக்கத்துணிவன். கூடாவிடத்தில். தன்னுடலைப் பாதுகாக்கத்துணிவன் கூடாவிடத்தில், கண்முதலிய தன்பொறிகட் கிடையூறுவராதுகாக்கத்துணிவன். கூடாவிடத்தில், மனமுதலியவகக்கரணங்கட் கிடையூறுவராதுகாக்கத்துணிவன். கூடாவிடத்தில், தன்னுயிரையேனுங்காக்கத்துணிவன் கூடாவிடத்தில், முடிவில் தானுகிய வான்மா விடையூறெய்தாதுகாக்கத்துணியாநிற்பன், ஆதலினிம்முறைவந்தவாறிவ்வேதுபற்றியென்க.

(க-து.) உயிர்க்கியற்கையெனப் பிரியபேதங்களை நிரையேயெடுத்துக்காட்டினுரென்பது, இங்ஙனங்காட்டியது;தனமாதிபிரியங்களிலொவ்வொன்றிற்குநட்டமெய்தத் தனக்குவந்ததாக மரணமெய்தலுமுளவென்றுணர்த்தற்கென்க. இங்ஙனமாயபிரியபேதமனேத்துமாத்மப்பிரியலேசமாதலின்,தற்பிரியத்துக்கிடையூறின்றென்க. தனமாதிகளிலுள்ளவும்மைகளிழிவுசிறப்பு. கரணத்திலுமென்பதும், இவற்றிலென்பதிற்பெயருஞ் சாரியையுந்தொக்கின ஆக்கவினைக்குறிப்புமுற்று மூன்றுவிரியும்மூன்று தொகையுமாயிருத்தலினனேத்தையுந் தொகையாக்கி முடிவில்முற்றுக்கியுரையிட்டாம், இது சிறப்புப்பற்றியென்க. (கக அ)

புத்திரர்திகளுபத்தை நிவாரணஞ் செய்தற்பொருட்டுத்தனத்தைச்செலவிடுதலால் பொருளின், மகன்பிரியம் ; தனதுதேகத்தை இரட்சித்தற்பொருட்டு ஒர்போது புத்திராதிகளையுந் தானஞ் செய்தலின், தனயனிலுமுடல்பிரியம் இந்திரியங்களுக்குற்ற நாசத்தை நீக்குதற்பொருட்டுத் தாடனுதிகளாலுளதாகும் தேகத்தின் பீடையையும் அங்கீகரிக்கப் படுவதால் ஆகத்தின் இந்திரியம்பிரியம் ; பிராணனீங்கும்படிவரில் அதைக்காத்தற்பொருட்டு இந்திரியங்களின் சேதனுதிகளையும் அங்கீகாரம் பண்ணப்படுதலின், கரணமதனின் பிரியமுயிராம் ; இப்படித் தனமுதல், பிராண பரியந்தமாகிய பதார்த்தங்களில் உத்தரோத்தர மதிகப்பிரியத்தன்மை சர்வானுபவசித்தம். ஆன்மாவின் நிரதிசயப்பிரேமையின் விஷயத்தன்மை ஞானிகளனுபவசித்தமாம். பூர்வ பூர்வ பதார்த்தங்களினும், உத்தரோத்தர பதார்த்தங்களில் அதிகப்பிரீதியிருப்பது ஆன்மாவைச் சமீபித்திருத்தலின் என்க; அவை ஆன்மாவைச் சமீபித்திருக்குமாறு;– ஆன்மாவின் ஆபாசம் சூட்சுமசரீரத்திலுண்டு : மற்றென்றிலில்லை ; ஆகலின், ஆபாசவாயிலாக ஆன்மாவுக்குச் சூட்சுமசரீரத்தோடு சம்பந்தமுண்டு. ஸ்தூலசரீரத்தோடு சூட்சுமசரீரத்திற்குச் சம்பந்தமுண்டு ; ஆகலின், ஸ்தூலசரீரத்

தோடு சூட்சுமசரீரவாயிலாக ஆன்மாவுக்குச் சம்பந்தமுண்டு. புத்திரனுடைய ஸ்தூலசரீரவாயிலாகச் சம்பந்தமுண்டு ; புத்திரனுடைய மித்திரரோடு புத்திரவாயிலாகச் சம்பந்தமுண்டு. இவ்வாறு உத்தரோத்தரம் யாதொன்று ஆன்மாவின் சமீபமோ அதன்கண் அதிகம் பிரீதியுளது. யாதொரு ஆன்மாவின் சம்பந்தத்தால் பதார்த்தங்களிற் பிரீதியுண்டாகிறதோ அவ் வான்மாவின்கண் மூக்கியப் பிரீதியுண்டு : வேறொரு பதார்த்தங்களிலில்லை. புத்திரனுடைய மித்திரரிடத்துப் புத்திரனுடைய சம்பந்தத்தால் பிரீதியுண்டாதலின், புத்திரனிடத்தே அதிகப் பிரீதிபிதாவுக்குஇருப்பதுபோல ஆன்மாவினுடைய அதிக சமீபத்தில் அதிகப் பிரீதியுண்டாயிருப்பதால் ஆன்மாவின்கண்ணேயே சகலர்க்கும் பிரீதியிருக்கின்றது ; அப் பிரீதி ஆநந்தத்திலும், துக்கத்தினபாவத்திலும் உண்டாகின்றது: வேறொன்றில் இல்லை. வேறுபதார்த்தங்களி லுண்டாகும் பிரீதி ஆநந்தநிமித்தமும், துக்கத்தினபாவ நிமித்தமுமேயாகலின், அவையன்றி வேறுபதார்த்தங்களில் பிரீதியில்லை. சகலர்க்கும் பிரீதிக்குவிஷயமான ஆன்மா ஆநந்தரூபமும், துக்கத்தினபாவரூபமுமாம் ; சர்ப்பத்தினபாவம் இரச்சுரூபமாவதுபோலக் கற்பிதத்தினபாவம் அதிஷ்டானரூபமாகலின், கற்பிதமாகிய துக்கத்தினபாவமும் ஆன்மரூபமாம் ; ஆகலால், "இந்த வான்மாமுக்கியம்" என்றார்.

இங்கே பிராணசத்தத்தால் பிராணவுபலட்சிதமான மனதுகொள்ளற்பாலதாம். என்னை? மனது சொரூபாநந்தத்தின் பிரதிவிம்பத்தை யுடைத்தா யிருப்பதானும்: இந்திரியங்களோப் பிரேரிப்பதால் அவைகட்குச் சுவாமியாகலானும், நேத்திராதி இந்திரியங்களில் பீடைவந்ததுகொண்டு மனதுக்கு விட்சேப மூண்டாகில் அப்போது இந்திரியங்க ளொழிந்துபோமாயின், நான் சுகியாயிருப்பேனென்று மனோவிஷ்டனை புருஷன் சொல்வதனாலும், மனத்தின் சஞ்சாரமும் அது தேகத்தினின்று வெளிப்படுதலும் பிராணனின்றிக் கூடாமையானும் பிராணசத்தத்தால் மனதுகொள்ளற்பாலதாம் எனப் பஞ்சதசியின், $ டிப்பணத்தி லெழுதப்பட்டிருக்கின்றது. வாசிட்டத்திலும்,

"தொடர்மன மேதென்னின், மெத்து மாகம பூடண ருரைத்
தது விசையுபி ரசவாகும்"—

வீதகவ்வியர்கதையில், உகூ-வது செய்யுளில் மனதுக்கும், பிராணனுக்கும் அபேதங்கூறியிருக்கிறது; 'ஏகப்பிராணன்" என்றது இக்கருத்தே பற்றியென்க.

அ - கை.

[நான்காத்மாவெனற்கும், ஒன்றுக்கொன்றுமுக்கியமெனற்கும், அவசரமிக்கவியிற்கூறுகின்றார்.]

119. கெடலான பொழுதிவன் காணிக்கு மகனுனை கௌணவான்மாமுக்கியம், விடலாத வுடலம் பரிக்குரா னுடலான மித்தையான் மாமுக்கியர், திடமான நன்மைகதி வேண்டினுற் கர்த்தனுஞ் சீவவான்மாமுக்கியனுஞ், சடமாயு முத்தியினில் ஞானவான் மாவனா தானேமகாமுக்கியம்.

$ டிப்பணம்=உரையின் அரும்பதவுரை.

(இ-ள்.) கெடலானபொழுதிவன் காணிக்குமகனை கௌணவான்மாமு கியம், —எ-து. தன்னுயிர்க்குக்கெடுதிவந்தபோது தனதாஸ்திக்குரியோன் மகனுதலா லவன்கௌண வான்மாவெனப்படுவன், அந்தவவசரத்திற்கௌண வான்மாவே முக்கியமாகும்:—விடலாதவுடலம் பரிக்குநாளுடலானமித்தையாள் மாமுக்கியம், —எ-து தன்னைவிட்டுநீங்காத தனதுடலைத் தானெனச்சுமக்கு ம்போது தானெனற்குரியதிவனுக்குடலாதலா லவ்வுடல்மித்தையான்மாவென ப்படும், அந்தவவசரத்தில் மித்தையான்மா வேமகாமுக்கியமாகும்:—திடமான நன்மைகதிவேண்டினுற் கர்த்தனுஞ்சீவவான்மாமுக்கியம், —எ-து. இடையில முயாதறுதியாயுள்ள நற்கதியடையவிரும்பினால், அப்போதுதானொருமுதலாகி ன்றதற்குரிய வரியமுயற்சிசெய் தப்பலனை யனுபவித்தற்குக் கர்த்தத்துவமா யிருப்பவன்சீவனுதலால், அந்தவவசரத்திலச்சீவன் சீவவான்மாவெனப்படுவன், அதனாலந்தசீவவான்மாவே மகாமுக்கியமாகும்:சடமாயமுத்தியினில்ஞானவான் மாவானதானேமகாமுக்கியம், —எ-து. சடத்துவமாயுள்ளவினைத்துமொருங்கே நிகித்தற்கிடமாயதமுத்தியாதலா லந்தமுத்தியில்ஞானகார மாயிருந்தன்னை யதுவாயனுபவிப்பவன் ஞானத்மாவாதலால், அந்தவவசரத்தில்ஞானன்மாவெ னப்படுவன், அதனாலந்த ஞானன்மாவானதானே மகாமுக்கியமாகும், எ-று.

காணி, உரிமை. உரிமையானது, ஆஸ்தி இதுபற்றியாஸ்தியென்றும் தன தரிமைக்குமகன்பாத்தியனுதல், தனதந்தத் திலாதலால், கெடலானபொழுதென்பதற்கு, தன்னுயிர்க்குக்கெடுதிவந்தபொழுதென்றுரைகொண்டாம். விடல மல்லாதவென்றது, விடலாதவென்றயதிடைக்குறை. மகன்முக்கியமாயவிடத்துக் கௌணவான்மாவெனவும், உடலமுக்கியமாயவிடத்து மித்தையான்மா வெனவும், சீவான்மாமுக்கியமாயவிடத்துக் கர்த்தான்மாவெனவும், ஐக்கியமுத்திக்கான்மா முக்கியமாயவிடத்து ஞானன்மாவெனவும்பெயர்வந்ததென்க. இந்தவவசரமெல்லாமான் மாவாயிருத்தலினிற்கான்கையுமான்மாவென்றதென்க. சடமாயமுத்தியினிலென்றதனால் திரிபுடியற்றதென்றுயிற்று, இங்ஙனமாயது பற்றியயிக்கியமுத்தியென்றும். அம்மூன்றையுமான்மாவென்ற தவசரம்பற்றியும், தானுகியவான்மாவைஞானவான்மாவென்ற தொகார்த்தம்பற்றியுமென்க. ஆகலினம்மூன்றும், பூர்வபட்சம். இது சித்தாந்தம்.

(க-து.) ஞானவான்மாவேமுக்கியமாமெனற் கிங்ஙனங்கூறினுரென்பது பிரியபேதங்காட்ட நான்கான்மாவென்றது; ஞானவான்மாவைக்காட்டிலும்பிரி யவடிவம்வேறின்றெனக்காட்டியத்தை வைப்புறுத்தற்கென்க. ஐக்கியமுத்தியென்றது; நிரதிசயானந்தத்தை. வேறெனல் பிதற்றல். இதில்முக்கியநான்கில், ஆக்கவினையெஞ்சிநின்றன. (ககக)

சமதமாதி சாதனங்களைச் சம்பாதித்து மோட்சத்தை யடைவேனென்னும் புத்தியை எப்போழுதடைவனோ அப்போழுது குருவாலுபதேசிக்கப்பட்ட மஹாவாக்கிய விசாரத்தாலுண்டாகின்ற அபரோட்சஞானத்தால் நான் கர்த்தாமுதலியரூபனல்லன், சச்சிதானந்தநபப் பிரமமாகிநேன் என்றிப்படிச் சத்தாமான்வை யடைகின்றனன். இவ்வியவகாரத்தில் அவனுக்குச் சுத்தசேதனத்தன்மைரூபமே உசிதமாம், கர்த்தாமுதலிய ரூபத்தன்மை அங்கே உசிதமாக

இல்லை என்பார், "முத்தியினின் ஞானவான் மாவான தானே மகாமுக்தியேம்" என்றார். சத்தியஞானாநந்தம் பிரமம், விஞ்ஞானமாநந்தம் பிரமம், * அநந்தரம், ‡ அபாகியம் சம்பூரணம், ¶ பிரஞ்ஞான கனம் ஆன்மாவென்னும் இவை, மூதலிய சுருதிகளால் ஆன்மாவுக்குப் பிரமரூபத்தன்மையுண்டென்க.

சப்தத்தின்கண் சத்திவிருத்தி, லட்சணவிருத்திகள் எப்படியோ அப்படி மூன்றுவதான கௌணவிருத்தியு முண்டு ; எப்படிச் சத்தி விருத்தியா லுணர்த்தாநின்றபொருளைச் சக்கியார்த்தம், முக்கியார்த்தம், வாச்சியார்த்தம் என்றும் லட்சணவிருத்தியா லுணர்த்தாநின்றபொருளை லட்சியார்த்தம் என்றுங்கூறுநிற்பரோ அப்படிக்குணவிருத்தியா லுணர்த்தாநிற்கும் பொருளைக் கௌணார்த்தமென்பர் பதத்தின்வாச்சியார்த்தத்தில் யாதொருகுணமுண்டோ அக்குணமுடையஅவாச்சியார்த்தத்தில் பதத்தின்கௌணீ $ விருத்தியுண்டு, "சிம்மார்தேவதத்தன்" என்னும் வாக்கியத்தில் சிம்மசப்தத்தின் வாச்சியார்த்தமான சிம்மமாகிய பசுவின் கண்ணுள்ள சூரத்துவம், குரூரத்துவமுதலிய குணங்களையுடைய சிம்மபதத்தின் அவாச்சியார்த்தத்தில் சிம்மபதத்தின் கௌணீவிருத்தி உண்டு ; அப்படி ஆன்மபதத்தின் வாஸ்தவவாச்சியார்த்தமோ சாட்சியாம் ; ஆதலால் சாட்சி முக்கியான்மாவெனப்படும். சாட்சியின்கண் ஞாதாவாதலால், ஆன்மபதத்திற்குமித்தியாவாச்சியார்த்தம் லிங்கதேகமும், ஸ்தூலதேகமுதலிய சங்காதங்களுமாம் ; அச்சங்காதங்களுள் இகலோக, பரலோக சம்பந்திகளானகர்மங்களில் பிரவர்த்திரூபமான யாதொருகுணமுண்டோ அக்குணமுடைய ஆன்மபதத்தின் அவாச்சியமானபுத்திராதிகளில் ஆன்மபதத்தின் கௌணீவிருத்தியுண்டு ; அக்கௌணீ விருத்தியால் உணர்த்தாநின்ற புத்திராதிரூபங்களானபதார்த்தங்கள் கௌணான்மாவெனப்படும். கள்ளனின்வேறான கட்டையைக்கள்ளனென்பது எப்படி மித்தையோ அப்படிப் பஞ்சகோசங்களே ஆன்மாவென்பது மித்தையாம். சர்வத்தினும் ஆந்தரமாகலின், சர்வத்திற்குஞ் சாட்சியாகிய ஆன்மாமுக்கியான்மா வெனப்படும் என்ம்.

அ - கை.

[விருப்புமுதலியமூன்றுமயமாகாதவானந்தமே ஆன்மசொரூபமென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

120. புலியுமனு கூலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெனி லும்வெறுப்பா,- முலகிலிரு வகையுமல் லாதபுல் லதிலிலு தாசீன மாமாத லான், மலினமறு சின்மயன் பல்வகையு மிப்படி மழிச்சியில் விருப்பி கழா, னலகிலா னந்தவடி வாகுமுன் சொரு பத்தை யாராய்ந்து பார்மைந்தனே.

(இ-ள்.) புலியுமனுகூலமெனி லிட்டமாம் பகைசெயிற் புதல்வனெனினும்வெறுப்பாம்,—எ-து. புலியேனுமக்கு கயமுண்டாதற் கனுகூலமாயிருக்குமாயின் விருப்புருவாகும், தந்தைக்கு விரோசமாடக்கில் புத்திரனேனும்

* அநந்தரம் = அந்தராகிதம் ‡ அபாகியம் = வாகியரகிதம்,
¶ பிரஞ்ஞானகனம் = அநிசயஞானரூபம்
$ விருத்தி = சம்பந்தம்.

வெறுப்புருவாகும்:— உலகிலிருவகையுமல்லாத புல்லாதியி லுதாசீனமாமாத லால் —எ-து. உலகின்கண்ணிவ்விரண்டு வகையுமல்லாத புல் மூசலியவைக ளிருட்பது தாசீனமாகும், ஆசலின்:—மலினமறுசின்மயன்பல்வகையு மிப்படி மசிழ்ச்சியில்விருப்பமிகழான்,—எ-து. களங்கரகிதமான ஞானமே வடிவாவி ளங்குமான்மாவென்றோன், இங்ஙனமவைபோலப் பலவிதத்தானு மானந்த மென்பது சற்றுமில்லாத விருப்பமுசலியமூன்று னுமவமதிப்பெய்தான்:—அல கிலானந்தவடி. வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்தனே,—எ-து. அந்த வான்மா நீயாதலா னீயேசடையற்ற வானந்தவடிவனென்பதாகும், ஞான புத்திரா! இதிலேயமுளதே லுனதெதார்த்த வடிவத்தைச் சுருதியுத்தி யனு பவங்காரணமாக நீயே யாராய்ந்துதெளிந்துகாணுதி,—எ-று.

அனுகூலத்தார்புலியும்விருப்புருவாகவும், பகைத்தலார்புத்திரனும் வெ றுப்புருவாகவும், புல்மூசலியவை யிவ்விருவகையுமல்லாததா லுதாசீனவடிவா கவுங் காணும். உதாசீனம்; விருப்பு வெறுப்பாயிருக்கை. புலியுமென்பதி லும்மை, இழிவுசிறப்பு. புசல்வனெனினு மென்பதிலும்மை, உயர்வுசிறப்பு. ஆன்மா தன்லுணருங் கிரிசபத்தில் விருப்பாதி மூன்றுமன்றித் தன்னிடத் தின்று. எனவே, தானிம்மூவுருவாகக் காணப்படாதென்பதாயிற்று. சற்றெரி சனத்திலிவைமூன்றுந் தன்பாலின்மையின்மலினமறுசின்மயன்பல்வகையுமிப் படி மகிழ்ச்சியில் விருப்பமிகழானெனவும், இம்மூன்றுருவுமாகத்தானியைதற் பாலதன்றுமையி னென்மாவலகிலானந்தவடிவாகுமெனவும். நீயுமான்மாவாதலா லலகிலா னந்தவடிவனீயே யிதனைக்கண்டு தெளிதியென்பார், உன்சொரூபத்தை யாராய்ந்துபாரெனவுங்கூறினர். இது கன்மகாண்டம்பத்திகாண்டம் போல்வ தன்று, ஞானகாண்டமாதலி னிப்போதே யுள்ளங்கை நெல்லிக்கனிபோல விவ் வருத்தங்களே யனுட்டித்துக் காணலாம். தானுகியவான்மா சத்துஞ் சித்துமன்றி யானந்தம்வேறென்பார், தன்னைத்தான்காணுசார். இவர் தன்னிழப்பு, அருட் டெரிசனம், பரைதெரிசனம், ஆனந்தோதயம், ஆனந்தாதீதமெனத் தனக்கயலா ககக்கண்டு வாளாபோயினர், இவர்களெல்லாங் கிரியாயோகக்குறியினரன்றி ஞானியரன்று. இது நிற்க.

(க-து.) ஆன்மா, விருப்பு, வெறுப்பு, உதாசீனத்தளென்றன்றலி னானந்தவடிவமேயென்பது. இனிக்கூறப்புகுமஷ்டவிதானந்தத்து ளிஃதானந்தமாதலி னதற்கிதுவே விதியெனக்கொள்ள வேறுகூறசொழிந்தனர் இஃ துரைத்தா மென்றலென்னுமுக்தி. தன்னிலக்கணமீனையதென விதனுணர்க. தன்னைத்தரிசியா வளவுந் தரபிரிய மிம்மூவகையாகக் காணுமென்ப தருத்தா பத்தி. அனைத்து மாத்மப் பிரதிபலனமாதலி னெல்லாச்சுகமு மான்மாவேயெ னப் பொருள்கொள்ளினு மமையும். (கஉ0)

அ - கை க.

[தனவானந்தமுசலிப வானந்தபேதங்கள்பலவென்றீ ரத்தொகை
யின்விபரத்தைத் தெரிவிக்கவேண்டுமெனவினவ அதற்கு
விடையிக்கவியிற் கூறுகின்றார்.

121. மானஞ் சிறந்ததரு காதனே யானந்த வகைகளெத் தனை
யென்னிலோ, ஞானந் திகழ்ந்தபிர மானந்தம் வாசனை னந்தம்விட

யானந்தமென், றானந்த மூன்றுவித மெட்டுவகை யென்பர்சில ரவ்
வைந்து மிதிலடக்கம், யானந்தவகைசொலக் கேண்மைந்தனே யெ
ட்டு மஃதின்ன தின்னதெனவே.

(இ-ள்) மானஞ்சிறந்தகுரு நாதனே யானந்த வகைகளெத்தனையென்
னிலோ,—எ-து. பெருமையிற்சிறந்த சற்குருநாதனே, ஆனந்த வகைகள்பல
வெனக்கூறினீரே யவையாவையெனில்:—ஞானந்திகழ்ந்த பிரமானந்தம் வாச
ஞானந்தம் விடயானந்தமென்றானந்த மூன்றுவிதம்,—எ-து. ஞானமே வடிவா
விளங்குகின்ற பிரமானந்தம், வாசஞானந்தம், விடயானந்தம், என வானந்த
மூன்றுவகையாம்:—எட்டுவகையென்பர் சில ரவ்வைந்துமிதிலடக்கம்,—எ-து.
சில ரெட்டுவகையென்று சொல்லுவர், அந்த வைந்துவகையு மிம்மூன்றிலடக்க
மாம்: — ஆனந்தவகைசொலக்கேள் மைந்தனேயெட்டு மஃதின்ன தின்ன
தெனவே,—எ-து. ஞானபுத்திரா! அந்தவெட்டு விதானந்தங்களு மின்னதின்ன
தென்று தனித்தனியே சொல்லப்புகுது மதனைக்கேளுதி,—எ-று.

சமஷ்டி யுபாதி குணந் தொழில்காரணமாகப் பகவத் நிலைகூறுநிற்பர்
மதத்தர். மகாவாக்கியமும், சுத்தக்களும், இந்நூலாசிரியரும், ஞானமே பிரம
மெனக் கூறுநிற்பர். அஞ்ஞானமேவஸ்துவெனிலெவர்க்கு மூடன்பாடன்று,
ஞானமேவஸ்துவெனலே மறுப்பதென்னை. இது நிற்க அவ்வைந்துமென்றது;
ஆத்மானந்தம், முக்கியானந்தம், நிசானந்தம், அத்துவிதாந்தம், ஞானானந்த
மென்பவற்றை. இதிலடக்கமென்றது, பிரமானந்தத்திலாதலா லொருமையிற்
கூறலாயினர். ஏனையவைந்துமெனற்குப்பதிலாக அவ்வைந்துமென்றுர் இதி
லெனப் பொதுப்படக்கூறியிருக்கப் பிரமானந்தத்திலெனக்கொண்டது;ஏனைய
விரண்டினம் சங்களன்றுதல்பற்றியென்க. எட்டுமிக்கவியிற்கூறுது மறுகவியிற்
கூறப்புகுவதால், அஃதெனப்புறச்சுட்டாக்கினும். எட்டுமென்பது தொகை
யொருமைபற்றி யஃதென வொருமையிற்கூறினர். எட்டுவகையென்பர் சில
ரென்றதனால், மூன்றுவிதமென்றது பலரெனப்பெற்றும். எட்டுமென்பதி
லும்மை, முற்றும்மை. இனி வகுத்துக்காட்டப்புகுதலா லிதுதொகுத்துக் கூட்
டலென்னுமுத்தி;

(க-து.) ஆனந்தபேதங்களெயெல்லாஞ் சுருக்கித்தொகையாகவெட்டென்
பது.

முக்கியாநந்தம், ஆன்மாநந்தம், அத்துவிதாநந்தம் இம் மூன்றும் பிரமாநந்
தத்திற்கு வேறின்மையின், பிரமாநந்தத்தி * லந்தர்ப்பாவமாம். எனனை? பிரமா
மாநந்தந்தானே அதிவிவேகிக்கு யோகரூபவுபாயத்தால் முக்கியாநந்தமாகவும்,
மந்தப் பிரஞ்ஞையுடைய சிஞ்ஞாசுக்கு ஆன்மாநந்த விவேகரூபவாயிலாகப் பர
மப்பிரேமாஸ்பத வாநந்தமாகவும் வெளிப்படலானும், ஆன்மாவாகலாற் சஜா
தீயமென்னும் கெவுணன்மாவாகிய புத்திரபாரியாதிகளினும், அகான்மாவாக
லின், விஜாதீயமென்னும் ஆகாசாதிகளினும் வேறுய்ச் † சத்வைதமான ஆன்

* அந்தர்ம்பாவம் = உள்ளடங்கியிருப்பது. † சத்வைதம் = துவைதத்தோடு
கூடியிது.

மாநந்தத்திற்கு அத்துவிதீய முக்கியாநந்தத்தின்றன்மை கூடாதென்றுவரும் வாதியின் சங்கையைப்பற்றித் தைத்திரீய சுருதியிற் கூறிய ஆகாசமுதற் றனது தேகபரியந்தமானசகத்து ஆநந்தத்தின் அந்நியமல்லாமையின்; ஆன்மாநந்தத்துக்கு அத்துவிதீயப் பிரமத்தன்மை உண்டென்று இதற்குமுன்னூலான பஞ்சதசியிற் கூறியிருப்பதனலும் சுழுத்தியின்கண் சுவப்பிரகாசமாயுள்ள பிரமாநந்தத்தில் முக்கியாநந்தம், ஆன்மாநந்தம் அத்துவிதாநந்தம் மூன்றும் ஊர்ப்பாவமாம். இவர் யோகாநந்தத்தைப் பஞ்சதசியிற் கூறியபடி நிஜாநந்த மென்னது முக்கியாநந்தமென்று இனிக் கூறுவது சிரத்தை முதலியவற்றின் வாயிலாக ஓர் பொழுது ஆநந்தத்தினிச்சயத்தையுடையபுருஷன் உதாசீனகாலத்திலுந் தோன்றுவதான யாதொரு ஆநந்தத்தின் வாசனையுண்டோ அதை யுபேட்சித்து முக்கியாநந்தத்தையே பாவிக்கின்றனனென்று பஞ்சதசியிற் கூறியிருப்பதுகொண்டே என்க. [ஜந்நியமாகலான் விஷயாநந்தம், வாசனாநந்தம் அமுக்கியம் : ஜந்நகமாகலாற் பிரமாநந்தம் முக்கியம் : பிரமாநந்தத்திற்கும், முக்கியாநந்தத்திற்கும் பேதமில்லை.] இவர் நிசாநந்தமென்று இனிக்கூறுவதை வாசனாநந்தமாமுடையதாகப் பஞ்சதசியிற் கூறியிருக்கின்றனர் : சுழுத்தியினின்றும் எழுந்தகாலையில் சுகதுக்கங்களினபாவமிருத்தலின், அது உதாசீனதசையாம் ; அதில் சுழுத்தியில் அநுபவித்த பிரமாநந்தத்தின் வாசனை சொற்பகாலபரியந்தம் தொடர்ந்திருப்பதால் இச் செய்யுளில் பஞ்சதசியிற் கூறியபடி வாசனாநந்தமென்றனர் அப்படியே சாக்கிரத்தில் எங்கே எங்கே சுகதுக்கமிரண்டும் அபாவமாயிருக்குமோ அவ்வக்காலம் உதாசீனமென்று சொல்லப்படுகிறது. எங்கே சுகமுண்டோ அங்கே இராகமுண்டாம் : எங்கேதுக்கமுண்டோ அங்கே துவேஷமுண்டாம் ; ஆகலின், சுகதுக்கரூப நிமித்தத்தா லுண்டாகாநிற்கும் இராகத்துவேஷங்களின் அபாவகாலத்தை உதாசீனத்துவமென்றும், தூஷ்ணீம் ஸ்திதியென்றுங்கூறுவர் ; ஆதலால், தூஷ்ணீம் பூதாவஸ்தையிலுளதாகும் ஆநந்தம் இங்கே கூறியவாசனாநந்தத்தில் அந்தர்ப்பாவமாம். என்னை ? இரண்டும் நிர்விஷயமாகலின். விஷயாநந்தம்போல வித்தியாநந்தமும் அந்தக்கரண விருத்திரூபமேயாதலால், விஷயாநந்தத்தில் அந்தர்ப்பாவமாம் என்றிக.

அ - கை.

[மேலட்டவிதானந்தமென்ற ரதன்வகையை யிக்கவியிற் கூறுகின்றார்.]

122. போகத்தில் வருசுகம் விடயசுக நித்திரைப் போதுளது பிரமசுக மா, மோகத் தனந்தலிற் சுகம்வா சனைச்சுக முழுப்பிரிய மான்மசுக மாம், யோகத்தி லுளதுமுக் கியசுகமு தாசீன முற்றசுக நிசசுகமதா, மேகத்தை நோக்கலத் துவிதசுகம் வாக்கிய மெழுந்தசுக ஞானசுக மே.

(இ-ள்) போகத்தில்வருசுகம் விடய சுகநித்திரைப் போதுளதுபிரமசுகமாம், — எ - து. போகங்காரணமாவெய்துஞ்சுகம் பிரமசுகமெனவும், நித்திரையென்குரியதியாதோ வதனிலெழுஞ்சுகம் பிரமசுகமெனவும் :— மோகத்

தனந்தலிற்சுகம்வாசனேச்சுக மூழுப்பிரியமான்மசுகமாம், —எ - து. மயக்கமா யுள்ள வுறக்கத்தெழுஞ்சுகம் வாசனுசுகமெனவும், எங்குந்தனதுபிரியவடிவாக க்காணுஞ்சுகம் மான்மசுகமெனவும், உதாசீனங்காரணமாவெழுஞ்சுகம்நிசசுக மெனவும்:—எகத்தைநோக்கலத்துவிதசுகமா வாக்கியமெழுந்த சுகஞானசுகமே, —எ - து தான்மாத்திரமாமிஞ்சிற்றலை நோக்குவதாலெழுஞ்சுகமத்துவிதசுக மெனவும், மகாவாக்கியங்காரணமாக வெழுந்தசுகம்ஞானசுகமெனவும் பெயர் பெறும்எ - று.

இனி இவற்றைத் தனித்தனிகூறப் புகுதலா லொவ்வொன்றினிலக்கணங்களே யாங்காங்கு கூறுதும். போகம், இரண்டொன்றுக வினைதல், அவ்வவற்றையு மவ்வவ் விலக்கணங்களாற் காணலாம். (கூஉ)

அ - கை.

[அஷ்டவிதானந்தங்களேயுந் தனித்தனிசொல்லப்புகுவார், இக்கவி யில்விடயானந்தவிலக்கண மினையதெனக் கூறுகின்றார்.

வேறு.

123. இவ்வா றுரைசெய்த சுகபே தங்களி னியல்பா மவைசொல மகனே கே, ளொவ்வா னனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயனத்தி லுறுநே ரஞ், செவ்வா மனமக முகமா மதிலொளிர் சித்தின் சுகநிழல் சேருங் கா, ணவ்வா றிவனுள மகிழ்வா மனுபவ மதுதான் விடயசு காநந் தம்.

(இ-ள்.) இவ்வாறுரைசெய்த சுகபேதங்களி னியல்பாமவைசொலமகனே கேள், —எ-து. இங்ஙனந்தொகைவகையாகக் கூறிய வானந்தபேதங்களுக்கியல் பாயுள்ள விலக்கணங்களேத் தனித்தனியே விரிவாகயாங்கூற ஞானபுத்திராநீகே ளுதி :—ஒவ்வாதனவினி லுழல்வா னிடர்கெட வுறங்குஞ் சயனத்திலுறுநேரம் —எ-து. இயைதற்கொண்ணாதபந்தசாக்கிரத்தில் விவகாரநிமித்தமுழல்வோன் தனதல்லல்கெடவுறங்கற்கமைத்த பஞ்சணைமெத்தையில்விழுதியிலுங்கால் :— செவ்வாமனமகமுகமாமதிலொளிர் சித்தின்சுகநிழல்சேருங்காண், —எ-து. த டையின்றி மனமானது சுகாகாரமாதலேவிட்டகமுகமாகமுழுவும், அப்போதம் மனதி லறிவானந்தத்தின்சாயைபடும் :— அவ்வாறவனுளமகிழ்வா மனுபவமது தான் விடய சுகானந்தம், —எ து. அங்ஙனம்படுநெறியா லவனுள்ளமானது சுகாகாரமாக்கக்காணும், அங்ஙனங்காண்பதே தினனுபவமாம், அந்நெறித்தாய சுகமே விடயானந்த மெனப்படும், எ-று.

சுகமெனக் கருதற்கொவ்வாததுபற்றி யொவ்வாதனவென்றார். இந்தனவல்ல லேத்தரற்குரித்தாதலிற் பந்தசாக்கிரமென்றும். உறங்குஞ் சயனமதுறுநேரமெ னப்பாடமுமுண்டு. உறக்கம்வரும்போது மனமானதியல்பாகவேதினக்கோறுஞ் சகாகாரத்தினின்று நழுவலும், சுகாகாரமாதலு மெவ்வுயிர்க்குமனுபவமாயிரு க்க, இதனைவேறுவழியில் வருத்தியுரைகோடல்பொருந்தாது. பொருந்துமெ னின், விடயானந்தமெனவும், உறங்குஞ்சயனத்திலுறுநேரமெனவுங் கூறுவ

செற்றிற்கு, ஆசலிற்கூடாதென்க. மூன்கவியில்போகத்தில் வருசுகமென்றார் போகமாவது, இன்பநுகர்தல். இங்கேமனமுஞ் சிதானந்தசாயையுமின்மையால். விசாரத்தெளிவால் மனஞ்சகாகாரத்தினின்று நழுவிச்சுகாகாரமாதலொன்று. மூடத்தாலாதலொன்று, இங்கே விசாரத்தாலெனின், ஒவ்வாதனவினி லுழல்வானிடர் கெட விசாரத்தா லுறங்குறுநேரமென்றிருக்கவேண்டும் தொக்கியிருக்கின்றதெனின், உறங்குஞ்சயனத்திலுறுநேரமென்பானேன் இங்கேசயனமென்றதாசனங்கட்டலையெனின், அப்பேரதடயோக மென்னல்வேண்டும் அதுதானெனில், உரையிற்கோடலென்னுமுத்தியா லங்ஙனங்கொள்ளினு மொருவாறு பொருந்தும். பொருந்துமேனும், இதுவிடயங்காரணமாகவந்த சுகமன்றே.குண்டலிசத்தியில் மனம்லயித்தலா லிந்தக்குண்டலிசத்தியுமோர்விடயமன்றே ? மனலயமாதற்கிடமாமேயெனின், தினசுழுத்திபோல்வதாமசஞ்ல்விடயசுகமென்றார். மனந்ததாகாரமாக வதனுலெய்துஞ்சுகமெனக்கூறுமையின் விடயசுகமேயென்க.

(க-து) விடயானந்தவிலக்கண மினையதெனக்கூறினுரென்பது. ()

அ - கை க.

[பிரமானந்தவிலக்ணமினையதெனவிக்கவியிற் கூறுகின்றார்.]

124. ஈனந் தருசுக விடயந் திரிபுடி யிடரா மெனமன மசையா மற், சேனந் தனது குலாயந்தனில்விழு செயல்போ னித்திரை செறி சீவன், ரூனந்தமில்பர னுடனென் றுவனெரு தனியல் லதுபிறநினை யாமு, லானந் தம்மய மாவன் சுகமிகு மதுதா னுயர்பிர மானந்தம்.

(இ-ள்) ஈனந்தருசுகவிடயந்திரிபுடி யிடராமெனமன மசையாமல்,—எ-து. பிறப்புவீடென்னுமிரண்டினு ளழிவாயுள்ளபிரவியையே சரற்பாலதாகியசுகமயம்போற்றோற்றும்விடயந் திரிபுடியாயிருப்பதலாவைதுன்பமேயென விசாரத்தாற்றுணிந்து மனஞ்சற்றுசலியாதுநிற்க:—சேனந்தனது குலாயந்தனில்விழு செயல்போ னித்திரை செறிசீவன், —எ-து. ஆகாயத்திற் பறக்கும்பருந்து தனதுகூட்டிலலுத்துவிழுஞ்செயல்போல வுறக்கத்தோடொக வமைந்த சீவனென்றோன்: — சானந்தமில்பர னுடனென்றுவனெரு தனியல்லது பிறநினையாமல்,—எ-து. தானிங்ஙனமாயநிலையதென வளவைகளாற் கணித்தற்கரிய பிரமத்தோடிரண்டறகலக்கா நிற்பன்,தெளிந்தவிடத்துத் தனித்து நின்றது தான்மாத்திரமாதலா லங்ஙனந்தனித்துநின்றதன்னைமாத்திரமன்றி யலென்ப துளதாகவதனை யோர்பொருளெனக்கருதாது:—ஆனந்தமயமாவன் சுகமிகு மதுதானுயர்பிரமானந்தம்,—எ-து. ஆனந்தமயமாக விளங்குவன். அங்ஙனமாகமிக்குள்ளவவ்வானந்தமே மேலாய பிரமானந்தமெனப் படுவதாம்,—எ-று.

ஈனம், குணவாகுபெயர். விடயந் திரிபுடியிடராமெனமன மசையாமனித்திரைசெறிசீவனென்பதிலுல், இங்கே நித்திரையென்பது நனவிற்சுழுத்தி. சுத்தகேவல நிலையென்பாருமுளர். தனக்கயலென்ப தொன்றுமின்றியனைத்தும் சின்மாத்திரமாவிளங்கப்புரிந்த சந்நெறித்தாச் சலியாது நிற்கவேண்டி

வரும். யாதினுலெனில், விடயந்திரிபுடி யிடராமெனக் கண்டதுபற்றி. அங்ஙனஞ்சலியாதுநிற்றலே சுத்தசலம். இங்ஙநித்தாய சுத்தசகலமயமாகவே, மன மெனலேது, அது சலித்தலெனலேது ? இன்றமையின், மனமசையாத சுத்த சகலமயமாநிற்புரி யுறக்கம்வருமன்றே, அவ்வுறக்கந்தான் சுத்த கேவலமெனப் படுவது. இங்ஙநித்தயவன் சீவனுதலால், நித்திரை செறிசீவனெனவும், அந் நித்திரை, சுகமேலீடு. அச்சுகமேலீடு, மலரகிதமாதலாற்பரனெனவும், அப் போது சீவனந்தச் சுகாகாரமாய் விடுவனுதலால், பரனுடனொன்றுவனெனவும், அங்ஙனஞ் சுகாகாரமாநின்றவன் சீவனுதலாலும், தன்னையன்றி வேறு கண் டிலனுதலாலும், ஒருதனையல்லது பிறநினையாமலெனவும், ஆனந்தமயமன்றித் தான் வேறுகாரமாதற் கிடமின்மையின், ஆனந்தமயமாவனெனவும், இந்நிலைத் தாய அவசரத்தையே ஞான நாலோத்தும் பிரமானந்தமெனலானும், இப்பெ யரை யேற்றற்பாலதாதலானும், சுகமிதமதுதானுயர் பிரமானந்தமெனவுங் கூறினர்.

(க - து) பிரமானந்தலிலக்கண நினையதென்க் கூறியதென்பது. ஆனந்த மயனுமாவனெனப் பாடமுமுண்டு. திரிபுடி ; ஞாதரு, ஞானம், ஞேயமென் பன, ஒருதனையென்றதனுல், தான்மாத்திரமெனப் பொருள்கொண்டாம். திரி புடியிடராமென்றதனுல், உபமானத்தி லலுத்தவிழு செயல்போலென்றும். அளவைகள், அஷ்டவிதப்பிரமாணங்கள். மூன்கவியில், ஆலிங்கனசுகத்தை விடயானந்த மென்னுதது, தினசுழுத்தி சுகம்போ லாறுதல் செய்யாமைபற்றி யென்க. இக்கவியிலும் ; நித்திரையெனல், நனவிற்சுழுத்தியை. (கூச)

"சேனஃ" என்பது உபலட்சணமாகலின் சுழுத்தியாநந்தத்திற்குத் திருஷ்ட டாந்தமாகச் சுருதிகளிற்கூறியுள்ள சகுனி, சேனம், குமாரன், மஹாராஜன் மஹாப்பிராமணன் என்னும் ஐவகைத் திருஷ்டாந்தமுங் கொள்ளற்பாலன வாம் ; அந் திருஷ்டாந்தங்களாவன ; க-வது—அஸ்த, தம்ப முதலானவை களிற் கட்டுண்டிருந்த * சகுனிப்பட்சி இரைமுதலியவற்றைக் கவர்தற்பொருட் டுப் பூர்வாதி திசைகளிற் சுழன்றுதிரிந்து அங்கே விசிராந்தியடையாமற் மீன் கட்டுண்டஸ்தானமான அஸ்தம்முதலானவைகளே யாசிரயிப்பதுபோலச் சீவ னுடைய உபாதிரூபமானமனதும் புண்ணியபாவப்பயனை சுகதுக்கங்களே யநுபவித்தற் பொருட்டுச் சொப்பன, சாக்கிரமென்னும் அவஸ்தைகளில் அங் கங்கே சுழன்று போகப்பிரதமான கன்மம் நசிக்கில் தனது உபாதானமான அஞ்ஞானத்தில் லீனமாம் ; அம்மனம் லயமதின், மனோரூப உபாதியுடைய சீவன் பரமான்மாவே ஆய்விடுவன் ; இது சாந்தோக்கியசுருதியின் சஷ்டாத்தி யாயத்திலுள்ளவாக்கியார்த்தம். உ-வது—ஆகாசத்தின்கண் எங்குஞ் சஞ்சரி யாநின்ற சேனமென்னு நாமமுடையபட்சி ஆகாசத்தில் சஞ்சாரரூப நிமித் தத்தாலுளதானசிரமநிவிர்த்தியின் பொருட்டுச்சயனஞ்செய்தற்குத் தனதஸ்தா னத்தின் அபிலாஷை யொன்றனையே யுடைத்தானதாய்த் தனது குடும்பை யிற் பட்சங்களையொடுக்கிக்கொண்டு அதிவேகமாவீழா நிற்பதுபோல மனோவு பாதியையுடைய சிதாபாசனும் பிரமாநந்தம் ஒன்றிலேயே அபிலாஷையுடைய

* சகுனி = இராஜாளிப்பட்சி.

ஞய் யாதொன்றினுனுந் தடைபடாமல் சுழுத்தியினிமித்தம் இருதயாகாசரூப மான ஸ்தானத்தில் வேகமாகச்செல்லாநின்றனன் ; **இது பிருகதாரண்ணிய வுபநிடதவாக்கியார்த்தம்.** கூ-வது—அதிபாலன் கழுத்தளவு நிரம்பஸ்தனபா னஞ் செய்து மிருதுவான சய்யையிற் சயனித்துக்கொண்டு யான், எனது என் பனவாதிய விசேஷஞானமின்மையின், இராகாதிரகிதனுய்ச் சுகமூர்த்தியாகவே யிருக்கின்றனன் என்பதும், ச-வது—சக்கிரவர்த்தியாகிய அரசன் ஞானத் தோடுகூடிய புத்தியின்மையனுயினும், சர்வமதுஷியாநந்தங்களோடுங் கூடினவ னதலால் பிரார்த்திக்க யோக்கியமான விஷயங்களினபாவத்தால்ரா இகாதிரகித னுய். ஆநந்தமூர்த்தியாகவே யிருக்கின்றனன் என்பதும், டு-து—மஹாப்பிரா மண னென்னும பிரத்தியகபின்ன பிரமசாட்சாத்காரமுடையவன் நான் கிருத கிருத்தியனுகின்றேனென்னும் வித்தியாநந்தத்தின் பரமகாஷ்டையை யடைந்த வனுய்ப் பரமாநந்தசொரூபமாகவே யிருக்கின்றனன் என்பதும் பிருகதாண் ணியத்திற் பாலாகிபபிராமணப் பிரகாணத்திலுள்ளன ; இவ்வாறு திருஷ டாந்தங்களானும் சுழுத்தியை யடைந்தபுருஷன் ஆநந்தரூபமாகவே யிருக்கின் றமைகாண்க.

குமாரன்முதலிய மூவகைப்புருஷரை உதாரணமாகக் கூறியதன்தாற்பரி யமே தெனின் ;—விவேகரகிதபுருஷரின் மத்தியில் அதிபாலன் சுகியாயிருக் கின்றனன். ‡ விவேகிபுருஷரின் மத்தியில் சாருவபௌமன் சுகியாயிருக்கின்ற னன். அதிவேகபுருஷரின் மத்தியில் ஆநந்தரூபமான ஆத்மசாட்சாத் காரமு டையபுருஷனே சுகியாயிருக்கின்றனன். அந்நியபுருஷரோ சர்வதா இராகாதி யுடையரா யிருத்தலின், சுகமின்மையராகவே யிருக்கின்றனர் ; ஆதலால், அவர்களைச் சுழுத்தியுடையவனுக்குத் திருஷ்டாந்தமாகக் கூறவில்லை என்க.

அ - ஸை க.

[ஐயமுறுதற்கின்னும்பிரமானந்த மினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

125 தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப் பொருள்விழி
துபில்வோர்க, டாங்கும் மலரிணை நன்று கச்சிலர் சம்பா திப்பதுதா
னசுகந், தீங்குந் நன்மையு மாண்பெண் முறைமையுந் தெரிபா தமளி
செய் பொழுதேபோ, லாங்குள் வெளிகளு மறியா வனுபவ மதனு
லதுபிர மானந்தம்.

(இ-ள்.) தூங்குஞ்சுகமது பிரமச்சுகமெனல் சுருதிப்பொருள் விழிதுயில் வோர்கள்:—தனவிற்சுழுத்திசுகத்தை பிரமானந்தமென்பது மகா வாக்கியார்த் தமேயன்றி வேறன்றுமெனக்கொள்வோர் தூங்காமல்தூங்குபவர்:—தாங்கும் மலரிணை நன்றுகச் சிலர் சம்பாதிப்பது தானசுகம், தீங்குந்நன்மையு மாண் பெண்முறைமையுந் தெரியாதமளிசெய்பொழுதேபோல், —எ-து. சிங்கம்போன் றமைத்தகருவிகளாற்றுங்கப்பெற்ற புஷ்பசயனத்தைச் சிலர்நன்றுகச்சம்பாதிப் பதுஸ்தானசுகம்வேண்டியாதலால், அம்மலரிணையி லிது தீமையெனவும், நன்

‡ விவேகி = விவகாராதிகளிற்குசலர்.

மைபெனவும், ஆண்பெண்முறைமையெனவு முணரும்பாகுபாடேசற்றுந்தெரியா தறங்குமாறுபோல:—ஆங்குள்வெளிகளு மறியாவதுபவ மதலாலது பிரமானந் தம், —எ து. அந்த நனவிற்சுழுத்தியின்கண் ணகம்புறமினையவென்பதுந் தெரி யாதறங்குமனுபவமாம், அவ்வனுபவத்தாற்கணிக்குஞ்சுகமெதுவோ, அதுவே பிரமானந்தமெனப்படுவதாம், —எ-று.

விழிதுயில்வோர்கள்தூங்குஞ்சுகமது பிரமச்சுகமெனல் சுருதிப்பொருள், எனக்கொண்டுகூட்டித் தூங்காமற்றூங்குவோர் தாமங்ஙனந்தூங்குங்காலெழுஞ் சுகம் பிரமசுகமாமெனக்கூறுவது சுருதிப்பொருளாம், வேறன்றெனப்பொருள் கொள்ளினுமமையும். எனவே, வேதார்த்தமும், மகான்கள்பிரமமெனலுமொக் குமென்பதாயிற்று. பிரமச்சுகமெனல், எழுவாய். சுருதிப்பொருள் பயனிலை. இதுகாறு மிவ்வெல்லைகடவாமைக் கெழுவாய்பயனிலை கூறியசென்க. தாங்கு மென்னும் வினைக்கெழுவாய் தொக்கியிருப்பதால் சிங்கம்போன்றமைத்த கருவி யென்றும். தாங்கும்மலரணைநன்றாகச் சிலர் சம்பாதிப்பது தானசுகம்பற்றியாத லால், அதிலுறங்கில், நன்மைதீமையாண்பெண் முறைமையாதிக ளெங்ஙனந் தெரியும், தெரியாதாதல்பற்றி யிவ்வுவமைவேண்டிக் கூறினர். மலரணை மிகத் துயில்வினைத்தற்குத் தானமாதலி னச்சுகம்வேண்டி நன்றாகச் சம்பாதிப்பதென் றுரென்க. பலரென்னுது சிலரென்றது, நிரந்தர மிங்ஙனஞ்செய்வோர் மிக்க செல்வத்தார் சிலராதல பற்றியென்க. தானசுகமென்றது ; இவ்விடத்திற்கி யைந்த காரணப்பெயராம். யூகசுகமெனின், யூகமெனற்குப்பொருள்கள், ஓர் புல், கருங்குரங்கு, காஞ்சி, தருக்கம், படை, படைவகுப்பு, பெண்குரங்கு முசு, என்பன. இது பலபொருளொருசொல். இவற்றுள் யாதிங்கே பொருந்தும். பொருந்தாமையின், ஐயிருசூற்றத்துள் மாறுகொளக்கூறலெனலே யேற்கும். இதற்கென்செய்தும் சான்றோ ராட்சியெனின், பொருத்தமின்றி யிராது சம் பாதிப்பதாலாகமெனப் பாடங்களிருக்கின்றன வெனிலோ ; ஊகமென்பது, உத்தி, குரங்கு, நினைவு, புலியென்பன. இது பலபொரு ளொருசொல். இவற் றுளெவ்வருத்தம்பற்றி யம்மொழிவந்தது. யுத்திபற்றியெனின், உபமானவுப மேயசாதாரணதர்ம மினையதென்றறியார்டோலும். உபமானத்தையுபமேயமாக் கலமா ? அதைச் சுருதியுத்தியனுபவத்துள், யுத்தியனுபவமாக்கலாமா ? தாங் கும்மலரணைநன்றாகச் சிலர் சம்பாதிப்பதானாகம், நீங்குந்நன்மையு மாண் பெண்முறைமையுந் தெரியாதமளிசெய்பொழுதே போமென்ல் காறுமுவமை யன்றே ? இதற் குவமேயம் ஆங்குள்வெளிகளுமென்பது முதலறியாவனுபவ மென்பதகாறும் தானசுகமெனப்பிறிதிகளிருப்பதென்னே ? அங்ஙனமாகவும் பிறிதிகளிருக்கி ஞருதலையாகத் துணிதலை நோக்கும். தானசுகமெனினும், தானாகமெனினு முபமேயத்தொடர்பன்று, உபமானத்தொடர்பு. இவ்வரம்புக டந்துகூறுவது, கல்விவரம் பறியார்போலுமே யிதற்கென்செய்தும் கவிக்குற்ற மன்று, கலியிலக்கணங்கல்லாதுரைகூறு நமதுகுற்றம். ஆசலின் தானசுகமெ னலே யையமின்றிப் பொருந்தும். இலக்கணமில்லாக்கவி யுப்பில்லாவுணவுபோ லும். அதை யாதரவாகக்கொண் டுரைகூறலென்னுரை. பசையற்றதாம். வெறு வாய்மெல்வதுபோலும் சுருதியுத்தியனுபவங்காண்ட லுபமேயத்திலன்றி யுப

மானத்திலன்று. உபமேயம்விளங்கக்கூறுவ துபமானமாதலின் கூடாதென்க. தூங்குஞ்சுகமதுபிரமச்சுகமெனல் சுருதிப்பொருள்விழி துயில்வோர்களென்பது சுருதிப்பிரமாணமாம். தாங்கும்மலரணை நன்றாகச் சிலர் சம்பாதிப்பது தானாகமெனக்கூறி யிதுயுத்திப்பிராமாணமென்பது பொருந்தாது. ஆங்குள் வெளிகளுமறியா வனுபவமென்ற தனுபவப் பிரமாணமாம் கல்வித்திறமின்மையா லிக்கவியில்லாத யுத்திப்பிரமாணத்தை யுண்டெனி லெங்ஙனமேற்சப்படும். அவர்போல்வாரேற்பர்,

(க-து.) பிரமானந்தமென்பது சுருதிக்கு ரனுபவத்துக்கு மியைந்திருக்கக் காட்டினுரென்பது,உரையை யாவர்கூறினு மிலக்கணவழுவின்றிக் கூறவேண்டும் கவிக்கிலக்கணமுரண வுரைகூறின், எவ்வாசிரியராயினு மெந்த சாம்பிரதாயமாயினு மென்சிறப்பு. கவிக்குரையன்று, உரைக்குக் கவிடோலும், இதனை யெவரேற்பர். இந்நூலாசிரிய ரெண்விதானந்தமென்றூர், இவற்றுள் தானாகமெனல்கிடையாது.இத்திறத்தார் பிறருரைமேற் குற்றங்காட்டலி லென்சிறப்பு. தன்கோணலைத் தானிமிர்த்தவதியார்போலும், தெரியாதவளிசைபொழுதேபோலெனச் சில பிறிதிகளிருக்கின்றன. பொருந்துமாறுரையிடுக. போலி வேதாந்நிமயமூலகமாதலின். தாங்கும்மலரணை நீங்குந்நன்மையும், விரித்தல் விகாரம். (கஉடு)

சுழுத்திகாலத்திற் சகல பிரபஞ்சமும் விலீனமானதமப்பிரதானமாகிய பிரகிருதியால் ஆவிருதலுனசீவன் சுகரூபமான பிரமத்தையடைகின்றனென்று அதர்வணவேதத்தின் கைவல்யசுருதி கூறுகின்றதென்பார், ''தூங்குஞ் சுகமது பிரமச் சுகமெனல் சுருதிப்பொருள்'' எ ம், சுழுத்தியின்கண் சுகமில்லையாயின், மகத்தரப் பிரயாசத்தால் மிருதுசய்யாதி சாதனங்கள் என் சமபாதிக்கின்றூர்களென்பார், ''விழிதுயில் வோர்கள், தாங்கும் மலரணை நன்றகச் சிலர் சம்பாதிப்பது தானாகம்'' என்றும் கூறினர். ' அமளிசெய் பொழுதே போல்'' என்னும் உத்தி பிருகதாரண்யத்தின்ஜோதிர்ப்பிரர்மண நாமப்பிரகரணத்திலுள்ள வாக்கியம். திருஷ்டாந்தத்தில் வெகுமார்க்கங்கள் எங்கேயொன்றுகக் கூடுகின்றனவோ அப்படிப்பட்ட ஸ்தானம் அல்லது,லகுமார்க்கம் இவை முதலியவை வாகியவிருத்தாந்தம்,கிரகிருத்தியம் ஆந்தரவிருத்தாந்தம் : தாஷ்டாந்தத்தில் சாகரணம் வாகியவிருத்தாந்தம், நாடியின்கண்ணுள்ள சொப்பனம் ஆந்தரவிருத்தாந்தம்என்றறிக ''தீங்குந் நன்மையுமாண்பெண் முறைமையும்'' என்பது, இவர்சருத்து. இதற்குமுன்னூலான பஞ்சதசியை ஆராய்ந்து இவ்வாறுரைசெய்யாமல் சுவகபோல கற்பனையாக இச்செய்யுளுக்கும், இதற்கு முன்னும் பின்னுமுள்ள செய்யுள்களுக்கும் உரைசெய்திருக்கின்றனர் ; அறிந்தோர்கள் அதனை உரையென்று ஒப்பார்கள் ஆநந்தம், மூவகையென்றும், அதன்விரிவு எண்வகையென்றும், ஏனையவைந்தும் மூவகையிலந்தர்ப்பாவமென்றும், பிரமாநந்தம், வாசலாநந்தம், விஷயாநந்தமென்னும் இம்மூவகை ஆநந்தத்திற்கு அந்நியமாக உலகில் ஆநந்தமில்லையென்றும் இதற்கு முன்னூலான பஞ்சதசியில் ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகளால்அருளிச்செய்யப்பட்டிருக்க அதற்கு முரணுக தானசுகமென்று பாடங்கூறி அதற்குரைசெய்திருப்பதுவேறே எப்பிரகாணங்கொண்டோ யாம்-அறியேம்.

அ - கை.

[பிரமானந்தவிலக்கண மினையதென நன்குறத்தெளிந்தேன், இப் போதோரனு பவமென்னுள்ளுதிக்கக்கண்டேனதனைக்கேட்டருளுமென மாணாக்கன்வியந்துகூறுவதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

126. உதவும் புவியினி லொருவன் னனுபவ மொருவன் மனதினிலுதியா தே, மதிபுக் கெடுகிற துயில்கொண் டானந்த மயனன்றேசுக முறுகின் ரு, னிதுவிஞ் ஞான மபஞ்சிந்தையி னினைவாய்வந்திடு மெனல்கண் டேன், சுதைவிண் ணோர்புகழ் குருவே நீரிது சொல்லீர் சகலமும் வல்லீரே.

(இ-ள்.) உதயப்புவியினிலொருவன்னனுபவ மொருவன்மனதிலுதியா தே, —எ-து வேணடுவதைத் தடையின்றி யுதவுதக்கஞானபூமியேழனுள், ஒருவன்கண்டசுவானுபவ மற்றொருவன்மனதிற்காணுமா, காணுதே, இசென்னவியப்பு, அதனைச்சொல்லுகிறேன், அதாவது:—மதியுங்கெடுகிறதுயில்கொண்டானந்த மயனன்றேசுகமுறுகின்றான், —எ-து. மனதும்நசிக்கத்தக்கயோக நித்திரை காரணமாக வானந்தமயனுகிறவான்மாவன்றே பிரமானந்தவடிவமாகின்றான், இங்ஙனமிருக்க:—இது விஞ்ஞானமயனுஞ்சிந்தையினினைவாய்வந்திடு மெனல்கண்டேன், —எ-து. இவ்வானந்தமானது விஞ்ஞானமயனுகியமானதனிடத்தில் நினைவுவடிவாகவந்துவிடுமெனச் சத்தக்கள்கூறுவதைப் பிரத்தியட்சமாக வடியேனிடத்திற் கண்டனன்:—சுதைவிண்ணோர்புகழ்குருவேநீரிது சொல்லீர் சகலமும்வல்லீரே, —எ-து. அமிர்தத்தையுட் கொண்டதேவர்களாலுந் துதிக்கப்பெற்றகுருநாதனே! சகலார்த்தமுமையமின்றிவிளங்கப் போதிப்பதில் வல்லமையுடையவரே! யிஃதெங்ஙன்ங்கூடும் தேவரீரேயிவ்வையமகலத்தெரித் தருளவேண்டும், எ-று

உதவுமெனப்பொதுப்படக்கூறியதனுல் வேண்டுவதையெனவும், புவியெனப்பொதுப்படக்கூறியதால் ஞானபூமியெனவும், துயிலெனபபொதுப்படக் கூறியதால் யோகநித்திரையெனவும், ஆனந்தமயனெனப்பொதுப்படக்கூறியதா லாத்மாவெனவுங்கொண்டாம். இரட்டுறமொழிதலென்னுமுத்தியால், முத்திக்குச்சாதனமான தனுகாரணங்களே யுதவுதக்கவிப்பூமியி லொருவன்கண்டவனுபவ மொருவன்மனதினில், எங்ஙனங்காணும், காணுதேயெனவுதாரணமாக்கியசாக வுரைகொள்ளினுமமையும்.

(க-து.) நினைவிறந்தவானந்தம் நினைவாயதெங்ஙனமெனவினவினனென்பது. ஏனெனில், இவன்தன்சமாதியில்மனநாசத்திற்கண்ட தடையற்றவானந்தம், சமாதிவிட்டகாலத்திலும் தன்னினைவெல்லாமிடைவிடாது தூற்றுக்கொண்டிருத்தலாவது; யாதுபுரியினும், யாது நினைக்கினும் யாது சுகிக்கினும், கலையாது நெஞ்சினிறைவாயிருத்தல். மலடியறியாள்பிள்ளைவருத்தம், அதுபோல, ஏனையரறிபாரிவ்வானந்தநிலைமை. இவனெய்திய விவ்வனுபவமொழி சத்தியமாதலற்றியிங்ஙனம் வினவினனென்க எனலென்பது, என்றுசொல்லுதல்.

இதனுல்சத்துக்களென வருவித்தாம். யாதினலுங் கெடாதசென்பதுதோன்ற மதியுங்கெடுகிற வென்றார். மதியுமென்பதிலும்மை யுயர்வுசிறப்பு. ஆனந்த நினைவாய்வந்திடுமென்றதினுல், ஆனந்தமேநினைவு நினைவே யானந்தமெனப் பெற்றும்,

(க-து. நினைவிறந்தசுகம்; நினைவுகநிற்பற் கேதென்னையென்பது. மன மிறந்தவிடத்துநிக்கும் பிரமானந்தத்தை யான்மாவனுபவிக்க, மனதுக்கெட்டு வானேனெனல் விஞ. (கூசு)

அ - கை க.

[சுத்தமனதும், பரமாத்மாவும், ஒன்றேயெனவுபமானமுகத்தா லிக்கவியிற்கூறுகின்றார்.]

127. நெய்யும் வெண்ணெயு மிருபேர் களுமறி நினைவிற் பிரிவறி வினிலில் லை, செய்யுங் கனவினி லிறுகும் மனதொடு சேருஞ் சின்மய விஞ்ஞா னன், கையுங் துயர்மன நழுவும் பொழுதுணர் ஞானச் சுகமுணு மானந் தன், பெய்யுந் துளிகளு நீருங் குளமொடு பாரும் போலிவர் பிறிவன் றே.

(இ-ள்) நெய்யும் வெண்ணெயு மிருபேர்களுமறி நினைவிற்பிறிவறிவினி லில்லை,—எ-து, நெய்யென்ற பெயரும், வெண்ணெயென்ற பெயருமாகியவிவ் விரண்டும், படுத்துணரத்தக்க மனத்தாலாய பேதமேயன்றி யவ் விரண்டை யும் நுகர்கத்தக்கஞானவுணர்வுக்குச் சற்றுமில்லை: —செய்யுங்கனவினிலிறுகும்மன தொடு சேருஞ்சின்மயவிஞ்ஞானன், —எ-து, இச்சாஞானக்கிரியைகளைச்செய் தற் கியைந்த சாக்கிராவத்தையில் விசாரத்தாற் றனது செயலிற்சுருங்கிய மன தோடுகூடிய சின்மாத்திரமாயிருக்கும் விஞ்ஞானமயனென்போனும்; —கையுந் துயர்மன நழுவும்பொழுதுணர் ஞானச்சுகமுணுமானந்தன், —எ-து. வதை யத்தக்கதுயர்மயமானமனது மெல்லநழுவற்கியைந்தசமாதிகாலத்தில்தன்னையே யுணரத்தக்கஞானானந்தத்தை யனுபவிக்கின்றவானந்தமயனுவான்மாவும்: — பெய்யுந்துளிகளுநீருங்குளமொடு பாரும்போலிவர்பிறிவன்றே,—எ-து. துளிக் குந்துளிகளும், சலமும், குளமுங்கரையும், எங்ஙனம்பேதமின்றேவதுபோல விஞ்ஞானனும், ஆன்மாவுமாகியவிவ்விருவருந்தம்முள்பேதமிலராம், எ-று.

அறிகினேனெனவே, சட்சுகாரணமாக வறியுநினேனென் றுரையிற்று. கண் ணுக்கிரண்டாகத் தோற்றினு நாவுணர்வுக் கொன்றே. அன்றியும்,நெய்வெண் ணெயெனச்சொற்பேதமேயன்றிப் பொருட்பேதஞ் சற்றுங்கண்டிலம். அது போல; விஞ்ஞானமயன் ஆனந்தமயனெனச்சொற்பேதமுந் தோற்றபேதமுமே யன்றிபொருட்பேதமு மனுபவபேதமுஞ் சற்றுங்கண்டிலம் வெண்ணெயன்றி நெய்யெனலும், சலமன்றித் துளியெனலும், கரையன்றிக்குளமெனலும், எங் கே. அதுபோல, விஞ்ஞானமயனையன்றி யானந்தமயனென்பவனெங்கே. என வே, அறிவையன்றி யானந்தமென லெங்கேயென்றுரையிற்று. ஆகவே, அறிவே யானந்தமெனப்பெற்றும். பெறவே, ஞப்தியேபிரியம்பிரியமே ஞப்தியென

க்கண்டாம். காணவே, அனுபவத்திற் பேதமின்றெனத்தணிந்தாம், இத்தணிபு; இதனைமறுக்கத்தகுமெனக்குறிப்பிக்கின்றது.

(க-து.) விஞ்ஞானமயனெனலும், ஆனந்தமயனெனலும், ஓரவசரம்பற்றிச் சொல்லாற்பேதங்கூறவந்ததேயன்றிப் பொருளாற்சற்றுமின்றென்பது இவ்வனுபவஞ்சகசானுபவத்திற் குருமுகத்தாற்காணப்படுவது. கஉஎ)

அ - னை க.

[வாசனானந்தவிலக்கண மினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

128 ஒன்றுகியபிரமானந்தன்சுக மொழிவா னென்வெளி வருவா னே, னென்றுன் மூன்செய்த கருமம் வெளியினி விழுக்குஞ் சுழுத்திவிட் டெழுந்தோ னு, கன்று யினசுக மகலான் வெளியிலு நடவான் மறதியும் பெறமாட்டா, னன்று மெனவிருந் தறங்குஞ் சிலகன்ம மதுவே வாதனை யானந் தம்.

(இ-ள்.) ஒன்றுகியபிரமானந்தன்சுக மொழிவானேன்வெளிவருவானே னென்றால், — எ-து எகமாகவிளங்கும்பிரமானந்தனென்போன் தனதுசுகானந் தத்தினின்றுநீங்குவானேன் வெளிப்படுவானேனெனக்கேட்பையாயின்: — மூன் செய்தகருமம்வெளியினிலிழுக்குஞ் சுழுத்திவிட்டெழுந்தோனும், — எ-து. பூர் வத்திற்செய்த கன்மமானது புறம்பில்மெல்லவிழுக்கும், அதனால் சுழுத்தியை விட்டுநீங்கினவனும்: — நன்றுயினசுகமகலான்வெளியிலு நடவான்மறதியும்பெ றமாட்டான், — எ-து. வெகு பிரியமானவந்தச்சுகத்தினின்றும் நீங்கான், புறம் பிலுஞ்செல்லான், அச்சுகத்தை மறக்கவுமாட்டான்: — அன்றுமெனவிருந்துறங் குஞ் சிலகன்ம மதுவேவாதனையானந்தம், — எ-து. இப்போதவசியமல்ல, இப் போதவசியமாமென நினைத்துறங்குவதான சில பிரயத்தனமப்போதுநிகழ்வன வாம், அங்ஙனநிகழ்தலே வாசனானந்தமெனப்படுவதாம், — எ-று.

பிரமானந்தமென்னுது பிரமானந்தனென்றதனால், "அம்மயமானவனென்மா வாகியபுருடனெனப்பெற்றும். மூன்செய்தகன்மமென்றது; தினமும் வழக்க மாகச் செய்துகொண்டுவந்த தினவிர்த்தியை. தினசுழுத்தி கலிலிலெங்ஙனமோ, அங்ஙனம் பிரமானந்தமேலீடாகிய சுழுத்திகலையுங்கா னிகழுமனுபவானந்தமா தலினிதனைவாசனானந்தமென்றார். சுழுத்திகலைவில், விவகாரவிர்த்தி வெளியிலி ழுக்கும்போது, அவ்வானந்தப்பிரியந் தடுக்கும். அவ்வானந்தவசத்தாகுதுமெனின், விவகாரசங்கற்பந் தடுக்கும். சுகத்தைவிட்டகலக்கூடாமையினி தருணமல்ல வெனவும இப்போதேசெய்யாவிடி லிவ்வளவுநட்டம்வரும், ஆதலினிதருண மாமெனவு மங்கே யிங்ஙனநிகழ்தலின், அன்றுமெனவிருந்துறங்குஞ் சில கன் மமெனப்பட்டது. வெளிக்குவரவொட்டாமல தடுப்ப தவ்வானந்தாசமாதலால் வாசனானந்தமென்றதென்க.

(க-து.) இடுகுறிப்பெயரன்றெனக் காட்ட விவ்வேதுக்களேத் தெரிவித்து வாசனானந்த விலக்கணங் கூறியசென்பது வெளிக்கிழுத்த லிருவகையேதுபற்றி யெனினு மமையும். அதாவது; பிராரத்தகன்மம், சகசநிட்டையென்ன

வெளிக்குவருதல், விஞ்ஞானமயத்தக்கு வருதலே. இருவகை யேதுக்களினைய வெனத் தணிவது, நயம்பற்றியென்க. அதாவது ; கன்மமாயின் பிராரத்துவ மெனவும், நிலையாயின் இந்நிட்டையெனவுமாம். சகசநிட்டைக்கிழுத்தலெனக் காண்டல்கூடாமையின் முன்செய்தகன்மம் வெளியினிலிழுக்குமென்றதென்க சுழுத்திவிட்டெழாதவனுமென்பதுதோனறச்சுழுத்திவிட்டெழுந்தோனுமென் பதின்கண்ணுள்ளவும்மை, இறந்ததழீஇயவெச்சவும்மை.

அ - கை.

[நிசானந்தவிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

129. அந்தக் கணமுட லகமென் றிடர்களி லலைந்தே சுகந்தனை மறந்தேபோ, முந்தைச் செயும்வினை சுகதுக் கந்தரு மோகந்தருவடி வடிவேகா, ணெந்தப் புருடனு மொருசிந் தையுமற விருந்தே னெனலனு பவமாகு, மிந்தப் படிதனு தாசீ னச்சுக மிதுவே நிசமெனு மானந்தம்,

(இ-ள்.) அந்தக்கணமுட லகமென்றிடர்களி லலைந்தே சுகந்தனைமறந்தே போம்,—எ-து. தேகமே நானென்றுன்ன வக்கணமே யான் மாதுன்பப்பெருக் கிலகப்பட்டின்ன திசையெனக்காணு தலைந்து தந்பிரியத்தைச் சற்று மெண்ணு மின்றி மறந்தேவிடுவன்:—முந்தைச்செயும்வினை சுகதுக்கந்தருமோகந்தரு நடி வடிவேகாண்;—எ-து. முன்செய்த கன்மமானது சுகத்தையேனுந் துக்கத்தை யேனுந் தரும். மோகநிலையோ வங்ஙனந்தராது, மத்தியகதநிலையையேதரும்:— எந்தப்புருடனு மொருசிந்தையுமற விருந்தேனெனலனுபவமாகும்,—எ - து. எந்தப் புருடனையினும் யாதோர்சிந்தையுமன்றி யானிருந்தேனெனைக் கூறுவது, எவர்க்கு மனுபவமாம்:—இந்தப்படி தனுதாசீனச்சுக மிதுவேநிசமெனு மானந் தம்,—எ-து: இவ்வாறு தன்னு லனுபவிக்கப்பட்டது தாசீனசுகமாதலாலிதுவே நிசானந்தமென்பதுவதாம்,—எ-று.

அந்தக்கணமென்றற்கு, தனதெதார்த்தவடிவைமறந்தவந்தக்கணமென்றும், மறந்ததனுலதனதெதார்த்தசுகந்தனை மறந்தேபோமென்றுங் கூறிய தனுபவ மிருத்தலிற்பொருந்தும். பூர்வவினை ;¦ சுகதுக்கத்துளொன்றுதருமாயின், மகா மௌனம் ; மத்தியகதநிலையைத்தருமென்றார். காண், அசைநிலை. தன்னுதாசீ னச்சுகம் ; தனது விருப்பு வெறுப்பற்ற சுகம்.

(க-து.) விழிப்பி லொருசிந்தையுமற நிற்றலாலாயசுகமே, நிசானந்தமென் பது. இது யாதோர்நினைவுமறநின்றவிடத்துதித்த சுகமாதலாற் காரணப்பெய ராயிற்று. சுழுத்திசுக மென்னலாமேயெனின், உணர்வற்றவிடத் ததன்றன்மை யின் பொருந்தாது. இதனைச் சமரசசுகமெனினு மமையும். ஒரு சிந்தையுமறவி ருத்தல், கற்பனையறல். எனவே, நிசமென்றுயிற்று. நிசத்திலுதித்தலா னிசா னந்தமெனப்படுமென்க. ஞாஞஞ்ஞானத்துக்கிடையாதல்பற்றி நடுவடிவெனப் படும். இதனை முக்கியானந்தமெனக் கூறுவார், முன்பின்னறியார்போலும். ()

அ - கை.

[முக்கியானந்தவிலக்கணமினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

130. நிசமா னதுமுக் கியமோ குடத்துள நீரன் றேவெளி யீரக் தான், வசமா மகங்கர மறைந்தா னிசமது படிந்தான் முக்கிய வகை சுயாக், திசையார் திரிசய மறியா தேதுயில் செறியர தேயுட றறி போலே,யசையா தேமதிசமமா கியநிலை யதுதான் முக்கியவாநந்தம்.

(இ-ள்.) நிசமானதுமுக்கியமோகுடத்துள நீரன்றேவெளியீரந்தான்,—எ-து. நிசானந்தமானது முக்கியானந்தமெனப்படுமோவெனின், குடத்திலுள்ள நீரிலலன்றே புறம்பிலீரமாகக்காணப்படுவது, ஆகலின் முக்கியானந்தமெனப் படாது:—ஆயினெங்ஙனமெனின் வசமாமகங்கரமறைந்தா னிசமதுபடிந்தால் முக்கியவகையாகும்,—எ-து. பிறவிதரற்குவசமாயுள்ளவகங்காரமானது திசை காணுதகன்று நிசவடிவங் கைகூடுமாலலப்போது முக்கியமென்கிறவகையை யேற்பதாகும்:—திசையார்திரிசய மறியாதேதுயில்செறியாதே யுடறறிபோலே யசையாதே மதிசமமாகியநிலையதுதான் முக்கியவானந்தம்,—எ-து. எங்கணு நிறைந்துள்ள திரிசயத்தை நாடாமலும், உறக்கத்ததன்வயப்படாமலும், மனமா னது நடுநிலையதாகினதுவே முக்கியானந்தமெனப்படுவதாம்,—எ-று.

முக்கியமோவென்பதிலோகாரம், வினை. அகமுகமாகச் சொரூபசமாதியிற் கண்ட சுகமன்றே புறம்பில் தானே விருப்பு வெறுப்பின்றிய சுகமாகக் காண் கின்றதென்பது குறிப்பிற்றேன்ற வுவமையாற்கூறியதென்க. அகம்புறமொத் தலினிசானந்தமெனவும், அகங்காரமறைதலும், உண்மைசேர்தலும், திரிசய மென்பது சற்றுங்காணவறியாமலும், முழுது மானந்தநித்திரையில் முழுகா மலும், தேகந்தறிபோ லசையாமலும், மனமானது ஞாலஞ்ஞானநெறித்தாச் செல்லாமலுநிற்ற லகத்திலாதலால், முக்கியானந்தமெனவுங் கருதிக் கூறியதா கக்காண்கின்றது. இதனையறியா தொன்றையொன்றாக்கூறுவார் செய்யுட்பிர யோக மறியார்போலும். இங்ஙன நிற்கவேண்டியது மனமாதலால், மதியை மனமென்றும், அதுதானென்பது சுட்டுப்பெயராதலின், மதிசமமாகிய நிலை யென்பதை வினையெச்ச மாக்கினும். செறிதல், நெருங்கல். ஆதலின் துயில் செறியாதேயென்பதற்கு, உறக்கத்ததன்வயப்படாமலென்றும்.

(க-து.) இனைய வாயவேதக்ளா லிதுநிசானந்தமன்று முக்கியானந்த மென்றுசென்பது. இக்கவிக்குரை யிற்நெறித்தாயது ; கவிநோக்காலென்க. ()

அ - கை.

[இவ்வெண்விதானந்சங்களு ளடங்காதவானந்தபேதங்களுள, அவையும்பிரமானந்தலேசமென விக்கவியிற் கூறுகின்றார்.]

131. மனுடன் மனுட கந்தரு வன்தே வகந்தரு வன்பிதிர் பிற வித்தேவன், றனுடன் கரும சுரன்சுர னிந்திர ஞசான் பிரசா பதியா னேன், கனவி ராட்ட னிராணிய கருப்பன் கருதும் மிப்பதி னெரு பேரின், பினவா னந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக் கடல்பிர மானந்தம்.

(இ-ள்.) மனுடன் மனுடகந்தருவன் தேவகந்தருவன் பிதிர்பிறவித்தே வன்றனுடன்,—எ - து. மனுடன், மனுடகந்தர்வன், தேவகந்தர்வன், பிதிரர், பிறவித்தேவன்றனுடன்:—கருமசுரன்சுரனிந்திரனுசான் பிரசாபதியானேன்,—எ-து கருமசுரன், சுரன், இந்திரன், ஆசான், பிரசாபதியானேன்:—கனவி ராட்டனிராணியகருப்பன், கருதுமிப்பதினெருபேரின், —எ-து. கனவிராட்டன், இராணியகருப்பன், எனக் கருதத்தக்க விந்தப் பதினெருபேர்களின்:—பினவா னந்தங்க ணுரையாம் பிரளய வெள்ளக்கடல் பிரமானந்தம்,—எ - து ஒன் றுக்கொன்று பேதமாயுள்ள விவ்வானந்தவகைகள், கற்பனந்தத்திற் பிரளயம் போன்றெழும் பிரமானந்த மென்னும் பிரவாகசாகரத்தி னுரைபோல்வன வாம்,—எ-று.

ஆனந்தபேதங்களிற் றனித்தனி நிறைந்தோர், மனிதரிற் ; சார்வபூமனும் மனுடகந்தர்வரில் ; மனிதனையிருந்து புண்ணியபரிபாகத்தாற் கற்பாந்தத்திற் கந் தர்வனுமனுடகந்தர்வனும், தேவகந்தர்வரில் ; பூர்வ புண்ணியகர்மத்தால் மனு டகந்தர்வபதவியினின்று தேவகந்தர்வபதவியடைந்த தேவகந்தர்வனும், பிதிர ரில் ; சிருஷ்டிகாலத்தேயுண்டான வக்கினிஸ்வாத்தாமுதலிய பிதிரரும், பிற வித் தேவர்களில் ; கற்பத்துக்காதியில்தானே தேவப்பிறவியையுடைய வாசான சதேவனும், கருமசுரரில் ; மனுடனையிருந்து செய்தவசுவமேதாதிகன்மபலத் தாற் றேவனுகச்சென்றித்த கன்மதேவனும், சுரரில் ; காலன் முதலியோருமாம். ஆசான், பிரகஸ்பதி, பிரசாபதியானேன், பிரமன் என்பன. கனவிராட்டு ; வியாபகமான விராட்புருடன். பின்னவெனற்பாலது, பினவென்றாயதிடைக் குறை. இப்பதினெரானந்தங்களு நுரையெனவே அஷ்டவிதானந்தங்களும் அலையெனப்பெற்றாம். பிரளயமென்றது, இங்கே கற்பனந்தத்தை. மண்ணுதிய யாவுந் தனதுருவாகக்கொள்ளு மவசரத்தை, விராட்புருடனெனவும், எங்கு மாப் பிரகாசிக்கின்றவற்றையெல்லாந் தனது தரத்ததாகநிற்கு மவசரத்தை, இர ணியகருப்பனெனவுங்கொள்க. மண்ணுதியென்றது, அஷ்டமூர்த்தத்தை.

(க-து.) அஷ்டவிதானந்தமாக்கிய தளவிலானந்த பேதங்களேயாதலால், அவற்றுட்சிலவற்றைக் கூறினரென்பது. சில பிதிதிகள் பிதிர்கருமத்தேவனெ னவும், தனுடன்னசுரனெனவும், இந்திரனுசானுமெனவும், கனகன்விராட்டி ரணியகருப்பனெனவும், பதினெருபேர்களெனவும், இருக்கின்றன. இதனுளி யைதற்பாலதேற்கப் படும். தைத்திரியவுபநிடதப்படி விராட்டிரணியகர்ப்பமொ ன்றுக்கிப் பதினென்றுக்குக. (கஞஅ)

அ - கை க.

[இங்ஙனமாய வனுபூதியுடையோன்மகிமையை யிக்கவியிற்கூறுகின்றார்.]

132. எவனுகிலுமிந்தத் துரியா தீதத்தி லேழாம் பூமியி லிருந் தானே, லவனு ரதன்சுகன் சிவன்மா லயன்முத லறிவோ ரனுபவ சுகபோதம், விவகா ரதிர்சிய மிதுவே யனுபவ மென முன்சொல்லிய விவகாரி, யுவமா னமுமறி மகனே யவனடி யுதிரும்பொடிகளென் முடிமேலே.

(இ-ள்.) எவனுகிலுமிந்தத்துரியாதீதத்தி லேழாம்பூமியிலிருந்தானேல்,—எ-து. யாவனுயினுமிந்தத்துரியாதீதமாகிற வேழாம்பூமியிலிருப்பனுயின்:—அவனுரதன்சுகன் சிவன்மாலயன்முத லறிவோரனுபவசுகபோதம்,—எ-து. அவன், நாரதன், சுகன், சிவன், விஷ்ணு, பிரமன் முதலியவறிஞரது சுகபோதவடிவ மெனப்படுவன்:—விவகாரதிர்சியமிதுவேயனுபவமென முன்சொல்லிய விவ காரியுவமானமுமறிமகனே,—எ-து. விவகாரிகதிரிசயவிழப்பும், இதுவே யனு பவநிலையாமென முன்னர்க்கூறிய விவகாரியுபமானமு மினையவென ஞான புத்திரா! நீயறிதி:—அவனடியுதிரும்பொடிகளென்முடிமேலே,—எ-து. அந்த மகானது திருவடியிலுதிருந்துசுக ளெனதுசிரசின்மேல் மகுடம்போல்வன வாம்,—எ-று.

சண்டாளனையுங்குறிக்க எவனுகிலுமெனவும், துரியமே துரியாதீதமா வதுபற்றித் துரியாதீதத்திலெனவும், துரியம் ஞானபூமியி லேழாவதாதலி னேழாம்பூமியிலெனவும், இருப்பானே லென்பது, இருந்தானே லென்றுயது காலமயக்கம். அவன், எழுவாய். சுகபோதம், பயனிலை. விவகார, அதிர்சியம், விவகாரதிர்சியமென்றுயது; குணசந்தியினுலென்க. விவகாரியுவமானமுமென் றதனுல், விவகாரதிர்சயமுமெனவும்மைவருவித்தாம். இஃதெண்ணும்மை. எவ னுகிலுமென்பதிலும்மை, ஐயம்.

(க-து.) மகானதுபெருமையைக்குறிக்கத் துரியமே துரியாதீதமாயினு ரென்றுரென்பது விவகார, திரிசியம், எனப்பிரித்து விவகாரத்திற்கியைந்த திரி சியமென்றுரைகூறி லிங்கேபொருந்தாது. ஆதலின் குணசந்தியாக்கினும் துரி யாதீதத்தை முன்னர்க் கூறுதிருக்க, இந்த வெனச்சுட்டியது; எப்போது துரி யநிலைவாய்த்ததோ, அப்போதேயது துரியாதீதமாக்குமென்னுந் துணிபுபற்றி யென்க. (கசுஉ)

அ - கை.

[வித்தையானந்தநீங்கலாக ஏனையசுகவகைகளைக்கூறினும். இதிலின்னு மையமுளதேற்கேட்குதியென மாணுக்கனைக்கேட்டலே யிக்கவியிற்கூறுகின்றார்.]

வேறு.

133 இந்தவா றைந்துசுகஞ் சொல்லினேம் வித்தைசுக மினிமேற் சொல்வா, முந்தைமா யையுஞ்சச்சி தானந்தப் பொருளுமே மொழி யும்போதி, லந்தமா மத்துவிதசுகமான்ம சுகமிரண்டு மங்கே சொன் னேங், தொந்தமாற் றியமகனே யின்னமுனக் கையமுண்டேற்சொல் லுவாயே.

(இ-ள்.) இந்தவாறைந்துசுகஞ்சொல்லினேம் வித்தைசுக மினிமேற்சொல் வாம், —எ-து. இவ்வாறுக விடயானந்தம், பிரமானந்தம், வாசனானந்தம், நிசா னந்தம், முக்கியானந்தமெனப்படு மைந்துசுகத்தையுஞ்சொல்லினேம். வித்தை யானந்தத்தை யினிமேற்கூறுதும்:—முந்தைமாயையுஞ்சச்சிதானந்தப் பொரு ளுமேமொழியும்போதில்,—எ-து, முன்னரேமாயையைப்பற்றியும், சச்சிதா னந்தப்பொருளைப்பற்றியுஞ், சொல்லிக்கொண்டுவரும்போது:—அந்தமாமத்து விதசுகமான்மசுக மிரண்டு மங்கேசொன்னேம்,—எ-து வேதமுடிவிலுள்ளவத் துவிதசுகமான்மசுக மிரண்டு மங்கேசொன்னேம்,—எ-து. வேதமுடிவிலுள்ள வத்துவிதானந்தமும், ஆத்மானந்தமுமாகிய விவ்விரண்டிலக்கணங்களையு மவ்வி டத்தில்தானே சொல்லிவிட்டோம்:—தொந்தமாற்றியமக்னே யின்னமுனக்கை யமுண்டேற்சொல்லுவாயே,—எ-து. பந்தங்களைநீக்கிக்கொண்ட சற்புத்திரா! இன்னுமுனக்கையமுண்டாயிற்சொல்லுகி,—எ-று.

வித்தைசுக மினிமேற் சொல்வாமென்றதை, இப்படலத்தில்தானே, கசுச கவிமுதல், கஙச கவிவரையிலும்; அத்துவிதசுக மாத்மசுக மங்கேசொன்னே மென்பதில், அத்துவிதசுகத்தை, க0உ, முதல், க0சு, கவிவரையிலும்; ஐந்துசு கஞ்சொல்லினேமென்றதில், விடயசுகத்தை, கஉசு, கவியிலும்; பிரமானந்தத் தை, கஉச, முதல், கஉஎ, கவிவரையிலும்; வாசனானந்தத்தை, கஉஅ, கவியி லும்; நிசானந்தத்தை, கஉக, கவியிலும்; முக்கியானந்தத்தை, கங0, கவியிலுங் காணலாம்.

(க-து.) சத்து, சித்து, ஆனந்தங்களைத் தனித்தனியே சொல்லிவிட்டோம். இன்னுமையமுளதேற்கேளுதியென்பது. (கஙங)

அ - கை

[சச்சிதானந்தவிலக்கணங்களைத் தனித்தனிசொன்னவாறுபோல, ஏக மாக்குமாறுமுணர்த்தவேண்டுமென மாணாக்கன்கேட்டலையிக்க வியிற்கூறுகின்றார்.]

134. குகன்றனேயு மெனேயுமூல கினேயுமீன் றளித்தருளுங் குருவே கேளீர், புகன்றசச்சி தானந்தப் பதங்கடனித் தனியாயேபொருள் வேறுரை, லுகண்டமன முறைப்பதெங்ஙன் பரியாயபதங்களைப்போ லுறவுங் காணே, னகண்டமா யொருசுவையாய்த் தேனீக்கூட்டிய மதுவா வறிவிப்பி தே.

(இ-ள்) குகன்றனேயுமெனேயுமூலகினேயுமீன்றளித்தருளுங்குருவேகேளீர், எ-து.முருகக்கடவுளேயு மடியேனேயும்வுலகினேயும் பெற்றளித்தருளிய சற்கு ருநாதனே ! யோர்விண்ணப்பமுண்டதனைக்கேட்டருளும், அஃதியாதெனில்:— புகன்றசச்சிதானந்தப்பதங்க டனித்தனியாயே பொருள்வேறுரை,—எ-து. தே வீர்கூறியசச்சிதானந்தப்பதங்கள் தனித்தனியானவாறு போலப்பொருளுந்த னித்தனிவெவ்வேறுரை: —உகண்டமனமுறைப்பதெங்ஙன் பரியாயபதங்களைப் போலுறவுங்காணேன்,—எ-து. அனேகடந்துபாயத்தக்கமனமான தலையாதது

திபெறுவதெங்ஙனம், ஒன்றிற்குப் பலவாகக்கூறும் பரியாயநாமங்களைப்போலுறவுங்கண்டிலன்:—அகண்டமாயொருசுவையாய்த் தேனீக்கூட்டியமதுவாவதறிவிப்பீரே,—எ-து ஏகமாகவும், ஒருரூபியாகவும், தேனீக்கள் பலமலரிலெடுத்தொன்றுக்கிய தேனைப்போல வடியேனுக்குணர்த்தியருளவேண்டும்,—எ-று.

வேதமுடிவையெடுத்துவிளக்கல் பரமசிவத்துக்கேயன்றி யேனையர்க்கின்றமையின், பரமசிவமேகுருவெனக்கருதிக் குகன்றனையுமெனையுமுலகினையுமன்றளித்தருளுங் குருவேயெனக்கூறினதாக்கொள்க. அன்றேல். மூரணும். உகண்டமன முறைப்பதெங்ஙனென்பதற்கு, பலவாறுகச் சிதைவுற்றலைகின்ற மனமொருமைப்பா டெய்துவதெங்ஙனமெனப் பொருள்கொள்ளினுமமையும் எங்ஙனமென்பது; எங்ஙனென்றியது, கடைக்குறை பரியாயபதங்கள், ஒரு பொருள்குறித்தபலசொல். ஓர்பொருளாகிய பரம்பொருளைவிளக்குவிப்பதற்குச் சச்சிதானந்தங்கள் சக்கவாகலின் பரியாயபதங்களைப்போலுறவுங்காணேனவும், பலமலரிலுள்ளதேனைக் கூடாக்கியதுபோல. சச்சிதானந்தங்களையொருமையாக்கியருளவேண்டுமெனக் கருதக்கொண்டதால், அகண்டமாயொருசுவையாய்த் தேனீக்கூட்டியமதுவாவதறிவிப்பீரேயெனவுங் கூறினனொன்க. மதுவைப்போல வென்றதை மதுவாவென்றதுவமைத்தொகை. தனித்தனியாகவே யெனற்பாலதை, தனித்தனியாயேயென்றது, மரூஉ. அகண்டமாயொருசுவையாய் தேனீயைச் சிலபிறிகளிருப்பதுபற்றிமெல்லொற்றுக்கின், அகண்டம். ஒருசுவையென்பன மதுவுக்குவிசேடணகாவும், அகண்டமாயொருசுவையாய்த் தேனீயென வல்லொற்றுக்கின், அறிவிப்பீரென்னும் வினைமுற்றிற்கு வினையெச்சங்களாகவு முடியுமென்க.

(க-து.) சச்சிதானந்தங்களைத் தனித்தனியாகத் தெரிவித்தவாறுபோல, அவற்றினைருமையுந் தெரிவிக்கவேண்டுமென்பது. இங்ஙனந் தெரிவித்தலருமைபற்றியென்க. (கூசை)

அ - கை.

[சுருதிப்பிரமணத்தாலவற்றினைருமையை யுபமானங்காரணமாகவிக்கவியிற்கூறுகின்றார்.]

135. குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்றுகூறு யிற்றே, வொளிதவனஞ் செம்மையென்றபதங்களா லக்கினியுமொருமூன்றுபோ, வெளிமுதலாஞ் சகமசத்து மூடமிட ரெனப்பிரித்து விலக்கி வேத, மெளிதறிய மூண்மொழிந்த சத்தாதி யெனும் பிரம மேகத் தானே.

(இ-ள்.) குளிரிளகல் வெண்மையென்ற பதங்களினு னீர்மூன்றுகூறயிற்றே, எ-து குளிர்ச்சி, நெகிழ்ச்சி, வெண்மை யென்கிறபேதமொழிகளாற் சலமும் மூன்றுபிரிவாயிற்றே:—ஒளிதவனஞ் செம்மையென்ற பதங்களா லக்கினியு மொருமூன்றுமோ, எ-து. பிரகாசம், சுடுகை, சிவப்பென்கிற பேதமொழிகளா லக்கினியு மூன்றுபிரிவாயிற்றே:—வெளிமுதலாஞ் சகமசத்தமூ

டமிடரெனப்பிரித்து விலக்கி, எ - து. ஆகாயமுதலிய பஞ்பூதவடிவாயுள்ள சகமானது, அதுர்தசடதுக்கமாமென வதனை வேறுபிரித்துத்தானலவென்றக ற்றி :—வேதமெளிதறியமுரண்மொழிந்த சத்தாதியெனும் பிரமமேகந்தானே, எ-து. வேதமானதெளிதிலுணர்ந்துகொள்ளுமா றதுர்தாதிக்கு மாறுகக்கூறிய சச்சிதானந்த சொரூபமெனத்தக்க பிரமமானது குணபேதமின்றி யேகமே யரம்,—எ-று.

குளிர்முதலிய மூன்றும், ஒளிமுதலியமூன்றும் சலநினையசெனவும், அக்கினி யினையசெனவும் விளக்குவான்வேண்டிக் கூறவந்தசொற்பிரிவேயன் றிப் பொருட்பிரிவன்று. அதுபோல; அசத்துமுசலியமூன்றும், சத்துமுதலி யமூன்றும், சகத்தினையதெனவும், சிவமினையதெனவும் விளக்குவான் வேண் டிக் கூறவதசொற்பிரிவேயன்றிப் பொருட்பிரிவன்று. உலகமானதெவர்க் குமெப்போதுஞ் சச்சிதானந்தமாகக் காண்டலின், இஃதன்று வேறு. அதா வது. பரமெனல். ஆயி னுலகமோ? அவற்றிற்கு மாறுய வதுர்தசடதுக்கமா யது. எனக்காட்டற்கு வேதமிங்ஙனங் கூறியதென்க. சோதனையிற் பஞ்சபூ தங்களுளொவ்வொன்றுந் தனக்கெனச் சொரூபமொன்றின்றிக்காணுதுபோத ற்கேதென்னை. இதுகற்றோர்க்கும் மற்றோர்க்குமாதலால் சத்தெனலெங்ஙனங் கூடும். கூடாததாகவே சித்தெனலும், ஆனந்தமெனலுமெங்ஙனம்பொருந்தும். பொருந்தாததாற் சத்தாதியெனும்பிரமமென்றார். சத்தாதிமூன்றினொருமை யேபிரமமெனலைச் சம்மதிக்கச்செய்வான்வேண்டிப் பிரித்தியட்சவுலகை யச த்தாதிமூன்றினொருமையெனக்காட்டதந்வதென்க.

(க - து.) அதுர்தசடதுக்கவொருமையே சகமென்றற்போல, சச்சிதான ந்தவொருமையே பிரமமெனக்கூறியதென்பது. வேதமெளிதறியவென்றதனால், அவ்வேதமே பலசாகைகளாலும், பலவேதுக்களாலும், பலதிஷ்டாந்தாஷ்டா ந்தங்களாலும், பலவாய வளவைகளாலும், அரிதறியவுணர்த்த மென்றறியி ற்று. ஏகந்தானேயென்னும் பயனிலைக்குப் பிரமமெழுவாயாயின், சத்தாதி யெனும்பிரமமென்றது; குணமேகுணியாகவேண்டும். ஆதலினேகமெனல் பொ ருந்தும். சத்தாதித்திணமன்றிப்பிரமம்வேறெனல், அசத்தாதிக்குச்சகம் வேறு காமையாற் பொருந்தாது. (கஈ)

அ - னை க.

[இவைபோலவின்னுமளவிறந்த பரியாயநாமகுணங்களுள,
அவற்றுட்சிலவற்றைக் சொல்லுதமென்பதை
யிக்கவியிற்கூறுகின்றார்.

136 நித்தியம்பூரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ் சாந்தஞ்,சத்தியங்கே வலந்துரியஞ்சமந்திரக்குள் கூடஸ்தன் சாட்சி போதஞ், சுத்தமிலக் கியஞ்சார கனஞ்சீவன் றத்துவம்விண் சோதி யான்மா, முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும் வேதம்.

(இ-ள்.) நித்தியம்பூரணமேகம்பரமார்த்தம் பரப்பிரமநிதானஞ்சாந்தம், —எ-து. நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரமம், நிதானம், சாந்த மெனவும்: — சத்தியங்கேவலந்துரியஞ் சமந்திருக்குகூடஸ்தன்சாட்சிபோதம், —எ - து. சத்தியம், கேவலம், துரியம், சமம், திருக்கு, கூடஸ்தன்சாட்சி. போதமெனவும்: — சுத்தமிலக்கியஞ்சனாதனஞ்சீவன்தத்துவம்விண்சோதியான் மா,—எ-து. சுத்தம், இலக்கியம், சனாதனம், சீவன், தத்துவம், விண், சோதி, ஆன்மாவெனவும்: — மூத்தம்வீபுசூக்குமமென்றிவ்வண்ணம் விதிகுணங்கள் மொழியும்வேதம்,—எ-து. மூத்தம், விபு, சூக்குமமெனவு மிவ்வாறேவேதமா னது விதியாகப்பரியாயநாமகுணங்களேசொல்லும், எ - று.

நிதானம், ஆதிகாரணம். சனாதனம், அநாதி. இவ்வண்ணம், இவைபோல்வ னவாக, இவை விதிகுணங்களாகுமெனவே, விலக்குகுணங்கள் வேறுண்டென் பதுபெற்றாம்.

(க-து.) பரியாய நாமகுணங்களே யிக்கவியிற்கூறினரென்பது. (கஊசு)

அ - கை.

[அதுபோலவிலக்குப்பரியாயநாமகுணங்களுள. அவற்றுட்சிலவற்றையு னர்த்துதிமென்றதையிக்கவியிற் கூறுகின்றார்.]

137. அசலநிரஞ் சனமமிர்த மப்பிரமே யம்விமலம் வசனு தீத மசடமநா மயமசங்க மதுலநிரந் தரமகணு நிருபாகண்ட மசமனந்த மவிநாசி நிர்க்குணநிட் களநிரவ யவம நாதி யசரீர மவிகார மத்துவித மெனவிலக்கு மனேக முண்டே.

(இ-ள்.) அசலநிரஞ்சனமமிர்தமப்பிரமேயம்விமலம்வசனுதீதம்,—எ - து. அசலம், நிரஞ்சனம், அமிர்தம் அப்பிரமேயம், விமலம், வசனுதீதமெனவும்:- அசடமநா மயமசங்க மதுலநிரந் தரமகணுநிருபாகண்டம்,—எ-து. அசடம், அ நாமயம், அசங்கம், அதுலம், நிரந்தரம், அகணு நிருபம், அகண்டமெனவும்:- அசமனந்தமவிநாசிநிர்க்குண நிட்களநிரவயவமனாதி,—எ-து. அசம், அனந்தம், அவிநாசி, நிர்க்குணம், நிட்களம், நிரவயவம், அநாதியெனவும்:— அசரீரமவி காரமத்துவித மெனவிலக்குமனேகமுண்டே,—எ-து. அசரீரம், அவிகாரம், அத்துவிதமெனவும் விலக்குப்பரியாயநாமகுணங்களு மின்னுமனேக முளவாம்; எ - று.

அசலம், சலனமின்மை. நிரஞ்சனம், களங்கமின்மை. அமிர்தம், அழி வின்மை. அப்பிரமேயம், அறியப்படாதது விமலம், அழுக்கின்மை. வசனுதீதம், வாக்குக்கெட்டாமை, அசடம், மூடமின்மை. அநாமயம், நோயின்மை. அசங் கம், சங்கமின்மை. அதுலம், கனமின்மை. நிரந்தரம், இடையின்மை. அகணு, அணுவன்மை. நிரூபம், ரூபமன்மை. அகண்டம், கண்டமன்மை. அசம், பிறவிக் குடன்படாமை. அனந்தம், இறப்புக்குடன்படாமை. அவிநாசி, யாதினுநாசி யாமை. நிர்க்குணம், குணமின்மை. நிட்களம், சகளமின்மை. நிரவயவம், அவயவமின்மை. அநாதி, ஆதியின்மை, அசரீரம், சரீரமின்மை. அவிகாரம், விகாரமின்மை. அத்துவிதம், துவிதமின்மை, எனக்கொள்க.

(க-து.) விலக்குகுணப்பரியாயநாமங்களி னேயவென்பது. சிலபிரதிகளில், விமலமசனுதீதமெனவும், நிருமலகோசரமெனவும், நிசமனந்தமெனவும், நிரஞ் சனம்மனுதியெனவும், விதிவிலக்கமனேகமெனவுமிருக்கின்றன, அவற்றையு மூய்த்துணர்க. சமஸ்தமதஸ்தரும் வஸ்துவிதிகுணத்தென நின்றனர், அஃ தோர்பக்கத்ததாமெனக்காட்ட விலக்குகுணமும்வகுத்தசென்க. இதனையினிவ ருங்கவியாற்காண்க. (கஉஎ)

அ - கை.

[இவ்விதிவிலக்குகுணங்க ளொருபொருட்கேயன்றி வேறுக் கன்றென விக்கவியிற்கூறுகின்றார்.]

138. இன்னவகை விதிவிலக்குக் குணங்கணன்றுச் சேர்த்தொரு மித்தெல்லாங் கூட்டிச், சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை யொருபொருளைச் சொல்லுஞ் சொற்கள், பின்னபத மாமதனுற் சத் தாதி குணப்பெருளாம் பிரம மேக, மன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி பூரணமாயாவாய் நீயே.

(இ-ள்.) இன்னவகைவிதிவிலக்குக்குணங்கணன்றுய்ச் சேர்த்தொருமித் தெல்லாங்கூட்டி, எ-து. இன்னவாறுக விதித்த விதிவிலக்குகுணங்களைச்சேர்த் தொருங்கே யனேத்தையுங்கூட்டி:—சொன்ன பொருளொன்றன்றியிரண்டி ல்லை யொருபொருளைச் சொல்லுஞ்சொற்கள் பின்னபதமாம், எ - து. வேதஞ் சொல்லியிருக்கிறபொரு ளொன்றேயன்றி யிரண்டாகவில்லை, ஆதலினொரு பொருளைப்பற்றிச்சொல்லுஞ்சொற்க ளொருபொருள்குறித்தபல வேறுவகை பட்ட சொல்லுகளாம்:—அதனுற் சத்தாதிகுணப்பொருளாம் பிரமமேகம்,—எ - து. இங்ஙனங்கூறியிருப்பதாற் சத்துமுதலாகக்கூறப்படு மூக்குணப்பொரு ளாவது பிரமம், அஃதேகமாம:—அன்னபொருளொருமையறிந் தகண்டபரி பூரணமாயாவாய்நீயே, எ-து. அத்தகையதான பொருளினொருமையையறிந்து, அஃதிருந்தவண்ண நீயுமகண்டபரிபூரணமா யாகுதி, வேறு சங்கற்பிக்கற்க,—எ-று.

சேர்ந்துகூடியென்றுக்கின் குணங்களெழுவாயாகவேண்டும், எழுவாயாக் கின் பயனிலையெங்கே. சொன்னவென்பதெனின். குணங்கள், சொல்லுமா? கூடாதபற்றிக் குணங்களைச்செயப்படுபொளாக்கிச் சேர்ந்துகூடியென்னுந் தன்வினைகளைப் பிறவினையாக்கிச் சொன்னவென்னும் பயனிலைக்கெழுவாய் வேண்டுமாதலால் வேதத்தைவருவித்தாம். ஒருபொருளைச்சொல்லுஞ்சொற்கள் பின்னபதமாமென்றதனுல், ஒருபொருள்குறித்தபலசொல்லென்றும். இங்ஙனம் விதிவிலக்குகுணங்கள்கூறவந்தது, சச்சிதானந்தமேகமெனற்கன்றே? அதனுற் சத்தாதிகுணப்பொருளாம் பிரமமேகமென்றார். அறிந்தாவாய்நீயேயென்னுது, அகண்டபரிபூரணமாயென்றதனுல், அஃதிருந்தவண்ணமெனவருவித்தாம். சச்சி தானந்தமொருமையெனக்கண்டவக்கணமே யவ்வொருமையே பிரமமெனத்தா னேவிளங்கும். அங்ஙனம்விளங்கல் ; நிருபாதிகமாதலின் வியாபகவிளக்கமாம், அவ்வியாபகவிளக்கமபரிச்சின்னமாதலினேகமாம், அதுபற்றிப் பிரமமேகமென்

நதென்க. இங்நெறிசற்றுமறியார் கடவுளேகமெனலவர்போல்வரேற்பர். வஸ்து விளங்கவிதிகுணமும், அதுவுமிறக்க விலக்குகுணமும் வகுத்ததென்க. எனவே, தானேதானுதற்கெனப்பெற்றும். (கசுஅ)

அ - கை க

[நிர்க்குணவஸ்துவிற்குக்கூறுஞ்சகுண மெங்ஙனமமையுமென்ற வினாவிற்குவிடை யிக்கவியுற்கூறுகின்றார்.]

139. நிர்க்குணவஸ்துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியென னிகரென்னுதே, சற்குணனே வஸ்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ, நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரமஞா னந் தோன்றச், சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களல்லபிர மமாஞ் சொரூபந்தானே.

(இ-ள்) நிர்க்குணவஸ்துவின் குணங்களுரைப்பதுதாய் மலடியெனனிக ரென்னுதே,—எ-து. நிர்க்குணவஸ்துவினுக்குக் குணங்களுரைத்தல் மலடியைத் தாயெனற்குச் சமானமாமேயெனச் சங்கியாதுநிற்றி:—சற்குணனேவஸ்துநிலை யுரையாம லறியவல்ல சதுரருண்டோ,—எ-து. சற்குணமுடையோனே! வஸ் துநிலையினையதென வதற்குரிய குணங்களைப் பிறருணர்த்தாமல் தாமேயுணர்ந் துகொள்ளத்தக்க வலியுள்ளமாணுக்கருமுளரோ ? இன்றேயதனால்:—நற்குண வேதங்களிந்தச் சீவன்முத்திபெறப் பிரமஞானந்தோன்றச்சொற்குணங்கள்,— எ-து. சச்சிதானந்தங்கள் நல்லசகுணமென வேதங்கள், இங்ஙனமாய சீவன் முத்திநிலைபெறவும், பிரமக்ஞானம் விளங்கவுஞ் சொல்லவந்தகுணங்களாம்:— பிரமத்தின்குணங்க ளல்லபிரமமாஞ்சொரூபந்தானே,—எ-து. அவை பிரமத்தி னது குணங்களல்ல பிரமசொரூபமாம்,—எ-று.

நிற்குணவஸ்துவின்குணங்களுரைப்பதென்பற்கு, சகுணங்களே நிர்க்குண வஸ்துவின் குணங்களாக வுரைத்தலெனப் பொருள்கொள்ளினு மமையும். "சுயாழவம்மிமிதப்பவையனேய யானேக்கு நீத்தமுயற்கு நிலையென்பகா னகநாடன்சுனை." என்னுங்கவியில், சுயாழாது, அம்மிமிதவாது, யானேக்கு நீத்தாகாது, முயற்குநிலையாகாத, இவைமூரணுகையில்; சுயாமிதப்ப, அம்மி யாழ, யானேக்குநிலை, முயற்குநீத்தென மொழிமாற்றிப்பொருள் கொள்ள வேண்டும். அதுபோல விங்கும், தாய்மலடியென னிகரென்னுதே யெனக்கவி யிருப்பினும், குணரகிதமான வஸ்துவுகுக் குணங்கற்பித்தல், மலடியைத் தாயென்றற்போலும். எனப்பொருள்படுதலால், தாய்மலடியென்பதை, மலடி தாயென மொழிமாற்றிப் பொருள்கொள்ளவேண்டும். கொள்ளாவிடில், மூர ணும். எங்ஙனமெனில் ; சகுணவஸ்துவினிற்குணங்களுரைப்பது தாய்மலடி யெனனிகரென்னுதேயெனக் கவியிருக்கின்மூரணுத, இங்ஙனங்கவியின்நேயா தலின்மூரணும். சகுணமாகவஸ்துவைக்கூறுது நிர்க்குணமாகக் கூறின் வஸ்து எங்ஙனம் விளங்கும். விளங்காதபற்றி யிங்ஙனங் கூறியதென்க. சொற்குணங் கள் பிரமத்தின் குணங்களல்லவெனின், யாதினுலெனவருஞ் சங்கைக்குத்தர

மின்றும். ஆதலினிங்ஙனமுரைகொண்டாம். சச்சிதானந்த நற்குணங்கள் வேதங் கள்சொல்லிய சகுணங்களாம். இதுவும் வஸ்துநிலைதெரிவிட்பதற்காகவென்க. இக்குணங்களே பிரமசொரூபமாதலின் பிரமத்தின் குணங்களெனின் தற்கிழ மைப்பொருளதாம், பின்னுபின்னமதாம், பொருந்தாது. இக்குணங்களா லறிப் படுவது வஸ்துவாயிருக்கக் குணங்களே வஸ்துவெனல் கூடாதெனின், சூரிய னுக்குப் பிரகாசங்குணம், நமக்கக்குணமின்றிச் சூரியன்காணப்படான். என வே, நமக்குச்சூரியன்வேறாயினும்பிரகாசத்திற்குவேறே? அல்லவே. பிரகாச ரூபமேசூரியனெனற்குத் தடையென்னே ? அதுபோலவே யிதனையுங்கோடற் குத் தடையென்னே ? இதனைவிடாத விலக்கணையாற் காணலாம்.

(ஈ-து.) சுருதிப்பிரமாணத்தால் சச்சிதானந்த வொருமையே பிரமமெ னச் சிந்தித்துத் தெளியவஃதே குணநிதமாக்குமென்பது. இதனைக்கணிப்பது; அனுபவத்தாலன்றிக் கூடாது. கூடுமெனின், அவம். (கஈக)

அ - கை க.

[சுருதிப்பிரமாணத்தா லுணர்த்தியதுபோ லிதனையுத்திப்பிர மாணத்தாலு முணர்த்தவேண்டுமென வினவலை யிக்கவியிற் கூறுகின்றார்.]

140. மோகவிருள் கெடக்கோடி யருணனென வருகுருவே மொழிபக்கேளீ, ரேகபரி பூரணமா மென்சொரூப மென்னுள்ளத் திலிறுகும் வண்ண, மாகமங்கள் சொன்னபடி யென்னையகண்டார்த் தமா வறிந்தே னீயா, வூகமுமொத் திடவுரைத்தாற் பசுமரத்திலா ணிபோ லுறையு நெஞ்சே.

(இ-ள்.) மோகவிருள்கெடக்கோடியருணனென வருகுருவேமொழியக் கேளீர்,—எ-து. மோகாந்தகாரமொருங்கே நசிக்க வுதித்த கோடிசூரியர்களைப் போ லடியேனுக்காக வெழுந்தருளிவந்தகுருநாதனே ! இன்னுமோயையுள தனையான்கூறக்கேட்டருளும்:— ஏகபரிபூரணமாமென் சொரூபமென்னுள த்தி லிறுகும்வண்ணம்,—எ-து. ஏகபரிபூரணமாகவிளங்குமெனது சொரூப மான தெனதுள்ளத்தின்கண் திரமபெறுமாறு:—ஆகமங்கள்சொன்னபடி யெ ன்னையகண்டார்த்தமா வறிந்தேன்,—எ-து சுருதிகள்கூறியமுறையெ யென்னையகண்டபரிபூரண சொரூபமாகத் தரிசித்தேன் :— ஐயாவூகமுமொத்திட வுரைத்தாற் பசுமரத்திலாணிபோலுறையுநெஞ்சே,—எ-து.! ஐயனே! யுத்திக்கு மொத்திருக்கும்படி தெரிவித்தாற் பசுமரத்திலறைந்த வாணியைப்போ லஃ தென்னுளத்தி லுறைந்துபோகும்,—எ-று.

மோகவிருள், உருவகம் மோகவிருள் கெடவருகுருவே யெனக்கொள்க. கோடியருணனென வென்பதுவமை. சிலபிரகிருதிகளிலென்னுளத்தி லிருக்கும் வண்ணமெனவும், உறைக்குநெஞ்சேயெனவுமிருக்கின்றன. ஆகமங்கள் சொ ன்னபடி யென்னை யகண்டார்த்தமாவறிந்தேனென்பதினால், சச்சிதானந்தவொ ருமையைக்கண்டேனென்றபடி, ஊகமுமொத்திடவுரைத்தாற் பசுமரத்தி

லாணிபோ லுறைக்குநெஞ்சே யெனக்கொள்ளின், உறைக்குமென்பதுபிறவி னேயாதலின், அவ்வொருமையினெஞ்சமுறையும்படி செய்யுமென்றுகொ ள்ளவேண்டும். அப்போது; உரைத்தல், ஏழுவாய். நெஞ்சுத்தை, செயப்படு பொருள். உறைக்கும், பயனிலை. தன்வினையாக்கில் அனுபூதி, எழுவாய் உறையும், பயனிலை, நெஞ்சம், ஏழாம்வேற்றுமைத்தொகை.

(க-து) அவ்வனுபவம் யுத்திக்கொக்கத் தெரிவிக்கவேண்டுமென்பது சுருதியுத்தியனுபவத்தினியுத்திவேண்டல். இங்கேயாகமங்கள், ஞானத்தை மாத்திரம் பிரதிபாதித்தலாலற்பசுருதியையன்று பிரபலசுருதியை. அதாவது; ஞானகாண்டமென வறிக. (கசo)

அ - கை

[அவ்வினைவிற்கு விடைகூறுவான்வேண்டிச் சத்துஞ்சித்தும் மாறு திணங்கிற் சச்சிதானந்தமாம், மாறப்பெறி னதுர்த்தசட தக்கமாம், எனவிக்கவியிற் கூறுகின்றார்]

141. சத்தேசித்தாகுமய லெனிலசத்தா மசத்தானுற் சாட்சி யெங்கே, சித்தேசத் தாகுமய லெனிற்சடமாஞ் சடங்களுக்குத் தி தி யு மில்லை, யொத்தேதோன் றியசத்துஞ் சித்துநல்ல சுகமாகு மூகத் தூக்கோர், வித்தேயன் னியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் வி ளைந்திடாதே.

(இ-ள்.) சத்தேசித்தாகுமயலெனிலசத்தா மசத்தானுற் சாட்சியெங்கே,—எ-து. சச்சிதானந்தமென்னுமொழி; சத்து, சித்து, ஆனந்தமென மூப்பதமா யிருக்கும். அம்மூப்பதங்களுள், சத்தேசித்தாகவேண்டும். ஆகாது சத்துக்குச் சித்துவேறெனின், அப்போது சத்தென லசத்தெனப்படும். அசத்தெனப்படின், அவஸ்தாத்திரியம், காட்சித்திரியம். அபிமானத்திரியம்போல் மாறுது நின்றவற் றையாங்காங்கு சாட்சியாயறிவதெங்கே? இன்றெனின், இதுதானவனுபவமாயிற் றே யதுகூடாது, இருந்தன்றேவறியவேண்டும், இங்ஙனமிருந்தறிதலின், சத் தேசித்தாகுமென்பதொக்கும்:—(இதனால்) சித்தேசத்தாகுமயலெனிற் சடமாஞ் சடங்களுக்குத்திதியுமில்லை;எ-தசித்தெனல்சடமெனப்படும்.சடமெனப்படின், புல்லேயாதியாஞ் சராசரப்பொருள்களாகிய சடங்களுத்தலுக்கும், உதித்துப் பூத்துக்காய்த்தலாகியதிதிக்குமிடமெங்கே, இருப்பதனலன்றே விவ்வளவுமூண் டாகின்றன, இவற்றிற்கெல்லாமாதாரஞ் சித்சத்தியாதலின். இச்சித்சத்தியிருப் பதுகொண்டு,இத்தனையுநிகழ்கின்றன. ஆதலின் சித்தேசத்தாகும், இம்மூமுர ணின்மையினெக்கும்:—ஒத்தேதோன்றியசத்துஞ்சித்து நல்லசுகமாகுமூகத்துக் கோர்வித்தே,—எ-து. இங்ஙனமொத்துதோன்றுவதாற் சத்துஞ்சித்தும் நல்லசுக மெனப்படுவதற் கையமின்று. ஐயமின்றுமையி னிதியுத்திக்கோர் விதைபோல் வதேயாம்:—அனியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளைந்திடாதே,—எ-து. நமதுமூடத்தாற் சத்துஞ்சித்து மன்னியமாகக்காணப்படுமாயின்; சித்து, சடமா கவும், சத்து, அசத்தாகவுமுடியும்; முடியவே, தக்கானுபவமன்றிச் சுகா னுபவ மெங்ஙனம் விளையும்? விளையாது,—எ-று.

இது; பாசஞ், சத்தெனவும்; பசு, சத்துசித்தெனவும்; பதி, சத்து, சித்து, ஆனந்தமெனவுங் கூறுமடமையை மறுத்தது. இவர்வாதம், தோற்ற வாதமுஞ்சொல்வாதமுமேயன்றி யர்த்தவாதமன்று அர்த்தவாதமெனின், இத் திரிபதார்த்தத்திற்கு மோர்சுயம்பேனு மோர்மூதலேனு மூளவாகச்சோதனை யாதிமுகத்தால் முரணின்றிக்காட்டவேண்டுமம, அங்ஙனமெவர்க்குங் கூடாமை யின் பொருந்தாது.

(ங-து.) சச்சிதானந்தவொருமை யிங்ஙனமன்றி வேறுவகையாற்கூடா தென்பது. இதனுக்கு மூரணுகவொருமைகூறுவது; அவர்போல்வாரேற்றற் கன்றி யறிஞருக்கன்று, மூரணுவொருமை யருமை. தானல்லாத வுபாதிகுண ங்களைத் தொடாது தன்னைத்தான் தக்கோரா லேக்கினல்லாற் சச்சிதானந்த வொருமை யெங்ஙனம் வாய்க்கும். வாயக்காமைக்கடையாளம், அயலைச் சச்சி தானந்த மெனல். மூரணுமைக் கிடமின்று, இஃதேற்றற்பாற்றன்று. (கசக)

அ - கை.

[இன்னுமவ்வொருமையை வலியுறுத்துவான்வேண்டிச் சிலசங்கை களைத்தானே யாசங்கித்து, அதற்குரியதக்கவிடைகளால்தா னேசமாதானங்களையிக்கவியிற் கூறுகின்றார்.]

142 வீயாதசத்துமுன்னம் விளங்குவது தன்னுலோ வேறொ ன்றுலோ, வாயால்வே றெனிலதுவு மசத்தோவசத்தேன் மலடிமை ந்தன், பேயாகா ரியஞ்செயுமோ வசத்தெனவிப் படியதையும் பிரித் துச்சொன்னு, லோயாத வவத்தையாங் குதர்க்க விகற்பங்களை விட் டொழிந்திடாயே.

(இ-ள்.) வீயாதசத்துமுன்னம்விளங்குவதுதன்னுலோவேறென்றுலோ,— எ-து. என்றுமழியா தொருதகைத்தா நின்றுள்ள சத்தெனப்படுவது; பிரத் தியட்சமாகத் தான்விளங்குவதுதன்னுலேதானே? அல்லது, வேறென்றுலோ:— வாயால் வேறெனிலதுவு மசத்தோசத்தோ வசத்தேல் மலடிமைந்தன்பேயா காரியஞ்செயுமோ,—எ - து. வெறுஞ்சொன் மாத்திரத்தால் வேறென்றுலெ னின், அந்தவேறென்றுலெனப்படுவதும் அசத்தெனப்படுவதோ சத்தெனப்படு வதோ? அசத்தெனப்படுவதெனின், மூடா! மலடிபுத்திரனேர் காரியஞ்செய் வானே? செய்வானையினதுவும் விளக்குதும்:—அசத்தென விப்படி யதையும் பிரித்துச்சொன்னுல், ஓயாதவவத்தையாங்குதர்க்கவிகற்பங்களை விட் டொழிந் திடாயே,—எ-து. அதையுமிப்படி யசத்தெனப்பிரித்துச் சொல்லுவையாயின் முடிவுபெறாதனவஸ்தாதோட பலமாசமுடியுமே யிதென்னவிபரீதம், ஆதலி னிங்ஙனமாய குதர்க்க விகற்பங்களினின்று விலகுதி,—எ-று.

ஞானமே பிரமமாதலா லிங்கேசத்தென்பது, ஞானம். ஞானமெனினு மறிவெனினு மொக்கும். அறிவுக் கறிவென்ப தோர்பட்சம், அறிவொன்றே யென்பதோர்பட்சம். அறிவுக்கறிவென்பதில்; முன்னறிவு, சிவனெனவும், பின்னறிவு சிவமெனவுஞ்சொல்வர், முன்னறிவு தன்னையறிவதும், தான்விள ங்குவதும், தன்னுலன்று. பின்னறிவாலெனின், அந்தப் பின்னறிவும்; தன்னை

யறிவதும், தான்விளங்குவதும் வேறென்றுலெனல்வேண்டுமே? இங்ஙனங் கூறுதல்கூடாதெனின், அங்ஙனங்கூறுதல்கூடுமோ? மூடிவுபெறுதேயெனின், அறிவுக் கறிவெனக்கூறுதொழியின் மூடிவுபெறும். ஆயின், மூன்னறிவு தன்னைத்தானறிவதும், தன்னுல் தான்விளங்குவதுங் கூடுமோ? கூடுமெனின், நாமுமவ்வறிவாதலாலிவ்வனுபவமப்போதெங்கே? விசாரணைசெய்யிலப்போது ங்காணும். எங்ஙனமெனின்; அவஸ்தாத்திரியம் காட்சித்திரியம், அபிமானத்திரிய மென்னுமிவைதிரிசியமோ, திருக்கோ ? திரிசியமெனின், எந்தத்திருக்குவுக்கு? அறிவுக்கெனின். அவ்வறிவுஒன்றே, இரண்டோ ? இரண்டெனின், ஒவ் வொன்றிற்கு மெல்லிவரையறையிருக்கவேண்டுமே? இருக்கின்றதெனின், எங் கே? விபஷ்டியுபாதி யளவினதொன்று, சமஷ்டி யுபாதியளவினதொன்று. இதில்; சிற்றறிவு வியஷ்டியுபாதியளவினதெனின், அதுநனவிலன்றே? ஏனைய வீரவத்தையிலுமெங்கே? இம்மூன்றவத்தையுந் தினமுநிலையாதுமாறும், இதை யறியுமறிவுமாறுகின்றதோ? மாறுகின்றதெனின், அவ்வவ்வவத்தைகளையங் காங்குநின்று சாட்சியாயறிவதெது? வேறின்றுமையினென்றேயெனவுணர்க. நனவுகிநசாக்கிராவத்தை தோன்றும்போது, அண்டபிண்டங்கள்தோற்றும், அதுதோற்றச் சீவேசராகிற சித்தறிவுபேரறிவுபேதந்தோற்றும், இங்ஙனந் தோற்றுவதைத் திண்ணமெனக்கொள்ளின், இதுமாறுதலேனையவவத்தைகளறி வுக்குக்காணுதிருக்கவேண்டும். அங்ஙன மனுபவ மெவர்க்குமின்றே, ஆகலி னறிவொன்றேயென்க. அறிவொன்றுதலாற் சத்தொன்றேயெனவும், அதுவே சித்தெனவும், தன்னுல்தானறிவதெனவும், தன்னுல்தான்விளங்குவதெனவுங் கூறியதென்க.

(க-து.) சத்துக்குச்சத்துவேறின்றென்பது. உண்டெனல்மூடம். தன்னை விட்டாய்வாருக்கயலின்பமேயன்றிச்சுயானந்தமின்றென்க. காரியஞ்செயுமோச த்தென, இங்ஙனஞ்சிலபிறிதிகளிருக்கின்றன. வேறென்றுலன்றித்தன்னுல்தா னிருப்பதுயாதோ? அதுசத்தெனவும், தன்னுல் தன்னையுணர்வதும், தன்னுல்தான் விளங்குவதும்யாதோ அதுசித்தெனவுமாம், இதனுல், இருப்பதேவிளங்கலின் சத்தேசித்தெனவும், விளங்குவதேயிருத்தலின், சித்தேசத்தெனவுங்கொள்ளப் பெற்றும் பெறவே, சத்துஞ்சித்துஞ்சொற்பேதமேயன்றிச் சிறிதும்பொருட் பேதமின்றென விளங்கக்கண்டாம். காணவே, இவ்வொருமையே நிரதிசயானந் தமெனத் துணிதலுக்கிடமாயிற்று. ஆகவே, சுவானுபவப்பேற்றிற் கூஃதே தக்கயுத்தியென்றேற்கநின்றது. இவ்விரண்டுகவியானும் சச்சிதானந்த வொரு மைக்குத்தி கூறியவாறுகாண்கயுத்தியெனல்; தர்க்கம், அனுமானம், யுத்தியென் னுமூன்றுமடங்கிய மனனத்தினொன்று இவற்றையொக்க வாயாவிடத்து நமதுதத்திக்கியைவதெங்ஙனம், ஐயந்திரிபின்றித்தெளிவதெங்ஙனம்? இன்றுதலா லமைதியின்றென்பதாயிற்று. ஆகவே, ஞானநூல் கற்றலெற்றிற்கு, நூலிலு ள்ள யுத்திச்சமாதானம் வேண்டுவதின்றெனின், பொய்யைமெய்யென்ற மூட ரென்னுங்கவியில் ஞானமெய் யேனைய பொய்யென்னலாமா? மூர்த்தியா தி களேக்கூறும் புராணமுஞ்சான்றேறும் அதையேற்போருமூடரா? இதென்ன வியப்பு, பயனின்றெனக்கண்டாம்.

(கசஉ)

அ - கை க.

[சச்சிதானந்தவொருமையைச் சுருதியுத்தியால்விளக்கியவாறுபோல, அனுபவத்தாலும்விளக்குதமெனலியிக்கவியிற்கூறுகின்றார்.]

143. சுருதியுத்தி யொத்ததுபோ லனுபவமுங் கேள்சுழுத்தி சுகவா னந்தமிருதிவடி வாதலினவ் வானந்த மேயறிவாம் வேறங் கில்லை கருதுபிர ளயஞ்சுழுத்தியிரண்டிலுநீ யிருந்திருளேக்காண்கின் றுயே யிருதயத்திப் படிநோக்கி யேகபரி பூரணமா யிருந்தி டாயே.

(இ-ள்.) சுருதியுத்தியொத்ததுபோலனு பவமுங்கேள் சுழுத்திசுகவான ந்த மிருதிவடிவாதலினவ்வானந்தமே யறிவாம்வேறங்கிலலை,—எ - து முன்னர் கூறியது சுருதியுத்திக்கொத்த நின்றுற்போல,' இனி யனுபவத்துக்கு மொத்த நிர்க்கூறுதும், அதனையுங்கேளுதி அதாவது; சுழுத்தியிற்காணுஞ்சுகமானது ஸ்புரணரூபமாதலின், அவ்வானந்தமேயறிவாம், இங்ஙனமன்றியறிவாதற்கு வேறேர்நெறியங்கிருக்க யாங்கண்டிலம்:—கருதுபிரளயஞ்சுழுத்தியிரண்டிலு நீயிருந்திருளேக்காண்கின்றுயே,—எ - து. எவருநினைத்தற்குரியயுகாந்தப்பிரள யம், சுழுத்தியவஸ்தையென்னுமிரண்டுகாலத்தினு நீயிருந்துகொண்டாங்குமூ டிய விவ்விருவிதவிருளையுங்காண்கின்றனையன்றே:—இருதயத்திப்படிநோக்கி யேகபரிபூரணமா யிருந்திடாயே,—எ-து. இவ்வா றுனதள்ளத்திலெக்காலத்தி லும், எவ்விடத்திலுநீயிருக்கநோக்கி யேகபரிபூரணமாகநீயிருந்திடுதி,—எ-று.

தினசுழுத்தி, நனவிற்சுழுத்தியெனக்காட்டாது பொதுப்படக்கூறியது; சுகரூபமேஸ்புரண ரூபமாகத்தடித்தலும், மீண்டுமந்தஸ்புரண ரூபமேயந்தச் சுகரூபமாகப்பெருகலு மிவ்விருசுழுத்தியிலுமாதலினென்க. ஆயிற்சுழுத்திபேத மென்னை? ஒன்று நனவிற்சுழுத்தி, இசனுல், ஞெப்தியேபிரியம், பிரியமேஞெப் தியெனக்கண்டாம். இவ்வனுபவம் மூடசுழுத்தியிலெங்ஙனமெனின், நித்திரை த்தெளிவிலெழுநினைவுசுகமாயிருத்தலினுலும், விவகாரமுடிவில்மீண்டுமுறங் குங்கால், அந்நினைவுசகத்தாகாரமுழுவித்தனிப்படும், அங்ஙனந்தனிப்படுதலேசுக ப்பெருக்காம், அச்சுகப்பெருக்குக்கங்காளிநேரிடும்போது சீறியெழுதல் நினைவ ன்றே, அப்போதச்சுகம் நினைவாயிருத்தலினுலுமென்க. சத்தென்பதுவேறன் றுநீயேயெனக்காட்டப் பிரளயஞ்சுழுத்தியிரண்டிலு நீயிருந்திருளேக்காண்கின் றுயேயெனவும், உன்னைவிடப்பரிபூரணம் வேறன்றெனக்காட்ட, இருதயத்தி ப்படிநோக்கியேகபரிபூரணமா யிருந்திடாயே யெனவுங்கூறியவாறுகாண்க. தன்னையிங்ஙனம் விசாரித்துத்தெளிந்தவரோ? அருள், பரிபூரணம், ஆனந்தம், ஆனந்தாதீதந்தன்னைவிடவேறென்போர். நீயேதெளிதியெனத் தன்னனுபூதி நிலையைக்குறிப்பித்தாரென்க. முந்தியனுபூதிகூறுதது; தலைதடுமாற்றமென்னு தந்திரயுத்தி.

(க-து.) அறிவேயானந்தம், ஆனந்தமேயறிவெனல் விசாரணைத்தெளிவி லென்பது, ஆயின்மூடத்தி லின்றேவெனின், உண்டு. விசாரியாக்குற்றமேயென்க. அறிவன்றியவானந்தமும், ஆனந்தமன்றியறிவுமில்லை. அறிவுநானெனலா

யின், ஆனந்தம்யாது? பரமெனின், நானெனலின்றே? அதுசதாகாரமதாயெனின், அப்போதயலெனல் சற்றுமின்மையி னானந்தமுமயலன்றும். இதுகற்பித பேதமன்றி யறிவானந்தபேத மென்றுமின்றும். (கசகூ)

அ - ஸை க.

[இவ்வனுபூதிகேட்டவக்கணமே சமாதிகூடித்தெளிந்தானெனலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

144. பலகலையு முணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமனு பவம்விடாமற், பலமலரின் மதுப்போலச் சச்சிதா னந்தமொன்றும் பரமார்த்தத்தைப், பலபொழுதுங் கண்மூடிச் சமாதியிருந் தான்விழித்துப் பார்த்த போது, பலவடிவாஞ் சராசரசித் திரங்களெலாந் தோன்றுமொரு படமா னானே.

(இ-ள்.) பலகலையுமுணர்ந்தகுருமொழிந்தபடி யிவனுமனு பவம்விடாமல்,—எ - து. சகலசாஸ்திரத்தேர்ச்சியுமுள்ள சற்குருநாதன் கூறியவண்ணம் மாணாக்கனுந் தனதனுபூதி நிலையினைவிடாமல்:—பலமலரின்மதுப்போலச் சச்சிதானந்தமொன்றும் பரமார்த்தத்தைப் பலபொழுதுங்கண்மூடிச் சமாதியிருந்தான்,—எ - து. பல மலரினின்று சேர்க்கப்பட்ட தேன்கூடுபோன்று, சச்சிதானந்த வொருமையெனப்படுவதே பரமார்த்தமாதலால், அதனைக்காண வுனக் கண்மூடி வெகுநேரஞ் சமாதியினின் றகலாதிருந்தனன்;—விழித்துப் பார்த்த போது பலவடிவாஞ்சராசரசித்திரங்களெலாந் தோன்றுமொருபடமானானே,—எ-து.பின்னர்விழித்துப்பார்த்தபோது, பல வேறுவகைவடிவாயுள்ளசராசரசித்திரங்களனைத்துந் தோன்றவரையப்பட்டிருக்கின்ற வொருபடத்தைப்போலத் தானுயினன்,—எ-று.

பரமார்த்தத்தையென்னுஞ் செயப்படுபொருளுக்குப் பயனிலையின்றுதலால், காணவென்பதைவருவித்தாம். தனக்கன்னியமாகக்காணுது தானுகியவியாபகவிளக்கத்திற் சராசரமாயுள்ளவனைத்தையுங்காண்டலிற் படத்தையுவமை கூறினர். படத்தப்போலென்னுதுதான்படமானானென்றதனால் உருவகமெலினுமையும். பரமார்த்தத்துக்குச்சச்சிதானந்தங் குணமென்பாரைமறுக்கச் சச்சிதானந்த மொன்றும்பரமார்த்தத்தையென்றார். சமாதிவிட்டு பிரியக்கூடாமையிற் பலபொழுதுமென்பதற்குப் பலதரமுமென்பாருமுளர். சமாதியிலென்னுது விழித்துப்பார்த்தபோது தானுருபடமானானென்றதனால், சகசசமாதியெனப்பெற்றும்.

(க-து.) தானேசமஸ்தமுமாகவிளங்கினனென்பது. இங்ஙேயிவன்படமானானென்றதனால், விருத்திநிருட்டாந்தமெனப்பெற்றும். பெறவே, ஏனையமூன்றுந் தானேயமையுமென லருத்தாபத்தியெனக்கண்டாம். மதுவென்பது, ஆகுபெயர். பலமலரின் மதுக்கூட்டரவன்றித் தேன்கூடின்மைபோலச் சச்சிதானந்தவொருமையன்றிப் பரமார்த்தமின்மையின், ஒருமையேவடிவாயிற்று. ஆகவே, வடிவும்பண்பாதலாற்பண்புவமை. என்னை, "பண்புந்தொழிலும் பயனுமென்றிவற்றி" னென்னும் விதியாற்காண்க. (கசச)

அ - கை.

[துரியாதீதமு மேழாம்பூமியு முக்கியமாமெனக்கூறியநிலையினையும்
அதன்வகையையுந்தெரிவிக்கவேண்டுமென்று மாணாக்கன்
வினவலையிக்கவியிற்கூறுகின்றார்.]

145. இதயமொத்த சற்குருவே நமக்கிதுவேவிநோதமன்றி யினி வேறுண்டோ, வதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றே ஞானிகளுக் கான நீதி, முதலுரைத்த துரியாதீ தமுமேழாம் பூமியுமுக் கியமா மென்ற; பதமுமதின் வகையுமெனக் கெளிதாகத் தெளியும் வண்ணம் பணித்திடரே.

(இ-ள்.) இதயமொத்தசற்குருவேநமக்கிதுவேவிளேதமன்றியினிவேறுண் டோ,—எ-து. அடியேன்மனதுக்கினையுந்தெழுந்தருளிய சற்குருநாதனே! நமக்கு விநோதமாயதிந்நிலேயேயன்றியிதுபோல்வதினியாவதுவேறுளதாகக்காணுமோ; இன்றுதலின்:—அதையுரைத்து மதைநினைத்து மிருப்பதன்றே ஞானிகளுக்கா னநீதி,—எ-து. அங்ஙனமாயவனுபூதியை யுரைத்துக்கொண்டும், அதையே சிந்தித்துக்கொண்டுமிருப்பதல்லவோ ஞானிகளுக்கியைந்த வொழுக்கமாவது;—முதலுரைத்ததுரியாதீதமு மேழாம்பூமியுமுக்கியமாமென்றபதமுமதன்வகையு மெனக்கெளிதாகத் தெளியும்வண்ணம்பணித்திடரே,—எ-து. முன்கூறியதுரியா தீதநிலையும், ஞானபூமியிலேழாம்பூமியும், முக்கியமாமென்று கூறியபதமும், அதன் விபரமு மினேயவென வெளிதிற்றெளிந்துகொள்ளும்வண்ணமடியேனு க்குவிளக்கியருளும்,—எ-று.

இதுகாறுமில்லேயெனக்காட்ட, இனிவேறுண்டோவெனவும், ஏனியரு க்கன்றெனக்காட்ட, ஞானிகளுக்கான நீதியெனவும், இந்தநிலேயைப்பொது வாக,கஉ-வது, கவியிற்கூறியிருப்பதால்,முதலுரைத்தவெனவுங்கூறினர். இவ் வினுக்களுக்குவிடை, கநிக-முதல், கருங-கவிவரையிற்காணலாம்.முக்கியமாமெ ன்னும்வினைக் கெழுவாய், துரியாதீதமும், ஏழாம்பூமியுமாதலாலவற்றைச் சங்கையிற் சேர்க்கப்படாது. என்றவென்னும் வினைக்கெஞ்சியது; பதமும், அதன்வகையுமாதலா லிவ்விரண்டைப்பற்றிவினவியதாக விக்கவிகாட்டுகின்றது. துரான்கெனக்கோடற்குக் கவியியையிற்கொள்ளலாம்.

(க-து.) மாணாக்க னிவ்விரண்டையுந் தெளிந்துகொள்ளுமாறு வினவின னென்பது. இவ்விரண்டிற்கும் விடைகூறுங்கால் தானேதுரியாதீதமும், ஏழா ம்பூமியுமமையும். உரைக்குக்கவியன்று, கவிக்குரையாதலா லிக்கவிக்கியைந்த வாறுரையெழுதினும். என்செய்தும். (கசஎ)

அ - கை.

[இவ்வினவுக்கு விடைஞானபூமியிற்சேர்ந்ததாதலின், ஞானஞ்ஞான
பூமிகளேவிளக்காவிடில் தெரியாதெனக்கருதி யிக்கவியி லஞ்
ஞானபூமிகளேத் தெரிவிக்க அவற்றின்பெயர்களேக்
கூறுகின்றார்.]

146 வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் ஞான பூமிகளே ழென்பா, ரினியவற்று ளஞ்ஞான பூமிகளேழையுமுந்தி யியம்பக் கேளாய், தனிவிந்து சாக்கிரஞ் சாக்கிர மகாசாக்கிரஞ் சாக்கிரத்தைச் சார்ந்த, கனவுகளுக் கனவு சாக்கிரஞ்சூழ்த்தியென் றெழுபேர் கணித்தார் மேலோர்.

(இ-ள்.) வினவுமிடத் தஞ்ஞானபூமிகளேழ் ஞானபூமிகளே ழென்பாரினி யவற்றுளஞ் ஞானபூமிகளேழையு முந்தி யியம்பக்கேளாய்,—எ-து. அதைக் குறித்துச் சொல்லுமிடத்தில், அஞ்ஞானபூமிக ளேழென்றும், ஞானபூமிகளே ழென்றுஞ் சத்துக்கள்சொல்லுவார்கள். இனி யவ்விரண்டுபிரிவினுள் ; அஞ் ஞானபூமிக ளேழையு முன்னர்சொல்லுது மதனைக்கேளுதி:—தனிவிந்து சாக் கிரஞ்சாக்கிர மகாசாந்கிரஞ் சாக்கிரத்தைச்சார்ந்த கனவுகளு—எ-து. தனிமை யாயுள்ள விந்துசாக்கிரம், சாக்கிரம், மகாசாக்கிரம், சாக்கிரசொப்பனம்,சொப் பனம்:—கனவு சாக்கிரஞ்சூழ்த்தி யென்றெழுபேர்கணித்தார்மேலோர்,—எ-து. சொப்பனசாக்கிரம், சூழ்த்தியென்றிங்ஙன மேழுபேர்களையுஞ் சத்துக்கள் சொல்லினர்.—எ - று.

தனித்துநிற்றலின், தனியென்றார். என்பாரென்றதனாற் சத்துக்கள் வரு வித்தாம், இது தோன்றுவெழுவாய். (கசசூ)

(க-து.) வெளிப்படை.

அ - கை க.

[அஞ்ஞானபூமியேழனுள் நான்குபூமிகளினியல்பையிக்கவியிற்கூறுகின்றார்]

147. முந்தவகண் டத்தெழுமோ ரறிவுமாத் திரமதுதான் முதல் வித் தாகு, மிந்தவறி விற்பண்டில் லாவகந்தை மூளைபோலா மிதுஞ ஞுவாம், வந்துவந்து பிறவிதொறு மகமமதை வளருமது மாகாஞ ஞுவா, நந்துமகங் கொடுநனவின் மனோராச் சியஞ்செயலே நனுக்க ஞுவே.

(இ-ள்.) முந்தவகண்டத்தெழுமோரறிவுமாத்திர மதுதான் முதல்வித்தா கும்,—எ-து. அகண்டபரிபூரணமாகவிளங்குஞ் சுத்தசுயஞ்சைதன்னியத்தில் முதலில் தான்மாத்திரமாக வெழுந்தஞெப்தியின்புரிப்பெதுவோ வதுவே விந்து சாக்கிரமெனப்படும்:—இந்தவறிவிற் பண்டில்லாவகந்தை மூளைபோலாமிதுஞ ஞுவாம்,—எ-து. இந்த ஞெப்திஸ்புரிப்பில் முன்னென்றுமிலாத வாணவமங்குரம் போலெழும், இதுவே சாக்கிரமென்னப்படும்:—வந்துவந்துபிறவிதொறு மகமம தைவளருமிதுமகாஞ ஞுவாம்,—எ - து. அந்த வகந்தையால் யானெனதென்னு மகமமதை பிறவிதோறும் வந்துவந்து வளர்ந்துகொண்டிருக்கும், இதுவே மகா சாக்கிரமெனப்படும்: — நந்துமகங்கொடு நனவின்மனோராச்சியஞ் செயலே நனுக்களுவே,—எ-து. அங்ஙனம் வளர்ந்துகொண்டிருக்கு மகமமதைதொண்டு சாக்கிரத்தில்மனோராச்சியஞ்செய்வதே சாக்கிரசொப்பனமெனப்படும்,—எ-று.

மகாசமூத்திரத்திற் பரமாணுபோலெழுந்திவலேபோல்வதின், ஓரறிவென் ஞதுமிகைபடமாத்திரமெனவும், அங்ஙனம் வளர்ந்துகொண்டிருப்பதைப்பற்றி நந்தமகங்கொடெனவுங் கூறினர். மூன்னென்றுமில்லாதறிவுஸ்புரித்தல்போ நலின், விந்து சாக்கிரமெனவும், அங்ஙனம் ஸ்புரித்த ளவாகின்றவறிவான தகந்தையென்றங்குரம்போலாகத் தானு மதன்மயமாகக்காண்டலின், சாக்கிர மெனவும், இவ்வகந்தை மேலீட்டார்பிறவிதோறு மகமமதைவளரும், அவ்வக மமதைரூபமாக வளர்தல்போன் றறிவுகாண்டலின், மகாசாக்கிரமெனவும், அவ்வகமமதை மேலீட்டால் தடையின்றி மஞ்ஞராச்சியம்புரிதல்போன் றவ் வறிவுகாண்டலின், சாக்கிரசொப்பனமெனவும் வந்ததென்க. (கசஎ)

அ - கை க.

[ஏனையமூன்றுபூமியினியல்பை யிக்கவியிற்கூறுகின்றார்]

148. உண்டுறங்கி மனோராச்சி யஞ்செயல்சொற் பனமெனும் பேருடைய தாகும், பண்டுநனக் கண்டுமறந் ததைமீண்டு நினைப்பது சொற் பனநனவா, மண்டுமிருண் மூடுவது சுழுத்தியா மஞ்ஞான வகைகள் சொன்னேம், விண்டுநின்ற மூத்திதரு ஞானபூ மிகளேழும் விளம்பக் கேளாய்.

(இ-ள்.) உண்டுறங்கி மனோராச்சியஞ்செயல் சொற்பனமெனும் பேரு டையதாகும்,—எ - து. உண்டுறங்கி மனோராச்சியஞ்செய்தலே, சொற்பன மென்னும் பெயர்பெறுவதாம்: — பண்டுநனக்கண்டுமறந் ததைமீண்டுநினைப் பது சொற்பனநனவாம்,—எ-து. முன்சாக்கிரத்திற்கண்டு மறந்ததை மறுபடியு நினைப்பது சொற்பனசாக்கிரமாம்:—மிண்டுமிருண் மூடுவது சுழுத்தியாமஞ் ஞானவகைகள் சொன்னேம்,—எ-து. மிகுந்தவிருள் மூடிக்கொள்ன்த்தகுவது சுழுத்தியெனப்படுவதாம், இதுவரையிலு மஞ்ஞானபூமிபேதங்களைச் சொல்லி னேம்:—விண்டுநிறைமூத்திதருஞானபூமிகளெழும் விளம்பக்கேளாய்,—எ-து. பரிச்சேதபேதமகன்று பரிபூரணமாவிளங்கு முத்தியைத்தரத்தக்க ஞானபூமிக ளேழையு மினியாஞ்சொல்லக்கேளுதி,—எ-று.

அங்ஙன மனோராச்சியஞ்செய்தலோ டுண்டுறங்குவதுபோ லறிவுகாண் டலே, சொற்பனமெனவும், முன்கண்டுமறந்ததை மீண்டுநினைப்பதுபோ லறிவு காண்டலே, சொற்பனசாக்கிரமெனவும், நன்குறங்குங்கால் மிக்க விருள்மூடிக் கொள்வன்போ லறிவுகாண்டலே; சுழுத்தியெனவுங்கூறியதென்க.

(க-து.) இந்த வஞ்ஞானபூமியேழு மத்தியாரோபமெனக் காட்டக்கூறிய தென்பது. ஆகாயமானது ; காற்று, அக்கினி, நீர், மண்ணுகப் பரிணமித்தது போற் காணினும், அவற்றுல் தனக் கானிவர்த்திதினைத்துணையுமில்லை. அது போல; சுசாதியாதிவிகற்பமின்றிய வறிவானது; அஞ்ஞானபூமிகளாகிய மூலப் பகுதிமுதல் தனுவிகுதியீறுக்கிடந்த கற்பனைகளாகப் பரிணமித்ததுபோற் காணினு மவ்வவற்றி னிவர்த்தி தினைத்துணையுந்தனக்கில்லை. உள்ளது போற்காண்டலி னிங்ஙனங்கூறினரென்க. இல்லாததை யுள்ளதுபோற் கூறவ்

தது ; உள்ளதாகக்கருதியதைவிலக்கற்கென்க. இல்லாததை யில்லையெனக்கூறினவருமேலார். அதாவது ; அறிவையன்றிச் சகமென்பதில்லையெனக் கூறுதல்போல்வது.சிருஷ்டிக்கிரமங்களாற் சகமுள்ளதாக முடிக்கினவர்க்குமுடன்பாடு. இங்ஙன முடன்பாடாக யாமுங்கலந்துமெல்லமெல்லத் தளர்த்தல்வேண்டும். எங்ஙனமெனில் ; உலகமும் யாமுங் கடவுள் சங்கற்பத்தாலன்றித் தோன்றச் சற்றுஞ்சருதியுத்திகண்டிலம் ஆகவே, அந்தச் சங்கற்பம், நமக்கு மூலகுருங் காரணமோவன்றே ? காரணமெனின், மூன்றுகாரணத்துள் யாது ? துணைக்காரணமெனின், அப்போது கடவுள் நிமித்தகாரணமாகின்றது, முதற்காரணமெங்கே ? மாயையெனின், யாமாசாமாயா, என்பதற் கருத்தமென்னே? இது மலடிமைந்தனென்றற்போலும்,எனக்காட்டி வயப்படுத்துவதெனவதிக.

அ - கை.

[இனி ஞானபூமிகளேழையுங் கூறுவான்வேண்டி யவற்றின் நாமங்களையிக்கவியிற்கூறுகின்றார்.]

149. புலவர்புகழ் முதற்பூமி சுபேச்சைவிசா ரணையிரண்டாம் பூமியாகு, நலதனுமா னசிமூன்றும் பூமிசத்து வாபத்தி நாலாம் பூமி, சொலுஞ்சமூசத் திப்பேரும் பதார்த்தாபா வனைப்பேருந் தூரியப் பேரு, மலினமறு மகனேயைந் தாறேழு பூமிகளா வகுத்தார் மேலோர்,

(இ-ள்.) புலவர்புகழ்முதற்பூமி சுபேச்சை விசாரணையிரண்டாம் பூமியாகும்,—எ-து. மகான்களால் மதிக்கப்பெற்றஞான பூமிகளில், சுபேச்சைமுதற் பூமியெனவும், விசாரணை யிரண்டாம்பூமியெனவும்: — நலதனுமானசிமூன்றும்பூமி சத்துவாபத்தி நாலாம்பூமி,—எ-து. நல்லதனுமானசிமூன்றும்பூமியெனவும், சத்துவாபத்தி நான்காம்பூமியெனவும்:—சொலுஞ் சமூசத்திப்பேரும் பதார்த்தாபாவனைப்பேருந் தூரியப்பேரும்,—எ-து. !சொல்லாநின்ற சமூசத்தியென்னும் பெயரும், பதார்த்தாபாவனையென்னும்பெயரும், தூரியமென்னும் பெயரும்:—மலினமறுமகனேயைந்தாறேழு பூமிகளாவகுத்தார் மேலோர்,—எ-து களங்கரகிதமான ஞானபுத்திரா ! ஐந்தாம்பூமியெனவும், ஆறும்பூமியெனவும்,ஏழாம்பூமியெனவும் பெரியோர்கள் வகுத்துச்சொன்னர்கள்,-எ-று.

சமூசத்தி, பதார்த்தாபாவனை, தூரியம், இவற்றை ; ஐந்தாம்பூமி, ஆறும்பூமி, ஏழாம்பூமியெனக்கூறியது, நிரணிறை. சுபேச்சை, சுபம்விரும்பல். விசாரணை, அங்கலிங்கவிசாரணையிற்றலைப்புகல். தனுமானசி, மனஞ்சிறுகல். சத்துவாபத்தி, உண்மையினிலையுறல். சமூசத்தி, சங்கற்பமறல். தூரியம், அறிவுவிளக்கம், என்பன. சுபம்விரும்பல், மங்களகரமாதலை விரும்பல். அதாவது : பூர்வபட்சமாதற்கியையாதது. லை, சொலும் ; இடைக்குறை.

(க-து.) ஞானபூமிகளிலுமங்களை யுணர்த்தியதென்பது. இனிவகையாதற்கிது தொகையெனப்படும். (கசக)

அ - கை க.

[ஞான்பூமிகளினிலை யினையவெனத் தனித்தனிவிளங்க நான்கு பூமிகளையிக்கவியிற்கூறுகின்றார்.]

150. துற்சங்கநிவர்த்திவந்து சிவஞானம விரும்புவது சுபேச்சை யாகு, நற்சங்க மொழிவினவி ஞானநூல் பழகல்விசா ரணையா நம்பி, மூற்சங்க வீடணைகள் விடறனுமா னசியித்த மூன்றினுலுஞ், சற்சங்க மனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவா பத்திதானே.

(இ-ள்.) துற்சங்கநிவர்த்திவர்தசிவஞானம்விரும்புவதுசுபேச்சையாகும்,—எ-து பொருளல்லவற்றைப் பொருளாகக்கொள்ளுந் துர்ச்சங்கசார்பகன்று மேலாயஞானமாதற்கு விரும்புவது சுபேச்சையெனப்படுவதாம்: — நற்சங்க மொழிவினவி ஞானநூல்பழகல் விசாரணையாம்,—எ-து. பொருளேப் பொருளாகக்கொள்ளுஞ் சற்சங்கத்தைத்தழுவி யவருரைக்கு மொழிகளையையமறக் கேட்டு, இஃதொக்கஞானசாஸ்திரங்களிற் பலகாற்பழகல் விசாரணையெனப்படுவதாம்:—நம்பி மூற்சங்கவீடணைகள்விடறனுமானசி,—எ-து. உண்மையெனச்சொல்லுதலா லவற்றினம்பிக்கையுற்று மூன்னர் தனக்குச் சங்கமாநின்றுள்ள வீடணைத்திரியங்களே விட்டகறல் தனுமானசியெனப்படுவதாம்:—இந்தமூன்றினுலுஞ் சற்சங்கமனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவாபத்திதானே,—எ-து. இந்த மூன்றேதுக்களாலுஞ் சற்சங்கமயமான மனதின்கண் மெய்யுணர்வெழல் சத்துவாபத்தியெனப்படுவதாம்,—எ-று.

(கு-து.) நான்குபூமி; சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தியென்பன. (சுரு0)

அ - கை க.

[ஏனையமூன்றுபூமிகளினிலை யினையவென விக்கவியிற் கூறுகின்றார்.]

151. தத்துவத்தின் மனமுறைந்து மித்தையெலா மறத்தல்சமூ சத்தியாகு, மத்துவிதா னந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபா வனையதாகும், வத்துநிலை யிருந்தபடி யிருந்தமவு னசுபா வந்துரிய மாகு, மித்துரிய பூமியைமுன் றுரியா தீதப்பதமென் றதுவுங்கேளாய்.

(இ-ள்.) தத்துவத்தில் மனமுறைந்து மித்தையெலாமறத்தல் சமூசத்தியாகும்,—எ-து. உண்மையாதோவதில்மனமான தழுந்தி மித்தையெனப்படுவனவெவையோ வவற்றையொருங்கே மறந்துவிடுதல் சமூசத்தியெனப்படுவதாம்:—அத்துவிதானந்தம் வருந்திரிபுடிபோம் பதார்த்தாபாவனையதாகும்,—எ-து. அத்துவிதானந்தோதயமத யதனுல் திரிபுடிபோகத்தகுவது பதார்த்தபாவனை யெனப்படுவதாம்: — வத்துநிலையிருந்தபடியிருந்த மவுனசுபாவந்துரியமாகும்,—எ-து. பிரமவஸ்துவினிலையெங்ஙனமிருந்ததோ வஃதிருந்தவண்ணந்தானுமிருக்க வதனுலெய்துமவுனசுபாவந் துரியமெனப்படுவதாம்:—இத்துரியாதீதப்பதமென்றதுவுங்கேளாய்,—எ-து. இந்தத்துரியபூமியையே மூன்னேதுரியாதீதபதமென்றுசொன்னமே யதனையுமிப்போதுயாங்கூறக்கேளுதி,—எ-று.

உறைந்தென்பதுஉறைத்தென்றுயது; வினைதன்பிறவினைமயக்கம். இங்கே யுண்மையாவது : ஆன்மா. உதாரணம். 'மெய்யதேதெனிற் சச்சிதானந்தமா வியாபிக்குமான்மாவே. இன்னு முண்மையாவது; ஞானம். சிவமெனற்கும், ஆன்மாவெனற்கும்பொருள் ; ஞானத்தையன்றிச்சோதனையில் வேறுகண்டவ ருளரோ ? உளரெனில், உபாதிகுணந்தொழிலன்றே? இம்மூன்றையுந்தள்ளிக் காட்டவேண்டும். கூடாதெனில், ஓத்துக்கொள்வதற்குத்தடையென்னை? இது நிற்க. சுசாதியாதிபேதமிறந்ததாதலின் ஞானத்தில்மனமூறைதற்குத்தடையெ ன்னை? உறையவே, மித்தையெல்லாமறக்கவரும். மறக்கவரவே, அத்துவிதானந் தம்வரற்கும், திரிபுடியொழிவுக்கு மிடமுண்டாம். உண்டாகவே, பரமெங்ஙன மிருக்கின்றதோ வங்ஙனமிருக்கத்தானே யமையும். அங்ஙனமாயவமைதியே, சுபாவமெனத்தக்கது. அச்சுபாவமே மகாமௌனமாம்.

(க-து) இவ்விரண்டுகவியானு ஞானபூமியேழினிலை யினையவெனவிளக் கினரென்பது. இங்ஙனம் விளக்கியது, இனித்துரியத்திற்கு மதீதத்திற்குமபேதங் காட்டவேண்டியென்க. இங்ஙனம்விளக்காவிடி லெழுத்தறியார்கவிபோலும். ()

அ - ஸை க.

[துரியமேதுரியாதீதமெனற்கு ஞானபூமியேழையுஞ் சுத்தபஞ்சா வஸ்தையாக விக்கவியிற்கூறுகின்றார்.]

152 மூற்புவிமூன் றினுமூலகத் தோன்றுதலாற் சாக்கிரமாம் மூன்றற் கப்பாற், சொற்பனமா மதுவுமல்ல நழுவுமஞ்சாம் பூமியே சுழுத்தி யாகு, மற்புதமாஞ் சுவானுபவமிகுமாறும் புவிதுரிய மதற் கப்பாலோர், கற்பனையில் லாதவிட மதீதமென்று மவுனமாக் காட டும்வேதம்.

(இ-ள்.) மூற்புவிமூன்றினுமூலகந் தோன்றுதலாற்சாக்கிரமாம்,—எ-து, ஞானபூமிகளில் முதலிலுள்ள சுபேச்சை, விசாரணை, தனுமானசியென்னு மிம்மூன்றுபூமிநிலைகளெய்தினு மூலகந்தோற்றிக்கொண்டிருப்பதாற் சாக்கிரா வஸ்தையெனப்படும்: — மூன்றற்கப்பாற்சொற்பனமாமதுவுமெல்ல நழுவுமஞ் சாம்பூமியேசுழுத்தியாகும்,—எ-து. அந்தமூன்றுபூமிக்கப்பாலெய்தியநான்காம் பூமிநிலையே சொற்பனவஸ்தையெனப்படும், அந்தநான்காம்பூமிநிலையு மெல்ல மெல்ல நழுவத்தக்க வவசரத்துதிக்கு மைந்தாம்பூமிநிலையே சுழுத்தியவத்தை யெனப்படும்:—அற்புதமாஞ்சுவானுபவமிகு மாறும்புவிதுரியம்,—எ-து. அவ் வைந்தாம்பூமி நிலைக்கப் பால் மிகவு மற்புதமாயுள்ள தனது சுவானுபவநிலை தோன்றும், அந்நிலைமீக்குறலேயாறும் பூமியாகும், அவ்வாறும்பூமி நிலையே துரியபதமென்னப்படும்:—அதற்கப்பாலோர் கற்பனையில்லாதவிட மதீதமென்று மவுனமாக்காட்டும்வேதம்,—எ-து.அந்தவாறும்பூமிநிலைக்கப்பாலெழுநிலையாகிய வேழாம்பூமி யாதோர்கற்பிதமு மிறந்தவிடமாம், அவ்விடமேதுரியாதீதமென்று வேதமானது சொல்லாமல்மவுனமாகக்காட்டிவிடும்,—எ-று.

சிவஞானம்விரும்பல், ஞானநூல்பழகல், ஈடணைகள்விடல், இம்மூன்று மூலகத்தைமறைக்கற் பாலதன்றுமையின், புவிமூன்றினு மூலகந்தோன்றுமெனவும்,தொக்கியிருப்பதால் நான்காம்பூமியை வருவித்தாம்.ஞானேதயவிளக்கம் உலகஞ்சாயாவடிவம்போற் காணச்செய்தலின், மூன்றற்கப்பால் சொற்பனமாமெனவும். தத்துவத்தில்மனமுறைந்தபோது மித்தையெனப்படுவனவற்றையெல்லாம் மறந்துபோகச் செய்தற்பாலதாதலின், அதுவுமெல்லழுவுமைந்தாம்பூமியே சுழுத்தியாகுமெனவும், அப்போதங்கேயெழுமானந்தந்துவிதமிறந்ததாதலினாலும்,திரிபுடியென்பதிருத்தற் கிடமன்றுமையினாலும், அவ்வானந்தந்தெளிவுமயமாதலினாலும், அதனை, அற்புதமாஞ்சுவானுபவமிகுமாறும் புவிதுரியமெனவும், சுத்தசைதன்யமெங்ஙனமிருந்ததோ வங்ஙனந்தானுநீலை, அதற்கப்பாலோர்கற்பனையில்லாதவிட மதீதமென்று மவுனமாக்காட்டும் வேதமெனவுங் கூறியதென்க.

(க-து.) முன்னர்கூறிய துரியநிலையே துரியாதீதமன்றி வேறன்றெனற்கிங்ஙனங்கூறியதென்பது. இதுவும்வேதாந்திரம். மெல்லவென்பது செய்யுணடை, மெள்ளவென்ப தலகவழக்கம் சுகானுபவ மெனினும், சுவானுபவ மெனினுமொக்கும் இது மரூ-உ. பூமியுமிடமாதலா லிங்கே கற்பனையில்லாத விடமென்றதை யேழாம்பூமியாக்கினும். (கஙஉ)

அ - கை

[துரியமேதுரியாதீதமெனற்கையுறுவண்ண மின்னும் வேறுவகையாற் சமாதானமிக்கவியிற்கூறுகின்றார்.]

153. துரியநிலந் தனிற்றுரியா தீதமெனின் மயக்கமென்று சுருதிமேலோ, ரரியதொரு விதேகமுத்தி யதீதமென்பா ரதுகணக்கிலாறும்பூமி, மருவுசுழுத் தியிற்காட்சி சுழுத்தியென்பா ரென்பதுநீ மனதிற் கொள்வாய், பெருமைதரு ஞானபூமியின் விகற்ப மின்னமுண்டு பேசக் கேளாய்.

(இ-ள்.) துரியநிலந்தனிற் றுரியாதீதமெனின் மயக்கமென்று சுருதிமேலோரரியதொருவிதேகமுத்தியதீதமென்பா ரதுகணக்கிலாறும்பூமி,—எ-து. வேறென்னுதுரியபூமியில்தானேதுரியாதீதமெனக்கூறின்ஐயமெய்துறுமென்று பிரபலசுருதியில்வல்லசான்றோர், அறிதற்கரியவொப்பற்றவிதேக முத்தியெனப்படுவது துரியாதீதமெனக் கூறுவர், அங்ஙனங்கூறப்படுவதும் ஞானபூமியேயென்னுங் கணக்கிலாறும்பூமியெனப்படுவதாம்:—மருவுசுழுத்தியிற் காட்சி சுழுத்தியென்பா ரென்பதுநீ மனதிற்கொள்வாய், — எ - து. ஆயினேழாம்பூமியோ, அங்குள்ள சுழுத்திசம்பந்தமில்லாதவறிதுயிலென்பர், என்றவர்கள் கூறுவதையு முன்மனதிற்கொள்ளுதி:—பெருமைதரு ஞானபூமியின் விகற்பமின்னமுண்டுபேசக்கேளாய்,—எ-து.யாவற்றினுமிக்கவுயர்வுதரத்தக்க ஞானபூமிகளின் விகற்பங்களின்னுமுண்டு, அதனை யாங்கூறக்கேளுதி,—எ-று.

அதுவு மென்பதிலும்மை தொக்கது. அதுகணக்கி லாறும்பூமியென்றதனால், முன்கவிப்படி துரியமென்றுயிற்று ஆகவே, துரியமே துரியாதீதமெனக் குறிப்பித்ததாகக்கண்டாம். ஆறும்பூமி-துரியாதீதமாகவே,யேழாம்பூமியோ

வென்றும். அவ் வேழாம்பூமி துரியாதீதத்துக்கு மேலிட்டதெனத்தோன்ற, மருவுசுழுத்தியிற் காட்சிசுழுத்தியெனற்குச் சுழுத்தியாயினு மூடமல்லாததால் சுழுத்திசம்பந்தமில்லாதவதி துயிலென வுரைகொண்டாம். இல்லென்பதுவினைத் தொகையாதலி னியல்பாயிற்று. என்பதுமென்றதிலும்மை, இறந்ததுதழீ இய வெச்சவும்மை. அதீதமெனிற்போதுமே மேலறிதுயிலென்றது; மிகைபடக்கூற லென்னுங் குற்றமாமேயெனின், அறிதுயிலாவது ; எல்லாமறிந்து மெல்லாமறியாதது துரியாதீதமாவது ; எல்லாமறியாதது. ஆயின் மூடசுழுத்தியினுமதீதஞ் சிறந்ததென்றதென்பற்றியெனின், தத்துவவிசாரத்தெளிவு காரணமாகவந்ததாதலினென்க. எல்லாமறிந்து மறியாததி லென்சிறப்பெனின், மூடமுமன்று, தெளிவுமன்றெனலெப்பற்றியென்க. சத்துக்க ளேழாம்பூமியைக்காட்சிசுழுத்தியென்பரெனமுடிக்க. ஏழாம்பூமியிசையெச்சம். துரியம், சீவன்முத்தி. துரியாதீதம், விதேகமுத்தி-எனவே, துரியமேலீடே துரியாதீதமெனற்கு, கணக்கிலாறும்பூமியென்றார். துரியமே துரியாதீதமெனின் மயக்கமுறுமேயெனின், சுருதிமே லோர்விதேகமுத்தியே துரியாதீதமெனக்கூறலாமா? அதுவு மேற்கவியிற்கூறிய கணக்கி லாறும்பூமியென்னலாமா ? அங்ஙனம் பிரபலசுருதிகளிருப்பதாற் கூறலாமெனின், இதுவுங்கூறலாம், ஆதலினேயமென்னே. எனவே, சுருதிசம்மதமிங்ஙனமிருப்பதுபற்றிக் கூறலாமென்க. இது கூடாதெனின், அதுவுங்கூடாது. அது சான்றோராடசியாதலா லிங்ஙனங்கூறினரென்க. இன்னும், மருவுசுழுத்தியிற் காட்சிசுழுத்தியென்பதற்கு, பிரபலசுருதிகளில் மருவிய சீவசுழுத்தி, சிவசுழுத்தி, பரசுழுத்தியெனப்படுஞ் சுழுத்திபேதங்களி லேழாம்பூமி காட்சிசுழுத்தியெனப் பொருள்கூறினு மையமின்றியமையும். இங்ஙனமுரைகொள்ளி லேழாம்வேற்றுமையாதலா லகரம் றகரமாகத்திரியலாம்.

(க-து.) சுருதிசம்மதம்போல மகான்கள்சம்மதமு மிங்ஙனமிருத்தலின் துரியநிலந்தனிற்றுரியாதீதமெனல்பொருந்துமென்பது. இங்ஙனங்கவிநோக்கறியாருரைவே றென்பர். இதனுக் கவிவேறுகுமா, கவிக்கிலக்கணம் வேறுகுமா? இதெல்லாந்தோன்றுமை.

அ - னை க.

[இந்தஞானபூமிகளையடைந்தோ ரவசரநாமங்களை யிக்கவியிற்கூறுகின்றார்.]

154. முன்னிலங்க ளேறியமூ வருமப்பி யாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர் பேத மாகுஞ், சொன்னகடப் பூமிவந்த ஞானிகளே பிரமவித்தாந்தூய முத்த, ரின்னமுமப்பூமிகளின்பெருமைதனை நீயறியயான்சொல்வேனே.

(இ-ள்.) முன்னிலங்களேறியமூவரு மப்பியாசிகளாமுத்தரல்லர்,—எ-து. முதலிலுள்ள சுபேச்சை, விசாரணை, தனுமானசி யென்னுமூன்றுபூமிகளி லேறிவந்தமூன்றுபேரு மப்பியாசிகளன்றிச்சீவன் முத்தரல்லர்:—பின்னிலங்கள் வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர்பேதமாகும்,—எ-து. கடையி லுள்ள வைந்தாநிலத்தேறியோன்வரன், ஆறுநிலத்தேறியோன்வரியான், ஏழா

நிலத்தேறியோன் வரிட்டனெனக்கூறப்படுவன். இதுதான் சீவன்முத்தர்பேதங்களாம்:—சொன்னநடப்பூமிவந்த ஞானியே பிரமவித்தாந்தூயமுத்தன்,—எ-து. இப்போதுசொல்லிவந்த பூமிகளில் நடுவாயுள்ள நாலாநிலத்தேறிவந்தஞானியே, பிரமவித்தென்னும் பரிசுத்த சீவன்முத்தனெனப்படுவோனும்:—இன்னமுமப் பூமிகளின்பெருமைதனை நீயறிய யான் சொல்வேனே,—எ-து. இஃதன்றியு மின்னுமந்த ஞானபூமிகளின் மகிமையை நீ செவ்விதாக வுணர்ந்துகொள்ளு மாறு யான் சொல்லுவன் கேளுதி,—எ-று.

முன்னிலம், பின்னிலம், நடுப்பூமி, என்றதனால், முன்னிலம் ; விசாரணை தனுமாசியெனவும், பின்னிலம் ; சமசத்தி, பதார்த்தாபாவனை, துரியமெனவும், நடுநிலம் ; சத்துவாபத்தியெனவும்பெற்றும். முன்னிலங்களென்பதினலும்,மூவருமென்பதினலும், பன்மைபற்றி மூன்றுநிலமெனக்கண்டாம். மூவருமென்பதிலும், பின்னிலங்களிலு மில்லாமையால், ஒருமைபற்றி நடுப்பூமிவந்த ஞானியே பிரமவித்தாந் தூயமுத்தனென்றும். வரன், வரியான், வரிட்டனெனு மூவரைப்பற்றிச் சீவன்முத்தரெனப் பலர்பாலாக்கினரன்றி ; வரர், வரியார், வரிட்டரென வொவ்வொன்றையும் பலர்பாலாக்கவில்லை.ஆதலின், பிரமவித்தாஞானியே தூயமுத்தனென வொருமையாக்கினும். முன்னிலங்களேறிய வென்றதனால், பின்னிலங்களேறிய நடுப்பூமியேறிவந்தவென்றும். மூவரு முத்தரல்ல ரென்றதனால், ஏனையர் முத்தராமென்றுரையிற்று. முதல் மூன்றுபூமிய மப்பியாசமெனவே, ஏனையபூமிக ளாரூடமென்றுரையிற்று. இதனால் ஞானபூமிகள் போல் பூமியின்றெனக்கண்டாம். (கருச)

அ - கை.

[முதற்கண்ணுள்ளமூன்றுபூமிசெய்யுமகிமையும், முதற்பூமியி னருமையு மிக்கவியிற்கூறுகின்றார்.]

155. நாலாம்பூ மியின்வருமூன் மூன்றுபூ மியுமடைந்து நடந்து மாண்டோர், மேலான பதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடு சேர்வார், மாலான பவத்தில்விழார் முதற்பூமி கிடைப்பதுவே வருத்தமைந்தா, காலானமுதற்பூமி கைவந்தான் முத்தியுங்கை வந்த தாமே.

(இ-ள்.) நாலாம்பூமியில்வருமூன் மூன்றுபூமியுமடைந்து நடந்துமாண்டோர், — எ - து. நாலாவதான ஞானபூமிக்குவருமூன்னரே மூன்றுபூமியுமடைந்து, அவற்றில்வழுவின்றி நடந்துவருகையிற் பிராரத்துவநீக்கத்தாலிறந்தோர்:—மேலானபதமடைந்து பிறந்துமெல்ல மெல்லவந்து வீடுசேர்வார், — எ-து. பதவிகளில் மேலாயதைப் பலஞகவடைந்து, பந்தசென்மமல்லாத விடுதி சென்மமெடுத்துக் குழந்தைபோல் மெல்லமெல்ல வொவ்வொரு பூமியாகத் தவழ்ந்துகடந்துவந்து, ஐக்கியமுத்தியடைவார்கள்: — மாலானபவத்தில்விழார் முதற்பூமிகிடைப்பதுவேவருத்தமைந்தா,—எ - து. ஞானபுத்திரா ! இவர்கள் பிராந்திரூபமான பந்தசென்மத்தி லொருக்காலுஞ்செலியார், இங்ஙனமிருக்க, இதில் முதற்பூமிகிடைக்கிறதே வெகுவருத்தமாகுமே:—காலானமுதற் பூமிகை வந்தால் முத்தியுங்கைவந்ததாமே,—எ-து. அஸ்திபாரம்போல்வதாகிய முதற் பூமி யொருவேளைகைகூடுமாஞ லப்போதேமுத்தியுங்கைகூடினதாம்,—எ-று.

கடவாநிற்கவென்பது ; நடந்தென்றது, காலமயக்கம். அங்ஙனமாயஞானஞ்ஷ்டானஞ்செய்துகொண்டிருக்கும்போது தேகநழுவினு பின்னுமவ்வனுஷ்டானஞ்செய்துமுடித்தற்கியைந்ததேகம்வரும். வரவே, அதனைமுடித்து, அப்பால்செய்துமுடித்தற்குரிய ஞானனுஷ்டானஞ் செய்யவேண்டிவரும். இம்முறையே முடிபுவரையிலுஞ் செய்துவரும்போது, இடையிடையே தேகநழுவும். நழுவினு மனுஷ்டானம் விடாமற்செய்துமுடித்தல், மரபும், அனுபவமுமாதலி னிங்ஙனங்கூறினரென்க. இதனை யிவ் வுலகில்தானே காணலாம். இங்ஙனமாய சிந்தையிலார்க் கெங்ஙனங்காணப்படும். அந்தந்த முயற்சியுடையோருக்கு, அதுதெரியுமன்றி மற்றெங்ஙனந்தெரியும். நழுவியசென்ம மீண்டும் வருமாவெனின், அது வராவேனுந் தானியற்றிவந்த கன்மபேத வவசரநிலைகள் பற்பலபேதமாதலின், அவ்வவற்றிற்கியைந்தபலனும், பற்பலபேத வவசரபேதங்களாயிருக்குமன்றே ? அப்பலனை யனுபவித்தாலன்றித் தீருமோ, தீராது பற்றிச் சென்மம்வரவேண்டியதன்றே ? வராவிடின், உயிர்களவாவடங்கற்கே தென்னை, அங்ஙனமவாவி விதிவிலக்குகட்கலாது கன்மம்புரிவதற்கேதென்னை? வேண்டுவதின்றேல், உயிர்களொரேபிரகாரமாகவல்லது பற்பலபேத வவசரபோகங்களை யவ்வவற்றிற்குரிய தனுகரணபுவனங்களைச் சாதனக்கருவியாகக்கொண் டெதிரிலனுபவித்தற்கேதென்னை ? அனுபவிப்பதால், மறுத்தற்கேதென்னை ? அவாவற்ற வுயிர்களில்லை. அந்தவவா ; பந்தம், விடுதியென்பவற்றுளொன்றன்பாலதாயிருக்கும். பந்தவவாகாமியத்தவத்தாலும், விடுதியவா ; நிட்காமியதவத்தாலுங் காணப்படும். பந்தவவா ; தனக்கயலைச்சுகித்தற்பாலது. விடுதியவா ; தன்னைத்தான் சுகித்தற்பாலது. இவ்விருவகையு முலகிற்காண்கின்றோம். மாதுதடுக்கினும், அனுபவத்தைத்தடுக்கலாமா ? உயிர்கட் கனுபவமொருதகையதாவின்றே, இன்றுதலா லொத்துக்கொள்ளவேண்டும். இதனையுமறுக்கில், குதர்க்கத்திற்சேர்க்கப்படும். மனதின்றேல், விஷயதற்கிடமின்றி விடைதரவேண்டும். கூடாதேல், வாய்பொத்திக்கிடக்கை நன்குமதிப்பு. இதனைச் சுருக்கியுரைத்தாம். விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

(க-து.) ஞானபூமிகளின் பெருமையு மருமையுங் கூறியதென்பது. முதற்பூமிகைவந்தால் முத்தியுங்கைவந்ததாமே யென்றது, காலமயக்கம். இது ; உரையளவையானும், காட்சியளவையானு மிவற்றிற்கிவை காரணமாகத் தெளிந்தமையின் தெளிவாயிற்று. மலானபவம், பந்தகன்மத்துக்கியைந்தசென்மம். பிறந்தென்றது ; இங்கேவிடுதி கன்மத்துக்கியைந்தது. (கருடு)

அ - கை.

[இந்த ஞானபூமிகளிலொன்றையேனு மிரண்டையேனுமெய்தி
னேனு மிக்கவிழிஞனேனும், சீவன்முத்தனே
யென்பதையிக்கவியிற் கூறுகின்றார்.]

156. இப்புவியி லிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந்திருந்தாரானு, லப்புருடர்மிலேச்சரா கிலுமுத்தர்குருபாதத்தாணை மெய்யே,
தப்புரையென் றவர்கெடுவார் நடுவான மறைகளீ சங்கியாதே,
செப்புமொழி வழிதிடமா யகம்பிரம மென்றிருந்து தெளிந்திடாயே.

(இ-ள்.) இப்புவியி லிஞ்ஞானபூமியொன்றி லிரண்டிலடைந்திருந்தாராலல்;—எ-து இவ்வுலகின்கண் இந்தஞானபூமிகளேழெண்களு ளொன்றிலேனு மிரண்டிலேனுஞ் சேர்ந்திருப்பாராயின்:—அப்புருடர் மிலேச்சராகிலுமுத்தர் குருபாதத்தாணைமெய்யே,—எ-து. அந்தப்புருடர்கள் மிக்கவிழிஞராயினுஞ் சீவன்முத்தர்களே யதிலையந் சற்றுங்கொள்ளற்க; இது குருபாதத்தாணைப்படி சத்தியமே:—தப்புரையென்றவர் கெடுவார் நடுவானமறைகளே நீ சங்கியாதே,—எ-து. இவ்வளவாணையிட்டு மிது தப்பர்த்தமென் றிதனைச் சற்று மேலாரினியென்று மீளாதுகெடுவர். ஞாலஞ்ஞானங்களுக்கு நடுநிலையாயுள்ள வேதவாக்கியங்களைப்பற்றி நீ விபரீதமாகச்சங்கைசெய்யாதே:—செப்புமொழி வழிதடமா யகம்பிரமமென்திருந்து தெளிந்திடாயே,—எ-து. இதுவரையுங் கூறிவந்த வுபதேசமொழி வழியேயுறுதியாகநின் றகம்பிரமமெனச் சிந்தித்திருந்துதெளிதி,—எ-று.

பொதுப்பட வொன்றிலிரண்டிலெனக் கூறினும், முதல்பூமியு மிரண்டாம்பூமியுமெனக்கொள்க. மிலேச்சர், விதிமார்க்கத்துட் சற்றுமடங்கார். நடுவானமறைகள், மத்தியகத நிலவழிவாயுள்ள வேதங்கள். அகம்பிரமம், யானெனல் யாதோவதுபிரமம். யானெனல் பூர்வபட்சமாதற் கிடமின்றிக்கண்டு தெளிந்துழியன்றிப் பிரமமெனல் பொருந்தாதென்பார், இருந்துதெளிந்திடாயே யென்றார். எனவே, சொல்லாலும், நினைவாலும், யான் பிரமமெனக்கோடற்க வென்றாயிற்று. ஆகவே, எதுயானெனலோ அதனையுள்ளவாறுகண்டாற்போதும். அதுவே பிரமநிலையதாகும். நீகொள்வதில் விடாீதத்ததாகும், அப்போது நீகெடுவையெனக்கண்டாம்.

(க-து.) இந்த ஞானபூமி வேதசம்மதமாதலி னிதின் வழித்தாகவே சிந்தித்துநிற்றியென்பது. மிலேச்சராகிலுமென்பதிலும்மை, இழிவுசிறப்பு. ()

அ - கை.

[இழிஞனுக்கும் முத்தியெனில் துறவறங்கொள்வானே னென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

157. பெல்லாத மிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமி யென்று, நெல்லாகி முளைக்குமெனைத் தண்டுலமாக் கியகுருவேநீர் சொன்னீரே, இல்லாளுங் குடும்பம்விட்டுச் சந்நியா சம்புகுந்தே காங்கி யானே, ரல்லாமன் முத்திபெறு ரென்றுசிலர் சொலுமயக்க மகற்று வீரே.

(இ-ள்.) பொல்லாதமிலேச்சருக்கும் விதேகமுத்திதரு ஞானபூமியென்று, நெல்லாகிமுளைக்குமெனைத் தண்டுலமாக்கிய குருவேநீர்சொன்னீரே,—எ-து. நெல்போன்றுமுளைக்கின்ற வடியேனை யரிசிபோன்று பதமாக்கிய சற்குருவே! கொடியபாதகருக்கும் ஞானபூமியானது; விதேகமுத்தியைத்தருமென்று தேவ நீர்சொன்னீரே யதுவேசரியென்றுகொள்ளின்:—இல்லாளுங்குடும்பம்விட்டுச் சந்நியாசம்புகுந்தேகாங்கியானேரல்லாமல்,—எ-து. மனைவியோடுகூடியாளுகின்ற குடும்பத்தைப்பற்றறவிட்டுச் சந்நியாச வாசீர்மத்திற்புக்கு, எகாங்கியானு

ரெவரோ வவரேயல்லாமல்:—மூத்திபெறுரென்று சிலர் சொலுமயக்கமகற்று வீரே,—எ-து ஏனேயோ ரெவ்வண்ணத்தராயினு மூத்தியடையார்களென்று சிலர் சொல்லிக்கொள்ளுகின்ற பெரியமயக்கத்தைநீக்கியருளவேண்டும்,—எ-று.

இங்கே நெல்லென்பது, பதரோட பேதமாயவரிசியை. எனவே, மூளத் தற் கிடம்பெறுமா றுபோன்று பிறவிக்கிடம்பெறுமாதென்றுயிற்று. இல்லா ளோடுகூடியாளுங் குடும்பமெனவே, தாய்தந்தைமக்கள் சகோதரர் பாட்டன், பேரன்முதலியோரைப்பெற்றும். மயக்கம், தெளிவின்மை. அதாவது ; எங்கே குடும்பக்கலக மின்றே ; அங்கே ஞானம் பலிக்குமன்றி யேனையிடத் தெங் ஙனம் பலிக்குமென்பார் சிலர். எவ்வருணத்தா ரெத்திறத்தாராயினும் பூர்வ சமஸ்காரத்தாற் பரிபாகிகளாயில் பலிக்குமென்பார் சிலர். இவற்றுள் யாதினுந் தணிவுறுமை. மிலேச்சரென்னுது பொல்லாதவென்றடை கொடுத்ததினால் கொலபாதகரென்றுயிற்று. சீவன் முத்திதருமென்னுது விதேகமுத்திதரு மென்றது, ஞானபூமியின்மகிமைதோன்றவென்க.

(க-து) தணிபுதோன்றவினுவியதென்பது. (கடுஎ)

அ - ஞை க.

அதற்குவிடை கூறுவான்வேண்டித் துறவுநால்வகையென வவற்றினுமங்களே யிக்கவியிற்கூறுகின்றார்.]

158. சிட்டர்புகழ் மகனே நீ சங்கித்த சங்கைகன்று தெரியக் கேளாய், கட்டழியுந் துறவுநால் வகையாகு மவைகளுக்கங் காகும் பேர்கள், பட்டதுயர் கெடுங்குடி சகம்பகூ தகப் ஹம்சம் பரமஹம் சம, விட்டகலுந் துறவுக்கு விராகங்கா ரணமன்றி வேடமன்றே

(இ-ள்.) சிட்டர்புகழ்மகனே நீ சங்கித்தசங்கை கன்றுதெரியக்கேளாய்,—எ-து. சற்சனரால்மதிக்கப்பெற்ற ஞானபுத்திரா ! நீ கேட்டகேள்வி மிகச் சிறப் புடையது, அதுதெரியக்கூறுது மதனைக்கேளுதி:—கட்டழியுந்துறவுநால்வகை யாகு மவைகளுக்கங்காகும்பேர்கள், — எ - து. பந்தக்கட்டழியத்தக்கசந்நியா சத்துவ நான்குவகையாயிருக்கும், அவைகளுக்காங்காங்குவரும் பெயர்களோ:— பட்டதுயர் கெடுங்குடீசகம் பகூதகம்ஹம்சம் பரமஹம்சம்,—எ-து. பிறவி தோறும்பட்ட துயரநிசக்தத்தக்க குடீசகம், பகூதகம்ஹம்சம், பரமஹம்சம், எனநான்குவகையாகும்:—விட்டகலுந்துறவுக்கு விராகங்காரண மன்றிவே டமன்றே,—எ-து பந்தத்தைவிட்டுநீங்கத்தக்கசந்நியாசத்துக்குநிராசைகாரணமே யல்லாமல் வேஷங்காரணமல்லவே,—எ-று.

ஆசைநீக்கத்துக்குச் சந்நியாசவேடமடையாளம். அதுநீங்காவிடதவேடத் தாற்பயனென்னே. பெருமைக்கும், உணவுக்குமன்றே. மிகக்கற்றுச் சந்நியா சத்தை நிலையுறுத்துவதாற்பயனென்னே. இன்றென்பது தோன்றத்துறவுக்கு விராகங்காரணமன்றி வேடங்காரணமன்றேயென்றார்.

(க-து.) சந்நியாசனான்கு வகைக்கும் பெயரினையவென்பது. இங்ஙனங் கூறியது, விராகத்தைநோக்கற்கு. விராகமில்லார்வேடம் பசையற்றதென்க. ()

அ - கை.

[அந்தவிராகம்மூன்றுவகையாமென விக்கவிற் கூறுகின்றார்]

159. மந்தமுந்தீ விரமுந்தீ விதரமுமெனமூன்று வகைவி ராகம்
வெந்துயரம் வரும்பொழுது குடும்பத்தை வெறுத்துவரும் விராக
மந்தமிந்தவுட லளவுமனே தனம்வேண்டா மெனவிடநீ விரமென் பா
ர்களந்தணர்நூன் மித்தையென விடலதுதீ விரதரமா மறிந்திடாயே.

(இ-ள்.) மந்தமுந்தீவிரமுந் தீவிரதரமுமென மூன்றுவகை விராகம்,—எ-து. மந்தம், தீவிரம் தீவிரதரம், எனவிராகம்மூன்றுவகைப்படும்:—வெந்து யரம்வரும்பொழுது குடும்பத்தைவெறுத்துவரும் விராகமந்தம்,—எ-து. மிகக் கொடியதுயரநேரிட்டபோது குடும்பத்தைவெறுத்துவிடற்கெழும் விராகம்மந்த மெனவும்: இந்தவுடலளவுமனேதனம்வேண்டாமென விடநீவிரமென்பார்கள், எ-து. இத்தேகமுள்ளளவு மனேவிதனமாதிகள் வேண்டாமென் றவற்றை விட்டகலல்தீவிரமெனவும்:—அந்தணர்நூல் மித்தையென விடலதுதீவிரதரமா மறிந்திடாயே,—எ-து. பிராமணர்களனுட்டிக்கத்தக்க நூலாகியகன்மகாண்டத் தை மித்தையெனக்கையறவிட்டு விடுநிலையாதோ வதுதீவிரதரமெனவுமாம், இதனை நீதெரிந்துகொள்ளுதி,—எ-று.

குடும்பத்தில் தோடதிஷ்டியெழலாகியவிராகம, மந்தம். இதுகாரணமாக மனேவியாதிகளையொருங்கேவிட் டகலலாகியவிராகம், தீவிரம் ஒருங்கே விடல் காரணமாக ஞான்காண்டத்தையனுட்டிக்கவேண்டிக் கன்மகாண்டத்திலெழுந் தோடதிஷ்டியாகியவிராகம், தீவிரதரம் என்க. வெறுத்துவரும்விராகமென் பது, வெறுத்தக்கொண்டுவரும் விராகத்தை. வெந்துயரம்வரும்பொழுதென வே, வராதபோதுவிராகந்தோன்றற்கிடமின்றாயிற்று. இடமின்றாகவே, மந்தம், தீவிரம் தீவிரதரமென்ற பெயர்வருதற் கிடமென்னை. இன்றாகவே, அறத்து ளொன்றாகியதுறவறமென்றதேயில்லை. இல்லையாகவே, ஞானநூலென்பதெற் றிற்கெனப்பெற்றாம்.

க-து.) நிராசையேதுறவென்பது. வேடமுமம்துண்டாயிற்சிறக்கும். ()

அ - கை.

[அம்மூன்றுவகையில் மந்தமுந்தீவிரமுமிலையவென
விக்கவியிற்கூறுகின்றார்.]

160 பாவிமந்த விராகத்திற் சங்கியா சங்களொன்றும்பலித்திடா
தே தீவிரத்திற் குடிசகமும் பகூதகமு மென்றிரண்டு திறங்களுண்
டாந் தாவிகடந்திடத்திடமிலாதவர்க்குக் குடிசகமுஞ்சகங்களெங்[ர்.
குமேவிகடந்திடத்திடமுள்ளவர்குபகூ தகமுமெனவிதித்தார்மேலோ

(இ-ள்.) பாவிமந்தவிராகத்திற் சங்கியாசங்களொன்றும்பலித்திடாதே, எ-து. கொடியமந்தவிராகத்தைச்சார்ந்த சங்கியாசநிலைகளிலொன்றேனும்பலிக் கமாட்டாது:—தீவிரத்திற்குடிசகமும்பகூதகமு மென்றிரண்டு திறங்களுண்

டாம், —எ-து தீவிரவிராகத்தில்குடிசகம், பகூதகமெனவிரண்டுபாகுபாடுகளுள தாவிநடந்திடத்திடமிலாதவர்க்குக்குடிசகமும், —எ-து. அவற்றுள், கொஞ்ச தூரந்தாவி நடக்கவலியில்லாதவர்க்குக்குடிசகமெனவும்: —சகங்களெங்குமேவி நடந்திடத் திடமுளளவர்க்குப் பகூதகமுமென விதித்தார்மேலோர், —எ-து. உலகிலெத்தேசத்தின்கண்ணுஞ்சென்று, அப்பாலப்பால் தாவிநடக்கவலியுள்ள வர்க்குப் பகூதகமெனவும்பெயர்விதித்தன ரறிவிற்சிறந்தசத்துக்கள், —எ-று.

மந்தம்; விகாரம்போற் சொல்லாலும், அபிநயிப்பாலுங்காண்டலேயன்றி வேறின்மையி னதனைக்காண்பாரவரைமெய்யெனநம்பிவிடுவர், அதனாலவர்கர விற்போகநுகர்தற்கிடமுண்டாம், இதுபற்றிப்பாவி மந்தவிராகத்திற் சந்நியா சங்களொன்றும் பலித்திடாதென்றார். மீண்டுமவ்வூர்களிற் செல்லாவண்ணந் தினமொன்றிற்கேழூர் சுற்றலென்னுமிதியிருப்பதாற் சகங்களெங்குமேவிநட ந்திடத் திடமுள்ளவர்க்குப்பகூதகமெனவும், அங்ஙனநடக்கத்திடமற்றவர்க்குக் குடிசகமெனவும் பெயர்வந்தமைகாண்க. இங்ஙனஞ் சுற்றல்பற்றனுகாமைக்கு.

(க-து.) மந்தவிராகசந்நியாசங்கள் பயலின்றெனவும், தீவிரவிராகப்பாகு பாடாகிய விரண்டுவிதசந்நியாசங்களினியெனவுங்கூறியதென்பது.

அ - கை.

[தீவிரதரவிராகப்பாகுபாடாகிய விரண்டுவிதசந்நியாசநிலைக ளினியெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

161. இருவகைதீவிரதரத்து மம்சனென்றும் பரமாம்ச னென்றுஞ் சொல்வார். வருமம்ச னுக்குமுத்தி சத்தியலோ கத்தன்றி வாராதென்பார் பரமாமச னுக்குமுத்தி யிவ்வுலகின் ஞானத்தாற் பலிக்குமென்பார், திரமருவும் பரமாம்சன்றானுமிரு வகையாகுஞ் செப்பக்கேளாய்.

(இ-ள்.) இருவகை தீவிரதரத்துமம்ச னென்றும் பரமாம்சனென்றுஞ் சொல்வார், —எ-து தீவிரதரமிருவகைப்படும். அங்ஙனமாயதீவிரதரத்துமவ்விரு வகையையும், அம்சனென்றும் பரமாம்சனென்றுஞ் சத்துக்கள்சொல்வார்கள் வருமம்சனுக்குமுத்தி சத்தியலோகத்தன்றி வாராதென்பார் —எ-து. சந்நியாச விதி வழுவாதுநடந்தவருமம்சசந்நியாசிக்கு யிம்மையில்வராதென்று சொல் வார்கள்: —பரமாம்சனுக்குமுத்தி யிவ்வுலகில் ஞானத்தாற் பலிக்குமென்பார், — எ-து. பரமாம்சனுக்குமோட்சமானது, இம்மையிற்றானே ஞானத்தாற் கிடைக் குமென்று சொல்வார்கள்: — திரமருவும்பரமாம்சன்றானு மிருவகையாகுஞ் செப்பக்கேளாம், —எ-து. நிலைபெற்ற பரமாம்சசந்நியாசனுமிருவகைப்படு வன், அவற்றையாஞ் சொல்லக்கேளுதி, —எ-று.

வருமென்பதினால், சந்நியாசநூல்களின் விதிவழுவாது நடந்தவருமென் றும்.

(க-து.) தீவிரதரத்தினிருவகை சந்நியாசநிலைகளினியவென்பது. (கசுக)

[பரமாம்சமிருவகையாமெனலை யிக்கவியிற்கூறுகின்றார்.]

162. சிஞ்ஞாசு ஞானவா னென்றிரண்டு பேர்களவ ரிற்சிஞ் ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்மூன் மூன்றுபூமியுண்டாக்கும் விவேகி யானேன், சுஞ்ஞான வானென்போன் சீவன்மூத்தி யடைந்திருக்குந் தூய மேலோ, னஞ்ஞான மகலுமந்தச் சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய்.

(இ-ள்) சிஞ்ஞாசுஞானவானென்றிரண்டுபேர்களவரில்,—எ-து. மேற்பர மாம்சசந்நியாசனிருவகையா வனென்றார் அவை, சிஞ்ஞாசெனவும், சுஞ்ஞான வானெனவும்பெயரன. அப்பெயரையுடைய சந்நியாசிகளிருவரில்:—சிஞ்ஞாசு மெய்ஞ்ஞானபூமியின் மூன்மூன்றுபூமியுண்டாக்கும் விவேகியானேன்,—எ-து. சிஞ்ஞாசென்போன் மெய்ஞ்ஞானபூமியேழனுள், முதலிலுள்ள மூன்றுபூமி யுண்டாக்கின்ற விவேகவடிவானவன்:—சுஞ்ஞானவானென்போன் சீவன்முத் தியடைந்திருக்குந்தூயமேலோன்,—எ - து. சுஞ்ஞானவானென்பவன் சீவன் மூத்தி நிலையையடைந்த பரிசுத்த நெறியிற்சிறந்தவன்:—அஞ்ஞானமகலு மந் தச்சிஞ்ஞாசு மிருவகையா மதுவுங் கேளாய்,—எ-து, அஞ்ஞானநீங்கத்தக்க அந்தச் சிஞ்ஞா சென்போனு மிருவகையாவன், அதனையும் யாங் கூறக்கே ளாஇ,—எ-று.

சுஞ்ஞானவானென்பது, ஞானவானென்றிருத்தல் முதற்குறை. சிஞ்ஞாசு மென்பதிலும்மை, எதிரதுதழீ இயவெச்சவும்மை.

(கு-து.) பரமாம்சனிருவகைசந்நியாசநிலை யினையவவென்பது (உசுஙு)

அ - கை.

[சிஞ்ஞாசுவினிருவகைநிலையு மினையவென யிக்கவியிற்கூறுகின்றார்.]

163. பந்தமனை துறந்துசில ரதிகளா யிருந்தடைவார் பரமஞான, மந்தணர்மன் னவர்வணிகர் சூத்திரரா யிருந்து சில ரடைவர் ஞான, மிந்தவகை சாத்திரத்து மூலகத்து நடப்பதுங் கண்டிருந்து மைந்தா, சிந்தனையின் மயக்கமென்ன சுருதியுத்தி யனுபவத்தாற் றெளிந் திடாயே.

(இ-ள்.) பந்தமனைதுறந்து சிலரதிகளா யிருந்தடைவர் பரமஞானம்,— எ-து. சிலர் பந்தத்துக்கிடமாயுள்ள மனைவியாதிகளைத் துறந்துவிட்டுச் சந்நி யாசிகளாயிருந்து பிரமஞானத்தையடைவார்கள்:—அந்தணர் மன்னவர்வணிகர் சூத்திரராயிருந்து சிலரடைவர்ஞானம்,—எ-து. சிலர் பிராமணராயும், அரச ராயும், வைசியராயும், சூத்திரராயுமிருந்துண்மைஞானத்தையடைவார்கள்:— இந்தவகைசாத்திரத்துமூலகத்து நடப்பதுகண் டிருந்துமைந்தா,—எ-து. சற்புத் திரா! இவ்வண்ணஞ் சாஸ்திரங்களிற் சொல்லியிருப்பதையும். உலகத்திற் சாதாரணமா நடந்துவருவதையும் பிரத்தியட்சமாகக் கண்டிருந்தும்:—சிந்தனை

யில்மயக்கமென்ன சுருதியுத்தியனுபவத்தாற்றெளிந்திடாயே,—எ-து. மனதி லின்னுமையமென்னையுளது. உளதேல், அதனையு மிவ்வண்ணஞ சுருதி, யுத்தி, அனுபவத்தால்விசாரித்துத்தெளிதி,—எ-று.

சாத்திரம், சுருதிப்பிரமாணம். உலகத்துநடப்பது, பிரத்தியட்சப்பிரமா ணம். சிஞ்ஞாசென்பவனிருவகைநிலையாவது ; இல்லறம், துறவறமென்பன: அவை ; முதலடியால் துறவறமும், இரண்டாமடியாலில்லறமுங்காணப்படும்.

(க-து.) சிஞ்ஞாசுவினிலையில்லறந்துறவறமாமென்பது. இதனால், இல்லறத் திலேனுந் துறவறத்திலேனும் ஞானமமையலாமென்றுயிற்று. இவ்விரண்ட றத்தும்பலரென்னது சிலரென்றது, விராகத்தைக்காட்டற்கென்க. (கசுஉ)

அ - கை.

[முன்னர் வித்தியானந்தத்தைப்பற்றி நூற்றறுபத்துகாலாங்கவிமுதல்நூற்றெழு பத்தேழாங் கவிவரையினுஞ் சொல்லுதமென்றனமே அதனை யிக்கவிமு தல் பதினெழுகவிவரையினும் விளக்குவான்வேண்டி, அகம்பிரமமெ ன்பதில்; அகமென்பது, நான். பிரமமென்பது, சிவம். இவ்விரு வகையும் ஞானத்தையன்றியின்மையின், நானேசிவமெ னலையிக்கவியிற்கூறுகின்றார்.]

164. பிறந்ததுண்டாலு லன்றே பிறகுசா வதுதா னுண்டாம்
பிறந்ததே யிலலை யென்னும் பிரமமா வதுவு நானே
பிறந்தது நானன் றாகிற் பிரமமென் றந்த நானே
பிறந்தது மிறந்த தந்தப் பிரமமா நானேநானே.

(இ-ள்) பிறந்ததுண்டாலு லன்றே பிறகுசாவதுதானுண்டாம்,—எ-து நானென்னும்பொருள் யாதோ அதுபிறந்ததுண்டாயிருக்குமாலுலல்லவா பிறகு சாவதென்பதுமுண்டாயிருககலாம். நானெனலைப்பற்றியிதுகாறுங்கூறிவந்ததி லில்லாமையின்:—பிறந்தேயில்லை யென்னும் பிரமம்மாவதுநானே,—எ-து. என்னைப்போலப்பிறந்தேயில்லை யென்னத்தக்க பிரமமென்பதும் நானேயாம் பிறந்தது நானன்றாகிற் பிரமமென்றந்தநானே,—எ-து. பிறந்தென்பது நானல்ல லையின், நானேபிரமமென்றது மந்தநான்தான்:—பிறந்ததுமிறந்ததந்தப்பிரமமா நானேநானே,—எ-து. ஆயின், பிறந்ததுபோலு மிறந்ததுபோலுங் காணப்படு வதுமந்தப்பிரமமாகிய நானே நானலதுவேறுளதோ, இல்லையே,—எ-று.

நானேயென்பதிலே காரமீற்றசை. நானென்னும்பொருள் பிறந்தாலன் றேசாகலாம், இல்லையே. இதுபோலப் பிரமமென்னும்பொருளும் பிறந்தா லன்றே சாகலாம், இல்லையே. பொருளொன்று சொல்லிரண்டு. அப்போ தொருபொருள்குறித்தபலசொல். ஆகவே, எவ்வாறிரண்டென்னலாம்? அந்த வொருபொருளாவது ஞானம். ஆயின், சிற்றறிவு பேரறிவென்னற்கையுவா னேன் ? உபாதிகுணங்களேயேயறிவாகக் கோடலினுலும், அவ்வுபாதிகுணங் கள் சமஷ்டிவியஷ்டியாகக்காண்டலானும், இவற்றைப்பற்றிய விசாரம்சற்று மில்லாதகினுனும், பிறர்சொல்லுங் கல்விச்செருக்காலெனக்குத் தெரியாதாலி

வென்னு மகங்குன்றுமையானும், இஃதென்றுமாதலினுனுமென்க. சமஷ்டி வியஷ்டியாகக் காணப்பட்டுள்ள வுபாதிகுணங்கள் ஞானத்தின்பிரதிபலனமே யன்றிஞானமல்ல. ஆதலின், ஞானத்தைத்தவிரவுயிர்பரமிரண்டில்லை இதற்கு தாரணம். ''விண்ணுருவமீசனென்பார் வேற்றுருவஞ்சீவனென்பார் கண்ணு மிரவியும்போற்காணென்பார், திண்ணமதாய், அத்துவிதமாகாதவை யிரண்டுமா காத, சித்துருவந்தானேசிவ'' மென்பதினுற்காண்க.சிதெனலும,ஞானமெனலு மொருபொருட்கிளவி. நானெனக் கொள்ளாத பரமுமுயிருமில்லை, அங்ஙன கொள்வதுபாதிகுணமன்று, இவ்விரண்டுமோர்முதலன்று,அந்தமுதல்; அறிவை யன்றியில்லை ஆதலி, னேபிரமமெனப்படும். இவ்விருவகைநானெனல்; அறி வாதலால், நானேபிரமம், பிரமமேநானெனற்கிழுக்கென்னை? இன்னும்பிறப் பிறப்பு, உபாதிகட்கன்றி யறிவுக்கெனச்சுருதியுத்தியனுபவம் யாதானுமுள தோ? இல்லையெயிதனலுமுணர்க. ''உடலுற்றல் யோனியுயிருற்றலெங்கே, உடலுயிர்சித்துசடமொன்றே'' அன்றேயென்பதினுனுங்காண்க. இவற்றையு மூணராதுமறுத்தலென்னுணர்வு. அந்தர்முகநோக்கிற்குடன்படாதார்க் கென் சொல்லினுமென்பயன். பிரமமாவது நானேயென்னுது, பிரமாமவதுவுமென வும்மைகொடுத்தலினலன்றே, நானென்னும்பொருள் பிறந்தாலன்றே விறக்க ல்லாம், என வுரைகொண்டாம் இங்ஙனமாதலிலப்பற்றிப் பிறந்ததேயில்லையென் னும் பிரமமாவதுவு நானேயெனவும், அதுபோலப் பிறந்ததும்நானென்னும் பொருளன்றுமையின் நானேபிரமமெனக்கொண்டது மந்தநானே யென்பது தோன்றப், பிறந்ததுநானன்றுகிற பிரமமென்றந்தநானேயெனவும், இறந்தது மென்றவும்மைதொக்கது பிறந்ததுபோலவுமிற்ந்ததுபோலவுங் காணப்படுதல், நானுகையால், பிறந்ததுமிறந்ததந்தம் பிரமமா நானே நானெனவுங் கூறினுர் பிரமநானேநானேயென்னுது, பிரமமா நானேநானேயென்றது; நானேபிரமம் பிரமமேநானென்னு மைக்கியங்காட்டற்கென்க. அறிவேபரமுமுயிருமெனற் குதாரணம். வேதாந்தசூடாமணி, ''இகலிலாவறிவுமாத்திரமாகிநின்ற விலக்கிய மாம்பிரமகூடஸ்சவுயிர்கொள்ளில், புகரிலாவது விதுவேயிதுவதுவேயென்னப் பொருந்துதாதான்மியம்வந்துறுமெனவேயறிக.'' என்பதினுற்காண்க .உற்றுக் காணுதுழி மதி மேகங்களி னுழைந்துதுழைந்து செல்வதுபோலவும், கண்டுழி யங்ஙனஞ்செல்லாது நிலையுறுவதுபோலவுங் காணப்படுமாறுபோன்று, தெளி யாதுழி, ஆன்மாவாகியநானெனலுடல் தோறுதுழைந்து பிறப்பதுபோலவும், இறப்பதுபோலவும், தெளிந்துழி யங்ஙனஞ்செல்லாது நிலையுறுவதுபோலவுங் காண்பதென்னை? ஆதலினிங்ஙனங்கூறினுரென்க.

(க-து.) இதுவித்தையானந்தமாதலினுனும், இச்சவித்தையைத்தவிரவுயிர் பரமின்றுதலினுனு மேகமென்றுரென்பது வித்தியானந்தமென்றுரயது மறுஉ. அனைத்துநானுவதுமன்றி யெனப்பொருடரலின் பிரமமாவதுவுமென்றவும்மை யிறந்ததுதழீ இப்வெச்சவும்மை. பிரமமாநானேயென்பதுருவகம். பிரமமாகிய நானேயன்றி நானென்பதுவேறின் றெனத்தோன்ற, ஈற்றில் நானேயென்றுர்: ஆதலினிதுபொருந்தும். (கசுரு)

அ - கை.

[ஞானத்தைத்தவிரப்பிரமமில்லாவாறுபோல ஞானத்தையன்றி யான்மாவின்றென விக்கவியிற்கூறுகின்றுர்.]

165. நானென்ற பிரம மான நானேநா னறியே னென்ரு
ளுனென்ப தேது பின்னே நம்மூடை புத்தி யென்ற்
ரூனது மயக்கந் தன்னிற் சாகுமே சாவா தாகி
ளுனென நிறைந்தி ருந்த ஞானமா நானே நானே

(இ-ள்) நானென்றபிரமமான நானேநானறியே னென்ரூல்,—எ - து. நானெனத்தக்கபிரமமாகியயானே யென்னேயானறிகிலனென்று வருமாயின் நானென்பதேபின்னே நம்மூடைபுத்தியென்னில்,—எ-து. அப்போது நானென் பதியாது, அதற்குத்தரமாகப்பின்னர் நமதுபுத்தியெனக்கூறின்:—தானதமயக் கந்தன்னிற் சாகுமேசாவாசாகில்,—எ-து. தானேயந்தப்பிராந்தியாதலால் தன்னி டக்கிலேயேநசிக்குமே, நசியாவிடில்:—நானெனநிறைந்திருந்த ஞானமாநானே நானே,—எ - து. அப்போதுநானுகவெங்கணுமொருபடித்தா வியாபித்துநின்ற ஞானமாகியநானெனலேநானுகமுடியு'ம்,—எ று.

நானேயென்பதிலே காரமீற்றசை. நானுகியபிரமம், அந்தப்பிரமமாகியநா னென வபேதங்காட்டவந்தவராதலின், நானென்றபிரமமானநானேயெனவும், அங்ஙனமபேதமானநானே யென்னேயானறிகில னென்பார், நானேநானறியே னெனவும், என்னேயானறிகில னென்பதுமூடம். அதுதன்னேவிடவேறன்ரு தலின் தன்னினசிக்குமேயென்பார், மயக்கந்தன்னிற்சாகுமேயெனவும், மயக்கம் விகற்பமாதலால் தானுகாது, எங்ஙனந்தன்னில்சாகுமென்பார், சாகாதாகிலென வும், நசியாதிருத்தற்குவேறிடமின்மையி னசிக்குமென்பதுதோன்ற நானென நிறைந்திருந்தஞானமெனவும், அந்தஞானத்தைத் தவிரநானெனலின்மையின், ஞானமாநானேநானெனவுங்கூறினர்.

(க-து.) ஞானமேபிரமமும்நானுமாதலின், ஏகமாயிற்றென்பது. அறிவை யன்றிப்பிரம மெனலும், கூடஸ்தனெனலுஞ் சொன்மாத்திரம், தோற்றன் மாத்திரமுமாதலாற் கற்பிதமெனக்குறிக்க விங்ஙனங்கூறினரென்க. அறிவை யன்றியுயிர்பரமென லில்லையென வெங்கேவிளங்கிற்றே, அங்கேயதுவேயா னந்தமாதலன்றி வேறின்மையின் வித்தையானந்தமெனத்தானே யமையப்பெற் ரும் இஃதனுபவமொழி நம்மூடையவென்பது, கடைக்குறை. நானென்ற பிரமம், பிரமமானநான், என்னுமிரண்டும், இருபெயரொட்டுப்பண்புத்தொகை யெனில், உருபுவிரித்திருப்பதாற்கூடாது. உருவகமெனினமையும், உபமான வுபமேயபேதஞ்சற்றுமின்மையின். என்னே, ''உவமையும்பொருளும்வேற்று மையொழிவித்தொன்றெனமாட்டினஃதுருவகமாகும்'' என்பதனுறகாண்க. ()

அ - கை.

[அறிவேயான்மாவாதலி னவ்வான்மாவேபரிபூரணமும், ஆனந் தமுமாமெனலை யிக்கவியிற்கூறுகின்ரூர்.

166. நிறைந்தவா றெந்த வாறு நிலேதெரிந் திலனென் ரூயே
லறிந்தாஞ் சுழுத்தி தன்னி லாநந்த மதுவே யாகுங்
குறைந்ததுக் கானந் தந்தான் குவலயந் தன்னி லில்லை
நிறைந்தசே யிந்த வாத்மா நிதானமிவ் வறிவுதானே.

(இ-ள்.) நிறைந்தவாறெந்தவாறுநிலைதெரிந்திலனென்றுயேல், எ-து. யான் பரிபூரணமாயவாறெவ்வாறு, அந்நிலையையென்பாற் கண்டிலனெனக் கூறுவையாயின்:—அறிந்தாஞ்சுழுத்தி தன்னிலானந்தமதுவே யாகும்,—எ-து. அறிந்துகொண்டிருப்பதாகிய நனவிற்சுழுத்தியிலிருப்ப தானந்தமாதலின், அவ்வானந்தமேபரிபூரணமாம்:—குறைந்ததுக்கானந்தந்தான்குவலயந்தன்னிலில்லை, எ-து. ஆயி னேகதேசமாகிய சுகத்துக்கமோ, நீபூமியிலிருந்து மஃதுனக்கில்லை நிறைந்ததேயிந்தவான்மா நிதானமிவ்வறிவுதானே,—எ-து. ஆதலிவ்வான்மாவே பரிபூரணம், அப்பரிபூரணமே, இந்தவறிவு,—எ-று.

நிதானம், சாய்வின்மை. எனவே, குறைவின்மையாயிற்று. ஆகவே, பரிபூரணமெனக்கொண்டாம். சுழுத்தியென்ற தறிந்ததாஞ் சுழுந்தியென்றமையின், அறிந்துகொண்டிருப்பதாகிய சுழுத்தியென்றுயிற்று. ஆகவே, மூட சுழுத்தியன்றென விலக்கினனவிற்சுழுத்தியெனப்பெறாரும். அந்தநனவிற்சுழுத்தி பரிபூரணானந்தமாதலின், ஆனந்தமதுவேயாகுமெனவும், இந்நிலையையுடையையாதலி னிவ்வுலகிலிருந்து முனக்கின்பதுன்பமிலலை மற்றவர்களுக்கென்பார், குறைந்ததுக்கானந்தந்தான் குவலயந்தன்னி லில்லையெனவும், விசாரிதத்தெளியினுந்தெளிபாவிடினு மான்மாவியல்பாகவே பரிபூரணானந்தமேயென்பார், நிறைந்ததேயிந்த வான்மாவெனவும் குறைவின்றி நிறைந்துளள விந்தச் சைதன்யமேயென்பார், நிதானமிவ்வறிவுதானே யெனவுங் கூறியவாறுகாண்க. சில பிரதிகள், குறைந்ததற் கானந்தந்தானென்றிருக்கின்றன.

(க-து.) ஆன்மாவித்தையானந்தமேயென்றுரைத்தது. வித்தையானந்தத்தினிலைமையினையதேயென்க. முன்கவியில்பிரமமாநானென்றது ; பிரமமேகூடஸ்தனெனவும், பின்கவியில் நானென்றபிரமமென்றது ; கூடஸ்தனேபிரமமெனவும்பொருள்படற்கென்க. நானெனல், அறிவு, பிரமமெனல், சுகம். எனவே, சுகமேயறிவு. அறிவேசுகம். என்றுயிற்று. ஆகவே சுகம் வேண்டியுலவுதுயிர்களறிவாதலால், அலைவையொழித்தற் கிவ்வுனங்கூறியதெனப்பெற்றாம். ஆதிகாரணமெனப்பொருளிருப்பினு மிங்கேநிதானமென்பது, குறைவின்மை, அறிந்தாஞ்சுழுத்தி யென்றதனால், அறியாத சுழுத்திதுறக்கின்றது. இதிலு முள்ளசுகப்பெருக்கு, ஆன்மாவேயெனக்காட்ட நனவிற்சுழுத்திகூறினரென்க. இனசுழுத்தி யான்மாவையன்றியுளதேனனவிற்சுழுத்தியு மிருக்கலாம். ()

அ-கை.

[தனியேயென்னையான்விசாரிக்குமிடத்தில் வித்தையானந்தமாகக்கண்டனனென மாணாக்கன்கூறியதாக விக்கவியிற்கூறுகின்றார்]

167. மனத்தினு லெண்ணித் தானே வந்ததில் வுலக மாகு
நினைததிடி லனேக லோக நிற்பதிவ் வறிவி லன்றே
வனைத்தையுங் கடந்தப் பாலு மந்தமற் றறிவி தாமென்
றெனைத்தனி விசாரித் திட்டா லேகமாய் நிறைந்தோ னனே.

(இ-ள்.) மனத்தினுலெண்ணித்தானே வந்ததிவ்வுலகமாகும், எ - து இவ்வுலகமானது மனோசங்கற்பத்தினுலேதானே வந்ததாகக்காண்கின்றது:— (எங்ஙனமெனில்) நினைத்திடிலனேகலோக நிற்பதிவ்வறிவிலன்றே, எ-து எண்ணளவைகளாலும், ஊக்கத்தாலும், அனுபவத்தாலு மொருங்கேநின்று சிந்திக்குமிடத்தில், இவ்வுலகமாத்திரமன்று, இன்னுமிவைபோல்வனவாகக் கூறப்படு மகனேகலோகங்களும் பதவிகளுமிருப்பது நாமாகிய விவ்வறிவிலல்லவா:— அனேத்துங்கடந்தப்பாலு மந்தமற்றறிவிதாமென் றெனேத்தனி விசாரித்திட்டா லோகமாநிறைந்தோனே, எ-து. இஃதன்றியும், இவ்வறிவிலுள்ள மூன்கூறியவனத்தையு மொவ்வொன்றாக நியதிகளோந் தவற்றினின்று நீங்கியவற்றிற்கப்பாலும் யாதளதென் றெனேத்தனியாக விசாரிக்குமிடத்தில், மூடிவின்றி விளங்காநின்ற விவ்வறிவாகவே யெஞ்ஞான்காண்கின்றது, ஆதலின் பரிபூரணமாக வெங்கணுநிறைந்து விளங்குவோன் வேறல்லன் யானே,— எ-று.

மண்ணுதிகட்குச் சுயம்புவடிவம் யாதெனத் தனித்தனிப்பேதவாதமாறுனும், அபேதவாதமைந்தானு மையந்திரிபறச்சோதிக்குங்கால் யாது மங்ஙனங் காணுது தோற்றன்மாத்திரமாகக் காண்பதென்னை? காண்பதாலதனைச்சுயம்பாகப் பார்ப்பதென்னை? இவ்விருவகையாய நிலையும்விளைவது மனத்தாலோ, வேறுலோ? மனத்தாலெனின், அப்போது மனதையன்றி யுலகம் மெய்போலத் தோற்றுவதும், பொய்போலத்தோற்றுவதுமவேறன்றே, வெறுமெனின், யாதோவிவ்விருவகையாகக்காண்பது? உலகமெனின். விசாரணைமூடிவி லுலகமென்னுநாமரூபமெங்கே? யாதபொய்யாகக் காணப்படுகின்றது. நினைவதானெனில், உலகம்போல் மெய்யாகக்காணப்படுவதும், பொய்யாகக்காணப்படுவதும், அத்தினையவ்வாறுணர்வதுமவேறன்றே. நினைவாகிய மனோசங்கற்பமாதலின், மனத்தினுலெண்ணத்தானே வந்ததிவ்வுலகமாகுமெனவும், அங்ஙனநியதிகளோந் தவிடத்தில்லாமற்போன விவ்வுலகமாதியனேக லோகங்களு மெங்கேயெனச் சுவானுபவத்தாலாராயும்போது. அனேத்துஞ் சங்கற்பவடிவமாக யாஞ்கியவறிவிற்கண்டனனென்றனென்பார், நினைத்திடிலுலகமெல்லா நிற்பதிவ்வறிவிலன்றேவெனவும், அங்ஙனஞ் சங்கற்பவடிவமாக அவையெங்ஙன மிருக்கின்றனவெனத் தனித்தனியொவ்வொன்றாக ஆராயுமிடத்தும், அப்பாற்கடந் தாராயுமிடத்து மிவ்வறிவாகவே யனேத்துமுடிகின்றனவாதலின். அனேத்தையுங்கடந்தப்பாலு மந்தமற்றறிவிதாமெனவும், சமஸ்தமுமறிவாகமுடியும்போது யானெனத்தனித்துநின் றென்னே விசாரிப்புழி யகண் — பரிபூரணமாகிய விவ்வறிவைத் தவிரவில்லையாகமுடிதலின், எனேத்தனிவிசாரித்திட்டா லேகமாய்நிறைந்தோனுனே யெனவுங் கூறக்கிடந்ததென்க.

(க-து.) அறிவேயானெனத் தெரிவிக்க விங்ஙனங்கூறியதென்பது. இதுவும் வித்தையானந்தமென்க. (கசுஎ)

அ - கை.

[என்னேத்தவிரக் கற்பிதங்களில்லாவிடத் தெங்ஙனம் பரிபூரணமாக விளங்குவதெனின், மூன்றவஸ்தாவயத்தாகா தறிவாகவிளங்கினாங்ஙனமாவையென விக்கவியிற்கூறுகின்றார்.]

168 அந்தவா றிருந்து கொண்டே யானந்த மனுப விக்க
வெந்தவா றிருந்து கொண்டா லெனக்கிது தெரியு மென்னி
லிந்தமூன் றவத்தை தம்மு ளெழுந்திடும் விருத்தி நீக்கி
லந்தவா றிருந்து நீயு மானந்தமடையலா மே.

(இ-ள்.) அந்தவாறிருந்துகொண்டே யானந்தமனுபவிக்க, எ-து. என் னேத்தவிரச் சங்கற்பங்களில்லாவிடத்து, அங்ஙனஞ்சங்கற்ப மயமாக நின்று கொண்டு யானெங்ஙன மான்மானந்தத்தைப் பரிபூரணமாகவனுபவிப்பது, கூடாமையால்:—எந்தவாறிருந்துகொண்டா லெனக்கிதுதெரியுமெனில், எ-து. யானெவ்வண்ணமாய நிலையினின்றுகொண்டா லெனக்கிந்தப் பரிபூரணமாய நிலை விளங்குமெனக்கேட்பையாயின்:—இந்தமூன்றவத்தை தம்முளெழுந்தி டும் விருத்திநீக்கில் எ-து. இந்தமூன்றவத்தையிலுமுதிக்கு மனோவிருத்தியைத் தனதுசொரூபமாகக்கண்டு நீக்கினலப்போதஃதுனக்கு விளங்கும்:— ஆதலின்) அந்தவாறிருந்துநீயு மானந்தமடையலாமே, எ-து. நீயுமவ்வண்ணமாகவிருந்து, அந்தப்பரிபூரணானந்தத்தை யனுபவிக்கலாமே யிதிலையமென்னை—எ-று.

அவஸ்தாத்தையமும், விர்த்தித்தையமும், தனது ஞெப்திஸ்புரிப்பையன்றி யில்லையெனக்காணத் தானேதனது ஞெப்தியாகக்கையும், கைந்தவாறிருக்க வேண்டும், இருக்கின், பரிபூரணானந்தோதயமாம் அவ்வுதயமே நீயாதலினு னும், உன்னையன்றியில்லாததினுனு மதுநீயாவையென்பார், இந்தமூன்றவத் தைதம்மு ளெழுந்திடுமிருத்திநீக்கி லந்தவாறிருந்துநீயு மானந்தமடையலாமே யென்றார். அவ்வாறிருந்தோரெல்லா மானந்த மடைந்தாற்போல, நீயுமானந்த மடையலாமென்றகலின், நீயுமென்பதிலுமமை, இதந்ததுதழீஇய வெச்சவும் மை, விருத்திநீக்கம், சிற்பிரகாசமாகக்கரைதல். எனவே, விதையானந்தமெ னக் குறிக்கப்பெற்றும்,

(க-து.) சிற்பிரகாசமாகக்காணி லங்ஙனே விருத்தியதுவாகக்கைய நீயது வாவையென்பது வேறுபாயமெங்ஙனமின்றென்க. விருத்திகளுன்னை யன்றி யில்லையாயினு முனது சிற்பிரகாசமாகக்காணி னீயே பரிபூரணானந்தமாவை யென்க. (கசுஅ)

அ - கை க.

[வாசனைவிருத்திகளைக் களைவதெவ்வாறென்றவினாவுக்கு விடை யிக்கவியிற் கூறுகின்றார்.]

169. வாதனை வயத்தி னாலே வருகிற விருத்தி யெல்லா
மேதினு லடக்க லாகு மென்றுதான் விசாரஞ் செய்யின்
போதமாமிராசன் றூயப் புந்தியைப் புலன்க ளெல்லாந்
தாதரா யிருக்கப் பெற்றுற் சகலமு மடங்குந் தானே.

(இ-ள்.) வாதனைவயத்தினாலே வருகிறவிருத்தியெல்லாமேதினுலடக்கலாகு மென்றுதான் விசாரஞ்செய்யில்,—எ-து. பூர்வவாசனை காரணமாகவருகிற மனோவிருத்தியனைத்தையும் யாதுகாரணமாக அடக்கக்கூடுமென் றென்னை

விசாரிப்பையாயின்: —போதமாமிராசன்றனைப்புந்தியைப்புலன்க ளெல்லாந் தாதராயிருக்கப்பெற்றுச் சகலமுமடங்குந்தானே,—எ-து. அறிவையரசனுக்கி யவ்வரசனே தானுகிப் புத்திமுதலிய வகக்காரண புறக்காரணங்களனைத்தையு மடிமைகளாக்கின், இவ்விருகாரணங்களுந் தலையெடுக்காதடங்கும்,—எ-று.

முன்னனுபவித்த பிரியங்காரணமாக வெழுமனே விருத்தியை, வாதனு வயத்தினுலேவருகிற விருத்தியெனவும். தானுகிற ஞானப்பிரகாசத்தைத்தலை யார்க்கொள்ள,ஏனையவிருவகைகாரணங்களுமென்செய்யும்? அடங்குமாசலின், போதமா மிராசன்றனைப்புந்தியைப் புலன்களெல்லாந் தாதராயிருக்கப்பெற் றுச் சகலமு மடங்குந்தானே யெனவுங் கூறியவாறுகாண்க. அரசனுக்கினை செல்லுவதிலும், அரசனேசெல்லிற்குடிகண்டுங்கும், இதுபற்றியிங்ஙனங்கூறி யதென்க.

(க-து.) வாசனாவிருத்திகளேயடக்கு முபாயமினையதென்பது. போதமா மிராசனுக்கினையெனப்பிறிதிகளுமுண்டு. (கசுக)

அ - கை.

[விருத்திகளேயடக்க யிங்ஙனம்வலியின்றியவிடத்தில் மற்றிரண்டுபாயத் தாலேனு மவற்றையடக்குதியெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

170 விருத்திக ளடக்க வின்னம் விஞ்ஞதமாம் யோகத் தாலே
திருத்திப்பா லூது மூச்சைக் சுகமுட னடக்கி னிற்கும்
கருத்ததற் கில்லை யெனினிற் காரண சரீர மாகும்
பெருத்ததோ ரவித்தை தன்னைப் பிடுங்கிடி லடங்குந் தானே.

(இ-ள்.) விருத்திகளடக் கவின்னம் விஞ்ஞதமாம்யோகத்தாலே திருத்தி போலூதுமூச்சை சுகமுடனடக்கினிற்கும்,—எ-து. விருத்திகளேயடக்குவதற் கின்னுமுபாயங்களுள. அவற்றுளொன்று, உலகத்திற்குவிஞ்ஞதமாகக் காணப் பட்ட கிரியாயோகங்கா ணமாக வுலக்களத்தின்கண் திருத்திபோலூதத்தக்க வுசுவாசநிசுவாசமென்னுமூச்சைத் தக்கமுறைப்படி பிரியங்கொண்டடக்கில் விருத்திகள்தாமேநின்றுவிடும்:—கருத்ததற்கிலையென்னிற் காரணசரீரமாகும் பெருத்ததோரவித்தைதன்னைப் பிடுங்கிடிலடங்குந்தானே,—எ-து. அதுசெய் தற்குச்சற்றுங்கருத்தில்லையாயின் மற்றொன்றுகேளுஇ, காரணசரீரமாகிறமிக வும்பரித்துள்ள வொப்பற்றவவித்தையையாத்திரம் வேரறப்பிடுங்கிவிடி லந்த விருத்திகள் தாமேயடங்கிவிடும்,—எ-று.

உபாயங்களுள, அவற்றுளொன்றென்பது ; இசையெச்சம். பார்ப்பவர்க் குத்தறிபோற்காண்டலின், விஞ்ஞதமாம் யோகத்தாலெனவும், மூச்சையடக் கத்தக்கவாறடக்க வுடலந் தறிபோலாம். ஆகவே, கன்மேந்திரியங்கணிற்கும். அதுநிற்க, ஞானேந்திரியங்க ணிற்கும். அதுநிற்க, மனமாதிய வகக்காரணங்க ளொன்றன்பின் ஞென்றகநிற்கும். அதுநிற்க இச்சாஞானக் கிரியைகளாகிற விருத்திகள்தாமே நின்றுவிடும். இதுபற்றித்திருத்தி போலூதுமூச்சைச் சுக முடனடக்கினிற்குமெனவும், வித்தை, அறிவு. அவித்தை, அறியாமை. இத னைப்பிடுங்கிடல், பொருளல்லவற்றைப் பொருளாகக்கோடல்தவிர்தலே. இங்ங

னஞ்செய்யில் விருத்திகள்சாமேநசிக்குமாதலின், காரணசரீரமாகும்பெருத்த தோரவித்தைதன்னைப் பிடுங்கிடிலடங்குந்தானே யெனவும்கூறியவாறுகாண்க.

(க - து.) வீருத்திகளையடக்கத்கு பாயமினையதென்பது. அவித்தைகளே வதிலு முபாயம்வேறுண்டெனலெல்லா மறிவீனவசனமென்றுணர்க. கருத்த தற்கில்லையாகுமெனக் சிலபிறிதிகளிருக்கின்றன. (கஎ0)

அ - னை க.

[காரணசரீரத்தைக்களையுமாறிங்ஙனமென விக்கவியிற் கூறுகின்றார்.]

171. காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றோதி
லாரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்திலுன்னிற்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்றுமென்னுந்
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே.

(இ - ள்.) காரணசரீரந்தன்னைக் களைவதெவ்வா றென்றோதில்,—எ-து. தன்னைமறந்தமதியாகிய வறியாமையை வேரோடுகளையுமாறெங்ஙனமெனக் கேட்பையாயின்:—ஆரணம்பொய்சொல்லாதே யதன்பொருளகத்திலுன்னில், எ-து. வேதம்பொய்சொல்லாதாதலின், அதனதுமகாவாக்கியார்த்தத்தை விடாதகத்திற்கண்டுமனனிக்கவேண்டும், அங்ஙனம் விடாதுமனனிக்கில்:—பூரணமாகு மென்மேற்புவனங்கடோற்றுமென்னும் தாரணைவந்ததாகில்தரித்திடுமவித்தை யெங்கே,—எ-து. பரிபூரணமாகவிளங்குதும், அங்ஙனம் அங்ஙனம் விளங்கில் புறம்பிலல்லாமல் சகலசராசரங்களும், அண்டாண்டகோடிகளும், பரிபூரணமானவெனதகவியாபகத்தில், தானேதோற்றுமென்று சொல்லத்தக்க திடசிந்தை தானேவரும். அங்ஙனம்வருமாகில், அனுகியாகவறியாவதுவந்தகத்தில் தரித்திருக்கிறவவித்தையாகிய காரணசரீரமெப்படி தங்கியிருக்கும், எ-று.

எம்மசத்தருந்தங்கள் தங்கள்வேதம்பொய்சொல்லாதென்னுமாறுபோன்றிவருஞ்சொன்ன லிதிலென்சிறப்பெனின், தினைபாலிடமாயுமன்றுயர்நிற்ப தெவ்வறிவோ; அவ்வறிவை மெய்ப்பொருளென எம்மசத்தினுண்டு, இதுவே தக்கவிடையெனற்கிடையூறுளதேற் சோதனையாதிகளிற்செல்லில்தானே விடைதருமென்க. இங்கேமேலென்பது, ஓடம். தோற்றுமென்று, எனப்பாடமுமுண்டு. பூரணமாகுமென்மேற்புவனங்கடோற்றுமென்னுந்தாரணைவந்ததாகில் தரித்திடுமவித்தையெங்கேயெனக்கூறியதில் யாதுநயமெனின், யாதுஞ்சுயம்பன்றெனத் தெளிந்தவாறுகலங்காதுநிற்கின், அப்பிலுப்பெனவனைத்துங்கரைந்துசின்மாத்திரமாகும், ஆதலே நயமெனவுணர்க.

(க-து.) அவித்தாநாசதந்திரமினையதெனக் கூறியதென்பது. (கஎக)

அ - னை க.

[சர்வமுந்தானையுமன்றுயர்நிற்கதெந்தவறிவோ, அதுவே யாஞவதெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

172. அப்படி யிருக்கச் சித்த மலைதலால் விவகா ரத்தி
லெப்படி கூடு மென்னி னென்னைவிட் டொன்று மில்லை
யிப்படி கண்ட வெல்லா மென்மய மென்க ளுப்போற்
கற்பித மென்றுந் தானே காண்கின்ற சித்து நானே.

(இ-ள்.) அப்படியிருக்கச்சித்தமலைதலால் விவகாரவேளைகளிலெல்லாமன மலையுமே, அலையும்போது, இவ்வனுபவமெங்ஙனம்வாய்க்குமெனக் கேட்பையாயின்:—என்னைவிட்டொன்றுமில்லை யிப்படிகண்டவெல்லாமென்மயம்,—எ-து. விவகாரவேளையிலிங்ஙன நானுவிகாரரூபமாகக் காணப்பட்டதேகாதிப்பிரபஞ்சமனைத்தும் யானுகியசிற்பிரகாசத்தையன்றியாதொன்றுமில்லையெனவும், அவையெனது சொரூபமாமெனவும்:—என்கனுப்போற் கற்பிதமென்றுந் தானேகாண்கின்றசித்துநானே,—எ-து. எனதுசொற்பனுக்காட்சியைப்போற் கற்பனைவடிவமெனவுங் காண்கின்றதுயாதோவதுவேயறிவு,அவ்வறிவேயானெனப்படுவது,—எ-று.

(க-து.) எல்லாமாயுமல்லவாயும் விளங்குவதறிவாதலால் அவ்வறிவேயானெனத்தெளிந்துழிக் கலக்கமென்செய்யுமென்பது. (கஎஉ)

அ - கை.

[சிற்பிரகாசமேயானெனவிடாதகண்டு பலவிருத்திகள்செய்யினு மவை தன்னையணுகாவென விக்கவியிற்கூறுகின்றார்.]

173. சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதி ருந்தா
லெத்தனை யெண்ணி னுலு மெதுசெய் தாலு மென்ன
நித்திரை தெளிந்த பின்னர் நிற்கின்ற கனவைப் போல
வத்தனை யும்பொய் தானே யானந்த வடிவா நானே.

(இ-ள்.) சித்துநானிறைந்தோனென்ற திடமறவாதிருந்தா லெத்தனையெண்ணினுலு மேதுசெய்தாலுமென்ன,—எ-து. யானெனப்படுவது சைதன்யமாதலின் பரிபூரணமாகநிறைந்துள்ளோன்யானே, என்னுஞ் சுவானுபவதிடத்தை மறவாதிருக்கப்பெற்றால் எவ்வெவ்விகற்பமாக வெவ்வெவ்வண்ணநினைக்கினும், பலவேறுவிகற்பமாயுள்ள தொழில்செய்யினும் யாதிடையூறுசம்பவிக்கும்—நித்திரைதெளிந்தபின்னர் நிற்கின்றகனவைப்போல. எ-து. உறக்கந் தெளிந்தவுடன் கண்டசொப்பன மெங்ஙனங்காணுது நின்றுவிடுமாறுபோல:—அத்தனையும் பொய்தானே யானந்தவடிவாநானே, எ-து. தன்னையுள்ளவாறு தரிசிக்கவே யவ்வளவெண்ணங்களுங் கிரியைகளும் பொய்யாகவேமுடியும். முடியவே, சமஸ்தமுமானந்த வடிவாகவிளங்கும். அவ்வாறய விளக்கமேயானெனப்படுவதாம்,—எ-று.

சிற்பிரகாசமன்னியமெனக்காணுமயக்கந்தானே தவிர்ந்தயானேயென்னுந் திடஞானமுண்டாகும். உண்டாகவே, பரிபூரணநிலைதானே தனக்கமையும். அங்ஙனந்தானுயதை மறவாதிருக்கவேண்டும். மறவாதிருந்தால், யாதுநினைக்கி

னும்யாதுபுரியினு மவற்றுற்சுவானுபவத்தடையெய்தற் கிடமெங்ஙனமுண்டா மென்பார், சித்துகானிறைந்தோனென்ற திடமறவாதிருந்தா லெத்தனை பெண் ணினலு மேதுசெய்தாலு மென்னவெனவும், கனவுகாண்புரி யங்கேகானும் பிரபஞ்சமெய்போலத்தோற்றி விழித்தவுடன் பொய்யாகுமாறுபோன்று, நன விற்காணும் பிரபஞ்சம் மெய்போலத்தோற்றித் தனதெதார்த்தத்தில் விழித்த வுடன் பொய்யாகத் தோற்றலின், நித்திரைதெளிந்தபின்னர் நிற்கின்றகனவை, ப்போல வத்தனையும் பொய்தானெனெனவும், தினசுழுத்தியிற்செகந்தோற்ற மையால் துக்கநிவர்த்தியும் மக்களுனந்தப் பெருக்குமுண்டர்கு மாறுபோன்று நனவிற்சுழுத்தியில் தேகாதிபிரபஞ்சந்தோற்றுமையால் துக்கநிவர்த்தியும், அறி வானந்தப்பெருக்குமுண்டாமாகையால், ஆனந்தவடிவெனவும், அந்தமக்களுனந் தமே நனவிற் சுழுத்தியிலுகநிற்றலின் ஆனந்தவடிவுநானேயெனவுங் கூறிய வாறுகாண்க.

(கு-து.) சுத்தசைதன்யனேநானுகவிளங்கலைமறவாது விவகரிக்கில்வித்திக விருத்துஞ்சிதானந்த மாகக்கரையுமென்பது. நித்திரையுணர்ந்தபின்னரென்ப பாடமுமுண்டு. (கஎகூ)

அ - னை க.

[என்னேயானுள்ளவாறு கண்டபடியாலிப்போதுதான்கிருதார்த்த னானேனென விக்கவியிற்கூறுகின்றார்.]

174. நானென வுடலைத் தானே நம்பினே னனேக சென்ம
மீனராய்ப் பெரியோராகி யிருந்தவை யெலாமிப் போது
கானலில் வெள்ளம் போலக் கண்டுசற் குருவினு லே
நானென வென்னைத் தானே நம்பியீ டேறி னேனே.

(இ-ள்) நானெனவுடலைத்தானே னம்பினே னனேகசென்மம், எ-து. அ னேக சென்மமாகத் தேகத்தையே நானென்னத்திடமாகநம்பி நாசமானேன்:— ஈனராய்ப் பெரியோராகி யிருந்தவையெலாம், எ-து. இந்திரியமும், பலசென் மங்களிலு மறிவீனராயும், அறிவிற்சிறந்தவராயு மென்னையான்கொண்டிருந்த மயக்கங்களேயெல்லாம்:—இப்போது கானலில் வெள்ளம்போலக்கண்டு, எ-து. கானலிற்றோற்றும் பிரவாகத்தைப்போ லிப்போதையந்திரிபறக்கண்டு:—சற் குருவினுலே நானெனவென்னைத்தானே நம்பியீடேறினேனே, எ-து. சற்குரு நாதனருளால் யாதுண்மைவடிவமெனத் தெளிந்ததோவதுவே நானெனக்கோ டலிலையமின்றுதலி லங்ஙனமாயவென்னையே யான்னைநம்பிப்பிழைத்தனன். எ-று.

கானிலில்வெள்ளம்; நடுப்பகலில் சூரியகாந்தி யாற்றுவெள்ளம்போற் கா ண்பது. நானெனவுடலைக் கோடலும் பெருமை சிறுமைகளாலும், கானல் வெள்ளம்போற்காண்டலி னிவ்வுவமை வேண்டியவாறுயிற்று, ஐம்பெரும்பூ தாம்ச சையோகத்தையன்றி யுடலெனத் தோற்றற்கிடமின்று. இங்ஙனமுய தை யானெனக்கோடலாதி யிவ்வுவமையை யேற்றற்கிடையுறென்னை? கான லேயன்றி மெய்யா வெள்ளமுண்டாயின், தனதுவிகற்பத்தையன்றி மெய்யாத் தேகாதியுண்டா யிருக்கட்டும். அதுவில்லேயெனின், இதுவுமங்ஙனமாகாதோ?

மூன்னருடலே நானெனநம்பிநம்பி மோசம்போனேனென்றதனால் இப்போது னர்வை நானெனக்கண்டுகண்டு கிர்தார்த்தனேனென்பது நயமாகக்காணப் பட்டது. இவ்விருவகையியலு மூடந்தெளிவைக்காட்டநின்றது. எனவே மூட த்தில்தெளிவும். தெளிவில்மூடமு மொன்றிலொன்றில்லாவாறுபோலத் தானி ல்லையோ, இருப்பதுபற்றி யப்போதப்போதந்தவாகார மாறுமென்றுயிற் று. ஏங்ஙனமெனில், அப்போது மூடமாயிருந்ததுநாமே, இப்போது தெளிவா னதும்நாமே, ஆதலினையமின்றென்க.

(க-து.) இப்போது வித்தையானந்தமே யாஞ்யவிடத்துக் கிர்தார்த்தனே னென்பது. (கஎச)

அ - கை.

[இவ்வனுபவங் குருவைவியந்து புகழ்தலுக்கிடமாயதை யிக்கவியிற் கூறுகின்றார்]

175. என்னபுண் ணியமோ செய்தே னேதுபாக் கியமோ காணே
னன்னிலந் தனிலெ ழுந்த நாரணன் கிருபை யாலே
தன்னிய னுனே னுனுத்தீயத்தை வீசு கின்றேன்
றன்னிய னின்னு நானே தாண்டவ மாடு கின்றேன்.

(இ-ள்.) என்ன புண்ணியமோசெய்தேனேதுபாக்கியமோகாணேன், எ-து பூர்வத்திலென்னபுண்ணியஞ் செய்தேனே, அதனாலிப்போது கிடைத்தபாக்கிய மெத்திறத்தாயதோ, யானினையுணரவலியிலனாயினன்:— நன்னிலந்தனிலெ ழுந்த நாரணன் கிருபையாலே, எ-து. நன்னிலமென்னும் பதியிலடியேனுக் காகக்குருவாக வவதரித்த நாராயணனென்னும் பெயரையடைய வெனதாசிரி யனதருளினாலே:—தன்னியனுனே னுனுத்தீயத்தை வீசுகின்றேன், எ-து. கிரு தார்த்தனேன், அதனாலடியேனங்கவஸ்திரத்தை வெற்றிக்கொடியாக வீசு கின்றனன்:—தன்னியனின்னுநானே தாண்டவமாடுகின்றேன், எ-து அங்ஙன ங்கிருதார்த்தனாகிய நான், இன்னும், ஆனந்தக்கூத்தாடுகின்றேன்,—எ-று.

செயமடைந்தோன் தனதுவெற்றிக்கொடியை வீசுமாறுபோன்று, இவ னுந் தத்துவச்சூழாப்பகையைக்கோறலால், தன்னியனுனே னுனுத்தீயத்தை வீசுகின்றேனெனவும், அதனாலானந்தமீக்குறலாற் பரவசமாக, அப்பரவசத் தால் சானேகூத்தாடவரும், அதனைத் தாண்டவமாடுகின்றேனெனவுங் கூறிய வாறுகாண்க.

(க-து.) அனுபவமேலீட்டாற் பரவசப்பட்டானந்தக் கூத்தாடினனென் பது. இது வியந்துபுகழ்தல். (கஎடு)

அ - கை

[யானிங்ஙனமாவனெனத்தான் தாய்தந்தையர் தாண்டவா வெனப்பெயரிட்டார்போலுமென வவரைவியந்ததை யிக்கவியிற்கூறுகின்றார்.]

176. தத்துவ ஞானம் வந்த சற்றோட வதிசு யத்தா
னித்தமா வென்கா னென்ற நிலைமுன்ன மேய றிந்த
சத்திய மதனு லன்றே தாண்டவா வென்ற ழைத்தா
ரத்தனை மகிமை யுள்ளோ ரண்ணையும் பிதாவுந் தாமே.

(இ-ள்.) தத்துவஞானம்வந்த சந்தோடவதிசயத்தால், எ-து. இவனுக்குண் மைஞான முதயமாகும், சந்தோஷத்தினலும், அதகாரணமாக வெழுமதிசயத் தினலும்:—நித்தமாடவன்காணென்ற நிலைமுன்னமேயதிந்த,—எ-து. சதாகா லமுமானந்தகடனஞ் செய்துகொண்டிருப்பனென்னு நிலைமையை முன்னமே தெரிந்துகொண்டார்கள் போலும். அங்ஙனந்தெரிந்துகொண்ட:—சத்தியமதனு லன்றே, தாண்டவாவென்றழைத்தார்,—எ-து. உண்மையினலன்றே, என் னைத் தாண்டவாவெனப் பெயரிட்டழைத்தனர்:—அத்தனை மகிமையுள்ளோ ரன்னையும்பிதாவுந்தாமே,—எ-து. அங்ஙனமழைத்தற் கவ்வளவு மகிமைவாய் த்தவர்கள் தாய்தந்தையர்களே,—எ-று.

(க-து.) தன்னைத்தாண்டவாவென்றழைத்த தாய் தந்தையரை மாணுக்கன் வியப்புற்றனென்பது. தனதனுபவத்துக்கும், தாய்தந்தையரிட்டபெயருக்குஞ் சம்பந்தங்காணவந்தசென்க. இஃதுவியப்புவமையணி. (கஎசு)

அ - ஸை க.

[இங்ஙனமாய்சுவானுபவத்தையருளிய சற்குருவைவியந்து வணங்கியதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

177. வந்ததோ ரிவ்வா னந்த மகிழ்ச்சியா ருடன்சொல் வேன்யான்
சிந்தையி லெழுந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேக்கி
யந்தமில் லாத தாயிற் றப்படி குருவே தாந்த
மந்திர மருளு மீசன் மலரடி வணங்கி னேனே.

(இ-ள்.) வந்ததோரிவ்வானந்த மகிழ்ச்சியாருடன் சொல்வேன்யான்,—எ-து. இங்ஙனமடியேனுக்குதயமான வொப்பற்றநிர திசயானந்தமகிழ்ச்சியைக் குருவைத்தவிரயாவருளரென வவர்பாற்சொல்லிக்கொள்வன்:—சிந்தையிலெ ழுந்துபொங்கிச் செகமெலா நிறைந்துதேக்கி யந்தமில்லாததாயிற்று,—எ-து. அந்தமகிழ்ச்சியெனதுசிந்தையிலெழுந்துபொங்கிச் செகமுழுவதுநிறைந்துதேக் கிட்டு, முடிவின்றி விளங்குகின்றது:—அப்படிக் குருவேதாந்த மந்திரமருளு மீசன் மலரடிவணங்கினேனே,—எ-து. அங்ஙனமாகக் குருநாதனுக வெழுந்த ருளிவந்து வேதாந்தரகசியத்தையனுக்கிரகித்த வேகநாயகனுகிய வீசனதுசாம ரைமலர்போன்றதிருவடிகளே வணங்கவேண்டியவாறு வணங்கினன்—எ-று.

சொல்லிக்கொள்வதற்கு வேறில்லாமையாற் குருவைவருவித்தாம். வே தாந்தமந்திரம், வேதமுடிவான மகாவாக்கியார்த்தம் பிரதிவாதிக்குமைக்கியமுத் தியை. எனவே, பதவிமுத்தியன்றென்றுயிற்று ஆகவே, பதவிமுத்தியைப்பிர திவாதிப்பது, கன்மகாண்டமாகியவற்பசுருதியெனக்கண்டாம். இங்கேயடியெ ன்பது, கூடஸ்தபிரமமாகியவுபயபாதங்களை. வணங்கவேண்டியவாறு வணங் கல், அதனையேகமாக்கவேண்டியவாறுக்கல்.

(க-து.) நவநவமாகச் சுவானுபவ மெய்தியகாரணத்தாற் குருவைவணங் காமல் வணங்கினனென்பது. ஈசனேகுருவேனல்மரபு. (கஎஎ)

அ - கை.

[இந்நூல்விளக்கும்பய னிஃதெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

178. வித்தியா னந்த மிந்த விதமென விளம்பி னேமே
பத்தியா யிந்த நூலைப் பார்த்தனு பவித்த பேர்க
ணித்திய தரும நிட்டை நிலைதனை யறிந்து சீவன்
முத்தியை யடைந் திருந்து முனிவரா குவாரே.

(இ-ள்.) வித்தியானந்தமிந்த விதமெனவிளம்பினேமே,—எ-து. வித்தியானந்தமென்பது, இன்னவகையதெனச்சொல்லினம்:—பத்தியாயிந்தநூலைப்பார்த்தனுபவித்தபேர்கள், எ-து. இந்நூலைக்கவன்போடு சிரவணமனனநிதித்தல்லாக் கொண்டையந்நிரபரப்பார்க்கவேண்டியவாறு பார்த்தநிட்டை கூடியனுபவித்தபேர்கள்:—நித்தியதருமநிட்டை நிலைகளையறிந்து சீவன்முத்தியையடைந்திருந்து முனிவராகுவாரே,—எ-து. நித்தமும்விடாது செய்யுந்தர்மமாகிய ஞானநிட்டையினிலை யினையதெனச் சுவானுபவத்தாலறிந்து, இருவகைமுத்தியுள் சீவன்முத்தியையடைந்து, அந்நிலையில்மாறுதிருந்து சிறந்தரிஷிகளாவார்கள், எ-று.

நித்தியதருமத்துள் மேலாயது ஞானநிட்டையாதலின், நித்தியதருமநிட்டையென்றார்.

(கு-து.) இந்நூலையுணரவேண்டியவாறுணர்ந்தோ ரெய்தும்பயனினைய தென்பது தருமமெனினுமொக்கும், அறமெனினுமொக்கும், இஃதொருபொருட்கிளவி அறமென்பது, தன்னிலையிற்றானகலாதநிற்றல். அசாவது; விவர்த்தம், பரிணாமம், ஆரம்பம், உற்பத்தி, விருத்தி தானெனக்காண்டல். விவர்த்தம்; ககனரவிந்தம், வர்த்தியாபுத்திரன், சசவிஷாணம்போல்வது பரிணாமம்; பால்தயிர்போல்வது. ஆரம்பம்; பிதாமகன்போல்வது. உற்பத்தி; மட்கடம்போல்வது. விருத்தி; சித்திரப்படம்போல்வது. இதனை ஞானகாண்டத்திற்காண்க.

(கு-து) இந்நூற்பயனினையதென்பது. (கஎஅ)

அ - கை.

[எனதாசிரியரிந்நூலை யென்கனவிலெழுந்தருளிவந்து சம்பூரணமாக்கினரென்பதை யிக்கவியிற்கூறுகின்றார்.]

179. ஆணப் பொருளாம் வித்தை யானந்தம் விளங்கவேதுங்
காரணர் குறைவி லாமற் கைவல்ய நவநீ தத்தைப்
பூரண மாக்க வேண்டிப் பூர்வமா னன்னி லத்தி
ஞான குரு மக்கு நவின்றனர் கனவில் வந்தே.

(இ-ள்.) ஆணப்பொருளாம்வித்தை யானந்தம்விளங்கவேதுங் காரணக் குறைவிலாமல்,—எ-து வேசார்த்தமாகிய வித்தையானந்தமினையதெனவிளங்க, யாதோர்காரணமுங்குறைவில்லாமல்:—கைவல்யநவநீதத்தைப்பூரணமாக்கவேண்டி,—எ-து. கைவல்யநவநீதமென்னு மிந்நூலை நிறைவேற்றவேண்டி,—பூர்வமான்னிலத்திஞானகுருமக்கு நவின்றனர்கனவில்வந்தே,—எ-து. தொன்றுதொட்டுள்ள நன்னிலமென்னும் பதியிலெழுந்தருளியாராயணதேசிகரென்போர் கனவில்வேலமாகவேவந்து நமக்குத்தெரிவித்தனர்,—எறு.

பிரக்ஞானம், விச்தை. பிரமம், ஆனந்தம். எனவே, பிரக்ஞானம்பிரமமென்பது, வித்தையானந்தமாயிற்று. ஆகவே, இருக்குவேதமகாவாக்கியமெனப் பெற்றும் இனிக்கேட்கவேண்டியசங்கை யாதொன்றுங்குறைவில்லாம லிந்நூலைப்பூரணமாக்கவென்பார், ஏதுங்காரணங்குறைவிலாமற் கைவல்யநவநீதத்தைப் பூரணமாக்கவேண்டியெனவும், தானேசங்கை சமாதானமாதலினிதுஞாயஞ் சோதனைபொருத்தங்கட்கிட்டையூறின்றி நிறைவேறவுணர்த்தியது கனவிலாதலின், நவின்றனர் எனவில்வந்தே யெனவுங் கூறியவாறுகாண்க.

(கூ-து.) தனதுகனவிலாசிரிய மூர்த்தமாகின் நிந்நூலை நிறைவேற்றினு ரென்பது எனவே, யானேபாடவில்லை யென்பதைக்குறிக்கப்பெற்றும். பெறவே, ஆணவவிழப்பைக்கண்டாம். யோகில் வந்தேயெனப் பிரிதிகளுமுண்டு. அங்ஙனங்கொள்ளினும்பொருந்தும். யோகில்வந்தென்பது, ஞானயோகத்தில்வந்தெனக்கொள்க. (களகூ)

அ - கை கூ.

[இந்நூலாசிரியராகிய தாண்டவராயசுவாமிகள்இந்நூலில்தெரிவித்தவப்பிராயமினையதென விக்கவியிற்கூறுகின்றார்.]

180. அண்ணறன் னருளி னுலே யகம்புற மின்றி யொன்று
மெண்ணமி லிலக்கி யார்த்தத் தின்பொரு ளதுநா னென்ன
நண்ணின சீர மாதி நாதத்தி னுபாதி யென்றே
கண்ணதா யினைத்துங் காணக் காட்டினன் றுண்ட வேசன்.

(இ-ள்.) அண்ணறன்னருளினுலே யகம்புறமின்றியொன்றும்,—எ-து. தனதுகர்த்தனுகியவாசிரியரதனுக்கிரகத்தினுலெ மென்பதும்புறமென்பதுமின்றியேகமாநிறைந்துள்ள: எண்ணமிலிலக்கியார்த்தத் தின்பொருளது நானென்ன,—எ-து. சங்கற்பரகிதமான விலக்கியார்த்தத்தினயம், அதுவென்னும்பிரமமும், நானென்னுங்கூடஸ்தனுமெனவும்:— நண்ணினசீரமாதி நாதத்தினுபாதியென்றே,—எ-து. இப்போது கிடைத்துள்ளதேகாதிப்பிரபஞ்சமனைத்தும் மாயாகாரிய வுபாதியெனவும்:— கண்ணதாயினைத்துங் காணக்காட்டினன்றுண்ட வேசன்,—எ-து. இவ்விருவகைத்தாகின் றுள்ளவனைத்தும் ஞானக்கண்ணுகவிளங்கும்படி விந்நூலிலியமறத்தெரிவித்தனன். அவனுரெனில், தாண்டவேசனென்னும் பெயருடையயோன்,—எ-று,

தனதாசிரியரதருளா லிலக்கியார்த்தமேகூடஸ்தபிரமமெனவும், தேகாதிப்பிரகிர்தியிறுவாக்கிடந்த தத்துவக்குழாங்களனைத்தும் மாயாகாரியமெனவும், இவ்விருவகையாகக்கூறக்கிடந்துள்ள வனைத்தும் ஞானக்கண்ணுக விளங்கும்படி யதற்கியைந்த அர்த்தங்களைத் தானியற்றியவிந்நூலிற் குறைவின்றிக்காட்டினன் தாண்டவேசனென்னு மியற்பெயருடையோனென முடிக்க. இலக்கியார்த்தத்தின்பொரு ளதுநானென்றதனுல், அதுவென்பது; ஈசனெனவும், நானென்பது; சிவனெனவுங்கூறுதொழிந்தனம் வாச்சியார்த்தமெனி லிங்ஙனங்கூறற்கியையும். கூடஸ்தபிரமமகம்புறமற்றதெனற்கும், சங்கற்பராசரூடமெனற்கும் பொருள்படல்; அகம்புறமின்றியொன்றுமெனவும், எண்ணமிலிலக்கியார்த்தத்தின்பொருளெனவுங்கூறியவாறுகாண்க. சீரமாதிநாதத்தினுபாதியென்

னல், மாயசகிதம். இலக்கியார்த்தத்தின் பொருளதுதானெனல், மாயாசகிதம். இங்ஙனமாயசகிதமும், ரகிதமுமிறத்தற்குக் கண்ணதாயனைத்துங்காணவென்னல். துவிதநாசமெனக்கொள்க. எனவே, இதனினு முடிவில்லையென்பதாயிற்று. ஆகவே, இஃதத்துவிதத்தையே பிரதிவாதிக்கு தூலனெனப்பெற்றும்.

(க-து.) அகம், நான். பிரமம், அது. அனைத்துங்கணணதாக்காணல், அஸ்மி எனவிளக்கிஞரென்பது. (கஅ0)

அ - கை

[சுவானுபூதிவாய்த்த லினையருக்கேயெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

(வே று.)

181. ஆன்ற பதமா மூன்றிற்கு மதுநீ யாளு யெனும் பொருளிற், சான்ற துரியா தீதமெனத் தடையற் றிலகொண் சைதன்னிய, மூன்றி யுணர்க்தோர் விகற்பமயக் கொழித்தெத்தடையுமூடறுத்துத், தோன்றித் தானே தானுவர் தலங்கு மவர்க்கே சுவானு பவம்.

(இ-ள்) ஆன்றபதமாமூன்றிற்கு மதுநீயானுயெனுமபொருளில்,—எ-து. யாவற்றினுமிகச்சிறந்த தத்வமசியென்னு மூன்று பதத்திற்குமர்த்தமாவது; அதுநீயானுயென்னும்பொருளாம். அப்பொருளில்:—சான்றதுரியாதீதமெனத் தடையற்றிலகொண்சைதன்யம், எ - து. பரிபூரணமாநிறைந்திருக்கின்ற துரியாதீதமெனப் பெயர்பெற்றுத் தடையின்றிவிளங்குஞ் சொப்பிரகாசவடிவாயுள்ளசை சன்யத்தை: — ஊன்றியுணர்ந்தோர்விகற்பமயக் கொழித்தெத்தடையுமூடறுத்து, —எ - து. யாதோர்விகற்பசிந்தையுமின்றி பூன்றியுணர்ந்தோரே பலவாறுக வேறுபட்டுள்ள பிராந்திகளினின்று நீங்கி, வலியுள்ளவெவ்வகைத்தடைகளையுங் கட்டறுத்து:— தோன்றித்தானே தானுவர்தல, ங்குமவர்க்கேசுவானுபவம், எ-து. மாயாரகிதமாகத் தோன்றித் தானேதானுவார். அங்ஙனந் தானே தானுகவிளங்குபவர்க்கே சுவானுபவமெனப்படுவது எ-று.

தத்துவமசி யென்பதை மூப்பதார்த்தமாக்கி யதன்மூடிவில் விளங்குந்துரியாதீதசைதன்யத்தை நன்குதெளிந்தோரே நிகரின்றித்தோன்றித்தானேதானுவர். அன்னுருக்கேயன்றிச் சுவானுபவமேனையருக்கன்றெனமுடிக்க. சான்றென்பது; சால், என்னுமரியடியாகப்பிறந்த பெயரெச்சம். சாலென்பது; போதுமென்னும் பொருள்படநிற்றலின், பரிபூரணமென்றும்.

(க-து.) சுவானுபவம்வாய்த்தல், தானேதானுனவருக்கேயென்பது. ()

அ - கை க.

[நாராயணதேசிகரடிதொழுபவரும், அவர்சூ றியதீர்ந்தநிலை யகலாதோரும், எய்தும்பயனினையதென விக் கவியிற் கூறுகின்றார்.]

182. என்னு மாவாக் கியநான்கு மிசைக்கும் வித்தியா னந்தஞ் சொன்ன நாராயணன்பாதந் தொழுதுதித்தோர் துகளற்றே ரின்ன மாணைக் கன்குருவாற் சுத்தே கத்தீர்த் திடுபதத்தே தன்னி னிறைந்து நின்றேறுக் நியமுத்தராகுவரே.

(இ-ள்.) என்னுமாவாக்கியநான்கு மிசைக்கும்வித்தியானந்தஞ் சொன்ன நாராயணன்பாதந்தொழுதுதுதிப்போர்துகளற்றோர்,-எ-து. இங்ஙனமானூர்க்கே சுவானுபவம் விளங்குமென்னு மகாவாக்கிய நான்கு மூணர்த்தும் வித்தியானந்தநிலை யினையதெனவெடுத்துத் தெரிவித்த நாராயணதேசிகரது உபயபாதங்களே மாறுதொழுதுவழுத்தவோர் களங்கரகிதராவர்:—இன்னமானூக்கன் குருவார்சந்தேகந்தீர்ந்திடுபதத்தே,எ-து. இத்தகையான நின்போன்றமானூக்கன் தனதுகுருவாற் சந்தேகவிபரீதந் தவிர்ந்த மேலாயநிலையில்:—துன்னிநிறைந்து நின்றோர்க யேமுத்தராகுவரே, எ-து. விடாதழுந்திப் பூரணமாகவிளங்கிநிற்போர்கள் பரிசுத்தமான சீவன்முத்தராவர்,எ-று.

இன்ன நிலையினோர்க்கே சுவானுபூதி வாய்க்கு மென்மகாவாக்கியப்படி வித்தையானந்த மினையதெனத் தெரித்தருளிக் நாராயணதேசிகரடி தொழுவோர் களங்கரகித ராவரெனவும், இஃதன்றியும், யாவனொருவன் தக்கமானூக்கனுநின்று சற்குருவாற் சந்தேகவிபரீதந்தவிர்த்துக்கொண்டு மேலாயநிலையில மர்ந்து பூரணமாநின்றானே வவனே சீவன்முத்தனவனெனவுமுடிக்க.

(க-து.) குருபாதந்துதித்தோரும், துரியாதீதபதத்தே நின்றோரு மெய்தும் பயனினையவென்பது. (கஅஉ)

அ - கை.

[இன்னின்னபயன்தோன்ற விந்நூலியற்றியதெனவிக்கவியிற்கூறுகின்றார்.]

வேறு.

183. தத்துவ விளக்கத் தானுஞ் சந்தேகந் தெளிதலானு
மொத்திருள் விடாதமாயா வுள்ளிரு ளிரியவோங்குஞ்
சித்ததா மொளிவி ளங்கச செய்துபின் விருத்திபேதப்
புத்திபால் வருமை யத்தைப் புரையறத் தெளிவித்தாண்டான்.

(இ-ள்) தத்துவவிளக்கத்தானுஞ் சந்தேகந் தெளிதலானு மொத்து, எ-து. தத்துவவிளக்கம், சந்தேகந்தெளிதல், என்னுமிவ்விருபடலமும் பேதியாதிந்நூலில:—இருள்விடாத மாயாவுள்ளிருளிரிய வோங்குஞ்சித்ததா மொளிவிளங்கச் செய்து, எ-து. இருள்மயமாநின்றுள்ள மாயையென்னு மகவிருளோடவும், யாதினுக்கு மேலீடா வோங்கிநின்றுள்ள சிற்பிரகாசமெங்கணுமொருபடித்தாவிளங்கவும் பாடலாக்கச்செய்து:— பின் விருத்திபேதப்புத்தியால் வருமையத்தைப் புரையறத் தெளிவித்தாண்டான், எ-து. பின்னரிதுகாரணமாகப் பேதபுத்திவிர்த்தியால் வந்துகொண்டிருக்குஞ் சந்தேகவிபரீதங்களே யாதமயக்கமுந் தோன்றுதுநீக்கித் தெளிவுண்டாக்கி யெம்மை யடிமைகொண்டனன், எ-று.

தத்துவவிளக்கம், சந்தேகந்தெளிதலென்னு மிவ்விருபடலத்தாலும்பொருளொத்திருக்குமாறு மாயாவிருளோடவும், சிற்பிரகாசம்விளங்கவு மிந்நூலைப் பாடலாகச்செய்து, பின்னர் பேதபுத்திவிருத்தியால் வருமையத்தை யாதோர் சந்தேகமுந் தோன்றாது தெளிவித் தெம்மை யடிமைகொண்டனனெனவுமுடிக்க. ஒத்து, செய்து, தெளிவித்து, என்னும் வினையெச்சங்களே ஆண்டானென்னும் வினைமுற்றோடு முடித்துப்பொருள்கொள்க. இக்கவியில் வந்தவிருவிரண்

டில்; முன்னையது, மாயாசொரூபம்; பின்னையது, யாவருள்ளத்திலுமகலாதுநி
ற்பது. அங்ஙனநிற்பதும் மாயையாதலின், மாயாவுள்ளிருளெனவுருவகப்படுத்
தினர் இரிய, விளங்கவென்னுஞ் செயவென்னுமாய்பாட்டுவினைகள், செத்
தென்னும் வினைப்பகுதியில் முடியுமாறுகாண்க, இந்நூலோனன்குணர்த்தோர்க்
குப்பயன் இருளிரிதலும, ஒளிவிளங்கலுமென்க.

(க-து.) இன்னின்ன பயன்வினைய விந்நூல்செய்ததென்பது. எந்தெந்த
வாதிகளும் மிந்நூல் பூர்வபட்ச சித்தாந்தங்களே மாற்றற்கனுபவமின்றியக்கண்
ணென்செய்வர், கூடாதென்க. அனுபவம்வரின் மாற்றலாமோ? புலியடிக்கப்
புக்கானதனைக் கண்டுழிபோலாமென்க. இந்நூலருமைதெரியார்போலு மித
னைவைவார். (கஅகூ)

இதுகாறுங்கூறியவிந்தவரிய ஞானசாதனைகளால் ஆனந்திகளாகத்தக்கோர்
இன்னவர்எனவும் அவர்களும்இன்ன ஆச்சிரமிகளாகஇருத்தல் வேண்டுமெனவு
மவ்விதஆச்சிரமத்துட்சிறந்துள்ள சன்னியாசாச்சிரமியே இதற்குரியோனென்
றும்சன்னியாசம் இன்னூர்க்குரித்து இன்னூர்க்குரித்தன்றென்றுங் கூறுகின்றூர்
கள் அவைகளையுமிந்தவதிகாரிகளறிய வேண்டியதவசிய மாதலாலவைகளிற்சில
முக்கியமானவைகளே இங்குவிளக்குகின்றும் இந்தவிஷயங்களேகுறித்துஒவ்வொ
ருகிரந்தகார்ஒவ்வொருவிதமாகக்கூறுகின்றூர்கள்.

ஔகிரந்தகாரர்மதம்,—சன்னியாசவிதாயகமான வெகுவாக்கியங்களிற் பி
ராமணபதமிருப்பதால், பிராமணர்மாத்திரத்திற்குச் சன்னியாசவதிகாரமிருக்கி
றது, சன்னியாசமின்றிக்கிரகஸ்தர்முதலியோருக்குப் பிரமவிசாரத்திற்கவகாசமி
ல்லை; ஆகலின், சன்னியாசத்திலும், அப்படியே பிரமசிரவணத்திலும் க்ஷத்தி
ரிய வைசியர்க்கும் அவைவருமாறுஅதிகாரமில்லை என்பது.

மற்றோர் கிரந்தகாரர்மதம்,—சன்னியாசத்திற் கேவலம் பிரமணர்க்கு அதி
காரமுளதேனும் பிரமசிரவணத்தில் க்ஷத்திரியவைசியர்க்கும் அதிகாரமுளது;
ஆயினும், ஜன்மாந்தரசம்ஸ்காரத்தால்எவ்வுத்தமபுருடர்க்கு விடயங்களிற்றீன
த்துவமுதலிய தோடமுண்டாகவில்லையோ அப்படிப்பட்ட சுத்தபுத்தியுடை
யோர்க்குச் சன்னியாசமின்றியே ஞானமுண்டாகாநிற்கும்; இக்காரணத்தால்,
சுகஸ்தாச்சிரமத்திலே அநேகராஜரிஷிகள் பிரமவித்தென்று சொல்லப்பட்டி
ருக்கின்றனர் என்பது.

வேறுசிலர்,—எப்படிப் பிரமசிரவணாதிகளில் க்ஷத்திரி யவைசியர்க்கு
அதிகாரமுளதோ அப்படிச் சன்னியாசத்திலும் க்ஷத்திரியவைசியர்க்கு நிஷேத
மில்லை ஞானோதயத்தால் கருத்திருத்துவ, போக்கிருத்துவபுத்தியும், அப்படி
யே ஜாதி ஆச்சிரமவபிமானமும் அபாவமாகா நிற்கும்; கருத்திருத்துவ போக்
கிருத்துவபுத்தியன்றியும். ஜாதிஆச்சிரமங்களி னபிமானமன்றியும் கருமாதி
காரங்கூடாமையின், சர்வகர்மபரித்தியாக பூர்வமாக அக்கிரிய, அசங்க ஆன்ம
சொரூபத்தோடு ஸ்திதிரூபமான வித்துவத்சன்னியாசத்திலும் க்ஷத்திரியவைசிய
ர்க்கு அதிகாரமுண்டு, கேவலம விவிதிஷாசந்நியாசத்தில் அதிகாரமில்லை
என்பர்,

வார்த்திககாரான சுரேசுராசாரியர் மதம்,—விவிதிஷாசந்நியாசத்திலும் க்ஷத்திரியவைசியர்க்கு அதிகாரமுண்டு:—அநேக சுருதிவாக்கியங்களில்பிராமணர்க்குச்சந்நியாசஞ் சொல்லியிருந்தாலும் சந்நியாசவிதாயக ஜாபாலசுருதியில் பிராமணபதமில்லாமலே கேவலம்வைராக்கியசம்பத்தியால் சந்நியாசஞ் சொல்லியிருக்கின்றது, ஆதலால், அநேகசுருதிவாக்கியங்களில் ¶ துவிஜர்கட்கு உபலட்சணமாகப்பிராமணபதமுள்ளது ; ஸ்மிருதியிலோவென்றால்,

அந்தணன், க்ஷத்திரியன், வைசியன் இம்மூவரும் கிரஹஸ்தாசிரமத்தை விட்டு சந்நியாசாசிரமத்தையடைந்து காட்டுக்குப்போகவேண்டும் ; இம்மூன்று வருணத்தரும் வேதம் கற்றுக்கொள்ளலாம் ; இவர்க்குபிரமச்சரிய, கிரஹஸ்த, வாநப்பிரஸ்த, ஸந்நியாசம் என்னும் நான்காச்சிரமங்களும் உண்டு.

(பிராமண க்ஷத்திரியோவாபி வைசியோ வாபிரவிநஜேத் கிருதாத்த்ரயாணும் வர்ணநாம்வேதமதீத்யசத்வார ஆசிரமா:) என்னும்வசனமிருப்பதால்க்ஷத்திரியவைசியர்க்குச் சந்நியாசத்தில் அதிகாரம் உண்டென்பது.

வேறே ஒரு கிரந்தகாரர் மதம்,—சந்நியாச விதாயகசுருதிவாக்கியங்களிற் பிராமணபதம் உண்டு ; அதற்குத் துவிஜர்மாத்திரத்திற்கு உபலட்சணமுண்டென்பதிற் பிரமாணமில்லை. ஜாபாலசுருதியில் பிராமணபதமில்லையாயினும், அநேகசுருதியநுசாரத்தால் அங்கேயும் பிராமணகர்த்தாவுக்கு * அத்தியாகாரம் உண்டு ; ஆதலின், க்ஷத்திரியவைசியர்க்குச் சந்நியாசத்தி லதிகாரமில்லையாயினும், அநேகஸ்தானத்தில் கிரகஸ்தரான இராஜாக்கள் ஞானவான்களாயிருந்தனரென்று கூறப்பட்டிருக்கின்றனர் ; ஆகலின், பிராமணர்க்குப் பிரமவிசாரத்திற்குச் சந்நியாசம் அங்கமாம் ; சந்நியாசமின்றிக் கிரகஸ்தாதி ஆச்சிரமத்திலுள்ள பிராமணனுக்கே பிரமவிசாரத்தில் அதிகாரமுண்டு. க்ஷத்திரியவைசியர்க்குச் சந்நியாசமின்றியே பிரமவிசாரத்தில் அதிகாரமுண்டென்றெப்பவேண்டும். என்னை ? சந்நியாசவிதாயக வசனத்திற் பிராமணபதமிருத்தலின் என்க. க்ஷத்திரியவைசியர்க்குச் சந்நியாசத்தின் விதியில்லை. ஆன்மகாமனுக்கு சந்நியாசத்தின் விதியில்லை. ஆன்மகாமனுக்கு ஆன்மசிரவணத்தின் அபாவஞ் சொல்லுகையொருந்தாது ; இதனால், க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்தினுபயோகியான அதிருஷ்டமானது கேவலங்கரு மத்திலேயே உண்டாகாநிற்கும். சந்நியாசஜந்நியமான அதிருஷ்டத்தினபேட்சை க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானத்திலில்லை ; இதனாற்றான் கீதையிலும்,

"காதலா லரசன் சனகனே முதலோர் கருமமோ டொழுகியே யன்றே, போதரா யுலகம புக்கது."

¶ துவிஜர்=மூவருணத்தர்.

* அத்தியாகாரம்=அவாய்நிலை ; அது ஒருசொல் மற்றொருசொல்லை அவாவிநிற்றல்.

என்றிவ்வாறு பரமேசுரர் கூறியிருக்கின்றனர்; இவ் வாக்கியத்தில், "போதராயி" என்பதற்கு, அந்தக்கரணத்தின் சுத்தி அல்லது, ஞானம் என்று பொருள். பாஷ்யகாரர்த்தம், சந்நியாசரகிதமான கேவலம் கருமத்தால் அந்தக்கரணசுத்தியை ஜனகர் முதலியோர் அடைந்தனர் அல்லது, சந்நியாசரகிதமான கேவலங்கருமத்தால் ஞானப் பிரதிபந்தகநிவிர்த்தி வாயிலாகச் சிரவணத்தால் ஞானத்தையடைந்தனர் என்பது; இவ்விருவகையாலும் க்ஷத்திரிய, வைசியர்க்குச் சந்நியாசநிரபேட்சமான கேவலங்கருமமே ஞானம்பிரதிபந்தகமான பாவநிவிர்த்திக்கேதுவாயிருக்கிறது. பிராமணர்க்குச் சந்நியாச சகிதமானகருமத்தால் ஞானப்பிரதிபந்தகமான் பாவநிவிர்த்தியுளதாம். சிரவணத்திற்கங்கம் சந்நியாசமாமென்னும்இப்பட்சத்திலும் சந்நியாசம் பிராமணர்களின் சிரவணத்திற்கே அங்கமாம்:—க்ஷத்திரிய, வைசியரின்சிரவணத்திற்கு அங்கமன்று. பின்னேயோ பலாபிலாஷையும், குரோதாதிதோஷங்களும் இல்லாமல் ஈசுரார்ப்பணபுத்தியோடுசெய்யும் தத்தம் வருணச்சிரமதருமானுஷ்டானத்தோடு கூடிய கருமஅவகாசகாலத்தில் சிரவணத்திலேயே க்ஷத்திரிய, வைசியர்க்கு ஞானமுண்டாகும். சர்வதா வித்தையினுபயோகியானகருமத்திலும், சிரவணத்திலும் அதிகாரமுண்டு. என்னை? பிராமணரைபோல ஞானேச்சை க்ஷத்திரிய, வைசியர்க்குஞ் சமமாம். பலத்தையிச்சித்தவனுக்குச்சாதனத்தில் அதிகாரமுண்டு; ஆதலால், ஆன்மகாமரானக்ஷத்திரிய, வைசியர்க்கு வேதாந்தசிரவணத்தில் அதிகாரம் உளதென்பது.

மற்றோர் கிரந்தகாரர் மதம்,—மநுடர் மாத்திரத்திற்கு ஆன்மவிருப்பம் பொருந்தியிருப்பதால்க்ஷத்திரிய,வைசியர்போல ஞானேச்சையின்சத்பாவத்தால் சூத்திரர்க்கும்சொல்லியவாற்றல்வேதாந்தசிரவணத்தின் அதிகாரமுண்டாகவேண்டியதேயாயினும், சூத்திரர்க்கு உபதேசங்கூடாதென்று நிஷேதித்திருப்பதால் சர்வதா உபதேசரகிதபுருடர்க்கு விவேகாதிகூடாமையின், ஞானேச்சை கூடாது; அப்படியே சூத்திரர்க்குயக்ஞாதிகருமங்களும் நிஷேதித்திருப்பதால் வித்தையினுபயோகியான கர்மத்தின்பாவத்தால் அவர்க்குஞானஏதுவான சிரவணத்தினதிகாரமில்லை என்பது.

வேறெருகிரந்தகாரரது மதம்.—உபநயன பூர்வகமாகவேதாத்தியயனஞ் சொல்லியிருக்கிறது. சூத்திரர்க்கு உபநயனஞ்சொல்லவில்லை; ஆதலால்,வேதசிரவணத்திலோ சூத்திரர்க்கு அதிகாரமில்லை; அப்படியானாலும், *

என்பது முதலிபவசனத்தால் இதிகாசபுராணாதிகளின் சிரவணத்தில்சூத்திரர்க்கும்அதிகாரமுண்டு.பூர்வஞ்சூத்திரர்க்கும்உபதேசநிஷேதஞ்சொல்லியிருத்தற்கு அபிப்பிராயம்; வைதிகமந்திரத் தோடுகூடினயக்ஞமுதலியகருமவுபதேசம்சூத்திரர்க்குச்செய்யற்க:அப்படியேவேதோக்தபராணாதியச குணோபாசனையைச்சூத்திரர்க்குஉபதேசஞ்செய்யற்க என்பதாம்.உபதேசமாத்திரத்தைநிஷேதிக்கவில்லை; உபதேசமாத்திரத்தை நிஷேதித்திருக்கிறதென்றால், தர்மசாஸ்திரத்தில் சூத்திரஜாதியின் தர்மநிரூபணம்நிஷ்பலமாய்விடும். வித்தையினுப

* நான்குவருணங்களையுங்கேட்பிக்கலாம்.

யோகிகளான கருமத்தினபாவத்தால் வித்தையில் அதிகாரமில்லை எனச் சொல்வார்களாயின், அதற்குச்சமாதானம் ; சாதாரணம், அசாதாரணமான சகலசுபகருமங்களுக்கும் வித்தையிலுபயோகமிருக்கின்றது. சத்தியம், அஸ்தேயம், க்ஷமை. சௌசம், தானம், விடயத்தின்விமுகதை, பாகவதநாமோச்சாரணம், தீர்த்தஸ்நானம், பஞ்சடாட்சர மந்திரராஜாதிகளின் ஜபம் இவைமுதலிய சகலவருணங்களின் சாதாரணதருமங்களிலும், அப்படியே சூத்திரகமாலாகரத்திற்சொன்னசதுர்வருணங்களின் அசாதாரணதருமத்திலும்சூத்திரர்க்குஅதிகாரமுண்மை; அக்கருமங்களின் அநுஷ்டானத்தால் அந்தக்கரணசுத்திவாயிலாக வித்தையின் பிராப்திகூடும்; ஆகலின், இதிகாசபுராணாதிகளின்சிரவணத்தால் விவேகாதிகள் பொருந்தாநிற்பதால் சூத்திரர்க்கும் ஞானேச்சையுண்டு ; ஆகலின், வேதத்திற்குப்பின்னமான அத்தியாத்மகிரந்தங்களின் சிரவணாதிகளிற் சூத்திரர்க்கும் அதிகாரமுண்டு,பாஷ்யகாரரும்,பிரதமாத்தியாயத்தின் திருதீயபாதத்தில் உபயனபூர்வகமாகவேதத்தின் அத்தியயனஞ்சொல்லியிருக்கிறது.சூத்திரர்க்கு உபகயனமின்மையின், வேதத்தில் அதிகாரமில்லை ; ஆயினும்புராணாதிகளின் சிரவணத்தால் சூத்திரர்க்கும் ஞானமுண்டாய்விடில், ஞானசமகாலத்திலேயே சூத்திரர்க்கும் பின்பந்தரகிதமாக மோட்சமுண்டாகாநிற்கும் எனக்கூறியிருக்கின்றார்; இவ்வாறான பாஷ்யகாரருடைய வசனத்திலுலும் வேதத்திற்கு வேறான ஞானவேதுவாகிய அத்தியான்மகிரந்தத்தின் சிரவணத்தில் சூத்திரர்க்கு அதிகாரம் உண்டு.

ஜன்மாந்தர சம்ஸ்காரத்தால் அந்தியஜாதிகட்கும் ஜ்ஞாசை யுண்டாய்விடில் பௌருஷேயவசனத்தால் அவர்கட்கும்,ஞானமுண்டாகிக் காரியத்தோடுகூட அவித்தையின் நிவிர்த்திரூபமான மோட்சமுண்டாய்விடும். ஆகலின், வேதாநுசாரிகளைப்போலச்சகலமநுடர்க்கும் தத்துவஞானத்தின் அதிகாரம் உண்டு. ஆன்மசொரூபத்தின் யதார்த்தஞானத்தைத் தத்துவஞானமென்பர். ஆன்மஹீனமாய் ஓர் சரீரமுளதாயின், அதற்கு ஞானத்தின் அநதிகாரமுண்டு ; ஆகலின், ஆன்மஞானத்தின் சாமர்த்தியம் மநுஷ்யர்மாத்திரத்திலுண்டு.

ஆயினும், எந்தச் சரீரத்தில் தெய்வசம்பத் துண்டோ அதற்குத் தத்துவஞானமுண்டாகாநிற்கும் ; அசுரசம்பத்திற் றத்துவஞானமுண்டாகமாட்டாது. சர்வபூதங்களிலும் தயை, க்ஷமை, சத்தியம், ‡ ஆர்ஜவம், சந்தோஷாதிகளான தெய்வசம்பத்தின் பிராப்தி பிராமணரிடத்திலுண்டு. க்ஷத்திரியர்க்குப் பிரஜைகளைப் பாலனஞ்செய்யும் பொருட்டுப் பிரவிர்த்திதரும முண்டாவதால் பிராமணரினும் கிஞ்சித்து நியூனமான தெய்வசம்பத்து உண்டு. தருமபுத்தியால் பிரஜாசம்ரட்சணத்தின் பொருட்டுத் துஷ்டப்பிராணிகளை இம்சிப்பது அகிஞ்சையாம் ; ஆகலால், தெய்வசம்பத்தின் அசம்பவமில்லை, அப்படியே வைசியர்க்கும் கிருஷி, வாணிச்சியமுதலிய சரீரவியாபாரம் க்ஷத்திரியரைப்பார்க்கிலும் அதிகமுண்டாவதால்ஆன்மவிசாரத்திற்கு அவகாசங்கூடாமையின்,அவர்க்குச் சாமர்த்தியங்கூடாமலிருக்கிறது ; அப்படியாலுலும் எத்தனையோபாக்கியசாலிகளான

‡ ஆர்ஜவம்=சிரத்தையோடுகேட்பவனிடத்து நிச்சயித்தபொருளை மறையாமை.

வைஷியர்க்குச் சரீரவியாபாரமில்லாமலே சகல வியவகாரங்களின் நிர்வாகமு மூண்டாகாநிற்கின்றது ; அவர்கட்குத் தெய்வசம்பத்தின் பேறுருவானசாமர்த் தியங்கூடும். எவ்வாசிரியர்மதத்தில் க்ஷத்திரிய, வைஷியர்க்குச் சந்நியாசத்தின் அதிகாரமுண்டோ அவர்மதத்தில் அநாயாசமாகவே தெய்வசம்பத்து கூடும் சதுர்த்தவருணத்திலும். அப்படியே அந்தியஜாதிகளிலும் தெய்வசம்பத்து துர் லபமாயினும் கர்மபலம் அநந்தவிதமாம் ; ஆகலின், ஒருவர்க்கு ஜன்மாந்தரத் தின் கர்மத்தால் தெய்வசம்பத்தின்பேறுண்டாய்விடின், புராணேதிகளின் விசா ரத்தால் சதுர்த்தவருணத்திற்கும், பாஷாப்பிரபந்தாதிகளின் சிரவணத்தால் அந் தியஜாதிகட்கும் பகவத்பக்தியும், தத்துவஞானப்பேற்றின்வாயிலாக மோட்சப் பேறும் நிர்விக்கினமாகவுளவாம் ; இவ்வாற்றால், பகவத்பக்தியும், தத்துவ ஞானத்தின் அதிகாரமும் சகல மநுடர்க்குமுண்டு ; இது சாஸ்திரங்களின் நிர் ணயம்.

அ - கை.

[இந்நூலாசிரியரை யிவரதமாணூக்கன் துதித்ததாக விக்கவியிற் கூறுகின்றார்.]

184. ஆண்டதே சிகனு மையனு ரணனனந்தன் பாதம்
பூண்டுமூ வாரோ பத்தாற் பொய்ம்மயக் காய்வந் தத்தை
மாண்டநல் லபவா தத்தான் மாய்த்தரு ணேக்கத் தென்றும்
காண்டிட வைத்த ளித்த காரணு போற்றி போற்றி.

(இ-ள்.) ஆண்டதேசிகனுமைய னுரணனனந்தன் பாதம்பூண்டு,— எ-து வலிந்தாட்கொண்டகுருவாகியும், கர்த்தனுகியுமிருக்கின்ற நாராயணதேசிகர்தந் தமற்றபாதங்களைத் தனதுசிரமேற்கொண்டு:—மூவாரோபத்தாற் பொய்ம்மயக் காய்வந்தத்தை தமாண்டநல் லபவாதத்தால்மாய்த்து,—எ-து.மூன்றுவிதவாரோபத் தினுற் பொய்ப்பிராந்திரூபமாக வந்தெய்திய மாயையென்பதை மாட்சிமைப் பட்ட நல்லபவாதயுத்தியா னசிப்பித்து: அருணேக்கத்தென்றுங் காண்டிட வைத்தளித்த காரணுபோற்றிபோற்றி,—எ-து. இருபாநோக்கினுலெப்போதுங் கண்டுசிந்தித்தய்ய நூலாகப்பாடிவைத்தெம்போலிகட்குக்கொடுத்த காரணகுரு வானவரே நமஸ்காரம்,—எ-று.

நாராயணதேசிகரடிகளைச் சிரமேற்கொண்டு, ஆரோபத்தால்வந்தமாயை யை யபவாதத்தாற்கெடுத்து நூலாகப்பாடிக்கொடுத்த தாண்டவமூர்த்தியே! சர ணஞ்சரணமெனக்கூட்டுக. ஓர்பிரக்ஞையே திரிபுடியாகத் தோற்றலினுலும், அத்தோற்றம் பொய்மயக்காமுடிவதினுலும், அங்ஙனமுடிவது மாயையென் னும் பெயர்த்தாதலினுலும், இதனை யத்தியாரோபமென்பார், மூவாரோபத் தாற் பொய்ம்மயக்கா வந்தத்தையெனவும், அதனைக்கெடுத்த லபவாதத்தாலாத லின், மாண்டநல்லபவாதத்தால்மாய்த்தெனவுங் கூறியவாறுகாண்க. வைத்தெ ன்பதற்குச் செயப்படுபொருளின்மையின், நூலைப் பாடிவைத்தெனக்கொண் டாம். அருணேக்கத்தென்னது, அருணேக்கமென்றிருக்கின், அருணேக்கம்

வைத்தெனப் பொருள்கொள்ளலாம், அங்ஙனமில்லாமையாற்கூடாது. இங்கே நூலைச் சிறப்பிக்கவந்தமாணாக்கனுதலின். பாடிவைத்தென்றும் வைத்தென்ப தற்குத் திருவடிசூட்டியெனினுமொருசாரமையினுமமையும்.

(க-து.) இந்நூலைச் செய்தளித்தவருக்கு நமஸ்காரஞ்செய்ததென்பது. இங்ஙனஞ்செய்தது, இந்நூலருமைபற்றியென்க. (கஅச)

அ - கை.

[சற்குருவின்பாதாபிடேகநீரைத் தலைக்கொண்டோரும், இந்நூலை யுணர்வேண்டியவாறுணர்ந்தோரும், எய்தும்பயனினைய வென விக்கவியிற்கூறுகின்றார்.]

185. குலவுசற் குருவின்பாதக் குளிர்புன றலைமேற் கொண்டா
ருலகினிற் றீர்த்தமெல்லா மூற்றபே றடைவார் போல்வர்
நலமெய்யாகிய கைவல்ய நவீத நூலைக் கற்றோர்
பலகலை ஞானநூல்கள் படித்தஞானிகளா வாழ்வார்.

(இ-ள்.) குலவுசற் குருவின்பாதக் குளிர்புன றலைமேற் கொண்டார்,— எ-து. யாவுந்தானுகவிளங்கிய சற்குருவின் பாதத்தைப் பூசித்த குளிர்ச்சிபொரு ந்தியசலத்தை ஸ்நானமாகக் கொண்டோர்:—உலகினில் தீர்த்தமெல்லாமூற்ற பேறடைவார்போல்வர்,—எ-து.உலகத்தின்கண் சகலபுண்ணியதீர்த்தங்களிலும் விதிமுறையேமூழ்கியடைந்தபேறுடையார்போல்வர்:-நலமெய்யாகியகைவலய நவீதநூலைகற்றோர்,—எ-து. மேலாயநன்மையும், எதார்த்தமுமாகின்றுள்ள, இந்தக் கைவல்யநவீதநூலை கற்கவேண்டியவாறுகற்றோர்:-பலகலைஞானநூல் கள் படித்தஞானிகளாவாழ்வார்,—எ-து. எண்ணிறந்த பல வேறுவகைப்பட்ட நூல்களேயும்,ஞானத்தைமாத்திரம் பிரதிவாதிக்கத்தக்க கடல்போல் விரிந்துள்ள ஞானநூல்களேயுந் தக்கசிரவணாதிகளாற்கற்றுத்தெளிந்த ஞானிகள்போலவே யையந்திரிபின்றி வாழ்வார்கள்,—எ-று.

எழுவாய்பயனிலையெனக்காட்டக் கொண்டார்போல்வரென்றும். இங்ஙன மன் றெமதுசுவாமிக ளுரைகூறியதெனின், கவிக்குரையாதலினு மும், அக்கவி யிலக்கணவழுவுக்கிடம்பெறாதிருக்கவேண்டுமாதலினு மும், கூடாதென்க. இது சாம்பிரதாயவுரையெனின், ஞாயஞ்சோதனைபொருத்தங்சட்சு மூரணுதிருக்க வேண்டும். இங்ஙனமெல்லாம் வேதாந்தத்துக்கு வேண்டுவதின்றெனின், அப் போது நூல்களாயிருக்கவேண்டுவதின்று. வேண்டுவதின்றெனின்,சுருதி,யுத்தி யனுபவ மென்பானேன் ? சுருதிவேண்டுவதின்றெனின், ஞானநூல்களெற் றிற்கு ? யுத்தியாகிய ஞாயஞ் சோதனை பொருத்தமெற்றிற்கு ? சுவானுபவ மாத்திரம் போதுமெனின், யுத்திக்குமூரணுய சுவானுபவமாகவேண்டும். ஆத லின் சுவானுபவஞ் ; சுருதியுத்தியொத்ததென்றார் சான்றோர்பலரும். இவை யெல்லாந் தக்க சாம்பிரதாயத்தை யநுசரித்துக்கோளாதகுற்றமெனவறிக. சுருதி

யுத்தி முரணுதலுறற்குவலியின்றேல் சுவானுபவமு மங்ஙனமாகும். எட்டை மேற்கோளாகக் கூறுதிருக்கவேண்டும். கூறவரின், குற்றம்வரும். எங்கள் சுவாமிகள்கூறியதெனின், அவருக்கும் வரவா, அவரை யிழுப்பதுபோதும் வாயடங்கிநிற்கை தன்குமதிப்புக்குமேன்மை.

(க-து.) எல்லாங்கற்றுத் தெளிதல்போலு மிந்நூலைமாத்திரங் கற்கவேண்டியவாறு கற்றுத்தெளிதலென்பது. நலமெய்யாகிய கைவல்யமெனவே, கைவல்யம் ; நலமுமெய்யுமாயதெனப்பெற்றும். தானயலாகாது தானேதானுதலெல்லாகலத்தினு மேலாயதாதலின் நலமெனவும, தானென்பதே மெய், ஏனையவையெத்திறத்தவாயினும் பொய். எனத்துணிதலின் மெய்யெனவும், இந்நூலுக்கடையாக்கியதென்க. சம்பூரணம், முற்றிற்று.

சந்தேகந்தெளிதற்படலம். கவி - 185.
தத்துவவிளக்கப்படலம். கவி - 108.
ஆ - கவிகள் - உகஙூ.

முற்றிற்று.

நேரிசைவெண்பா.

தத்துவ மல்லாத சராசரங்க ளெங்கணுள
தத்துவத்தைச் சோதித்துத் தானுதற் - கித்துரையே
யன்றிப் பிறிதிலையாலாய்ந்துய்ம்மி னிந்நூலை
யன்றிச் சுருக்க மெஃதாம்

PRINTED AT THE THONDAMANDALAM PRESS, CHOOLAY MADRAS.

கைவல்லியநவநீதப்

பாடலகராதி.

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
அ		ஆன்றபதமா ...	ஈடுஅ
அகமெனு ...	கஅங	இ	
அக்கினிகட்டு ...	கஉச	இகமான ...	உஅஉ
அசத்திலெம் ...	உஎடு	இக்குணங் ...	சங
அசலநிமஞ்சன ...	ஙஉ0	இங்குமப்படி ...	உகஅ
அச்சுவத்த ...	உ0உ	இதயமொத்த ...	கஉக
அடங்கிய ...	கஅ	இதுநினக் ...	கங
அண்ணனனருளி ...	ஈடுஎ	இந்தச்சீவ ...	உ0ச
அதனேயி ...	உடுஅ	இந்தஞானந் ...	உக0
அதுதானெப்படி ...	ச0	இந்தநிச்சய ...	உசஎ
அத்தியாரோப ...	உடு	இந்தநீ ...	கக0
அந்தக்கண ...	ஙகங	இந்தமாயை ...	க0
அந்தமூநடு ...	எ	இந்தவாறைந் ...	ஙகசு
அந்தவாறிருந் ...	ஙசக	இப்படிப்போல ...	ஙங
அப்படியிரு ...	ஈடுஉ	இப்புவியி ...	ஙஙஅ
அரவன்று ...	எஉ	இம்பரின் ...	அக
அரிதாகு ...	கஙங	இராசதகுணத்தி ...	சக
அறியமெய் ...	கஙஎ	இருவகை ...	ஙசஉ
அருவமாகு ...	உசக	இருளாக ...	உஅங
அருளுமை ...	உடச	இலக்க ...	ககங
அழிவிலாத ...	ககசு	இல்லேயா ...	உசச
அழுக்கொடு ...	சசு	இவனதி ...	கங
அளிமகனெடும் ...	க உ0	இவனயன் ...	கஅசு
அறியாத ...	கச	இவ்வாறு ..	ங0ச
அறிவுக்கு ...	க0அ	இவ்வுடன் ...	டு0
அறுசுவை ...	கசுஅ	இன்னதுதேகந் ...	உக
அனகமைந் ...	ககக	இன்னவகை ...	ங உக
அனுபவானந் ...	கக்க	இன்னவாற ...	உகசு
அன்னபா ...	உகஉ	ஈ	
அன்னேதன் ...	கடு	ஈசர்காரிய ...	உ0க
ஆ		ஈசனுக்கி ...	சடு
ஆகமப்பிர ...	க்சஎ	ஈசனுமா ...	கஅக
ஆடவர் ...	களக	ஈனந்தரு ...	ங0டு
ஆண்டதேசிக ...	கசுச	ஈன்றளித் ...	ச
ஆதாரமறைந் ...	எக	உ	
ஆதிமுக்குண ...	சஅ	உண்டுறங் ...	ஙஙக
ஆரணப் ...	ஈடுசு	உதவுமபுவி ...	ங க0
ஆரோப ...	உசு	உத்தமகுரு ...	கஅ0
ஆர்க்கு ...	உசுக	உத்தமம்வெளுப்பு ...	சக
ஆனபாவி ...	ககடு	உருக்கியதரா ...	கடுச
ஆனவிம்ம ...	கச	உருவங்களி ...	உஎஅ
ஆலேயா ...	களஎ	உலகமான ...	உஉக

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
உன்முகம் ...	கடுசு	குரவர்சிகா ...	கஎஉ
எ		குலவுசற்குரு ...	ஙசுடு
எத்தனேநா ...	கஉஎ	குளிரிளக ...	ஙகஅ
எரிகின்ற ...	கடுரி	கெ	
எல்லாங்கண் ...	கஎஎ	கெடலான ...	ஊகஅ
எல்லாச்சிவ ...	கஅஉ	கே	
எவருடை ...	ரு	கேவலநிலை ...	அச
எவனுகிலு ...	ஙகசு	கை	
எனவுரைத் ...	கசடு	கைதவங் ...	ககஙு
என்மனந் ...	ககச	ச	
என்னபுண் ...	ஙடுச	சகமதி ...	அ0
என்னுடை ...	சு	சடமதா ...	உசஉ
என்னுமா ...	ஙடுஅ	சடமான ...	உஅ0
என்னைத்தா ...	உக	சட்டிகுட ...	கஅடி
ஏ		சத்திசத்தனே ...	உசுசு
ஏகமாய் ...	ககக	சத்தேசித் ...	ஙஉச
ஏமமாயா ...	சசு	சத்சொடுசித் ...	க0ங
ஐ		சந்தசம்புருட ...	கசடு
ஐந்தபூதமூ ...	ருக	சமந்தமம் ...	ககக
ஐயனே ...	கஉக	சருவமூச்சியை ...	உசக
ஐயாகேளீர் ...	கஎச	சா	
ஒ		சாதனமின்றி ...	கஉ
ஒருவழியிது ...	சஉ	சி	
ஒன்றுசிய ...	ஙகஉ	சிஞ்ஞாசு ...	ஙசசு
ஒன்றுகேள் ...	உ0அ	சிட்டர்புகழ் ...	ஙசஅ
ஓ		சிட்டனிவ் ...	கஉஉ
ஓய்ந்தகனு ...	கஎடு	சித்துஞான் ...	ஙடுஉ
கங்கையிற் க	ககச	சிரவணப் ...	ககக
கடநீரின் ...	ககஎ	சிவசொரு ...	ககo
கடமெனு ...	கஙஅ	சிறந்தஞன் ...	ககஅ
கண்டறிந் ...	உஙஎ	சீ	
கர்ணமா ...	க0உ	சீரியவீச ...	டுஎ
கருதுமலே ...	கடுஅ	சீவபேதங்கள் ...	ககச
கருப்பை ...	உசுடு	சீவன்மு ...	கஙடு
களங்கமற் ...	ககo	சு	
கள்ளூம ...	உஉடு	சுத்தமாஞ் ...	ககங
கற்பனைவர் ...	எக	சுத்தியில் ...	அஎ
கா		சுருதியுத்தி ...	ஙஉஎ
காமமாதிகள் ...	கஙo	சுழுத்தியில் ...	அசு
காயித்தவ ...	ககo	சூ	
காரணசரீர ...	ஙடுக	சூக்குமசக ...	டுo
சாரியங்க ...	உசுங	செ	
சானனீர் ...	கசo	செய்கையு ...	ககஎ
கி		சென்மாந்த ...	உஅஅ
கிளர்மக ...	கஎஙு	சென்றது ...	ஙஙக
கு		சொ	
குகன்றனை ...	கஙஎ	சொரூபனூ ...	உசo

பாடல்.	பக்கம்.	பாடல்.	பக்கம்.
சொர்ப்பன ...	உருக	தோ	
சொல்லிய ...	கஙக	தோற்றமாஞ்சத்திதன் ...	சள
சொன்னது ...	கள	தோற்றமாஞ்சத்திதானே.	அடு
ஞா		ந	
ஞானங்காரண ...	உளக	நரரின்மன் ...	கஅஅ
ஞானமார் ...	கஉஅ	நரர்குழி ...	கசஙக
த		நலமெய் ...	உ0சு
தஞ்சமா ...	ககஅ	நல்லவனே ...	கஅ0
தடத்து ...	கஅள	நற்கருத்து ...	கசச
தடைகளே ...	கஉக	நனவுகண்ட ...	உங
தத்துவஞானம் ...	கூருச	நன்மையா ...	உஉக
தத்துவத்தின் ...	கூகூக	நாசச்சரீர நா ...	உஅள
தத்துவப்பச ...	ககசு	நாலாபபூ ...	கூளள
தத்துவவனு ...	கஉசு	நானென ...	கருங
தத்துவவிசா ...	கூஉ	நானென்ற ...	கூசசு
தத்துவவிளக் ...	கருக	நி	
தர்ப்பணத் ...	உகள	நிசமானது ...	கஙச
தன்பதியல்லா ...	கரு0	நித்தியம்பூ ...	கஙக
தன்னேயுக் ...	உ0	நித்தியவனித் ...	க0
தா		நிர்க்குண ...	கஉஉ
தாகப்படும் ...	உகசு	நிறைந்தவா ...	கூசசு
தாமதமிரா ...	உளக	நீ	
தாலத்தின் ...	உச	நீானென் ...	கஉக
தானன்றி ...	உளள	நெ	
தானிகர் ...	எசு	நெய்யும் ...	கூகக
திகழ்ந்த தீ ...	கஙக	ப	
தினமுமண் ...	உஉ.கு	பங்கயாசனன் ...	உருஉ
தீ		பஞ்சகோசமும் ...	க0ச
தீராய் ...	கஉசு	பஞ்சினேயூழித் ...	கஙரு
து		படமுறலும் ...	எச
துரியநிலங் ...	கஙகரு	படர்ந்தவே ...	அ
துருத்திமா ...	உகக	பத்தியும் ...	உகச
துர்ச்சங்க ...	கஙக	பந்தமனே ...	கூசசு
துளங்கு ...	உகசு	பலகலேயும் ...	கஉஅ
தூ		பன்னிய ...	ககஇ
தூங்குஞ் ...	கூ0ள	பா	
தூடணத ...	எரு	பாவிமந்த ...	கூசக
தூலசூக்கும ...	க0ரு	பி	
தூலமேமரு ...	இஉ	பிரமஞானி ...	கஙச
தெ		பிரமபாவனே ...	கஉரு
தெசபுமான் ...	கரு	பிரமமாந்தனே ...	கூக
தெரிதாரும் ...	கஅள	பிரமரூப ...	உசச
தே		பிறந்தகண் ...	கசச
தேகத்தனல ...	ககசு	பிறிவதெப்படி ...	க0க
தேகமல்லாம ...	உஉ	பின்னேமூவ ...	கஙஉ
தோ		பு	
தொடர்வபந் ...	ஙசு	புண்ணிய ...	கூச

பாடல்	பக்கம்.	பாடல்.	பக்கம்.
புலவர்புகழ் ...	ஙஙஉ	முற்புவிமூ ...	ஙஙசா
புலியுயனு ...	ஙஙஐ	முன்புகலச்ச ...	கஐடு
பூ		முன்னிலங ...	ஙஙசூ
பூச்சியவீ ...	கஐஐ	ழ	
பூரிக்குங ...	உஎஉ	மூவராம் ...	உஐஐ
பூன்றமாம் ...	எஎ	மெ	
பே		மெய்யுங் ...	களி
பேதகன்ம ...	கஙஐ	மே	
பேதமான ...	ஙஙக	மேவுமண்	உசூஅ
பொ		மோ	
பொய்யை ...	உடுசா	மோகவிருள்	ஙஉங
பொல்லாத ...	ஙஙங	யோ	
பொறுமை ...	கஙசூ	யோகஞா	கஙஉ
பொன்னில ...	உ	வ	
போ		வகுத்தகன்	உஙசூ
போகத்தில் ...	ஙஐங	வஞ்சகமில்	கடுஎ
போகமாரு ...	உஉசா	வடதூல்வல்	கஙஉ
போனசன்மஞ் ...	உகங	வணங்கிநின்	கடு
ம		வந்தோரி	ஙடுடு
மதுரமாங் ...	கஐக	வா	
மதுவிறைச் ...	உஉசு	வாக்கியந்த	கடுஐ
மந்தமுந்தீ ...	ஙசக	வாதனுவசத்	ஙசக
மந்திரமூர் ...	கசஎ	வாயுஸ்தம்ப	உசுஎ
மரங்கள் ...	டுஅ	வாராயென்	கக
மலடிமைந் ...	உசக	வி	
மற்றைமுப் ...	கசஅ	விடயசக	உகங
மனதுசத் ...	கடுக	விண்ணென்றே	கக
மனத்தினு ...	ஙசஎ	வித்தியானந்	ஙடுசு
மனாசஞ் ...	கசுஉ	விருத்திகளடக்க	ஙடுஐ
மனுடன் ...	ஙகடு	விருத்தினா	உங்ச
மனைக்குள் ...	உஉ0	விருத்தியும்	கடுசு
மனைவிலங்கறு ...	உ0எ	விவகாரவே	கசுச
மா		வினவுமிடத்	ஙஐ0
மாயையென்பது ...	உடுக	வீ	
மாயையென்பதேது ...	உடுஎ	வீடதாம்பரி ...	உசசு
மானஞ்சிற ...	கஉக	வீயாதசத் ...	ஙஉடு
மு		வே	
முத்தனே ...	க0	வேகின்ற ...	உகடு
முத்திநல்கி ...	கஙக	வேடமாறி ...	உகடு
முந்தவகண்ட ...	ஙஙஐ		
முந்தியசங்கை ...	கடுக		

கைவல்லியநவநீதப்பாடலகராதி

முற்றிற்று.